வெளியீடு—10—2—1975
Issued—10—2—1975]

தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

# பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

வியாழக் கிழமை 1974 டிசம்பர் 19

Thursday 19th December 1974

தொகுதி LXI—எண் 1

Volume LXI—No. 1

©
தமிழ் நாடு அரசு
1975
GOVERNMENT OF TAMIL NADU
1975

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9.

*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

விலை 50 காசுகள்]
PRICE 50 PAISE]

D
V211, 31 N74
31N75.61
61680

# Tamil Nadu Legislative Assembly Debates

TWELFTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

*19th to 21st and 23rd December* 1974.

(VOLUME LXI—Nos. 1 to 4)

TABLE OF CONTENTS.


| | PAGES |
|---|---|
| *Thursday, 19th December* 1974. | |
| Personnel of the Government of Tamil Nadu .. | i-v |
| Principal Officers of the Tamil Nadu Legislative Assembly .. .. .. .. .. | vii |
| List of Members of the Tamil Nadu Legislative Assembly with their constituencies ... .... | ix—xvi |
| 1. Questions and Answers .. .. .. | 1—45 |
| 2. Point of order— Non-putting to vote the No-Confidence Motion against the Ministry the previous day ... | 45—46 |
| 3. Point of Information— Privilege matter alleged to have been raised in the Legislative Council on the reference made by Thiru P. Seenivasan in the Legislative Assembly about Thiru Thennarasu .. .. | 46—49 |
| 4. Matter raised by Thiru K. Sappu re: admission of a question about him in the Legislative Council | 50—62 |
| 5. Announcements— | |
| (i) The Tamil Nadu General Sales Tax (Fourth Amendment) Bill, 1974 ... ... ... | 63 |

PAGES

*Tuesday, 19th December* 1974—cont.

5. Announcements—*cont.*
   - (ii) The Tamil Nadu Entertainments Tax (Amendment) Bill, 1974 .. .. .. .. 63
   - (iii) Clarification by the Hon. Speaker about the matter raised by Thiru K. Suppu over a question raised about him in the Legislative Council .. 63
6. Government Bills—
   - (i) The Tamil Nadu General Sales Tax (Fourth Amendment) Bill, 1974 ... ... .. [illegible]
   - (ii) The Tamil Nadu Entertainments Tax (Amendment) Bill, 1974 .. .. .. .. [illegible]
7. Non-official Business—
   - (i) Bills .. .. .. .. .. 64
   - (ii) Resolution—
     Fixation of prices of essential commodities ... 64—67
8. Papers laid on the Table .. .. .. 69—71

*Friday, 20th December* 1974.

1. Announcements—
   - (i) Speaker's ruling on the restoration of the portions expunged on 19th December 1974 while discussing the issue raised by Thiru K. Suppu. 73—7[illegible]
   - (ii) Consideration of non-official business on 21st December 1974 afternoon .. .. .. 212
2. Questions and Answers .. .. .. 74—139
3. Privilege Matter—
   Lawyer notice issued by Thiru Abdul Salam to the Editor, 'Makkal Kural' .. .. 140
4. Points of Order—
   - (i) Consideration of non-official business deemed to have been withdrawn on the previous day and also certain other incidents which happened that day .. .. .. .. .. 140—143



PAGES

*Friday, 20th December* 1974—cont.

4. Points of Order—*cont.*
   - (ii) Procedure adopted for the consideration of privilege matters .. .. .. .. 150
5. Personal Explanation—
   Thiru K. Suppu's personal explanation on the reference made about him by the Speaker .. .. 144—145
6. Calling Attention—
   - (i) Non-availability of Amaravathy river waters for irrigation in certain parts of Tiruchirappalli district .. .. .. .. .. 146—147
   - (ii) Lock-out in Sakthi Pipes, Elavur and the consequent hardship to labourers ... ... 148—149
7. Government Bills—
   - (i) The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Sixth Amendment) Bill, 1974. 149
   - (ii) The Madras City Police and Tamil Nadu Towns Nuisances (Amendment) Bill, 1974 .. 151—167
   - (iii) The Tamil Nadu Prohibition (Amendment) Bill, 1974 .. .. .. .. .. 167—209
   - (iv) The Tamil Nadu Local Authorities' Laws (Second Amendment) Bill, 1974 .. .. 210—229
8. Papers laid on the Table .. .. .. .. 229—231

*Saturday, 21st December* 1974.

1. Questions and Answers .. .. .. 255—290
2. Personal explanation—
   Thiru A. R. Marimuthu's personal explanation on the Chief Minister's statement that Thiru Marimuthu had agreed for the postponement of Municipal elections .. .. .. .. 290—291
3. Adjournment Motions—
   - (i) Sudden disappearance of rice from retail shops .. .. .. .. .. 291—296

PAGES

*Saturday, 21st December* 1974—cont.


3. Adjournment Motions—*cont.*
   (ii) Closure of several schools and colleges .. 296—305
   (iii) Decision of Dravida Kazhagam to burn effigies of Hindu Gods .. .. .. .. 305—310
4. Calling Attention—
   (i) Unclaimed bodies in the mortuary of the Government Hospital, Madurai .. .. 311—313
   (ii) Deaths caused by injections .. .. .. 313—316
5. Announcements—
   (i) Election to the Senate of Annamalai University .. .. .. .. .. 316—317
   (ii) Election to the Tamil Nadu Land Improvement Board .. .. .. .. .. 317
   (iii) Election to the Board of Management of the Agricultural University .. .. .. 317
   (iv) The Tamil Nadu Appropriation (No. 4) Bill 1974 .. .. .. .. .. 381
6. Presentation of Reports—
   Reports on action taken by the Government on the recommendations of the Estimates Committee contained in the reports on Harijan Welfare Department and Tamil Nadu Industrial Development Corporation .. .. .. 318
7. Points of order—
   (i) Non-taking up of Calling Attention Notices 318
   (ii) Discussion on Supplementary Demands and Appropriation Bills .. .. .. 381—384
8. General discussion on the Second Supplementary Statement of Expenditure for the year 1974—75 319—373
9. Voting on Demands for Supplementary Grants (Second) for the year 1974—75 373—380


PAGES

*Saturday, 21st December* 1974—cont.


10. Government Bill—
    The Tamil Nadu Appropriation (No. 4) Bill, 1974 384
11. Government Motion—
    Taking up of non-official business included in the Agenda for 19th December 1974 demand to have been withdrawn ... ... ... 385
12. Non-official Business—
    (i) Bills—
    1. The Mettur Township (Abolition and Extension of Municipality) Bill, 1974 .. .. 385
    2. The Tamil Nadu Consumers' Protection Bill, 1974 ... ... ... ... 385—386
    3. The Tamil Nadu Agriculturists and Agricultural Labourers' Debts Adjustment Bill, 1974. 386
    (ii) Resolution—
    Taking over of the wholesale trade of all essential commodities ... ... ... ... 386—459
13. Papers laid on the Table .. .. .. 459—462


*Monday, 23rd December* 1974.


1. Points of Order—
   (i) Admission of a question having no urgent public importance as a short notice question ... 465—467
   (ii) Opportunity for discussion on the reports of the Privilege Committee ... ... ... 563—564
   (iii) Different procedures adopted for discussing the reports of the Privileges Committee ... ... 655—569
   (iv) Discussion on the Appropriation Bill for Supplementary grants ... ... ... 573—575
2. Questions and Answers ... ... ... 467—520
3. Adjournment Motions—
   (i) Arrest of Scheduled Caste students of Madurai College, Madurai, and the prevalent tense situation ... ... ... ... ... 520—530

PAGES

*Monday, 23rd December* 1974—cont.


3. Adjournment Motions—*cont.*
   - (ii) Failure to let out sufficient water in Pongalur-Kangeyam areas and the consequent unrest ... 530—535
   - (iii) Fast by the staff of Lakshmipuram College in Kanyakumari district before the Revenue Divisional Officer's Office, Thuckalay ... ... 535—543
   - (iv) Lay-off in Textile Mills in Coimbatore, Madurai, Tirunelveli and Madras and the consequent hardship to workers ... ... ... 543—547
   - (v) Arrest of workers of Sankagiri Cement Factory and its consequences ... ... ... 547—552
4. Government Motions—
   - (i) Suspension of Rule 41(3) .. .. 552
   - (ii) Change in the order of business ... ... 576, 606
   - (iii) Adjournment of the House *sine-die* ... ... 611
5. Calling Attention—
   - (i) Closure of Vivekananda College and Jain College on account of students' agitation ... 552—554
   - (ii) Frequent closure of surgical theatres in General Hospital ... ... ... ... 554—558
   - (iii) Non-availability of Triple Antigen and its consequences ... ... ... ... 558—560
   - (iv) Assignment of land in Kadaperi lake-bed to Pallavan Transport Corporation and the consequent damages likely to be caused to the lake ... 561—562
6. Government Bills—
   - (i) The Tamil Nadu Societies Registration Bill, 1972—Joint Select Committee's report—Presentation. .. .. .. .. .. 563
   - (ii) The Tamil Nadu Co-operative Societies (Amendment) Bill, 1974 .. .. .. 572
   - (iii) The Tamil Nadu Inam Estates and Minor Inams (Abolition and Conversion into Ryotwari) (Amendment) Bill, 1974 . ... ... 572




PAGES.

*Monday, 23rd December 1974*—cont.


6. Government Bills—*cont.*
   - (iv) The Tamil Nadu Appropriation (No. 4) Bill, 1974 .. .. .. .. .. 573—576
   - (v) The Tamil Nadu General Sales Tax (Fourth Amendment) Bill, 1974 ... ... 577—585
   - (vi) The Tamil Nadu Entertainments Tax (Amendment) Bill, 1974 .. .. .. .. 586—606
   - (vii) The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Sixth Amendment) Bill, 1974. 606—611
7. Privilege Matters—
   - Presentation of Reports—
     - (i) Case against certain opposition members who staged a walkout before the Governor's Address 564
     - (ii) Case against Dr. H. V. Hande and 'Thennagam' .. .. .. .. 564
     - (iii) Case against Dr. H. V. Hande for his conduct in the House on 21st November 1973 .. 564
8. Presentation of Reports—
   - (i) Report of the Committee on Estimates on the action taken by Government on the recommendations of the Committee contained in the report on Veterinary Education and Research .. 570
   - (ii) First report of the Committee on Public Undertakings on the Annual Accounts of the Tamil Nadu Khadi and Village Industries Board for 1960-61 to 1965-66 ... ... ... 570
9. Point of information—
   - Central Finance Minister Thiru C. Subramaniam's remarks in the press on the drought condition in Tamil Nadu .. .. .. .. 570—572
10. **Papers laid on the Table** .. .. .. 612—615

# தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

## தமிழ் நாடு ஆளுநர்.

### மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், படச்சுருள் தொழில் நுட்பவியல்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்டமன்றம், சுற்றுலா, சுற்றுலா அபிவிருத்திக் கழகம்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுச் சுகாதாரம், மருத்துவம், தமிழ் நாடு கழிவு நீர்—குடிநீர் வாரியம், நகர அமைப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பின்தங்கிய வகுப்பினர் நலன், செய்தி-விளம்பரம், பத்திரப் பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், சீரணி, இளைஞர் அணி, பூதான—கிராமதான இயக்கங்கள்.

5. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (பொதுப்பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுப் பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

6. மாண்புமிகு திரு. செ. மாதவன்: (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, கனிப் பொருள்கள், சுரங்கங்கள், இரும்பு—உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும் பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

7. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வணிக வரிகள், மதுவிலக்கு, ஆயத் துறை வருவாய், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

8. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வேளாண்மை, உணவு உற்பத்தி, வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கால்நடை வளர்ப்பு, கூட்டமைப்புக்கள் உள்ளிட்ட மாநில, மாவட்ட வளர்ச்சி வட்டார அளவிலான வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிமுறைக் கூட்டுறவுச் சங்கங்கள்.

9. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்.

10. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: உணவு, கூட்டுறவு, வேளாண்மை மறு நிதி உதவி.

11. மாண்புமிகு திரு. க. இராசாராம்: (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழிலாளர், வீட்டு வசதி-இட வசதிக் கட்டுப்பாடு, எடைகள் அளவைகள் குறித்த சட்டம், புள்ளிவிவரம், குடிசை மாற்று வாரியம்.



12. மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மகளிர்-சிறுவர் நலம் உட்பட சமூக நலம், மீனளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் கண்காணிப்புப் பணிகள்.

13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மின்சாரம், கடன் கொடுத்தல் குறித்த சட்டம், கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா.

14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுதுபொருள்—அச்சுத்துறை, அரசு அச்சகம்.

15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அறக் கட்டளைகள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், பால் வழங்கு துறை, பால்வள முனைப்புத் திட்டம், தமிழ் நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம்.

16. மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: (அரிசன நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அரிசன நலம், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, பயண அனுமதிச் சீட்டுகள், திரைப் படச் சட்டம்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

*Governor of Tamil Nadu.*

THIRU KODARDAS KALIDAS SHAH

*Members of the Council of Ministers.*

1. THE HON. DR. M. KARUNANIDHI (Chief Minister), in-charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections and Film Technology.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Education and Tourism) in-charge of Education including Technical Education, Official Language, Legislature and Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN (Minister for Health), in-charge of Public Health, Medicine, Tamil Nadu Drainage and Water Board and Town Planning.

4. THE HON. THIRU N. V. NATARAJAN (Minister for Backward Classes), in-charge of Backward Classes, Information and Publicity, Registration, Ex-Servicemen, Prosperity Brigade, Youth Service Corps, Bhoodan and Gramdan.

5. THE HON. THIRU P. U. SHANMUGAM (Minister for Public Works), in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Progamme Works, Highways and Ports.

6. THE HON. THIRU S. MADHAVAN (Minister for Industries), in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

7. THE HON. THIRU S. J. SADIQ PASHA (Minister for Revenue), in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Commercial Taxes, Prohibition and Excise Revenues and Waqfs.

8. THE HON. THIRU SI. PA. ADITANAR (Minister for Agriculture), in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing, Animal Husbandry, Agro-Engineering Wing, Agro-Engineering and Service Co-operative Societies at the Block, District and Apex level including the Federation.

9. THE HON. THIRU A. P. DHARMALINGAM (Minister for Local Administration), in charge of Municipal Administration, Community Development and Panchayats and Panchayat Unions.

10. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMY (Minister for Food and Co-operation), in-charge of Food, Co-operation and Agricultural Refinance.

11. THE HON. THIRU K. RAJARAM (Minister for Labour), in-charge of Labour, Housing, Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics and Slum Clearance Board.

12. THE HON. THIRU C. V. M. ANNAMALAI (Minister for Social Welfare), in-charge of Social Welfare including Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages and Approved Schools and Vigilance Service.

13. THE HON. THIRU O. P. RAMAN (Minister for Electricity), in-charge of Electricity, Legislation on Money lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests and Cinchona.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN (Minister for Transport), in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. THE HON. THIRU M. KANNAPPAN (Minister for Religious Endowments), in-charge of Religious Endowments, Khadi and Village Industries and Rural Industries Project, Milk, Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation.

16. THE HON. THIRU N. RAJANGAM (Minister for Harijan Welfare), in-charge of Harijan Welfare, Indians Overseas and Refugees and Evacuees, Newsprint Control, Passports and Cinematograph Act.

# தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

## பேரவைத் தலைவர்.

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன், பி.ஓ.எல்., எம்.ஏ.

## பேரவைத் துணைத் தலைவர்.

திரு. நா. கணபதி, பி.எஸ்ஸி. பி.எல்,

## மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. டாக்டர் க. நாகராஜன்
2. திரு. துரைமுருகன்
3. திரு. கு. காமாட்சி
4. திரு. கா. காளிமுத்து
5. திரு. என். டென்னிஸ்
6. திரு. கே. கந்தசாமி

## சட்டப் பேரவைச் செயலாளர்.

திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

## துணைச் செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

## குழு அலுவலர்.

திரு. ப. சுப்பராயன்

## உதவிச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. பெஞ்சமின் நெல்சன், பி.ஏ.
திரு. கே. பாலகுரு, பி.ஏ.

## விவாதப் பதிப்பாளர்.

திரு. கே. சுந்தரராசன்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதி |
|---|---|
| (1) | (2) |
| 1 அண்ணாமலை, மாண்புமிகு திரு. சி.வி.எம். (அமைச்சர்). | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். ஏ. .. .. .. | புவனகிரி |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை .. .. | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. .. .. | எழும்பூர். |
| 5 அரங்கநாயகம், திரு. செ. .. .. | கோயம்புத்தூர்-மேற்கு |
| 6 அழகமுத்து, திரு. து. ப. (அரசாங்க தலைமைக் கொறடா). .. .. | உட ிலியப்புரம். |
| 7 அழகர்சாமி, திரு. சோ. .. .. .. | கோவில்பட்டி. |
| 8 அழகுத் தேவர், திரு. எஸ். .. .. | சாத்தூர். |
| 9 அனந்தநாயகி, திருமதி த. ந. .. .. | மயிலாப்பூர். |
| 10 அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 11 அன்புச்செழியன், திரு. நீ. .. .. | பெரியகுளம். |
| 12 ஆண்டி அம்பலம், திரு. எம். .. .. | பேரூர் வடக்கு. |
| 13 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.) |
| 14 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 15 ஆலடி அருணா, திரு. வி. .. .. | ஆலங்குளம் |
| 16 ஆல்டா எம். பௌலர், திருமதி .. | நியமன உறுப்பினர் |
| 17 ஆறுமுகம், திரு. அ. .. .. .. | எடப்பாடி. |
| 18 ஆறுமுகம், திரு. எஸ். .. .. | வீரபாண்டி |
| 19 ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம் |
| 20 இரத்தினசபாபதி, திரு. மு. .. .. | விளாத்திகுளம் |
| 21 இராசகோபால், திரு. க. மு. .. .. | உத்திரமேரூர். |
| 22 இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி |
| 23 இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம் |
| 24 இராசமாணிக்கம், திரு. கு. .. .. | ஆடுதுறை |
| 25 இராசரத்தினம், திரு. டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 26 இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). .. | சேலம்-2. |
| 27 இராசு, திரு. ஜே. எஸ். .. .. .. | பொட்டலூர். (செ.வ.) |
| 28 இராதாகிருட்டிணன், திரு. எம். .. | தண்டராம்பட்டு |
| 29 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. .. | பரங்கிமலை. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 30 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்) | பண்ருட்டி. |
| 31 இராமநாதன், திரு. சி. | அறந்தாங்கி. |
| 32 இராமலிங்கம், திரு. இரா. | தூத்துக்குடி. |
| 33 இராமலிங்கம், திரு. செ. | கடலாடி (செ.வ.). |
| 34 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.). |
| 35 இராமன், திரு. மூ. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 36 இராஜாங்கம், மாண்புமிகு திரு. என். (அமைச்சர்). | குறிஞ்சிப்பாடி (செ.வ.). |
| 37 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. | கன்னியாகுமரி. |
| 38 இளங்கோவன், திரு. கோ. | திருவையாறு. |
| 39 இளஞ்செழியன், திரு. வீ. சா. | விராலிமலை. |
| 40 எட்டியப்பன், திரு. பூ. | பெரணமல்லூர். |
| 41 எட்மண்ட், திரு. க. உரொ. | திருச்செந்தூர். |
| 42 கணபதி, மாண்புமிகு திரு. நா. (பேரவைத் துணைத் தலைவர்). | பாபநாசம். |
| 43 கணபதி, திரு. டி. | நாங்குனேரி. |
| 44 கணேசன், திரு. எல். | ஒரத்தநாடு. |
| 45 கணேசன், திரு. சி. | குற்றாலம். |
| 46 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | இணைத்துக்கடவு. |
| 47 கண்ணன், திரு. எம். ஆர். | பேஸின் பிரிட்ஜ் |
| 48 கதிரவன், திரு. கா. மு. | தென்காசி. |
| 49 கந்தசாமி, திரு. கே. | உசிலம்பட்டி. |
| 50 கந்தசாமி, திரு. கே. பி. | சாத்தான்குளம் |
| 51 கந்தசாமி, திரு. எம். | குளித்தலை. |
| 52 கந்தப்பன், திரு. செ. | திருச்செங்கோடு. |
| 53 கரிவேங்கடம், திரு. மா. வெ. | பாலக்கோடு. |
| 54 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்) | சைதாப்பேட்டை. |
| 55 கருணாநிதி, திரு. தாழை மு. | திருவாரூர் (செ.வ.) |
| 56 கருணாநாதன், திரு. சோ. | கூனூர். |
| 57 கருப்பையா, திரு. அ. | கங்கைகொண்டான் (செ.வ.) |
| 58 காசிராமன், திரு. நா. | கும்பகோணம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 59 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி, திரு. | முதுகளத்தூர். |
| 60 காமாட்சி, திரு. கு. | திருவரம்பூர். |
| 61 கார்த்திசன், திரு. வீ. | இராதாபுரம். |
| 62 காவேரிமணியம், திரு. சொ. | திருப்பரங்குன்றம். |
| 63 காளிமுத்து, திரு. கா. | சிவகாசி. |
| 64 கிட்டப்பா, திரு. என். | மாயூரம். |
| 65 கிருட்டிணன், திரு. நா. | பேரணம்பட்டு (செ. வ.). |
| 66 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம். |
| 67 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. | திருச்சிராப்பள்ளி-1. |
| 68 கிருஷ்ணன், திரு. கே. ஆர். | ஊத்தங்கரை. |
| 69 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 70 குமாரசாமி, திரு. அ. சே. | திருக்கோயிலூர். |
| 71 குமாரசாமி, திரு. கே. என். | பல்லடம். |
| 72 குருசாமி, திரு. நா. வெ. | ஆண்டிப்பட்டி. |
| 73 கேசவலு, திரு. தே. | கள்ளக்குறிச்சி. |
| 74 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். | உதனப்பள்ளி |
| 75 கோபால், திரு. எம். | குன்னத்தூர் (செ. வ.). |
| 76 கோபால், திரு. கே. பி. | கம்பம். |
| 77 கோவிந்தசாமி, திரு. வி. செ. | காவேரிப்பட்டிணம். |
| 78 கோவிந்தராசன், திரு. ஆர். | கடலூர். |
| 79 கோவிந்தராசன் துரை, திரு. | கந்தர்வகோட்டை. |
| 80 கோவிந்தன், மாண்புமிகு புலவர் கா. (பேரவைத் தலைவர்). | செய்யாறு. |
| 81 கோவை செழியன், திரு. | காங்கேயம். |
| 82 சகாதேவன், திரு. எஸ். | செஞ்சி. |
| 83 சங்குமுத்து தேவர், திரு. ச. | அம்பாசமுத்திரம். |
| 84 சதாசிவம், திரு. செ. | ஆண்டிமடம். |
| 85 சண்முகசுந்தரம், திரு. அ. ப. | பொள்ளாச்சி. |
| 86 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை. |
| 87 சண்முகம், திரு. பெரி. | திருவாடானை. |
| 88 சண்முகம், திரு. மு. | விழுப்புரம். |
| 89 சத்தியமூர்த்தி, திரு. மு. | புதுக்கோட்டை. |
| 90 சத்தியவாணிமுத்து, திருமதி | பெரம்பூர் (செ.வ.). |
| 91 சத்தியேந்திரன், திரு. எம்.எஸ். கே. | இராமநாதபுரம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 158 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்). .. | திருவல்லிக்கேணி. |
| 159 நைனுமலை, திரு. இரா. .. .. | ராசிபுரம். |
| 160 பதமநாபன், திரு. பொ. .. .. | திருநெல்வேலி. |
| 161 பத்மாவதி, திருமதி. எ. கோ. .. .. | முகையூர். |
| 162 பரந்தாமன், திரு. ஆ. .. .. .. | கடம்பத்தூர். |
| 163 பரமசிவம், திரு. எம். .. .. .. | தாரமங்கலம். |
| 164 பலராமன், திரு. என். எஸ். .. .. | அரக்கோணம். |
| 165 பழனிசாமி, திரு. நா. .. .. .. | பொங்கலூர். |
| 166 பழனிசாமி, திரு. என். கே. .. .. | பெருந்துறை. |
| 167 பழனிசாமி, திரு. மு. .. .. .. | வெள்ளக்கோயில். |
| 168 பழனிச்சாமி, புலவர் சி. .. .. | பழனி (செ.வ.) |
| 169 பழனியப்பன், டாக்டர் ச. மு. .. .. | கோபிசெட்டிபாளையம். |
| 170 பழனியம்மாள், திருமதி வி. ப. .. | தாராபுரம். |
| 171 பழனிவேலன், திரு. க. .. .. | வரகூர். |
| 172 பழனிவேலன், திரு. மு. .. .. | நாமக்கல். |
| 173 பழனிவேலு, திரு. பி. .. .. .. | ஆத்தூர். |
| 174 பழனிவேல் ராஜன், திரு. .. .. | தேனி. |
| 175 பன்னீர் செல்வம், திரு. எம். .. .. | ஆம்பூர் (செ. வ.) |
| 176 பாண்டுரங்கம், திரு. சி. .. .. .. | செங்கம் (செ. வ.) |
| 177 பாலகிருட்டிணன், திரு. கு. .. .. | மன்னார்குடி. |
| 178 பாலசுந்தரம், திரு. வை. .. .. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 179 பாலையா, திரு. எ. .. .. .. | கொளச்சல். |
| 180 பெரியசாமி, திரு. கு. .. .. .. | கொடவாசல். |
| 181 பெரியசாமி, திரு. தி. ஒ. .. .. | அவினாசி. |
| 182 பெருமாள், திரு. செ. .. .. .. | காட்டுமன்னார்கோயில் |
| 183 பெருமாள், திரு. எ. ஆர். .. .. | காரியப்பட்டி. |
| 184 பொம்மன், திரு. கு. அ. .. .. | கூடலூர் (செ. வ.) |
| 185 பொன் சொக்கலிங்கம், திரு. பி. .. | சிதம்பரம். |
| 186 பொன்னப்ப நாடார், திரு. ஆர். .. .. | விளவங்கோடு. |
| 187 பொன்னுமலை, திரு. தி. .. .. | பனைமரத்துப்பட்டி. |
| 188 பொன்னுரங்கம், திரு. எ. எம். .. | சோளிங்கபுரம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 189 மணலி கந்தசாமி, திரு. சி. .. .. | திருத்துறைப்பூண்டி. |
| 190 மணியன், திரு. பி. எஸ். .. .. | சோழவந்தான். |
| 191 மதியழகன், திரு. கே.எ. .. .. | ஆயிரம் விளக்கு. |
| 192 மருதாசலம், திரு. என். .. .. | பேரூர் (செ. வ.). |
| 193 மலைக்கண்ணன், திரு. வீ. .. .. | இளையாங்குடி. |
| 194 மன்னியப்பன், திரு. சி. .. .. .. | கிருஷ்ணகிரி. |
| 195 மாணிக்கம், திரு. என். .. .. | பெண்ணகரம். |
| 196 மாணிக்கவாசகம், திரு. இரா. .. .. | தொண்டாமுத்தூர். |
| 197 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். (இராமநாதபுரம் மாவட்டம்) |
| 198 மாரிமுத்து, திரு. எ. ஆர். .. .. | பட்டுக்கோட்டை. |
| 199 மாரிமுத்து, திரு. மூ. .. .. | தலைவாசல் (செ.வ.) |
| 200 மீனாட்சிசுந்தரம், திரு. மா. .. .. | வேதாரண்யம்., |
| 201 முகமது கோதர் முகைதீன், திரு. எஸ் .. | மேலப்பாளையம். |
| 202 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. .. | லால்குடி. |
| 203 முத்து, திரு. வ. .. | சங்கரி (செ. வ.) |
| 204 முத்துசாமி, திரு. ப. .. .. .. | வேடசந்தூர். |
| 205 முத்துச்செல்வன், திரு. பு. செ. .. | முசிறி. |
| 206 முத்துவேல், திரு. ந. .. .. .. | வானூர் (செ. வ.) |
| 207 முத்தையா, திரு. கே. கே. .. .. | கடலூர். |
| 208 முத்தையா, திரு. எம். .. .. .. | ஒட்டப்பிடாரம் (செ. வ.) |
| 209 முருகையன், திரு. எஸ். .. .. | கலசப்பாக்கம். |
| 210 முனியாண்டி, திரு. ஆ. .. .. .. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 211 முனு ஆதி, திரு. மு. .. .. .. | திருப்போரூர். |
| 212 முனுசாமி, திரு. ரா. ரா. .. .. | மேல்மலையனூர். |
| 213 மொய்தீன், திரு. திருப்பூர் எ. எம். .. .. | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 214 மோசஸ், திரு. ம. .. .. .. | நாகர்கோயில். |
| 215 ரங்கநாதன், திரு. கே. .. .. .. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 216 ராமசாமி, திரு. இ. .. .. .. | வால்பாறை. |
| 217 ராமசாமி, திரு. ஜி. .. .. .. | திருப்பத்தூர் (வட ஆர்க்காடு மாவட்டம்). |
| 218 ராமராசன், திரு. வ. க. .. .. | பவானிசாகர் (செ. வ.) |
| 219 ராஜா, திரு. எ. எம். .. .. | பவானி. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 220 ராஜாராம், திரு. ஜி. | திண்டிவனம். |
| 21 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |
| 222 லத்தீப், திரு. எம். எ. | வாணியம்பாடி. |
| 223 வகாப், திரு. கே. எ. | ராணிப்பேட்டை. |
| 224 வடிவேலு, திரு. சீ. க. | தொட்டியம். |
| 225 வடிவேல், திரு. எஸ். | சீர்காழி (செ. வ.) |
| 226 விசுவநாதன், திரு. செ. கோ. | செங்கற்பட்டு. |
| 227 வீராசாமி, திரு. நா. | ஆற்காடு. |
| 228 வெங்கடசாமி, திரு. பி. | ஹோசூர். |
| 229 வெள்ளத்துரை, திரு. அ. | வாசுதேவநல்லூர். |
| 230 வேதாசலம், திரு. மு. | வண்ணாரப்பேட்டை (சென்னை நகரம்). |
| 231 வேலப்பன், திரு. சி. வே. | கபிலமலை. |
| 232 வேழவேந்தன், திரு. கா. | கும்மிடிபூண்டி. |
| 233 ஜேம்ஸ், திரு. ஜே. | திருவட்டார். |
| 234 ஜோதி வெங்கடாசலம், திருமதி. | ஸ்ரீரங்கம் (செ. வ.) |
| 235 ஹாண்டே, டாக்டர், எச். வி. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன்—அமைச்சர்.
2 மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி—அமைச்சர்.
3 திரு. கோவிந்த் சாமிநாதன்—தலைமை வழக்கறிஞர்.

# தமிழ் நாடு சட்டப் பேரவை.

---

## வியாழக்கிழமை, 1974 டிசம்பர் 19

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### மாவட்டத் தலைமையிடங்களில் மகளிர் காவற் பிரிவுகள்

*101 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெண் போலீஸ் பிரிவை திருச்சி, கோவை, மதுரை போன்ற நகரங்களில் விரிவுபடுத்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஆம்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, பெண் போலீசார் தற்போது எந்த எந்தப் பணிகளில் ஈடுபடுத்தப் படுகிறார்கள் என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, பெண் போலீசார் கீழ்க்கண்ட பணிகளில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

விரும்பத்தகாத நடவடிக்கைகளை உடைய மகளிர் அடிக்கடி நடமாடக்கூடிய இடங்களில் சுற்றுக்காவல் புரிதல்.

குடும்பப் புகழ் இழந்து, விபசாரிகளாகும் அபாயகரமான நிலையில் காணப்படும் இளம் பெண்களை மீட்டுக் காப்பாற்றுதல்.

[1974 டிசம்பர் 19

விபச்சாரத் தடைச் சட்டத்தின்கீழ் திடீர் சோதனையிடுவதில் காவலர்களுடன் செல்லுதல்.

பெண் கைதிகளை நீதிமன்றத்திற்குப் பாதுகாப்பாக அழைத்துச் செல்லுதலும், நீதி மன்றத்தில் அவர்களைக் காவல் புரிதலும்.

காவலில் வைக்கப்பட்ட மற்றும் விசாரணை செய்யப்பட்டு வரும் பெண் கைதிகளைப் பாதுகாப்பாக அழைத்துச் செல்லுதல்.

புலனாய்வு அதிகாரிகளுக்கு உதவி செய்தல், சாட்சியம் அளிக்க வரும் மகளிர், சிறுவர்கள், குற்றஞ்சாட்டப்பட்ட மகளிர்மீது தாக்குதல் போன்ற வழக்குகளில் புகார் செய்தவர்களை விசாரணை செய்தல்.

பெரும் இரயில் நிலையங்களில் சுற்றுக்காவல் புரிதல், இரயில்கள் புறப்படும்போதும் வரும்போதும் சென்று பெண் பயணிகளைக் கவனித்துக் கொள்ளுதல், அவர்களுக்கு உதவி செய்தல், கூட்டத்தினைக் கட்டுப்படுத்தல்.

ஆதரவற்ற சிறார்களைக் கவனித்தல்.

பெண்களுக்கு என்று தனி இடம் ஒதுக்கப்பட்டுள்ள பொதுக் கூட்டங்கள் போன்ற பெண்கள் கூடியுள்ள பெருங்கூட்டங்களில் பாதுகாப்புப்பணி புரிதல், இரயில் நிலையம் உள்ள ஓர் இடத்தில் பெருவிழா ஒன்று நடந்து அங்கு மகளிர்கள் பெருமளவில் கூடுவார்கள் எனில், அந்த இரயில் நிலையத்திற்கு மகளிர் காவல் படையின் ஒரு பிரிவு அனுப்பப்படலாம்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, பெண் போலீஸ் படைப் பிரிவு நிறுவப்பட்டதற்குப் பின்னர் புதிதாக வழக்குகள் அதிகமாகத் துப்புத் துலக்கப்பட்டிருக்கிறதா , என்ற விவரத்தையும், மாவட்டத் தலைநகரங்களில் அமைக்கப்படுவதைப் போல எல்லா வட்டத் தலைநகரங்களிலும் இந்தப் பெண் போலீஸ் பிரிவை ஏற்படுத்த அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்பொழுதுதான் மகளிர் காவல் பிரிவினர் பயிற்சி முடிந்து அவர்கள் அலுவல்களைத் தொடங்கியிருக்கிறார்கள். அதனால், எவ்வளவு வழக்குகள் துப்புத்



1974 டிசம்பர் 19]

துலக்கப்பட்டன என்ற விவரங்கள் ஒப்பு நோக்கும் அளவுக்கு அரசின் கைவசம் இல்லை. இப்பொழுது மதுரை, கோயம்புத்தூர், திருச்சி ஆகிய நகரங்களுக்குத்தான் இந்தப் பெண் போலீஸ் படை விரிவுபடுத்தப்படுவதாக இருக்கிறது. வட்டந்தோறும் விரிவு படுத்தும் யோசனை இப்பொழுது எழவில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிக்கு பெண் போலீஸ் படை விரிவுபடுத்தப் போவதாகச் சொன்னார்கள். எப்பொழுது அந்த இடங்களுக்குரிய பெண் போலீஸ் படைக்கு நபர்களைச் சேர்க்கப் போகிறார்கள் ? எப்போது அந்தப் படை வேலை துவங்கும் என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** 16—9—74 அன்று மதுரையில் நடைபெற்ற முதலமைச்சர் பதக்க போலீஸ் அணிவகுப்பு விழாவில் மகளிர் காவல் பிரிவு மதுரை, கோவை, திருச்சி ஆகிய நகரங்களுக்கும் விரிவு படுத்தப்படவேண்டும் என்று நான் அறிவித்தேன். அதனையொட்டி இப்பொழுது காவல் துறைத் தலைவரிடமிருந்து ஒரு செயற்குறிப்பு அரசுக்கு வந்திருக்கிறது. அதனுடைய ஆய்வுக்குப்பிறகு உடனடியாகப் பெண் போலீஸ் படையிலே சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** பெண் போலீசாருக்குத் தனியான ஒரு போலீஸ் நிலையம் ஏற்படுத்தி, அவர்களுக்குத் தனிப் பணிகளை ஒதுக்குவதற்குப் பெரிய நகரங்களிலாவது வழிவகை செய்யப்படுமா ? கேரளா போன்ற மாநிலங்களில் அம்மாதிரி தனி ஸ்டேஷன் இருக்கிறது. அதைப் பின்பற்றுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்பொழுது பெண் போலீசார் எண்ணிக்கையில் குறைவாகத்தான் இருக்கிறார்கள். ஒவ்வொரு நகரத்திலும் இது விரிவடைந்து எண்ணிக்கை பெருகுமானால், மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னப்ப நாடார் கூறும் கருத்து பரிசீலிக்கப்படும்.

**திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பெண் போலீசாருடைய பணிகள் யாவை என்பதை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். பெரிய நகரங்களில் ட்ராபிக்

விபச்சாரத் தடைச் சட்டத்தின்கீழ் திடீர் சோதனையிடுவதில் காவலர்களுடன் செல்லுதல்.

பெண் கைதிகளை நீதிமன்றத்திற்குப் பாதுகாப்பாக அழைத்துச் செல்லுதலும், நீதி மன்றத்தில் அவர்களைக் காவல் புரிதலும்.

காவலில் வைக்கப்பட்ட மற்றும் விசாரணை செய்யப்பட்டு வரும் பெண் கைதிகளைப் பாதுகாப்பாக அழைத்துச் செல்லுதல்.

புலனாய்வு அதிகாரிகளுக்கு உதவி செய்தல், சாட்சியம் அளிக்க வரும் மகளிர், சிறுவர்கள், குற்றஞ்சாட்டப்பட்ட மகளிர்மீது தாக்குதல் போன்ற வழக்குகளில் புகார் செய்தவர்களை விசாரணை செய்தல்.

பெரும் இரயில் நிலையங்களில் சுற்றுக்காவல் புரிதல், இரயில்கள் புறப்படும்போதும் வரும்போதும் சென்று பெண் பயணிகளைக் கவனித்துக் கொள்ளுதல், அவர்களுக்கு உதவி செய்தல், கூட்டத்தினைக் கட்டுப்படுத்தல்.

ஆதரவற்ற சிறார்களைக் கவனித்தல்.

பெண்களுக்கு என்று தனி இடம் ஒதுக்கப்பட்டுள்ள பொதுக் கூட்டங்கள் போன்ற பெண்கள் கூடியுள்ள பெருங்கூட்டங்களில் பாதுகாப்புப்பணி புரிதல், இரயில் நிலையம் உள்ள ஓர் இடத்தில் பெருவிழா ஒன்று நடந்து அங்கு மகளிர்கள் பெருமளவில் கூடுவார்கள் எனில், அந்த இரயில் நிலையத்திற்கு மகளிர் காவல் படையின் ஒரு பிரிவு அனுப்பப்படலாம்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, பெண் போலீஸ் படைப் பிரிவு நிறுவப்பட்டதற்குப் பின்னர் புதிதாக வழக்குகள் அதிகமாகத் துப்புத் துலக்கப்பட்டிருக்கிறதா என்ற விவரத்தையும், மாவட்டத் தலைநகரங்களில் அமைக்கப்படுவதைப் போல எல்லா வட்டத் தலைநகரங்களிலும் இந்தப் பெண் போலீஸ் பிரிவை ஏற்படுத்த அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்பொழுதுதான் மகளிர் காவல் பிரிவினர் பயிற்சி முடிந்து அவர்கள் அலுவல்களைத் தொடங்கியிருக்கிறார்கள். அதனால், எவ்வளவு வழக்குகள் துப்புத்



துலக்கப்பட்டன என்ற விவரங்கள் ஒப்பு நோக்கும் அளவுக்கு அரசின் கைவசம் இல்லை. இப்பொழுது மதுரை, கோயம்புத்தூர், திருச்சி ஆகிய நகரங்களுக்குத்தான் இந்தப் பெண் போலீஸ் படை விரிவுபடுத்தப்படுவதாக இருக்கிறது. வட்டந்தோறும் விரிவு படுத்தும் யோசனை இப்பொழுது எழவில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிக்கு பெண் போலீஸ் படை விரிவுபடுத்தப் போவதாகச் சொன்னார்கள். எப்பொழுது அந்த இடங்களுக்குரிய பெண் போலீஸ் படைக்கு நபர்களைச் சேர்க்கப் போகிறார்கள்? எப்போது அந்தப் படை வேலை துவங்கும் என்பதை அறியலாமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** 16—9—74 அன்று மதுரையில் நடைபெற்ற முதலமைச்சர் பதக்க போலீஸ் அணிவகுப்பு விழாவில் மகளிர் காவல் பிரிவு மதுரை, கோவை, திருச்சி ஆகிய நகரங்களுக்கும் விரிவு படுத்தப்படவேண்டும் என்று நான் அறிவித்தேன். அதனையொட்டி இப்பொழுது காவல் துறைத் தலைவரிடமிருந்து ஒரு செயற்குறிப்பு அரசுக்கு வந்திருக்கிறது. அதனுடைய ஆய்வுக்குப்பிறகு உடனடியாகப் பெண் போலீஸ் படையிலே சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** பெண் போலீசாருக்குத் தனியான ஒரு போலீஸ் நிலையம் ஏற்படுத்தி, அவர்களுக்குத் தனிப் பணிகளை ஒதுக்குவதற்குப் பெரிய நகரங்களிலாவது வழிவகை செய்யப்படுமா? கேரளா போன்ற மாநிலங்களில் அம்மாதிரி தனி ஸ்டேஷன் இருக்கிறது. அதைப் பின்பற்றுவதற்கு அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இப்பொழுது பெண் போலீசார் எண்ணிக்கையில் குறைவாகத்தான் இருக்கிறார்கள். ஒவ்வொரு நகரத்திலும் இது விரிவடைந்து எண்ணிக்கை பெருகுமானால், மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னப்ப நாடார் கூறும் கருத்து பரிசீலிக்கப்படும்.

**திரு. கோவை செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பெண் போலீசாருடைய பணிகள் யாவை என்பதை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். பெரிய நகரங்களில் ட்ராபிக்

போலீஸ் வேலைக்கு பெண்களை நியமிக்கலாம். லண்டன் போன்ற வெளிநாட்டு நகரங்களில் அவ்வாறு நியமிக்கப்பட்டிருப்பதை நான் பார்த்திருக்கிறேன். இதைச் சொல்லும்போது முதலமைச்சர் என்ன பதில் சொல்வார் என்பது எனக்குத் தெரியும். அப்படி பெண் போலீசாரைப் போட்டால் ஆக்ஸிடென்ட்கள் அதிகம் ஆகும் என்று சொல்வார்கள். அப்படி ஆக்ஸிடன்ட் வராத அளவுக்கு வீரமிக்க ட்ரஸ் அவர்களுக்குத்தந்தால் கொஞ்சம் வசதியாக இருக்காதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நான் ஏற்கனவே சொன்னேன். இந்தப் போலீஸ் படையில் எண்ணிக்கை விரிவு படுத்தப்பட்ட பிறகு அதைப் பற்றிய செயற்குறிப்புகளையும் அரசு ஆராயும். இப்பொழுது இருபது பேர்கள்தான் இந்தப் படையில் இருப்பதால் குறிப்பிட்ட சில பணிகளுக்குத்தான் அவர்கள் அமர்த்தப்பட முடியும்.

**திரு. கே. என். குமாரசாமி:** பெண் போலீசைச் சேர்த்துக் கொள்வதில் வயது ஏதாவது குறிப்பிடப்பட்டிருக்கிறதா? கல்யாணம் ஆனவர்களையும் அந்தப் போலீஸ் படையில் சேர்த்துக் கொள்ளும் முயற்சி இருக்கிறதா? கல்யாணம் ஆனவர்களைச் சேர்த்துக்கொள்வதென்றால் விசேஷ சலுகைகள் அவர்களுக்கு ஏதாவது வழங்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தேர்வு சமயத்தில் அவர்கள் திருமணம் ஆனவர்களாக இருக்கக்கூடாது. அதற்குப் பிறகும் ப்ரொபேஷன் பீரியட் இரண்டு ஆண்டுகளுக்குள் திருமணம் செய்துகொள்ளக் கூடாது என்று இருக்கிறது.

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவர் அவர்களே, நம்முடைய பெண் போலீசார் யாராவது இதுவரை வீர சாகசங்கள் செய்து இருக்கிறார்களா? பாராட்டப்படக்கூடிய அளவுக்கு நல்ல செயல் ஏதாவது செய்திருக்கிறார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அவர்களுடைய பயிற்சி முடிந்து நடைபெற்ற விழாவில் காத்தே பயிற்சி பெற்ற பெண்கள் நல்ல வீராங்கனைகளாக இருக்கிறார்கள் என்பதை நானே நேரில் அந்த விழாவில் கண்டேன்.



*Mounted Police for traffic control*

*102 Q.—THIRU N. K. PALANISAMY: THIRU G. R. EDMUND: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal to introduce Mounted Police to control and regulate the traffic at different pedestrian crossways in the Madras City; and

(b) if so, the details of the same?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) & (இ) அண்ணா சாலையில் அஞ்சல் துறைத் தலைவர் அலுவலகத்திற்கு அருகிலும் தெற்குக் கடற்கரை சாலையில் பைகிராப்ட்ஸ் சாலை சந்திப்பிலும் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தவும், முறைப்படுத்தவும் சோதனை அடிப்படையில், காவல் துறையின் குதிரைப்படை தற்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**திரு. என். கே. பழனிசாமி:** தலைவர் அவர்களே, மக்கள் நடக்கக்கூடிய இடங்களில் இந்தக் குதிரைப் படை வைப்பதன் காரணமாக மக்கள் பீதி அடைகிறார்கள். இது 'வேஸ்ட்' தானே யொழிய பயன் ஒன்றும் இல்லை. இதற்கு சாரணர்களை (ஸ்கௌட்ஸ்) உபயோகப்படுத்த முடியும். ஆகவே, இந்தத் திட்டத்தைக் கைவிட சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இதைப் பாராட்டியும் சில பத்திரிகைகளில் எழுதியிருக்கிறார்கள். இது தேவை என்றும் பலர் கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கூறுவது எனக்குப் புதிய செய்தியாக இருக்கிறது. அதுபற்றி வேண்டு மானால் நான் விசாரித்து அறிகிறேன்.

**மதுரையில் புதிய கல்லூரி**

*103 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை கார்ப்பரேஷன், கலைக்கல்லூரி ஒன்று துவக்க அனுமதி கோரியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

[1974 டிசம்பர் 19

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) மதுரையில் ஆண்களுக்காகவும், பெண்களுக்காகவும் இரு கலைக் கல்லூரிகளை 1974–75-ல் திறக்கவேண்டும் என்று மதுரை மாநகராட்சி ஆணையர் கோரியிருந்தார். இக்கோரிக்கை அரசால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்பதை அறியலாமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, பொதுவாக உயர் துவக்கக் கல்வி வரையிலுமான கல்விப் பணியினை ஏற்றுக் கொள்கிற பொறுப்புதான் உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. கல்லூரிகள் நடத்துவதென்றால் அதற்குப் பெருஞ்செலவு ஏற்படும். சேலத்தில் நகராட்சி மன்றம் ஒரு கல்லூரியை நடத்திவந்து, இப்பொழுது அதை அவர்கள் நடத்த முடியாமல் அரசாங்கமே எடுத்து நடத்த வேண்டும் என்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மாநகராட்சி மன்றங்கள் கல்லூரிகளை நடத்தப் போதுமான வசதிகள் இருக்காது. அவர்கள் வேறு பல வளர்ச்சித் திட்டங்களுக்குப் பணம் செலவழிக்கவேண்டியிருக்கிறது. ஆகவே, மாநகராட்சிகள் கல்லூரிகளை ஏற்று நடத்த முடியவில்லை என்று உள்ளாட்சித் துறையினர் கருத்துத் தெரிவித்தார்கள். அது மட்டுமல்ல. மாநகராட்சி மன்றத்தின் பொறுப்பும் அது ஆகாது. ஆகவே, அதற்கு இசைவு தருவதற்கில்லை என்று குறிப்பிட்டார்கள். இந்தக் கருத்தைக் கல்வித் துறையும் ஏற்றுக்கொண்டு, இதுமாதிரி கோரிக்கைக்கு அனுமதி அளிக்கவில்லை.

### *Grants to Madurai University*

*104 *Q.*—THIRU N. K. PANALISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state:

(*a*) whether there is any proposal under the consideration of the Government to enhance the annual grant to the Madurai University; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ) இப்பொருள் அரசின் பரிசீலனையிலிருக்கிறது.



1974 டிசம்பர் 19]

**திரு. என். கே. பழனிசாமி:** இப்போது சர்க்கார் கொடுக்கக் கூடிய மானியம் என்ன என்ன துறைகளுக்குச் செலவிடப்படுகிறது? ஏற்கனவே மதுரை யுனிவர்சிடியில் மார்க்சிஸ்ட் கிளாஸ் நடத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது, அது பயன்படுத்தப்படுகிறதா? அந்தக் கிளாஸிலே சேர வேண்டுமென்றால் எம்.ஏ. பட்டதாரிகள்தான் சேரவேண்டுமென்று இருக்கிறதை ரிலாக்ஸ் பண்ணி எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களும் சேருவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மதுரைப் பல்கலைக்கழகத்திற்குக் கொடுக்கப்பட்ட மானியத்தைப் பொறுத்த வரையில் நாம் இப்பொழுது 9 லட்சம் ஆண்டுதோறும் மொத்த மானியமாகக் கொடுக்கிறோம். அது போதுமானதாக இல்லை என்றும், மேலும் 3 லட்சம் ரூபாய் கொடுக்கவேண்டுமென்றும் கேட்டு இருக்கிறார்கள். நாம் 9 லட்சம் தருகிறோம், மற்ற வரவினங்களிலே 2 லட்சத்து 56 ஆயிரம் ரூபாய் கிடைக்கிறது, ஆக மொத்தம் 11 லட்சத்து 56 ஆயிரம் ரூபாய் கிடைக்கிறது. ஆனால் செலவு 19 லட்சத்து 2 ஆயிரம் ரூபாய் ஆகிறது. பல்கலைக் கழக மானியக் குழு அவர்களுக்கு 5 லட்சத்து 96 ஆயிரம் ரூபாய் தருகிறார்கள் என்றும், ஆகவே 3 லட்சம் ரூபாய் துண்டு விழுகிறது என்றும், அதைத் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதை அரசாங்கம் பரிசீலித்து வருகிறது. பரிசீலித்ததற்குப் பிறகு தக்க முடிவை அரசு எடுக்கும். பாடத் திட்டங்களைப் பற்றி உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். எந்தத் தகுதிகள் அமைய வேண்டுமென்பதை அரசு நிர்ணயிப்பதில்லை. அரசு அதைப்பற்றிக் கூறுவதற்கு இல்லை. பல்கலைக் கழகத்தின் அகடமிக் கவுன்சில் அல்லது சிண்டிகேட்தான் முடிவு செய்யவேண்டும், அதிலே அரசு தலையிடுவதற்கு இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு யுனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் சிபாரிசின் அடிப்படையில் பேராசிரியர்களுக்கு ஊதியம் கொடுக்கக்கூடிய முறையிலே நம்முடைய அரசு அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய மானியத்தை உயர்த்துமா? அதைப்பற்றி என்ன முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அதைப்பற்றி எந்த மாநிலமும் முடிவு எடுக்கமுடியாத நிலைமை இருக்கிறது. அண்மையில் நடந்த கல்வியமைச்சர்கள் மாநாட்டில் முழுப்

பொறுப்பையும் மத்திய அரசே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். பல்கலைக்கழக சிபாரிசின் அடிப்படையில் பேராசிரியர்களுக்குக் கொடுத்தால், அதையொட்டி உயர்நிலைப் பள்ளிகளிலே இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கும், பிறகு துவக்கப் பள்ளிகளிலே இருக்கிற ஆசிரியர்களுக்கும் கொடுக்கவேண்டும். இவர்களுக்குச் சமமாக இருக்கிற மற்றப் பேர்களுக்கும் தர வேண்டும், இதனால் பல்வேறு சங்கடங்கள் ஏற்படும் என்ற முறையிலே எந்த மாநிலமும் தரமுடியாத நிலைமையில் இருக்கிறது. மறுபடியும் இதைப்பற்றி முடிவு எடுக்க கல்வியமைச்சர்கள் மாநாட்டைக் கூட்ட வேண்டுமென்று மத்திய அரசு எண்ணியிருக்கிறது. இப்போது புதிதாக சொல்லப்பட்ட விகிதங்கள் பரிசீலனையில்தான் இருக்கிறது. ஏற்கனவே நாம் வகுத்த முறை தான் நடைமுறையிலே இருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், யுனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் சிபாரிசின்படி பேராசிரியர்களுக்கு அதிகமாகக் கொடுக்கப்படுவதில் 80 சதவிதம் மத்திய சர்க்கார் 5 ஆண்டுகளுக்குக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்களே, அது உண்மையா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** சொல்லியிருக்கிறார்கள். கூடுதலாக ஆகிற செலவில் 80 சதவிதம் மத்திய சர்க்காரும் 20 சதவிதம் நம்முடைய சர்க்காரும் ஐந்தாண்டுகளுக்கு ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். அவர்களே முழுவதும் தருகிறேன் என்று சொன்னால்கூட ஏற்றுக் கொள்ளமுடியாத நிலைமை இருப்பதால் அதிலே பல்வேறு சங்கடங்கள் ஏற்படும் என்று பலர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே மறுபடியும் கல்வியமைச்சர்கள் கூட்டத்தைக் கூட்டுவதற்கு மத்திய கல்வியமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்கிறார்கள்.

## *Regional Engineering College.*

*105 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether it is a fact that the number of seats in the Regional Engineering College, Tiruchirappalli has been increased from the current academic year; and

(*b*) if so, the details thereof?





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ) 1974-75 கல்வி ஆண்டு முதல் மொத்த இடங்களின் எண்ணிக்கை 180-லிருந்து 200 ஆக உயர்த்தப்பட்டது. அதன் விளைவாக தமிழ் நாட்டுக்குரிய இடங்களின் எண்ணிக்கை 90-லிருந்து 100 ஆக உயர்ந்துள்ளது.

## *Inter-State river waters*

*106 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that the State Government have made suggestions to the Government of India during 1973 for settlement of Inter-State river water disputes; and

(*b*) whether the suggestions have been accepted; and

(*c*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) ஆம்.

(இ) & (உ) இது இந்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி:** சார், சமீபத்திலே நடந்த பேச்சு வார்த்தையின் காரணமாக காவிரி வேலி அதாரிட்டி என்று ஒரு ஸ்தாபனம் ஏற்பட்டு இருக்கிறதா? அதிலே நம்முடைய சர்க்கார் நமக்கு என்ன என்ன குறைபாடுகள் இருக்கிறதோ அதையெல்லாம் சொல்லி, அதைப் போக்கக்கூடிய அளவிற்கு அந்தக் கழகம் கேட்டு தீர்வுகாணுவதற்கு வழியிருக்கிறதா? சமீபத்திலே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு இப்போது அதற்கு விரோதமாக கபினி ஆற்றுத் தண்ணீர் விடுவதால் தகராறு இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அதனுடைய விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கும் துணைக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. கேள்வி கேட்டிருப்பது பொதுவாக

"whether the State Government have made suggestions to the Government of India during 1973 for settlementof Inter-state river water disputes"

என்று கேள்வி கேட்டிருக்கிறார்கள். இதிலே இந்திய அரசாங்கம் அரசியல் சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்யவேண்டுமென்பதற்காக சில யோசனைகளைக் கேட்டார்கள். அதற்கு தமிழக

[1974 டிசம்பர் 19

அரசு தன்னுடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறது. இந்திய அரசின் பரிசீலனையில் அது இருக்கிறது. காவிரிபற்றி, கபினி பற்றிக் கேட்டார்கள். அது இந்தக் கேள்வியில் அடங்கவில்லை. அந்த அடிப்படையிலே பேச்சுவார்த்தை நடக்கவில்லை, தொடர்ந்து நடந்துவருகிற பேச்சுவார்த்தைகளையொட்டி அதைப் பற்றிப் பேசியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆ. பரந்தாமன்:** தலைவர் அவர்களே, மாநிலங்களுக்கு இடையிலே இருக்கிற தண்ணீர்ப் பிரச்னையைத் தீர்ப்பதில் மத்திய அரசு நிரம்ப காலதாமதத்தை செய்துகொண்டிருக்கிற காரணத்தால் தமிழ்நாட்டிலே விளைச்சல் பாதிக்கப்பட்டு இருக்கிறது. அதை உணர்த்தும் வகையில் இன்றைய செய்தித் தாளிலே முதல்வர்கள் கூடிப்பேசவிருக்கிறார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. அந்தக் கூட்டத்திலே தமிழ்நாட்டு மக்களுடைய அதிருப்தியை எடுத்துத் தெரிவித்து மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மீண்டும் காவிரிபற்றித் தான் குறிப்பிடுகிறார்கள். டெல்லியில் கூடும்போது தமிழக அரசு சுமுகமான முடிவிற்கு வருவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி:** மாநிலங்களிலே ஓடுகிற நீர் சம்பந்தமாக பிரச்னையின் முழு அதிகாரமும் மத்திய சர்க்காரே வைத்துக்கொள்ளவேண்டும் மாநில அரசுகளை கலந்துகொண்டு செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டு இருக்கிறதா? இந்திய நீர் உடைமைகள் அத்தனையையும் மத்திய சர்க்கார் வைத்துக்கொள்ள வேண்டுமென்று மாநில அரசு சொல்லியிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நாம் தெரிவித்து இருக்கிற கருத்துக்களை தெரிவிப்பது நல்லது என்று கருதி சொல்லிவிட விரும்புகிறேன். நாடாளுமன்றத்தின் அதிகார வரம்பு,* மாநிலங்களுக்கு இடையே ஓடும் ஆறுகளின் நீரைப் பயன்படுத்துதல், அந்த ஆறுகளின் நீர் குறித்த தகராறுகள் ஆகியவற்றிற்கு மட்டும் என வரையறுக்கப்படலாம்.

மாநிலங்களுக்கிடையே ஓடும் ஓர் ஆறு குறித்த நீர்த்தகராறு ஏதேனுமிருந்தால், சம்பந்தப்பட்ட மாநிலங்களின் முதலமைச்சர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் இடையே அல்லது அவர்களுக்குள் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட வேண்டும்.



1974 டிசம்பர் 19]

அத்தகைய பேச்சு வார்த்தைகளினால் உடன்பாடு ஏற்படாவிட்டால், பிறகு, இந்தியத் தலைமை அமைச்சர் அல்லது தலைமை அமைச்சர் தலைவராக இருக்கும் தேசிய நீர்வாயில்கள், குழு நடுவராக இருந்து அத்தகைய தகராறுகளைத் தீர்த்து வைக்கலாம். இந்த இறுதி முடிவுக்கு எதிராகத் தலைமை உயர்நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்து கொள்ளலாம்; அந்த மேல் முறையீடு நீதிபதிகள் ஐவருக்குக் குறையாத நீதிபதிகள் குழுவினால் முடிவு செய்யப்படவேண்டும். மாநிலங்களுக்கு இடையே ஏற்படும் ஆற்று நீர்த்தகராறுகள் குறித்து அறிக்கைகள் தயார் செய்ய, தேசிய நீர்வாயில்கள் குழுவுக்குத் தொழில் நுட்பப் பிரிவு ஒன்றிருக்கலாம்.

ஆற்றுநீர் குறித்த ஆணைக்குழு என்ற தனிப்பட்டதொரு குழு அமைப்பது அவசியமற்றதாகும். ஏனெனில் அது வட்டார ஏற்றத் தாழ்வுகளைக் கருத்தில் கொள்ள முடியாது.

அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கும் மேற்சொன்ன திருத்தங்களை ஒட்டிச் சட்டம் ஒன்று இயற்றுவதற்கும் நாடாளுமன்றத்தில் சட்டவரைவு எதுவும் கொண்டுவரப்படுவதற்கு முன் சட்ட அமைப்பு, அதன் விவரங்கள் ஆகியவை முதற்கண் தலைமைச் செயலாளர்கள் மாநாட்டளவிலும், பின்னர் அதைத் தொடர்ந்து முதலமைச்சர்கள் மாநாட்டளவிலும் விரிவாக விவாதிக்கப்பட வேண்டும்.

தமிழக அரசு தெரிவித்த இக்கருத்துக்கள் இந்திய அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டிலே ஓடுகிற ஆற்றுநீர் குறிப்பாக எந்த ஆறாக இருந்தாலும் வறண்டுபோகிற நிலைமை—இன்றைக்கல்ல—தொடர்ந்து இருந்து வருகிறது. ஆகவே இப்படிப்பட்ட சங்கடங்களைப் போக்குவதற்கு கங்கை-காவிரி இணைப்பை மத்திய அரசிடம் வற்புறுத்தி உடனடியாகத் திட்டமிட மாநில அரசு வழிவகை செய்யுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, நீண்ட நெடுநாட்களாகப் பேசிக்கொண்டிருக்கிற பிரச்னை, பேசிக் கொண்டேதான் இருக்கப் போகிறார்கள். எப்போது செயலுக்கு வரும் என்று சொல்லமுடியாது. இப்போது ஆரம்பித்தாலும்கூட முடிய 50 ஆண்டுகள் 60 ஆண்டுகள் ஆகும் என்று சொல்கிறார்கள்.

[1974 டிசம்பர் 19

அதற்குத் தேவையான செலவு, மின்சாரம் இவற்றைப் பார்க்கிற போது அந்தத் திட்டத்தை எண்ணிக்கூடப் பார்க்க முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே நாம் முதல் கட்டமாக கிருஷ்ணா, காவிரி போன்றவைகளை இணைக்கவேண்டுமென்ற யோசனையைத் தெரிவித்தோம். அந்த யோசனைக்கு ஆந்திர அரசு இசைவு தெரிவிக்கவில்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, தமிழக அரசு இந்த ஆற்று நீர்ப் பிரச்னை சம்பந்தமாகத் தெரிவித்த கருத்துக்களில் மத்திய அரசாங்கம் எதையெதை ஏற்றுக் கொண்டிருக்கிறது? அண்மையில் ஏதாவது பேச்சு வார்த்தை நடந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, நான் சொன்ன கருத்து, அவர்கள் பரிசிலனையில் இருக்கிறது என்று நான் தெரிவித்திருக்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, ஆந்திராவிலுள்ள கிருஷ்ணா, கோதாவரி நதிகளின் நீரை தமிழகத்திலுள்ள வறட்சி நிலையைப் போக்குவதற்குக் கொடுப்பதற்கு நடந்த பேச்சு வார்த்தைகளில் ஆந்திரா அரசு சம்மதம் தெரிவிக்கவில்லை என்றால் அதற்குக் காரணம் தண்ணீர் அவர்களுக்குப் போதவில்லை என்பதாலா? உபரி நீரைக் கொடுப்பதற்கு அவர்கள் என்ன ஆட்சேபணையைச் சொல்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, அப்படி ஒரு பேச்சு வார்த்தை நடந்ததாக நான் குறிப்பிடவில்லை. ஆனால் ஆந்திரா அரசு அமைச்சரவர்கள் அது சரி அல்ல என்று அதற்கு எதிர்ப்பு கருத்தைச் சட்டமன்றத்தில் தெரிவித்ததாக எனக்கு நினைவு இருக்கிறது. இப்பொழுது குடிதண்ணீருக்காகக் கொஞ்சம் தண்ணீர் தேவை, கிருஷ்ணா நதியிலிருந்து கொடுக்க வேண்டுமென்று கேட்டதற்கு அதற்கே தண்ணீர் இல்லை, கொடுப்பதற்கில்லை என்று ஆந்திரா அரசு பதில் எழுதிவிட்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** தலைவரவர்களே, நம்முடைய அரசு மத்திய அரசுக்குத் தன்னுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு முன்பாக நம் பக்கத்திலிருக்கும் மாநிலங்களையும் இது சம்பந்தமாகக் கலந்து ஏதாவது ஆலோசித்து, நன்மைகள்



1974 டிசம்பர் 19]

கிடைக்கும் வகையில் பொதுவான கருத்து அமையும் அளவில் ஆலோசனை நடத்தி அதற்குப் பிறகு மத்திய அரசுக்குத் தெரிவித்ததா அல்லது மற்ற மாநிலங்களைக் கலந்து கொள்ளாமல் தங்கள் கருத்தைத் தெரிவித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, மத்திய அரசாங்கம் எல்லா மாநிலங்களையும், 262(1) என்ட்ரி 56 ஆகிய அரசியல் சட்டப் பிரிவுகளை நிருத்துவதாக இருக்கிறோம். உங்கள் கருத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டார்கள். எல்லா மாநிலங்களையும் கேட்டார்கள். நம்முடைய மாநிலத்தின் சார்பாகக் கருத்தைத் தெரிவித்திருக்கிறோம். அந்தந்த மாநிலங்களும் என்ன கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள் என்று தெரியாது. இன்னொரு மாநிலத்தைக் கேட்டு கருத்து தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை, நம்முடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறோம்.

### மதுரையில் புதிய சுரங்கப்பாதை

***107 வினா—திரு. த. சோனையா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை அரசினர் மருத்துவ மனை (Government Erskine Hospital) அருகில் உள்ள பசும்பொன் தேவர் சிலைக்கு அடியில் சுரங்கப்பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இல்லை.

**திரு. த. சோனையா :** தலைவரவர்களே, மதுரை எர்ஸ்கின் அரசினர் மருத்துவமனைக்கு அருகில் நம்முடைய பசும்பொன் தேவர் சிலை இருக்கின்ற பகுதி கோரிப்பாளையம் என்ற பகுதியாகும். அந்தப் பகுதியில் ஜன நடமாட்டம் மிக அதிகமாக இருக்கிறது. அந்தப் பக்கத்தில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, தேவர் சிலையை மையமாக வைத்து ஒரு சுரங்கப் பாதையை அமைத்தால் பொதுமக்களுக்கு நல்ல பலனைத் தரும். எனவே, அதை மறுபரிசீலனை செய்தாவது அரசு அந்தப் பாதாளச் சுரங்கப் பாதையை ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, அதற்குச் சுமார் 20 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று தோராயமாக மதிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது இந்தத் திட்டத்திலே சேர்க்கப்படவில்லை, ஆகவேதான் ஆலோசனை இப்பொழுது இல்லை என்று தெரிவித்தேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், மதுரையிலே இந்த எர்ஸ்கின் ஆஸ்பத்திரிக்குப் பக்கத்தில் மட்டுமல்லாமல், பஸ் ஸ்டாண்டிற்கு அருகில் கூட மிகவும் நெருக்கடியாக இருந்து, ஏற்கனவே அங்கே கார்ப்பரேஷனிலேகூட இந்தப் பாதாள வழியை அமைக்க வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறார்களே, இந்த இரண்டு இடங்களுக்கும் முன் இடம் கொடுத்து அந்த வேலையைத் துவங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற இடம் ரொம்பவும் நெரிசலான இடம் என்பதை ஒத்துக்கொள்கிறேன். அது தேவையானதும்கூட. நிதி வாயில்களைப் பெற்ற பிறகு அதைப் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## பண்ணைப்பட்டி-பாச்சலூர் சாலை

***108 வினா—திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், ஆத்தூர் தொகுதியில் பண்ணைப்பட்டி-பாச்சலூர் சாலை போடும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு ? வேலைகள் எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) & (இ) இச்சாலையின் ஒரு பகுதியாகிய ஆடலூரிலிருந்து கே. சி. பட்டிக்கு சாலை போடும் வேலை மத்திய சாலை நிதி திட்டத்தின் கீழ் ரூ. 33.60 லட்சம் செலவில் ஆடலூர்-பண்ணைப்பட்டி-பாச்சலூர் சாலையிலிருந்து தாண்டிக்குடி மலைச்சாலையை இணைக்கும் சாலை போடும் பணியின் ஒரு பகுதியாக நடைபெற்று வருகிறது. இதர பகுதிகளில் சாலை போடுவதற்கான செயற்குறிப்பு எதும் தற்போது அரசின் கைவசமில்லை.



## Marketing of Handloom fabrics

* 109 *Q.*—THIRU G. R. EDMUND :
THIRU N. K. PALANISAMY : Will the Hon. the the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Handloom Finance and Trading Corporation in Tamil Nadu has drawn up schemes for marketing the Handloom varieties at (i) home market and (ii) export market; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) & (இ) இக்கழகம் கைத்தறித் துணி விற்பனையை மேற்கொள்ள தீர்மானித்துள்ளது. முதற்படியாக, மொத்த விற்பனையையும் ஏற்றுமதியையும் செய்யமுற்படும். வியாபார விசாரணைகளை கவனிக்கும்பொருட்டு டெல்லி, பம்பாய், சென்னை போன்ற முக்கிய இடங்களில் தொடர்பு அலுவலகம், அங்காடிகளைத் திறக்கும்.

**திரு. என். கே. பழனிசாமி :** சார், இப்பொழுது சர்க்கார், டெல்லி போன்ற இடங்களில் விற்பனைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். இப்பொழுது ஏராளமான கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடப்பதன் காரணமாக அந்தக் கைத்தறி துணி பூராவையும் கொள்முதல் செய்து இந்த மாதிரி விநியோகம் செய்ய சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, இதுவரையில் கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில் நாம் அப்படிச் செய்கிறோம். கூட்டுறவு அல்லாத துறைகளில் இந்த முயற்சியை எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன் :** தலைவரவர்களே, முன்பெல்லாம் கூட்டுறவுத் துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தோம். பிறகு சந்தானம் கமிட்டி ரிப்போர்ட்டில் ஏராளமான தறிகள் மாஸ்டர் வீவர்களிடம் இருப்பதால் அவர்களுடைய நிலையையும் கொஞ்சம் அனுசரிக்க வேண்டுமென்று இருக்கிறது. இப்பொழுது மதுரையிலே மிகவும் கஷ்டமான நிலைமை இருக்கிறது. நான்கு கோடி ரூபாய் அளவிற்குத் துணி தேங்கியிருக்கிறது என்று நெசவாளர் தலைவர்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துகிறார்கள். ஆகவே, மாஸ்டர் வீவர்களுக்காக அவசரத் திட்டம் ஏதாவது கொண்டு வந்து துணிகளை வாங்க

[1974 டிசம்பர் 19

அரசு ஏற்பாடு செய்யுமா? அப்படிச் செய்தால்தான் நெசவாளர்களுக்கு வேலை கொடுக்க முடியும் என்ற நிலை இருக்கிறது. இதை உடனடியாகக் கவனித்துத் துணிகளை வாங்குவதற்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, அகில இந்தியாவிலேயும் நூல் தேக்கம், கைத்தறி துணி தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் கடந்த தீபாவளி காலத்திலே நாம் எதிர்பார்த்த அளவிற்கு விற்பனையில்லாத காரணத்தினாலே தேக்கம் ஏற்பட்டிருப்பது உண்மை. கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில் நம் மாநில கூட்டுறவுச் சங்கத்தின் சார்பிலே இருக்கும் தேக்கம் அடைந்திருப்பதை வாங்கும் முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவுத் துறையிலே டர்க்கி டவல், நாகர்கோவிலில், அதிலும் குறிப்பாக வடசேரி பகுதியில் அதிகமாக உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறது. இப்பொழுது அவைகளை மார்க்கெட் செய்ய இயலாததன் காரணமாக அந்த நிறுவனங்களை மூட வேண்டிய நிலைமை இருக்கிறது. எனவே, அதை மார்க்கெட்டிங் செய்ய வேண்டிய ஏற்பாடுகளை இந்த அரசாங்கம் செய்து கொடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அதுபோன்ற டவல்களுக்கு நிரந்தரமான சந்தை இல்லை என்று சொல்ல முடியாது. இப்பொழுது இரண்டு, மூன்று மாத காலமாக ஏற்பட்டிருக்கின்ற தேக்கத்தின் காரணமாக அவைகளும் பாதிக்கப்பட்டிருக்கிறது. நான் ஏற்கனவே சொன்னதுபோல், கூட்டுறவுத் துறையிலே நாம் வாங்குவதற்கு முயற்சி எடுத்து வருகிறோம்.

**திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்:** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கைத்தறி நிதி வர்த்தகக் கழகத்தின் மூலம் கொள்முதல் செய்ய ஆலோசிக்கப்படுகிறது என்று கூறினார்கள். தனியார் துறையிலும் கைத்தறித் துணி அதிகமாகத் தேக்கம் அடைந்திருக்கிறது. ஆகவே, உடனடியாக தனியார் துறையில் உள்ள கைத்தறித் துணிகளையும் கொள்முதல் செய்ய ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தனியார் துறையினர் அப்படிப்பட்ட முயற்சிக்கு முன்வர வேண்டும். இதுவரையில் எப்பொழுதாவது நூல் தேக்கம் ஏற்பட்டால் நம்முடைய நூலைக்



1974 டிசம்பர் 19]

கொடுக்கும்படி கேட்பார்கள். இந்தக் கைத்தறித் துணி தேக்கம் ஏற்பட்டவுடன் நம்மை வாங்கும்படி கூறுகிறார்கள். நாம் அவர்களுக்குக் கூறுகின்ற ஆலோசனை, அவர்களுக்காகத் தோற்றுவிக்கப்பட்டு நடத்தும் ஹேண்ட்லூம் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் மூலமாக, கூட்டுறவுச் சங்கத்தினுடைய இயக்கம் நடைபெறுவதைப்போல் அவர்களும் ஒரு தலைமை அமைப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கு அரசாங்கம் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறது என்பதுதான் புதிய யோசனை.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** தலைவரவர்களே, இந்தக் கைத்தறியிலே பெரிய சங்கடம் என்னவென்றால், நூலின் விலையானது ஒரு வாரத்திற்குள் 900 ரூபாய்க்கு விலை இறங்கியது மறுபடியும் 300 ரூபாய் கூடியிருக்கிறது. இதனால் நெசவாளர்கள் நிலையான விலைக்கு நூலை வாங்கி சரக்குகளைத் தயார் செய்து ஒழுங்காக மார்க்கெட் செய்வதில் பல இடைஞ்சல்கள் இருக்கின்றன. எனவே, நூலின் விலையைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு ஏதேனும் செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இதுபற்றி மாண்புமிகு அங்கத்தினர் உட்பட இந்த மன்றத்தில் உள்ள அங்கத்தினர்கள் கூட்டாய்வுக் குழுவில் நீண்ட நேரம் விவாதித்தோம். இது அகில இந்தியப் பிரச்னை என்பது விளக்கப்பட்டது. அவர்கள் சொன்னதன் அடிப்படையான கருத்து, மிகுந்த அளவிற்கு ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டிய கருத்தாகும். நூல் விலை ஏற்றத்தினால் இலட்சக்கணக்கான நெசவாளர்கள் பாதிக்கப்படுவது ஒரு கட்டம், மாறி மாறி வருகிறது. நூலே கிடைக்கவில்லை என்பது ஒரு கட்டம், நூல் விலையேற்றம் ஒரு கட்டம். இப்பொழுது நூல் வாங்க ஆள் இல்லை என்பது ஒரு கட்டம் மறுபடியும் நூல் விலையேற்றம் என்பது ஒரு கட்டம். இப்படிப்பட்ட மோசமான நிலைமை இருப்பதற்கு நாம் பரிகாரம் காண வேண்டுமென்றுதான் நம்முடைய புதிய சட்டத்திலே பல பிரிவுகளைக் கொண்டு வந்திருக்கின்றோம். சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்தில் டெல்லியில் நானும், மாண்புமிகு முதலமைச்சரவர்களும் சொன்னோம். அந்த அமைச்சர் பாராட்டிவிட்டு, இப்படிப்பட்ட அருமையான மசோதாவைக் கொண்டு வருகிறீர்கள் என்று பாராட்டினார்கள். முடிவிலே அகில இந்தியப் பிரச்னை, உங்கள் மாநிலத்திற்கு மட்டும் எப்படி ஒப்புதல் அளிப்பது என்ற சந்தேகத்தையும் கிளப்பினார்கள்.

[1974 டிசம்பர் 19

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவரவர்களே, இந்த நெசவாளர்கள் தனிப்பட்ட முறையில் தலைமை அமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று அமைச்சரவர்கள் கூறினார்கள். அதற்கு அரசும் ஒத்துழைப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அரசினுடைய ஒத்துழைப்பு எவ்வாறு இருக்கும் என்று அறியலாமா?

(முற்பகல் 9-30)

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நம்முடைய மாநிலக் கூட்டுறவுச் சங்கத்திற்கு இப்படிக் கைத்தறித் துணிகளை வாங்குவதற்குப் பொருள் உதவி செய்கிறோம். இந்தியா முழுவதும் விற்பனை செய்ய உதவி செய்கிறோம். இந்திய நாட்டிலிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய உதவி செய்கிறோம். அந்த முறையில் 'நான்-கோவாப்பரேட்டிவ்சிலும்' செய்யலாம் என்று நாங்கள் கூறியிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதே பொருள் பற்றி ஒத்தி வைப்புத் தீர்மானங்களைப் பல உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். ஒத்தி வைப்புத் தீர்மானங்களை எடுத்துக் கொள்ளும் போது விளக்கமாகப் பேசலாம்.

**திரு. சோ. அழகர்சாமி :** இது முக்கியமான கேள்வி. துணைக் கேள்விகள் கேட்டு விவரங்களைப் பெறமுடியும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இந்தக் கைத்தறித் தொழிலைப் பாதுகாப்பதற்காக இருக்கக்கூடிய மசோதா அடுத்த சட்டமன்றத் தொடரிலாவது வருமா? கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடக்கின்றன என்று பல இடங்களிலிருந்து தகவல்கள் வந்திருக்கின்றன. தனியார் துறையில் இருக்கக்கூடிய, செல்லூர், இராமநாதபுரம் ரோடு போன்ற இடங்களில் கிட்டத்தட்ட 15,000 தொழிலாளர்கள் வேலையிழந்திருக்கிறார்கள். அரசு தலையிட்டு தொழிற்சாலைகளிலும், சங்கங்களிலும் நியாயமாகத் தேங்கியிருக்கும் சரக்குகளைப் புதிய அமைப்பின் மூலமாக மற்ற மாநிலங்களுக்கு அனுப்பவும் ஆவன செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** புதிய கார்ப்பரேஷனின் புதிய முயற்சி பற்றி ஏற்கனவே விளக்கிவிட்டேன். அடுத்த கூட்டத் தொடரிலாவது கைத்தறிப் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட **மசோதா**



1974 டிசம்பர் 19]

வருமா என்று அங்கத்தினர் அவர்கள் கேட்டார்கள். டில்லியில் நடைபெற்றது பற்றி குழுவில் விளக்கிய பிறகு என்ன முடிவு எடுக்கிறார்களோ அதன்படி நடக்கலாம்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தமிழ் நாட்டில் உற்பத்தியாகும் கைத்தறித் துணிகள் வெளிநாட்டிற்கு அனுப்புவது குறைந்திருக்கிறதா? அங்கு வரவேற்பு குறைந்திருக்கிறது என்பது உண்மையா? என்ன காரணம்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அடுத்த கேள்வியும் கைத்தறி பற்றியதுதான். வெளிநாடுகளைப் பொறுத்தமட்டில் ஏற்றுமதி ஓரளவு குறைந்திருப்பதற்கு வெளிநாடுகளில் ஜவுளிக்குள்ள விலை ஏற்றத்தாழ்வுதான் காரணம் என்று சொல்லப்படுகிறது.

**திரு. எஸ். வடிவேல் :** தமிழ் நாட்டில் 30 கோடி ரூபாய்க்குக் கைத்தறித் துணி தேங்கியிருக்கிறது. கிராமப் புறங்களில் உள்ள விவசாயத் தொழிலாளர்கள் மாற்றுத் துணி இல்லாமல் ஒரு வேட்டிக்கு மேல் மறு வேட்டி இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கடன் கொடுத்து விற்பனை செய்வதன் மூலம் அரசுக்கு நட்டம் ஏற்படாது. ஆகவே, நீண்டநாள் தவணையில் கடன் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அரசு அலுவலாளர்களுக்கு அரசாங்கத்தின் சார்பில் கடன் கொடுக்கப்படுகிறது. விவசாயிகளுக்கு அப்படிப்பட்ட முறை இல்லை. விவசாயிகளுடைய வாங்கும் சக்தி குறைந்த காரணத்தால் இப்படி இருக்கிறது என்று அவர்கள் சொன்ன கருத்து ஆழ்ந்து சிந்திக்கக்கூடிய கருத்தாகும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** கூட்டுறவுத் துறையில் தேங்கியுள்ள துணிகளை வாங்க மாநிலக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். கூட்டுறவுத் துறையில் எவ்வளவு தேங்கியிருக்கிறது? கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறதா? மாநிலக் கூட்டுறவுச் சங்கத்திற்கு எவ்வளவு பணம் இந்தத் துணிகளை வாங்க ஒதுக்கப்பட்டிருக்கிறது? எவ்வளவு காலத்திற்குள் இந்தத் துணிகளைக் கூட்டுறவுத் துறையிலிருந்து வாங்க முடியும் என்று டார்கெட் இருக்கிறதா?

[1974 டிசம்பர் 19

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** வருகிற கிறிஸ்துமஸ் விழாவையும் பொங்கல் விழாவையும் பயன்படுத்திக் கொண்டு நம்முடைய அரசு அளிக்கக்கூடிய ரிபேட் தொகையை அதிகமாக அளித்து, அதே போல் கோஆப்டெக்ஸ் தன்னுடைய பணத்திலிருந்து ஓரளவு உதவி செய்து விலையைக் குறைத்து விற்கலாம் என்ற முயற்சி நடைபெற்று வருகிறது.

**திரு. வை. பாலசுந்தரம் :** கைத்தறியாளர்களுக்குச் சலுகைகள் வழங்குகின்ற வகையில் ரிபேட் தொகை கொடுக்கிற சதவிகிதத்தை அதிகப்படுத்தும் வகையிலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போதுதான் அமைச்சர் அவர்கள் பதிலளித்தார்கள். அதையே கேள்வியாகப் போடுகிறீர்களே.

**திரு. வை. பாலசுந்தரம் :** பண்டிகை காலங்களில் இந்தச் சலுகையை அதிகப்படுத்தித் தந்தால் தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணிகள் விற்பனையாகும். அப்படிப்பட்ட வழி வகைகளை அரசு செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** 1967-க்கு முன்னால் 60 லட்சம் ரூபாய் ஆண்டு ஒன்றுக்குக் கொடுக்கப்பட்டது. இப்போது ஒன்றரைக் கோடி ரூபாய் கொடுத்து வருகிறோம்.

**திரு. சோ. அழகர்சாமி :** இந்த ஆண்டு தீபாவளிக்கு கைத்தறித் துணிக்கு ரிபேட் கொடுத்தும் விற்கப்படவில்லை. என்னுடைய தொகுதியில் எட்டையபுரம் போன்ற இடங்களில் 30 லட்சம் ரூபாய் ஜவுளி தேக்கம் இருக்கிறது. கடந்த மூன்றுமாத காலமாக அந்த நெசவாளர்கள் எல்லாம் பட்டினி. அமைச்சர் அவர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் இருக்கும் ஜவுளியை வாங்க நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். முப்பது லட்சம் ரூபாய் மதிப்புள்ள துணிகள் தேங்கியிருப்பதை உடனடியாகக் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் சொல்லும் யோசனை என்னவென்றால் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** யோசனை எல்லாம் கேள்வி நேரத்திலே சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது. இது அல்ல அதற்கான நேரம். கேள்வியை மட்டும் கேளுங்கள்.



1974 டிசம்பர் 19]

**திரு. சோ. அழகர்சாமி :** நூல் கார்ப்பரேஷனும், மாநில கூட்டுறவுச் சங்கமும் ஏற்பாடு செய்து இந்தத் துணியை இந்தக் கழகம் கட்டாயமாக வாங்க வேண்டுமென்ற முறையில் ஆணை பிறப்பிப்பார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நிரந்தரமான கைத்தறித் துணித் தேக்கம் என்று சொல்லக்கூடாது நிரந்தரமாகத் தேங்கிய துணிக்கு பணம் கொடுக்கவில்லை என்றெல்லாம் சொல்லக்கூடாது. இது இரண்டு மாதமாக உள்ள பிரச்சினைதான். இதற்குத் தனியாகத் திட்டம் போடுகிறோம். நாமே பணம் கொடுத்து வாங்கி வைக்கிறோம். நம்மிடம் தேங்கினால் அதுவும் ஆபத்துதான். விலையைக் குறைத்தாவது இந்தக் கஷ்ட காலத்தில் விற்க வேண்டுமென்று முயற்சித்து வருகிறோம்.

## நெசவாளர் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள்

***110 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுயமாக தொழில் புரியும் நெசவாளர்களுக்கான சேவா கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) தனியார் துறையில் இயங்கி வரும் கைத்தறிகளுக்குத் தேவையான நூல் மற்றும் மூலப்பொருட்களை நியாய விலையில் சீராக விநியோகிக்கும் குறிக்கோளுடன் இச் சங்கங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. சொந்தமாக கைத்தறிகளையுடைய எல்லா நெசவாளர்களும் பணிக் கூட்டுறவுச் சங்கங்களில் சேரத் தகுதியுள்ளவர்கள். ஒரு சங்கத்தில் ஏறத்தாழ ஓராயிரம் (1,000) தறிகள் வரை சேர்க்கப்படுகின்றன. உறுப்பினர்கள் உற்பத்தி செய்யும் துணியை சங்கங்கள் விற்பனை செய்யாது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** சேவா கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசாங்கம் ஏதாவது உதவி செய்ய உத்தேசித்திருக்கிறதா? விவரம் என்ன?

[1974 டிசம்பர் 19

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** முக்கியமான குறிக்கோள் நிதிப் பற்றாக்குறை ஏற்படும்போது பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக தனியார் துறையிலுள்ள தறிகளுக்கும் நிதி கொடுக்க வகை செய்வதாகும்.

**திரு. எம். சுரேந்திரன் :** சேவா கூட்டுறவுச் சங்கங்கள் ஒரே நேரத்தில் மிகவும் போட்டி போட்டுக் கொண்டு பதிவு செய்து பதிவாகியிருக்கின்றன. இந்தச் சங்கங்களின் மூலம் நூல் விநியோகமோ மற்றக் காரியங்களோ இதுவரை நடைபெறவில்லை என்று அறிகிறேன். இந்தச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு டெபாசிட் எல்லாம் செய்யப் பெற்று எந்தவிதமான அசைவும் இல்லாமல் இருந்து கொண்டிருப்பதைப் பார்க்கும்போது பயனற்று போய்விடுமோ என்ற நிலை இருக்கிறது. அது உயிர் பெற நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்தப் பயமே தேவையில்லை. இருக்கிற தொல்லையெல்லாம் நூல் கிடைக்காதபோது நம்மிடத்தில் வருகிறார்கள். தனியார் துறையில் இப்போது நூல் வாங்க ஆள் இல்லை. ஆகவே, வரமாட்டேன் என்கிறார்கள். இதுதான் பெரிய பிரச்சினை ஆகவே, நிரந்தரமாக எப்படியாவது பணிக் கூட்டுறவுச் சங்கத்தில் சேர்ந்துவிட்டால் நாமே நூல் வழங்கும் முயற்சியை எடுக்கிறோம். அதற்கு மத்திய அரசாங்க அனுமதி வேண்டும்.

**திரு. கே. என். குமாரசாமி :** ஆண்டுக்காண்டு கைத்தறித் தொழிலாளர்கள் பிரச்சினை வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது. சந்தானம் கமிட்டி பல்வேறு ஆலோசனைகளைக் கூறியிருக்கிறது. இதற்கு முடிவான கருத்தை ஏற்று அமல்படுத்தினாலன்றி பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. இது சம்பந்தமாக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** திரு. சந்தானம் அவர்கள் சொன்ன யோசனை பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட வேண்டுமென்பதாகும். அதைத்தான் இப்போது நிறைவேற்றி வருகிறோம்.



1974 டிசம்பர் 19]

**திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன் :** பணிக் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து நூல் வாங்க ஆள் இல்லையென்று சொன்னார்கள். மார்க்கெட் விலையைவிட இங்கே அதிகமாக விற்கப்படுவதால் யாரும் வாங்க முன்வரவில்லை. ஆகவே, வெளி மார்க்கெட்டில் விற்கக்கூடிய அளவுக்கு விலையைக் குறைத்து விற்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நாட்டிலுள்ள ஆலை முதலாளிகள் கொள்ளை லாபம் வைத்து விற்கும்போது இங்கே விலையைக் குறைத்துக் கொடுக்கிறோம். இப்போது நம்முடைய உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கிறது. அவர்கள் குறைத்து விற்கிறார்கள். அதையே பின்பற்றி கூட்டுறவு ஆலைகள் நட்டத்தில் ஓட வேண்டுமென்று நாங்கள் விரும்பவில்லை.

***111 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தாலுக்கா, வெள்ளங்குளி, வீரவநல்லூர் ஆகிய கிராமங்களில் சுமார் 400-க்கு மேற்பட்ட நெசவுத் தறிகளுக்கு மெல்லிய ரக நூல் கிடைக்காமல் நெசவுத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) & (இ) நாடு முழுவதற்குமாக, பம்பாயில் உள்ள துணி நூல் ஆணையாளர் ஒதுக்கீடு செய்த உயர்ரகப் பருத்தி நூலின் அளவு, மே 1973 முதல் நவம்பர் 1973 வரையிலான மாதங்களில் நெசவாளர்களது தேவையைச் சரிக்கட்டப் போதுமானதாக இல்லை. மெல்லிய ரக பருத்தி நூலில் ஏற்பட்ட இந்தப் பற்றாக்குறை தமிழ் நாடு முழுவதிலும் பரவியிருந்தது. திருநெல்வேலி மாவட்டம் வெள்ளங்குளி, வீரவநல்லூர் கிராமங்களில் மட்டும் தனிப்பட்டதாக இருக்கவில்லை. மெல்லிய ரக நூல்கள் தற்போது தடங்கலின்றிக் கிடைக்கின்றன.

**திரு. ச. சங்குமுத்து தேவர் :** இதுமாதிரி நூல் தட்டுப்பாடு வரும்போது அப்படிப்பட்ட மெல்லிய ரக நூலை நெய்யக்கூடிய தறிகளுக்கு மோட்டா ரக நூலைப் போட்டு தறி நெய்ய முடியாது. எனவே அந்த நெசவாளர்களைப் பாதுகாக்கும் வகையில் அரசு ஏதாவது உதவி அளிப்பதற்கு ஆலோசனை செய்யுமா? இந்த வீரவநல்லூர், வெள்ளங்குளி போன்ற பகுதிகளுக்கு மெல்லிய ரக நூல் அந்த நேரத்தில் கொடுக்கப்பட்டதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது ரொம்ப நாட்களுக்கு முன் நடந்த விஷயம். இப்போது அந்த பற்றாக்குறை பிரச்னை இல்லை. நூல் வாங்குவதற்குத்தான் ஆள் இல்லை.

## இயந்திரத் தறிகள் வாங்கல்

* 112 வினா—**திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இயந்திரத் தறி வாங்குவதற்கு என்ன நடைமுறைகள் கையாளப்படுகிறது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இயந்திரத் தறிகள் 1973 ஆம் ஆண்டுக்கு முன் வாங்கப்பட்டது. கைத்தறித் துணித் துறை விசைத் தறிகள் உற்பத்தியாளர்களிடமிருந்து விலைவாசி விபரங்களைப் பெற்று மிகவும் குறைந்த விலையை ஒப்புக்கொண்டு, கம்பெனியுடன் பேசி இதர கொள்முதல் நிபந்தனைகளை முடிவு செய்தபின், சங்கங்களுக்கு தேவையான விசைத் தறிகள் வாங்க கம்பெனிக்கு எழுதியது. கம்பெனியிடமிருந்து சங்கங்கள் நேரடியாக விசைத் தறிகளை வாங்கிக்கொண்டன.

சங்கங்கள் விசைத்தறிகளின் மொத்த விலையில் பத்து சதவிகிதத்தை முதலில் செலுத்தி, மீதியுள்ள தொண்ணூறு சதவிகிதத்தை ஐந்தாண்டுகளில் பத்து அரையாண்டு தவணைகளில் வட்டியுடன் செலுத்த வேண்டும்.

**திரு. எம். சுரேந்திரன் :** இந்த இயந்திரத் தறிகள், எவ்வளவு தறிகள் வாங்குவது, எப்போது வாங்குவது, எப்போது அவற்றைச் செயல்படுத்துவது என்று ஏதாவது ஒழுங்கான முடிவுகள் செய்யப்பட்டு இந்தக் காரியங்கள் நடைபெற்றிருக்கின்றனவா? இயந்திரத் தறிகள் சம்பந்தமாக





சட்டவிரோதமாக லைசென்ஸ் இல்லாமல் பல காரியங்கள் இருக்கின்றன என்ற புகார்கள் இருந்தன. அவை சட்டபூர்வமாக ஆக்கப்பட்டு விட்டனவா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** விசைத்தறிகள் கூட்டுறவுத் துறைக்குத் தேவையானதை மட்டும் நாம் வாங்கிக்கொடுக்கிறோம். மற்றவை பற்றி நமக்கும் அவற்றிற்கும் சம்பந்தம் இல்லை. அன்-ஆதரைஸ்ட் விசைத்தறிகள் இருப்பதை நம் அரசு கணக்கெடுத்து சென்ஸஸ் டிப்பார்ட்மெண்ட் மூலம் தயாரித்து மத்திய அரசுக்கு ஒரு யோசனை சொல்லியுள்ளோம். இந்த விசைத்தறிகளை, அன்-ஆதரைஸ்டாக இருப்பவற்றை ஆதரைஸ்டாக மாற்றுவதற்குள்ள அதிகாரத்தை மத்திய அரசு நமக்கு வழங்கிவிட்டால் எதிர்காலத்தில் அன்-ஆதரைஸ்டாக வருவதை சென்ஸஸ் இலாகா மூலம், சட்டம் மூலம் தடுத்து விடுகிறோம் என்று யோசனை சொல்லியிருக்கிறோம். மத்திய அரசு இதுவரையில் ஏற்கவில்லை.

## *Drought prone Areas Programme*

* 113 Q.—**THIRU N. K. PALANISAMY** : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Centre has recently suggested to this State to prepare Master Plans for the drought prone districts; and

(*b*) if so, the details of the same?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) வறட்சிப்பாங்கான பகுதித் திட்டம் செயற்படுத்தப்படுகின்ற இரு மாவட்டங்களுக்கும் (இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்கள்) உரிய திட்ட அறிக்கைகள், துறைத் தலைவர்களைக் கலந்தாலோசித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களால், இந்திய அரசு கருத்து தெரிவித்தவாறே, தயாரிக்கப்பட்டு வருகின்றன.

**திரு. என். கே. பழனிசாமி :** என்னென்ன வறட்சி நிவாரணத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன? ஆண்டுக்கு ஆண்டு வறட்சி நிவாரணத்திற்காக நிதி ஒதுக்கியும் வறட்சி அப்படியே இருப்பதற்கு காரணம் என்ன? இந்த வறட்சி நிலையைப் போக்க மத்திய சர்க்காரிடமிருந்து நான்கு கோடி ரூபாயை பெற்றதை, பாசனக் கிணறுகளை ஆழப்படுத்த கொடுத்ததை, மாநில சர்க்கார் மத்திய

சர்க்காருக்கு சரண்டர் செய்துவிட்டார்களா? அதுதான் இந்த வறட்சி நிலை நீடித்திருப்பதற்குக் காரணமா என்று சொல்வார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மத்திய அரசு ஒவ்வொரு மாவட்டத்திற்கும், இப்படிப்பட்ட வறட்சி மாவட்டங்களுக்கு சுமார் மூன்று கோடி ரூபாய் மானியமாக வழங்குவதாக அறிவித்திருக்கிறது. இந்த மானியம், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும் நிறைவேற்றப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதில் மேற்கொள்ளக்கூடிய பணிகள், பாசனம், மண்வளப் பாதுகாப்பு, காடு வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு இது போன்ற திட்டங்களை நிறைவேற்றுவதற்காக அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுபற்றிய விவரங்களை, புள்ளிவிவரங்களை, திட்டங்களை, மத்திய அரசுக்கு அனுப்பவேண்டுமென்று மத்திய அரசு கேட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் அதை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம்.

**திரு. தோப்பூர் திருவேங்கடம்:** வருவாய்த் துறை வாரிய உறுப்பினர்கள் தெரிவிக்கிற கருத்துக்களை மட்டும் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்வார்களா அல்லது சட்டமன்ற உறுப்பினர்கள், அந்த அந்த மாவட்டத்தில் இருக்கிற ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் போன்றவர்களின் கருத்துக்களையும் அறிந்து கொண்டு மாவட்ட வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்வது பற்றி அரசு ஆலோசிக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மூலக் கேள்வி, வறட்சிப்பாங்கான மாவட்டங்களில் செயல்படுத்தப்படுவதற்கான பெருந்திட்டங்களைத் தயாரிக்குமாறு மாநில அரசுக்கு மத்திய அரசு அண்மையில் ஆலோசனை அளித்துள்ளதா என்பதாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது ஏற்பட்டிருக்கிற வறட்சி நிலை பற்றிக், குறிப்பிடுகிறார்கள். வருவாய்த் துறை வாரிய உறுப்பினர்கள் செல்லும்போது அங்குள்ள விவசாயிகளைச் சந்தித்து, மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்துதான் கருத்து தெரிவிக்கிறார்கள். உறுப்பினர் அவர்களுக்கு தம்முடைய கருத்துக்களைச் சொல்லவேண்டுமென்றால் வருவாய்த்துறை வாரிய உறுப்பினரிடம் தெரிவிக்கலாம். அதுவும் கஷ்டமாக இருந்தால் என்னிடம் கொடுத்தால் அதை நான் அனுப்பி வைக்கிறேன்.





**திருமதி த. ந. அனந்தநாயகி:** மத்திய அரசாங்கத்தால் வறட்சி நிவாரணப் பணிகளுக்காகக் கொடுக்கப்பட்ட பணத்தை இந்த அரசாங்கம் திருப்பிக் கொடுத்திருக்கிறதா? பயன்படுத்தாமல் விட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** எனக்குத் தெரிந்த வரையில், திருப்பிக் கொடுத்ததாகத் தெரியவில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இந்த வறட்சி நிவாரணத்திற்காக ராமநாதபுரம், தர்மபுரி மாவட்டங்களை நிச்சயித்த பிறகு அதற்கான திட்டத்தைத் தயாரிப்பதில் ஏன் காலதாமதமாகிறது? எவ்வளவு காலத்திற்குள்ளாக அந்தத் திட்டத்தை தயாரித்து அது மத்திய சர்க்காருக்கு அனுப்பப்படும்? அதன் விவரங்களை அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இந்திய அரசின் வேளாண்மை அமைச்சக துணைச் செயலாளர் 11—10—74 தலைமைச் செயலகத்தில் நம் அதிகாரிகளை கலந்து பேசியிருக்கிறார்கள். விவரங்கள் கேட்டிருக்கிறார்கள். அந்த விவரங்களைக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. நடப்பாண்டில் வறட்சிப் பாங்கான பகுதிகள் திட்டத்திற்காக தாற்காலிக நிதி ஒதுக்கீடு 66 லட்சம் ரூபாய் ஆகுமென்றும், நடப்பாண்டு வறட்சிப் பாங்கான பகுதிகள் திட்டம் குறித்து ஆகும் செலவுக்கு மாநில அரசு தனது வரவு-செலவுத் திட்டத்தில் இணையான தொகை ஒதுக்கவேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வறட்சி நிலை பற்றி பல்வேறு உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். அதையெல்லாம் சேர்த்து ஒரு அறிக்கை கொடுக்குமாறு அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அதுகுறித்த விரிவான அறிக்கை வரும். எனவே மேலும் துணை வினாக்கள் தேவையில்லை என்ற காரணத்தால் அடுத்த வினாவிற்குச் செல்கிறேன். வினா எண். 114.

**திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி:** இதுவேறு திட்டம், அது வேறு வறட்சித் திட்டம். இதற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு முறை இருக்கிறதல்லவா.

**திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி:** வறட்சிப் பாங்கான மாவட்டங்களுக்கு திட்டங்கள் தயாரிக்கும்போது ராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் திட்டங்கள் ஏதாவது முடிவு செய்யப்பட்டிருக்கின்றனவா? அந்தத் திட்டங்களின் விளக்கங்கள் என்ன? அதற்காக எவ்வளவு பணம் தேவைப்படும் என்று முடிவு செய்து அரசு சொல்லியிருக்கிறதா? அப்படி நமக்கு பணம் ஏதாவது வந்திருக்கிறதா? ஏதாவது திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றனவா? அந்த விவரங்களை எல்லாம் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடன் தொடர்புகொண்டு துறைத் தலைவர்களைக் கலந்து ஆலோசித்து அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. பாசனம், மத்திய அரசு பொறுப்பேற்பது 120 லட்சம் ரூபாய், மாநில அரசு பொறுப்பேற்பது ரூ. 193.36 லட்சம், மண்வளப் பாதுகாப்பு மத்திய அரசு பொறுப்பேற்பது ரூ. 30 லட்சம், மாநில அரசு பொறுப்பேற்பது. ரூ. 80 லட்சம், காடு வளர்ப்பு மத்திய அரசு பொறுப்பேற்பது ரூ. 45.22 லட்சம், மாநில அரசு ரூ. 45.15 லட்சம். கால்நடைவளர்ப்பு மத்திய அரசு 45 லட்சம், மாநில அரசு ரூபாய் 60 லட்சம், அமைப்பும் நிர்வாகமும் மத்திய அரசு 10 லட்சம் ரூபாய். மாநில அரசு 5 லட்சம் ரூபாய். மத்திய அரசு மூன்று கோடி, மாநில அரசு பொறுப்பாக மூன்று கோடி ரூபாய் என்று திட்டம் போடப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி பரிசீலித்து மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டியிருக்கிறது.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** வறட்சிப் பகுதிகளை முன்னேற்றத்திற்குக் கொண்டு வருவதற்காக மத்திய அரசிடமிருந்து பெறக்கூடிய நிதிகள் இரண்டு மாவட்டங்களின் பெயரைச் சொல்லி வாங்கப்படுகிறது. அதற்குப் பதிலாக இந்த மாநிலத்தில் உள்ள வறட்சிப் பகுதிகளை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து மாநில அரசு மத்திய அரசிடமிருந்து கிடைக்கக்கூடிய பொது நிதியைப் பெற்று இரண்டு மாவட்டங்கள் என்று மட்டுமல்லாது—என் தொகுதி துரதிருஷ்டவசமாக திருச்சி மாவட்டத்தில் சேர்க்கப்பட்டு உபரி பகுதி என்று சொல்லப்படுகிறது—என்தொகுதி போன்ற வறட்சிப் பகுதிகளுக்கும் சேர்த்து, ராமநாதபுரம். தர்மபுரி மாவட்டங்கள் என்று மட்டுமல்லாது வறட்சிப் பகுதிகள் அனைத்தையும் சேர்த்து விவசாயத்தைப் பெருக்குவதற்காக மத்திய அரசிடமிருந்து





மொத்தமாக தொகை பெற்று மாநிலத்தில் எங்கெங்கு தேவைப்படுகிறதோ அந்தந்தப் பகுதிகளுக்குப் பயன்படுத்தப்படும் வகையில் ஒரு திட்டத்தை அரசு உருவாக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மத்திய அரசினுடைய செயற்குறிப்புப்படி வறட்சி மாவட்டங்கள் என்றுதான் அவர்கள் தெரிவிக்கிறார்கள். வறட்சி மாவட்டங்களுக்குத்தான் அந்தத் தொகை செலவழிக்கப்படும் என்ற அடிப்படையில் பார்க்கும்பொழுது நம்முடைய மாநிலத்தில் ராமநாதபுரம், தர்மபுரி மாவட்டங்கள் வறட்சிப்பாங்கான மாவட்டங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் பார்க்கும்பொழுது அவர் மாவட்டம் அவ்வளவு வறட்சிப் பகுதி என்று நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. (சிரிப்பு)

**திரு. எம். சுரேந்திரன்:** வறட்சிப் பகுதிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்களின் கீழ் குறிப்பாக நிலத்திற்கு அடியில் இருக்கிற நீரை எடுத்துப் பயன்படுத்துவதற்கான திட்டம் அதில் இருக்கிறதா? அப்படி நிலத்திற்கு அடியில் இருக்கும் தண்ணீரைப் பயன்படுத்துவதற்கான திட்டம் இருந்தால் அந்தத் திட்டத்திற்கு சர்ல் பாங்கு பணம் தருவதற்கு முன்வந்தபொழுது அது பயன்படுத்தப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வி எனக்கு விளக்கமாகத் தெரியவில்லை. பாசனத்திற்குச் செலவு செய்யலாம் என்று தெரிகிறது. திட்டங்களை அனுப்பி அந்தத் திட்டங்களை மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொண்டதற்குப் பிறகுதான் அந்தத் திட்டங்களை நிறைவேற்ற முடியும். உறுப்பினர் அவர்கள் நிலத்தின் அடிநீரை எடுப்பதற்கான திட்டத்தைபற்றிச் சொன்னார்கள். அதுபற்றிய விவரங்கள் இப்பொழுது இல்லை.

**திரு. சோ. அழகர்சாமி:** வறட்சி ஏற்படும்பொழுது வறட்சி சம்பந்தமாக நமது மாண்புமிகு திருவேங்கடம் அவர்கள் கூறியது மாதிரி அரசாங்க அதிகாரிகள் வறட்சி ஆரம்பித்த பிறகு நடவடிக்கை எடுக்கிறார்கள். வறட்சிப் பகுதிகளில் நடவடிக்கை எடுப்பதற்கு 6 மாதங்கள், 7 மாதங்கள் காலதாமதம் ஆகின்றது. உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால் பாதிக்கப்பட்ட விவசாயத் தொழிலாளிகள் வேலை கிடைக்காமல் திண்டாடுகிறார்கள். மற்ற

[1974 டிசம்பர் 19

விதமான நிவாரண வேலைகளும் நிறைவேற்றப்படாமல் தாமதம் ஏற்படுகிறது. வறட்சிப் பகுதிகளில் உடனடியாக நிவாரண நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஏற்ப சம்பந்தப்பட்ட விதிகளைத் திருத்தி, பொது மக்கள் பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்து யூனியன் மெம்பர்கள் இவர்களுடைய தீர்மானங்களின் பேரில் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்த விதிகளில் திருத்தம் செய்யக்கூடிய ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** வறட்சி என்று தெரிந்த உடனேயே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது இருக்கிற நிலைமை பற்றி நேற்றுகூட நமது முதல் அமைச்சர் அவர்கள் நிலவரி வஜா செய்வது, அரசாங்கக் கடன்களை ஒத்திவைப்பது, கூட்டுறவு ஸ்தாபனங்களின் கடன்களை ஒத்திவைப்பது என்பதைப்பற்றியெல்லாம் அறிக்கை விடுத்தார்கள். இந்தப் பிரச்னையில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. உடனடியாக நிவாரணத்திற்காக குடி தண்ணீர் திட்டங்கள், சிறிய நீர்ப்பாசன திட்டங்கள் ஆகியவைகளை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. நமது அரசு இதற்காக ரூ. 2 கோடி ஒதுக்கிக் கொடுத்திருக்கிறது. இன்னும் ரூ. 3 கோடி இருக்கிறது. அறிக்கை கிடைத்தவுடனேயே அதைப் பரிசீலனை செய்து பார்த்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். உடனடியாக நடவடிக்கை என்றால், திட்டமே இல்லாமல் செலவு செய்தால் உறுப்பினர் அவர்களே திட்டமில்லாமல் எப்படி உத்தரவு போட்டீர்கள் என்று கேட்பார்கள். உத்தரவு போடுவதற்கு சில விவரங்கள் தேவையாக இருக்கின்றன என்பதையும் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. மு. சத்தியமூர்த்தி: புதுக்கோட்டை மாவட்டம் அண்மையில் புதிய மாவட்டமாக அமைக்கப்பட்டிருக்கிறது. அதை வறட்சி மாவட்டமாக அறிவிப்பதற்கு இந்த அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** புதுக்கோட்டை மாவட்டம் எப்பொழுதும் வறட்சி மாவட்டம் அல்ல. இந்தத் திட்டம் நிரந்தரமாக அதிகமாக வறட்சியாக உள்ள மாவட்டங்களுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டம். இதில் முகவை, தர்மபுரி மாவட்டங்கள் வந்திருக்கின்றன.



1974 டிசம்பர் 19]

திரு. நா. வீராசாமி: மத்திய அரசு உதவி செய்கின்ற இந்தத் திட்டம் இராமநாதபுரம், தர்மபுரி மாவட்டங்களுக்கு என்று சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டத்திலும் பல பகுதிகள் உள்ளபடியே குடிப்பதற்குக் கூடத் தண்ணீர் இல்லாமல் வறட்சியாக இருக்கின்றன. போர்டு மெம்பர் அவர்கள் போனபொழுதும் அந்த இடத்தில் முறையீடுகளை கேட்டிருக்கிறார்கள். மத்திய அரசு உதவி தராவிட்டாலும், மாநில அரசு அதற்கான உதவியை அளிப்பதற்கு முன்வந்து வறட்சிப் பணிகள் மேற்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஏற்கனவே வறட்சிப் பணிகளுக்கு பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும் ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, வறட்சிப் பகுதிகளில் நிவாரணத் திட்டங்களுக்காகச் செலவழிக்கப்படும் அந்தப் பணம் மக்களுக்கு நேரடியாகப் போய்ச் சேரக்கூடிய முறையில் திட்டத்தில் ஏதாவது ஒரு பகுதி சேர்த்திருக்கிறீர்களா? அதிகாரிகள் பொய்யான மஸ்டர் ரோல் போன்றவைகளை தயாரித்து, பணத்தைத் தவறாகப் பயன்படுத்தி அவர்கள் எடுத்துக்கொள்ளும் நிலை ஏற்படாமல், இப்படிப்பட்ட கோளாறுகளுக்கு இடம் கொடுக்காமல், திட்டத்திற்கான பணம் மக்களுக்கே நேரடியாகப் போய்ச் சேருவதற்கு இடம் அளிக்கக்கூடிய முறையில் திட்டத்தில் ஏதாவது ஒரு பகுதியைச் சேர்ப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** திட்டங்களை நிறைவேற்றுவதற்கான பொறுப்பு, கடமை முறையாக சரிவர செய்யப்படுகிறது. ஏதாவது தவறு ஏற்படுமானால் அதுபற்றி அரசாங்கத்திற்குத் தெரிவிக்கலாம். அரசாங்கத் திட்டத்தினுடைய அடிப்படையிலும், அரசு அதிகாரிகளின் அறிக்கைகளின் அடிப்படையிலும் பணம் ஒதுக்கப்பட்டு திட்டம் நிறைவேற்றப்படுகிறது. தவறு ஏற்பட்டால் நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்.

[1974 டிசம்பர் 19

## குமரி மாவட்டத்தில் நிலவரித் தள்ளுபடி

*114 வினா—திரு. எ. சுவாமிதாஸ்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இவ்வாண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் நீர் பற்றுக்குறையால் பாதிக்கப்பட்டு நெற்பயிர் கரிந்துபோய் விட்டது என்பது உண்மையா?

(இ) எத்தனை எக்கர் நிலங்கள் தீய்ந்து போயின?

(உ) தீய்ந்து போன நிலங்களுக்கு வரி வஜா அளிக்கப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:**

(அ) & (இ): 1973–74 ஆம் ஆண்டில், நீர் பற்றுக்குறையால் விளவங்கோடு வட்டம் மேத்துக்கும்மல் கிராமத்தில் 7-35-5 ஹெக்டேர் பரப்பில் இரண்டாம் போகப் பயிர் முழுவதும் சாவியாகி விட்டது.

(உ) 1973-74 ஆம் ஆண்டில், நீர் பற்றுக்குறை காரணமாக நிலச் சொந்தக்காரர்களுக்கு வரித் தள்ளுபடி எதும் அளிக்கப்படவில்லை. மேத்துக்கும்மல் கிராமத்திற்கு வரித் தள்ளுபடி பற்றிய செயற்குறிப்பு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. எ. சுவாமிதாஸ்:** அமைச்சர் அவர்கள் பதிலில் விளவங்கோடு வட்டம் மேத்துக்கும்மல் கிராமப்பகுதியில் மட்டும் தீய்வு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். பொதுவாக கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆற்றுப்பாசன நீர்ப்பகுதியிலே கடைவரம்பு நிலங்களில் அத்தனை பயிரும் தீய்ந்துவிட்டது. அப்படி தீய்ந்து போன நிலயங்களையெல்லாம் சரியாக கணக்கு எடுத்து, வரி வஜா செய்வதற்கும், வேறு விதமான நஷ்டஈடு கொடுப்பதற்கும் அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** கிடைத்திருக்கிற அறிக்கையின்படி மேத்துக்கும்மல் கிராமத்திற்கு வரி தள்ளுபடி செய்வது பற்றிய செயற்குறிப்பு தன் ஆய்வில் உள்ளது என்றும், அவசியமான இடங்களிலெல்லாம் நில வரி தள்ளுபடி அளிக்கப்



1974 டிசம்பர் 19]

படும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரலாம். அல்லது அரசாங்கத்தினுடைய கவனத்திற்கும் கொண்டுவரலாம். உண்மையிலேயே வறட்சி நிலைமை ஏற்பட்டிருக்குமானால் அதைப் பற்றி பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** மேத்துக்கும்மல் கிராமத்தில், பெரும்பாலான பகுதிகள் தீய்ந்து விட்டன. அதற்கு அருகாமையில் உள்ள வேறு சில பகுதிகளிலும் இம்மாதிரி தீய்வு ஏற்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் நொய்யாற்றுக் கால்வாய் தண்ணீர் விடாததும், மழை பெய்யாததும்தான். பட்டணங் கால் பகுதியிலும் தண்ணீர் விடப்படவில்லை. மழையும் பெய்யவில்லை. அங்கெல்லாம் பூ கிருஷி செய்யப்பட முடியவில்லை. ஆக, அந்தப் பகுதிகளையும் சேர்த்து இந்தத் திட்டத்தின் அடிப்படையில் கொண்டுவருவதற்கு அரசாங்கம் வேண்டிய பரிந்துரை செய்யுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** நான் ஏற்கனவே சொன்னது போல் இந்தப் பகுதிகளைக் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய அறிக்கையிலே அவசியமான இடங்களிலே நில வரி தள்ளுபடி அளிக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். அந்த இடங்களைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவருக்குச் சொல்லலாம். அல்லது அரசாங்கத்திற்குத் தகவல் கொடுத்தாலும் அதை நாங்கள் அனுப்பி வைக்கிறோம்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** அந்தப் பகுதிகளில் 'லாண்ட் இம்ப்ரூவ்மெண்டு டாக்ஸ்' என்று ஏக்கருக்கு ரூ. 7 வரையிலும் வரி வசூல் செய்து வருகிறார்கள். அம்மாதிரி வசூலிப்பதற்கு ஒரு ஆணையோ, விதிமுறையோ இல்லை. ஆகவே, அதை நிறுத்தி வைப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அந்த வரியைப் பற்றி விவரக் குறிப்பு என்னிடம் இல்லை. அரசாங்க உத்தரவு இல்லாமல் வரி வசூல் செய்வது தவறு. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அது தெரியும், அதற்காக கோர்ட்டில் போய்க் கூட ஸ்டே வாங்கலாம். அப்படியிருந்தால் அதைப்பற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

[1974 டிசம்பர் 19

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 115, 116 எண்ணுள்ள கேள்விகள் ஒத்திவைக்கப்படுகின்றன.

*E.S.I. Hospitals for Madras.*

* 117 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to open one more E.S.I. Hospital in Madras City; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) ஆம்.

(இ) சென்னையில் கலைஞர் கருணாநிதி நகரில் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் மற்றொரு மருத்துவமனை கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. தென் சென்னையில் முதலில் 200 படுக்கைகள் கொண்ட ஈட்டுறுதித் திட்ட மருத்துவமனையைக் கட்டவும், பிறகு தேவைக்கேற்ப 500 அல்லது 600 க்கு மேற்பட்ட படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக்கவும் அதற்கான மதிப்பீடுகளும், வரைபடங்களும் தயாரிக்கவும் கொள்கையளவில் அரசு ஈட்டுறுதிக் கழக பொது இயக்குநர் ஒப்புதல் அளித்துள்ளார். 206 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனைக்கான மதிப்பீடுகளும், வரைபடங்களும் அரசு ஈட்டுறுதிக் கழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

* 118 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether there is any proposal under the considration of the Government to open an Employees' State Insurance Dispensary at Adayar; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:**

(அ & இ) : தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தை சென்னையிலுள்ள திருவான்மியூர், துரைப்பாக்கம் ஆகிய இடங்களிலும், அதைச் சுற்றிலும் உள்ள இடங்களிலும் விரிவாக்கும், வகையில் ஈட்டுறுதி செய்து கொண்ட தொழிலாளர்களுக்காகவும்,



1974 டிசம்பர் 19].

அவர்கள் குடும்பங்களுக்காகவும் அடையாறில் ஒரு மருத்துவர் உள்ள ஒரு மருந்தகத்தை அமைப்பதற்கு அரசு அனுமதியளித்துள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி:** ஈ. எஸ். ஐ. ஹாஸ்பிடல் புதியதாக ஒன்று கட்டப்போவதாகச் சொன்னார்கள். அதற்கு எவ்வளவு பணம் செலவாகும்? எந்த இடத்தில் கட்டுவதாக உத்தேசம்?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** நான் ஏற்கெனவே சொன்னது போல கலைஞர் கருணாநிதி நகரில் அதற்காக 20 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டிருக்கிறது. அதற்கான தொகையெல்லாம் கூட ஒதுக்கப்பட்டிருக்கிறது. ரூ. 18,15,062.50 வீட்டு வசதி வாரியத்தினிடமிருந்து பணம் கொடுத்து நிலம் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ரூ. 60 லட்சம் செலவில் மருத்துவமனை உருவாக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10.00)

DR. H. V. HANDE : May I know whether unlike in the E.S.I. Hospital, Ayyanavaram, this particular hospital will have departments of specialisation, for in the Ayyanavaram hospital we do not have separate specialist departments and the patients are referred to the General Hospital causing great inconvenience to the patients. May I know whether it is possible for the Government to plan even at this stage so that later on there will not be any difficulty and so that patients need not be referred to G.H.?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, அது நல்ல ஆலோசனை; அரசு அதைப்பற்றி பரிசீலனை செய்யும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சார், கலைஞர் கருணாநிதி நகரில் இவ்வளவு பெரிய ஆஸ்பத்திரி ஒன்றைக் கட்டும்போது அடையாறில் ஒரே ஒருவர் இருக்கக்கூடிய சிறிய ஆஸ்பத்திரியைத்தான் கட்டப் போவதாகச் சொன்னார்கள். அங்கும் 100 படுக்கைகள் கொண்ட ஆஸ்பத்திரி இருக்குமானால் வட சென்னையை நோக்கி நோயாளிகள் வந்து, நெரிசல் ஏற்படாமல் இருக்கும். ஆகவே, அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, மருந்தகம் என்பது வேறு; மருத்துவமனை என்பது வேறு. பெரிய மருத்துவமனை ஒன்று வட சென்னையில் இருப்பதைப்போல் தென்

[1974 டிசம்பர் 19

சென்னையில் கலைஞர் கருணாநிதி நகரில் கட்ட இடம் ஆர்ஜிதம்
செய்யப்பட்டிருக்கிறது. மற்றபடி, ஆங்காங்கே இருக்கிற நிலைமை
களுக்கேற்ப சிறு சிறு மருத்துவ மனைகளைக் கட்டி, நோயாளி
களுக்குச் சிகிச்சை செய்யப்படுகிறது. அதைபோல
அடையாறிலும் ஒரு மருத்துவமனை உருவாவதற்கு அனுமதி
அளிக்கப்பட்டிருக்கிறது. அது தொழிலாளர்களுக்குப் பயன்
படுவதாக இருக்கும்.

திரு. எம். சுரேந்திரன்: சார், சென்னை நகரில் பல்வேறு வசதி
மான வசதிகள் உள்ள மருத்துவ மனைகள் இருக்கின்றன.
ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனைகள் இப்போது மாவட்ட அளவில்
அமைக்கப்படுவது மிகத் தேவையாக இருக்கிறது. குறிப்பாக
மேட்டூரில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு மீண்டும்
கைவிடப்பட்டிருக்கிறது. அங்கே இருக்கின்ற தொழிலாளர்களின்
நலனைக் கருதி, அத்தியாவசியமாக அங்கே ஒரு மருத்துவ மனை
தேவைப்படுகிறது. அதற்கு முக்கிய காரணம் இப்போது கோவை
ஜில்லாவுக்கு நோயாளிகள் போகக் கூடாது என்று தடை
விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மேட்டூரில் உடனடியாக ஒரு
மருத்துவ மனை கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, தற்போது
6 மருத்துவ மனைகள் கட்ட திட்டங்கள் போடப்பட்டு வருகின்றன.
அதிலே மேட்டூர் இருக்கிறதா என்ற குறிப்பு இல்லை. தனிக்கேள்வி
போடவும்.

*E.S.I. allowance for nurses.*

* 119 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state whether there are proposals under the consideration of the Government to give Employees' State Insurance allowance to the staff nurses working in E.S.I. Hospitals?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: ஆம்.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, இதன் பயன் எத்தனை
பேர்களுக்குக் கிடைக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இந்தத்
திட்டத்தின்படி மத்திய அரசு 5 லட்சம் ரூபாய் தரவேண்டியிருக்
கிறது; நாம் 62,000 ரூபாய் தரவேண்டும். தற்போதுள்ள நிதிநிலை
பற்றாக்குறை காரணமாக இன்னும் முடிவு செய்யப்படவில்லை.



1974 டிசம்பர் 19]

தொழிலாளர்களின் நலனைக் கருதி, அரசு பரிவுடன் முடிவு
செய்யும்போது, அதனால் அனைவரும் பயன்பெறுவார்கள் என்ப
தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*E.S.I. benefits for beedi and hotel workers*

* 120 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether there is any proposal to extend the benefits of E.S.I. Scheme to beedi and hotel workers; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கிடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி: சார், அகில இந்திய ரீதியில்
தொழிலாளர்கள் நல அமைச்சர்கள் மாநாட்டில், ஈ.எஸ்.ஐ.
திட்டத்தில் பீடித் தொழிலாளர்களையும், ஓட்டல் தொழிலாளர்
களையும் சேர்த்து, அதன் பயனை அவர்களுக்கும் நீட்டிக்கவேண்டு
மென்று முடிவு செய்யப்பட்டதா? அதன் அடிப்படையில் என்ன
நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அகில இந்திய மட்டத்தில்
கூடிய தொழிலாளர்கள் நல அமைச்சர்கள் மாநாட்டில் பீடித்
தொழிலாளர்கள் பிரச்னை வரவில்லை. மற்ற தொழிலாளர்கள்
பிரச்னைகள்பற்றித்தான் விவாதிக்கப்பட்டது. அதன் அடிப்
படையில் சில வரன்முறைகளின்படி தொழிலாளர்கள் சேர்த்துக்
கொள்ளப்படலாம் என்று பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது. அதில்
முக்கியமாக

'Commercial establishments, factories, hotels, mines, plantations, restaurants, shops, theatres, motor shop undertakings'

தொழிலாளர்களைச் சேர்த்துக்கொள்ளலாம் என்று பரிந்துரை
செய்திருக்கிறார்கள். அவைகளும் இன்னும் முழுமையாக வந்து
சேரவில்லை. அகில இந்திய மட்டத்தில் முடிவு செய்த பிறகுதான்
நாம் எதாவது செய்ய முடியும்.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவரவர்களே, பீடித் தொழிலாளர்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள். அவர்களுடைய உடம்பு பாதிக்கப்பட்டு, குறிப்பாக சயரோக நோய் ஏற்படும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கின்ற வகையில் நம்முடைய அரசாங்கமே முதலாளிகளையும் தொழிலாளர்களையும் கலந்து, ஒரு குறிப்பிட்ட திட்டத்தை வகுத்து, செயல்படுத்த முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, இந்த இ.எஸ்.ஐ. மருத்துவ மனையைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு ஒன்றுதான் அகில இந்தியாவிலேயே அதிகமான தொகை ஒதுக்கி ஒரு கோடி ரூபாய்க்குமேல் செலவு செய்து, மருத்துவ வசதி செய்து வருகிறது. பீடித் தொழிலாளர்களின் பிரச்னையைப் பொறுத்தவரையில், பீடித் தொழிலாளர்களும், முதலாளிகளும் வந்தபோது, இந்தக் கருத்தை அரசின் சார்பிலே பரிசீலனை செய்வதா அல்லது தனியாக வடாற்காடு மாவட்டத்தில் சயரோக மருத்துவ மனை ஒன்றை நீங்களே கட்டக்கூடாதா என்று கேட்டோம். அவர்கள் அதுபற்றி ஆலோசனை செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** தலைவரவர்களே, நம்முடைய அரசாங்கம் தொழிலாளர் மருத்துவ வசதிக்காக ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செலவிடுவதாகச் சொன்னார்கள். அப்படி இருக்கும்போது வறுமையில் வாடி, பல்வேறு நோய்களுக்கு ஆளாகின்ற பீடித் தொழிலாளர்களின் நிலைமைபற்றி ஏன் டில்லி மாநாட்டில் விவாதிப்பதற்கு நம்முடைய அரசு தவறிவிட்டது? இனிமேலாவது அதற்கான பரிகாரம் காண முயற்சி செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனைகளில் எல்லாத் தொழிலாளர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கப்படுவதில்லை. குறிப்பிட்ட சில தொழிலாளர்களுக்குத்தான் பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது. சிறு தொழில்கள் புரிவோர், திரைப்பட அரங்குகளில் பணிபுரிவோர், சிற்றுண்டி விடுதிகளில் பணிபுரிவோர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படவில்லை. அவர்களுக்கு எல்லாம் நிவாரணம் அளிக்கப்படும்போது, பீடித் தொழிலாளர்களும் அதில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்ற நிலை இருக்கிறது. ஆகவே, பீடித் தொழிலாளர்கள் அறவே புறக்கணிக்கப்பட்டு விட்டார்கள் என்று கருதவேண்டியதில்லை.





**THIRUMATHI T. N. ANANDANAYAKI:** The E.S.I. facilities are given only to organised establishments labourers. There are a lot of unorganised establishments labourers in the State. The State Government need not wait for the Centre to give suggestions in regard to this whether they should extend such facilities to other industries or not. As a model for other States, the Tamil Nadu Government can start giving some medical relief for unorganised labourers also by putting hospitals in places where there is concentration of unorganised establishments labourers. May I know whether the Government will do this?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, 'அன் ஆர்கனைஸ்ட் லேபர்' களுக்காக மக்கள் நல்வாழ்வுத் துறையின் மூலம் ஏராளமான மருத்துவ மனைகளைக் கட்டியிருக்கிறார்கள்.

**திரு. க. சுப்பு:** தலைவரவர்களே, இந்த 'அன் ஆர்கனைஸ்ட் லேபர்' களுக்கு கல்வி, மருத்துவ வசதி அளிப்பது பற்றி ஆலோசனை அளிப்பதற்காக நியமிக்கப்பட்ட 'அன் ஆர்கனைஸ்ட் லேபர் கமிட்டி' அறிக்கை அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா? அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, தற்போது என்னிடம் அதுபற்றிய தகவல் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

**திரு என். கே. பழனிசாமி:** சார், ஓட்டல் தொழிலாளர்களை இந்தத் திட்டத்தில் சேர்க்க பரிசீலனை செய்வதாகச் சொன்னார்கள். ஒரு வருஷம் ஆகியும் சர்க்கார் ஏன் இன்னும் முடிவு செய்யவில்லை? அவர்களை இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ள நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** நான் ஏற்கெனவே சொன்னதைப்போல தமிழ்நாட்டில்தான் தொழிலாளர்களுக்காக அதிகம் செலவிடுகிறோம். அகில இந்திய அடிப்படையில் விதிக்கப்படுகின்ற வரன்முறைகளையொட்டி, ஒவ்வொரு பகுதி தொழிலாளர்களாகச் சேர்த்துக்கொள்ளலாம். அந்த வகையில் ஓட்டல் தொழிலாளர்களும் பயன்பெறுவார்கள்.

## மீனவ மக்களுக்கு வீடு கட்ட கடன்கள்

*121 வினா—**திரு. மா. வெ. நாராயணசாமி:** மாண்புமிகு சமூக நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீனவ மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொள்ள அரசு கடன் ஏதும் வழங்குகின்றதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** (அ) ஆம்.

(இ) இலாகா வீடு கட்டும் திட்டத்தின் கீழ் அரசு மீனவ கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு வட்டியில்லாக் கடனாக ரூ. 1,000-ம் மானியமாக ரூ. 1,000-ம் கொடுக்கிறது.

**திரு. ஆ. பரந்தாமன்:** தலைவரவர்களே, மீனவர்களுக்குக் கொடுக்கின்ற இந்தப் பணத்தை 1970-ம் ஆண்டிலிருந்து நிறுத்தி இருப்பதாகத் தெரிகிறது. சென்னை நகரிலுள்ள மீனவர்களுக்கு பெருமளவில் குடிசைமாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டிக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் இருக்கிற மீனவர்களுக்கு பல நேரங்களில் பெருத்த இன்னல்கள் ஏற்படுகின்றன. அவர்களுக்காவது நம்முடைய அரசு இந்த மானியமும் கடனும் கிடைக்க, மீண்டும் அவர்களுக்கு கொடுக்க மறுபரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** தலைவரவர்களே, நிதிப் பற்றாக்குறையின் காரணமாக தற்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த நிதிநிலை சரியானவுடன் இத்திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும்.

**திரு. என். டென்னிஸ்:** தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் அடிக்கடி கடல் அரிப்பு ஏற்பட்டு, வீடுகள் சேதமடைகின்றன. அந்த வீடுகளைக் கட்டிக் கொள்வதற்காகவாவது இந்த சலுகைகள்—கடன், மானியம்—அளிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** தலைவரவர்களே, பொதுவாக எந்தெந்தப் பகுதிகளில் மீனவர்கள் பாதிக்கப்படுகிறார்களோ அந்தப் பகுதிகளில் ஆய்வு செய்து, முறையாக அவை பரி



சீலனை செய்யப்பட்டு, ஆங்காங்குள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## ஓதுவார்களுக்குப் பயிற்சி நிலையங்கள்

*122 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓதுவார்களுக்கென இந்து அறநிலைய ஆட்சித்துறையினரால் தனிப் பயிற்சி நிலையங்கள் ஏதேனும் நடத்தப்படுகின்றனவா?

(இ) ஆம் எனில், விபரம் யாது?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழ இடமில்லை.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, கோயில்களில் பெரும்பாலும் அறநிலையத் துறையின் மூலமாக தமிழில் வழிபாடு செய்யப்பட வேண்டும் என்பது தெரிவிக்கப்பட்டு, அந்த எண்ணம் பரவி வருகிற காரணத்தினால் இதுவரை வடமொழியில் நடந்து வந்ததை மாற்றி அமைக்கும் அடிப்படையில் ஓதுவார்களுக்கு எல்லாம் வழிபாடு நடத்துவதற்குப் பயிற்சி அளிக்கும் வகையில் இந்தத் திட்டத்திற்கு ஆவன செய்ய முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, பயிற்சி நிலையங்கள் இல்லையே தவிர தற்போது சில கோயில்களில் பாடசாலைகள் நடத்தப்பட்டு வருகின்றன. அங்கே நடத்தலாம். இன்னும் நிதி வசதியுள்ள கோயில்களில் இதுபோன்ற பயிற்சியினைக் கொடுக்கலாம் என்ற யோசனை பரிசீலனையில் உள்ளது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இதுதான் கோயில்களுக்குச் செய்ய வேண்டிய முக்கிய பணி. கோயில் நிதியை எடுத்து எது எதற்கோ செலவிடுவதைக் காட்டிலும்—பரிசீலனையில் உள்ளது என்று சொல்லிக்கொண்டிருக்காமல் உடனடியாக இதுபோன்ற பயிற்சியினை அளிக்கத் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வார்களா?

[1974 டிசம்பர் 19

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அறநிலையத்துறையின் சொத்துக்களை வேறு ஏதோ எதற்கோ செலவழித்துவிட்டு இதற்குச் செலவு செய்யாமல் இருப்பது போலச் சொல்கிறார்கள். எல்லாமே நல்ல காரியங்களுக்குத்தான் பயன்படுகிறது. அறநிலையங்கள் ஒழுங்காகப் பராமரிக்கப்படுவது கடந்த ஆறு, ஏழு ஆண்டுகளாகத்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### குருநாதசுவாமி தேவஸ்தானம், பவானி

***123 வினா—திரு. ஈ. எம். நடராசன்:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி வட்டம், குருநாதசுவாமி தேவஸ்தானத்திற்கு நீண்ட காலமாக அறங்காவலர்கள் நியமனம் செய்யாததன் காரணம் என்ன?

(இ) எப்போது அறங்காவலர்கள் நியமனம் செய்யப்படுவார்கள்?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அ) மற்றும் (இ) இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் 1972 ஆம் ஆண்டு, பிப்ரவரித் திங்களில் இக்கோயிலுக்கு ஒரு செயல் அலுவலரை நியமித்தார். இதனை எதிர்த்துப் பரம்பரை அறங்காவலர் சென்னை உயர்நீதி மன்றத்தில் ஒரு வழக்குத் தொடுத்துள்ளார். வழக்கு நிலுவையில் உள்ளது. நிர்வாகத் திட்டப்படி பரம்பரை அல்லாத அறங்காவலர் நியமிக்கப்படுவது தடைப்பட்டுள்ளது.

### செய்திச் சுருள்கள் திரையிடப்படுதல்

***124 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திரைப்படக் கொட்டகைகளில், தமிழ்நாடு அரசு செய்திச் சுருள்கள் திரையிடப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?



1974 டிசம்பர் 19]

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:** (அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எல்லா திரைப்படக் கொட்டகைகளிலும் தமிழக அரசு செய்திச் சுருள்கள் திரையிடப்படுகின்றன.

(இ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது எல்லாத் தியேட்டர்களிலும் அந்தப் படம் காட்டப்படுகிறது என்று சொன்னார்கள். நான் இந்தக் கேள்வியைப் போட்டுக் கிட்டத்தட்ட ஓராண்டாகிறது. ஓராண்டுக்கு முன்பு ஐந்தாறு மாதங்கள் தமிழகச் செய்திச் சுருள் பல தியேட்டர்களில் காட்டப்படவில்லை. இதுபற்றி விசாரித்து அதன் மீது நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:** தியேட்டர்களில் கட்டாயம் காட்டவேண்டுமென்பது விதி. அப்படிக் காட்டவில்லையென்றால் அதன்மீது புகார் மாவட்ட ஆட்சியாளருக்குத் தெரிவித்து, அவர்களிடம் அவர் அதற்குக் காரணம் கேட்டு, காரணம் சரியானதாக இல்லையென்றால் அந்தத் தியேட்டர்களின் உரிமத்தை ரத்து செய்ய மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. கு. காமாட்சி:** சில குறிப்பிட்ட படங்களை விநியோகம் செய்யும் பட விநியோகஸ்தர்கள் படத்தைக் கொடுக்கும்போதே, தமிழக அரசு செய்திச் சுருள் காட்டப்படக்கூடாது என்கிற கண்டிஷனைப் போட்டே கொடுத்து வருகிறார்கள் என்பதும், தியேட்டர்காரர்கள் தவறான தகவலைக் கொடுத்துவிட்டு தமிழகச் செய்திச் சுருள் காட்டுவதில்லை என்பது பற்றி அரசுக்குப் புகார் வந்திருக்கிறதா? அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:** அந்த மாதிரித் தகவல் அரசுக்கு இதுவரை வரவில்லை. இருக்கிற விதிகளின் அடிப்படையிலேயே தியேட்டர்களின் உரிமத்தைப் பறிமுதல் செய்ய அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது.

**திரு. கோவை செழியன்:** தமிழக அரசுச் செய்திப் படங்களில் எல்லாம் அமைச்சர்கள் சம்பந்தமான படங்களே வருகின்றன. அதிலும் குறிப்பாக முதலமைச்சர் சம்பந்தமாகவே வருகிறது.

[1974 டிசம்பர் 19

நாங்களும் அரசு விழாக்களில் கலந்துகொள்கிறோம். படம் எடுக்கப்படுகிறது. இவை எடிட் என்ற முறையில் கட் செய்யப் பட்டு விடுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அரசு செய்திச் சுருள் என்கிறபோதே அரசோடு சம்பந்தப்பட்டவர்கள் அமைச்சர்கள். அமைச்சர்கள் படம் இருக்கத்தான் நேரிடும். நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலேயே "முதலமைச்சரின்மீது நம்பிக்கையில்லை" என்று சொல்லியிருக்கிறார்கள். அதனால் முதலமைச்சரின் படம் வருகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** செய்திச் சுருள் ஆரம்பிக்கும் போதே தமிழக ஸ்டேட் சிம்பல் காட்டுவதுதான் முறை. இந்த மாநிலத்திற்கு என்று சிம்பல் கோபுரம் இருக்கிறதே, அதை ஏன் காட்டுவதில்லை? அதைக் காட்டுவதில் என்ன கஷ்டம்?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தமிழக செய்திச் சுருள் படங்களில் தமிழக அரசின் சின்னத்தைக் காட்டக்கூடாது என்பது அல்ல. இந்த சிம்பல் எல்லா இடங்களிலும் பயன் படுத்தப்பட்டு வருகிறது. தமிழக செய்திச் சுருள் படத்தின் ஆரம்பத்தில் அண்ணா கல்லறை காட்டப்படுவதுதான் உறுத்துவ தாக இருக்கிறது என எனக்குத் தெரிகிறது.

*Assignment of lands for Tribal people*

* 125 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether it is a fact that the State Government have been advised recently to frame a law for restoration to tribals of lands transferred to non-tribals; and

(b) if so, the action taken thereon?

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:** (அ) ஆம்.

(இ) இப்பொருள்பற்றிப் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

**திரு. என். கே. பழனிசாமி:** பெரும்பாலான மலைப் பிரதேசங்களில் இருக்கக்கூடிய பூமிகள் பூராவும் குறைந்த பணம் கொடுத்து, அதிக வட்டி வாங்கி நல்ல பூமி பூராவும் வசதி படைத்தவர்கள் கையில் இருக்கிறது. இந்தமாதிரிச் சட்டம் கொண்டு வரத் தாமதம் ஏற்படக் காரணம் என்ன? எப்போது இது கொண்டு வரப்படும்?



1974 டிசம்பர் 19]

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:** தலைவர் அவர்களே, பழங்குடி மக்களுக்காகக் கொடுக்கப்படுகிற பூமிகளை யாரும் வாங்கக் கூடாது என்று ஏற்கனவே சட்டம் இருக்கிறது. பஞ்சமதரிசு என்பதாக அவர்களுக்கு வழங்கப்பட்ட நிலத்தை யாரும் வாங்கக் கூடாது என்று இருக்கிறது. ஆதிவாசிகள் சம்பந்தமாகவும் அப்படிப்பட்ட தடைக்கான சட்டம் இருக்கிறது. இந்திய அரசாங்கம் தான் இதுபற்றி நமது அரசுக்குத் தெரிவித்து இதுபற்றிய கருத்தைக் கேட்டதற்கு இதுபோலச் சட்டம் இருப்பதாக மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறது. மேற்கொண்டு அதுபற்றி வந்தால் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

*[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]*

## 2. நடைமுறைக் கேள்வி.

**அமைச்சரவையின்மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம் முன் தினம் வாக்கெடுப்புக்கு விடப்படாதது குறித்து**

DR. H. V. HANDE: Sir, on a point of order. I want to draw the attention of the Chair to the point, whether the rules of the Assembly have been properly taken care of when the No-Confidence Motion was not put to vote yesterday. Normally the Motion is put to voice vote or division. But yesterday most peculiarly and most surprisingly when the hon. Member Thiru Kovai Chezhiyan had given his reply and had stated that they were walking out of the House, and after they had left the House, the Hon. Speaker gave the ruling that it was deemed to have been withdrawn. I am not complaining about it. A similar situation arose when the hon. Members, Thiruvalargal Marimuthu and Venkataswamy moved the No-Confidence Motions and on those and other occasions they had walked out of the House and the Hon. Speaker had put it to voice vote or division. I know that the Hon. Speaker may draw my attention to rule 73 of the Assembly Rules. But, yesterday he had given a different ruling.

[Dr. H. V. Hande] [1974 டிசம்பர் 19

Why there has been a difference in the rulings given on the previous occasions and the ruling given yesterday? Sir, after we had walked out of the House, the ruling party should not have the monopoly or freedom to say whatever they wanted to say. This is all what I wanted to say.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நம் விதிகளில் சொல்லியிருப்பதாவது

If, at the time of putting the question on a motion to the vote of the House, the mover of the motion is absent, it shall be considered to have been withdrawn by him.

மேலும் விதி கூறுவது என்னவென்றால்

Unless any member of the House asks that the question on the motion be put.

யாராவது கேட்டிருந்தால் வாக்கெடுப்புக்கு விட்டிருக்கலாம். கேட்கவில்லை என்றால் அதை வித்ட்ரா பண்ணியதாகத்தான் அர்த்தம். அந்த மாதிரி விவாதித்து அதில் தீர்ப்புக் கூறவில்லை.

### 3. தகவல் கோரல்.

### திரு. தென்னரசு அவர்களைக் குறித்து திரு. சீனிவாசன் அவர்கள் பேரவையில் குறிப்பிட்டது பற்றி மேலவையில் உரிமைப் பிரச்சினை எழுப்பப்பட்டதாகக் கூறப்படுவது குறித்து

**திரு. கா. காளிமுத்து :** பேரவைத் தலைவரவர்களே, நேற்றைய தினம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்குப் பதிலளித்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பதில் தெரிவித்துப் பேசிய போது, மாண்புமிகு உறுப்பினர் சீனிவாசன், திரு. தென்னரசு அவர்களைக் குறிப்பிட்டுச் சில செய்திகளைச் சொன்னார்கள். அது மேலவையிலே உரிமை மீறிய செயல் என்று சொல்லப் பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்த மாமன்றத்தில் நடந்தவைகளை இங்கே சொல்வதற்கு உரிமை அல்லது அதிகாரம் இருக்கிறது. அவரைப் பற்றிச் சொல்கிறபோது பழைய மாவட்டச் செயலாளர் என்ற முறையிலேதான் சொன்னார்கள். ஆகவே உரிமை மீறல் பிரச்னை என்று கூறுவது சரிதானா ?



1974 டிசம்பர் 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு அவையிலே இருக்கின்ற ஒரு உறுப்பினர் அவை மீறிய ஒரு நிகழ்ச்சியைச் செய்தார் என்ற குறிப்பு இருக்குமேயானால் அந்த அவையின் தலைவருடைய கவனத்திற்கு அதைக் கொண்டு வருகிற நேரத்தில் அந்த அவையின் தலைவர் இந்த அவையின் தலைவருக்கு அதைப் பற்றிக் குறிப்பிடுவார். இந்த அவையின் தலைவர் அதுபற்றித் தீர்மானித்து தன்னுடைய முடிவைச் சொல்வார்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, அந்த அவையின் முன்னவர் என்ற முறையில் நான் சொல்கிறேன். நேற்றைய தினம் தென்னரசு மேலவை உறுப்பினர் என்ற முறையில் எழுப்பினார். மேலவைத் தலைவர் அவர்கள், அதுபற்றி இங்கு குறிப்பு அனுப்பியிருக்கிறாரா என்பது எனக்குத் தெரியாது. "நிகழ்ச்சியை பேரவைத் தலைவருக்குச் சொல்லி அதற்குப் பிறகு அறிவிக்கின்றேன்" என்று சொன்னார்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** மேலவையிலே பேசிய நிகழ்ச்சிகளைப்பற்றி இங்கே குறிப்பிடுவதற்கு நமக்கு உரிமையில்லை. அதேபோல் இங்கே பேசியதைப்பற்றி அங்கே குறிப்பிடுவதற்கும் அவர்களுக்கு உரிமையில்லை. மதிப்பிற்குரிய திரு. வெங்கட்ராமன் இருந்தபோது அம்மாதிரிக் கேட்கப்பட்டது. நேற்றுப் பேசிய சீனிவாசன் அவர்கள் வெளியே நடக்கிற செய்திகளைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்களே தவிர மன்றத்திலே நடந்ததைப்பற்றிச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் ஹாண்டே, ஒரு விஷயம் அவையின் முன் எப்போது வருகிறதோ அதைப்பற்றி அப்போதுதான் பேசலாமே தவிர அதற்கு முன்பே பேசக் கூடாது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவரவர்களே, முதலில் எழுப்பிய விஷயம், முடிவாகி இருக்கிறதா என்பது தெரியவில்லை. ஏனென்றால் அது விதிகளிலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. unless any member of the House asks that the question on the motion be put.

அப்படி இங்கே இருக்கிற உறுப்பினர்கள் எழுப்ப முன்வரவில்லை என்ற நிலையும் இருக்கிறது என்பதையும் நான் புரிந்து கொள்கிறேன்.

அடுத்தாற்போல் இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில் இது ரொம்ப முக்கியமான விஷயம். இந்த நேரத்தில் எவ்வளவு பெரிய பதவியிலே இருக்கிற உறுப்பினராக இருந்தாலுங்கூட அதைப் பற்றிக் கருத்துச் சொல்வது சரியல்ல என்று நினைக்கிறேன். அதைப் விஷயம் எனக்கு வரவில்லை என்று நீங்கள் முடிவு கொடுக்கலாம். இந்த அதைப் பற்றி முதல்வர் சொல்வது சரிதானா என்று கேட்கிறேன். இங்கே விஷயம் என்னவென்றால் ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் உறுப்பினர் தன்னைப் பாதுகாக்க வேண்டுமென்று உங்கள் முன்னாலே வருகிறார். அந்த முறையிலேதான் பிரிவிலெஜ் கிளப்புகிறார். அவர் தனக்கு தெரிந்த விஷயத்தைப்பற்றிச் சொல்கிறார். அப்போது நீங்கள் அந்த மாதிரிச் செய்தியில்லை என்று ரூலிங் கொடுத்தீர்கள். இந்த மன்றமாக இருக்கலாம், அல்லது வெளி மன்றமாக இருக்கலாம், எங்கிருந்தாவது ஒரு சபைத் தலைவர் உங்களுக்கு அனுப்புவார்கள், அப்போதுதான் உங்களுக்கு விஷயம் தெரியும் என்று சொல்கிறீர்கள். அது ரொம்ப பொருத்தமான விஷயம். அப்படி இருக்கிறபோது எனக்கு இந்த விஷயம் தெரியும் என்று சொல்வது முறை தானா? முதலமைச்சர் உறுப்பினரைப் பாதுகாக்க நினைத்து. . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** எந்த உறுப்பினரையும் பாதுகாக்கவோ அல்லது பாதுகாக்காமல் இருப்பதற்காகவோ சொல்லப்பட்டதல்ல. அந்த அவையின் தலைவர் நம்முடைய பேரவைத் தலைவருக்கு எழுதியதுபற்றி நான் சொல்லவில்லை. அங்கே உரிமைப் பிரச்னை என்று எழுப்பப்படவில்லை. காளிமுத்து கட்டதைப்போல்தான் தென்னரசு கேட்டார்கள். மேலவைத் தலைவர் விஷயமறிந்து சொல்கிறேன் என்று சொன்னார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** It is an usurpation of the power of the Hon. Speaker. நான் வேறு எந்த விஷயத்திற்குள்ளும் போகவில்லை. இந்த ப்ரொசீஜர்—இதுமாதிரிப் பேசினால் நாளைக்கு அது தலையீடாக ஆகிவிடும். அப்படி ஒரு முன் உதாரணமாக ...க்கக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன்.





I do not think there is anyone here who is more powerful than the Hon. Speaker.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் காளிமுத்து அவர்கள் இங்கே கூறியது உறுப்பினருக்குப் பாதுகாப்பு வேண்டும், இங்கு நடந்ததைப் பற்றி அங்கே கேட்கலாமா என்று கேட்டார்கள். உறுப்பினரைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அங்கே உரிமைப் பிரச்னை கொண்டு வரவில்லை. தனக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் தென்னரசு தெரிவித்தார். அப்போது மேலவைத் தலைவர் சொன்னது இதைப் பற்றி முழு விபரம் இல்லாதபோது நான் முடிவெடுக்க விரும்பவில்லை. நான் பேரவைத் தலைவரிடம் விளக்கம் கேட்டதற்குப் பிறகுதான் முடிவெடுக்க வேண்டும். உரிமைப் பிரச்னை என்ற கட்டத்திற்கு வரவில்லை. பாதுகாப்பு வேண்டுமென்று சொன்னதால்தான் அதற்கு முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். விளக்கம் கேட்டதால் விளக்கம் சொல்ல வேண்டியதாயிற்று. திரு. காளிமுத்து இந்தப் பிரச்னையை எழுப்பாமல் இருந்திருப்பாரேயானால் இந்த விஷயம் மேலவைத் தலைவருக்கும் பேரவைத் தலைவருக்கும் உள்ளேயே இருந்திருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. தங்கமணியினுடைய பாயின்ட் ஆஃப் ஆர்டருக்குப் பதில் சொல்கிறேன். தங்கமணி அவர்கள் இப்படிப்பட்ட நிகழ்ச்சி வந்திருப்பதைப்பற்றி—அங்கே நடந்த விஷயத்தைப்பற்றி—இங்கே கூறலாமா என்று கேட்டார்கள். நான் அதைத்தான் சொன்னேன். மேலவையிலே நடந்திருக்கிற நிகழ்ச்சியை திரு. காளிமுத்து அவர்கள் சுட்டிக்காட்டினார். அந்த அவையிலே நடந்ததை அவர் சுட்டிக்காட்டியதைப் போலவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சுட்டிக்காட்டினார்கள். இதில் ஒன்றும் தவறில்லை.

## (4) மேலவையில் தன்னைப் பற்றி கேள்வி அனுமதிக்கப்பட்டது குறித்து திரு. க. சுப்பு அவர்கள் எழுப்பிய பிரச்சினை

**திரு. க. சுப்பு :** ஒரு அவையிலே இருக்கிற உறுப்பினரைப் பற்றி இன்னொரு அவையில் பேசி இந்த உரிமைப் பிரச்னையைக் கொண்டு வருகிறார்கள். கட்சி வேறு, உரிமை வேறு. மேலவையில் உறுப்பினர் தென்னரசாலே என்னைப் பற்றி ஒரு கேள்வி கேட்கப் பட்டது. அந்தக் கேள்வி அங்கே அங்கீகரிக்கப்பட்டது. அதிலும் ஒரு துணைக் கேள்வி எழுப்பப்பட்டது.

(குறுக்கீடு)

தலைவரவர்களே. தென்னரசு மேலவை உறுப்பினர், நான் சட்டசபை உறுப்பினர். என்னைப் பாதிக்கக் கூடிய விஷயம் காளிமுத்துவையும் பாதிக்கும். காளிமுத்துவைப் பாதிக்கக்கூடிய விஷயம் என்னையும் பாதிக்கும்.

(முற்பகல் 10.30)

தென்னரசு ஒரு கேள்வியைக் கேட்டார். அந்தக் கேள்வி எப்படியோ அனுமதிக்கப்பட்டுவிட்டது. அந்தக் கேள்விக்குத் தங்கப்பாண்டியனார் துணைக் கேள்வி அனுமதிக்கப்பட்டு விட்டது. அதற்கு மந்திரி மாதவன் பதில் சொல்லியிருக்கிறார். . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மேலவையிலே நடைபெற்ற ஒன்றை இங்கே விவாதிப்பது, பரிசீலிப்பது ஆகியவற்றை நான் அனுமதிக்கவில்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அவருக்கு உரிமை கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் உரிமை கொடுத்து விட்டேன். சுப்பு நீங்கள் உட்காருங்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அவருக்குப் பேச உரிமை கொடுங்கள்.

**திரு. க. சுப்பு :** நான் ஒரு உரிமைப் பிரச்னையை சபாநாயகரிடத்திலே பத்திரிகையிலே வந்த செய்தியோடும், பத்திரிகையோடும் கொடுத்திருக்கிறேன். அதை அந்தச் சபைக்கு அனுப்பியிருக்கிறேன், 'தகவல் வந்தவுடன் அனுப்புகிறேன்' என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், ஒரு வருடம் ஆகியும்





என்னவாயிற்று என்று தெரியவில்லை. அங்கே அப்பொழுது அந்தக் கேள்வி உள்நோக்கத்தோடு கேட்கப்பட்டு, மந்திரி மாதவன் அதற்கு அந்தச் சட்டமன்றத்தில் உள்நோக்கத்தோடு பதில் சொல்லியிருக்கிறார். அது அவையினுடைய உரிமையைப் பாதிக்கிறது என்ற முறையில் நான் கொடுத்த உரிமைப் பிரச்னைக்குப் பேரவைத் தலைவரவர்களே, நீங்கள் ஒரு தீர்ப்பு கொடுத்தால் சரியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சுப்பு அவர்கள் என்னிடத்திலே ஒரு உரிமைப் பிரச்னையைக் கொடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். (குறுக்கீடு) சபாநாயகரிடத்திலே ஒரு உரிமைப் பிரச்னை கொடுத்திருப்பதாகவும், அதை விவாதிக்க வேண்டுமென்று என்னிடத்திலே, பேரவைத் தலைவரிடத்திலே, கேட்டிருப்பதாகவும், அதற்குப் பேரவைத் தலைவர், மேலவைத் தலைவரைக் கேட்டிருக்கிறோம், அது வந்த பிறகு நடவடிக்கை எடுக்கிறோம் என்று பதில் அளித்திருப்பதாகவும் சொல்கிறார். அப்படிப்பட்ட தகவல் என்னைப் பொறுத்தவரையிலே, எனக்குத் தெரியாது. அப்படி ஒரு தகவல் கொடுத்து, இந்த அவையிலே அது எழுப்பப் படவில்லையென்றால், மாண்புமிகு உறுப்பினர் என்னுடைய அறையிலே வந்து அதைப்பற்றிக் கேட்டிருக்க வேண்டும். அறையிலே கேட்காமல், அவர் அவையிலே வந்து அதுபற்றிக் கேட்பது முறையல்ல. ஆகவே, அந்த உரிமைப் பிரச்னைபற்றிய பேச்சு அவைக் குறிப்பிலே ஏறாது.*

(மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் எச். வி. ஹாண்டே, திருவாளர்கள் கா. காளிமுத்து, ஏ. சுவாமிதாஸ், எம். சுரேந்திரன், கோவை செழியன், ஆலடி அருணா ஆகியோர் எழுந்து நின்றனர்—கூச்சல்-குழப்பம்.)

---

* 20—12—74-ம் தேதியன்று மாண்புமிகு பேரவைத் தலைவருடைய ஆணைக்கிணங்க நடவடிக்கைக் குறிப்பில் சேர்க்கப் பட்டுள்ளது.

[1974 டிசம்பர் 19

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அதை ஏன் எக்ஸ்பஞ்ச் செய்ய வேண்டும்? அவர் ஏதாவது அன்பார்லிமெண்டரி வார்த்தை சொன்னாரா? இந்த மாதிரிக் கேட்டதே கிடையாது. எந்த இடத்திலும் கேட்டதே கிடையாது. அன்பார்லிமெண்டரி வேர்ட் எதுவுமே கிடையாது. இது ரொம்ப அக்கிரமம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எக்ஸ்பங்ஷன் செய்வது குறித்து விதியிலே இருக்கிறது.

If the Speaker is of opinion that a word or words has or have been used in debate which is or are defamatory or indecent or unparliamentary or undignified or grossly irregular he may in his discretion, order that such word or words be expunged from the official report of the proceedings of the House.........

DR. H. V. HANDE : நீங்கள் irregular, you are irregular, irregular.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் பேரவைத் தலைவர் அவர்களைப் பார்த்து, 'you are irregular' என்று சொல்வது highly irregular என்ற காரணத்தாலே நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்களை இந்த அவையிலிருந்து வெளியேற்ற உத்தரவிடுகிறேன். (கூச்சல்-குழப்பம்)

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நீங்கள் செய்வது ரொம்பத் தப்பு. இந்த 'very highly irregular'; என்ன அர்த்தம்? மாதிரி எந்த ஸ்பீக்கரும் கிடையாது?

Mr. Speaker, you must stop expunging.

(அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும், ஸ்தாபனக் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும், காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும், சுதந்திராக் கட்சி உறுப்பினர்களும், தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் அவையிலிருந்து வெளியேறினர்.)



1974 டிசம்பர் 19]

**திரு. க. சுப்பு :** நானும் இதை எதிர்த்து வெளியேறுகிறேன்.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : Under Rule 184 I propose to raise a privilege motion.........

(There was noise outside the House in the lobby)

THIRU V. KRISHNAMOORTHI (NELLIKUPPAM) : This is very indecent..............

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** இந்த விதிப்பிரகாரம், நாம் ஏற்கனவே தலைவரவர்களே, ஒரு உரிமைப் பிரச்னை எழுப்பும் போது முன் நோட்டீஸ் கொடுக்காமல் எழுப்பக் கூடாது என்பதைத் தாங்கள் தளர்த்தவேண்டுமென்று கேட்டுத் தங்கள் முன்னால் ஒரு உரிமைப் பிரச்னையை எழுப்ப விரும்புகிறேன்.

நமது சட்டமன்ற உறுப்பினர் சுப்பு அவர்கள் இந்த அவையிலே தன்னைப் பற்றிய சில கருத்துக்களை மேலவையிலே, அங்கே எழுப்பியதாகவும், அது தாம் இந்த அவையிலே செயல்படக் கூடிய விதத்திற்கு இடைஞ்சலாக இருப்பதாகவும், உரிமைப் பிரச்னை எழுப்பி தம்முடைய ஜனநாயகக் கடமையைச் செய்ய. . .

(லாபியிலிருந்து தொடர்ந்து சத்தம் கேட்டது)

THIRU M. A. LATHEEF : Sir, the proceedings of the House is being obstructed from within the precincts of the House. இந்த அவையினுடைய ஒரு அங்கமாக, பாகமாகக் கருதப்படுகிற இடத்திலே, இந்தச் சபையினுடைய நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்ற வகையிலே சபைக்கு அகௌரவம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் . . .

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** தலைவரவர்களே, சுப்பு அவர்கள், தாம் இந்தச் சட்டசபையிலே செயல்படும் விதத்திற்குப் பாதுகாப்பு இல்லாத வகையிலே, இம்மாதிரியாக. . .

(லாபியிலிருந்து தொடர்ந்து சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது)

[1974 டிசம்பர் 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த லாபியிலே இருக்கிற
வர்களை அகற்றுமாறு சார்ஜன்ட் அவர்களுக்கு உத்தரவிடுகிறேன்.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** தாம் இந்தச் சபையிலே
செயல்படக் கூடிய விதத்திற்கு ஏற்படக்கூடிய நிலையை . . .
(குறுக்கிடு) அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்பது
பிரச்னையல்ல. அவர் எந்த கட்சியைச் சேர்ந்தவராக
இருந்தாலும் ஒரு மெம்பருக்கு இந்த அவையில் அவர் தம்முடைய
பொறுப்பைச் செயல்படுத்துவதற்காக அவர்களுக்கு வேண்டிய
பாதுகாப்பும், உரிமையும் இருக்க வேண்டுமென்பது நாம்
எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயமாகும். அந்த
முறையிலே, அவர்கள் தமக்குப் பாதுகாப்பற்ற முறையிலே
இவ்வளவும் ஏற்பட்டது என்ற பிரச்னை எழுப்பியதால் (குறுக்கீடு)
மேல்வையிலே இந்தப் பிரச்னை எழுப்பப்பட்டிருக்கிறது. அங்கு
தனக்குப் பாதகமாகச் சொல்லியிருப்பதால், அவர் தனக்கு இந்த
அவையில் வேண்டிய பாதுகாப்பு இல்லையென்று சொல்லியிருப்ப
தால், இது மிகவும் முக்கியமான பிரச்னையாகும். இங்கே இருக்கிற
உறுப்பினரைப்பற்றி அங்கே அவதூறுகச் சொல்வதும், அங்கே
இருக்கிற உறுப்பினரைப்பற்றி இங்கே அவதூறுகச் சொல்வதும்
சரியல்ல. ஆனால், இங்கே இருக்கிற உறுப்பினரைப்பற்றி அங்கே
அவதூறுகச் சொல்கிற ஒரு நிலை வளர்ந்து கொண்டே இருப்பதால்
இது மிகவும் முக்கியமான பிரச்னையாக இருப்பதால், இந்த
உரிமை மீறல் பிரச்னையை நான் எழுப்புகிறேன். அவர்
தன்னுடைய உரிமை பாதிக்கப்பட்டது என்ற முறையிலே,
தலைவரவர்களே,

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** திரு. சுப்பு அவர்கள்
தன்னுடைய உரிமை பாதிக்கப்பட்டது என்று கூறுவது
சரியா அல்லவா என்று தீர்மானிக்கவேண்டியது இந்த
அவையினுடைய பொறுப்பு. அதற்கு வாதமிடுவது தோழர்
சுப்புவினுடைய பொறுப்பு. ஆனால்; இங்கே வந்த பிரச்னை
மேல்வையிலே நடந்த விவாதம் பற்றி, ஒரு உரிமை பிரச்னையைக்
கொண்டு வந்தார்கள். அதை நீங்கள் இந்த அவைக்குக் கொண்டு
வரவில்லை என்று சபாநாயகரிடம் திரு. சுப்பு கொண்டு வந்த
விவகாரம் இது. அதற்குச் சபாநாயகர் அவர்கள். அப்படி



1974 டிசம்பர் 19] [டாக்டர் மு. கருணாநிதி]

உரிமைப் பிரச்னை தன் கவனத்திற்கு வரவில்லை. அப்படியே
இருந்தாலும் அதைப்பற்றித் தன்னுடைய அறையிலே வந்து
கேட்க வேண்டும், அவையிலே கேட்கக் கூடாது, அதை இங்கே
கேட்கவேண்டாம் என்று சொல்லியது சபாநாயகர் அவர்கள்
கொடுத்த தீர்ப்பாகும். அதை திரு. சுப்பு அவர்கள் ஒத்துக்கொள்ள
வில்லை.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** நான் அதை ஒத்துக்கொள்
கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரிமைப் பிரச்னையை நீங்கள்
யார்மீது கொண்டுவருகிறீர்கள்? . . .

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** டெபனிட்டாக யார் அந்த
மாதிரிப் பேசினார்கள் என்ற தகவல் எனக்கு இல்லை. தாங்கள்
அதைப்பற்றி மேலவையிலே விவரம் கேட்டு இந்த அவையிலே
அறிவித்ததற்குப் பிறகு உரிமைப் பிரச்னை வரும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இந்த அவையிலே
மேலவையிலே உள்ள உறுப்பினரைப்பற்றிப் பேசினார்களா
என்பதை மேலவைத் தலைவர் தங்களிடம் கேட்டு ஆராய்வதாகச்
சொல்லியிருக்கிறார்கள். என்ன பேசப்பட்டது என்பதைப்பற்றி
மேலவைத் தலைவர் சொல்லவேயில்லை.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** இங்கே இருக்கக்கூடிய
உறுப்பினரைப்பற்றி அங்கே என்ன பேசினார்கள் என்று
பரிசீலித்துத்தான் சொல்லவேண்டியிருக்கிறது. . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இங்கே இருக்கிற
உறுப்பினரைப்பற்றி அங்கே பேசினார்கள் என்ற தகவலே
இன்றைக்குத்தான் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மேலவைத்
தலைவரைக் கேட்டு சபாநாயகர் அவர்கள் தங்களுடைய கருத்தைத்
தெரிவிப்பார்கள் என்று நினைக்கிறேன்.

நிகழ்ச்சியாக இருந்தாலும் அது குறிப்புகளிலே ஏறுது, பத்திரிக்கைகளிலேயும் செய்திகள் அதைப்பற்றி வரக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** தலைவர் அவர்களே, கடந்த நான்கு ஆண்டுகளாக இல்லாத நிகழ்ச்சி இன்றைக்கு இங்கே நடந்துக்கொண்டிருக்கிறது. ஆகவே என்னுடைய வேண்டுகோள் இந்த அவையைப் பத்து நிமிடங்களுக்கு ஒத்திவைக்க வேண்டுகிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னையைப் பற்றிச் சபையிலே விவாதித்துக்கொண்டிருக்கும்போது முக்கியமான பிரச்னைகள் எழுப்பப்பட்டு இருக்கின்றன. மேலவையிலே நடந்த சில நிகழ்ச்சிகளையொட்டி இந்த அவையிலே இருக்கிற உறுப்பினர் நேற்றுப் பேசிய பேச்சின் அடிப்படையிலே உரிமை மீறல் பிரச்னையை இங்கே எழுப்பியிருக்கிறார்கள். அதையடுத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேலவையின் முன்னவர் என்ற முறையில் சில தகவல்களைச் சொல்லி இருக்கிறார்கள். மேலவையிலே நேற்று நடந்தது மட்டுமல்ல, அதற்கு முன்பு நடந்தது என்னவென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் கொடுத்த உரிமை மீறல் தீர்மானத்தைப் பற்றியும் இங்கே சில கருத்துக்களைச் சொன்னார்கள். மேலவையிலே நடந்த நிகழ்ச்சியைப்பற்றி விளக்கங்களைத் தருமுகத்தான் சில தகவல்களைத் தந்திருக்கிறார்கள். அவர்கள் கொடுத்து ஒரு ஆண்டாகிவிட்டது என்று சொன்னார்கள். எப்போது நடந்தது என்று பார்க்கத் தேவையில்லை, சமீபத்திலே நடந்ததா என்று பார்க்கத் தேவையில்லை.

whether the issue raised by the member is relevant or irrelevant, whether it has action or reaction.

என்பதைத்தான் பார்க்கவேண்டும். இங்கே ரிலவன்ஸியாக இருக்கிறது அவர்கள் எழுப்பியது. ஒரு ஆண்டு வரையிலும் எழுப்பவில்லை. மேலவையிலே நடந்ததைப்பற்றி உரிமை மீறல் கொடுத்து இருந்ததைப்பற்றி எழுப்பியிருக்கிறார்கள். இன்றைக்கு இந்தப் பிரச்னை வந்தபிறகுதான் எழுப்பியிருக்கிறார்கள். ஆகவே, தாங்கள் ஆராய்ந்து முடிவு சொல்லியிருக்கிறீர்கள், நாங்கள்





தீர்ப்புக்குக் கட்டுப்படுகிறோம். இருந்தாலும் சபையின் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து முழுமையாக நீக்கியது கொந்தளிப்பாக இருக்கிறது. ரிலவண்ட்டாக எழுப்பியிருக்கிறார்கள்; ஏற்கனவே இந்த அவையின் உரிமை மீறக்கூடிய வகையிலே, பேசப்பட்டதாகச் சொல்லப்படுவனவற்றைத்தான் அவர்கள் இங்கே தந்திருக்கிறார்கள். ஆகவே ரிலவண்ட் ஆகச் சொல்லியிருக்கிறார்கள். அதை முழுமையாக நீக்கியது கொந்தளிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன், மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் ஒரு குற்றச் சாட்டை இங்கே சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய முதல்வரவர்கள் உங்களுடைய அதிகாரத்தை 'உசர்ப்' செய்கிறார்கள் என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அது சரியா? அதற்கு உங்களுடைய தீர்ப்பு என்ன? மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய பேச்சு 'உசர்ப்' செய்யும் வகையில் இருக்கிறதா என்பதைச் சொல்ல வேண்டும். என்னென்றால், என்னுடைய வாதமெல்லாம் உங்களிடத்தில் ஒரு குறிப்பு வந்ததற்குப் பிறகு அந்தக் குறிப்பின்மீது தகவல் அறிய உரிமை இருக்கிறது. அந்த உரிமையை முதல்வரவர்கள் எடுத்துக்கொண்டால் அது உரிமை மீறிய செயலாகும். மற்றும் தாங்கள் செய்ய வேண்டிய காரியத்தை முதல்வரவர்கள் செய் திருந்தால், அந்த உரிமையையும், கடமையையும் அவர்கள் ஆற்றியிருந்தால் 'உசர்ப்பேஷன்' என்று வரலாம். அங்கே நடந்த சில தகவல்களை முதல்வரவர்கள் சொல்லியிருக்கும்பொழுது அதை usurpation of powers of the Speaker என்று சொல்லியிருக் கிறார்கள். அதைப்பற்றி ஒரு இறுதியான முடிவை, தீர்ப்பை தாங்கள் சொல்ல வேண்டும். முறையான சில விதிமுறைகளை, நடைமுறைகளை நாம் கொள்ள வேண்டும். இந்த இரண்டு விஷயங்களைப் பற்றியும், நீக்கியதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். திரு. தங்கமணி கூறிய குற்றச்சாட்டுகள்பற்றித் தங்கள் ரூலிங் என்ன என்று தெரிவிக்க வேண்டும். திரு. சுப்பு பேசிய பேச்சை முழுமையும் நீக்க வேண்டுமா என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டும்.

[1974 டிசம்பர் 19

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** தலைவரவர்களே, திரு. லத்தீப்
அவர்கள் எழுப்பிய அதே பிரச்னையின்மீது நானும் என்னுடைய
கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். நண்பர் சுப்பு
அவர்கள் இந்த அவையிலே எழுப்பியிருக்கும் பிரச்னையானது,
தன்னைப்பற்றி மேலவையிலே சொல்லிய பிரச்னையாகும். அது
பார்லிமெண்டரி முறையில்தான் எழுப்பப்பட்டிருக்கிறது.
தாங்கள் சொன்ன தீர்ப்பும் சரியான தீர்ப்புதான். அவையிலே
என்ன நடக்கிறது என்பதை மற்றவர்களும், மேலவையிலே
இருப்பவர்களும் தெரிந்துகொள்ள வேண்டும். ஆகவே, தாங்கள்
சொன்ன தீர்ப்பு அதாவது அவைக் குறிப்பிலே ஏற வேண்டா
மென்று சொல்லியது அவைக் குறிப்பிலே இருக்கும்படியாகத்
தாங்கள் ஆணையிட வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்
கொள்ள விரும்புகிறேன்.

**திரு. மணலி சி. கந்தசாமி:** தலைவரவர்களே, இப்பொழுது
சபை இருக்கும் சூழ்நிலையில் சபையை அரை மணி நேரம் ஒத்தி
வைத்து, கட்சித் தலைவர்களை அழைத்துப் பேச வேண்டுமென்று
நான் ஆலோசனை கூறுகிறேன்.

**திரு. செ. கந்தப்பன்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இங்கே கிளப்பிய
பிரச்னையைப்பற்றி இங்கே என்னுடைய கருத்தை மட்டும்
தெரிவிக்க விரும்புகிறேன். நீங்கள் உங்களுடைய முடிவை
அறிவிப்பதற்கு முன்பாக எனக்குத் தெரிந்த விவரங்களைக் கூற
விரும்புகிறேன். எனக்குத் தெரிந்த வரையில் நம்முடைய
மன்றத்திலேயும் சரி, நாடாளுமன்றத்திலேயும் சரி, ஒரு
அவையைப்பற்றி இன்னொரு சபையில் பிரச்னைக்குரியதாக ஆக்கிப்
பேசக்கூடாது என்பது ஆரோக்கியமாகக் கடைப்பிடிக்கிற ஒரு
முறையாகும். ஒரு சபையின் நிகழ்ச்சியை அல்லது பேச்சுக்களை
அல்லது மற்ற நடைமுறைகளை இன்னொரு இடத்தில் மேற்கோள்
காட்டவே கூடாது என்று எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை.
நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்களோ அல்லது அந்த
அவையிலே இருக்கின்ற ஒரு உறுப்பினரோ நல்லமுறையில்
விவாதம் செய்து, அதே பிரச்னையை நாம் விவாதிக்கும்பொழுது
நான் அதை மேற்கோள் காட்டுகிறேன் என்று வைத்துக்



1974 டிசம்பர் 19] [திரு. செ. கந்தப்பன்]

கொள்ளுங்கள். அதைப் பிரச்னைக்குரியதாக ஆக்க முடியுமா? ஒரு
அவையைப் பற்றி இன்னொரு அவையில் அந்த அவையை ஒட்டு
மொத்தமாகவோ அல்லது உறுப்பினர்களையோ மாசுபடுத்தும்
முறையில் பிரச்னைக்குரியதாக ஆக்கக்கூடாது என்பது
ஆரோக்கியமான விதி என்று கருதுகிறேன். அந்த அடிப்படையிலே
அங்கே நடந்த நிகழ்ச்சியை மாண்புமிகு முதல்வரவர்கள்
தெரிவித்தது நிச்சயமாக பிரச்னைக்குரிய ஒன்றல்ல, உரிமை
மீறப்பட்ட நிகழ்ச்சியும் அல்ல. அதேபோல் எல்லாப் பிரச்னை
களிலும் நாம் முடிவெடுத்தாலும் இதுபோல் "சென்சிட்டிவ்" ஆக
இருக்க வேண்டியதில்லை. சில நேரங்களில் வரம்பு மீறி பிரச்னைக்
குரியதாக ஆக்கிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. அந்த
அடிப்படையில் தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லத்தீப் அவர்கள்
இரண்டு பிரச்னைகளை எழுப்பியிருக்கிறார்கள். திரு. சுப்பு
அவர்கள் முறையாக எழுப்பியிருக்கிறார்கள், அதை முழுமையாக
நீக்கியது அவ்வளவு முறையல்ல, நீங்கள் பரிசிலனை செய்ய
வேண்டுமென்று சொன்னார்கள். நான் சுப்பு அவர்களைப்பற்றி
மேலவையிலே யாராவது பேசினால், பேசியது முறைதான் என்று
சொல்லவில்லை. அப்படிப் பேசியது முறையற்றது, உரிமை
மீறியது என்று இந்த அவையிலே எழுப்புவதற்கு உறுப்பினர்
களுக்கு உரிமை இருக்கிறது. எழுப்பியிருக்கிறேன் என்றும்
சொன்னார்கள். ஆனால் ஒரு ஆண்டுக் காலத்திற்கு முன்பு
எழுப்பியதற்கு இதுவரையில் எந்தவிதமான வகையிலும் செயல்
முறைப்படவில்லை, எனக்கு மேலவைத் தலைவரைக் கேட்டு
நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னார்களேயொழிய
வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று இப்பொழுது
கூறுகிறார்கள். அப்படிக் கேட்கின்ற முறையிலேயும், அதை
என்னுடைய அறையிலே கேட்டிருக்க வேண்டுமேயொழிய இந்த
அவையிலே கேட்டிருக்கக் கூடாது., ஆகவே, கேட்கக் கூடாத
ஒன்றை இந்த அவையிலே கேட்ட காரணத்தினால்தான் அது
அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்பட்டிருக்கிறது. எனவே, இதில்
எந்தவிதமான முறைகேடும் இல்லை.

இரண்டாவதாக, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கூறியது என்னுடைய அதிகாரத்திலே உட்புகுந்து காரியம் செய்வதாக இருப்பதாக திரு. தங்கமணி அவர்கள் கூறியது முறைதானா என்று கேட்டார்கள். அதற்கு முன்பே சொல்லியிருக்கிறேன். மேலவையில் நடந்த நிகழ்ச்சியைப் பற்றி எப்படி திரு. காளிமுத்து அவர்கள் குறிப்பிட்டார்களோ அதேபோலத் தான் முதலமைச்சரவர்களும் குறிப்பிட்டார்களேயொழிய என்னுடைய அதிகாரத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய நிலையில் இல்லை. ஆகவே, திரு. தங்கமணி கூறியது முறையில்லை என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறேன்.

அடுத்து . . .

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவரவர்களே, குறிப்பாகச் சில தகவல்களை சொன்னார்கள், அதை வைத்துக்கொண்டு, தங்களிடத்திலே கொடுத்து கவனிக்கப்படவில்லை என்ற பகுதியை மட்டும் நீக்கி, மற்ற பகுதியை அனுமதிக்கலாமே. திரு. சுப்பு அவர்கள் சில தகவல்களைத் தந்தார்கள். ஏற்கெனவே மேலவையிலே நடந்திருக்கிறது என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதில் தங்களுக்குக் கொடுக்கப்பட்டு அது நடக்கவில்லை என்று அதை மட்டும் நீக்கி மற்றவைகளைச் சபைக்குறிப்பில் வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நம்முடைய திரு. லத்தீப் அவர்கள் கேட்டதற்காக ஒன்றைச் சொல்கிறேன், இந்த அளவிற்கு மட்டும் சபைக் குறிப்பிலே ஏறலாம் என்று. ஏற்கெனவே தன்னைப்பற்றி மேலவையில் கூறியதாகச் சொன்ன அந்த நிகழ்ச்சியும், பேரவைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வந்து அதன்மீது இதுவரையிலே எந்தவிதமான செயல் முறையும் நடைபெறவில்லை என்று சொன்ன அந்த அளவோடு மட்டும் சபைக்குறிப்பிலே ஏறலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.





## (5) அறிவிப்புகள்.

### (அ) தமிழ்நாடு 1974-ம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## (6) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவரவர்களே, தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** நான் இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

## (5) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(6) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவரவர்களே, தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** நான் இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(7) தனியார் அலுவல்கள்.

(அ) சட்ட முன்வடிவுகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 1974 ஆம் ஆண்டு மேட்டூர் நகரியம் (ஒழிப்பு-நகராட்சியை விரிவுபடுத்துதல்) சட்ட முன்வடிவை முன்மொழிய அதற்கு நோட்டிஸ் கொடுத்த திரு. ரேந்திரன் அவர்கள் இருக்கையில் இல்லை.

தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு பொருள் நுகர்வோர் பாதுகாப்பு சட்ட முன்வடிவை முன்மொழிய அதற்கு நோட்டிஸ் கொடுத்த டாக்டர் ஹாண்டே அவர்கள் இருக்கையில் இல்லை.

(ஆ) தனித் தீர்மானங்கள்

இன்றியமையாப் பொருட்களின் விலைகளை வரையறுக்க தகுந்த நடவடிக்கை எடுப்பது குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 22—11—1973 மற்றும் 30—1—1974 ஆகிய நாட்களில் முன்னுரைக்கப்பட்டு விவாதிக்கப்பட்ட "இன்றியமையாப் பொருள்கள் சட்டத்தின்







கீழ் இன்றியமையாப் பொருள்களின் விலைகளை வரையறுக்கத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பேரவை அரசுக்குப் பரிந்துரை செய்கிறது" என்று திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் மீது மேலும் விவாதம். மாண்புமிகு அமைச்சரவர்கள்.

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, இந்தத் தீர்மானத்தை. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 11-15 மணிக்கு அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம் பேரவைத் தலைவரின் அறையிலே நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:** அவ்வளவு நேரம் நான் பேசப் போவதில்லை.

30—1—1974 இல் நான் பேசிய பேச்சின் தொடர்பாக நான் இப்பொழுது பேசவேண்டியிருக்கிறது. அதற்கிடையிலே ஏற்பட்ட விலைவாசிகள், மற்றும் உற்பத்தியில் ஏற்பட்டிருக்கும் சங்கடங்கள், உபரியாக இருந்த நிலைமை மாறி இன்றைக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கும் நிலைமை ஆகிய இவைகளைப் பார்க்கும்பொழுது நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் மற்ற மாநிலங்களை விட நம்முடைய மாநிலம் சிறப்பாக இருக்கிறது என்பதை மற்றவர்கள் சொன்னாலும் நம்முடைய உணவு தான்யங்களைப் பொறுத்தவரையில் நமக்கு இப்பொழுது அதிகமான விலை இருக்கிறது. இது அந்த நோக்கிலே, நாம் போகின்ற அந்த நேரத்திலே ரொம்பவும் குறைவாக, நம்முடைய மாநிலத்திலிருந்து மற்ற மாநிலங்களுக்கு உணவு தான்யங்களைக் கொடுக்கும் நிலையிலே நம்முடைய நிலைமை இருந்தது. அவைகளெல்லாம் மாறி, இன்றைக்கு நமக்கு மழையின்மை காரணமாகவும், மற்றக் குறைகளின் காரணமாகவும் பற்றாக்குறை ஏற்பட்டு விட்ட காரணத்தினால் நம்முடைய முதலமைச்சரவர்கள் நேற்றையதினம் நமக்கு முக்கியமாகத் தமிழகத்திற்கு வேண்டிய நெல் கொள்முதலிலே ஒரு வரையறுத்த விலையையும், அதே நோக்கில் சில்லறை விற்பனை விலையையும் வரையறுத்து சட்டமன்றத்திலேயும், சட்டமன்ற மேலவையிலேயும் அறிவித்திருக்கிறார்கள்.

[திரு. மன்னை. ப. நாராயணசாமி] [1974 டிசம்பர் 19

(முற்பகல் 11-00)

அன்றைக்கு திரு. தங்கமணி அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருந்த நேரத்தில் கொள்முதலிலும், விற்பனையிலும் சர்க்கார் முழுக்கத் தலையிட வேண்டுமென்ற கொள்கை இருந்தது. அதை நடைமுறைக்குக் கொண்டு வர உபரியாக இருந்த அந்தக் காலத்தில் எது எதைச் செய்ய முடியும் என்று திட்டமிட்டு யோசனை செய்திருந்தாலும் மத்திய அரசு அதிலே நாங்கள் துணியவில்லை, அப்படி எடுத்துக் கொள்வதால் நட்டம் ஏற்படுகிறது என்ற செய்தியைச் சென்ற திங்களில் பாராளுமன்றத்தில் மத்திய விவசாய அமைச்சர் ஷிண்டே அவர்கள் கூறியிருக்கிறார்கள். உணவுப் பிரச்சினையில் கொள்முதல் செய்வதைத் தனியாரிடத்திலிருந்து முழுவதும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற கொள்கையைக் கடைப்பிடிக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள்.

இப்போது நாம் அதைத் தைரியமாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற நிலையில் முதலமைச்சர் அவர்கள் நெல்லைப் பொறுத்தவரையில் உபரியாக இருக்கும் பகுதிகளில் தனியார்களை விட்டுக் கொள்முதல் செய்யச் சொல்லுவதில்லை என்ற கொள்கையை அறிவித்திருக்கிறார்கள்.

சிறுதானியங்களைப் பொறுத்தவரை இன்றைக்கு நம்முடைய மாநிலத்திலே மழையின்மை காரணமாக எந்த அளவு கிடைக்கு மென்று சொல்வதற்கில்லை. சென்ற ஆண்டு உபரியாக இருந்தது. அப்போது அது வெளி மாநிலங்களுக்குத் தேவையாக இருக்கிறது என்று கூறி மத்திய அரசு கட்டுப்பாட்டை எடுத்து விட்டது. இந்த ஆண்டு நமக்கே தேவை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

கோதுமை, சர்க்கரை போன்ற பொருள்களைப் பொறுத்தவரை ஒரு குறிப்பிட்ட அளவைக் கொடுத்து இன்ன விலைக்கு விற்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். மற்றப்படி உற்பத்தியாகும் சர்க்கரை வெளி மார்க்கெட்டில் விற்கப்படுகிறது. கடலை எண்ணெய் ரூ. 6.95 என்ற அளவில் விற்பனை செய்யப்படுவதற்காக வியாபாரிகளிடம் பேசி 25 சதவிகித லெவியைத் தருவதாக ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது.



1974 டிசம்பர் 19] [திரு. மன்னை. ப. நாராயணசாமி]

பருப்பு போன்றவற்றைப் பொறுத்தவரை நமக்குப் பற்றாக் குறை இருக்கிறது. இதன் விலைகளை நாம் ஒன்றும் செய்ய முடியாது. மத்திய சர்க்கார்தான் இதிலே தலையிட்டுச் செய்ய வேண்டும்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை முக்கியமான தேவை அரிசி. அதைப் பொறுத்தவரை நம்முடைய சர்க்கார் சிறப்பான உத்தரவை அறிவித்திருக்கிறது.

## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) மேலவையில் தன்னைப் பற்றி வினா எழுப்பியது குறித்து திரு. க. சுப்பு எழுப்பிய பிரச்சினை குறித்து பேரவைத் தலைவரின் விளக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இங்கு திரு. சுப்பு அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினையைப் பேரவைத் தலைவரிடத்தில் கொடுத்து அதன்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னார்கள். அதைப் பற்றி விளக்கமாகச் சொல்லுகிறேன். அவர் 4—4—1972 இல் உரிமைப் பிரச்சினையைக் கொடுத்திருக்கிறார். அதற்குப் பிறகு இந்த அவை ப்ரோரோக் பண்ணப்பட்ட காரணத்தால் அவர் கொடுத்த நோட்டீஸ் காலாவதியாகிவிட்ட காரணத்தால் மீண்டும் 12—7—72 இல் மதுரை சென்ட்ரல் ஜெயிலில் இருந்து 'என்னுடைய தீர்மானத்தைப் புதுப்பிக்க வேண்டும்' என்று கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதற்கு 11—8—72 இல் பேரவைத் தலைவர் 'இது முறையான உரிமைப் பிரச்சினை இல்லை, இதை அவையில் எழுப்ப அனுமதி தர முடியாது' என்று முடிவெடுத்து அதை அவர்கள் (டி.ஓ. நம். 12490/72) பெற்றுக் கொண்டு கையொப்பமிட்டும் கொடுத்திருக் கிறார்கள். ஆகவே, அவரால் கொடுக்கப்பட்ட உரிமைப் பிரச்சினை பேரவைத் தலைவரால் பரிசீலிக்கப்பட்டு அவர்களுக்கும் தகவல் அனுப்பப்பட்டிருக்கிறது. அதையும் அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியை மட்டும் அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 7. தனியார் அலுவல்கள்—தொடர்ச்சி

### தனித் தீர்மானங்கள்—தொடர்ச்சி

**இன்றியமையாப் பொருள்களின் விலைகளை வரையறுக்கத் தகுந்த நடவடிக்கை எடுப்பது குறித்து—தொடர்ச்சி.**

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** இப்போது நாம் விநியோகப் பொறுப்பை ஏற்று மாநிலம் பூராவும் 8,873 இடங்களில் விநியோகிக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. கூட்டுறவுத் துறையில் 7,061 இடங்களிலும், பஞ்சாயத்துக்கள் சார்பில் 761 இடங்களிலும், தனியார்களிடத்தில் 708 இடங்களிலும் தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் 343 இடங்களிலும் அத்தியாவசியப் பொருள்களை விநியோகம் செய்கிற நிலையங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்களும் மற்றவர்களும் சர்க்கார் இதிலே இப்போது எடுத்திருக்கிற திட்டங்களை அமல் நடத்த ஒத்துழைக்க வேண்டும், மக்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தங்கமணி அவர்கள் இருக்கையில் இல்லாததால் 22—11—1973 அன்று அவரால் முன்மொழியப்பட்ட தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

'இன்றியமையாப் பொருள்களின் மொத்த வாணிபத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல்' பற்றிய தீர்மானத்தைக் கொடுத்த திரு. என். கே. பழனிசாமி அவர்களும், 'கரும்பின் விலையை நிர்ணயம் செய்தல்' பற்றிய தீர்மானத்தைக் கொடுத்த திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும் இருக்கையில் இல்லை. ஆகவே, அவர்களுடைய தீர்மானங்கள் திரும்பப் பெறப்பட்டனவாக கருதப்படுகின்றன.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை காலை 9.00 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை முற்பகல் **11.08** மணியளவில் ஒத்தி வைக்கப்பட்டது.



## 8. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

121. Notification issued with G.O. Ms. No. 1486, Home, dated the 17th June 1974 in regard to concessional rate of motor vehicles tax in respect of the vehicle TMP 7050 belonging to the Family Planning Association of India. [Laid on the table of the House under section 26 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974).]

122. Notification issued with G.O. Ms. No. 668, Rural Development and Local Administration, dated the 16th March 1974 in regard to declaration of the areas forming the Sathyamangalam Local Planning Area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

123. Notification issued with G.O. Ms. No. 2479, Revenue, dated the 13th June 1974 in regard to exemption from the tax payable under the General Sales Tax Act, 1959, by the Bishop Diehl Rehabilitation Home for the Blind, Tiruchirappalli. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

124. Notification issued with G.O. Ms. No. 1531, Rural Development and Local Administration, dated the 25th June 1974 in regard to appointment of the Divisional Development Officers as Auditors of the accounts of the Village Panchayats in the place of the Revenue Divisional Officers. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

125. Notification issued with G.O. Ms. No. 66, Co-operation, dated the 26th February 1974 in regard to certain amendments to the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. [Laid on the table of the House under section 119 (4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961).]

126. Notification issued with G.O. Ms. No. 1916, Home, dated the 31st July 1974 in regard to an amendment to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Tamil Nadu Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

127. Notification issued with G.O. Ms. 2956, Revenue, dated the 17th July 1974 in regard to relief in payment of tax by dealers under section 9 of the Tamil Nadu General Sales Tax (Amendment) Act, 1974. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

128. Notification issued with G.O. Ms. No. 1907, Revenue, dated the 3rd May 1974 in regard to rates of Betting Tax levied in respect of intervene betting at Guindy on race meetings held at Ootacamund. [Laid on the table of the House under section 10 (4) of the Tamil Nadu Betting Tax Act, 1935 (Tamil Nadu Act XX of 1935).]

*B. Reports, Notifications and Other Papers.*

£ 63. The Tamil Nadu Prohibition (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 46 of 1974).

£ 64. The Madras City Tenants' Protection (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 47 of 1974).

£ 65. The Tamil Nadu Prevention of Begging (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 48 of 1974).

£ 66. The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Fourth Amendment Bill, 1974 (L.A. Bill No. 49 of 1974).

£ 67. Annexure to the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights (Amendment) Bill, 1974.

£ 68. Annexure to the Tamil Nadu Local Authorities Laws (Second Amendment) Bill, 1974.



& 69. Annexure to the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights (Amendment) Bill, 1974.

@ 70. Annexure to the Tamil Nadu Prohibition (Amendment) Bill, 1974.

@ 71. Annexure to the Tamil Nadu Prevention of Begging (Amendment) Bill, 1974.

@ 72. Annexure to the Madras City Tenants Protection (Amendment) Bill, 1974.

$ 73. Annexure to the Tamil Nadu Land Reforms (Fixation of ceiling on land) Fourth Amendment Bill, 1974.

---

@ Despatched to Members on 12th December 1974.

$ Despatched to Membrs on 14th December 1974.

& Despatched to Members on 16th December 1974.

£ Despatched to Members on 17th December 1974.

## தமிழ் நாடு சட்டப் பேரவை

---

**வெள்ளிக்கிழமை, 1974 டிசம்பர் 20.**

---

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

### (2) அறிவிப்புகள்

**(அ) 19—12—1974-ம் தேதி நீக்கப்பட்ட திரு. க. சுப்பு அவர்கள் எழுப்பிய பிரச்சினை மீது நடந்த விவாதக் குறிப்புகளை நடவடிக்கைக் குறிப்பில் சேர்த்துக்கொள்வது பற்றிய பேரவைத் தலைவரின் தீர்ப்பு.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1972-73 ஆண்டு நிதி நிலை அறிக்கைக்கான சட்டப்பேரவை தொடர்க்கூட்டம் 1—3—1972-ல் தொடங்கியது. மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள், 7—3—1972-ல் மேலவையில் அளித்த விடையை ஒட்டி மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் ஓர் உரிமை மீறல் பிரச்சினையை எழுப்ப அனுமதி வேண்டி, சட்டப்பேரவைச் செயலாளருக்கு ஒரு கடிதம் 4—4—1972-ல் எழுதினார். செயலாளர் குறிப்பும் அன்றே வழங்கப்பட்டது. ஆனால், அக்கூட்டத் தொடர் 6—4—1972-ல் முடிவடைந்தது. பேரவை நாள் குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப் பட்டது. ஒத்தி வைக்கப்பட்ட பேரவை 3—5—1972-ல் Prorogue செய்யப்பட்டது.

பேரவை Prorogue செய்யப்பட்டமையால், விதிப்படி தம்முடைய வேண்டுகோள் காலாவதி ஆகிவிட்டமையால் திரு. சுப்பு அவர்கள் தம்முடைய வேண்டுகோளைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு வேண்டி செயலாளருக்கு 12—7—1972-ல் கடிதம் எழுதினார். அதன் மீது, செயலாளர், தம்முடைய குறிப்பினை 17—7—1972-ல் எழுதி வைத்தார். அக்குறிப்பின் மீது பேரவைத் தலைவர் 28—7—1972-ல் அவையில் எழுப்ப அனுமதி மறுத்துத் தீர்ப்பளித்துக் கையெழுத்திட்டுள்ளார். 9—8—1972-ல் சட்டப் பேரவை

19-12-1974 ஆம் தேதி நீக்கப்பட்ட திரு. க. சுப்பு அவர்கள் எழுப்பிய பிரச்னை மீது நடந்த விவாதக் குறிப்புகளை நடவடிக்கைக் குறிப்பில் சேர்த்துக் கொள்வது பற்றிய பேரவைத் தலைவரின் தீர்ப்பு

[பேரவைத் தலைவர்] [1974 டிசம்பர் 20

மீண்டும் கூடியது. பேரவைத் தலைவரின் தீர்ப்பு, பேரவைத் துறையின் D.O. No. 12490/72-I T.N.L. (E) எண்ணிட்ட கடிதம் மூலம் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்களுக்கு 11—8—1972-ல் அறிவிக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்களும் அக்கடிதத்தை கையெழுத்திட்டுப் பெற்றுக் கொண்டுள்ளார்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள், 1972-ம் ஆண்டில் எழுப்ப அனுமதிகேட்ட உரிமைப் பிரச்சினை முடிவு இது வாகவும், திரு. சுப்பு அவர்கள் தாம் கொடுத்த அப்பிரச்னைமீது பேரவைத் தலைவர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று பேரவைத் தலைவர்மீது பெரியதொரு குற்றச்சாட்டினை நேற்று சாட்டினார். இப்பேரவையில் மாண்புமிகு உறுப்பினர்கள் கொள்ளும் பொறுப்பான பங்கின் பெருமையினை பலரும் உணர்ந்து கொள்ள துணை நிற்கும் வகையில், இப்போது நான் கூறிய இவ் விளக்கங்களோடு, திரு. சுப்பு அவர்கள் ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப எழுந்து, நேற்று கூறியது அனைத்தும், நிகழ்ச்சிக் குறிப்பில் இடம்பெற அனுமதி அளிக்கிறேன்.

## உ. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

### *Quarters for City Police*

*126 Q.—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the State Housing Board proposes to construct residential quarters for City Policemen at Raja Annamalaipuram; and

(b) if so, the details thereof?



1974 டிசம்பர் 20]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) ஆம்.

(இ) தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை மாநகரிலுள்ள காவல் துறை பணியாளர்களுக்காக இராஜா அண்ணாமலைபுரத்தில் 290 குடியிருப்புகளைக் (மூன்றடுக்குக் கட்டிடங்கள்) கட்டும் விவரம் வருமாறு:—

| | |
|---|---|
| 1. காவல் துறை இன்ஸ்பெக்டர்கள். | 35 குடியிருப்புகள். |
| 2. காவல் துறை சப்-இன்ஸ்பெக்டர்கள். | 45 குடியிருப்புகள். |
| 3. தலைமைக் காவலர். | 54 குடியிருப்புகள். |
| 4. காவலர்கள். | 156 குடியிருப்புகள். |
| மொத்தம் .. | 290 குடியிருப்புகள். |

கட்டுமானச்செலவு, நிலத்திற்கான விலை உட்பட ரூ. 92.51 லட்சம் செலவில் இக்குடியிருப்புகள் காவல் துறையின் வடிவமைப்புத் திட்டப்படி கட்டப்படும்.

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவர் அவர்களே, காவல் துறைப் பணியாளர்களுக்கு நல்ல பல சலுகைகளைச் செய்துவருகின்ற நம் முடைய அரசு, முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு கட்டப் பட்ட குடியிருப்புகள் பழுதடைந்திருப்பதைப் புதுப்பித்துத் தரும் செயற்குறிப்பை வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அப்படிப்பட்ட செயற் குறிப்புகள் வருமானால் அவைகளையெல்லாம் நிதி நிலை அடிப் படையில் ஆராய்ந்து அரசு ஆவன செய்யும்.

**திரு. ஆ. பரந்தாமன்:** தலைவர் அவர்களே, இராஜா அண்ணாமலை புரத்தில் கட்டப்படும் திட்டத்தைப்போல் சென்னையில் மற்ற இடங்களிலும் குடியிருப்புகள் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** வேறு பல இடங்களில் கட்ட வேண்டும் என்பதற்கான செயற்குறிப்புகளும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, இராஜா அண்ணாமலைபுரத்திலும், வட சென்னையிலும் சிறப்பாக வீட்டு வசதி வாரியத்தின்மூலம் கட்டப்படுவதைப்போல, ஒவ்வொரு வட்டத் தலைநகரிலும் போலீசாருக்கு உரிய குடியிருப்பு வசதியை வீட்டு வசதி வாரியத்தின்மூலம்—புதிதாகத் தேவைப்படும் இட வசதிக்காக—அவர்களுக்குரிய வீட்டு நிலைமையைக் கவனித்து—குடியிருப்புகளைக் கட்ட அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தொடர்ந்து அவர்களுடைய வீட்டுவசதிகள் கவனிக்கப்படுகிற வகையில்தான் பல ஆண்டுக் காலமாக இந்தக் குடியிருப்புக்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதுவரையில் அப்படிப்பட்ட குடியிருப்பு வசதிகளை செய்து கொடுத்ததன் விழுக்காடு 60-க்குமேல் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### திரைப்பட விழாக்கள்

*127 **வினா—திரு. என். டென்னிஸ் :** மாண்புமிகு முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இம்மாநிலத்தில் வெளிநாட்டுத் திரைப்பட விழாக்களை நடத்துவது குறித்து மத்தியத் தகவல் அமைச்சகம் மாநில அரசைக் கலந்தாலோசித்து வருகிறதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இல்லை.

### தமிழ் அகராதி வெளியிடுதல்

* 128 **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிய தமிழ் அகராதி தொகுக்கும் பணியினை தமிழ் நாடு அரசு மேற்கொண்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதற்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது?

(உ) அந்தப் பணி தற்போது எந்த அளவிலுள்ளது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) வரவு-செலவுத் திட்டத்தில் இன்னும் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

(உ) 8—5—1974-ல் தான் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ள—



**திரு. கோ. இளங்கோவன் :** தலைவர் அவர்களே, அரசுத் தரப்பில் இதற்கு முன்பு தமிழ் அகராதி தொகுக்கப்பட்டுள்ளதா? ஆம் எனில், எப்பொழுது தொகுக்கப்பட்டது என்பதை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அரசுத் தரப்பில் அகராதி ஏதும் தொகுக்கப்படவில்லை. சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பாக ஒரு அகராதி தொகுக்கப்பட்டது. இப்பொழுது நாம் குறிப்பிட்டிருக்கிற அகராதி "செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலி" என்பதாகும்.

**திரு. எஸ். கணேசன் :** இந்தக் குழுவினுடைய தலைவர் யார் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** திரு. தேவநேயப் பாவாணர் அவர்கள் இந்த இயக்கத்திற்கு இயக்குநராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர்கள் தலைமையின்கீழ் இந்தப் பணி நடைபெறுகிறது.

THIRU K. S. KOTHANDARAMAIAH : What is the amount set apart for preparing this Tamil Dictionary? The names of members who have been entrusted with that work of preparing a Tamil Dictionary and also the probable time that would be taken by them to complete the work may also be given. May I know all these details?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** திரு. தேவநேயப் பாவாணர் அவர்கள் தலைமையின்கீழ் ஒரு உதவிப் பேராசிரியர் நிலையில் ஒரு தொகுப்பாளர், படி எடுப்பாளர், உதவியாளர், தமிழ்ச் சுருக்கெழுத்துத் தட்டச்சர் போன்ற பதவிகளும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. நான்காண்டுகளில் வெளியிடப்பட வேண்டுமென்பதும் 12 தொகுதிகளாக வெளியிடப்பட வேண்டும் என்பது திட்டம். இப்பொழுது சிறிதளவு தொகைதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பிறகு கணக்கிட்டு தொகை ஒதுக்கப்படுகிற நிலைமையில் வரவு செலவுத் திட்டத்தில் சேர்க்கப்படும்.

**திரு. கோ. இராஜாப் பிள்ளை :** இந்தப் புதிய அகராதி தொகுக்கப்படும்போது, அதில் வார்த்தைகளுக்கு அர்த்தம் கொடுக்கப்படும்போது, தூய தமிழ்ச் சொற்கள்தான் உபயோகப்

படுத்தப்படுமா? இல்லையென்றால், 'ராக்கெட்', 'ரோடு', 'ஆப்பிள்'
போன்று அந்தந்த மொழியில் இருப்பதுபோலவே தமிழிலும்
இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்
களே, அதெல்லாம் எப்படியிருக்க வேண்டும் என்று நாம் அவர்
களுக்குக் கூறுவதற்கில்லை. ஏனென்றால், வல்லுநர்கள் அடங்கிய
குழு இதை முடிவு செய்கிறது. திரு. தேவநேயப் பாவாணர்
அவர்கள் சொற்பிறப்பியலில் மிகவும் வல்லமை பெற்றவர்
ஆவார்கள். அவர்கள் அதனைத் தொகுக்க இருக்கிறார்கள்.
இப்படித்தான் இருக்கவேண்டும் என்று நாம் அவர்களுக்கு உத்தர
விடுவதற்கில்லை.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, இந்தத் தமிழ்
அகராதியைத் தயாரிக்கின்ற குழு எப்பொழுது அந்த
அகராதியைத் தொகுத்து, வெளியே கொண்டுவரும் என்பதை
அறியலாமா? காலவரை இல்லாமலிருந்தால், ஆறு மாதத்திற்
குள்ளாக அந்த அகராதியை எப்படியும் வெளியிட வேண்டுமென்று
அரசாங்கம் அந்தக் குழுவைக் கேட்டுக்கொள்ளுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்
களே, நான்கு ஆண்டுக் காலத்தில் இந்த சொற்பிறப்பியல் அகர
முதலியைக் கொண்டுவர வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது.
12 தொகுதிகளாக வெளியிடப்படும். மற்ற அகராதிகளுக்கும்
இந்த அகராதிக்கும் வேறுபாடு உண்டு. மற்ற அகராதிகள்
சொல்லுக்குப் பொருள் தரும் அளவில்தான் இருக்கும். இது
சொற்பிறப்பியல் அகர முதலியாகும். ஒரு சொல்லை எடுத்துக்
கொண்டு, அதனுடைய வேர்ச் சொல் எங்கே இருக்கிறது என்று
கண்டுபிடித்து, அதிலிருந்து வருகிற சொற்கள் என்ன
என்பதெல்லாம் இந்த அகராதியில் அமையும்.

**திரு. வை. பாலசுந்தரம்:** பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை
அவர்கள் நல்லதொரு தமிழ் அகராதியைத் தயாரித்து
வருகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நம் அரசு உதவி புரிய
முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அவர்கள் வேறு
ஒரு பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அந்தப்
பணியை ஆற்றி வருகிறார்கள்.







**திரு. கு. காமாட்சி:** இந்த அகராதியை தொகுக்கும் பணியில் ஈடுபட்டிருப்பவர்களின் பணி இப்படித்தான் இருக்க வேண்டும் என்று ஆலோசனை கூற முடியாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் அதிக தமிழ் படித்தவர்கள், அவர்கள் சொல்கிற தமிழ், எழுதுகிற தமிழ் சாதாரண மக்களுக்குப் புரியக் கூடிய அளவிற்கு அந்த அகராதியில் இடம்பெறுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** நான் முதலிலேயே குறிப்பிட்டேன். மற்ற அகராதிகளுக்கும் இந்த அகராதிக்கும் வேறுபாடு உண்டு. மற்ற அகராதிகளில் பொருள், அதாவது வேழம் என்பதற்கு யானை என்று போட்டிருக்கும். இதில், வேழம் என்ற சொல் எங்கிருந்து ஆரம்பிக்கிறது, அடிப் படை என்ன, பகுதி விகுதி என்ன, அதைப் பொறுத்தவரையில் வேறு என்ன வேர் சொற்கள் கிளம்புகின்றன என்பதற்காக இந்த அகராதி, பெரியவர்களுக்குப் புரியவேண்டும் என்பதற்காக எழுதப் படுகிறது. அவர்கள் உண்மைகளை எடுத்து எழுதுவார்கள். அதை புலவர்களும் மற்ற தமிழ் அறிஞர்களும் பயன்படுத்திக் கொள் வார்கள்.

*Special Training for English teachers*

* 129 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal to appoint some members from American Peace Corps Volunteers to give training in English for Primary and Middle School teachers in this State; and

(*b*) if so, the details of the same?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) & (இ) ஆரம்ப, இடைநிலைப் பள்ளியில் ஆங்கிலம் கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்களுக்கு புது போதனை முறைகளில் பயிற்சி அளிப்பதற் காக 1969-ம் வருடம் மாநில அரசு, மத்திய அரசு மூலமாக 18 அமெரிக்க அமைதி அணித் தொண்டர்களைத் தருவித்தன.

அதுபோல் 1974-ம் வருடம் ஒன்பது தொண்டர்கள் இம் மாநிலத்திற்கு வந்துள்ளார்கள். இத்தொண்டர்கள் தேர்ந்தெடுக்கப் பட்ட மாவட்ட கல்வியதிகாரிகளின் அலுவலகத்தில் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

[1974 டிசம்பர் 20

ஒவ்வொரு தொண்டரும், அவ்வப்போது கருத்தரங்குக் கூட்டங்கள் முதலியன நடத்தி ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகளில் ஆங்கிலம் போதிக்கும் 90 ஆசிரியர்களுக்கு புதுமுறையில் ஆங்கிலம் போதிப்பதில், பணியிடைப்பயிற்சி அளிப்பார். ஒவ்வொருவரும் அடுத்துள்ள பள்ளிகளுக்குச் சென்று கல்வித் துறைப் பாடத்திட்டத்தின் படியும், ஆசிரியர்களின் கையேட்டின் படியும் செயல்முறைப்படி, ஆசிரியர்களுக்கு புதுமுறையில் ஆங்கிலம் போதிக்க வழி காட்டுவார்.

**திரு. கோ. இளங்கோவன் :** உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலம் போதிக்கும் ஆசிரியர்களுக்கும் இதுபோன்ற பயிற்சி அளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அரசுக்கு உத்தேசமுண்டா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பங்களூரில் இருக்கிற ஆங்கிலம் போதிக்கிற அந்த முறை மூலம் இங்குள்ள பிரிட்டிஷ் கவுன்ஸில் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**திரு. ஆ. பரந்தாமன் :** இப்போது துவக்கப் பள்ளிகளில் இருக்கக்கூடிய சில ஆசிரியர்களுக்கு ஆங்கிலப் பயிற்சி அளிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் அது போதுமானதாக அமையவில்லை. ஆகவே, மீண்டும் சிறப்பான முறையில் பயிற்சி அளிக்க அரசு புதிய வழிவகைகளைக் வகுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** புது முறையில் சிறப்பான முறையில் பயிற்சி அளிக்க இந்த ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. முன்பு 18 பேர்கள் 1969-ம் ஆண்டில், 1970-ல் 21 பேர்கள் வந்தார்கள். 1974-ல் 9 பேர்கள் வந்தார்கள். இவர்கள் இரண்டு ஆண்டுகள் இருந்து இந்தப் பயிற்சியை அளிப்பார்கள். இப்போது வந்த ஒன்பது பேர்களில் கூட உடல்நலம் இல்லாத தாலும் வேறு பல சூழ்நிலைகள் சரியாக இல்லாத காரணத்தாலும் நான்கு பேர்கள் திரும்பிவிட்டார்கள். ஐந்து பேர்கள் இருந்து பணியாற்றி வருகிறார்கள். சைதாப்பேட்டை கல்வி மாவட்ட அதிகாரியின் கீழ் ஒருவர் பணியாற்றுகிறார். திருச்சியில் ஒருவர், காஞ்சிபுரத்தில் ஒருவர், ஈரோட்டில் ஒருவர், வேலூரில் ஒருவர் இருக்கிறார்கள். பயிற்சி முறை சிறப்பாக அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் அவர்கள் பணியிடைப் பயிற்சி அளித்து வருகிறார்கள்.



1974 டிசம்பர் 20]

**திரு. நா. வீராசாமி :** அமெரிக்காவில் இருந்து வந்திருக்கிற குழு புதிய முறையில் ஆங்கிலத்தைப் போதிக்க கற்றுக்கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். புதிய முறை என்றால் அவர்கள் எந்த முறையைக் கடைப்பிடிக்கப் போகிறார்கள்? ஏற்கனவே நம் நாட்டில் முதலில் எழுத்துக்கள், ஏ, பி, ஸி, டி என்று அதைக் கற்றுக் கொடுத்து அதை பேஸிக்காக வைத்து பின்னால் ஆங்கிலம் கற்றுக் கொடுத்தார்கள். இப்போது எழுத்துக்கள் கற்றுக் கொடுப்பதை விட்டு ஒவ்வொரு பதங்களையும் அதற்கான படங்களைப் போட்டு அந்த முறையைப் பின்பற்றவேண்டும் என்ற முறையில் அமெரிக்க முறை இருப்பதாக கேள்விப்படுகிறேன். அது உண்மையா ? அப்படியானால் புதிய முறை என்ன என்பதை அமைச்சர் அவர்கள் சற்று விளக்குவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அந்த முறைகளைப் பற்றிய விளக்கங்கள் பற்றி எல்லாம் என்னிடம் தகவல் இல்லை. ஒருசிலர் புதிய முறையைக் கற்றுக்கொடுக்க வந்திருக்கிறார்கள். அதுபற்றிய விவரங்கள் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஆர்வம் இருக்குமேயானால் சைதாப்பேட்டை கல்வி மாவட்டத்தின் அலுவலகத்தில் ஒருவர் இருக்கிறார். அவரிடம் சென்று ஒருமணி நேரம் உரையாடினால் அதுபற்றி தெளிவு பெறலாம் என்று கருதுகிறேன்.

**திரு. இரா. மாணிக்கவாசகம் :** இந்த ஐந்து அமெரிக்க நிபுணர்களும் நகரங்களில் இருப்பதாகத் தெரிய வருகிறது. அவர்களை கிராமப்புறங்களில் உள்ள பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பி அங்கு பயிற்சி கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நகர்ப்புறங்களுக்கு என்று இவர்கள் ஒதுக்கப்படவில்லை. சைதாப்பேட்டை கல்வி மாவட்ட அதிகாரியின் அலுவலகத்திலிருந்து பணியாற்றுகிறார். அந்தக் கல்வி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சில பல ஊர்களைத் தேர்ந்தெடுத்து 90 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கிறார்கள். திருச்சி கல்வி மாவட்டம், காஞ்சிபுரம் கல்வி மாவட்டம், ஈரோடு கல்வி மாவட்டம், வேலூர் கல்வி மாவட்டம் என்று அந்தந்த கல்வி மாவட்டங்களில் இருக்கிற 90 ஆசிரியர்களுக்கு பயிற்சி தர ஏற்பாடுகள் செய்து கொடுக்கிறார்கள். இவர்கள் பல பள்ளிகளுக்குச் சென்று அங்குள்ள முறைகளை எல்லாம் அறிந்து அந்த ஆசிரியர்களுக்கு எடுத்துச் சொல்லி வருகிறார்கள், பயிற்சி அளிக்கிறார்கள். அதற்கான வசதி செய்து தரப்பட்டிருக்கிறது

அப்படிச் செல்லும்போது நகர்ப்புறங்களுக்கு என்று மட்டுமல்லாது, சில பல கிராமங்களுக்கு செல்கிற ஏற்பாடுகளும்தான் அவர்களுக்கு சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் சென்று வர சில போக்குவரத்து வசதிகள் எல்லாம் செய்திருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் தனியாக சைக்கிள்களை நாம் தந்திருக்கிறோம்.

**திரு. சி. ஆறுமுகம் :** கல்வி அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது, சைதாப்பேட்டை கல்வி மாவட்டத்திலிருந்துகொண்டு ஆங்கிலம் போதிக்க ஆசிரியர் இருப்பதாகச் சொன்னார்கள். ஏற்கனவே சென்னை நகரம் முன்னேறிய பகுதி என்று அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதால் புதிய முறையில் ஆங்கிலத்தைப் போதிக்கும் ஆசிரியர்கள் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒவ்வொரு மாதம் என்று வைத்து அவர்கள் ஒவ்வொரு ஒன்றியப் பள்ளிக்கூடத்திற்கும் சென்று, உயர் தொடக்கப் பள்ளிகளுக்கும் சென்று ஆங்கிலம் போதிக்க தக்க ஏற்பாடுகள் செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** கார்ல்ஸன், ப்ரீன் என்பவர்கள் சைதாப்பேட்டை கல்வி மாவட்டத்தைச் சுற்றியுள்ள செங்கல்பட்டு போன்ற பகுதிகளிலும் பணியாற்றுகிறார்கள். சென்னை நகரிலுள்ள பள்ளிகளில் பயிற்சி அளிக்கிற முறை அல்லாது சைதாப்பேட்டை கல்வி மாவட்டத்தில் உள்ள பகுதிகளில் அவர்கள் பணியாற்றுகிறார்கள். சைதாப்பேட்டை கல்வி மாவட்டம் என்பது பரந்திருக்கிற ஒன்றாகும். காஞ்சிபுரம் கல்வி மாவட்டம், சைதாப்பேட்டை கல்வி மாவட்டம் என்று செங்கல்பட்டு மாவட்டத்திற்கு மட்டும் இரண்டு கல்வி மாவட்டங்களைத் தேர்ந்தெடுக்கிறோம். இரண்டு கல்வி மாவட்டங்களிலும் அவர்கள் 90, 80 ஆசிரியர்களுக்கு இந்தப் பயிற்சியை அளிக்க வேண்டும். அந்த 90 பேர்கள் அந்தந்த கல்வி மாவட்டத்திலுள்ள பள்ளிகளிலுள்ள ஆங்கிலம் போதிக்கிற ஆசிரியர்களைக் கூப்பிட்டு வைத்து இவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்ட முறைகளை இவர்கள் அவர்களுக்கு சொல்லிக் கொடுக்கவேண்டும் என்பது முறை. அமெரிக்காவில் இருந்து வந்திருக்கும் ஐந்து பேர்களை வைத்துக்கொண்டு தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் கிராமங்கள், எல்லாச் சிற்றூர்களிலுமுள்ள ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளிப்பது என்பது இயலாத ஒன்று. 90 ஆசிரியர்கள் பெறுகிற பயிற்சியை அவர்கள் மேற்கொண்டு நூற்றுக்கணக்கான ஆசிரியர்களுக்கு ஆங்காங்கே பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.



## *Tourist Bungalow at Hogenakkal*

* 130 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether the construction of a Tourist Bungalow at Hogenakkal has been completed; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) சுற்றுலாப் பயணிகள் மாளிகை மூன்று மாடிக் கட்டிடமாகும். இதில் இருவர் தங்கும் 28 அறைகளும், துயில் கொள்ளும் கூடங்கள் மூன்றும் உள்ளன. ஒவ்வொரு கூடத்திலும் ஆறு படுக்கைகள் இருக்கின்றன. இத்துடன் இரண்டாவது மாடியில் உணவருந்தும் கூடமும், சமையற்கூடமும் உள்ளன. இக்கட்டிடம் ரூ. 9.50 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் கட்டப் பட்டுள்ளது.

**திரு. கா. வேழவேந்தன் :** ஒகேனக்கல்லில் லட்சக்கணக்கான ரூபாய் செலவில் ஒரு சுற்றுலா மாளிகை கட்டி முடிக்கப் பட்டுள்ளது. அந்த அருவியை மறுபுறம் சென்று கண்டு மகிழ்வதற்குரிய வகையில் நயாகரா நீர்வீழ்ச்சியில் கட்டப்பட்டிருப்பதைப் போல் இந்த அருவியின் மறுபுறம் சென்று பார்த்துக் களிக்க பாலம் போன்று ஒரு கட்டடம் அமைக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அது தேவையா, அதனால் பலன் ஏற்படுமா என்பதைப் பற்றி ஆராயவேண்டும். நயாகரா ஃபால்ஸ் என்றால் பல ஆயிரக்கணக்கான அடி நீளம் ஷீட் ஆப் வாட்டர் என்பார்கள். பெரிய பகுதிக்கு நீர்வீழ்ச்சி வருகிறது. அங்கு அப்படி போய் பார்க்க வாய்ப்பு இருக்கிறது. இங்கு நெருக்கமாக, அதிக இடம் இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. மறுபக்கம் சென்று பார்ப்பதில் பலன் ஏற்படுமானால் செய்யலாம். ஆனால் பெருத்த செலவுக்கு ஆளாக வேண்டி வரும். நாம் அவசியமானவற்றிற்குத்தான் செலவு செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம். 9.50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் இந்தக் கட்டடங்கள் எழுப்பியிருந்தாலும் அந்தக் கட்டடத்திற்குப் போகிற வழியில் சின்னாறு என்ற ஆற்றில் அடிக்கடி வெள்ளம் வருகிறது. அதில் ஒரு பாலம் கட்ட ரூ. 5,63,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பாலத்தைக் கட்ட முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

[1974 டிசம்பர் 20

THIRU K. S. KOTHANDARAMIAH : The tourist bungalow at Hogenakkal is used only by rich people but other people, people of middle and low-income groups are not able to use them. Especially those people who go there during the month of July, during festival, from Mysore and Andhra States are not able to utilise it since there are no facilities. So, will the Hon. Minister for Tourism give an assurance that sufficient arrangements for stay will be made for these people also at Hogenakkal?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அந்த ஹொகநகல் சுற்றுலா மாளிகை தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மேற்பார்வையின் கீழ் இருக்கிறது. அது வளர்ச்சிக் கழகமாக இருக்கிற காரணத்தினால் நஷ்டம் ஏற்படாத வகையில் அதைப் பராமரிக்க வேண்டியிருக்கிறது. அந்தச் சுற்றுலா மாளிகையில் 28 அறைகள் இருக்கின்றன. ஒவ்வொன்றிலும் இரண்டு படுக்கைகள் இருக்கின்றன. டார்மிட்டரி மூன்று இருக்கிறது. ஒவ்வொன்றிலும் 6 படுக்கைகள் இருக்கின்றன. அதற்காக விதிக்கப்பட்டிருக்கிற கட்டணம் மிகக் குறைவு. அந்த வகையிலே அதைச் சாதாரணமானவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். அவைகளைச் சாதாரணமானவர்கள் பயன்படுத்திக் கொள்ளத்தக்க அளவுக்குத்தான் அதிகமான அளவுக்கு இல்லாமல், கட்டுபடியாகக்கூடிய அளவுக்கு வாடகை நிர்ணயித்திருக்கிறார்கள். டார்மிட்டரி மிகக் குறைந்த கட்டணம் உள்ளதாக அமைந்திருக்கிறது.

**திரு. எஸ். முருகையன் :** அங்கே ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். எவ்வளவு பேர்கள் வருகிறார்கள் என்று ஏதாவது கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறதா? அப்படி கணக்கு எடுக்கப்பட்டிருந்தால், அங்கே கட்டப்பட்டிருக்கிற கட்டடம் போதுமானதாக இல்லை என்று சொல்லப்படுகிறது. அதை மாற்றி புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசாங்கம் ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** கட்டப்பட்டிருக்கிற இடத்தில் எவ்வளவு பேர் தங்குவார்கள். எவ்வளவு நாட்களுக்கு தங்குவார்கள் என்ற கணக்கு எடுக்கப்பட்டு, ஏராளமான பேர்கள் தங்குவதற்கு வருகிறார்கள், இடம் இல்லாமல் தவிக்கிறார்கள் என்ற சூழ்நிலையில் தான், அதனால் பலனும் பயனும்



1974 டிசம்பர் 20]

ஏற்படும் என்றால் தான், மேற்கொண்டு அதை விரிவுபடுத்த வேண்டும். நாம் அப்படிப்பட்ட கட்டடங்களை கட்டும்பொழுது அதில் வந்து தங்குகிறவர்கள் பற்றிய கணக்கு ஆண்டுக்கு எடுக்கப் படுகிறது. 'ஆகுபன்ஸி ரேட்', அதாவது 60 சதவிதம் அறை களெல்லாம் நிரப்பப்படுகின்ற அளவுக்குத்தான் ஒரு ஹோட்டல் அல்லது இப்படிப்பட்ட சுற்றுலா மாளிகை சிறப்பாக நடைபெற முடியும். ஆனால் இந்தக் கட்டடத்தில் 30, 35, 40 சதவிதம் தான் அந்த அளவுக்குத் தான் அறைகள் பயன்படுத்தப்படுகின்றன, 60 சதவிதம் அளவுக்கு ஆண்டு முழுவதும் பயன்படுத்தப்படவில்லை என்ற நிலையில் சுற்றுலா மாளிகைக்கோ அல்லது ஹோட்டலுக்கோ நஷ்டம்தான் ஏற்படும். அந்தக் கணக்கை வைத்து மேலும் இடம் தேவைப்படுகிற சூழ்நிலை ஏற்பட்டால் தான் அந்த மாளிகையை விரிவுபடுத்துவதா அல்லது வேறு புதிய மாளிகையைக் கட்டுவதா என்பதைச் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் முயற்சிக்கும்.

**திரு. கு. காமாட்சி :** ஹொகநகல் நல்ல இடம், அயல் நாட்டுப் பயணிகளைக் கவரத்தக்க அளவுக்கு அது நன்றாக அமைந்திருக் கிறது. அங்கே சுற்றுலா மாளிகை இருக்கிறது. அதே மாதிரி வரலாற்றுச் சிறப்பு மிக்க கல்லணையில் ஒரு சுற்றுலா மாளிகை கட்டுவதற்கு பல ஆண்டுகளாக கோரிக்கை இருந்து வருகிறது. அதை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** சாதாரணமாக சுற்றுலா மாளிகைகள் கட்டுவதற்காக பல்வேறு கூறுபாடுகளை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். சில பல இடங்களில் வந்து தங்குவதற்கு ஏற்றதாக இருக்கின்றன. சில பல இடங்களில் ஹெல்த் ரிசார்ட் என்ற முறையில் 5, 10 நாட்கள் வந்து தங்கு கிறார்கள். சில பல இடங்களில் 2, 3 நாட்கள் தான் தங்கு வார்கள். சில பல இடங்கள் பார்த்துவிட்டு திரும்புவதற்காகத் தான் இருக்கின்றன. தங்குவதற்காக இருக்காது. பார்த்து விட்டுத் திரும்பிச் செல்லும். இடங்களாக இருந்தால் அங்கே சுற்றுலா மாளிகையினால் அதிக பலன் ஏற்படாது. ஹொகநகலில் பெரும்பாலானவர்கள் வந்து ஒரு தடவை குளித்துவிட்டு, பார்த்து விட்டுப் போகிறார்கள். ஹொகநகலில் தங்கி இருக்கும் அளவுக்கு அங்கு இருக்கிற தட்பவெட்ப சூழ்நிலை இடம் தராது. ஊரை விட்டு சற்று வெளியே வந்துவிட்டால் வெய்யில் கடுமை தாங்க முடியாது. தங்குகின்ற அளவுக்கு அங்கு சூழ்நிலை இருக்காது. வந்துபார்த்து விட்டுத் தான் போகிறார்கள்.

இந்தக் கூறுபாடுகளின் அடிப்படையை வைத்துத்தான் நாம் கணக்கெடுத்து சுற்றுலா மாளிகைகள் அமைக்க வேண்டும். கல்லணையில் ஓய்வு அறைகள் இருக்கின்றன. ஆனால் அங்கு வந்து தங்குகிறவர்கள் எவ்வளவு நாட்களுக்கு வந்து தங்குகிறார்கள், அதனால் பலன் ஏற்படுகிறதா என்ற கணக்கு எடுத்த பிறகுதான் அங்கே சுற்றுலா மாளிகை கட்டவேண்டும். வெளிநாட்டிலிருந்து வருகிற சுற்றுப்பயணிகளுக்கு இப்படிப்பட்ட இடங்களை வந்து பார்ப்பதற்கே நேரம் இல்லை. அப்படியிருக்கும்பொழுது அவர்கள் இங்கெல்லாம் வந்து தங்குவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. உள் நாட்டிலிருந்து வேறு மாநிலங்களிலிருந்து இங்கே வந்து தங்குபவர்கள் எவ்வளவு பேர்கள் என்று கணக்கு எடுக்கவேண்டும். அப்படி வரும் பயணிகள் 2, 3 நாட்களுக்காவது வந்து தங்கு கிறார்களா அல்லது பார்த்துவிட்டுப் போய்விடுகிறார்களா என்ற கணக்கையும் எடுக்க வேண்டும். திருச்செந்தூரில் ஏராளமான பயணிகள் வந்து தங்குவார்கள் என்று தான் நினைத்து அங்கு சுற்றுலா மாளிகை கட்டப்பட்டது. ஆனால் அங்கு வருகிற பயணிகள் பார்த்து விட்டுப் போய்விடுகிறார்கள். ஒன்றிரண்டு நாட்கள் கூட தங்காமல் இருக்கிற காரணத்தினால் அங்குள்ள கட்டடங்களில் பல அறைகள் பல நாட்களுக்குக் காலியாகவே இருக்கின்றன. கல்லணையில் உள்ள சூழ்நிலையை அறிந்தபிறகு தான், கணக்கு எடுக்கப்பட்ட பிறகுதான், முடிவு எடுக்க வேண்டும்.

### வானூர் ஆரம்ப சுகாதார நிலையம்

*131 வினா—திரு. ந. முத்துவேல்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வானூரில் இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடங்கள் கட்டப்படுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: வானூர் வளர்ச்சி வட்டாரத்திற்காக ஆரம்ப சுகாதார நிலையம், கிளியனூருக்கு அருகிலுள்ள தைலாபுரத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள அரசுக் கட்டிடத்தில் செயல்பட்டு வந்துள்ளது; இக் கட்டிடம் 9—3—1973 அன்று இந்நிலையத்தை நடத்துவதற்காக இந்தத் துறையினராலே மேற்கொள்ளப்பட்டது.



### *Maternity ward in Denkanikottah Hospital*

*132 Q.—Thiru K. S. Kothandaramiah: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether there is a proposal to sanction a 25 bed Maternity Ward in the Government Hospital at Denkanikottah in Dharmapuri district; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அன்பழகன்: (அ) & (இ) தற்பொழுது இல்லை.

Thiru K. S. Kothandaramiah: Denkanikotah has become an independent taluk and it is also headquarters. It is bigger than Hosur. There are a number of villages comprised in that taluk and the area is also more than 30 miles. But only one dispensary is available. May I know from the Hon. Minister for Health whether he will give top priority to this, considering the climatic conditions of the place and also its backwardness and give sanction for opening a separate maternity ward there?

The Hon. Thiru K. Anbazhagan: This is only a dispensary at Denkanikotah and it was provincialised on 19th August 1971 and it was undertaken by Government. There is already a bed-strength of 10 provided there for maternity and for other purposes and therefore there are no proposals pending with Government at present. In future this may be considered.

### குடும்பநலத் திட்டம்

*133 வினா—திரு. என். கிட்டப்பா:
திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடும்பநலத் திட்டத்தை செயல்படுத்துவதற்காக சென்ற 1973-74 ஆம் ஆண்டில் மத்திய அரசு மாநில அரசுக்கு அளித்த மானியத்தொகை எவ்வளவு?

(இ) நடப்பு நிதியாண்டில், மத்திய அரசு இதற்காக நமது மாநிலத்திற்கு எவ்வளவு தொகை ஒதுக்கியுள்ளது?

[1974 டிசம்பர் 20

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) குடும்ப நலத் திட்டத்தை செயல்படுத்துவதற்காகச் சென்ற 1973-74 ஆம் ஆண்டில் மத்திய அரசு மாநில அரசுக்கு அளித்த தொகை ரூபாய் 414.04 இலட்சம்.

(இ) நடப்பு நிதியாண்டில் மத்திய அரசு ரூ. 357.10 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

**திரு. கா. வேழவேந்தன்:** சென்ற ஆண்டோடு ஒப்பிடும்பொழுது இந்த ஆண்டு நிதியை இவ்வளவு குறைவாக மத்திய அரசாங்கம் குறைத்து இருப்பதற்கு என்ன காரணம் சொல்லியிருக்கிறது? அதை முழுமையாகப் பெறுவதற்கு நம்முடைய மாநில அரசு மத்திய அரசை மறுபடியும் வற்புறுத்தியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** கடந்த கணக்கு ஆண்டில் 1973-74-ல் தமிழக அரசு செலவிட்ட அடிப்படையில் மத்திய அரசாங்கத்தினிடம் கோரப்பட்ட தொகை ரூ. 493.73 லட்சம். ஆனால், அப்பொழுதே மத்திய அரசு கொடுக்க ஒப்புக் கொண்ட தொகை, அதாவது அவர்கள் நிதிக் கட்டுப்பாடு செய்த காரணத்தினால் 1973-74 ஆண்டுக்குக் கூட அவர்கள் ஒப்புக் கொண்டது ரூ. 414.04 லட்சம் மட்டும் தான். அப்பொழுது 80 லட்சம் ரூபாய் எஞ்சிய தொகையைத் தமிழக அரசு கோரி யிருக்கிறது. அந்தத் தொகையையும் கொடுக்கவேண்டும் என்று மீண்டும், மீண்டும் வற்புறுத்தியதன் காரணமாகத் தாய்சேய் நலப் பணி தொடர்பாக வழங்கப்பட்ட பொருள்களின் செலவு என்ற முறையிலும், கருத்தடை சாதனங்களுக்கானச் செலவு ஆகிய வகையிலும் ரூ. 13.64 லட்சம் ஈடு செய்து மத்திய அரசு ஒப்புதல் வழங்கியது. ஆனால் இன்னும் ஈடு செய்யப்படவில்லை. அதற்கு மேல் கடந்த ஆண்டு ரூ. 493 லட்சம் கோரப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு கடந்த ஆண்டு கொடுத்த 414 லட்சம் ரூபாயையாவது வழங்கவேண்டும் என்று கேட்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் மத்திய அரசு இந்த ஆண்டு 357 லட்சம் தான் தரப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். இப்பொழுது மேலும் 60 லட்சம் துண்டு விழக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தமிழக அரசு இவை களெல்லாம் மத்திய அரசினால் ஏற்கனவே ஏற்கப்பட்ட செலவு என்ற அடிப்படையில், இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய செலவுத் தொகை முழுவதையும் வழங்கவேண்டும் என்று மறுபடியும் வற்புறுத்தி கேட்டிருக்கிறது.



1974 டிசம்பர் 20]

**திரு. நா. வீராசாமி :** இந்தியாவிலேயே நம்முடைய தமிழ் நாடு தான் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை அமுல்படுத்துவதில் மிகத் தீவிரமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்தைவிட மற்ற மாநிலங்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்காக அதிகமான பணத்தை ஒதுக்கிவிட்டு, அந்தத் திட்டத்தை மிகச் செம்மையாக நிறைவேற்றும் நம்முடைய மாநிலத்திற்கு மட்டும் கூடுதலான தொகை கொடுப்பதற்கு மத்திய அரசு மறுப்பதற்கு என்ன காரணம்? ஏதாவது இதில் அரசியல் இருக்கிறதா? அப்படியானால் மீண்டும் நம்முடைய அரசு மத்திய அரசினிடம் வற்புறுத்தி அதிகமாகப் பணம் தரவேண்டும் என்று நிர்ப்பந்திக்குமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** பொதுவாகக் குடும்ப நலத் திட்டம் தாய் சேய் விடுதிகளின் பராமரிப்புப் பணிகளுக்காக, மத்திய அரசு வழங்குகின்ற நடைமுறைச் செலவை, விளம்பரத்திற்கு ஆகின்ற செலவு, நாடகம் நடத்தி மக்களிடையே இந்தக் கொள்கையை பரப்புவதற்காக ஆகின்ற செலவு இப்படிப் பட்ட பலதரப்பட்ட இனங்களுக்காக வழங்கப்படுகின்ற நிதியைக் குறைத்துவிட்டார்கள். மற்றொன்று எந்த ஒரு மாவட்டத்திலும் அலுவலர்களை அந்தத் துறையிலே நியமிப்பதை இனி நிறுத்தி வைக்க வேண்டும் என்று கேட்டு, அதற்காக ஆகின்ற செலவையும் குறைத்திருக்கிறார்கள். அதற்கு மேல் ஒரு தனிச் செலவு என்ற முறையில் கடந்த 1972-73-ம் ஆண்டில் அறுவை சிகிச்சை செய்து கொண்ட ஆண்களுக்கு ரூ. 100 அளவுக்கு உதவி அளிப்பதற்கு மத்திய அரசாங்கம் முன் வந்தது. அந்த ஆண்டில் 2½ லட்சம், 2¾ லட்சம் தமிழ் நாட்டில் அந்தச் சிகிச்சை முறைப்படி மத்திய அரசு பாராட்டத் தக்க விதத்தில் நல்ல முறையில் நடை பெற்றிருக்கிறது. வேறு பல மாநிலங்களில் பெரிய முகாம்கள் அமைப்பது என்ற பெயரால் ஒவ்வொரு முகாமிலும் 1,000 பேர்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டிருப்பதாகப் புள்ளிவிவரம் மத்திய அரசுக்குக் கிடைத்தது. அதிலே ஏராளமான நிதி விரயம் ஆகிவிட்டது என்ற தவறான சந்தேகம் மத்திய அரசிற்கு ஏற்பட்டு, அகில இந்தியாவிலும் ரூ. 100 கொடுக்கிற முறையை இனி மேற்கொள்வதற்கு இல்லை என்று கூறிவிட்டது.

(முற்பகல் 9-30)

'ஸ்மால் வாசக்டமி' மூலம்தான் நடத்த வேண்டும். அதனால் 100 ரூபாய் தரவேண்டிய அவசியம் இல்லை. அப்படி இருக்கும் போது 35 ரூபாய் அளவுக்குத்தான் மத்திய அரசு உதவி செய்ய

முன்வந்துள்ளது. இந்த மாநில அரசு அதற்குமேல் 45 ரூபாய் ஒதுக்கி அதோடு சமூக நலப் பணியாற்றும் சங்கங்களிடமிருந்தும் உதவி பெற்று இப்படிப்பட்ட திட்டங்களைச் சிறப்பான முறையில் தமிழ்நாடு அரசு நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது. ஆனால் மத்திய அரசு வேறு பல மாநிலங்களில் நடந்த இக்கட்டான நிலைமைகளை மனதிற்கொண்டு, அவர்கள் அளித்துவந்த 100 ரூபாய் திட்டத்தை நிறுத்தியிருக்கிறார்கள். அது உள்ளபடியே நமக்கு நட்டந் தான்.

**திரு. கு. இராசமாணிக்கம் :** தலைவரவர்களே, இந்தக் குடும்ப நலத் திட்டத்தில் வசதி உள்ளவர்கள் அவர்களாகவே அறுவை சிகிச்சை செய்துகொள்கிறார்கள். கீழ் மட்டத்தில் உள்ளவர்கள் குடும்ப நிலையை உணர்ந்து குடும்ப நலத் திட்டத்தில் கலந்து கொண்டு பயனடைகிறார்கள். ஆனால் நடுத்தர வர்க்கத்தினர் மட்டும் எப்படியோ தப்பித்துக்கொண்டு, அதிகக் குழந்தைகள் பெறுவதைத் தடுக்க முடியாமல் இருக்கிறது. எல்லோரும் ஒன்றிரண்டு குழந்தைகள் பெற்ற உடன் குடும்ப நலத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென்று அரசு உத்தரவிடுமா?

அதோடு, இந்தக் குடும்ப நலத் திட்டத்தில் அறுவை சிகிச்சை செய்துகொள்பவர்கள், பின்னால் எனக்குத் திருமணம் ஆகவில்லை, அறுவை சிகிச்சை செய்துகொண்டதால் குழந்தை பிறக்கவில்லை என்று புகார் செய்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் புகார் செய்யாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, இந்த அறுவை சிகிச்சை செய்துகொள்பவர்கள், யாராக இருந்தாலும் முன்னதாகத் தங்களுடைய வயதைச் சொல்லவேண்டும்; திருமணம் ஆனவரா என்ற விபரத்தைச் சொல்ல வேண்டும்; அதற்குப் பின்னால் ஒரு குழந்தை அல்லது இரண்டு குழந்தைகள் இருந்தாலே போதும் என்று சொல்லி, அறுவை சிகிச்சைக்கு ஒப்புதல் தர வேண்டும். அந்த அடிப்படையிலேதான் அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. ஆனால் ஆங்காங்கே இருக்கிற ஒருவர், இருவர் 60 ரூபாய், 100 ரூபாய்க்கு ஆசைப்பட்டு, திருமணம் ஆவதற்கு முன்பே அறுவை சிகிச்சை செய்துவிட்டு பின்னால் குறை கூறுகிறார்கள். இரண்டு லட்சம் பேர் அறுவை சிகிச்சை செய்து கொள்வதில் இப்படி ஒன்றிரண்டு பேர் சொல்கின்ற குறைகளைப் பெரிதாக நாம் எடுத்துக்கொள்ளக் கூடாது. ஆகவே, பத்திரிகைத் துறையினரும் மக்கள் நலனில் அக்கறை கொண்டவர்களும் இப்படிப்பட்ட சிறு சிறு குறைகளைப் பெரிதாக விளம்பரப்



படுத்தாமல், குடும்ப நலத் திட்டத்தின் நோக்கத்தைப் பரப்ப வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் கோடிக்கணக்கான குடும்பங்கள் அறுவை சிகிச்சை செய்து கொள்வதில் இப்படி ஒன்றிரண்டு தவறுகள் நடப்பதுதான் மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்துகிறது.

அதைப்போல, அடித்தளத்தில் இருக்கிற மக்கள் குடும்பத்தின் வறுமை நிலையைக் கருதி, தாங்களாகவே முன்வந்து அறுவை சிகிச்சை செய்துகொள்கிறார்கள். மேல் தட்டில் இருக்கிறவர்கள் தங்களுடைய பொருளாதார வசதி குறையக்கூடாது என்று கருதி செய்துகொள்கிறார்கள். நடுத்தர வர்க்கத்தினர் இந்தத் திட்டத்திலிருந்து தப்பிவிடுகிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அது முழு உண்மையல்ல. சட்டமன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள் போன்றவர்கள் எல்லாம் தான் நடுத்தர வர்க்கத்தினர். அவர்களிலே பலர் இன்றைக்கு அறுவை சிகிச்சை செய்துகொண்டிருக்கிறார்கள். இன்னும் செய்யவில்லை என்றால் அவர்களிடம் நல்ல கருத்தை உருவாக்கும் வகையில் பணிகளைச் செய்ய சட்டமன்ற உறுப்பினர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி. ஆறுமுகம் :** தலைவரவர்களே, இந்தக் குடும்ப நலத் திட்டத்தில் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் மத்திய அரசின் கொள்கையை ஏற்று முறையாகச் செய்துவருகிறது. அதனால் நம்முடைய மாநிலத்தில் நாடாளுமன்ற ஸ்தானங்களில் இரண்டு குறைந்துவிட்டது. ஆகவே, வருங்காலத்தில் மத்திய அரசை வற்புறுத்திக் கூறியாவது, ஏற்கெனவே இருந்த 41 நாடாளுமன்ற ஸ்தானங்களையும் தமிழ்நாட்டுக்குக் கொடுப்பதாக இருந்தால்தான் குடும்ப நலத் திட்டத்தை நடத்த முடியும் என்று நம்முடைய அரசு கேட்டுக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நியாயமான கேள்வியைத்தான் கேட்டிருக்கிறார்கள். ஆனால் அது கேள்வியே தவிர அதற்குள்ள முடிவைக் காலம்தான் பதில் சொல்ல வேண்டும். ஏனென்றால் இந்த அடிப்படையான பிரச்சனை அரசியல் சட்டம் மூலம் தீர்க்கப்பட வேண்டும். தமிழ்நாடு அரசு ஏற்கெனவே இதை வலியுறுத்தியிருக்கிறது. நானும் குடும்ப நலத் திட்டத்தின் சார்பாக மத்திய அமைச்சர் இரண்டாண்டுகளுக்கு முன்னால் கூட்டிய மாநாட்டில் கலந்துகொண்டு, இந்தக் கருத்தை வலியுறுத்தியிருக்கிறேன். ஆனால் நம்முடைய நியாயமான இந்தக் கருத்தை மத்திய அரசு ஏற்றுக்

கொள்ளும் பக்குவமான நிலை தோன்றவில்லை. அதற்காகத் தமிழ்
நாடு அரசு, குடும்ப நலத் திட்டத்தைக் கைவிடுவது என்பது "சீர்
வரிசை கொடுத்தால்தான் திருமணம் செய்துகொள்வேன்" என்று
சொல்வதைப் போன்றதாகத்தான் இருக்கும். ஆகவே,
சீர்வரிசைக்காகக் காத்திருக்காமல், திருமணம் நடைபெறட்டும்;
சீர்வரிசையைப் பற்றி பின்னால் பேசிக்கொள்ளலாம் என்ற
அடிப்படையிலே நாம் குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்தி
வருகிறோம்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவரவர்களே, திருமண வயதை
உயர்த்தினால் குழந்தை பிறப்பது குறையும் என்று சொல்லப்
படுகிறது. ஆகவே, அதைக் கொள்கையாக ஏற்று, மத்திய அரசுக்கு
நம்முடைய அரசு சிபாரிசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, நம்முடைய
நாட்டில் பெண்களுடைய திருமண வயதையும், ஆண்களுடைய
திருமண வயதையும் உயர்த்தினால் கட்டாயம் பிறப்பு விகிதம்
குறையும் என்று கருதி, நாம் இந்தக் கருத்தை மத்திய அரசுக்குத்
தெரிவித்து, அவர்களும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இப்போது
இந்தத் துறைக்கு பொறுப்பேற்றிருக்கிற மத்திய அமைச்சர்
டாக்டர் கரன்சிங் அவர்களும் அதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.
அதன் அடிப்படையில் இப்போது பெண்களின் திருமண வயதை
18 என்றும், ஆண்களின் திருமண வயதை 20 என்றும் உயர்த்த
முடிவு செய்திருக்கிறார்கள். ஆனால் நாம் பெண்களுக்கு 20 என்றும்
ஆண்களுக்கு 22 என்றும் உயர்த்த வேண்டுமென்று சொல்லி
யிருக்கிறோம். ஏனென்றால் இந்தியாவில் குழந்தைகள் பிறந்து,
வளர்ந்து, அவர்களுக்குக் குழந்தை பிறந்து, வளருகின்ற—தலை
முறை தலைமுறையாக வளர்கின்ற இந்த வேகம் உலக நாடுகளைவிட
அதிகம். இந்தக் கருத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்றால்
சட்டத்தின் மூலம்தான் செய்ய வேண்டும். அதற்கு மத்திய அரசு
நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறது.

***134 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு மக்கள்
நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடும்ப நலத் திட்டம் பற்றி தமிழ்நாடு அரசு
தயாரித்துள்ள துண்டுத் திரைப்படங்கள் பற்றிய விவரம் என்ன?

(இ) இப்படங்களை தமிழகத்தின் திரைப்படக் கொட்டகை
களில் திரையிட ஏற்பாடு செய்யும் திட்டம் உண்டா?



**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அதைப்பற்றிய விவர
அறிக்கை @ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, தமிழ்நாடு அரசு
இதுபோன்ற சுவையான துண்டுப் படங்களை குடும்ப நலத்
திட்டத்திற்காக வெளியிட்டிருந்தாலும், பரவலாக எல்லா சினிமா
கொட்டகைகளிலும் மந்தகாசத்தை ஊட்டுகின்ற சோப்பு
விளம்பரங்கள், மற்றும் ஃபோம் படுக்கை விளம்பரங்கள்
போன்றவைகளைக் காட்டுவதால் குடும்ப நலத் திட்டத்திற்கு உரிய
பலன் கிடைக்கவில்லை. ஆகவே, எல்லாத் திரையரங்குகளிலும்
வாரம் ஒருமுறையாவது குடும்ப நலத் திட்ட துண்டுப் படங்களை
காட்ட வேண்டுமென்று அரசு உத்தரவு பிறப்பிக்குமா என்று
அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, ஏற்கெனவே
5 நிமிடம், 10 நிமிடங்கள் ஓடக்கூடிய 3 படங்கள் தயாரிக்கப்பட்டு
அவை மத்திய அரசின் சார்பில் படங்கள் வெளியிடுகின்ற
துறையின் மூலம் இதையும் மற்ற முழு நீளப் படங்களுடன்
சேர்த்துக் காண்பிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.
அவை ரொட்டேஷன் முறையில் திரையரங்குகளில் காட்டப்படும்.
குடும்ப நலத் திட்டத்திற்காக தயாரிக்கப்பட்ட இன்னொரு படம்
'வள்ளுவர் வாக்கு' என்பது. இது 35 நிமிடம் ஓடக்கூடியது
அதனால் இந்தப் படத்தை மற்றப் படங்களுடன் இணைத்து
வெளியிடுவதற்கு வாய்ப்பு இல்லை. இந்தப் படத்தை கிராமத்து
மக்களுக்குத் தனியாகக் காட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

சோப்பு, படுக்கைகள் போன்ற விளம்பரங்கள் இந்தப்
படங்களைப் போன்றவை அல்ல. அவை மிகக் குறைந்த நேரத்தில்
ஒன்றிரண்டு காட்சியோடு முடிந்துவிடுபவை. ஆனால் குடும்ப நலத்
திட்டத்தை சில காட்சிகள் மூலம்தான் விளக்க முடியும். ஆகவே
தான் 5, 10 நிமிடங்கள் ஓடக்கூடிய படங்களை மற்ற படங்களுடன்
அவ்வளவு சுலபமாக இணைத்துக் காட்ட முடியவில்லை; முடிந்த
அளவுக்கு காட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. கு. காமாட்சி :** தலைவரவர்களே, இந்தத் திரைப்படங்களை
எடுக்கும்போது, மக்களை ஊக்குவிக்கும் வகையில் இங்கே இருக்கிற
சட்டமன்ற உறுப்பினர்களில் யாராவது அறுவை சிகிச்சை

---

@ 232-236 பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்
பட்டுள்ளது.

செய்திருந்தால் அவர்கள், அமைச்சர்கள்—குறிப்பாக நம்முடைய துணைச் சபாநாயகர் கூட இப்போது அறுவை சிகிச்சை செய்து கொண்டிருப்பதாக கேள்விப்படுகிறேன்—ஆகியோர் அறுவை சிகிச்சை செய்துகொண்டிருப்பதைத் திரைப்படங்களில் காட்டி விட்டு, மக்களுக்கு இந்தத் திட்டத்தை ஊக்குவிக்கும் முயற்சி மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அது அங்கங்கே நடைபெறுகிற நிகழ்ச்சியில் பேசப்படுகிறது. அந்த முறையில் துணைச் சபாநாயகர் பலமுறை கூறப்படுவார் என்று நம்புகிறேன். இதுவே பத்தாண்டுகளுக்கு முன்னாலே வியப்புக்குரிய காரியமாகக் கருதப் பட்டது. இப்போது வியப்புக்குரிய காரியம் அல்ல. சர்வ சாதாரணமாக நடைபெறுகிறது. சர்வ சாதாரணமான ஒரு காரியத்தைத்தான் அவர் செய்து கொண்டார் என்பது கூட பெருமை அல்ல என்ற அளவுக்கு இருக்கும். சினிமாவில் நடிப்பது அவ்வளவு எளிதாக இருக்காது. செய்திப் படங்களில் அவர் தம் கருத்தை எடுத்துச் சொல்கிற முறையில் இடம் பெறலாம். வானொலியில் பேசச் சொல்லலாம். அவர் பேச விரும்பினால் அதற்கு ஏற்பாடு செய்யலாம்.

**திரு. கோ. இளங்கோவன் :** துண்டுப் படங்களைத் திரைக் கொட்டகையில் காட்ட முடியாது என்று சொன்னார்கள். இதுபற்றிய இசைத் தட்டுக்களையாவது வெளியிட அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** வானொலியைச் சேர்ந்தவர்களும், சில தனியார்களும் இதுபற்றி சிறந்த பாடல்களை எழுதி இசைத்தட்டுகள் தயாரிக்கப்படுகின்றன. ஆனால் அவற்றை திரைக் கொட்டகைகளில் எந்த அளவிற்குப் பயன்படுத்த முடியும் என்று தெரியவில்லை. விரும்பினால் பயன்படுத்தலாம்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** மக்கள் அதிகமாகச் சினிமா பார்ப்பதை விரும்புகிறார்கள். ஒவ்வொரு சினிமாப் படத்திலும் ஒரு காட்சி குடும்பக் கட்டுப்பாடு பற்றி நடித்துக்காட்ட வேண்டுமென்று தயாரிப்பாளர்களிடம் சொல்லி அம்மாதிரியான படத்தை வெளியிட அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** நல்ல கதை கட்டுக்கோப்பான அமைப்புடன் வந்தால்தான் அதுபோன்ற படங்கள் எளிதில் வர முடியும். இல்லாவிடில் படத்தின் சுவையை அது ஓரளவு குறைக்கக் கூடியதாக அமையும். அரங்கேற்றம் போன்ற படம் மிக உயர்ந்த



வகையில் எடுக்கப்பட்டு—குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தமான நல்ல பிரச்சாரப் பணியையும் செய்யக்கூடிய வகையில் அமைந்திருக் கிறது. அரங்கேற்றம் போன்ற படம் வந்தால் அதை அரசாங்கம் வரவேற்றுப் பாராட்டும்.

**திரு. துரைமுருகன் :** குடும்பக் கட்டுப்பாடு பற்றி சினிமாப் படங்கள் மூலமாகப் பிரச்சாரம் செய்வதோடு—குசேலோ பாக்கியானம் கூட 27 பிள்ளையைப் பெற்ற ஒருவரது கதை யானதால் கதாகாலக்ஷேபம் மூலமாக இதைப் பிரச்சாரம் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** குசேலர் பட்ட கஷ்டம் மற்றவர்களுக்குப் புரிந்திருக்கலாம். குடும்பக் கட்டுப்பாடு பிரச்சாரத்திற்கு அது எவ்வளவுதூரம் பயன்படும் என்பது வேறு விஷயம். ஒரு பிடி அவலை கிருஷ்ணனிடம் கொடுத்தவுடன் அவர் கடைசியாக உதவிக்கு வந்தபடி கதை முடிவதால் அது போல பத்து, ஒன்பது பெற்றவர்கள் கூட கிருஷ்ணபரமாத்மாபோல தமக்கு யாராவது உதவிக்கு வரக்கூடும் என்று எதிர்பார்க்கிற நிலைதான் ஏற்படும். காலத்திற்கு, சமுதாயத்திற்கு ஏற்றாற்போல கலைவாணர்—நந்தனார் கதையை கிந்தனார் கதையாக மாற்றி நடித்துக்காட்டியதைப்போல—நல்ல அறிவை உள்ளடக்கி— குரலிலே நயமும்—அடுக்கடுக்காக மேலும் மேலும் பேசும் ஆற்றல் கொண்ட திரு. துரைமுருகன் அவர்கள் அந்தப் பணியை மேற்கொள்வார்களேயானால் சட்டசபை அங்கத்தினர் சார்பாகவே நடத்தலாம் என்று விரும்புகிறேன்.

*Assistance for passing Chartered Accountant Courses*

*135 *Q.*—THIRU M. MUTHIAH
THIRU N. K. PALANISAMY : Will the Hon the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether any assistance is being given to the students belonging to the Backward Classes, Depressed Classes for undergoing training in Chartered Accountancy; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (அ) ஆம்.

(இ) தாழ்த்தப்பட்ட மற்றும் மலைசாதி வகுப்பைச்சார்ந்த பத்து மாணவர்களுக்கும் மற்றும் பிற்பட்டோர் மற்றும் பட்டியலி லிருந்து நீக்கப்பட்ட வகுப்பைச் சார்ந்த முப்பது மாணவர்

[1974 டிசம்பர் 20

களுக்கும் சார்ட்டர்டு அக்கௌண்டன்ட் பயிற்சிக்கான உதவித் தொகை வழங்க 1972-73 ஆண்டுகளில் அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது.

**திரு. எஸ். கே. சுப்பிரமணியம் :** உதவித்தொகை கொடுப்பதில் ஹாஸ்டலில் தங்கிப் படிக்கிற பையன்களுக்கு எவ்வளவு பணம் கொடுக்கப்படுகிறது? வெளியில் இருந்து வந்து படிக்கிற மாணவனுக்கு எவ்வளவு பணம் கொடுக்கப்படுகிறது?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** ஒரு நபருக்கு ஆண்டொன்றுக்கு ஹாஸ்டலில் தங்கிப் படிக்கிறவருக்கு ரூ. 1,027-ம், வெளியில் இருந்து வந்து படிக்கிறவருக்கு ரூ. 487-ம் தரப்படுகிறது.

**திரு. ஆ. பரந்தாமன் :** சென்னையிலே சில சார்டர்ட் அக்கௌண்டன்ட்ஸ் இருக்கிறார்கள். அவர்களிடத்தில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் யாரும் பயிற்சி பெறுவதில்லை. குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவர்களேதான் அங்கே பயிற்சி பெற முடிகிறது. ஆகவே, கட்டாயமாக ஒவ்வொரு சார்ட்டர்டு அக்கௌண்டன்டும் தம்மிடம் இவ்வளவு சதவிகிதம் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களை சேர்த்துக் கொண்டு பயிற்சி அளித்தாகவேண்டும் என அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் தெரிவித்த திட்டம் நம்மால் முடியுமா என்பது ஐயப்பாட்டிற்கு உரியதாகும்.

### சாந்தவேளூர் ஏரி

***136 வினா—திரு. ஆ. பரந்தாமன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் உள்ள சாந்தவேளூர் ஏரிக் கரையை வலுப்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 33,000. இது 236.34 ஏக்கர் நிலங்கள் பாசன உறுதிபெறும். இத்திட்ட வேலை நடைபெற்று வருகின்றது.



1974 டிசம்பர் 20]

### சென்னுவரம் ஏரி

***137 வினா—திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தாலுக்கா சென்னுவரம் ஏரியைப் பராமரித்து அதன் கரைகளை வலுப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ. 24,500 செலவில் ஜூன் 1974-ல் தல செயற் பொறியாளரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**திரு. கே. வகாப்:** அது அங்கீகரிக்கப்பட்டு, வேலையும் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுவந்தாலும், அது மறுபடியும் நிறுத்தப்பட்டுவிட்டது. காரணம் கேட்டால் பொருளாதாரம் இல்லையென்று சொல்லப்படுகிறது. உடனடியாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய பணவசதியைச் செய்து கொடுப்பதோடு வந்தவாசி, செய்யாறு போன்ற இடங்களில் வறட்சி நிவாரணப்பணியாக இருக்கக்கூடிய ஏரிகளை எல்லாம் சர்வே செய்து பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அந்த வேலை நிறுத்தப்பட்ட விவரம் எனக்குத் தெரியாது. என் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டிருப்பதால் உடனே நான் அதுபற்றி கவனம் செலுத்துகிறேன். வடாற்காடு மட்டுமல்ல—தமிழகத்திலுள்ள எல்லா ஏரிகளையுமே—நூறு ஏக்கரா பாசனம் இருந்தாலும் ஸ்டாண்டர்டுக்குக் கொண்டு வரவேண்டுமென்று ஒரு திட்டம் வகுக்கப்பட்டு அதற்காக 1½ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த வேலை ஆரம்பமாக இருக்கிறது.

### வெங்கட்டங்குறிச்சி கண்மாய்

***138 வினா—திரு. தொ. க. சிறைமீட்டான் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், வெங்கட்டங்குறிச்சி கண்மாய், கால்வாய் மராமத்து செய்யும் செயற்குறிப்பு உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கும்?

[1974 டிசம்பர் 20

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) இந்தத் திட்டத்திற்கான தீர்வான மதிப்பீடு தலைப் பொறியாளர்களால் தயார் செய்யப்பட்டு வருகிறது.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை. ஏனெனில், இத்திட்டத்திற்காக மதிப்பீடு இன்னும் அரசின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

**திரு. தொ. க. சிறைமீட்டான்:** ஜமீன் காலத்திலிருந்தே பல கண்மாய்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் மராமத்து செய்யப்படாமல் இருக்கின்றன. குறிப்பாக, வெங்கட்டங்குறிச்சி கண்மாய் ஜமீன் காலத்திற்குப் பிறகு மராமத்து செய்யப்படவில்லை— கரைகள் உடைந்து பாசனத்திற்குக் கூடத் தண்ணீர் வருவதில்லை. வறட்சி நிவாரணப் பணிகளை எடுத்துச் செய்கிறபோது இந்தக் கண்மாயையும் மராமத்து செய்துகொடுக்க அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இத்திட்டத்திற்கு ஏறக்குறைய 2.15 லட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அங்கத்தினர் குறிப்பிடுவதைப்போன்று இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து வறட்சி நிவாரணப் பணிகளை எடுத்துக்கொள்ளும்போதே இதை எடுத்துக்கொள்ளலாமா என்பதை யோசிப்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### டிராக்டர்கள் உற்பத்தி

***139 வினா—திரு. த. சோனையா:** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்குசன் டிராக்டர்கள் தமிழ்நாட்டில் உற்பத்தி ஆகிறதா?

(இ) ஆம் எனில், ஆண்டொன்றுக்கு எத்தனை உற்பத்தி செய்யப்படுகிறது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) ஆம்.

(இ) ஆண்டொன்றுக்கு சுமார் 7,000 ட்ராக்டர்கள் உற்பத்தி செய்யக்கூடிய ட்ராக்டர்ஸ் அண்ட் பார்ம் எக்விப்மெண்ட் என்ற தொழில் நிறுவனம் 1961-ம் ஆண்டு உற்பத்தி செய்யத் தொடங்கியது. 1971-ம் ஆண்டில்தான் உயர்ந்த அளவுக்கு (சுமார் 4,804) ட்ராக்டர்களை இந்த நிறுவனம் உற்பத்தி செய்தது தற்சமயம் ஆண்டிற்கு சுமார் 2,000 ட்ராக்டர்கள்தான் உற்பத்தி செய்யப்படுகின்றன.



**திரு. நா. வீராசாமி:** ஆண்டொன்றுக்கு ஏழாயிரம் டிராக்டர்கள் தயாரிக்கக்கூடிய வசதி இருந்தும் இப்போது இரண்டாயிரம்தான் தயாரிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். இன்றைக்கு நாட்டில் பர்கூசான் டிராக்டருக்குத்தான் நிறைய கிராக்கி இருக்கிறது. இவற்றை மற்ற மாநிலங்களுக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். நம் நாட்டு விவசாயிகளுடைய தேவையைக் கருத்தில்கொண்டு அதிக டிராக்டர்கள் ஒதுக்குவார்களா? அல்லது ஏழாயிரம் அளவுக்கு இதன் உற்பத்தியையாவது அதிகப்படுத்த நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அதிக உற்பத்தி செய்ய வேண்டுமென்று ஆலோசனை கூறலாம். நம்முடைய மாநிலத்திற்கு மட்டும் என்று எடுத்துச் சொல்கின்ற அதிகாரம் நம்மிடத்திலே இல்லை.

**திரு. கே. எ. வகாப்:** தலைவரவர்களே, 7,000 டிராக்டர்கள் தயாரிக்கக்கூடிய, தொழிற்சாலை ஏன். 2,000 டிராக்டர்கள்தான் தயாரிக்கிற நிலைமை இருக்கிறது? அதற்குக் காரணமான பிரச்னை தொழிலாளர்களுடையதா? அல்லது முதலாளிகளே, டிமாண்ட் ஏற்பட அப்படிக் குறைத்துத் தயார் செய்கிறார்களா? இதை அரசுக் கண்காணித்து அதிகமாக உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அதற்குப் பலவிதமான காரணங்கள் சொல்லப்படுகின்றன. சில ஆண்டுகளிலே, குறிப்பாக, 1971-ம் ஆண்டு 4,000-க்கும் மேலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, தொழிலாளர்களும், முதலாளிகளும் சேர்ந்தால் நல்ல உற்பத்தி கிடைக்கும் என்பதுதான் தெரிய வருகிறது.

**திரு. சி. ஆறுமுகம்:** தலைவரவர்களே, சிம்சன் கம்பெனி தயாரிக்கின்ற இந்த பெர்கூசன் டிராக்டர்கள் கடந்த 5 ஆண்டு காலமாக, தமிழ்நாட்டில், எப்படிப்பட்ட விவசாய மக்களுக்கும் கிடைக்கவில்லையென்று பெருத்த புகார்கள் இருந்து கொண்டிருக்கின்றன. பணம் கட்டுகிறவர்கள் எல்லாம் எங்களைப் பார்த்து;

[1974 டிசம்பர் 20

எங்கே போய் வாங்குவது என்று தெரியாமல் வருத்தப்படுகிருர்கள். நம்முடைய நாட்டுக்கு ஃபெர்கூசன் டிராக்டர்கள் விற்கின்றவர்கள் யார், அவர்கள் அரசு உதவி பெற்றவர்களா? அல்லது அரசுக்குத் தெரியாதவர்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நம்முடைய மாநில அரசுக்கும் இதற்கும் சம்பந்தம் கிடையாது. யார் யாருக்கு எவ்வளவு கொடுக்கப்படுகிறது என்ற விவரத்தை வேளாண்மைத் துறையிலே கேட்கவேண்டும்.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, அந்தக் கம்பெனியை வற்புறுத்துகின்ற அதிகாரம் நமக்கில்லையென்று சொன்னாலும், இப்பொழுது, ஆண்டு ஒன்றுக்கு 2,000 டிராக்டர்கள் உற்பத்தியாகின்றன. ஆனால், ஆறுமுகம் சொன்னதைப் போல் அவர்கள் இங்கே ஏஜன்ஸியை வைத்து விநியோகிப்பதற்கு முதலிலே ஏற்பாடு செய்தார்கள். அந்த ஏஜன்ஸீ எடுத்தவர்கள் இதனை விற்கக் கூடாது என்று இன்னொருவர் கோர்ட்டுக்குப் போய் ஸ்டே வாங்கி இரண்டு மூன்று ஆண்டுகள் அந்த ஃபெர்க்கூசன் டிராக்டர்கள் வாங்க வழியில்லாமல் போய்விட்டது. இப்பொழுது, அந்த டிராக்டருக்கு நிரம்ப டிமாண்ட் இருக்கிறது. விவசாயிகள் ஃபெர்கூசன் டிராக்டர்கள்தான் வேண்டுமென்று வட ஆற்காடு, தென்னாற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில், நிலத்திற்கு ஏற்றவகையிலே வேண்டுமென்று வற்புறுத்துகிருர்கள். இங்குதான் அவற்றை விற்கவேண்டுமென்று சொல்கின்ற அதிகாரம் நமக்கில்லாவிட்டாலும் அந்தக் கம்பெனிக்காரர்களைக் கலந்து, கொஞ்சம் கேட்டுக் கொண்டாவது நம்முடைய மாநிலத்திற்கு அதிக டிராக்டர்கள் வழங்கவேண்டுமென்று யோசனையாவது சொல்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்த நல்ல யோசனை பரிசீலிக்கப்படும்.

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவர்வர்களே, எதிர் காலத்தில் விவசாயிகளுக்கு இப்படிப்பட்ட டிராக்டர்கள் அதிகமாகத் தேவைப்பட இருக்கிற காரணத்திஞல், தனிப்பட்டவர்கள் இந்த டிராக்டர்களை உற்பத்தி செய்வதற்குத் தொழிற்சாலை வைப்பதற்கு முன்வந்தால், அவர்களுக்கு அரசு உதவி செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



61680

1974 டிசம்பர் 20]

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நிச்சயம் முன்வரும்.

**திரு. எஸ். நல்லசாமி:** தலைவரவர்களே, சிறிய விவசாயிகள்— [illegible] டிராக்டர்களை நிலச்சீர்திருத்தம் செய்துவிட்டதன் [illegible] லவாகிறது. வைத்து விவசாயம் செய்வதற்கு அதிக[illegible] 15 ஹார்ஸ் பவர், 10 ஹார்ஸ் பவர் டிராக்டர்கள் உற்பத்தியாவது இல்லை. யூ.எஸ்.எஸ்.ஆர்-லிருந்து வந்துள்ள 14 ஹார்ஸ் பவர் டிராக்டர்களைபோல் சின்ன விவசாயிகளுக்குச் சிறிய டிராக்டர்களை உற்பத்தி செய்ய அரசாங்கம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

V211,31 N74

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** டிராக்டர்கள் வழங்குவது பற்றி என்னிடத்திலே விவரம் இருக்காது. வேளாண்மைத் துறையிடத்திலேதான் கேட்கவேண்டும். சிறிய டிராக்டர்கள் உற்பத்திபற்றி என்னிடத்திலே தகவல் இல்லை.

3,N75.61

**திரு. ஏ. எம். இராஜா:** தலைவரவர்களே, இந்த ஃபாக்டரி முழு உற்பத்தி செய்தால், 7,000 உற்பத்தியாகும். ஆனால், தற்பொழுது 2,000 தான் உற்பத்தி செய்யப்படுகிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். மானேஜ்மென்ட்டுக்கும், தொழிலாளர்களுக்கும் நல்ல சுமுகமான நிலை நிலவியதன் காரணமாக, 4,000-க்கு மேற்பட்ட டிராக்டர்கள் உற்பத்தி செய்ததாகக் குறிப்பிட்டார்கள். அதிகமாக உற்பத்தியானுல் விலைகள் குறையும். இப்பொழுது ஃபெர்கூசன் டிராக்டர்கள் அதிகமான விலைக்கு விற்கப்படுகிறது. எப்பொழுதுமே டிமாண்டிலே வைத்துக்கொண்டு இருக்க வேண்டுமென்று அதன் காரணமாகக் குறைத்து உற்பத்தி செய்து கொண்டிருக்கிருர்கள். அரசு கூறுகின்ற ஆலோசனையை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் கிடையாது, தொழிற்சாலை சட்டங்களின்படி. ஆகவே, நம்முடைய ஆலோசனைகளை அவர்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டால், நம்முடைய அரசே அந்த ஃபாக்டரியை எடுத்துக் கொண்டு, மக்களுக்கு உற்பத்தி செய்ய முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இது பெரிய கொள்கைப் பிரச்னை. நான் கேள்வி நேரத்திலே முடிவு சொல்ல முடியாது.

**திரு. சி. ஆறுமுகம்:** நம்முடைய இராஜா குறிப்பிட்டதைப் போல், தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும் ஃபெர்கூசன் இன்றியமையாத ஒன்ருகும். அதிலே 15 ஏக்கர் அளவுக்கு ஒரு நாளுக்கு உழமுடியும். ஆகவே, எப்படி மேட்டூர் அலுமினியத்

[1974 டிசம்பர் 20

தொழிற்சாலையைத் தேசிய உடைமையாக்கியதோ, அதே முறையிலே இந்தத் தொழிற்சாலையைத் தேச உடைமையாக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஏற்கனவே பதில் சொல்லி விட்டேன்.

*Scheme for development of sericulture*

***140 Q.**—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal pending with the Government of India regarding the implementation of Mulberry Scheme in Dharmapuri district; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தர்மபுரி மாவட்டத்திலும் மற்ற மாவட்டங்களிலும் பட்டுத்தொழில் மேம்பாட்டிற்காக ரூபாய் 406.72 லட்சம் மத்திய அரசாங்கச் செலவில் ஐந்தாவது ஐந்தாண்டு திட்டக்காலத்தில் செயல்பட விரைவுத்திட்டம் ஒன்றை இந்த அரசு மத்திய அரசின் பரிசீலனைக்கு அனுப்பியதை அந்த அரசு பரிசீலித்து வருகிறது.

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவரவர்களே, இந்தப் பட்டுத் தொழிற்சாலை ஏற்படுவதற்குச் சில திட்டங்களை தர்மபுரிக்கும் மற்ற மாவட்டங்களுக்கும் அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதில் வட ஆற்காடு மாவட்டத்திற்கு எவ்வளவு ஒதுக்கப்படுகிறது, எந்த இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மாவட்டவாரியாக அந்தப் புள்ளி விவரம் இல்லை. வட ஆற்காடு மாவட்டத்திலே, ஆரணி பகுதியிலே அந்த முயற்சியை எடுக்கலாம் என்ற குறிப்பு இருக்கிறது.

**திரு. ஏ. ஆர். சுப்பையா:** இந்தத் திட்டம் மத்திய அரசுக்கு எப்பொழுது அனுப்பப்பட்டது? தாமதத்திற்குக் காரணம் என்ன?



1974 டிசம்பர் 20]

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தேதி என்னிடத்திலே இல்லை. இது சம்பந்தமாக சில்க் போர்ட் தலைவர் அவர்கள் நம்மிடத்திலே விவாதித்திருக்கிறார்கள். விரைவிலே கவனிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. கே. எ. வகாப்:** தலைவரவர்களே, இந்த முசுக்கட்டைச் செடி வளர்ப்பது சம்பந்தமாக முதலிலே இலாபமாக இருந்தாலே அவர்கள் தொடங்கி ஆரம்பித்தார்கள். ஆனால், பட்டின்விலை இன்றைக்குக் குறைந்திருக்கிற காரணத்தினால் விவசாயிகள் ஊக்கமில்லாமல், அவர்களெல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தத் திட்டமே தோல்வி அடைந்துவிடுமோ என்ற நிலைமையிருக்கிறது. ஆகவே, இதைப் பற்றி மறுபரிசீலனை அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** பட்டின்விலை குறைவது நல்லதுதான் என்று கருதுகிறேன். அதனால், விவசாயிகளுக்குக் கிடைக்கிற வருமானம் குறையாது. ஆனால், திடீரென்று விலை ஏறுவதால் பெங்களூரிலே, மைசூர் மாநிலத்திலே ஏதாவது நடந்துவிட்டால், அதையொட்டி இங்கே விலை ஏறுகிறது. அது, இந்த விலைக்குறைவால் தடுக்கப்படுகிறது. நியாயமாக விற்கப்படுமானால், பட்டு உற்பத்தியாளர்களுக்கும் நியாயமான விலை கிடைக்கிறது என்பதுதான் நம்முடைய அனுபவம்.

**கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் பங்குத்தொகை பிடித்தம்**

***141 வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு கொடுக்கும் விவசாயிகளிடம் டன் ஒன்றுக்கு ரூ. 3.50 வீதம் பிடித்தம் செய்துவந்தது நிறுத்தப்பட்டுவிட்டதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** பங்குத் தொகை வளர்ச்சிக்காக நேஷனல், கள்ளக்குறிச்சி, சேலம் (மோகனூர்) தர்மபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் திருப்பித்தரப்படாத வைப்புத்தொகை பிடிக்கப்படுகிறது. மதுராந்தகம், ஆம்பூர், அமராவதி ஆலைகள் இந்திய தொழில் முதலீட்டு கழகத்தில் வாங்கிய கடனை அடைத்து விட்டதால் திருப்பித்தரப் படாத வைப்புத்தொகை பிடிப்பதை நிறுத்தி விட்டன.

**திரு. எஸ். முருகையன் :** தலைவரவர்களே, விவசாயிகளிடமிருந்து டன் ஒன்றுக்கு ரூ. 3½ வீதம் பிடிக்கப்படுகிறது. விவசாயி களிடமிருந்து எவ்வளவு பணம் கரும்பு கொடுத்ததற்காகப் பிடிக் கிறார்கள் என்ற கணக்கை ஒவ்வொரு ஆண்டும் அந்த ஆலைகள் கொடுக்கவேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிடுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இப்பொழுதும் அவர்கள் எவ்வளவு பணம் பிடிக்கிறார்கள், பிடித்த பணத்தை ஐ.எப். சிக்குக் கொடுக்கிறார்களா என்ற புள்ளிவிவரம் எல்லாம் கொடுக்கப் படுகிறது.

*Successful candidates from Schools of Arts and Crafts*

* 142 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of candidates passed out from the Schools of Arts and Crafts who have registered their names with the Employment Exchanges in the State as on first July, 1973; and

(*b*) the steps taken by the Government to provide them employment?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) 25.

(இ) பொதுவாக வேலைவாய்ப்பு அலுவலகங்கள், எவ்வெப் பொழுது வேலையளிப்போருக்குத் தேவைப்படுகிறதோ அப்பொழு தெல்லாம் தன்னிடம் பதிவு செய்திருக்கும் இப்படிப்பட்ட விண்ணப்பதாரர்களின் பெயர்களை சிபாரிசு செய்து அனுப்புகிறது. இதன் விளைவாக 1—7—1973 லிருந்து இருவர் பணியில் அமர்த்தப் பட்டுள்ளனர்.

**திரு. கே. எ. வஹாப்:** தலைவரவர்களே, இந்த வேலை வாய்ப்பு வாங்கித்தரும் நிலையங்களைப்பற்றி முன்பே இங்கே ஒரு குறை எழுப்பப்பட்டது. மூன்று மாதத்திற்கு ஒரு முறை ரின்யூவல் செய்யவேண்டுமென்றிருக்கிறது. அந்தக் காலத்தை அதிகமாக நீட்டி, வருடத்திற்கு ஒரு முறை அல்லது 6 மாதத்திற்கு ஒரு முறை என்று வைத்தால், அதனால் இன்னல்கள் போகும். ஆகவே, தலைவரவர்களே, அந்த இன்னல்களைப் போக்க அரசு ஆலோசிக்குமா என அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அதை ஏற்கனவே பரிசீலிப் பதாக உறுதி தரப்பட்டிருக்கிறது.



*Settlement of labour disputes in Central Government Undertakings*

* 143 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the State Government have urged the Government of India in recent times to transfer the power to deal with Labour Disputes in Government of India Undertakings to the State Labour Department;

(*b*) if so, any reply has been received from them; and

(*c*) the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) ஆம்.

(இ), (உ) 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத் தின் 2 (அ) பிரிவை, அதாவது "பொருத்தமான அரசு" என்னும் சொற்றொடரைத் திருத்தியமைக்குமாறு 1970 ஆகஸ்ட் திங்களில் இந்திய அரசு எழுதிக் கேட்டுக் கொள்ளப்பட்டது. இதன் மூலம் மைய அரசுத்துறை பணியாளர் அமைப்பில் ஏற்படும் தகராறு களுக்கு மிக விரைவிலும், மனநிறைவளிக்கும் வகையிலும் மாநில அரசுகள் தீர்வு காண இயலும்.

தொழில் உறவுகள் குறித்து உத்தேசிக்கப்பட்டுள்ள அடங்கல் சட்டம் தொடர்பாக, 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்திலுள்ள "பொறுத்தமான அரசு" என்னும் சொற்றொட ரின் பொருள் விளக்கத்தைத் திருத்தியமைப்பது பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்று இந்திய அரசு தெரிவித்துள்ளது. தொழில் உறவுகள் குறித்த அடங்கல் சட்டத்தைக் கொண்டு வருவதில் தாமதம் இருக்கக் கூடுமாயின் 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தினைத் திருத்துமாறு 1974 அக்டோபரில் இந்திய அரசு மீண்டும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

(முற்பகல் 10-00)

**திரு. சு. துரைசாமி :** தலைவர் அவர்களே, மத்திய அரசாங் கத்தைச் சேர்ந்த தொழில் நிறுவனங்கள்—நெய்வேலி நிலக்கரி சுரங்கம் போன்ற தொழில்நிறுவனங்கள்—மத்திய அரசாங்கத்தின் நிர்வாகத்திலிருக்கிற நிறுவனங்கள் பொறுத்தவரையில் அங்கே தொழிலாளர்களுடைய குறைபாடுகள் இருந்தால் அதை தொழி லாளர் துறையின் சார்பில் முடிப்பதற்கு மத்திய அரசாங்கத்தி

[1974 டிசம்பர் 20

**திரு. எஸ். முருகையன் :** தலைவரவர்களே, விவசாயிகளிடமிருந்து டன் ஒன்றுக்கு ரூ. 3½ வீதம் பிடிக்கப்படுகிறது. விவசாயி களிடமிருந்து எவ்வளவு பணம் கரும்பு கொடுத்தற்காகப் பிடிக் கிறார்கள் என்ற கணக்கை ஒவ்வொரு ஆண்டும் அந்த ஆலைகள் கொடுக்கவேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிடுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இப்பொழுதும் அவர்கள் எவ்வளவு பணம் பிடிக்கிறார்கள், பிடித்த பணத்தை ஐ.எப். சிக்குக் கொடுக்கிறார்களா என்ற புள்ளிவிவரம் எல்லாம் கொடுக்கப் படுகிறது.

*Successful candidates from Schools of Arts and Crafts*

* 142 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of candidates passed out from the Schools of Arts and Crafts who have registered their names with the Employment Exchanges in the State as on first July, 1973; and

(b) the steps taken by the Government to provide them employment?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) 25.

(இ) பொதுவாக வேலைவாய்ப்பு அலுவலகங்கள், எவ்வெப் பொழுது வேலையளிப்போருக்குத் தேவைப்படுகிறதோ அப்பொழு தெல்லாம் தன்னிடம் பதிவு செய்திருக்கும் இப்படிப்பட்ட விண்ணப்பதாரர்களின் பெயர்களை சிபாரிசு செய்து அனுப்புகிறது. இதன் விளைவாக 1—7—1973 லிருந்து இருவர் பணியில் அமர்ந்தப் பட்டுள்ளனர்.

**திரு. கே. எ. வஹாப்:** தலைவரவர்களே, இந்த வேலை வாய்ப்பு வாங்கித்தரும் நிலையங்களைப்பற்றி முன்பே இங்கே ஒரு குறை எழுப்பப்பட்டது. மூன்று மாதத்திற்கு ஒரு முறை அவர்கள் ரின்யூவல் செய்யவேண்டுமென்றிருக்கிறது. அந்தக் 'காலத்தை அதிகமாக நீட்டி, வருடத்திற்கு ஒரு முறை அல்லது 6 மாதத்திற்கு ஒரு முறை என்று வைத்தால், அதனால் தலைவரவர்களே, சில இன்னல்கள் போகும். ஆகவே, அந்த இன்னல்களைப் போக்க அரசு ஆலோசிக்குமா என அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அதை எற்கனவே பரிசீலிப் பதாக உறுதி தரப்பட்டிருக்கிறது.



1974 டிசம்பர் 20]

*Settlement of labour disputes in Central Government Undertakings*

* 143 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the State Government have urged the Government of India in recent times to transfer the power to deal with Labour Disputes in Government of India Undertakings to the State Labour Department;

(b) if so, any reply has been received from them; and

(c) the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) ஆம்.

(இ), (உ) 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத் தின் 2 (அ) பிரிவை, அதாவது "பொருத்தமான அரசு" என்னும் சொற்றொடரைத் திருத்தியமைக்குமாறு 1970 ஆகஸ்ட் திங்களில் இந்திய அரசு எழுதிக் கேட்டுக் கொள்ளப்பட்டது. இதன் மூலம் மைய அரசுத்துறை பணியாளர் அமைப்பில் ஏற்படும் தகராறு களுக்கு மிக விரைவிலும், மனநிறைவளிக்கும் வகையிலும் மாநில அரசுகள் தீர்வு காண இயலும்.

தொழில் உறவுகள் குறித்து உத்தேசிக்கப்பட்டுள்ள அடங்கல் சட்டம் தொடர்பாக, 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்திலுள்ள "பொறுத்தமான அரசு" என்னும் சொற்றொட ரின் பொருள் விளக்கத்தைத் திருத்தியமைப்பது பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்று இந்திய அரசு தெரிவித்துள்ளது. தொழில் உறவுகள் குறித்த அடங்கல் சட்டத்தைக் கொண்டு வருவதில் தாமதம் இருக்கக் கூடுமாயின் 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தினைத் திருத்துமாறு 1974 அக்டோபரில் இந்திய அரசு மீண்டும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

(2) "பிடிட்யூருஸ்" சமூக நல நிலையம், சென்னை.

(3) ஹோலி பேமலி ஹான்ஸ்சனநோரியம், பாத்திமா நகர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

(4) புனித அந்தோனி நிலையம், ராவுத்தா குப்பம், தென் ஆர்க்காடு மாவட்டம்.

(5) சர்ச் ஆப் கிறிஸ்டியன் மிஷின் மருத்துவமனை அண்டு தொழுநோய் சிகிச்சை நிலையம், மதுராந்தகம், செங்கல்பட்டு மாவட்டம்.

(6) எலெப் தொழுநோய் தடுப்பு திட்டம், தர்மபுரி.

(7) ஸ்கேப்லின் தொழுநோய் ரிசர்ச் சனிடோரியம், கரிகிரி, வட ஆற்காடு மாவட்டம்.

(8) தொழுநோய் ரிலிப் அண்டு ரூரல் நிலையம், ஓமலூர், சேலம் மாவட்டம்.

(9) புனித மேரி தொழுநோய் நிலையம், அரிசிபாளையம், சேலம் மாவட்டம்.

(10) புனித ஜோசப் தொழுநோய் இல்லம், ஆரோக்கியபுரம், தாத்துகுடி.

(இ) சில நிறுவனங்களுக்கு அரசு தலைக்கட்டு மானியம் (Capitation grant) அளிக்கிறது.

(ஈ) தனியார் தொழுநோய் நிறுவனங்களில் மருத்துவம் செய்து கொள்ளும் வயது வந்தவர்களுக்கு ரூ. 25 வீதமும் சிறுவர்களுக்கு ரூ. 12 வீதமும் மாதத்திற்கு, தலைக்கட்டு மானியமாக, அரசு அளிக்கிறது.

## [illegible]

வினா 33—

திரு. [illegible] மாண்புமிகு [illegible] அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) [illegible] மாவட்டம், [illegible] வேறு [illegible] உதவி அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், அதற்கான [illegible] நடவடிக்கை என்ன?

(இ) விடை

(அ) இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.



1974 டிசம்பர் 20]

## தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் தென்னை வளர்ப்புத் திட்டம்

வினா 34—

திரு. [illegible] மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் விவசாய மறுநிதி கார்ப்பரேஷன் உதவியுடன் தென்னை வளர்ப்புத் திட்டம் ஏதேனும் அமுல் நடத்தப்பட இருக்கின்றதா?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு நடத்தப்படுகிறது?

விடை

(அ) தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மை மறுநிதி கார்ப்பரேஷன் உதவியுடன் 2,000 எக்கர் பரப்பளவில் ரூபாய் 30·37 இலட்சம் செலவில் தென்னை வளர்ப்புத் திட்டம் ஒன்று செயல்பட்டு வருகிறது. திருச்சி மாவட்டத்தில் வேளாண்மை மறுநிதிக் கார்ப்பரேஷன் உதவியுடன் தென்னை வளர்ப்புத் திட்டம் எதுவும் அமுலில் இல்லை.

(ஆ) இந்தத் திட்டம் தஞ்சை மாவட்டத்திலுள்ள பட்டுக்கோட்டை, பேராவூரணி, அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், முத்துப்பேட்டை, திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகிறது.

## அம்பாசமுத்திரம் வட்டத்தில் மனுநிதித் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட விண்ணப்பங்கள்

வினா 35—

திரு. இ. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973–74-ல் திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தாலுக்காவிலிருந்து மனுநீதித் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட மனுக்கள் எத்தனை?

(ஆ) அவைகளுள் தீர்வு காணப்பட்டவை எத்தனை?

விடை

(அ) 1973–74-ம் வருடத்தில் திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்தில், மனுநீதித் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட மனுக்களின் மொத்த எண்ணிக்கை 597.

(ஆ) அவற்றுள் தீர்வு காணப்பட்ட மனுக்களின் விவரங்கள் பின்வருமாறு:—

(i) உடனடியாகத் தீர்வு காணப்பட்டவை ... 226

(ii) நிராகரிக்கப்பட்டவை

(iii) இதர துறைகளுக்கு நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டவை

[குறிப்பு.—ஒரு உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்படவில்லை என்பதைக் குறிக்கும்.]

### (3) உரிமைப் பிரச்னை

### திரு. அப்துல் சலாம் என்பவர் மக்கள் குரல் ஆசிரியருக்கு தம் வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிக்கை குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் 18[illegible]-வது விதியின் கீழ், மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை செழியன் அவர்கள் ஒரு உரிமை மீறிய செயல்குறித்த தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். 'மக்கள் குரல்' என்ற நாளிதழின் ஆசிரியருக்கு அரகண்டநல்லூரைச் சேர்ந்த திரு. அப்துல் சலாம் என்பவர் தன் வழக்கறிஞர் மூலம் அனுப்பியுள்ள ஒரு அறிக்கையில் (நோட்டீஸ்) இப்பேரவையின் மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையைக் குறை கூறியும் அதன் தலைவருக்கு நோக்கம் கற்பித்தும் கூறியுள்ளார் என்றும், அந்தத் தீர்மானத்தில் திரு. செழியன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

இது அவையின் உரிமையை மீறிய செயலாகிறது என்று முதல் நோக்கில் தெரிகிறது. இதுகுறித்து பல முன்தீர்ப்புகள் இருக்கின்றன. எனவே பேரவையின் 192-வது விதியின் கீழ், ஆய்ந்து அறிக்கை அளிக்க, இதை அவையுரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது திரு. சௌந்தர பாண்டியன் அவர்கள் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு தீர்மானம் கொண்டு வருவார்கள்.

(முற்பகல் 10-00)

THIRU R. PONNAPPA NADAR: Before the business is taken, Sir, I would like to make a statement and also invite your ruling on the following matters.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஸ்டேட்மெண்ட் கொடுக்க முடியாது. என்ன முறையில் பேசுகிறீர்கள்?

### 4. நடைமுறைக் கேள்விகள்

### முன்தினம் திரும்பப் பெறப்பட்டதாக அறிவிக்கப்பட்ட தனியார் அலுவல்களை மீண்டும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வது குறித்தும், முன்தினம் நடந்த சில நிகழ்ச்சிகள் குறித்தும்

THIRU R. PONNAPPA NADAR: On a point of order, Sir, arising out of the proceedings and announcement which you have made. Before the question-hour was over, you have made an



announcement that the expunged portions would be fully restored and that is a matter which is of great help to us and we are really glad that you have made such an announcement. But so far as the other matters are concerned, I have to make certain points which may be considered by the Speaker in a detached manner and the ruling party may be well advised to consider all these aspects in a broad perspective.

The first point which I want to bring to the notice of the Hon. Speaker is that so far as yesterday's incidents are concerned, the portions that have been expunged have now been restored. But there are other matters which will have to be restored in full. The first thing which I want to make is that yesterday was a non-official day. In the non-official day the Speaker ruled that movers of the Bill and the persons who had to speak on other non-official resolutions were not available in the House and so it should be deemed to have been withdrawn. I once again request that that matter may also be restored and the Speaker may consider whether it is proper and appropriate that those matters which have arisen because of a peculiar situation in the House, whether those non-official matters could not be restored and considered again—those details will have to be discussed and decided by you and you may take your own time for that. To me it appears that it would be better for a happy and amicable settlement that these matters are all restored in full and the members given an opportunity to express what they have to say on the Bill and other non-official resolutions.

Another point is this. Yesterday, one hon. Member, Sri Swamidhas has been just, I would call it manhandling, just it was attempted to bodily remove him from the precincts of the lobby by an order or direction, I do not know what it was; he has been directed to be removed and the way in which the whole thing has been attempted does not speak well of us. I would once again say that such sort of things should not occur in the precincts of the House, for, that would mean invasion of our rights, I would even say that it amounts to a breach of privilege.

Yet another point which has occurred and we all regret is that the members who were there in the lobby and the Watch and Ward began to use their influence and

[Thiru R. Ponnappa Nadar] [1974 டிசம்பர் 24

their authority and they tried to exclude the members of the Press from there. Sir, so far as the members of the Press are concerned, it is right and proper that they should be at liberty to report what is transpiring in a democratic country in a fearless manner and I think it is our bounden duty to protect their rights. So far as their rights are concerned, they have been protected and necessary legislations have been brought forward in other States. I think that matter may also be considered.

The last but not the least is another mean thing that happened yesterday. We are not given even water to drink. One leader of a party gave some money and asked the peon to fetch coffee for us, but the office staff had been prevented from doing that and that does not augur well; it is derogatory to the interests of the members.

Of course, something unfortunate has happened and we do not have any personal bitterness against the Speaker or any other member. It would be in the interests of the Assembly that all these aspects are considered by the Speaker and these aspects may be considered by the Speaker in a detached manner. Whatever things that have been left over on account of the fact that the movers and other persons were not present in the House should be taken for reconsideration and I think the Speaker may just take his own time to give a considered ruling. I do not force any decision on the spur of the moment. For a happy working of the Assembly, we will have to forget all our feelings of bitterness and we should all act in a manner which is the most dignified and which adds to the dignity of the Tamil Nadu Legislature.

I would once again reiterate that the Hon. Speaker may consider all these aspects and then give his view.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய பொன்னப்ப நாடார் அவர்கள் நேற்றைய நிகழ்ச்சிகளை இங்கே குறிப்பிட்டு என்னுடைய கவனத்திற்குச் சில செய்திகளைக் கொண்டு வந்திருக்கிறார்கள். சுப்பு அவர்கள் பேசிய பேச்சை நான் மட்டுமல்லாமல் நிகழ்ச்சிக் குறிப்பிலே வருவதற்கு அனுமதித்தேன் என்றால் அது பேரவைத் தலைவரின் அதிகாரத்திற்கு உட்பட்ட ஒரு நிகழ்ச்சியாகும். அதனால் அதைச் செய்ய என்றால் முடிந்தது. நேற்றைய நிகழ்ச்சிகளெல்லாம் நம்முடைய விதிமுறைப்படி நடைபெற்று முடிந்திருக்கின்றன.



1974 டிசம்பர் 20] [பேரவைத் தலைவர்]

If a member when called on is absent the Resolutions standing in his name will be considered to have been withdrawn.

இது நம்முடைய விதிமுறையிலே இருப்பது. இந்த விதிமுறைப் படி நேற்று நடைபெற்றிருக்கிற நிகழ்ச்சிகளை நான் இந்த அவை முன் கொண்டு வருவதற்கு பேரவைத் தலைவருக்கு அதிகாரம் இருக்கிறதா என்றால் அதிகாரம் இல்லை. அவையிலே நிகழ்ச்சி நிரலில் கொடுக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சிக்கு முன்னால் இன்னொரு நிகழ்ச்சியை எடுக்க வேண்டுமென்றாலும், இந்தப் பேரவையிலே அப்படிப்பட்ட ஒரு தீர்மானம் முன்மொழியப்பட்டு அந்தத் தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு செய்யக் கூடிய நிலை உண்டு. அந்த நிலையிலே ஏதாவது நடைபெற்றால் நடைபெற வேண்டுமேயொழிய வேறு வகையிலே பேரவைத் தலைவரே அப்படிப்பட்ட நிகழ்ச்சி நிரலை எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்வதற்கு அதிகாரம் இல்லை. வேண்டுமானால் அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்ட நான் விரும்புகிறேன். அலுவல் ஆய்வுக் குழுவில் எப்படி முடிவெடுக்கிறார்களோ அந்த முடிவை மேற் கொள்ளலாம் என்பதை மட்டும் கூற விரும்புகிறேன்.

மற்றொரு நிகழ்ச்சியைப் பற்றிக் கூறினார்கள். அவர்கள் எந்த வார்த்தைகளில் இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடைபெறக் கூடாது என்று சொன்னார்களோ நான் அந்தக் கருத்தை முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன். பொன்னப்ப நாடார் அவர்கள் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சிகள் இனி நடைபெறக் கூடாது என்று சொல் கிறார்கள். அதே உணர்வை நானும் தெரிவித்துக் கொள்கிறேன். அதுபோல் நடைபெறாமல் இருப்பதற்கு பேரவைத் தலைவர் ஒருவர் மட்டும் முயன்றால் போதாது. பேரவைத் தலைவரோடு, இருக்கின்ற எல்லாக் கட்சித் தலைவர்களும், எல்லா உறுப்பினர்களும் ஒன்று பட்டு என்னுடன் ஒத்துழைத்தால்தான் இந்த அவையின் கண்ணியம் காக்கப்படும் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள் கிறேன். அதற்கு இந்த அவையிலே இருக்கிற எல்லாக் கட்சித் தலைவர்களும், எல்லா உறுப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டு மென்று மீண்டும் வேண்டுகோள் விடுத்துக்கொள்கிறேன்.

அடுத்து, திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

[1974 டிசம்பர் 24

(5) தன்னிலை விளக்கம்

## தன்னைக் குறித்து பேரவைத் தலைவர் கூறியதற்கு திரு. க. சுப்பு அளித்த தன்னிலை விளக்கம்

**திரு. க. சுப்பு:** பாயின்ட் ஆஃப் பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன், சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாயிண்ட் ஆஃப் பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன் என்றால் அவையிலே இரண்டு வகை இருக்கிறது. இந்த அவை நடைபெற்றுக் கொண்டிருக்கிற நேரத்திலே தன்னிலை விளக்கம் கூற வேண்டிய சூழ்நிலை இருந்தால் மாண்புமிகு உறுப்பினர்கள் எழுந்து தன்னிலை விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டு தன்னிலை விளக்கம் அளிக்கலாம். இன்று நடைபெறாத நிகழ்ச்சி சம்பந்தமாக, இதற்கு முன்னால் நடைபெற்ற நிகழ்ச்சி சம்பந்தமாக தன்னிலை விளக்கம் அளிக்க வேண்டுமென்றால் என்ன அளிக்கப் போகிறோம் என்பதை பேரவைத் தலைவரிடத்தில் காட்டி அவருடைய அனுமதியைப் பெற்றுத்தான் தன்னிலை விளக்கம் அளிக்கலாம் என்று இருக்கிறது. முன்பு நடந்த நிகழ்ச்சிபற்றி தன்னிலை விளக்கம் அளிப்பதற்கு சுப்பு அவர்களுக்கு வாய்ப்பு இல்லை என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு:** இன்று நடந்த நிகழ்ச்சியை வைத்துத்தான் தன்னிலை விளக்கம் அளிக்க விரும்புகிறேன். தாங்கள் ஒரு அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். அதிலே நான் நேற்று சொன்னதைப்பற்றிச் சொல்லி, சபாநாயகர் மீது அபாண்டமாகக் குற்றஞ்சாட்டி, நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று நான் சொன்னதாகத் தாங்கள் சொல்லி இருக்கிறீர்கள். அதன்மீது தன்னிலை விளக்கம் சொல்வதில் தப்பு இல்லையே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்குமுன் ஒன்றைச் சொல்கிறேன். நீங்கள் எழுப்பிய உரிமைப்பிரச்னை என்ன, அதில் அடங்கியுள்ள பொருள் என்ன, அதற்கு பேரவைத் தலைவர் என்ன தீர்ப்பு அளித்தார் என்பதைப் பற்றியெல்லாம் தெரிவிக்க வேண்டுமென்றால் அது முடிந்துபோன ஒரு நிகழ்ச்சி. இங்கே கூறியதெல்லாம் அதன்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கூறியதற்கு விளக்கம் தந்து, நீங்கள் எழுதிய அந்த முதல் கடிதத்தைப் பெற்றுக் கொண்டது வரை விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால்



[பேரவைத் தலைவர்] [1974 டிசம்பர் 20

தன்னிலை விளக்கம் என்பது இந்த அளவோடுதான் இருக்க வேண்டுமேயொழிய அதற்கு முந்திய நிகழ்ச்சிகளைப் பற்றிச் சொல்வது முறையாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு:** தலைவரவர்களே, நான் முந்திய நிகழ்ச்சிக்குப் போகவில்லை. தாங்கள் சொன்ன வரையறைக்குள்ளேயே சொல்லுகிறேன். சபாநாயகர் மீது அபாண்டமாக நான் குறிப்பிட்டேன் என்ற கருத்தில் சொல்லியிருக்கிறீர்கள். நான் நேற்று குறிப்பிட்டதெல்லாம், நான் எழுப்பிய உரிமைப் பிரச்னையின்மீது—விஷயத்திற்குள் நான் போகவில்லை—'கன்சன்ட் வித்ஹெல்ட்' என்று அறிவித்த கடிதத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். கன்சன்ட் வித்ஹெல்ட் என்று நான் கொடுத்தவுடனே கொடுக்கவில்லை. கொஞ்ச நாள் கழிந்ததற்குப் பிறகு, என்ன ஆயிற்று என்று நான் கேட்டதற்குச் சொல்லப்பட்ட காரணம்,

the cause of action for the privilege did not arise in this House, but in the upper House.

அதனால் மேல்சபையிலே இதனுடைய மூலம் இருப்பதால் இது அங்கே விவாதிக்கப்பட வேண்டிய பிரச்னை, நாம் எடுக்க முடியாது, ஆகவே, அது அங்கே அனுப்பப்பட வேண்டும், இங்கே எழுப்ப அனுமதியில்லை என்றும் சொன்னார்கள். இதுவரையில் அங்கே அனுப்பி, சம்பந்தப்பட்ட பிரச்னை அங்கே வந்ததா? இன்சிடெண்டலாக இந்த நிகழ்ச்சி வந்ததால் சொல்கிறேன். அப்பொழுது நான் சொன்ன நேரத்தில் மாண்புமிகு திரு. மதியழகன் அவர்கள் சபாநாயகராக இருந்தார்கள். இது அங்கே வந்த பிரச்னை. 'காஸ் ஆஃப் ஆக்ஷன்' அங்கே இருக்கிறது, அங்கே ரெஃபர் செய்கிறோம் என்று சொல்லப்பட்டதே தவிர, நான் அபாண்டமாகச் சொல்வதாகக் கூறுவது சரியல்ல என்பதை தன்னிலை விளக்கமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது நான் சொன்னது இந்த அவையிலே எழுப்பப்பட்டதற்கு பேரவைத் தலைவர் தீர்ப்பளித்து அது மாண்புமிகு உறுப்பினருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கடிதம்தான் சுப்பு அவர்களுக்கு அளிக்கப்பட்டு அதைப் பெற்றுக் கொண்டதற்கு அவர் கையெழுத்திட்டிருக்கிறார். வேண்டுமென்றால் இங்கே இருக்கிறவர்களெல்லாம் அலுவல் ஆய்வுக் குழு கூடும்போது வந்திருந்து முடிவெடுக்கலாம்.

## 6. கவன ஈர்ப்பு

### (அ) திருச்சி மாவட்டத்தில் சில பகுதிகளில் அமராவதி ஆற்று நீர் பாசனத்திற்குக் கிடைக்காமை குறித்து

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** திருச்சி மாவட்டம் சின்ன தாராபுரம், அப்பிப்பாளையம், கருப்பப்பாளையம், திருமாநிலையூர் போன்ற பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களுக்கு அமராவதி ஆற்றிலிருந்து தேவையான தண்ணீர் பாசனத்திற்குக் கிடைக்காத காரணத்தால் விவசாயிகள் பெரிதும் சிரமப்படுகிறார்கள் என்பது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் குறிப்பிடும் கிராமங்கள், அமராவதி வாய்க்காலினால் கரூர் வட்டத்தில் பலனடையும் 24 கிராமங்களிலும், குளித்தலை வட்டத்திலுள்ள 3 கிராமங்களிலும் அடங்கியவை. கோவை, திருச்சி இவ்விரு மாவட்டங்களிலும் உள்ள அமராவதியின் பழைய ஆயக்கட்டு சுமார் 31,200 ஏக்கர் ஆகும். கரூர், குளித்தலை ஆகிய இவ்விரு வட்டங்களிலும் அமராவதி வாய்க்காலில் பயன்பெறும் ஆயக்கட்டு 13,200 ஏக்கர் ஆகும். கரூர் வட்டத்தில் 8,753 ஏக்கர் பரப்பளவில் முதல் போகம் பயிரிடப்பட்டு ஏற்கனவே அறுவடையாகிவிட்டது. இந்த 8,753 ஏக்கர் பரப்பளவின் ஆயக்கட்டுதாரர்கள் இரண்டாம் போகம் பயிரிட்டுள்ளனர். இது தவிர, மற்றும் 1,177 ஏக்கர் பரப்பளவில் முதல் போகம் 1974 அக்டோபர் இறுதிவரை பயிரிடப்பட்டுள்ளது. எனவே கரூர் வட்டத்தில் அமராவதி ஆற்று வாய்க்கால்களின்கீழ் 9,930 ஏக்கர் பரப்பளவில் இப்போது தரையில் நெல், கரும்பு, மஞ்சள், வாழைப் பயிர்கள் உள்ளன. அமராவதி ஆற்று வாய்க்கால்கள் குளித்தலை வட்டத்தின் கடைக்கோடிப் பகுதிகளில் உள்ளன. இந்த வாய்க்கால்களின்கீழ் குறுவைப் பயிர் ஏதும் பயிரிடப்படவில்லை. குளித்தலை வட்டத்தில் அமராவதி ஆற்று வாய்க்கால்களின்கீழ் 505.72 ஏக்கர் நெல்லும், 1,479.19 ஏக்கர் கரும்புப் பயிர்களும் தற்போது தரையில் உள்ளன.

அமராவதி பழைய ஆயக்கட்டு அமராவதி ஆற்றின் இயல்பான நீர் வரவை பெறுதற்குரியது. அவற்றுக்கு நீர் வழங்கப்பட்டு வருகிறது. தமிழ் நாட்டில் வட கிழக்குப் பருவ மழை முற்றிலும் தவறிவிட்டது. இவ்வாண்டு பெய்த மழை அளவு சென்ற காலத்தில் பதிவான மோசமான மழை அளவுகளில் ஒன்றாகும். வட கிழக்குப் பருவ மழை தவறியதன் காரணமாக அமராவதி ஆற்றின்





நீர் வரவு குறைந்து விட்டது. அமராவதி பழைய ஆயக்கட்டுக்கு நீர் வரவைக் கூடுதலாக்கும் பொருட்டு, சுமார் 800 மில்லியன் கன அடி நீர் அமராவதி நீர்த் தேக்கத்திலிருந்து திருப்பிவிடப்பட்டது. இந்த நீர்த் தேக்கத்தில் இப்போது கிடைக்கும் நீர் வரவு சுமார் வினாடிக்கு 100 கன அடி மட்டுமே ஆகும். அமராவதி நீர்த் தேக்கத்தில் நீர் இருப்பு 134 மில்லியன் கன அடி அளவுக்குக் குறைந்துவிட்டது. கிடைக்கக்கூடிய நீர் வரவு நியாயமான முறையில் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது. இது தவிர, முடிந்த இடங்களில் எல்லாம் தனியார் கிணறுகள் மூலம் குடியானவர்கள் பயிர்களுக்கு நீர் பாய்ச்சி வருகின்றனர்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, அமராவதி ஆற்றின் கடைக்கோடி பகுதிகளில் இருக்கின்ற விவசாயிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் நீர் பற்றாக்குறை இருக்கிறது. பரம்பிக் குளம், ஆளியாற்றில் அதிக அளவு நீர் இருப்பதாகச் சொல்லப் படுகிறது. ஆக அங்கேயிருந்து அமராவதி ஆற்றின் கடைக்கோடி பகுதி விவசாயிகளுக்கு நீர் கிடைக்கச் செய்ய ஏதாவது திட்டம் உண்டா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, நேற்று மாலை அதிகாரிகளோடு இதுபற்றி நீண்ட நேரம் விவாதித்திருக்கிறேன். பரம்பிக்குளத்திலிருந்து நீரை திருப்பமுடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே உப்பாற்றிலிருந்து நீர் திருப்பிவிடப் படுகிறது. உப்பாற்று நீர் அதனுடைய ஆயக்கட்டுக்கே கொடுக்க முடியவில்லை. ஆகவே உப்பாற்றினுடைய தண்ணீர் சிறிய அளவு தான் திருப்பக்கூடிய நிலைமை இருக்கிறது. அதிகாரிகளுக்கு இன்னும் ஏதேனும் செய்யமுடியுமா என்று பரிசீலித்து வரவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, முடிந்தால் அரசு எல்லா நடவடிக்கையும் எடுக்கும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, தற்போது இருந்து வருகிற தண்ணீர் பிரச்னையைத் தீர்ப்பதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பரம்பிக்குளத்தில் போதிய அளவு தண்ணீர் இல்லை. அங்கு நம்முடைய கணக்கிலே தண்ணீர் போதுமான அளவு இல்லை. கேரளாவிற்கு இருக்கிற தண்ணீரிலிருந்து அரசு கடன் கேட்கலாமா என்று யோசித்து வருகிறோம். அதுபற்றி யோசித்து முடிவெடுக்கப்படும்.

[1974 டிசம்பர் 20

## (ஆ) எலாவூரிலுள்ள சக்தி பைப்ஸ் நிறுவனம் கதவடைப்பும், தொழிலாளர் பாதிப்பும்

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** செங்கற்பட்டு மாவட்டம், எலாவூரில் உள்ள சக்தி பைப்ஸ் நிறுவனம் கடந்த 21—11—1974 முதல் கதவடைப்பு செய்துள்ளதால் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது பற்றியும் அரசு உடன் நடவடிக்கை எடுத்து தொழிலாளர்களுக்கு நியாயம் வழங்கவேண்டிய அவசியத்தைப் பற்றியுமான அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே,

எலாவூரிலுள்ள சக்தி பைப்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்தின் நிர்வாகம் 21—11—1974 அன்று கதவடைப்பு அறிவிப்பு கொடுத்து, கதவடைப்பதற்கான காரண விளக்க அறிக்கையில் நிர்வாகம் கீழ்க்கண்டவாறு காரணங்களை முன்னிட்டு கதவடைப்பு செய்ய விருப்பதாய் அறிவித்தது.

21—11—1974 அன்று காலை 6 மணிக்கு, இரவு அலவன்ஸ், மற்றும் உஷ்ண அலவன்ஸ் உடனடியாக அளிக்கவேண்டும், இல்லையேல் தொழிலாளர்கள் வேலைசெய்யமாட்டார்கள் என்று தீர்மானித்ததின் பேரில் மேற்பார்வையாளர்கள் மற்றும் பினிஷிங் மற்றும் பௌண்டரி பிரிவுத் தலைவர்கள் ஒர்க்ஸ் மானேஜரிடம் கூறினார்கள். ஆனால் அந்த சமயம் பைப்களை டி.ஜி.எல். அண்டு டி. மற்றும் ஆய்வுக்கு தயார்படுத்த வேண்டியிருந்ததால் நகரும் பளுதூக்கியின் அவசியம் ஏற்பட்டது. பளுதூக்கியின் ஓட்டுநர் தன் வேலையைச் செய்ய மறுப்பதாக நிர்வாகத்திற்கு அறிவித்ததால் அப்பிரிவு அதிகாரி மற்றொரு தற்காலிக ஓட்டுநரைக் கொண்டு அவ்வேலையினைச் செய்ததை சங்கம் ஆட்சேபித்தது. அலுவலர்களுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது சங்கச் செயலாளருக்கு ஒரு அதிகாரியினால் அளிக்கப்பட்ட பதில் அவமரியாதையானது எனக் கருதி, தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்தனர். அலுவலரின் சமாதான முயற்சிகள் தோல்வியுற்றபடியால் நிர்வாகம் 21—11—1974 அன்று இரவு 10 மணிக்கு கதவடைப்பு அறிவிப்பு செய்தது.



1974 டிசம்பர் 20] [திரு. க. இராசாராம்]

பிறகு, இரு தரப்பினருக்கும் இடையே நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் மூலம் கதவடைப்பு 27—11—1974 அன்று காலை 6 மணிக்கு நீக்கப்பட்டு தொழிலாளர் அனைவரும் வேலைக்கு திரும்பினர். இப்போது வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** தலைவரவர்களே, இந்தத் தொழிற் சாலைக்கு அரசாங்கம் உதவியாக பணம் கொடுத்திருக்கிறது என்று நான் கேள்விப்படுகிறேன். அப்படியானால் எவ்வளவு கொடுத் திருக்கிறது. அந்த தொழிற்சாலை மேனேஜ்மெண்டில் அரசாங்க அதிகாரிகள் இருக்கிற காரணத்தால் அப்படி செய்யக்கூடாது என்று சொல்கிற உரிமை அரசாங்கத்திற்கு இருக்கிறதா? அப்படி யிருந்தால் அரசாங்க அதிகாரிகள் இருந்துங்கூட எப்படி இந்தத் தவறு வந்தது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** நான் ஏற்கெனவே கூறியபடி அங்கு அரசாங்க அதிகாரி இருக்கிறார். அவர் இருந்த காரணத்தால்தான் அங்கு பேசி சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டிருக் கிறது. இந்தச் சிறிய தகராறு ஒரு சிறிய விஷயத்தின் காரண மாக ஏற்பட்டதே தவிர வேறொன்றுமல்ல.

## 7. அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (அ) தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (ஆறும் திருத்த) சட்ட முன்வடிவு

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (ஆறும் திருத்த) சட்ட முன்வடிவை நான் இந்தப் பேரவையின் முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** இச்சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

நம்முடைய அலுவல் ஆய்வுக் குழு 11.00 மணிக்கு நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 டிசம்பர் 20

கிராமங்களில் இதைக் கட்டுப்படுத்த இதே அதிகாரத்தை சாதாரணமாகப் பயன்படுத்துவதில்லை. முனிசிபல் நகரங்களில், மற்றப் பெரிய நகரங்களில் எல்லாம் இரவு பத்து மணிக்கு மேல் ஒலிபெருக்கி வைக்கக்கூடாது என்ற அமைப்பெல்லாம் இருக்கிறது. ஆனால் ஆலயங்களுக்கு திருவிழாக் காலங்களில் விதிவிலக்கு கொடுக்கிறார்கள். பள்ளி, மசூதி போன்றவற்றுக்கும் வேண்டிய விதிவிலக்கு எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். இவ்வளவு பெரிய அதிக விரிவான திருத்தம் வேண்டுமா என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் சற்று கவனிக்க வேண்டும் sound amplifiers in any area என்று இருக்கிறது. ஏரியா டிபைன் செய்யப்பட்டிருக்கிறதா என்ற விவரம் இல்லை. பேரன்ட் ஆக்ட் இல்லாத காரணத்தால் அது சம்பந்தமான ஆலோசனையைச் சொல்ல முடியவில்லை. அது சம்பந்தமாக சட்ட அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலில் கூற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சட்டத்திலே புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதிக அதிகாரம் மாஜிஸ்ட்ரேட்டுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 71-எ சப் கிளாஸ் (2)ல் இந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

(2) Any Police Officer referred to in sub-section (1) may, subject to such rules as may be made in this behalf, seize any sound amplifier used in contravention of the terms and conditions of a licence granted under sub-section (1) and the Court trying an offence under this section may also direct the forfeiture of any sound amplifier so seized.

இதிலே 'ஃபார்பீச்சர் கிளாஸ்' இருக்கிறது. அந்த அளவுக்கு அதிகாரம் கொடுக்கப்பட வேண்டுமா? தவறாக அதிகாரத்தை உபயோகப்படுத்தக்கூடிய நிலைமை ஏற்பட்டு விடாதா? அதிலே—This section may attract forfeiture of any sound amplifier. என்று சொல்லியிருக்கிறது. இதிலே 'மே' என்று சொல்லுவதை 'ஷெல்' என்று எடுக்கப்படுமா அல்லது டிஸ்க்ரீஷனரியாக எடுக்க வேண்டுமா என்பதைப்பற்றியெல்லாம் சட்டச் சிக்கல்களும் விவகாரங்களும் ஏற்படும் என்று நினைக்கிறேன். இந்த 'ஃபார்பீச்சர் கிளாஸ்' தேவையில்லை. இதை நீக்கம் செய்ய வேண்டுமென்று பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். 'ஃபார்பீச்சர்' என்று சொன்னால் அது 'எக்ஸ்ப்ரோபிரியேஷன்' என்ற முறையிலும் வரும்.



1974 டிசம்பர் 20] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

இன்று நாம் பார்க்கின்ற நேரத்தில் மத்திய பாராளுமன்றத்தில் கடத்தல் மன்னர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்வது பற்றியே ஐயப்பாடு கொண்டிருக்கும் நேரத்தில் இந்தமாதிரி ஆம்ப்ளிபையரைப் பறிமுதல் செய்வது போன்ற காரியங்களைச் செய்வது சரிதானா என்று கேள்வி எழுகிறது. சொற்பப் பணத்தை முதலாகப் போட்டு அவர்கள் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய வர்கள். இந்த முறையைக் கையாண்டால் அவர்களுக்குப் பெரிய அளவில் பாதகம் ஏற்படும், குந்தகம் ஏற்படும். இதிலே ஈடு பட்டிருக்கக்கூடியவர்கள் மேட்டுக்குடி மக்கள் அல்ல, செல்வச் சீமான்கள் அல்ல. தவறு செய்தால் ஃபைன் மட்டும் போட்டு 'ஃபார்பீச்சர்' பண்ண வேண்டுமென்று இருப்பதை அருள்கூர்ந்து திரும்பப் பெறவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பல குடும்பங்களுக்கு இன்னல் விளைவிக்கக்கூடிய அளவுக்கு அதிக அதிகாரம் கொண்ட விஷயமாக இருக்கிறது. மற்றச் சட்டங்கள் மாதிரி இதைக் கணிக்கக்கூடாது.

எஸென்ஷியல் கமாடிடீஸ் ஆக்டில் இந்தமாதிரியான கிளாசஸ் எல்லாம் வைத்திருக்கிறார்கள். உணவுப் பண்டங்களை, அத்தியாவசியப் பண்டங்களைக் கடத்திச் செல்லுகின்ற லாரிகள், சைக்கிள்கள் போன்றவற்றைப் பறிமுதல் செய்ய அதிலே அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அத்தகைய அதிகாரம் இதற்கு தேவையற்றது. இது நியாயமில்லை. இதிலே—

'The court trying an offence under this Section may also direct the forfeiture of any sound amplifier so seized.'

என்று இருக்கிற நேரத்தில் டிஸ்க்ரீஷனரி அதிகாரம் இருக்கிறது என்று தொனித்தாலும் நடைமுறையில் சிக்கல்கள் ஏற்படும். அதைப் பற்றி விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்போது லைசென்ஸ் கொடுக்கக்கூடிய அதிகாரம் கமிஷனரிடம் விடப்பட்டிருக்கிறது. கமிஷனர் அவர்கள் இஷ்டப் பட்டால் கொடுக்கலாம். இல்லாவிட்டால் கொடுக்காமல் இருக்கலாம். அப்படி ஒரு அதிக அதிகாரம் கொடுப்பது அவசியந் தானா என்று யோசிக்க வேண்டும்.

1974 டிசம்பர் 20] [திரு. என். கே. பழனிசாமி]

கமிஷனர் எந்தெந்த விஷயங்களுக்குக் கொடுக்கலாம், எந்தெந்த நிலைமைகளிலே கொடுக்கக்கூடாது என்பதற்கு திட்டவட்டமான கைடு லைன்ஸ் இந்த ஆக்டில் இருக்கவேண்டும். அப்படி இல்லாவிட்டால் பயன் இல்லை. போலீசாருக்கு, கமிஷனருக்கு அதிக அதிகாரம் கொடுப்பதால் எதிர்க்கட்சிகளுக்குக் கொடுக்காத நிலையில் தடை செய்து உத்தரவு போட வழிவகை இருக்கிறது. எதிர்க்கட்சிகளுக்குச் சுதந்திரம் இருக்காது.

அடுத்து 'இன் எனி ஏரியா' என்று போட்டிருக்கிறார்கள். மற்ற இடங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்று இருக்கிறது. ஏற்கனவே போலீஸ் ஆக்ட் பல இடங்களுக்கு இருக்கிறது. பல கட்சிகள் கூட்டம் நடத்துகிறோம். அதை அட்ஜஸ்ட் செய்து இப்போது அனுமதி கொடுக்கிறார்கள். மறுபடியும் ஏன் மற்ற இடங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்று தெரியவில்லை.

அதுபோக, ஃபைன் 500 ரூபாய்; இம்ப்ரிசன்மென்ட், மைக் செட் பூராவும் பறிமுதல் செய்வது என்று கடுமையான தண்டனைகள் விதிக்கலாம் என்று இருக்கிறது. கொலைக் குற்றத்திற்குக் கூட இவ்வளவு தண்டனைகள் இல்லையே. 500 ரூபாய் ஃபைன் என்பதை 100 ரூபாய் என்று குறைக்க வேண்டும், இம்ப்ரிசன்மென்ட் கூடாது; பறிமுதலும் செய்யக்கூடாது,

அடுத்தபடியாக, கோவில்கள், ரிலிஜியஸ் இன்ஸ்டிட்யூஷன்களில் மைக்கை பிக்ஸ் செய்து யூஸ் செய்கிறார்கள். அவர்களுக்கும் இந்த ரெஸ்ட்ரிக்ஷன்ஸ் இருப்பது அவசியம். தூங்கவே முடியவில்லை. இந்தச் சட்டத்திலிருந்து அவர்களுக்கு விதிவிலக்கு கொடுப்பதால் தொல்லை ஏற்படுகிறது. எனவே ரிலிஜியஸ் இன்ஸ்டிட்யூஷன்சையும் இதில் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக, சைக்கிள்களுக்கு எல்லாம் கண்ணாடி பொருத்த வேண்டும் என்று சொல்கிறார்கள். பின்னடி வருபவர்களைப் பார்க்க அப்படி பொருத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். இதில் பிரயோஜனமில்லை. காரிலேயே பத்து அடி, பதினைந்து அடி தூரத்தில் வந்தால்தான் தெரியும். சைக்கிளில் போகும்போது எப்படித் தெரியும்? இது மக்களுக்குத்தான் நியூசன்ஸ். இதனை வியாபாரிகளுக்கு பிரயோஜனமே தவிர மக்களுக்கு எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை. ஆகவே இந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**DR. H. V. HANDE**: Hon. Deputy Speaker, Sir, in connection with this Bill, I would like to offer a few remarks.



1974 டிசம்பர் 20] [Dr. H. V. Hande]

Sir, as our hon. Friend, Thiru Aranganayagam, pointed out the other day, this particular Bill coming at this context of time causes certain fear in us. This Bill has been brought with a deliberate attempt to stifle the public meetings of the opposition parties, especially the Anna D.M.K. which is probably having a large number of meetings all over the State. I wonder whether this principle would apply to the ruling party meetings also. This particular Bill has been brought at this particular time. Why was not this Bill brought forward all these years? This question which I am posing will be asked by a number of people all over the State.

Apart from this, I have my own feeling that this Bill has been drafted in a slipshod manner and in a haphazard manner without understanding the full implications of the clauses in this particular Bill and also other provisions that have been made under various clauses. For instance, there is no provision for an 'Appellate Authority' in this Bill. Suppose a Police Officer takes a wrong decision and passes orders, there is no provision for an appellate authority. There is no such provision at all. Whenever a penal provision is made or added, particular care should be taken to see that there is a provision for an appellate authority. It is absolutely and totally lacking in this Bill. That is one point.

The other point that I would like to draw the attention of the Government is this. This Bill has been drafted in a hasty manner. As it is, there is no bifurcation of residential areas and non-residential areas. What is the criterion by which you can say that a particular area is residential area or a non-residential area? How will it fit in with the Town Planning Act that has been passed by this House? It runs contrary and counter to the Act that has already been passed by this House. As far as my knowledge goes, in the Town Planning Act a clear distinction has been made between residential area and a non-residential area. But this Bill does not make a distinction. I am shocked on the manner in which it has been drafted. This is another reason.

Another point is this. Similarly, no distinction has been made between town planning and non-town planning. These two provisions have not been included in the definition clause. They should be incorporated. Another point that surprises me is [illegible] several members expressed, the strong penal clause that [illegible] included in this Bill. Why should such a strong penal [illegible]

[Dr. H. V. Hande] [1974 டிசம்பர் 20

included in this Bill? Why should a person hiring the equipment or handling the equipment be made to pay a penalty of Rs. 500 for the fault of a person organising such meetings or other programmes? For instance, a meeting may be organised either by Anna D.M.K. or Congress (O), Congress, Communist parties. Will it be possible for any party to conclude the meetings in time? Will it be possible for the ruling partly to do so? They may exceed five or ten minutes of the stipulated time for which permission might have been given. For that, why a person lending the amplifier should be penalised or hauled up? I wonder whether it would be constitutionally right. It will affect their fundamental right. Suppose a person gets a knife from a person and injuries somebody and for that reason the person who has lent the knife should not be penalised. It is ultra vires of the Constitution. This should be suitably redrafted or amended. Otherwise, the whole Bill will probably be struck down by the Court.

Another important point is this. Where is the guarantee that the opposition parties will not be victimised by this Bill? Now they are already victimised by the police people and it will be an additional tool for them to victimise the opposition parties. Of course, the ruling party men may get extra time and the police people may not have the guts to follow the provision. Suppose the Hon. Chief Minister or some other Minister or some big person in the party participates, the police people may not have the courage to pull up a particular person. I am afraid that this will be used as one more instrument for victimising the opposition parties by the police. I am quite sure that I am entitled to ask this question with all the emphasis at my command. Though this Bill may be a small one and covering small area but it will have far-reaching implications. Therefore, I suggest that it would be better if this Bill was referred to a Select Committee consisting of all opposition parties where it can be discussed in a calm atmosphere.

The Director of Public Health also should be included in the Bill. The prolonged noise of certain amplifiers may be injurious to health. This point should also be taken into consideration by the Public Health Department. There are so many implications and lacunae in this Bill. I, therefore, request the hon. Members of this House to persuade the Hon. Minister concerned to refer this Bill to a Select Committee.

With these words, I conclude.



1974 டிசம்பர் 20]

THIRU M. A. LATHEEF: Mr. Deputy Speaker, Sir, I have a few remarks to offer so far as the new section 2 of this Amendment Bill is concerned. In the new section, it has been stated that in sub-section (1) of section 41, for the words 'sound amplifiers in public places', the words 'sound amplifiers in any area' shall be substituted. In this new section for the words 'in public place' in the parent Act, the words 'in any area' are sought to be substituted. There will be a lot of misgivings so far as this expression is concerned. So far as the words 'in any area' are concerned, there is a basic difference of legal implications between the words 'place' and the 'area'. A place may be a building or a place where there is no building. Even a ground may be construed or characterised as a 'place' or a place wherein a building is constructed or where a building is found may also be interpreted as a place.

So far as the area is concerned, you cannot always include a building. The area cannot be exactly defined in square miles or in square metres. Therefore, the nature of a place cannot be exactly determined. That is why, in the original Act, the expression 'places' has been used. It not only restricts amplifier to be used in a ground or maidan but the building was also construed as a place. You cannot always bring a building into an area. There may be disputes so far as the interpretation whether the building can also be brought within the word 'area'. Difficulties will always arise because place means any place whether the amplifier is used on the ground or inside the building. Inside the building is also a place. You cannot always say that a building comprises of an area. There will be dispute or there will be difference in the legal opinion as to whether an area is always to be construed to have a building. This difficulty is always there.

What I submit is that the original expression 'any place' was not happily worded and there was a lot of legal interpretation and dispute and therefore the Government thought that the expression 'place' should be substituted by the expression 'area'. But instead of there being more clarification, there will be more doubts and differences of opinion and you cannot exactly define the expression 'area' at any rate and you cannot include the expression 'building' within the expression 'area'. So, it may be properly worded.

[Dr. H. V. Hande] [1974 டிசம்பர் 20

included in this Bill? Why should a person hiring the equipment
or handling the equipment be made to *pay a penalty of Rs. 500*
*for the fault of a person* organising such meetings or other
programmes? For instance, a meeting may be organised either
by Anna D.M.K. or Congress (O), Congress, Communist parties.
Will it be possible for any party to conclude the meetings in
time? Will it be possible for the ruling partly to do so? They
may exceed five or ten minutes of the stipulated time for which
permission might have been given. For that, why a person lend-
ing the amplifier should be penalised or hauled up? I wonder
whether it would be constitutionally right. It will affect their
fundamental right. Suppose a person gets a knife from a person
and injuries somebody and for that reason the person who has
lent the knife should not be penalised. It is ultra vires of the Cons-
titution. This should be suitably redrafted or amended. Other-
wise, the whole Bill will probably be struck down by the Court.

Another important point is this. Where is the guarantee that
the opposition parties will not be victimised by this Bill? Now
they are already victimised by the police people and it will be an
additional tool for them to victimise the opposition parties. Of
course, the ruling party men may get extra time and the police
people may not have the guts to follow the provision. Suppose
the Hon. Chief Minister or some other Minister or some big person
in the party participates, the police people may not have the
courage to pull up a particular person. I am afraid that this will
be used as one more instrument for victimising the opposition parties
by the police. I am quite sure that I am entitled to ask this
question with all the emphasis at my command. Though this
Bill may be a small one and covering small area but it will have
far-reaching implications. Therefore, I suggest that it would be
better if this Bill was referred to a Select Committee consisting
of all opposition parties where it can be discussed in a calm
atmosphere.

The Director of Public Health also should be included in the
Bill. The prolonged noise of certain amplifiers may be injurious
to health. This point should also be taken into consideration by
the Public Health Department. There are so many implications
and lacunae in this Bill. I, therefore, request the hon. Members
of this House to persuade the Hon. Minister concerned to refer
this Bill to a Select Committee.

With these words, I conclude.



1974 டிசம்பர் 20]

THIRU M. A. LATHEEF: Mr. Deputy Speaker, Sir, I have
a few remarks to offer so far as the new section 2 of this Amend-
ment Bill is concerned. In the new section, it has been stated
that in sub-section (1) of section 41, for the words 'sound ampli-
fiers in public places', the words 'sound amplifiers in any area'
shall be substituted. In this new section for the words 'in public
place' in the parent Act, the words 'in any area' are sought to be
substituted. There will be a lot of misgivings so far as this
expression is concerned. So far as the words 'in any area' are
concerned, there is a basic difference of legal implications between
the words 'place' and the 'area'. A place may be a building or
a place where there is no building. Even a ground may be con-
strued or characterised as a 'place' or a place wherein a building
is constructed or where a building is found may also be inter-
preted as a place.

So far as the area is concerned, you cannot always include a
building. The area cannot be exactly defined in square miles or
in square metres. Therefore, the nature of a place cannot be
exactly determined. That is why, in the original Act, the expres-
sion 'places' has been used. It not only restricts amplifier to
be used in a ground or maidan but the building was also construed
as a place. You cannot always bring a building into an area.
There may be disputes so far as the interpretation whether the
building can also be brought within the word 'area'. Difficul-
ties will always arise because place means any place whether
the amplifier is used on the ground or inside the building. Inside
the building is also a place. You cannot always say that a build-
ing comprises of an area. There will be dispute or there will be
difference in the legal opinion as to whether an area is always to
be construed to have a building. This difficulty is always there.

What I submit is that the original expression 'any place' was
not happily worded and there was a lot of legal interpretation and
dispute and therefore the Government thought that the expression
"place" should be substituted by the expression "area". But
instead of there being more clarification, there will be more doubts
and differences of opinion and you cannot exactly define the expres-
sion 'area' at any rate and you cannot include the expression
'building' within the expression 'area'. So, it may be [illegible]
[illegible]

[Thiru M. A. Latheef] [1974 டிசம்பர் 20

With regard to the penalty provided for in section 71-A, namely a fine not exceeding Rs. 500 or imprisonment which may extend to three months, I think that is a little bit serious. It may be lessened to Rs. 250 or one month respectively.

As regards sub-section (2) of section 71-A, it is stated that the police officer can direct the forfeiture of any sound amplifier. Sir, an amplifier may be owned by a private owner who may not be in the actual place of its use and sometimes it is given under the exclu ive possession of the user for a specified period by the actual owner. In such cases, without there being any proper enquiry *ipso facto* if you seize the sound amplifier, that would lead to great trouble. We know how amplifiers are hired and used by us in the public meetings of political parties for some hours and in some cases for two or three or five days. So, this provision wil cause great inconvenience and hardship to the people and this i superfluous and not necessary. Therefore, I request the Hon Minister to consider whether this provision should be retained in the Act.

The other point is that you must make a distinction between a sound amplifier used for the purpose of public nature and for the purpose of private nature. For example, a sound amplifier causes a lot of notice when records are played throughout the day and night in houses where marriages are being solemnised. That cannot be considered as a public purpose and it does not serve a public purpose. In such places, the Government may impose restrictions but in places where it is used for a public purpose, like meetings of political parties which want to educate the public, it should not be restricted. So far as the relevant provision is concerned, even in the Parent Act that distinction has not been properly worded and this requires clarification by the Hon. Minister.

Much has been said about the sound amplifier used by religious institutions like temples, mosques and churches and even synogogues. Whatever may be the places of worship, we consider that it is used by a particular section of the society and it is the primary duty of the society to see that the spiritual and moral aspirations of that community are safeguarded. For instance, in temples 'ushaya pooja' and 'uchhi pooja' are performed within a specified time when the bells will be rung and you must not consider



1974 டிசம்பர் 20]

it as a public nuisance. My hon. Friend, Thiru Palaniswamy has suggested that there should be restriction on the use of sound amplifiers by religious institutions. But I submit that the religious institutions further the cause of public nature and meet the separate aspirations of a particular section of the society, and that too within a specified period. For example, in the mosque also the sound amplifier is used exactly at a specified time and if it is always used you can restrict it. If they use it for a specified time, permission would be granted for it and no restriction should be placed on its use. These are all my observations.

திரு. பெ. சீனிவாசன்: தலைவர் அவர்களே, பொதுவாக அளவுக்கு மீறிய சப்தத்தைக் குறைக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்குமானால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அதை வரவேற்கத் தயாராக இருக்கிறோம். ஆனால், வெளிப்படையாக அண்ணா தி.மு.க.-வின் பிரசாரத்தை கட்டுப்படுத்த வேண்டும் அல்லது தடுக்க வேண்டும் அல்லது இடையூறு செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு தான் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று மிகத் தெளிவாகப் பார்த்தால் தெரிகிறது.

(முற்பகல் 11-00)

மதுரை நகரத்தில் மார்கழி மாதத்தில் அங்கேயிருக்கிற லாட்ஜ்களில் தங்கினால் அதிகாலை 2½ மணியிலிருந்து ஒலிபெருக்கி போடுகிறார்கள். அங்கேயிருக்கிற பர்லாங் கல்லிலெல்லாம்கூட ஒலிபெருக்கியைக் கட்டி தூங்கவிடாமல் செய்கிறார்கள். இதை முதலில் தடுக்கவேண்டும். காலை 6 மணிக்கு முன்னால் போடக்கூடாது என்று சட்டம் கொண்டுவரலாம். ஆனால் இரவு 10.00 மணிக்குமேல் பொதுக்கூட்டம் நடத்தக்கூடாது என்பது சாத்தியமல்ல. அப்படி அமுல்படுத்தினால் அது ஆளுங்கட்சியைத்தான் மிகவும் பாதிக்கும். நம்முடைய முதலமைச்சர் இரவு 2 மணி வரையிலும் சுற்றுப்பயணம் செய்து வருகிறார்கள். பிறகு அபராதம் 500 ரூபாய், 3 மாதம் சிறை தண்டனை என்று இருப்பதில் அந்த 500-ல் சைபரை எடுத்துவிட்டு 50 ரூபாய் என்று வைத்தால் கொஞ்சம் பொருத்தமாக இருக்கும். இங்கே நண்பர் லத்தீப் அவர்கள்கூடச் சொன்னார்கள். எந்தக் காலமாக இருந்தாலும் பொதுக்கூட்டம் குறிப்பிட்ட நேரத்தில் நடத்துகிறோம். ஆனால் மத சம்பந்தமாக இந்து கோவில்களானாலும், எந்தக் கோவிலானாலும் அங்கே ஆம்ப்ளிபையருக்கு எவ்வளவு சக்தி

[திரு. செ. மாதவன்] [1974 டிசம்பர் 20

வேண்டும், அவர்கள் பாதிக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தில்
இல்லாமல் பொதுவாக இதை ரெகுலேட் செய்கிற முறையிலே
தான் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஒலிபெருக்கியை
தடுக்கவேண்டுமென்ற எண்ணமோ போலீசாருக்கு அதிக அதி
காரம் கொடுக்க வேண்டுமென்ற எண்ணமோ எங்களுக்கில்லை என்
பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதே மன்றத்தில் ஒலிபெருக்கி தண்டனை குறைக்கப்பட
வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. சைக்கிளிலே கண்ணாடி
வைப்பதுபற்றிச் சொன்னார்கள். இதற்கு முன்பே முதலமைச்
சரவர்கள் மதுரையில் பதில் சொல்லியிருக்கிறார்கள். இது ஏதோ
கெட்ட நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டதல்ல. கண்ணாடி
வைத்தால் விபத்துக்கள் தடுக்கப்படும் என்று நினைத்து
ஆலோசனைதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் மறுபரிசீலனை
செய்யலாம் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அரசியல்
கட்சிகளைப் பற்றியும் இங்கே பேசப்பட்டது. நாட்டிலே எதைச்
செய்தாலும் அரசியல் வந்துவிடுமோ என்ற அச்சம்தான் எனக்கு
வருகிறது. பிரின்சிபல் ஆக்டையும், திருத்தப்பட்ட சட்டத்தை
யும் படித்துப் பார்த்தால் இந்த சந்தேகம் வராமல் இருக்குமென்று
நான் கருதுகிறேன். அதேபோல் ஃபர்ஃபீச்சர்—போலீசுக்கு
அதிகாரத்தை அதிகமாக்குவதற்காக அல்ல. 'மே' என்றுதான்
போடுகிறோம், 'ஷல்' என்று போடவில்லை. ஆகவே, அது
பொருத்தமான பிரிவு என்றுதான் நான் கருதுகிறேன்.

ஏற்கெனவே உள்ள சட்டத்திலே என்னென்ன வகையான
கூட்டங்கள், ஊர்வலங்களுக்கு இதுபோன்ற பிரிவு செல்லாது,
அமுலாகாது என்பதைத் தெரிவித்திருக்கிறோம். அதில் ஏற்
கெனவே மத சடங்குகள், மத சம்பந்தமான ஊர்வலங்கள்—இவை
போன்ற பொதுமக்கள் காரியங்களில் இந்தச் சட்டம் குறுக்
கிடாது என்பதைத் தெளிவாக ஏற்கெனவே உள்ள சட்டத்தில்
குறிப்பிட்டிருக்கிறோம். ஆகவே, மத சம்பந்தமான நிறுவனங்
களைக் கட்டுப்படுத்தும் என்று யாரும் சந்தேகப்பட வேண்டிய
அவசியமில்லை.

அதே சமயத்தில் மதம் என்று சொல்லிக்கொண்டு, கோவிலுக்கு
மேலே, உச்சியில் ஒலிபெருக்கியை வைத்து, அந்தப் பகுதி முழு
வதும் ஒரு குழப்பத்தை உண்டாக்குகின்ற நிலைமையும் சில இடங்
களில் இருக்கிறது. இருந்தாலும் இதை ஆங்காங்கே இருக்கின்ற
நல்ல எண்ணம் கொண்ட மக்கள் பார்த்துக்கொள்வார்கள் என்ற
நம்பிக்கை இருக்கிறது.



1974 டிசம்பர் 20] [திரு. செ. மாதவன்]

இப்போது வந்திருக்கிற சட்டத்தில் பப்ளிக் ப்ளேஸ் என்பதை
மாற்றியிருக்கிறோம். ஏனென்றால் சில இடங்களில் ஒரு வீட்டில்,
அல்லது ஒரு கடையில் ஒலிபெருக்கியை வைத்து கட்டிவிடுவார்
களானால், அதனால் பல தொல்லைகள் ஏற்படும். அதை முறைப்
படுத்தவேதான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரையில் இரு தரப்பிலிருந்தும்
பல கருத்துக்களைச் சொன்னார்கள். அமைச்சர்களே 10 மணிக்கு
மேல் மைக் இல்லாமல் பேசியிருக்கிறார்கள் என்று எதிர்க்கட்சித்
தரப்பிலும் சொன்னார்கள்; ஆளும் கட்சித் தரப்பிலும் சொன்
னார்கள். என்னைப் பொறுத்தவரையில் எந்தக் கட்சியாக இருந்
தாலும் பேசுவதில் தவறில்லை. இப்படிப்பட்ட தகராறு எல்லா
இடங்களிலும் வருவதில்லை. சில இடங்களில்தான் வருகிறது.
பல இடங்களில் அந்தந்தக் கட்சிக்காரர்கள் விட்டுக்கொடுக்கின்ற
நிலைமையும் இருக்கிறது. சில இடங்களில் அந்த மனப்பான்மை
இல்லாமல் கட்சி வேறுபாடு காட்டுவதால் தகராறு ஏற்படுகிறது.
அதனால் நாடு முழுவதும் தகராறு ஏற்படுகிறது என்று சொல்ல
முடியாது. அதைப்போல எல்லா இடங்களிலும் போலீசார்
தொல்லை கொடுக்கிறார்கள் என்று சொல்லமுடியாது. போலீசார்
ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என்று பாகுபாடு காட்டுவதில்லை. அப்
படியே அவர்கள் பாகுபாடு காட்டினாலும், அவர்கள்மீது நட
வடிக்கை எடுத்து, கண்டிக்க நமக்கு உரிமை இருக்கிறது. ஆகவே,
அவர்கள் சட்டத்தை மீற முடியாது. ஆகவே, போலீசார்
குறுக்கிடுவார்கள் என்ற கருத்தை வைத்துக்கொண்டு, அரசியல்
கட்சிகளைக் கட்டுப்படுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்ட சட்டம்
இது என்று யாரும் எண்ணவேண்டியதில்லை.

பொதுவாக இந்தச் சட்டம் நல்ல நோக்கத்தோடுதான் கொண்டு
வரப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரம் இருந்தால்தான் இந்த
தொல்லை பொதுமக்களுக்குக் குறையும் என்று கருதுகிறோம்.
ஆகவே, இதில் பெரும் எதிர்ப்பைக் காட்டவேண்டிய அவசியம்
இல்லை என்று கருதுகிறேன்.

இந்தச் சட்டத்தை அமுல்படுத்துகின்ற நேரத்தில் பல்வேறு
அங்கத்தினர்கள் சொன்ன நல்ல கருத்துக்களை எல்லாம்—பொது
மக்களுக்கும் தொல்லை இல்லாமல், அரசியல் கட்சிகளுக்கும்
தொல்லை இல்லாமல்—கருத்திற்கொண்டு, காவல்துறையினர் கண்
காணிப்பாக இருப்பார்கள் என்று கூறி. இதை எல்லோரும்
ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** துணை சபாநாயகர் அவர்களே, ஒரு சின்ன விளக்கத்தை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். ஏழை எளிய மக்கள் 'மைக் செட்' வைத்திருப்பார்கள். அதை வைத்துதான் அவர்கள் பிழைப்பு நடத்த வேண்டியிருக்கிறது. ஏதாவது சிறு தவறு நடந்துவிட்டாலும் 'ஃபர்ஃபீச்சர்' செய்து, அவர்கள் பயன்படுத்துகின்ற சாதனங்களைப் பறி முதல் செய்வதாக இருந்தால் அவர்கள் நிச்சயமாகப் பிழைக்க முடியாது.

கோர்ட்டுக்குப் போய் வாங்கிக்கொள்ளலாம் என்றாலும், பிழைப்புக்கே வழியில்லாமல் இருப்பவர்கள் எப்போது கோர்ட்டுக்குப் போய், எப்போது பறிமுதல் செய்த சாமான்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு வருவார்கள்? அதுவரையில் அவர்கள் பிழைப்புக்கு என்ன செய்வார்கள்? ஆகவே, பறிமுதல் செய்வது என்பதை எடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக ஏதாவது 400, 500 என்று வேண்டுமானால் ஃபைன் போடுங்கள். (குறுக்கீடு). 500 ரூபாய் என்பது ரொம்ப அதிகமாக இருப்பதால் அதை 200 என்று குறைத்துக்கொள்ளலாம். ஆகவே, மைக் செட் வைத்திருக்கிற ஏழை எளிய மக்கள் பிழைக்க வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசாங்கத்திற்கு இருந்தால் 'ஃபர்ஃபீச்சர்' என்பதை எடுத்துவிட்டு 'ஃபைன்' என்பதை மட்டும் வைத்துக்கொள்ளுங்கள்.

Dr H. V. HANDE : Sir, I just want to seek one clarification. The Hon. Minister says that the matter can be taken to the Court and decided there. I would like to know where is the guarantee to scrutinise whether the police official has favoured the ruling party at the cost of Opposition party. A particular police official, (it is just possible) might have favoured the ruling party. Suppose the other party is a poor man; how can he go to Court with all the expenses it entails? If there is an appellate authority, which could decide whether the police official has over-stepped his authority, whether he has favoured the ruling party at the cost of opposition party, and whether he has been harsh to the opposition party, then it would be a better thing. It is then possible that the poor would not be victimised.

Secondly, as the hon. lady member has said there should be no forfeiture clause seeking to take away his equipments.

**திரு. எம். ஏ. லத்தீப் :** துணைத் தலைவரவர்களே, கிராமப் புறங்களில் பெரும்பாலும் இந்தமாதிரியாக ஒலிபெருக்கியை வைத்துக் கொண்டு, வாடகைக்கு கொடுத்து ஜீவனம் நடக்கக்கூடிய





ஏழைகள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுடைய ஒலி பெருக்கி பறிமுதல் செய்யப்படும் நிலை உருவானால், பின்னால் யாரும் அதை அவ்வளவு சுலபத்தில் பெறமுடியாது.

மேலும் இந்த ஒலிபெருக்கியை வாடகைக்கு விடுகிறவர்கள் தவறு செய்வது கிடையாது. அதைப் பயன்படுத்துகிறவர்கள் தான் தவறு செய்யக்கூடும். சில நேரங்களில் 2, 3 நாட்களுக்கு சேர்த்து ஒலிபெருக்கியை வாடகைக்குக் கொடுத்துவிடுகிறார்கள். அதைப் பயன்படுத்துகிறவர்கள் வேறு ஒருவராக இருக்கும். உதாரணமாக வாணியம்பாடியில் ஒலிபெருக்கி வைத்திருப்பவர்கள் வெள்ளகுட்டையில் இருக்கின்ற ஒருவருக்கு ஏதாவது ஒரு விசேஷமாக வாடகைக்கு விட்டிருப்பார்கள். 7, 8 நாட்கள் கழிந்துதான் திரும்பப் பெற்றுக்கொள்வார்கள். அந்த 7, 8 நாட்களும் வாடகைக்கு விட்டவர்கள் அங்கே இருக்கமாட்டார்கள். ஆகவே, பறிமுதல் என்பதில் பல சிக்கல்கள் ஏற்படும்.

இன்னும் 'இடம்' என்பதை மாற்றி, 'பகுதி' என்று போடுவதால் பல சிக்கல்கள் ஏற்படும். இடம் என்று சொன்னால் பொதுவாக ஒரு இடத்தைக் குறிப்பிட்டுச் சொல்லிவிடலாம். ஆனால் பகுதி என்று சொல்லும்போது அப்படி குறிப்பிட முடியாது.

Mr. DEPUTY SPEAKER : Don't make any second speech. The hon. Member is making another speech.

Thiru M. A. LATHEEF : First I make myself clear.

Mr. DEPUTY SPEAKER : Try to be brief.

Thiru M. A. LATHEEF : Brevity cannot be at the cost of clarity. I am making my submission clearly, first.

என்னுடைய கருத்து, இடம் என்பதற்கும், பகுதி என்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. குறிப்பாக, ஒரு பகுதியைக் குறிப்பிட்டு, அது "டி நோட்டிஃபைடு ஏரியா" என்று போலீசார் அறிவித்துவிட்டால், அங்கே ஏற்கெனவே இருந்த 'இடம்' என்பது கூட பொருளற்றுப்போகும். அந்த 'இடத்தில்' ஒலிபெருக்கி வைத்திருந்தாலும் பறிமுதல் செய்யக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே, 'ப்ளேஸ்' என்று இருப்பதை மாற்றி 'ஏரியா' என்று போட்டால் சிக்கல் ஏற்படும். அந்த சிக்கல் ஏற்படாத வகையில் இந்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** துணைத் தலைவரவர்களே, "சிட்டி போலீஸ் ஆக்ட்" இருக்கிற இடத்தில்தான் இது பயன்படும். பெரும்பாலும் ஒலிபெருக்கியை வாடகைக்குக் கொடுக்கிறவர்கள்தான் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். வாடகைக்கு கொடுத்தாலும் அதை இயக்குவதற்கு ஒரு ஆள் இருந்தால் போதும். ஆகவே, அவர்களுக்குக் கட்டுப்பாடு இருக்க வேண்டுமென்ற வகையிலே இதைப்போட்டோம்.

"எனி பப்ளிக் ப்ளேஸ்" என்று ஏற்கெனவே இருக்கிறது. இதை மாற்றினாலொழிய எல்லா இடங்களிலும் இந்தச் சட்டத்தை ஒழுங்காகச் செயல்படுத்த முடியாது என்ற காரணத்தால் "பப்ளிக் ப்ளேஸ்" என்பதை மாற்றி, "ஏரியா" என்று போட்டிருக்கிறோம்.

'ஃபர்ஃபீச்சர்' பற்றி சொன்னார்கள். இதில் தவறு நடக்காமல் பார்த்துக்கொள்ளப்படும். யாருக்கும் வேண்டுமென்று தொல்லை கொடுக்கப்படமாட்டாது என்ற உறுதிமொழியைத் தருகிறேன்.

மேலும் எதிர்க்கட்சி, ஆளும்கட்சி என்று அரசியல் வேறுபாடு காட்டப்படும் என்று சொன்னார்கள். ஒவ்வொரு இடத்திலும் இப்படிப்பட்ட தகராறு நடக்கும் அல்லது நடக்கிறது என்று நாம் சொல்ல முடியாது. சில இடங்களில் நடக்கிறது. இல்லை என்று சொல்லவில்லை. பொதுவாக எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் போலீசார் ஆளும் கட்சிக்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்று சொல்வதும், அவர்களே ஆட்சிக்கு வந்துவிட்டால் அவர்கள் நல்லவர்கள் என்று சொல்லக்கூடிய நிலைமையும்தான் நாட்டிலே இருக்கும். இது எல்லோருக்கும் தெரிந்ததுதான். அதற்காக இந்தச் சட்டத்தை மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

தண்டனைக்குள்ளானவர்கள் அப்பீல் செய்துகொள்ள முடியுமா என்று கேட்டார்கள். நிச்சயமாக அதற்கு இடம் இருக்கிறது. நீதி மன்றத்திற்குப் போகலாம் என்று சொல்லும்போது அப்பீலுக்கும் போகலாம். ஆகவே, அப்பீல் செய்துகொள்ள அதிகாரம் இருக்கிறது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** ஒரு சின்ன விளக்கம். இந்தச் சட்டத்தில் 'ஃபர்ஃபீச்சர்' என்று இருப்பதை மாற்றாமல், அதே நேரத்தில் அதனால் பாதிப்பு ஏற்படாமல் இருக்கிற வகையில் இந்த சட்டத்தைக் கொண்டுவர முடியுமா என்று பார்க்க வேண்டும். அல்லது எடுத்த உடனேயே ப்றிமலல் என்று



யாமல், பறிமுதல் செய்வதை கடைசிகட்டமாக வைத்துக்கொள்ள இந்தச் சட்டத்தில் இடம் இருக்கிறதா என்பதை விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** 'மே' என்று போட்டிருப்பதைப் பயன்படுத்திக்கொண்டு எல்லா இடத்திலும் இதைப்பயன்படுத்தாமல் பார்த்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி : "1974-ம் ஆண்டு சென்னை மாநகர காவல் துறை—தமிழ்நாடு நகரத் தொல்லைகள் (திருத்த) சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்குவிடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, "இந்தச் சட்ட முன்வடிவு சட்டமாக ஆக்கப்படவேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**(இ) தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு.**

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு * ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

மதுவை விற்பனை செய்வதற்கான உரிமத்தை ஏலத்தில்விடும் முறையைக் கைவிடுவது என்றும், அதை வழங்குவதில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமை அளிப்பது என்றும் அரசு முடிவு செய்தது. இதன் விளைவாக மேற்கூறிய முடிவுக்குச் செயல்

---

* 14—12—1974 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. எஸ். ஜெ. சாதிக் பாட்சா] [1974 டிசம்பர் 20

வடிவம் கொடுக்க, தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 10/1937) திருத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

அவசரத்தை முன்னிட்டு, தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 4/1974) 16—10—1974 ஆம் நாளன்று தமிழ்நாட்டு ஆளுநர் அவர்களால் சாற்றுரைக்கப்பட்டது.

இச்சட்டத்தின்கீழ்ப் பிறப்பிக்கப்பட்ட விதிகள் செயல்படுவதிலிருந்தும் விலக்களிக்கவும் அல்லது சிறிது காலத்திற்கு நிறுத்தி வைக்கவும், கள்ளைப் பொறுத்த மட்டில் 1—9—1973 ஆம் நாளிலிருந்தும், கள்ளைத் தவிர ஏனைய மதுவைப் பொறுத்த மட்டில் 1—9—1974 ஆம் நாளிலிருந்தும் செயலுக்கு வருமாறு விதிகளைப் பிறப்பிப்பதற்கும் அதிகாரம் பெறுவதென்றும் இது தொடர்பாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சட்ட வரைவு, மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக இப்போது கொண்டு வரப்படுகிறது.

இப்பிரேரணையை ஏற்குமாறு இப்பேரவையை நான் கேட்டுக் கொள்கிறேன்.

THIRU N. K. PALANISAMY: Sir, I move—

"That the concurrence of the Tamil Nadu Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses, consisting of......... members of the Tamil Nadu Legislative Assembly and ...... members of the Tamil Nadu Legislative Council, to consider the Tamil Nadu Prohibition (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 46 of 1974) and that the following members of the Tamil Nadu Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee." (Names of members to be given later.)

THIRU K. N. KUMARASAMI: I second the amendment, Sir.

திரு. என். கே. பழனிசாமி: கனம் துணைத்தலைவர் அவர்களே, சர்க்கார் கொண்டுவந்திருக்கக்கூடிய மசோதா அவசியந்தானா, நமக்கு முன்னால் இருக்கக்கூடிய பிரச்சினை என்ன? ஏற்கனவே இவர்கள் இந்த மசோதாவைக் கொண்டு வருவதற்கு முன்பாக இனிமேல் அந்நிய நாட்டு மதுபானங்களை கோவாப்ரேடிவ்



1974 டிசம்பர் 20] [திரு. என். கே. பழனிசாமி]

ஸ்டோர்கள் மூலமாகத்தான் கொடுக்க இருப்பதாக சொல்லப் பட்டது. ஆனால் இப்போது அவசரச் சட்டத்திலும் சரி—இப் போது வந்திருக்கக்கூடிய மசோதாவை எடுத்துக்கொண்டாலும் சரி, தனிப்பட்டவர்களும் வைத்துக்கொள்ளலாம்—கூட்டுறவு ஸ்டோர்களும் விற்கலாம். கூட்டுறவுத்துறைக்கு ப்ரிபரன்ஸ் கொடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். இதற்கு அர்த்தமே என்ன என்று தெரியவில்லை. ஏற்கனவே சி.பி.எஸ்., இராமநாதன், ஸ்பென்சர் ஆகிய மூன்று பேர்களுக்கே லைசென்சு இருந்தது. இவர்கள் அதை பத்து கடைகளாக்கினார்கள். அப்புறம் 30 கடைகளாயிற்று. இந்த மசோதாவின் காரணமாக கோவாப்ரேடிவ் ஸ்டோர் ஒன்றிரண்டுகளுக்குக் கொடுத்துவிட்டு, தனிப்பட்டவர்கள் யார் வேண்டுமானாலும் லைசென்சு பெறலாம். இப்படி தனிப் பட்டவர்களுக்கு ஏன் கொடுக்கவேண்டும்? தனிப்பட்டவர் களுக்குக் கொடுக்கலாம் என்கிறபோது கட்டணம் வசூலிக்காது, ஆக்ஷனிலேயே கொடுப்பது? அதனால் சர்க்காருக்கு வருமானமாவது வரும்.

ஏற்கனவே அவர்கள் இதைப்போல தடுக்கப்போகிறோம் என்ற உடனே 6 கோடி வுடன் 6 கோடிக்கு ஸ்டாக் செய்தார்கள். அப்புறம் 5 தேங்கிவிட்டது என்று ரிட்டும் போட்டார்கள். என்றார் அல்லது 6 நாளில் அத்தனை ஸ்டாக்கும் தீர்ந்துவிட்டது சர்க்காருக்கு களே, அந்த 6 கோடிக்கு ட்யூடி வந்ததா? இப்படி நஷ்டம் தான் ஏற்படுகிறது. ஒரு கொள்கை இல்லாததனாலே தனிப்பட்டவர்களுக்கு லைசென்சு இன்னும் இந்த மசோதாவிலே தனிப்பட்டவர்களுக்கு லைசென்சு கொடுப்பதற்கு என்ன கண்டிஷன் வைத்திருக்கிறார்கள்? லைடபி லிடி ஆப் அப்ளிகன்ட் என்றால் எதை வைத்து தீர்மானிப்பது? ஒழுங்காகப் பணம் கட்டுவானா இல்லையா என்பதை கொடுத்த பிறகுதான் பார்க்க முடியும்?

இந்த மது பர்மிட் கொடுப்பதிலேயே 500 ரூபாய் கட்டினால் ஆயிரம் ரூபாய் சம்பளக்காரனாக இருந்தால் 3 யூனிட், பதினைந் தாயிரம் ரூபாய் வருமானக்காரராக இருந்தால் 5 யூனிட். எதற் காக? ஹெல்த் க்ரவுண்டிலே டாக்டர் சர்டிபிகேட் கொடுத்தால் பர்மிட் கொடுக்கப்படும் என்றால் அப்புறம் எதற்கு கட்டணம்? ஹைக்கோர்ட்டிலே ஒரு க்ளார்க்—அவனுக்கு மது குடிக்கத்தான் வேண்டும் என்று டாக்டர் ஹெல்த் க்ரவுண்டிலே சர்டிபிகேட் கொடுத்திருக்கிறார். ஆனால் அவரால் 500 ரூபாய் எப்படிக் கட்டுவது?

[திரு. என். கே. பழனிசாமி] [1974 டிசம்பர் 20

அதேமாதிரி தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கலாம் என்ற பிறகு கோவாப்ரேடிவ் ஸ்டோர்களுக்கு என்ன ப்ரிபரன்ஸ்? ஒன்று, கோவாப்ரேடிவ் ஸ்டோர்கள்தான் விற்கலாம், தனிப்பட்டவர்கள் விற்கக்கூடாது என்று செய்ய வேண்டும்.

நாம் சட்டம் கொண்டுவந்தால் போதாது. இப்போதே சென்னையில் 60 பாரல், 70 பாரல் சாராயம் பிடிக்கப்பட்டது. அதை அமைச்சரே போய்ப் பார்த்தார். ஐ.ஜி. போய்ப் பார்த்தார். முன்பாவது எங்காவது தான் கிடைக்கும். இப்போது எங்கும் ரெடிலி அவைலபிள் ஆக இருக்கிறது. ராணிப்பேட்டையில் இருந்து முப்பது பாரல், நாற்பது பாரல் என்று வந்து கொண்டே இருக்கிறது. ராணிப்பேட்டைக்கும் சென்னைக்கும் நடுவில் எத்தனை போலீஸ் ஸ்டேஷன்? எங்காவது அவர்களால் தடுக்க முடிகிறதா? இன்றைக்கு 19 மாஜிஸ்ட்ரேட் கோர்ட் இருக்கிறது என்றால் பத்து கோர்டில் தினம் ஐநூறு பேர், ஆயிரம் பேர் குடித்ததற்காகத் தண்டிக்கப்படுகிறார்கள். எங்காவது சாராயம் காய்ச்சுகிறவர்களைப் பிடித்து தண்டித்திருக்கிறார்களா என்று பாருங்கள். அதற்கு போலீசே உளவு. சும்மா இருந்தால் கூட நீ காய்ச்சு, எனக்கு இவ்வளவு கொடு என்று சொல்லி வாங்கிக் கொள்கிறார்கள், டிவிடெண்ட் மேலே வரைக்கும் போகிறது. இந்த நிலையிலே தனிப்பட்டவர்களுக்கும் லைசென்சு கொடுக்கலாம் என்று போனால் அது சரியில்லை. தனிப்பட்டவர்களை நீக்க வேண்டும், இல்லை—ஆக்ஷன் முறையிலேதான் கொடுக்க வேண்டும் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இந்தச் சட்டம்பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்தச் சட்டத்திலே ஆக்ஷனை விட்டுவிட்டு The suitabil ty of the applicant. என்பதாகப் போட்டிருக்கிறார்கள். கடைசியிலே கோவாப்ரேடிவ் ஸ்டோர்களுக்கு ப்ரிபரன்ஸ் தரப்படும் என்கிறார்கள். எதற்காக? அது நல்ல இயக்கம். மக்களுக்கு அத்தியாவசியமான பண்டங்களை விநியோகிக்கும்படி அவர்களுக்கு நாம் சொல்லியிருக்கிறோம். அதிலேயே ஊழலில் மிதந்து கொண்டிருக்கிறார்கள். மதுவையும் கொடுத்துவிட்டால்—குரங்கைப் பிடித்து தேளைக் கொட்டச் செய்து விட்டதுபோலத்தான் ஆகும்.



1974 டிசம்பர் 20] [திருமதி த. ந. அனந்தநாயகி]

(முற்பகல் 11.30)

ஆகையினாலே, இது ஒன்றும் சமுதாயத்திற்குத் தேவைப்படுகிற காரியமல்ல. கூட்டுறவுத் துறையிடம் கொடுத்து, மதுக் கடைகளை அவர்கள்தான் நடத்த வேண்டுமென்று எந்தவிதத்திலே அவர்கள் சொன்னார்கள் என்று தெரியவில்லை. மதுக் கடைகளை ஆக்ஷனுக்கு விடுங்கள். ஆக்ஷனில் யார் ஹையஸ்ட் பிட்டரோ அவருக்குக் கொடுங்கள். அதன் மூலமாக வருமானம் வரும்.

தனியாரிடம் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் எனக்கு முன்னால் சொன்னாரே, பழனிசாமி அவர்கள், அதுபோல், தனியாருக்குக் கொடுப்பதனால் அபியூஸுக்கு சான்ஸ் இருக்கும். you can give to any applicant. அதனால், உங்களுக்கு வேண்டியவர்களுக்குக் கொடுக்கலாம், வேண்டாதவர்களுக்கு இல்லையென்று சொல்லலாம். ஆகவே, அப்படியில்லாமல், ஆக்ஷன் வைத்து, யார் அதிகமாகக் கேட்கிறார்களோ, அவர்களுக்குக் கொடுங்கள். ஏற்கனவே, இதனால் ரூ. 60 கோடி நஷ்டம் வருகிறது. அந்தப் பணம் இப்படி வருவது நல்லது; சமுதாய நலனுக்குத் தேவைப்படுகிறது. அதிலே லைசென்ஸ் மூலமாக, போதுமான பணம் வராது என்ற காரணத்தால், ஆக்ஷன் மூலமாக வரும் என்பதால் It should be highest bidder can be given the shop அதைவிட்டுவிட்டு, கூட்டுறவுத் துறையிலேயுள்ள ஊழலை இதற்கும் அனுமதிப்பது நல்லதா என்பதை நான் கடுமையாகக் கேட்கிறேன்.

கூட்டுறவு அங்காடிகள் உணவுப் பொருள்கள் விற்கின்றன. அங்கே போய் மது விற்பது மக்களுடைய மென்டாலிட்டியைக் கெடுத்துவிடும் என்று நினைக்கிறேன். அங்கே கெடுதிகள் வராமல் பார்த்துக்கொள்ளவேண்டும். கொஞ்ச நஞ்சம் ஆசையைத் துறந்திருப்பவர்களுக்கெல்லாம் கடையைப் பார்ப்போம், துணியைப் பார்ப்போம் என்று செல்கின்றவர்களுக்கு எல்லாம் அது இன்விடேஷன் கொடுப்பது போலாகிவிடும்.

That is an open invitation to people who are away from the evil ஆகையினாலே, தயவு செய்து கூட்டுறவுக் கடைகளிலே, மதுக் கடைகளை வைக்கவேண்டாம். அதற்கு முற்றுப்புள்ளி வையுங்கள், ஏலத்திலே விடுங்கள். எந்தப் பணக்காரர் ஏலத்தில் அதிகமாக எடுக்கிறாரோ, அவருக்கு விடுங்கள்.

இன்றைக்குச் சென்னைக் கடைகளிலே அரிசியே கிடையாது. ரூ. 600-க்குக் குறைவாகச் சம்பளம் வாங்குபவர்களுக்கு 3 கிலோவாவது போடுகிறோம். அதற்கு மேலே வாங்குகிறவர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். காரணம், முதலமைச்சரவர்கள் விலைக்கு உச்ச வரம்பு என்று சொன்னவுடன், அரிசியை எங்கே போய் வாங்குவது என்று அலைந்து கொண்டிருக்கிறார்கள். கடைகளில் அரிசியே இல்லை. அப்படி இருக்கும்போது, இப்படிப்பட்ட வருமானத்தை வாங்கி, இன்னும் கொஞ்சம் வாங்கி, சப்சிடைஸ் பண்ணினால் கூட நல்லது. இந்த வருமானம் தீய துறையிலேயிருந்து வருவது. அந்த முறையிலே பூராவையும் இன்றைக்குக் கூட்டுறவுத் துறையிடம் கொடுக்கவேண்டாம். வேறு எதற்காவது கொடுங்கள்.

அடுத்தது, ஹெல்த் கிரவுண்டிலே, டாக்டரிடம் சர்ட்டிஃபிகேட் வாங்கினாலும், ரூ. 500 கட்டி, லைசன்ஸ் வாங்கியாக வேண்டும் என்று நிபந்தனை விதித்திருக்கிறார்கள். ஹெல்த் கிரவுண்ட் என்றால், ஏழைக்கு ஒரு உடம்பு, பணக்காரருக்கு ஒரு உடம்பா? Health is same for poor and rich. டாக்டர் சொல்கிறார், அவர் குடித்தால்தான் உயிரோடு இருப்பார், இல்லாவிட்டால் இருக்க மாட்டார் என்று. உண்மையிலே டாக்டரிடம் சர்டிஃபிகேட் வாங்கிய ஏழை, உங்களுடைய ஆட்சியிலே பிழைக்கக் கூடாதா? ரூ. 500 கொடுத்து லைசன்ஸ் வாங்குகிற பணக்காரர்தான் வாழவேண்டுமா? ஹெல்த் கிரவுண்டிலே, ஏழைக்கு ஒரு உடம்பு, பணக்காரருக்கு ஒரு உடம்பா? ஏழையாக இருந்தாலும் ஒரே ஹெல்த் தான், பணக்காரராக இருந்தாலும் ஒரே ஹெல்த்தான். டாக்டர் சர்ட்டிஃபிகேட் கொடுத்து, ஏழை நோயாளி, ரூ. 500 கட்டாமல்—கட்ட முடியாமல்—சாக வேண்டும். பணக்காரர் நோயாளியாக இருந்தால், அவர் டாக்டரிடம் சர்ட்டிஃபிகேட் பெற்று, ரூ. 500 கொடுத்து லைசன்ஸ் வாங்கி, குடித்துவிட்டு வாழவேண்டும். நோய் எல்லோருக்கும் ஒன்றுதானே. நோயால் பீடிக்கப்பட்டால் இருவரும் ஒருவரே என்ற முறையிலே, இன்றைக்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று நான் மிகத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இனிமேல் வேறு போட்டி வரும். இதுவரைக்கும் ஏலத்திலே கேட்டுக்கொண்டிருந்தார்கள். இனிமேல் டி.எல். 4 கோட்டா, டி.எல். 4 கோட்டா, அந்தக் கோட்டா, இந்தக் கோட்டா என்று கேட்பார்கள். ஸ்பிரிட் வேண்டும், டிநேச்சுர்ட் ஸ்பிரிட் வேண்டும் என்று கேட்பார்கள். இதிலே சில நியாயம் இருக்கும், சில அநியாயம் இருக்கும். ஆகவே, அதிகாரிகள் துஷ்பிரயோகம் செய்யாமலும், அமைச்சர்கள் துஷ்பிரயோகம் செய்யாமலும் இருக்க, யாருக்குக் கொடுக்கிறோம், எப்படிக் கொடுக்கிறோம் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்து, நியாயமாகக் கொடுக்க முன்வரவேண்டும்.





இப்பொழுது புரஹிபிஷனைக் கொண்டு வந்து இவ்வளவு நாட்களாகியும் இப்பொழுதும் துஷ்பிரயோகம் என்னுடைய தொகுதியிலே, ரெவின்யூ அமைச்சரே பார்த்தார் கள்ளச் சாராயம் பீப்பாய், பீப்பாயாக உற்பத்தியாகியிருக்கிறது. அது பெரிய குடிசைத் தொழிலாக மாறியிருக்கிறது. கள்ளச் சாராயம் காய்ச்சுவதைக் கடுமையான முறையிலே கட்டுப்படுத்தினால்தான் சரியாக இருக்குமே தவிர, தலைநகரத்திலேயே இந்த மாதிரி இருந்தால், புற நகரங்களில் எப்படி இருக்கும் என்பதை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

இதற்கு முன்னாலே கள்ளுக் கடைகளை, சாராயக் கடைகளை ஏலத்திலே எடுத்தார்கள். அன்றைக்கு நீங்கள் ஒரு அக்ரிமெண்ட் வாங்கினீர்கள். கள்ளுக் கடை வைப்பதற்கு ஏலம் கேட்டு, எடுத்தவர், ¼ பங்கு பணம் கொடுத்து விட்டு, கடையை வைக்காவிட்டாலும் கூட, முதலிலே, ஏலத்திலே சொன்ன தொகைக்கும் அடுத்து ஏலம் எடுப்பவர் சொல்கிற தொகைக்கும் இடையிலே வித்தியாசம் இருந்தால், அதனை முதலிலே கேட்டுவிட்டு, எடுக்காதவர் போட்டுக் கொடுக்க வேண்டுமாம். பாவம், அவர்தான் தன்னால் முடியவில்லையென்று விட்டு விட்டுப் போய் விட்டார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது இந்த பில்லிலே எப்படி ரெலவண்ட் என்று எனக்குப் புரியவில்லை.

How is it relevant to this Bill?

THIRUMATHI T. N. ANANDANAYAKI: I am only talking about toddy and arrack shops; I am not talking about Coffee or Tea

MR. DEPUTY SPEAKER: It is not relevent.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஏதோ கள்ளுக் கடையை எடுத்துவிட்டு, புரஹிபிஷன் கொண்டு வந்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதெல்லாம் முடிந்துவிட்டது.

***திருமதி த. ந. அனந்தநாயகி:*** அவர்களுக்கு ஏலத்திலே விட்டீர்கள், பல ஆயிரக்கணக்கான ரூபாய்க்கு. நாங்கள் ரிட் வரைக்கும் கூடப் போனோம். கோர்ட்டிலே ஒரு தீர்ப்பாகியிருக்கிறது. அதிலே சில தாசில்தார்கள் வேகம் காட்டுகிறார்கள், ஆர். ஆர். ஆக்டை எடுத்துக்கொண்டு போகிறார்கள். சில தாசில்தார்கள் ஆர். ஆர். ஆக்டை எடுத்துக்கொண்டு திரும்பி வந்துவிடுகிறார்கள். பல்லாயிரக் கணக்கான ரூபாய்களைக்கேட்டு, கடையை நடத்தாதவன்கிட்டேபோய் காசு கேட்கிறோம். அவை இன்னும் பென்டிங்காக இருக்கின்றன. திரும்பவும் தாசில்தார் விசாரித்துச் சொல்லவேண்டுமென்று கோர்ட் சொல்லியிருக்கிறது. நீங்கள் எப்படி விசாரிக்கப் போகிறீர்கள்? தாசில்தார் எப்படி விசாரிக்கப் போகிறார்? [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) எழுந்தார்] (குறுக்கீடு) நான் ஒன்றும் கள்ளுக்கடைக்கு வக்காலத்து வாங்கவில்லை. நீங்கள் உட்காருங்கள். நான் பேசும் பொழுது நீங்கள் உட்காருங்கள்.

***திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):*** அவர்கள் பேசும் பொழுது நான் எழுந்திருப்பது அவர்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. அவர் என்னை உட்காரச் சொன்னார். அவர் வீட்டிற்கு நான் சென்று, அப்பொழுது அவர் உட்காரச் சொன்னால் உட்காருவேன், எழுந்திரு என்றால் எழுந்துகொள்வேன். ஆனால், இது சட்டசபை. இங்கே அவர் சொல்லமுடியாது. இருந்தாலும், என்மீது உள்ள உரிமை காரணமாக அவர் சொல்கிறார் என்று எடுத்துக்கொள்கிறேன்.

நம்முடைய அம்மையார் அவர்கள் ஹைகோர்ட்டிலே ரிட்டுக்கு எடுத்துப்போனோம் என்றெல்லாம் சொல்கிறார்கள். அவர்கள் இது சம்பந்தமாக, ஜெனரல் இஷ்யூவாக இருந்தாலும் சரி, பர்டிக்குலர் இஷ்யூவாக இருந்தாலும் சரி. அந்த ரெக்கவரியை ரைட் ஆஃப் செய்யவேண்டுமென்று அவர்கள் ரிட்டிலே வக்கீலாக இருந்தால், அவர்கள் இந்த மன்றத்திலே வாதாடுவது சரியல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுது நான் உட்கார்ந்து கொள்கிறேன்.

***திருமதி த. ந. அனந்தநாயகி:*** இப்பொழுது நீங்கள் ஜட்ஜ் என்று வாதாடுகிறேன்? (குறுக்கீடு) சமுதாயத்திலே உள்ளவர்களுக்காக வாதாடுகிறேன். அவர்கள் கஷ்டப்படுகிறார்கள், அவர்கள் குடும்பம் கஷ்டப்படுகிறது என்று இங்கே வக்காலத்து வாங்க





முடியும். அங்கே வக்காலத்து வாங்கித் தரமுடியும். இங்கே வக்காலத்து வாங்கிப் பிரயோஜனம் கிடையாது. அங்கே வாங்கினாலும் நீதி கிடைக்கும். அவர்களுக்குப் புரியும். இங்கே சொன்னால் புரியாது . . .

***மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:*** இங்கே அம்மையார் அவர்கள் அப்படி சொல்லக் கூடாது. புரியாது என்று சொல்லாதீர்கள். பல விஷயங்கள் புரிகின்றன. புரிந்துகொண்டு தான் நடவடிக்கை எடுக்கிறோம்.

***திருமதி த. ந. அனந்தநாயகி:*** சட்டமன்றத்திலே வக்காலத்து வாங்குவது . . .

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:*** அங்கே கையெழுத்து போட்டு ஃபார்ம் கொடுக்கவேண்டும், வக்காலத்து வாங்க. இங்கே கையெழுத்துப் போடாமல் பேசலாம்.

***திருமதி த. ந. அனந்தநாயகி:*** You are also a lawyer; it will be reducing the dignity of your own profession. வக்காலத்து போடுவது நீதிமன்றத்திலே எங்களுக்குள்ள உரிமை. சட்டமன்றத்திலே நாங்கள் பேசும்பொழுது, இன்றைக்குள்ள சில குறைகளை நாங்கள் அரசுக்குத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். சில அப்பாவிகளை ஆர்.ஆர். ஆக்டிலே பயமுறுத்துகிறார்கள். இந்த அப்பாவிகள் என்ன சொல்கிறார்கள்? நாங்கள் விட்டுப் போவதற்குக் காரணமே, கள்ளச் சாராயம் காய்ச்சப் பட்டது, இயற்கையின் சீற்றங்களால் நாங்கள் இருக்க முடியவில்லை என்று சொல்கிறார்கள். இந்தக் காரணங்களை எந்தத் தாசில்தாரும் விசாரித்து, அளவு எடுத்து ஒரு முடிவிற்கு வரமுடியாது. அந்தந்தத் தாசில்தார் முடிவிற்கு நீங்கள் விடுகிறீர்கள்.

Naturally you are leaving it to the arbitrary decision of the Tahsildar.

அவர்கள் விருப்பு-வெறுப்புகளுக்கு அனுப்புவதாலே என்ன லாபம்? ஆகவே, இந்தப் பிரச்னைகள் எல்லாவற்றையும் ஆர அமற அலசிப் பார்த்து, காரணத்துடன் நாம் ஒரு முடிவு எடுக்க வேண்டும். கள்ளுக்கடை நடத்ாதவனை ஆர்.ஆர். ஆக்டிலே சேர்த்து, ஜப்தி செய்வோம் என்று சொன்னால் அது அநியாயம். ஆகவே, அரசு நடத்துகின்ற காரியங்கள் எல்லாம் சரியாக இருக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த சட்டத்திலே உள்ள டெபனிஷன்படி பார்த்தால் ஒரே குழப்பமாக இருக்கிறது.

whether the applicant is a person who will abide by the provisions of this Act.

என்று இருக்கிறது. இதை யார் டிசைட் பண்ணுவார்கள். ஒரு அப்ளிகெண்ட் என்றால் என்ன என்ன தகுதி என்று இருக்கிறது என்று ரூல்ஸ் போடலாம், இவ்வளவு சொத்து இருக்கவேண்டும், மற்றவை இருக்கவேண்டும் என்று இருக்கலாம். ஆனால்

whether the applicant will abide by the provisions of this Act and the rules made thereunder

என்று பொதுவாகச் சொன்னால் எதை வைத்து எந்தக் கருவியை வைத்து அதைக் கண்டுபிடிக்கமுடியும். இது இப்போதுதான் புதிதாக வருகிற சட்டம். யார் யார் இந்தச் சட்டத்தினுடைய புரவிஷன்ஸ்படி ஒழுங்காக நடத்துவார்களோ என்று சொன்னால் இது இனிமேல்தான் தெரியும், அப்படியிருக்கும்போது நீங்களே

whether the applicant is a person who will abide by the provisions of this Act and the rules made thereunder

என்று டெபனிஷன் போட்டால் ஏதோ அவர்கள்தான் அபைட் பண்ணுகிறவர்கள் மற்றவர்கள் எல்லாம் அபைட் பண்ணாதவர்கள் என்று சொன்னால் ஒரே அப்ஸர்ட் ஆக இருக்கிறது. அது இருக்கக் கூடாது என்று சொல்லி உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுவிலக்குச் சட்டம் சம்பந்தமாகக் கொண்டு வரப்பட்டிருக்கிற திருத்தங்களையொட்டி என்னுடைய கருத்தினைத் தெரிவிக்க விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கடந்த மூன்றாண்டுக் காலத்திலே அவர்கள் சாதித்த மிகப் பெரிய சாதனை மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்ததும் பல்லாயிரக்கணக்கான குடிகாரர்களை உருவாக்கியதும்தான் சாதனையாக இன்றைக்குச் சொல்லிக்கொள்கிறார்கள். இன்றைக்கு பெர்மிட், லைசென்ஸ் என்ற பிரிவின் அடிப்படையிலே நிறைய பெர்மிட்கள் வாங்க முயற்சிசெய்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். அதிகாரிகளுக்கு என்று வழங்கப்பட்டுள்ள இந்த அதிகாரத்தை வைத்து நிலைமை என்ன ஆகும் என்று புரிந்து கொள்ளலாம். subject to the provisions of section 20-B in considering an application for the grant of a licence or permit under this Act, the authority competent to grant such licence or permit as the case may be shall have regard to the following **matters**, namely, (a) the suitability of the applicant for the grant of licence



or permit as the case may be: (b) whether the applicant is a person who will abide by the provisions of this Act and the rules made thereunder;

என்ற பிரிவுகள் திருத்தத்திலே இருக்கின்றன. ஆகவே யாருக்குக் கொடுக்க வேண்டும், யார் யாருக்குக் கொடுக்கவேண்டியதில்லை என்ற இறுதி முடிவினை எடுக்கின்ற அதிகாரத்தை அதிகாரிகள் எடுத்துக்கொள்ளக்கூடிய முறையிலே இந்தத் திருத்தம் அமைந்திருக்கிறது. ஒரு சட்டம் நல்ல சட்டமாக இருக்குமானால்

it should not be arbitrary, it should not be discriminatory.

என்று நாம் பல வழக்குகளிலே படித்து இருக்கிறோம். அதை வைத்துப் பார்க்கிற நேரத்திலே இந்தத் திருத்தச் சட்டங்கள் நிச்சயமாக சட்டத்திற்குரிய இலக்கணத்தோடு சட்டமாக அவை இருக்காது. நாளைக்கு ஒரு அதிகாய லஞ்சத்தை வாங்கிக்கொண்டு, பணத்தை வாங்கிக்கொண்டு லைசென்ஸ் பெர்மிட் தருவார் என்றால் அதைக் கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு, அதைக் கண்டிக்க முடியாத அளவிற்கு அதிகாரிகளுக்குப் பாதுகாப்பாக இந்தச் சட்டம் அமைந்திருக்கிறது. ஆகவே இந்தத் திருத்தத்தை வாபஸ் வாங்கி உரிய முறையிலே கொண்டுவர வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய கட்சியின் சார்பாக நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே பேசிய திரு. ஆலடி அருணா அவர்கள் ஊழலையே நிர்வாகமாக்கிவிட்டார்கள் என்று சொன்னார்கள், இந்த மசோதாவினால் ஊழலையே சட்டமாக்கிவிடக்கூடிய கொடுமையான நிலைமை உருவாகக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** இந்தத் திருத்த மசோதாவின்மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மசோதாவின் தேவையே தமிழ்நாட்டிலே மதுவிலக்கை மீண்டும் அமலாக்குவதற்காகக் கொண்டுவரப்பட்ட சட்டத்தை யொட்டி எழுந்தது ஆகும். சட்டங்களை நிறைவேற்றும் போது அந்தச் சட்டத்தினுடைய நோக்கங்களும் நல்ல நோக்கங்களாக இருக்கவேண்டும். சட்டத்தை நிறைவேற்ற முயற்சிக்கும்போது எந்தச் சட்டமாக இருந்தாலும் அதிலேயுள்ள நல்லவைகளைக் காணுவது சிறந்தது ஆகும். பல சட்டங்களிலே சட்டங்களின் நோக்கங்களை நிறைவேற்றக்கூடிய பொறுப்பு,

வரையறைகளை நிறைவேற்றக்கூடிய பொறுப்பு அதிகாரி
களிடத்திலே விடக்கூடிய நிலைமை இருக்கிறது. முழுமையாக
அதிகாரங்களை அதிகாரிகளிடத்திலே விடுவது பல தவருன
முறைகளிலே அவர்கள் ஈடுபடக்கூடிய நிலைமையை ஏற்படுத்தி
விடுகிறது. எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் எடுத்துச்
சொன்ஞர்கள். இங்கே யார் முடிவு செய்வது என்பதைப்பற்றி
suitability of the applicant for the grant of licence or permit
என்று சொல்லியிருக்கிருர்கள். நம்முடைய நோக்கமே குடிப்பது
தவறு, அந்தப் பிணியிலிருந்து நாட்டை விடுவிப்பதற்கு
முயற்சிக்கவேண்டும் இந்த நிலையில் சிலருடைய வியாதிகளுக்காக
வியாதிக்கு வியாதியை ஏற்படுத்துவது என்ற முறையிலே
வியாதியைக் கொண்டுவரக்கூடிய நிலைமை ஏற்படுத்தக்கூடாது
என்று கருதுகிறேன். குடிப்பதே ஒரு வியாதி. குடித்தால்தான்
வியாதி தீரும் என்ற முறையில் சட்டத்திலே வரையறுப்பது
சரியாக இருக்காது. அதே நேரத்திலே சிலர் குடித்துத்தான்
ஆகவேண்டுமென்ற நிலைமையிலே இருக்கிருர்கள், என்னதான்
சட்டம் இருந்தாலும் குடித்தால்தான் வாழமுடியும் என்ற
நிலைமையிலே இருக்கக்கூடியவர்கள் இருந்துகொண்டிருக்கிருர்கள்.
தவருன வழியிலே அவர்கள் சென்றுவிடக்கூடாது, பெர்மிட்
வாங்கிக்கொண்டு குடிக்கவேண்டுமென்ற முறையிலே செய்யும்
போது வருகிற வருமானம் அரசாங்கத்திற்கு முழுமையாக
வருவதற்கான முறையிலே செய்யவேண்டும் என்று இருக்கிறது.
இதை யார் முடிவு செய்வது? சூட்டபிலிட்டி என்ருல் என்ன?
suitability means, it comprehends all.
ஒரு திருட்டு செய்வதற்கு சூட்டபிலிட்டி தேவை, குடித்துக்
குடித்துக் குட்டிச்சுவர் ஆவதற்கும் சூட்டபிலிட்டி தேவை. நான்
சொல்கிறேன் குடிப்பதற்கு சூட்டபிலிட்டி எனக்கு இல்லை என்று
ஆனால் எல்லோரும் எனக்கு சூட்டபிளிட்டி இருக்கிறது
என்கிருர்கள். சூட்டபிலிட்டியை யார் முடிவு செய்வது? அதிகாரி
களிடம் அதை விட்டுவிடலாமா? மதுவிலக்கு அமலை ரத்துசெய்த
காலத்திலே கோடிக்கணக்கான ரூபாய் அரசாங்கத்திற்கு
வந்திருக்கிறது. அதைவிட்டுவிட்டு ஒரு நல்ல கொள்கையை
அண்ணாவின் கொள்கையை நாட்டில் இன்றைக்குப் பரப்பி
யிருக்கிறோம். அரசாங்கம் செய்வதற்குப் பதில் இன்றைக்கு
போலீஸ் ஸ்டேஷனிலே இன்ஸ்பெக்டர்கள் உட்கார்ந்துகொண்டு
ஏலம் விட்டுக் கொண்டிருக்கிருர்கள். இந்தப் பகுதிக்கு நீ
சப்ளையர், அந்தப் பகுதிக்கு நீ சப்ளையர் என்று கொடுத்துவிடு





கிருர்கள். யாரையாவது குடித்துவிட்டார்கள் என்று பிடித்தால் நீ யாரிடத்திலே வாங்கினுய் என்று கேட்கும்போது அவன் இன்ஞரிடத்தில் வாங்கினேன் என்று சொன்ஞல் ஓ, அவஞ அவன் என்ஞல் அனுமதிக்கப்பட்டவன், நீ போ என்று அவனை விட்டு விடுவது, அங்கே குடித்தேன் என்று சொன்ஞல் அவஞ, அவனுக்கு லைசென்ஸ் நான் கொடுக்கவில்லையே, 10 ஆயிரம் அவன் கொடுக்க வில்லையே என்று சொல்லி அவனைப்பிடித்து உள்ளே போ என்பது, இது ஒரு இடத்தில் அல்ல, நாடு முழுவதும் நடந்துகொண்டு இருக்கிறது. அப்படிப்பட்ட போலீஸ்காரர்களையும் ஜெயிலில் போட வேண்டும். குடித்தால் ஜெயிலில் போடுகிறோம், சட்டத்தைப் பாதுகாக்கக்கூடிய போலீஸார் ஏலம் விடுகிருர் என்ருல் அவர்களை யெல்லாம் தூக்கிலிடவேண்டும்.

**திரு. துரை முருகன் :** போலீஸ்காரர்கள் எல்லாம் நாடு முழுவதும் தவறு செய்கிருர்கள் என்று சொல்கிருர்கள். சில இடங்களில் இருக்கலாம், ஒத்துக்கொள்கிறேன். ஆனல் அவர்கள் நாடு முழுவதும் ஒட்டுமொத்தமாக தவறு செய்வதாக சொல்லி போலீஸ் ஸ்டேஷன்களில் எல்லாம் ஏலம் நடக்கிறது என்று சொல்லி ஒரு இலாகாவையே மாசுபடுத்துவது சரிதாஞ? சில நேரங்களிலே சில மனிதர்கள், சில இடங்களில் இருக்கலாம். அதைச் சுட்டிக்காட்டவேண்டும். ஆனல் போலீஸ் இலாகாவையே ஒட்டுமொத்தமாக குறை சொல்வது சரியல்ல.

**திரு. எம். ஏ. லத்தீப் :** எல்லா இலாகாக்களிலும் நல்லவர்களும் இருக்கிருர்கள், மற்றவர்களும் இருக்கிருர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** எல்லாத் தொழில் களிலும் நல்லவர்களும் இருக்கிருர்கள், கெட்டவர்களும் இருக்கிருர்கள். நம்முடைய தொழிலிலேகூட, அதாவது வழக்கறிஞர் தொழிலிலேயும் நல்லவர்களும் இருக்கிருர்கள், கெட்டவர்களும் இருக்கிருர்கள். கெட்டவர்களைத் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** அதை முழுமையாக எடுக்கவில்லையோ என்ற ஐயப்பாட்டின் காரணமாகத்தான் இதைச் சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். நான் குறிப்பிட்டு எதையும் சொல்லவில்லை. மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு

[திரு. எம். ஏ. லத்தீப்] [1974 டிசம்பர் 20

வேண்டுமானால் சில குறிப்புகளைக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன். திரு. துரை முருகன் அவர்கள் குறிப்பாகச் சொல்ல வில்லை என்று சொன்னார்கள். நான் குறிப்பிட்ட விவரங்களைக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் தயவுசெய்து அங்கே வந்துகூடப் பார்க்கலாம். அவர்கள் செல்லும் நேரத்தில் கடைகளைப் பார்க்கலாம். ஆகையால், இவ்வளவு பகிரங்கமாக நடக்கிறது. அரசாங்கத்திற்கு மதுவிலக்கைக் கொண்டு வந்ததால் 60 கோடி ரூபாய் நஷ்டம். ஆனால் தனிப்பட்டவர்கள், சில அதிகாரிகள் அல்லது மற்ற ஏஜண்டுகள், இடையிலே உள்ள தரகர்கள் மக்களின் பணத்தைச் சுரண்டி ஏழைகள் ஏழைகளாகவே ஆகிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையை வைத்திருக்க வேண்டுமா என்பதை அரசு சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இந்தச் சட்டங்களை முழுமையாக நிலைநிறுத்தக்கூடிய, செயல்படுத்தக் கூடிய அதிகாரங்களைச் சில சந்தர்ப்பங்களில் அதிகாரிகளே திரித்துக் கொள்வார்களேயானால், நாம் நிறைவேற்றிய சட்டங்களி லேயெல்லாம், பல ஊழல்களும், இன்னல்களும் ஏற்பட்டிருக் கின்றன என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே சொல்லியிருப்பது 'சூட்டபிலிட்டி'. இந்த 'சூட்டபிலிட்டி'-யை டிடர்மின் செய்வது யார்? ஏதோ கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போல் இருக்கிறது. குடிக்காமல் வாழ்க்கையே நடத்த முடியாது, குடிக்காவிட்டால் செத்து விடுவார்கள் என்பதற்காக, யாரிடத்திலேயோ ஏலம் விட்டு, செய்கிறீர்கள். இன்னொன்று என்னவென்றால், அடுத்துச் சொல்கிறார்கள். அது இன்னும் விசித்திரமாக இருக்கிறது.

'Whether the applicant is a person who will abide by the provisions of the Act and the rules made thereunder'
இது என்னவென்று தெரியவில்லை.

'Such other matters as may be prescribed.'
இது என்ன?

'Such other matters as may be prescribed'
என்றால் எது எதையோ 'பிரஸ்கிரைப்' செய்து அனுப்பினால் நிலைநிறுத்தக்கூடிய அதிகாரிகள் தவறாக நடக்க மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்? நாட்டிலே பொறுப்புணர்ச்சி குறைந்திருக்கிறது என்பதை ஏற்றுக்கொண்டாக வேண்டும்.



1974 டிசம்பர் 20] [திரு. எம். ஏ. லத்தீப்]

அமைச்சர்களுக்கு நல்லெண்ணம் இருக்கிறது. எதிர்க்கட்சி களுக்கும், ஆளுங்கட்சிக்கும் நல்லவைகள் நடக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. மேல்மட்டத்தில் இருக்கிற அதிகாரிகள் சிலருக்கும் அந்த எண்ணம் இருக்கிறது. கீழ் மட்டத்திலும் ஒன்றுமறியாத அப்பாவி அதிகாரிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் அதிலே உருத் தெரியாதவர்கள் சிலர் நாட்டிலேயிருக்கும்பொழுது முழுமையாக அதிகாரிகளிடத்திலே கொடுத்தால் பயங்கரமான சூழ்நிலை உருவாகிவிடும். நாட்டிலே உள்ள பிரச்னைகள் மேலும் சிக்கலாகிவிடும். ஏழைகள் ஏழை களாகவே ஆவார்கள், சமூக விரோதிகள் பணக்காரர்களாக மாறும் நிலைமை உருவாகிவிடும்.

அதுமட்டுமல்லாமல், பலயிடங்களிலேயும் போலீஸ்காரர்களே சட்டத்திற்குப் புறம்பாக வாங்கியிருப்பவர்களைக் கண்ட்ரோல் செய்யும் நிலைமையில் இருக்கிறார்கள். ஆகவே, சட்டங்களை இந்த நிலைமைகளுக்கு உருவாக்காமல் தயவுசெய்து நல்லமுறையில் உருவாக்கி, சட்டத்திலேயே விளக்கங்களைக் கொடுத்து, 'காம்ப்ர ஹென்சிவ் ஆக்ட்' ஏற்படுத்துவது நல்லது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் கூறியதைப்போல் இதைப் பொறுக்குக் குழுவிற்கு விட்டால் அதை ஆதரிக்கக் கூடிய நிலையில் நான் இருக்கிறேன். ஆகவே, அமைச்சரவர்கள் தயவுசெய்து அதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதேநேரத்தில், கூட்டுறவுத் துறைக்கு பருப்பு, மிளகாய் வாங்குவதற்கு போவார்கள். அம்மையார் அவர்களுக்கு மிளகாய் எப்பொழுதும் அதிகமாகத் தேவைப்படுகிறது. அம்மையார் அவர்களே அங்கே செல்லும்பொழுது, அம்மையார் பார்த்தால் பரவாயில்லை, கூட்டுறவுத் துறையில் பாட்டில்களை அவர்கள் பார்த்தால் பரவாயில்லை, ஆனால் யாரோ இளம் வட்டம், காலேஜுக்கு எதிரிலேயிருந்தால், மாணவன் சென்று பார்க்கும் பொழுது, பார்ப்பதற்கு அழகாக இருக்கிறது, இதையும் வாங்கலாம் என்று எண்ணினால் . . .

**திரு. துரை முருகன் :** பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷன் சார். கூட்டுறவுத் துறைக்குச் சென்று அங்கே பருப்பு வாங்கும் நேரத்தில், பாட்டில்கள் இருக்கின்றன என்று அதிலே ஆசை வந்து விட்டால் உடனே பாட்டிலைக் கொடுக்க மாட்டான். லைசென்ஸ் இருந்தால்தான் கொடுப்பான். காசைக் கொடுத்துப் பாட்டிலைக்

கொடு என்றால் கொடுக்க மாட்டான். யார் யாருக்கு லைசென்ஸ் இருக்கிறதோ அவர்களுக்குத்தான் கொடுப்பான். வேண்டுமானால் பாட்டிலைப் பார்த்து விட்டு வந்ததுதான் லாபமாக இருக்கும்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** பாட்டிலைப் பார்த்துவிட்டால் லைசென்ஸ் வாங்குவதற்கான வழியைச் செய்து கொள்வான். இரண்டாவதாக, கூட்டுறவுத் துறையைப் பற்றிக் குறை சொல்வதாக துரை முருகன் அவர்கள் கூறுவதாக நினைக்க வேண்டாம். இருக்கின்ற நிலைமைகளை மேலும் சொல்ல வேண்டும் என்று துரை முருகன் அவர்கள் நினைக்கிறார்கள். ஆகவே, கூட்டுறவுத் துறையிலே வைக்காமல், கூட்டுறவுத் துறையில் என்றால் எப்படி என்று விளக்க வேண்டும். இதற்குத் திட்டம் வைத்திருக்கிறார்களா, பணம் கொடுத்துக் கொடுக்கிறீர்களா அல்லது அப்படியே கொடுத்து விடுகிறீர்களா, ஏன் அப்படிக் கொடுக்கிறீர்கள்? ஹை பிட்டிங் கேட்பவர்களுக்கு என்று வைத்தால் அரசாங்கத்திற்கு அதனால் வருமானம் வரட்டுமே. கூட்டுறவுத் துறைக்கு ஏன் கொடுக்க வேண்டும்? தனிப்பட்டவர்கள் நடத்தட்டுமே. இது கூட்டுறவுத் துறையில் இருப்பதால் அரசாங்கத்திற்கு என்ன லாபம்? இதைக் கூட்டுறவாக ஏன் ஏற்படுத்த வேண்டும். இம்மாதிரி காரியங்களுக்கு ஏன் கூட்டுறவு? நல்ல காரியங்களிலேயே கூட்டுறவு இல்லை, என்னென்னமோ நடக்கிறது. நம்மிடத்திலேயே கூட்டுறவு இல்லை. ஆகையால் அதைப்பற்றிச் சொல்ல விரும்பவில்லை. தயவுசெய்து கூட்டுறவுத் துறைக்குக் கொடுக்கக்கூடாது என்று சொல்லி, இந்தச் சட்டம் விளக்கம் இல்லாத சட்டமாக இருக்கிறது—மன்னிக்க வேண்டும்—சந்தேகங்களை உருவாக்கக் கூடியதாக இருக்கிறது. அதிகாரிகள் அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்ய வாய்ப்பு தரக்கூடிய சட்டமாக இருக்கிறது. ஆகவே, இந்தச் சட்டத்தை வாபஸ் வாங்கிக்கொண்டு, பொறுக்குக் குழுவின் வாயிலாக மேற்கொண்டு எப்படி நடத்த வேண்டுமென்று பல்வேறு கட்சிகளின் அபிப்பிராயங்களையும் கேட்டு, சட்ட நிபுணர்களை யெல்லாம் கேட்டு, மாண்புமிகு சட்ட அமைச்சரவர்களே ஒரு சட்ட நிபுணராக இருக்கிறார்கள், எனவே, இதைப் பொறுக்குக் குழுவிற்கு அனுப்புவதற்கு அமைச்சரவர்கள் நிச்சயமாக ஒத்துக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

* **திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** மதிப்பிற்குரிய துணை சபாநாயகர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டு வந்துள்ள சட்டத்தை வரவேற்று





என்னுடைய கருத்துக்களை இங்கே கூற விரும்புகிறேன். எனக்கு முன்னால் பேசிய எதிர்க்கட்சியிலே இருக்கக்கூடிய உறுப்பினர்கள் மதுவிலக்கை மீண்டும் கொண்டுவந்ததை ஆதரித்து, அதிலே பல நல்ல யோசனைகளையெல்லாம் சொன்னார்கள். என்னதான் எதிர்க்கட்சியாக இருந்தாலும் எதையுமே எதிர்க்க வேண்டுமென்ற எண்ணத்திலே செயல்படாமல் மதுவிலக்கை இத்தகைய முறையிலே அமல்படுத்த வேண்டுமென்று கூறிய கருத்துக்களுக்காக ஆளுங்கட்சியின் தரப்பிலே நன்றி கூறிக்கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய முஸ்லீம் லீக் உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் சொன்னார்கள், மதுவிலக்கை அமல்படுத்த வேண்டியவர்களே தவறு செய்கிறார்கள், வேலியே பயிரை மேய்கிற சூழ்நிலை இருக்கிறது என்று சொன்னார்கள். இதை ஒட்டு மொத்தமாகச் சொல்லவில்லை என்றாலும், சிலயிடங்களிலே நடைபெறுவதை இல்லை என்று சொல்லிவிட முடியாது. ஆகையால் இந்த மதுவிலக்கை அமல்படுத்த வேண்டியவர்கள் அமல்படுத்தத் தவறி விடுவார்களேயானால் அந்த இடங்களிலேயெல்லாம் அரசாங்கம் அல்லது அந்தத் துறையிலேயிருக்கும் பெரிய அதிகாரிகள் கண்ணுங்கருத்துமாகச் செயல்பட வேண்டுமென்ற ஆலோசனையைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், உண்மையாகவே இந்த மதுவிலக்கைக் கொண்டு வந்ததன் காரணமாக அரசாங்கத்திற்கு 55 அல்லது 60 கோடி ரூபாய் வருமானம், வந்து கொண்டிருந்த வருமானம் வரவில்லை. அதனால் பல சங்கடங்கள், பல சிரமங்கள், தமிழக மக்களுக்கு நன்மைகள் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் இந்தத் திட்டத்தை இந்த ஆண்டிலே அவர்கள் அமல் படுத்துகிறார்கள். அதனால் பல சங்கடங்கள் இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது என்பதை எதிர்க் கட்சியிலே இருப்பவர்களும் ஒத்துக்கொள்வார்கள். ஆனால் அரசாங்கத்திற்குச் சங்கடங்கள் வந்து, வரக்கூடிய வருமானங்கள் அரசாங்கத்திற்கு வராமல், ஆனால் அமல்படுத்துகின்ற பிரிவுகளிலே சில தேக்கங்கள், நடைமுறையிலே செயல்படுத்தும் விதத்திலே சில முறைகேடுகள் இருக்கிறது என்றால் அந்தப் பணம், அரசாங்கத்திற்கு வரக்கூடிய பணம் வேறு எங்கோ தனிப்பட்டவர்களுக்கு, சிலசில அதிகாரிகளுக்குச் சென்று விடுகிறது என்றால் மக்களுக்கு நாம் செய்ய நினைத்தது செய்யப்படவில்லை என்பதைத் தான் அது எடுத்துக் காட்டுகிறது. ஆகையினால் என்னுடைய

ஆலோசனையை இன்றைக்குச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய அமைச்சரவர்களும், அதே சமயத்தில் முதலமைச்சரவர்களும் அதைப் பரிசீலிப்பார்கள் என்றே நான் கருதுகிறேன்.

(நண்பகல் 12-00)

ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷன் ஏரியாவிலும் மதுவிலக்குத் திட்டத்தை அமல்படுத்தும் பணியில் சர்வ கட்சியினர் கொண்ட ஒரு கமிட்டி நியமிக்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இந்தக் கமிட்டி அமைப்பது பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். மாநில அளவில் கமிட்டி அமைக்க வேண்டும், மாவட்ட அளவில் கமிட்டி அமைக்க வேண்டுமென்று உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** என்னுடைய கருத்து மாவட்ட அளவில் அமைத்தால் மட்டும் போதாது என்பதாகும். ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக்கும் ஒரு கமிட்டி அமைக்க வேண்டும். போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்களாக, அல்லது இன்ஸ்பெக்டர்களாக இருக்கக்கூடியவர்கள் அந்தப் பகுதியில் சாராயம் காய்ச்சுகிற இடத்திற்குச் செல்லுகிறார்களா, பார்க்கிறார்களா அல்லது மறைமுகமாக உதவி செய்கிறார்களா என்பதை எல்லாம் 'செக்' செய்வதற்கு போலீஸ் ஸ்டேஷன் பிராந்திய அளவிலே கமிட்டி இருக்க வேண்டும். அரசியல் கட்சிகளிலே இருக்கக்கூடியவர்கள் எல்லோரும் தவறானவர்கள் என்று நான் சொல்ல விரும்பவில்லை. ஒரு போலீஸ் ஸ்டேஷன் எல்லையில் முஸ்லீம் லீக் சார்பாக ஒருவரை நியமிக்கிறார்கள் என்றால் உத்தமராகப் பார்த்துத்தான் நியமிப்பார்கள்; காங்கிரஸ் கட்சியிலிருந்து நாமினேட் செய்தாலும் அவர்களும் அப்படித்தான் இருப்பார்கள். அவர்களை நியமிக்கின்ற பொறுப்பை சப்-இன்ஸ்பெக்டருக்கு விடக்கூடாது. அந்தந்த அரசியல் கட்சிகள் மாவட்ட கமிட்டி சார்பாக, தாலுகா கமிட்டி சார்பாக நாமினேட் செய்து கலெக்டரிடத்திலும் எஸ்.பி. இடத்திலும் லிஸ்டைக் கொடுத்துவிட்டால் போதும். இப்படி ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷன் ஏரியாவுக்கும் ஒரு கமிட்டி இருந்தால் சப்-இன்ஸ்பெக்டர்கள், இன்ஸ்பெக்டர்கள் நல்ல முறையில் செயல்



படுகிறார்களா என்பதைக் கண்காணிக்க முடியும். முதலமைச்சர் அவர்கள் இதற்கு ஏற்பாடு செய்து விட்டால் இந்தக் குறைகள் நிச்சயமாக இருக்காது, பெரும்பகுதி குறைக்கப்பட்டுவிடும் என்ற நல்ல நம்பிக்கை இருக்கிறது. இது ஒன்று.

இரண்டாவது, இப்போது நாம் சாராயக் கடைகளை மூடி விட்டோம். சாராயம் பொதுமக்களுக்குக் கிடைக்கவில்லை, கிடைக்க முடியாமல் செய்து விட்டோம் என்று பெருமிதமாகப் பேசிக் கொள்ளுகிறோம். ஒருபுறத்தில் அதுமாதிரிப் பேசிக் கொண்டிருக்கிறோம். இன்னொரு புறத்தில் சாராயம் எளிதாக ஜனங்களுக்கு காட்டேஜ் இண்டஸ்ட்ரி மூலமாகக் கிடைக்கிறது. முன்பெல்லாம் ஊருக்கு ஒரு கடை இருக்கும். இரண்டு ஊர்களுக்கு ஒரு கடை இருக்கும். அந்தக் கடையில்தான் வாங்கிச் சாப்பிட வேண்டும். கள்ளச் சாராயம் யாராவது காய்ச்சினால் ஏலம் எடுத்தவர் பிடித்துக் கொடுத்து விடுவார். இப்போது அந்த நிலைமை இல்லை.

**திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்:** கனம் அங்கத்தினர் அவர்கள் 'காண்டிராக்ட் எடுத்திருப்பவர்கள் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களைப் பிடித்துக் கொடுத்துவிடுவார்கள்' என்று சொல்லுவதை நான் தாழ்மையாக மறுக்கிறேன். அவர்களே, அதை வாங்கி பிசினஸ் செய்து கொண்டிருந்தார்கள்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** I do not have personal knowledge on that. The hon. Leader of the Muslim League may know much of it. அது அந்தச் சமயத்தில் இருந்த பிரச்னை.

இப்போது சாராயக் கடைகளை மூடிய பிறகு நிறைய சாராயம் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்பை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அடைக்க வேண்டும், இல்லாமல் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். எப்படி சாராயம் கிடைக்கிறது? ஆலையில் கிடைக்கக்கூடிய மொலாஸஸோடு வேலம்பட்டை, அந்தப் பட்டை, இந்தப் பட்டை எல்லாம் போட்டு பட்டைச் சாராயம் காய்ச்சுகிறார்கள். அதைச் சாப்பிட்டால் போதை கிடைக்க வேண்டுமென்பதற்காகக் கிராமங்களில் ஊமத்தங்காயைச் சேர்க்கிறார்கள். ஊமத்தங்காயைச் சாப்பிட்டால் பைத்தியந்தான் வரும். சாராயம் சாப்பிட்டால் அது பிரெய்னை இன்எபக்ட்டிவ் பண்ணுகிறது. அதிலே போதிய கிக்

இல்லை என்று அதிலே ஊமத்தங்காயை இடித்துச் சேர்த்து விடுகிறார்கள். இதற்காக ஊமத்தங்காயை இடித்து டின்களிலேயே விற்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவது சொந்த அனுபவமா அல்லது கேள்வி ஞானமா?

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): நம்முடைய அமைச்சர் அவர்கள் கொஞ்சம் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். நான் சொல்லுவதை அவர் 'ட்ரை' பண்ணிவிடக் கூடாது.

திரு. ஆலடி அருணா: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போதையூட்டும் அளவுக்குப் பேசவேண்டாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): நம்முடைய ஆலடி அருணாவுக்கு இனிமேல் நான் போதையேற்ற வேண்டிய அவசியமில்லை.

இந்த ஊமத்தங்காய்களை இடித்து டின்களில் நிரப்பி விற்கிற ஏஜண்டுகள் யார் தெரியுமா? நான் ஏற்கனவே சட்ட மன்ற உறுப்பினராக, பார்லிமெண்ட் உறுப்பினராக இருந்தபோதே பார்த்திருக்கிறேன். இப்போதும் கண்கூடாகப் பார்க்கிறேன். நல்லவன் இதை விற்கமாட்டான். எவனுக்கு விரல் இல்லையோ, எவனுக்குக் கை இல்லையோ அந்த வியாதியஸ்தன்தான் இதை விற்கிறான். அவனை யாரும் பிடிக்க மாட்டார்கள். அவன் டம்பளரால் எடுத்துக் கொடுத்து அதைச் சாப்பிடுகிறவனுக்கு என்ன வரும்? அதைச் சாப்பிடுகிறவர்களும் தொழு நோய்ப் பிச்சைக்காரர்களாக மாற வேண்டியதுதான்.

இந்த முறைகளைத் தவிர்க்க, சர்க்கரை ஆலை மொலாஸஸ் பெரிய தொழிற்சாலைகளுக்குச் செல்ல வேண்டுமே தவிர தனிப்பட்டவர்கள் யாருக்கும் கிடைக்க முடியாமல் பண்ண வேண்டும். இல்லாவிட்டால் இதை நம்முடைய ஷிப்பிங் கார்ப்பரேஷன் பெரியார் கப்பலில் வைத்து நடுக்கடலில் கொண்டு போய் டிஸ்ட்ராய் பண்ண வேண்டும். அப்படிச் செய்தால்தான் நாட்டுச் சாராயம் கள்ளச் சாராயம் காய்ச்சாமல் நிறுத்தப்படும்.





இரண்டு வருஷம் சாராயக் கடையைத் திறந்து விட்டதால் அந்தத் தொழிலில் லாபம் நிறைய வரும் என்று பல பேர் ஆரம்பித்து விட்டார்கள். இருபது லட்சம் மூலதனம் போட்டு ஆரம்பித்ததாக திரு. மருதப்பிள்ளை கூட ஸ்டேட்மெண்ட் விட்டார். நாங்கள் என்ன ஆவது என்றார்கள். ஆனால், முதலமைச்சர் அவர்கள் நன்றாகச் சூடு கொடுத்தார்கள். தனிப்பட்டவர்கள் நிலையை வைத்து அரசு பாலிசியை உருவாக்குவதில்லை என்று சொன்னார்கள்.

உற்பத்தி பண்ணக்கூடிய ஸ்பிரிட்—எரிபொருள் எங்கே போகிறது? அந்த ஸ்பிரிட் கிராமங்களுக்கு எப்படி வருகிறது? மேட்டூர் கெமிகல்ஸ் போய் பிளாஸ்டிக் செய்யப் பயன்படுகிறது. இன்டஸ்ட்ரியல் பர்ப்பசுக்குப் போகிறது. அங்கே நியாயமாக இந்த எரிபொருள் பயன்படுத்தப்படுகிறது. உற்பத்தி பண்ணக் கூடியதில் பாதி அல்லது கால் பங்குக்கு மேல் இன்றைக்குக் கிராமங்களுக்கு வந்து விடுகிறது. எப்படி? 'டி-நேச்சர்டு' ஸ்பிரிட்டாக வருகிறது. ஸ்பிரிட்டை மக்கள் சாப்பிடக் கூடாது என்பதற்காக அது உற்பத்தியாகிற ஆலையில் மித்தலின் ஆல்கஹாலைக் கலந்து விடுகிறார்கள். ஆயிரம் லிட்டரில் ஒரு அவுன்ஸ் மித்தலின் ஆல்கஹால் சேர்க்கிறார்கள். அதைச் சாப்பிட்டால் சாக வேண்டியதுதான். இதுதான் டி-நேச்சர்டு ஸ்பிரிட்டாக மாறுகிறது. மனிதனால் சாப்பிட முடியாத அளவுக்குச் செய்து ஆலையிலிருந்து வெளியே கொடுக்கிறார்கள். எங்கே கொடுக்கிறார்கள்?

டி எல். 2 லைசென்ஸ் வைத்திருப்பவர்களுக்குக் கொடுக்கிறார்கள். பத்தாயிரம் லிட்டர், இருபதாயிரம் லிட்டர், முப்பதாயிரம் லிட்டர் என்று சாதாரணமானவர்கள் சிறு தொழில் என்ற பெயரால் வாங்குகிறார்கள். இடையில் இரண்டு வருஷம் நாம் மதுவிலக்கை சஸ்பென்ட் செய்து வைத்திருந்த காரணத்தால் இதற்கு அப்போது டிமாண்ட் இல்லை. இப்போது மதுவிலக்கை மீண்டும் அமல் நடத்துகிறபோது அவர்களுடைய லைசென்ஸ் ஏன் ரின்யூவல் செய்யப்பட்டது? இருபதாயிரம் லிட்டர், முப்பதாயிரம் லிட்டரை என்ன செய்கிறார்கள்?

சிறு சிறு கடைகள் ரிடைல் ஷாப்ஸ் வைத்திருக்கிறார்கள். கதவிற்கு வார்னிஷ், மரத்திற்குப் பெயின்ட் போன்ற சிறு சிறு காரியங்களுக்கு இதை வாங்குவதாக அர்த்தம். மெட்ராஸில் பார்த்தால் தெரியும். இரண்டு மூன்று பணக்காரர்கள் சிறு சிறு

கடைகளை வைத்திருக்கிறார்கள். டி-நேச்சர்டு ஸ்பிரிட் விற்கிறார்கள். அதை வாங்கக் கூடியவர்கள் எப்படி அந்த மித்தாலின் ஆல்கஹாலை எடுத்துவிட்டுக் கொடுக்கிறார்கள்? அதற்கு சயண்டிஸ்ட் போக வேண்டிய அவசியமில்லை. கண்ணாடி கிளாசில் வாங்கி அதிலே கொஞ்சம் உப்பைப் போடுகிறான்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எப்படி கள்ளச் சாராயத்தை உற்பத்தி செய்வது என்பதைப்பற்றிய விளக்கங்களைத் தந்து கொண்டிருக்கிறார்கள். இதுவரையில் அதைப்பற்றி அறியாதவர்கள் கூட நண்பர் அவர்களின் விளக்கத்தைத் தெரிந்த பிறகு எதிர் காலத்தில் அதைப் பயன்படுத்த ஏதுவாகலாம். ஆகவே, இந்த விளக்கங்கள் இந்த மன்றத்தில் தேவை இல்லை என்பதை நான் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** எல்லோரும் அப்படிச் செய்யவேண்டும் என்பதல்ல. இந்தத் தீமைகள் மறைய வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். டி-நேச்சர்டு ஸ்பிரிட்டை டீட்டேலரிடம் வாங்குகிறார்கள். விஷத்தை எடுக்கிறார்கள். எப்படி? ஒரு அரை எலுமிச்சைப்பழத்தைப் பிழிந்து விட்டால் போதும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இவரே சொல்லித் தருகிறார் போலிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதெல்லாம் ஊரறிந்த இரகசியம்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** எல்லோரும் படித்தவர்கள் அல்ல. ஏழை மக்கள், பாமர மக்கள், அடிமட்டத்தில் இருப்பவர்கள் எப்படியாவது ரெஸ்ட் வேண்டுமென்று செய்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லோருக்கும் தெரிந்த விஷயத்தைச் சொல்லிக்கொண்டிருக்கிறீர்களே. அதைச் சுருக்கிவிட்டு வேறு விஷயத்திற்கு வாருங்கள்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** ஒரு க்ளாஸில் போட்டு, கொஞ்சம் உப்பு அல்லது சிறிது புளி போடலாம் அல்லது அரை எலுமிச்சம் பழத்தைப் பிழிந்துவிட்டால் கொஞ்ச நேரத்தில் ரீ ஆக்ஷன் ஆகும். மெத்தலின் ஆல்கஹால் மேலே வந்து





விடும். அதை லேசாக தள்ளிவிட்டு சாப்பிட்டால் நல்ல கிக் ஏற்படும். டாக்டர் ஹாண்டே அவர்கள் டெஸ்ட் செய்ய விரும்புகிறார் போலிருக்கிறது. அதனால்தான் அவர் சிரிக்கிறார்,

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** நான் சிரித்தது அதற்காக அல்ல. இதைப் பற்றிச் சொல்வதில் பலன் இல்லை. இது பாதிப்பேர்களுக்கு தெரிந்திருக்கலாம், பாதிப் பேர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். தெரிந்திருந்தால் சொல்வதற்குத் தேவை இல்லை. தெரியாமல் இருந்தால் இதைப்பற்றி விளம்பரப்படுத்தத் தேவை இல்லை.

It is not really good. Do not give ideas to the people. Already it is a problem for the dispensaries. Denatured spirit is required for dispensaries. With great difficulty we are getting it.

நீங்கள் சொல்வது போல் செய்தால் டிஸ்பென்ஸரிக்கு வரவே வராது, அந்தக் கவலைதான்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அனுபவத்தோடு கூடிய பல கருத்துக்களை இங்கே கூறினார்கள். ஒவ்வொரு தடவையும் ஏதோ டம்ப்ளரில் குடித்துக்கொண்டே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பல சந்தேகங்கள் எழுகின்றன. அதற்கு விளக்கம் தேவை.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** என்னோடு நெருங்கிப் பழகாத காரணத்தால் திரு. ஜேம்ஸ் அவர்கள் அப்படி எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் எனக் கருதுகிறேன். நான் சிகரட் கூட குடித்தது கிடையாது. பிறகு மற்றவைபற்றிப் பேசவேண்டிய அவசியமில்லை.

**திரு. என். கே. பழனிசாமி:** நாங்கள் கொடுத்திருக்கிற திருத்தத்தை ஆதரித்துப் பேசுகிறீர்களா?

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** இந்த பில்லை வரவேற்றுப் பேசுகிறேன். டாக்டர்களுக்குப் பஞ்சம் வந்துவிடும். டிஸ்பென்ஸரிகளுக்கு வராது என்றார்கள். டாக்டர்களுக்கு எந்த விதமான சங்கடமும் இருக்கக்கூடாது. ஆனால், தனிப்பட்டவர்களுக்கு, வியாபாரிகளுக்கு 20,000 லிட்டர், 30,000 லிட்டர் டி.எல். 2 லைசென்ஸ் கொடுப்பதன்மூலம், ரென்யூவல் செய்வதன் மூலம் இந்தச் சாராயம், எரிபொருள் மக்களுக்கு வந்து பாதகத்தை

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்)] [1974 டிசம்பர் 20

விளைவிக்கிறது என்பதைத்தான் சொல்கிறேன். நான் முதல் அமைச்சர் அவர்களுக்குத் தங்கள்மூலம் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அவர்களுக்கு எதற்காக லைசென்ஸ் ரென்யூவல் செய்யப்பட்டது? என்ன கெட்டுவிட்டது? இந்த இரண்டு ஆண்டுகளாக அவர்கள் எந்த பாக்டரியிலிருந்தாவது டீ-நேச்சர்டு ஸ்பிரிட்டை ரெகுலராக வாங்கியிருக்கிறார்களா? அப்படி வாங்கியிருந்தால் ரென்யூவல் செய்யலாம். அப்படி வாங்காதவர்களுக்கு ஏன் செய்வது? இந்த டீ-நேச்சர்டு ஸ்பிரிட் டாக்டர்களுக்குக் கிடைக்கலாம், தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருளாகக் கிடைக்கலாம், ஆனால் வியாபாரிகளுக்குக் கிடைக்காமல் செய்வதற்குத் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டால்தான் நாம் மதுவிலக்கை பூரணமாக அமல்படுத்தியவர்களாவோம் என்று கூறி இந்தச் சட்டத்தை வரவேற்று முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. எம். சுரேந்திரன்:** மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும்போது ஸ்பிரிட்டில் இருக்கிற விஷத்தை மாற்றி எப்படிச் சாப்பிடலாம் என்று சொன்னார்கள். தெரியாமல் சாப்பிட்டு பலர் இறந்துபோக வேண்டாம் என்ற நல்லெண்ணத்தோடு சொன்னார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** விஷத்தை நீக்கி விட்டுச் சாப்பிட்டால் இறக்க மாட்டார்கள் என்றுதான் தெரிந்து சிலர் செய்கிறார்கள். அதைச் சாப்பிடக்கூடாது என்றுதான் நான் சொல்கிறேன். சுரேந்திரன் அவர்களுக்கு வேண்டியவர்கள் எங்கேயாவது அப்படிச் சாப்பிடுவார்கள் என்றால் அப்படிச் சாப்பிடவேண்டாம் என்று சொல்லவேண்டும் என்பதற்காகத்தான் சொன்னேன்.

**திரு. சி. ஆறுமுகம்:** விற்கிறவர்கள் இப்படி கலந்து சாப்பிட வேண்டுமென்று சொல்லியே விற்கிறார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, இந்த மதுவிலக்கு திருத்தச் சட்டம் தேவையற்றது என்று வலியுறுத்திச் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஐந்து நிமிடங்களில் முடித்துவிடுங்கள்.



1974 டிசம்பர் 20]

**திரு. ஜே. ஜேம்ஸ்:** இங்கு கொண்டு வந்திருக்கிற திருத்தம் எந்தமுறையில் லைசென்ஸ் வழங்கவேண்டும், கூடுமானவரையில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இந்த அனுமதி வழங்கவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்தத் திருத்தச் சட்டம் கொண்டுவரப் பட்டிருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டிருப்பதன் நோக்கம் மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பண்டங்கள் குறைந்த விலையில் நியாயமான அளவிற்குக் கிடைப்பதற்கு வழிவகை செய்வதுதான் கூட்டுறவுச் சங்கங்களின் நோக்கம். ஆனால் இன்றையதினம் வந்திருக்கிற இந்தச் சட்டத்தைப் பார்க்கும்போது, இந்த அரசாங்கம் மது இந்த மாநிலத்திற்கு தேவை இல்லை என்ற கொள்கையை ஏற்றுக்கொண்ட பிறகு தேவையற்ற ஒரு பொருளைக் கூட்டுறவுச்சங்கங்களின் வழி விநியோகிக்க வழிவகை செய்து ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது என்று சொன்னால் நிச்சயமாக இந்த அரசுக்கு மதுவிலக்குத் திட்டத்தில் நம்பிக்கை இல்லை என்பதைத்தான் அது எடுத்துக்காட்டுகிறது. எனக்கு முன் பல உறுப்பினர்கள் பேசினார்கள், எந்தளவிற்கு மதுவிலக்குத் திட்டம் இந்த மாநிலத்தில் நிறைவேற்றப்பட்டுவருகிறது என்று. இதுவரை, மதுவிலக்குச் சட்டம் ஒத்திவைக்கப்பட்டிருந்த காலத்தில் இங்கு நடைபெற்றது என்னவென்றால் அரசாங்கத்திற்குக் குத்தகை செலுத்தி மதுக்கடைகள் என்று போர்ட் வைத்து மது விற்பனை செய்யப்பட்டு வந்தது. இன்று மதுவிலக்குச் சட்டம் அமல்படுத்தப் பட்ட பிறகு போர்ட்கள் இல்லாமல் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய குத்தகையையும் செலுத்தாமல் தாராளமாக மதுக் கடைகள் ஆங்காங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை அனைத்து மக்களும் இன்றையதினம் நிச்சயம் ஏற்றுக் கொள்ளக் கூடிய நிலைதான் இருக்கிறது. . .

குறிப்பாக, சென்னை நகரத்தை எடுத்துக்கொண்டால் ஒவ்வொரு வட்டத்திலும் பல கடைகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. போலீஸ் அதிகாரிகளுக்கு மாமூல் செலுத்தப்பட்டு அந்தக் கடைகள் ஒழுங்காக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆக, மதுவிலக்குச் சட்டத்தை அமல்படுத்த வேண்டிய போலீஸ் இலாகா எந்த அளவிற்கு முறை தவறி நடக்கிறது என்பதை நாம் அன்றாடம் பத்திரிகைகளில் பார்த்துக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக, ஒன்று சொல்ல விரும்புகிறேன். இரண்டு மாதங்களுக்கு முன்பு, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஒரு போலீஸ் வான் கேரளா மாநிலத்திற்குச் சென்று அங்கிருந்து 18 டின் சாராயத்தை அவர்கள் ஏற்றிக்கொண்டு

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1974 டிசம்பர் 20

கேரளா மாநிலத்திலிருந்து தமிழ்நாடு நோக்கி வந்து கொண்டிருக்கும்போது கேரளா மாநிலத்தைச் சேர்ந்த மக்களால் அந்த வான் தடுத்து நிறுத்தப்பட்டு அங்குள்ள போலீஸ் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. அதை மீட்டுக்கொண்டுவருவதற்கு நம் மாநில போலீஸ் அதிகாரிகள் எந்தளவிற்குக் கஷ்டப்பட்டார்கள் என்பதை நாம் பத்திரிகைகளில் பார்த்தோம். இந்த நிலையில் இந்தச் சட்டத்தை அமல்படுத்தவேண்டிய போலீஸ் இலாகா எந்த அளவிற்கு முறை தவறி நடக்கிறது என்பதைப் பார்க்கும்போது நிச்சயமாக போலீஸ் இலாகாவால் மதுவிலக்குச் சட்டத்தை அமல்படுத்த இயலாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆக, இந்த மதுவிலக்கை இன்னும் தீவிரமாக அமல் நடத்துவதற்குத் தேவையான வழிவகைகளை இந்த மசோதாவில் சேர்த்திருந்தால் அதை வரவேற்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதனை கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதுமட்டும் அல்ல. இங்கு வந்திருக்கிற மசோதாவைப் பார்த்தால் லைசென்ஸ் வழங்குவதற்கு கிளாஸ் இரண்டில் செக்ஷன் 20-ஏ (பி)-யைப் பார்த்தால் 'whether the applicant is a person who will abide by the provisions of this Act and the rules made thereunder' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதை யார் தீர்மானிப்பது, எந்த முறையில் தீர்மானிக்க முடியும்? நிச்சயம் இந்த கிளாஸ் தேவையற்ற கிளாஸ். நிச்சயம் இதை நடைமுறையில் செயல்படுத்துவதற்கு முடியாது என்பதனைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். வேண்டியவர்களுக்கு லைசென்ஸ் வழங்குவதற்கு இந்த மசோதா வந்திருக்கிறதேதவிர நியாயமான முறையில் இதைச் செயல்படுத்துவதற்கு எந்தவிதமான வழி முறைகளும் இந்த மசோதாவில் கூறப்படவில்லை. ஆகவே, இந்த மசோதா தேவையற்றது. குறிப்பாக, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக சாராயத்தை விநியோகிக்க வழிவகை செய்வது அவசியமில்லை என்று கூறி, விடைபெறுகிறேன்.

***திருமதி ஜோதி வெங்கடாசலம்:** இந்த மசோதாவிலே இருக்கிற திருத்தங்கள் அவசியமா என்பதைப் பார்க்கும்பொழுது இது அவசியமற்ற ஒன்றாகத்தான் தெரிகிறது. காரணம் இதிலே டிஃபைன் செய்யும்பொழுது

'the suitability of the applicant for the grant of licence or permit, as the case may be;

(b) whether the applicant is a person who will abide by the provisions of this Act and the rules made thereunder;. . .'



1974 டிசம்பர் 20] [திருமதி ஜோதி வெங்கடாசலம்]

என்று சொல்லியிருக்கிறார்கள். மற்ற அங்கத்தினர்கள் சுட்டிக் காட்டியது போல இதை நாம் எப்படி நிர்ணயிக்கப்போகிறோம். குடிப்பவர்கள் பெர்மிட் வாங்குபவர்கள் டாக்டர் சர்டிபிகேட் வாங்கவேண்டும். பெர்மிட்டுக்குரியவர் என்று எப்படி நிர்ணயிப்பது? இவர்கள் டாக்டர் சர்டிபிகேட் எப்படி வாங்குகிறார்கள்? எல்லா பெர்மிட்ஹோல்டர்ஸுக்கும் ஒரே வியாதியாகத் தான் இருக்கும். 'இன்ஸோமனியா அல்லது ஸ்லீப்லெஸ்னஸ்' ஆகத்தான் இருக்கும். வேறு வியாதி இருக்காது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** கடை நடத்துபவர்களுக்குத்தான் இது அப்ளை ஆகும். This will not apply to the permit-holders who apply for permit.
பெர்மிட் வாங்குவதற்கு டாக்டர் சர்டிபிகேட் வாங்கவேண்டும் கடை நடத்துபவர்களுக்குத்தான் இந்த விதிமுறை வகுக்கப் பட்டிருக்கிறது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** விற்பதற்கு 'சூட்டபிலிடி' பார்த்து லைசென்ஸ் கொடுத்தபிற்பாடு அந்தக் கடையிலிருந்து வாங்குவது யார்? குடிக்கும் பெர்மிட்ஹோல்டர்ஸ் தான். (குறுக்கீடு) இந்த பெர்மிட் கொடுப்பதற்கு ஒரு ஃபுல் மெடிகல் போர்டு போடுங்கள். அது தான் பொருத்தமாக இருக்கும். இல்லாவிட்டால் ஒரே டாக்டர் ஒரே முறையாகத்தான் சர்டிபிகேட் வரும். நான் அனுபவ வாயிலாகச் சொல்கிறேன் (சிரிப்பு). மூன்று அல்லது ஐந்து டாக்டர்களைக் கொண்ட ஃபுல் மெடிகல் போர்டு போடுங்கள். அப்படி போட்டால்தான் உள்ளபடியே என்ன வியாதி இருக்கிறது என்று தெரியும். இந்தக் கடைக்காரர்களைப் பற்றி எப்படி 'சூட்டபிலிடி' நிர்ணயிக்கப்போகிறார்கள்? டாக்டர்கள் கொடுத்த சர்டிபிகேட்டை வைத்துக்கொண்டு பெர்மிட் பெற்றவர்கள் தானே இதை வாங்கப்போகிறார்கள். லா, ரூல்ஸை மீறுகிறவர்களுக்குத் தானே கோர்ட் இருக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் இது அவசியமா என்பதைப் பார்க்கவேண்டும். இதை எப்படி நிர்ணயிக்கப்போகிறார்கள் என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் இந்தச் சபையில் கூற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளச் சாராயம் காய்ச்சுவதுபற்றி இங்கே எடுத்துக் கூறினார்கள். இது தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கிறது. இது நமது நாட்டில் ஒரு பெரிய வியாதி. இந்த வியாதியைத் தடுக்க வேண்டுமென்றால் இதற்குத் தனி ப்ரொஹிபிஷன் ஸ்டாஃப் போட

வேண்டும். போலீஸில் இருக்கக்கூடியவர்களில் நல்லவர்களாகத் தேர்ந்தெடுத்து—போலீஸ்காரர்கள் சில பேர்கள் அதற்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்ற உண்மையை மறுக்க முடியாது—தனிப்பட்ட துறையிலிருந்தும் போலீஸ் இலாகாவில் சில பேர்களை தேர்ந்தெடுத்தும், இதை ஒழுங்காகக் கண்காணிப்பு செய்தால்தான் நலமாக இருக்கும். ஒரு 'ஃப்ளையிங் ஸ்குவாடு' (Prohibition) வைத்து, ஆங்காங்கு கள்ளச்சாராயம் காய்ச்சக் கூடிய இடங்களுக்கு அவர்கள் சென்று, அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்று. இப்படி சாராயம் வாங்குபவர்களுக்கு பெர்மிட் கொடுக்கிறார்கள். ஆறு யூனிட் கொடுக்கிறார்கள். பெண்களுக்கு 2 யூனிட் கொடுக்கிறார்கள். தமிழ் நாட்டுப் பெண்கள் என்ன அமெரிக்கன் லேடீஸா? பெண்கள் எதற்காகக் குடிக்கிறார்கள்? இதை ரொம்பக் கண்டிக்கிறேன், எதிர்க்கிறேன். பெண்கள் ஏன் குடிக்கவேண்டும்?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இருதய நோய்க்காக இந்த சர்டிபிகேட் கொடுக்கப்படுகிறது. பெண்களுக்கும் இருதயம் இருப்பதாகச் சொல்கிறார்கள். (சிரிப்பு)

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** அமெரிக்கன் மெகஸினில் வந்த மெடிகல் ரிப்போர்ட்டில் பார்த்திருக்கிறேன். ஆண்களுடைய இருதயத்தைவிட அதிகமான ஸ்ட்ராங்கான இருதயம் பெண்களுக்கு உண்டு என்று. பெர்மிட் கொடுத்து சாராயம் சாப்பிட்டு, அதற்குப் பிறகு பெண்களுக்கு இருதயம் ஸ்ட்ராங்காக ஆகவேண்டும் என்ற அவசியம் கிடையாது. இதை நான் ரொம்ப எதிர்க்கிறேன்.

**திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்:** தலைவர் அவர்களே, இருதய நோய்க்காக மது உபயோகப்படுகிறது என்று சொல்வதை முழுக்க முழுக்க நான் மறுக்கிறேன். இரண்டு முறை இருதய நோயாலே பாதிக்கப்பட்டு இருந்தும், நான் என்றைக்கும் மது என்பதை கையாலேகூடத் தொட்டதில்லை. என் வாழ்நாளில் மதுவைத் தொட்டது கிடையாது. டாக்டர்கள் கொடுத்த மருந்தைக் கொண்டுதான் வாழ்ந்துகொண்டிருக்கிறேன். மதுதான் இருதய நோயைத் தீர்க்கிறது என்ற வாதத்தை நான் ஒப்புக்கொள்ள முடியாது. ஆகையினால் சட்டத்திலிருந்தே இதை எடுத்துவிடவேண்டு



மென்பது தான் என்னுடைய விருப்பம். பெர்மிட் கொடுப்பதிலே தான் பிளாக்மார்கெட் நடக்கிறது. அதை எடுத்துவிட்டால் இந்தத் தொல்லையே தொலைந்துவிடும் என்பது என்னுடைய தாழ்மையான எண்ணம். நான் கேட்டதற்குச் சட்டத்தில் அதற்கு இடமில்லை என்று கூறப்பட்டது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இந்த மருந்துகளில் ஆல்கஹால் இருப்பதாகச் சொல்கிறார்கள். டாக்டர் ஹாண்டே அவர்களை இதை விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** பல டானிக்குகளில் 15 சதவிகிதம் ஆல்கஹால் இருக்கிறது. 'வால்யூம் பை வைட்'. அந்த டானிக்குகளை சாப்பிட்டால் ஆல்கஹால் மறைமுகமாக உள்ளே போகிறது. [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) குறுக்கீடு]

**திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்:** மருந்துக்காகக் கொடுப்பது மாத்திரை. பில்ஸாக வருகிறது. நீங்கள் கொடுப்பது பாட்டிலாக வருகிறது. மருந்துகளிலெல்லாம் அது இருக்கிறது என்று சொன்னால் இப்பொழுது நீங்கள் கண்டுபிடித்திருக்கிற துறையிலே, உங்கள் துறையிலேதான் அது மாதிரி இருக்கிறது என்று நான் சொல்கிறேன். ஆகையினால் அதில் ஒன்றும் இல்லை. தயவு செய்து அப்படியே யாருக்கும் பெர்மிட் கொடுக்காமல் மறுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய வாதம். சட்டத்தில் இடமில்லை என்று கூறப்பட்டது. ஆகவே, இது விஷயத்தில் ரொம்ப முறையாக நடந்து கொள்ளவேண்டும். முறையாக நடந்துகொள்ளாமல் இருந்தால் இது வளரத்தான் செய்யும். இந்தத் தீமை வளரக்கூடாது என்ற நோக்கத்தோடுதான் மதுவிலக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. முறையாக நடந்து கொள்ளாவிட்டால், அந்த நோக்கத்திற்கு நேர்மாறான விளைவுகள் ஏற்படும். சட்டத்தில் இதற்குப் பாதுகாப்பு வேண்டும் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஜோதி அம்மையார் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் இடையில் குறுக்கிட்டுப் பேசுகிறீர்கள். ஆகவே, ஒரு நீண்ட பிரசங்கம் செய்ய வேண்டாம்.

**திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்:** போலீஸார்களே இதிலே தலையிடுபவர்கள் சிலர் இருக்கிறார்கள். நீங்கள் சொன்ன பாதுகாப்பு சரிதான். அதற்கு ஒரு கமிட்டி போடவேண்டியதுதான்.

[திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்] [1974 டிசம்பர் 20

எவ்வளவு பாதுகாப்பு கொடுக்க முடியுமோ அவ்வளவு பாதுகாப்பு கொடுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்வதுதான் என்னுடைய கடமை.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** பெண்களுக்கு பெர்மிட் கொடுப்பதை நான் எதிர்க்கிறேன். முஸ்லிம் லீக் தலைவர் அவர்கள் இந்த பெர்மிட் முறையையே எடுத்துவிட்டால் நன்றாக இருக்கும் என்று கூறினார்கள். அதற்குச் சட்டத்திலே இடமில்லை என்ற காரணத்தினால், என்னுடைய யோசனை ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பெண்களுக்கும் ஆண்களுக்கும் பெர்மிட் கொடுக்க வேண்டும் என்று சட்டத்தில் இருந்தாலும்கூட இப்பொழுது அவர்களுக்கு இரண்டு யூனிட்கள் கொடுக்கப்படுகின்றன. அதை ஒவ்வொரு முறையும் ரென்யூவல் செய்யும்பொழுது, என்னுடைய யோசனை என்னவென்றால், ½ யூனிட் குறைத்து விடுங்கள். ஆட்டமாட்டிக்காக குறைந்துகொண்டே வந்து, கடைசியில் 'நில்' என்று வந்து நிற்கும் நான்கு வருடங்களிலே. அப்படி குறைத்துக்கொண்டே வரும்பொழுது ஒவ்வொரு ரென்யூவல் போதும் ½ யூனிட் குறைந்து கொண்டே வரும். பிறகு கிடையவே கிடையாது என்று நிலைமை வந்துவிடும். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகும் இந்த வியாதி 'கண்டினுவஸாக' இருப்பதற்கு வழியில்லை. ஆகையினால் இதைக் குறைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவாபரேடிவ் சொஸைடீஸ்க்கு கொடுப்பதுபற்றிக் கூறினார்கள். இதிலே பல இடைஞ்சல்கள் வரும் என்று பல உறுப்பினர்கள் கூறினார்கள். எல்லா அத்தியாவசியமான பொருள்களையும் வாங்குகிற இடமாக இருப்பதால், அதிலே இதையும் ஒரு பிரிவாக வைத்தால் மக்களுக்கு ஒரு அட்ராக்‌ஷன் கொடுக்கக்கூடிய அளவுக்கு வரும் என்பதில் சந்தேகம் இல்லை. பிறகு பலர் பெர்மிட் வாங்கி குடிக்க முயல்வார்கள். ஆகவே, அரசு இதை மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12.30)

**திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவரவர்களே, இந்த மசோதாவை மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே மதுவிலக்கு வரவேண்டும் என்பதிலே மாறுபட்ட கருத்து எந்தக் கட்சிக்காரர்களுக்கும் இருக்காது என்று நம்புகிறேன். அதை முழு மனதோடு என்னைப் பொறுத்த



1974 டிசம்பர் 20] [திரு. கோவை செழியன்]

வரை அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சார்பிலே வரவேற்கிறேன். ஆனால் நடைமுறையில் இருக்கிற சில சிக்கல்களையும் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு அமையார் அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டார்கள். அவர்கள் ஒரு புதிய பிரச்னையைக் கிளப்பினார்கள். ஆண்களுக்குக் கொடுக்கலாம், பெண்களுக்குக் கொடுக்கக் கூடாது என்று சொன்னார்கள். பர்மிட் சொந்தக்காரர்கள் கோர்ட்டுக்குப் போய் 2 யூனிட் என்பதை 4 யூனிட் என்று ஆக்கிவிட்டால் என்ன செய்வது என்ற பயம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முஸ்லீம் லீக் தலைவரவர்கள் இருதய நோயைப் பற்றிச் சொன்னார்கள்.

கரோலி என்பவர் உலகத்திலேயே சிறந்த ஹார்ட் ஸ்பெஷலிஸ்ட். அவர் சொல்கிறார் மது சாப்பிட்டால் நல்லது என்று. இன்னொருவர் கூடாது என்கிறார்.

மது குடிக்கக் கூடாது என்பதைப்பற்றி ஒரு கமிட்டி வைத்து ஊர் ஊராகச் சென்று பிரச்சாரம் பண்ணலாம். மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்ன மாதிரி இதிலே முழு வெற்றி பெற வேண்டுமென்று சொன்னால் ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக்கும் ஒரு கமிட்டி வைக்க வேண்டும். அந்தக் கமிட்டியிலே எல்லாக் கட்சிக்காரர்களையும், இன்னும் சொல்லப் போனால் ரிலிஜியஸ் ஹெட்ஸ் என்று சொல்கிறவர்களை அந்தக் கமிட்டியிலே அமைக்க வேண்டும். மேலும் பெண்கள் அந்தக் கமிட்டியிலே இருக்க வேண்டும். ஏனென்றால் அம்மையார் அவர்கள் குறிப்பிட்ட மாதிரி பெண்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள். இதனால் அந்தக் கமிட்டியிலே பெண்களும் இருக்கவேண்டும். ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக்கும் ஒரு கமிட்டி இருக்குமானால் அதுபற்றி உயர்ந்த அதிகாரிகளிடம் சொல்லமுடியும்.

என்னுடைய தொகுதியில் நான் டி.ஐ. ஜிக்கு தகவல் கொடுத்திருக்கிறேன். ஊதியூர் என்ற போலீஸ் ஸ்டேஷனுக்கு மாதம் ஆறாயிரம் ரூபாய் லஞ்சம் வருகிறது என்று சொல்லி டி.ஐ.ஜி-க்குத் தெரிவித்தேன். அவர்கள் நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னார்கள். பல இடங்களில் போலீஸ் ஸ்டேஷன்களுக்குப் பக்கத்திலேயே மது விற்கிறார்கள். ஆகவே, உள்ளூர் போலீஸ் ஸ்டேஷனுக்குத் தெரியாமல் ஒரு ஸ்க்வாட் ஏற்படுத்தி அவர்களுக்குத் தெரியாமல் இதைச் செய்தால் இது வெற்றி பெறும்.

இரண்டாவது, கோவாப்பரேடிவ் ஸ்டோருக்கு தருவது. வெளி நாட்டிலிருந்து வருகிறார்கள் ஃபைவ் ஸ்டார் ஹோட்டலுக்கு. வெளி நாட்டிலிருந்து வருகிறவர்கள்தான் குடிக்கப் போகிறார்கள். அப்படி குடிக்கிறபோது அதைத் தனிப்பட்டவர்களுக்கு ஏலம் விடுகிறபோது அரசாங்கத்திற்கு லாபம் வரும். ஆகவே, இதையெல்லாம் மனதிலே வைத்து ஒரு மாற்றத்தைச் செய்யவேண்டும். என்னைப் பொறுத்தவரையில் என்னென்ன யோசனைகளை இதிலே சொல்கிறார்களோ அதை நான் ஆதரிக்கிறேன். ஆகவே' இதையெல்லாம் ஆலோசனை செய்து அரசாங்கம் முடிவெடுக்க வேண்டும். இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறேன் என்று சொல்லி அமர்கிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கிற மசோதாவை ஆதரித்துச் சில கருத்துக்களைச் சொல்கிறேன்.

நல்ல நோக்கத்தோடு நம் தமிழ்நாட்டு அரசு மதுவிலக்கை மீண்டும் கொண்டுவந்து அமல் நடத்த ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது. இப்போது எங்கு பார்த்தாலும் குடிசைத் தொழில் போன்று கள்ளச் சாராயம் காய்ச்சுகிற பணி அதிகரித்து வருகிறது என்பதை மறந்துவிடக் கூடாது. அதற்கு உடந்தையாகக் காவல்காரர்கள் இருக்கிறார்கள். குறிப்பாக, எங்கள் பகுதியை எடுத்துக் கொண்டால், ஒரு மாதத்திற்கு இவ்வளவு ரூபாய் மாமூல் கொடுப்பது என்று பேசியே காரியத்தைச் செய்கிறார்கள். மண்ணெண்ணெய் டின்களிலே காய்ச்சி எண்ணெய் விற்பது போலவே ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதைத் தடுப்பதற்கு விசேஷமாக போலீஸ் படையை ஏற்படுத்தவேண்டும். இப்போதிருக்கிற காவலர்களை நம்பினால் அவர்கள் மதுவிலக்கைப் பூரணமாக அமல்படுத்துவதற்கு உதவிகரமாக இருக்க மாட்டார்கள். எனக்கு ஞாபகம் வருகிறது. 1947-48-லே விசேஷ போலீஸ் வைத்து எங்கெங்கு காய்ச்சினார்களோ அங்கெல்லாம் சென்று பறிமுதல் செய்தார்கள். அதேபோல செய்தாலொழிய இதைக் கட்டுப்படுத்த முடியாது. இதற்கு ஆலோசனை சொல்வதற்காக ஒரு மதுவிலக்கு ஆலோசனைக் கமிட்டியை டி.எஸ்.பி. அளவிலே ஒரு கமிட்டியை அமைக்க வேண்டும். திரு. செழியன் அவர்கள் சொன்னதைப்போல் கிராம அதிகாரிகள், பஞ்சாயத்துத் தலைவர்கள், மற்றும் முக்கியஸ்தர்களைக்கொண்ட கமிட்டியை அமைத்துச் சமுதாயத்திற்கு தீங்கு என்று பிரசாரம் செய்து கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களைப் பிடித்துக் கொடுக்கக் கூடிய,





ஒரு கமிட்டியை அமைத்து நடத்தமுடியும். இந்த முறையிலே நம் அரசாங்கம் மாற்றத்தை ஏற்படச் செய்வதன் மூலமாக மதுவிலக்கைப் பூரணமாக அமல்படுத்தமுடியும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லி முடிக்கிறேன்.

**திரு. எம். ஆர். கண்ணன் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைய திருத்த மசோதாவின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லிக்கொள்கிறேன்.

லைசென்ஸ் வழங்கும் முறையில் சில சிக்கல்கள் இருக்கின்றன. தனிப்பட்டவர்களுக்கு லைசென்ஸ் வழங்கினால் அவர்கள் கடைகளைக் சரியாக மெயின்டெயின் செய்ய மாட்டார்கள். இன்னும் அதில் வேண்டியவர்களுக்குக் கொடுத்தார்கள் என்று எதிர்க் கட்சிகள் பிரச்சாரம் செய்வார்கள். அவர்களது வாயை மூட கட்டணம் ரூ. 5,000, 10,000 என்று போட்டு இதில் முன்பிருந்த அதே முறையைப் பின்பற்றலாம். ஆகவே, அதைச் செய்வதில் சர்க்காருக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாது.

இதில் ராஃபிள் டிக்கெட் சீட்டு முறையை ஏற்படுத்தினால் அதில் எங்களைப் போன்ற எம்.எல்.ஏ.-க்கள்கூட அவர்களுக்கு விட வேண்டும், இவர்களுக்கு விடவேண்டுமென்று தொந்தரவு செய்ய மாட்டார்கள். ஆகவே லைசென்ஸ் முறையில் அப்படியொரு முறையை அனுசரித்தால் யாருக்கும் தயவு தாட்சண்யம் இருக்காது. வேண்டியவர்களுக்குச் சலுகை காட்டுகிறார்கள் என்ற எண்ணம் அறவே ஒழிக்கப்படவேண்டும். நடைமுறையில் அப்படி இருக்காது. இருந்தாலுங்கூட, எதிர்க்கட்சிக்காரர்களுக்கு ஒரு பிரச்சாரம் செய்ய வாய்ப்பு இருக்கும். அவர்கள் அப்படித்தான் பேசுவார்கள்.

**மாண்புமிகு மாற்று பேரவைத் துணைத் தலைவர் :** சீக்கிரம் முடித்து விடுங்கள்.

**திரு. எம். ஆர். கண்ணன் :** ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று சொல்கிறார்கள். அதிகாரிகள் அவர்களுடைய கடமையை நியாயமாகச் செய்யவேண்டும், தயவு தாட்சண்யமாக ஏற்படுகிறது என்ற கருத்து ஏற்படுகிறது. இந்த நிலைமையை அமைச்சரவை போக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1974 டிசம்பர் 20

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** கனம் துணை சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவின்பேரில் என்னுடைய கருத்துக்களைச் சுருக்க மாகச் சொல்ல விரும்புகிறேன்.

மதுவிலக்கை அமல்படுத்துவதன்மூலம் அரசுக்கு வருவாய் எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டாலும்கூட, ஏழை மக்களின் நலனைக் கருதி, இதைக் கட்டாயம் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, ஏழை எளிய மக்களைக் கெடுக்காமல் இருப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அவைகளை எடுப்பதற்கு நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

எனக்கு முன்னால் பேசியவர்கள், குறிப்பாக, திரு. சுப்பையா அவர்கள் குறிப்பிட்டதைப்போல எல்லா இடங்களிலும் இப்போது தவறான முறையில் காய்ச்சிய சாராயத்தை விற்பனை செய்கிறார்கள். அது உண்மைதான். அதை எப்படித் தடுப்பது என்று நாம் சிந்திக்க வேண்டும். சில இடங்களில் சிறு பானைகளை வைத்து சாராயம் காய்ச்சி விற்கின்ற முறை ஒருபக்கம் இருந்தாலும், பல இடங்களில் இதைப் பெருமளவில் "மானுஃபாக்சரிங் லெவலில்" தயாரித்து, வியாபாரம் செய்கிறார்கள். அம்மாதிரிப்பட்டவர்களை நாம் கண்காணிக்க வேண்டும். சி.ஐ.டி. மூலமாக அவர்களைக் கண்டுபிடித்து, அவர்களை 'மிஸாவின்' கீழ் பிடித்து உள்ளே போட்டுவிட வேண்டும். அவர்கள் ஆயிரக்கணக்கில் டின், டின்னாகத் தயாரித்து விற்பனை செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களை எல்லாம் "மெயின்டனன்ஸ் ஆஃப் இன்டர்னல் செக்யூரிட்டி ஆக்டின்" கீழ் பிடித்து உள்ளே போட்டுவிட்டால் ஓரளவு கட்டுப்படுத்த முடியும். இன்னும் 10 நாட்களிலாவது 100, 200 பேர்களை பிடித்து உள்ளே போட்டுவிட வேண்டும்.

அதற்குப் பிறகு சிறு அளவில் காய்ச்சி விற்பவர்களைப் பிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தச் சட்டத்தை இன்னும் சிறப்பான முறையில் செயல்படுத்தக் கிராமப்புறங்களில் கமிட்டி அமைக்கலாம். ஏற்கெனவே ஆரம்பக் காலத்தில் இப்படிப்பட்ட கிராமக் கமிட்டிகள் போடப்பட்டு, அதன்பின்னால் விட்டுவிட்டோம். இப்போதுகூட ஓரத்தநாடு தொகுதியில் பட்டுக்கோட்டையில் அங்குள்ள டி.எஸ்.பி. ஒரு கமிட்டியை அமைத்திருக்கிறார். அந்தக் கமிட்டி ரொம்ப வெற்றிகரமாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அதைப்போல மற்ற இடங்களிலும் போடலாம்.



1974 டிசம்பர் 20] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

இப்போது மீண்டும் மதுவிலக்கு வந்துவிட்டாலும் கசாயம் என்று ஒன்று விற்கப்படுகிறது. அதைத் தடுக்க முடியாது என்றாலும் கிராமக் கமிட்டி அவர்களைப் போய் தடுத்திருக்கிறார்கள். கசாயம் விற்பவர்களையும் குடிப்பவர்களையும் திருத்தி, விற்காமல் செய்திருக்கிறார்கள். ஆகவே, அந்தமாதிரியான கமிட்டிகளை அமைக்கத் தீவிர முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உடனடியாகப் பெருமளவில் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களை மிஸாவின்கீழ் பிடித்து உள்ளே போட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** துணைச் சபாநாயகர் அவர் களே, இந்த மசோதாவின்மீது எங்களுடைய கட்சியின் சார்பில் தெரிவித்த கருத்துக்களை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

இந்த மசோதாவிலுள்ள திருத்தம் இரண்டு விஷயங்களில் அமைந்திருக்கிறது. முதலாவதாக இந்த லைசென்ஸ் வழங்கப்பட வேண்டிய நேரத்தில் அதற்கு என்னென்ன விதிமுறைகள் கையாளப்படவேண்டுமென்று 20-ஏ என்ற பிரிவில் சொல்லப்பட் டிருக்கிறது. இரண்டாவதாக சில்லரை விற்பனைக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்று 20-பி. என்ற பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த விஷயத்தைப்பற்றிப் பல்வேறு கருத்துக்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. என்னைப் பொறுத்த வரையில் பூரண மது விலக்கு வேண்டுமென்று நான் சொல்வேன். பூரண மதுவிலக்கு எப்போதும் அமல்படுத்தப்படவேண்டும். எப்படி காந்திஜி பூரண மதுவிலக்கு இந்த நாட்டுக்குத் தேவை என்று கூறினாரோ அதை அமல்படுத்த எல்லா மாநிலங்களும் முன்வரவேண்டும். அப்படி இருந்தால்தான் ஏழை எளிய மக்கள் வாழ்வு மலரும் என்று நான் நம்புகிறேன். ஏனென்றால் அண்மையில் இந்த மது விலக்கைத் தளர்த்தியதன் காரணமாக வாலிபர்கள் எல்லாம் மதுவின் ருசியை புசித்துவிட்டார்கள். ஆகையால் இதில் லிபரலை சேஷன் என்ற முறையில் பெர்மிட் வழங்கலாம் என்று இந்த மசோதாவில் இருப்பதால் நான் இதை எதிர்க்கிறேன்.

இன்றைக்கு நாட்டிலே எல்லோரும் சமம் என்று வாதிடு கிறார்கள். அப்படியானால் ஆணுக்கு பெர்மிட் கொடுத்தால் பெண்ணுக்கு ஏன் கொடுக்கக் கூடாது என்று வாதிடுவார்கள்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 டிசம்பர் 20

ஆகவே, இந்த பெர்மிட் வழங்குவதை அடியோடு நிறுத்திவிட வேண்டும். ஒருவர் குடிக்கலாம், ஒருவர் குடிக்கக் கூடாது என்று சொல்வது நியாயமில்லை என்ற காரணத்தால் இதை ஒரு பேஸ்ட் ப்ரோகிராம் அடிப்படையில் பெர்மிட் அதிகமாக வழங்கப்பட்டிருந்தாலும் குறைத்துக்கொண்டே வரவேண்டும். நோய்வாய்ப்பட்டவர்களுக்கு வேண்டுமானால் கொடுக்கலாம். ஆனால் அதை மெடிசினல் டோஸ் இல்லாமல் "இண்டாக்சிகேட்டிங் டோஸ்"—போதை தரும் பொருளாகப் பயன்படுத்தினால் கண்டிப்பாக அவர்களுக்கு பெர்மிட் கொடுக்கக்கூடாது.

அதேமாதிரி இன்றைக்குப் பல போதை தரும் பொருட்கள் நடமாடிக்கொண்டிருக்கின்றன. உதாரணத்திற்கு எல்.எஸ்.டி. டிரக்ஸ் இருக்கிறது. அதையெல்லாம் இளைஞர்கள் சாப்பிட்டு, கெட்டுப் போகிறார்கள்.

அதேமாதிரி "மது கசாயம்" என்று சொல்லக்கூடிய 'அரிஷ்டம்' இருக்கிறது. அது பெரும்பாலும் கேரளத்திலுள்ள வைத்தியர்களால் தயாரிக்கப்பட்டு, எங்கள் மாவட்டத்தில் இறக்குமதி செய்யப்படுகிறது. அதைத் தடுப்பதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை என்பதை நான் அறிகிறேன். "மெடிசினல் அண்டு டாய்லட் ப்ரிப்பரேஷன்ஸ்" என்று தயாரிக்கப்படுகின்ற பொருட்களைத் தடை செய்ய வேண்டுமென்றால் அதற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தில் இடமில்லை. ஆகவே, அப்படிப்பட்டவைகளைத் தடை செய்ய வேண்டுமென்றால் மத்திய அரசு ஒன்றால்தான் முடியும். ஆனால் இன்றைக்கு அரிஷ்டம் என்று சொல்லப்படுகிற கசாயம் மதுவாக இருக்கிறதேதவிர மருந்தாக இல்லை. அதில் போதைப் பொருளை வேண்டுமென்றே சேர்த்து விற்பனை செய்கிறார்கள். 2 அவுன்ஸ் அல்லது 6 அவுன்ஸ் குடிக்க வேண்டுமென்றால் 24 அவுன்ஸ் சேர்த்துக் குடிக்கிறார்கள். அதனால் போதை அதிகமாகிவிடுகிறது. போலீஸ்காரர்கள் பிடித்து உள்ளே போடுகிறார்கள். ஊதிப் பிடிக்கிற முறை மீண்டும் வந்திருக்கிறது. மதுவிலக்கு தளர்த்தப்பட்டிருந்தாலும், ஒருவர் மது அருந்தி இருக்கிறாரா அல்லது அரிஷ்டம் போன்ற மருந்து வகைகளை உண்டிருக்கிறாரா என்று நிரூபிப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, அரிஷ்டம் மருந்து வகைகளைக் கட்டுப்படுத்த வேண்டும். இன்றைக்கு எந்தக் கடையில் போனாலும், தாம்பூலம் விற்கிற கடையில்கூட அரிஷ்டம் கிடைக்கிறது. அரிஷ்டம் விற்பனை செய்ய ஒரு வைத்தியருக்கு பெர்மிட் கொடுக்கிறார்கள். அவர்



1974 டிசம்பர் 20] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

அரிஷ்டம் விற்பனை செய்வதற்கு என்று பல பிராஞ்ச் கடைகளை வைத்து, மதுக்கடைகளாக நடத்திக்கொண்டிருக்கிறார். எங்கள் ஜில்லாவில் இது அதிகமாக நடைபெறுகிறது. இதை தடைசெய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக மது விற்பனையைக் கூட்டுறவுக் கடைகள்மூலம் செய்வதா அல்லது தனியார் மூலம் விற்பனை செய்வதா என்று என்னைக் கேட்டால், இந்த இரண்டு வகைகளிலுமே கூடாது; அரசாங்கத் துறையில் டிப்பார்ட்மென்ட் ஸ்டால் மூலம் விற்பனை செய்யவேண்டுமென்றுதான் நான் சொல்வேன். ஏனென்றால் இன்றைக்கு கூட்டுறவுத் துறையில் இருப்பவர்கள் எல்லாம் புடம் போட்டு எடுத்தவர்கள் அல்ல என்று தெரிவித்து, அதனால் அரசாங்கமே விற்பனையைக் கண்காணித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மதுவிலக்கைத் தீவிரமாக அமல் செய்வதற்கு போலீஸ் இலாகாவிலே ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்துவது பொருத்தமாக இருக்கும். அதிலே மது அருந்தாத உத்தியோகஸ்தர்களை நியமிக்க வேண்டும்.

இந்த மதுவிலக்குச் சட்டத்தை மீண்டும் அமல்படுத்துவதினால் பல்வேறு பகுதிகளிலும் மரம் ஏறும் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் உதவி அளிக்க வேண்டும்.

அதேமாதிரி 'கான்ட்ராக்ட்' எடுத்தவர்கள் இன்றைக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து ரெவின்யூ ரெக்கவரி என்ற முறையில் பெருமதிப்பு உள்ள சொத்துக்களை மிகக் குறைந்த விலைக்கு ஏலம் விடுகிறார்கள். அதுவும் போதாது என்றால் அவர்களுக்கு ஜாமீன் கொடுத்தவர்களிடமிருந்து வசூல் செய்யவேண்டுமென்று சட்டத்தில் சொல்லப்பட்டிருப்பதால், ஜாமீன் கொடுத்தவர்களைத் தொந்தரவு செய்கிறார்கள்.

Surety's liability is co-existing with that of the principal debtor என்று இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு யார் ஜாமீன் கொடுத்திருக்கிறார்களோ அவர்கள்மீது நடவடிக்கை மேற்கொள்கிறார்கள். அந்தத் தொந்தரவுகள் இல்லாமல் யார் யாருக்கு இதை வஜா செய்ய முடியுமோ அவர்களுக்கு வஜா செய்யவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 டிசம்பர் 20

பெரும் தொகைக்கு கான்ட்ராக்ட் எடுத்திருக்கிறார்கள். 60,000, 80,000 ரூபாய் என்று கான்ட்ராக்ட் எடுத்திருக்கிறார்கள். ரெவின்யூ ரெக்கவரி ஆக்டின்படி நடவடிக்கை எடுத்தால் உள்ளபடியே அவர்கள் எல்லாம் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டுவிடுவார்கள். அது நியாயமில்லை. இந்த மசோதா ஆதரிக்கின்ற வகையில் இருந்தாலும் இந்த மாதிரியான என்னுடைய கருத்துக்களைக் கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, மாண்புமிகு மன்ற உறுப்பினர்கள் மதுவிலக்குக் கொள்கையை மீண்டும் அமல்படுத்தும் நோக்கத்தோடு சட்டம் கொண்டுவந்த நேரத்தில் கூறிய கருத்துக்களை மீண்டும் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள்.

இப்போது கொண்டுவந்திருக்கிற திருத்தம் மதுவிலக்கை நிறைவேற்றுவதில் இருக்கிற கஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிற திருத்தமாகும். நம்மைப்பொறுத்த வரையில் மதுக் கடைகள் எந்த ரூபத்திலும் இருக்கக்கூடாது என்பதுதான். அது வெளிநாட்டு மதுவாக இருந்தாலும் கூடாது. ஆனால் அரசியல் சட்டத்தில் இருக்கிற அடிப்படை உரிமையின் காரணமாக, சுப்ரீம் கோர்ட் கொடுத்த தீர்ப்பின் காரணமாக, உடல் நலமில்லாதவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி, மது அருந்த பெர்மிட் கேட்டால் கொடுக்கவேண்டுமென்ற முறை இருப்பதால் அவர்கள் குடிப்பதற்கு பெர்மிட் கொடுக்கப்படுகிறது. அந்த பர்மிட்டுகளை கொடுக்கும்போது—அந்த பர்மிட்டுகளுக்கான சரக்கைத் தனியார் கடைகளில் வாங்கிக்கொள்ள வைத்து, அந்தக் கடைகளை ஏலம் விடலாம் என்றுதான் கருத்து இருந்தது. ஆனால் தனியார் கடைகளை ஏலத்திற்கு விடுவது என்றால்—அந்தக் கடைக்கு எவ்வளவு பர்மிட் வரும் என்று முன்கூட்டியே சொல்ல முடியாது. பர்மிட் எண்ணிக்கை காலத்திற்குக் காலம் மாறலாம். இதை நம்பி ஏலம் எடுப்பவர்களுக்கும் சிரமமாய் இருக்கும். இதை எல்லாம் கருதித்தான்—கூட்டுறவுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். மதுவிலக்கைப் பரிபூரணமாக ஏற்றுக்கொண்ட பிறகு அதை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டும் என்கிற அடிப்படையில்தான் இந்தக்



1974 டிசம்பர் 20] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

காரியங்கள் எல்லாம் செய்யப்படுகின்றன. மாவட்ட அளவில், வட்ட அளவில்—போலீஸ் ஸ்டேஷன் அளவில் அட்வைசரி கமிட்டி போட வேண்டும் என்றெல்லாம்கூட மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அரசாங்கமும் இந்தக் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறது. எந்த நிலையில் போடவேண்டுமென்பதுதான் பரிசீலிக்கப்படுகிறது. வெறும் குறைபாடுகளைச் சொல்லிக் கொண்டிருக்காமல் எல்லா அரசியல் கட்சிகளும் ஒத்துழைத்தால் இந்தத் திட்டத்தை இன்னமும் வெற்றிகரமாக நிறைவேற்றலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் போலீஸ் ஸ்டேஷன்களில் மாமூல் வாங்கிக்கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். தவறு நடக்கிற இடத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதே சென்னையில் மைலாப்பூர் பகுதியில் பெரிய வழக்கு கண்டுபிடிக்கப்பட்டது. நானே நேரில் பார்த்தேன். இப்படி உண்மையாகப் பாடுபடுகிற அதிகாரிகளையும் நாம் பாராட்டினால்தான் அவர்களுக்கு அதிக உற்சாகமும் ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பழனிசாமி அவர்கள் 6 கோடி ரூபாய் சரக்கு கடையில் இருந்தது, கடைசித் தேதிக்கு அவை எங்கே போயிற்று என்று கேட்டார்கள். 31—8—1974 அன்று இந்தச் சட்டம் அமலுக்கு வந்தவுடன் கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. உடனே அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்றார்கள். ரிட் போட்டார்கள். அவற்றுக்கு ட்யூட்டி கட்டப்பட்டிருக்கிறது. நாம் அவர்களிடம் அந்தச் சரக்குகளை சூப்பர் மார்க்கெட்டுகளுக்கு விற்கலாம் என்று தெரிவித்திருக்கிறோம். அல்லது கட்டிய ட்யூடியை ரீபண்டு கேட்காமல் பிற மாநிலங்களுக்கு வேண்டுமானாலும் எடுத்துச் செல்லலாம் என்று சொன்னோம். அப்படி எடுத்துக்கொண்டும் போயிருக்கிறார்கள்.

இந்தச் சட்டத்தைக் கொடுக் கவந்தவுடனே நாம் இதை நல்லமுறையில் நிறைவேற்ற வேண்டும் என்றுதான் காவல்துறை அதிகாரிகளை எல்லாம் அழைத்து வைத்து மகாநாடு நடத்தியிருக்கிறோம். தவறுகள் தீவிரமாகத் தடுக்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். குடித்த கேஸ் சம்பந்தமான புள்ளி விவரத்தை எடுத்துக்கொண்டால் செப்டம்பரில் 1667, அக்டோபரில் 2,495, நவம்பரில் 4,449 அதேபோல் கள்ளச்சாராயம் சம்பந்த

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1974 டிசம்பர் 20

மானது செப்டம்பரில் 743, அக்டோபரில் 13,451, நவம்பரில் 15,009. மொத்தமே 37,737 வழக்குகள்தான். பெரிய அளவில் நடைபெறவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தனியாருக்குக் கொடுக்க வேண்டும் என்றும், தனியாருக்குக் கொடுக்கக்கூடாது என்றும் இரண்டுவிதமான கருத்துக்கள் இங்கே தெரிவிக்கப்பட்டன. இதிலேகூட முன்னால்

Madras Liquor (Licence and permit Rules), 1960. Licence for possession and sale or issue of bottled liquor FL. I. "The licence in this form will be issued by the Collector on payment of annual licence fee of Rs. 1,000 on application in Form A-I". என்பதாகத் தனியாருக்குத்தான் கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது. இப்போது நாம் கூட்டுறவுத் துறைக்கு முன்னுரிமை என்கிற அடிப்படையில் தனியாருக்கும் கொடுக்கும் வகையில் சட்டம் கொண்டு வந்திருக்கிறோம்.

திரு. கோவை செழியன் சொல்லும்போது கமிட்டியில் மதவாதிகளைப் போடவேண்டும் என்று சொன்னார். மதவாதிகளிலேயே குடிக்கவும் செய்கிறார்கள். சிலர் குடிக்காமல் இருக்கிறார்கள். நேற்றையதினம் திரு. ஆலடி அருணா பேசும்போது மதத்தில் தனக்கு நம்பிக்கையில்லையென்று சொன்னார்கள். இன்று கோவை செழியன் மதவாதிகளைப்போடவேண்டும் என்று சொல்கிறார். நம்மைப் பொறுத்தவரையில் மதுவிலக்குத் திட்டத்தில் பூரண நம்பிக்கை உள்ளவர்களை இந்தக் கமிட்டிகளில் போடுவதுதான் சரியாக இருக்கும், அதைத்தான் பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஹெல்த் சர்டிபிகேட்டுகளின் அடிப்படையில்தான் பர்மிட் கொடுக்கப்படுகிறது. பெண்களும் அந்த க்ரவுண்டில் அப்ளை செய்தால் பர்மிட் கொடுக்கப்பட வேண்டுமென்பதுதான் சட்டம். இதுவரை பர்மிட் கோரி வந்திருக்கிற அப்ளிகேஷனே 3,602 தான். கொடுக்கப்பட்டிருக்கிற பர்மிட் 2,100 அளவுக்குத்தான் இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** ஆண்களுக்குக் கொடுக்கப்பட்ட பர்மிட் எவ்வளவு? பெண்களுக்கு எவ்வளவு என்று சொல்ல முடியுமா?



1974 டிசம்பர் 20]

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பத்தில் ஒன்றாகத்தான் இருக்கும். தனிக் கேள்வி போட்டால் எவ்வளவு, என்ன பெயர் என்றுகூட வேண்டுமானாலும் சொல்கிறேன்.

**திரு. கோவை செழியன் :** இது பெர்மனென்டாக பெர்மிட் வைத்திருப்பவர்களைப்பற்றியது. பெண்களுக்கு டெலிவரி நேரத்தில் மது தேவை என்றால் தற்காலிகமாகத் தேவைப்படுகிறவர்களுக்கு தற்காலிக பெர்மிட் தரப்படுகிறதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அது தனியாக டாக்டர் சர்டிபிகேட் அடிப்படையில் கொடுக்கப்படுகிறது.

திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் டி. எல். 2 பெர்மிட்டைப் பற்றிச் சொன்னார்கள். 1—3—1975 வரை அதற்கு அனுமதி இருந்தது. இப்போது அதை ரின்யூ செய்கிறோமேதவிர வேறு இல்லை. டி.எல். 2 பெர்மிட்டுகளைத் தனியார்களுக்குக் கொடுக்காமல் கூட்டுறவுத்துறைக்குக் கொடுக்கலாமா என்பது பரிசீலனையில் இருக்கிறது. தனியார்களிடம் இருந்து கோரிக்கை வாராமல் இருந்தால் நிச்சயமாக இது வெற்றிபெறும்.

கேரளாவில் இருந்து கன்னியாகுமரிக்கு போலீஸ் வானில் சாராயம் கொண்டுவரப்பட்டதுபற்றிச் சொன்னார்கள். வழக்குப் போட்டோம். திரு. ஜேம்ஸ் அவர்களுக்கே தெரியும். அந்தப் போலீஸ்காரரே தற்கொலை செய்துகொண்டு இறந்துவிட்டார். அதில் பிரச்சினை இல்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** ஒரு போலீஸ் வானில் ஒரு டிரைவர் 18 டின் அளவுக்கு தனிப் பொறுப்பில் எடுத்துக்கொண்டு வருவது என்பது இயலாத காரியம். அதில் அதிகாரிகளுக்கும் பங்கு உண்டா என்பதை நல்ல முறையில் விசாரித்தாக வேண்டும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இது பத்திரிகையில் வந்தது. இது பெரிய பிரச்சினையாகவும் இருக்கிறது. போலீஸ் வானிலேயே கொண்டு வரப்பட்டிருக்கிறபோது டிரைவர் இறந்துவிட்டார் என்று வழக்கை விடுவது எப்படித் திருப்திகரமாக இருக்கும்?

**DR. H. V. HANDE :** If he has died, may I know whether it was homicide or accidental death or suicide?
எந்த முறையிலே இது நடந்தது என்பதை விசாரணை பண்ணிச் சொன்னால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: டாக்டர் ஹாண்டே அவர்கள் இன்க்வஸ்ட் ரிப்போர்ட் காப்பி கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். மாண்புமிகு ஜேம்ஸ்ஸுக்குப் பூராவும் தெரியும். அவரே சொல்லலாம். அந்த டிரைவர் அந்தச் சமயத்திலே லீவிலே இருந்தார். அப்பொழுது அனுமதி இல்லாமல் வான் கொண்டுபோயிருக்கிறார். அதற்காக அவர்மேல் வழக்குப் போடப்பட்டிருந்தது. உடனே, அவர் தற்கொலை செய்து கொண்டார். தவறுகள் நடந்தது அரசாங்கக் கவனத்திற்குக் கொண்டு வந்தவுடன் நடவடிக்கை எடுக்கத்தான் செய்கிறோம். நண்பர் பழனிசாமி அவர்கள் பெருந்துறையிலே ஒருவர் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறார் என்று சொன்னார். உடனே நடவடிக்கை எடுக்கப்பட்டது. மீண்டும் அந்த நபர் கள்ளச் சாராயம் காய்ச்சுவதாகத் தகவல் வந்திருக்கிறது. அதிகாரிகளிடம் சொல்லி நடவடிக்கை எடுத்திருக்கிறோம். உங்களுக்கு அம்மாதிரித் தகவல் வரும்போது சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வையுங்கள், அல்லது எங்களுக்கு அனுப்பி வையுங்கள், நடவடிக்கை எடுப்போம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: அந்தப் போலீஸ் கான்ஸ்டபிளோடு இன்னும் இரண்டு நபர்கள் இருந்ததாகக் குற்றச்சாட்டுகள் எல்லாம வந்தவண்ணமாக இருக்கின்றன. அது சம்பந்தமாக விசாரணை ஏதாவது நடந்ததா? தனியாகப் போலீஸ் வானை—கேரள எல்லைக்குள்ளே 50 மைல் கொண்டு போனதாகத் தெரிந்தது—எடுத்துக் கொண்டு போனாரா? செக் போஸ்டுகளை எல்லாம் தாண்டிப் போயிருக்கிறதா அந்த வான்? இது சம்பந்தமாக என்ன விவரங்கள் அமைச்சர் கையிலே இருக்கிறதோ, அதனைத் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: டிரைவர் ஒருவர்தான் அதை ஓட்டிச் சென்றதாகத் தகவல் இருக்கிறது. பிற விவரமெல்லாம் என்னிடத்திலே இல்லை.

பர்மிட் வாங்குவதிலே, ஏற்றத்தாழ்வு, ஏழை பணக்காரன் என்று எல்லாம் கூட இருக்கக் கூடாது என்று சொன்னார்கள். பர்மிட்டுகளுக்காக வந்துள்ள மனுக்களைப் பார்க்கும்போது, சாதாரணக் கடைநிலை ஊழியர்கூட, வாங்கியிருக்கிறார், பர்மிட்டை ரூ. 500 கட்டி வாங்கி இருக்கிறார். அதிலே வசதியுள்ளவர்கள்,



நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், ஏழைகள் எல்லாம்கூட இருக்கிறார்கள். பர்மிட் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், பர்மிட் இஷ்யூவை எடுத்துப் பார்த்தால், 2,500 பர்மிட்டுகள்தான் இஷ்யூவாகியிருக்கின்றன. ஆகவே, இதிலே எந்தவிதமான பிரச்னையும் இல்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ரெவினியூ ரெக்கவரி ஆக்டைப் பற்றி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். ஹைகோர்ட்டுக்குப் போய் ஹைகோர்ட்டிலே ரெவினியூ ரெக்கவரி ஆக்டிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால், சில விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென்று சொன்னார்கள். அந்த விதிமுறைகளைப் பின்பற்றித்தான் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி சொன்னதுபோல் மீண்டும் இதைப் பொறுக்குக் குழுவுக்கு அனுப்பத் தேவையில்லையென்று கூறி, இதை நிறைவேற்றித் தரவேண்டுமாய்க் கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. என். கே. பழனிசாமி தம் திருத்தத்தை வலியுறுத்துகிறாரோ என அறிய விரும்புகிறேன்.

திரு. என். கே. பழனிசாமி: சார், என்னுடைய திருத்தத்தை நான் "பிரச்" செய்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

பிரிவுகள் 2, 3, 4, 5 ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்தச் சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**(ச) தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 52/74).**

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 52/74) ஆய்வுக்கு' எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று நான் முன்மொழிகிறேன்.

சென்னை மாநகராட்சிக்கானத் தேர்தல்களை நடத்த ஏற்பாடுகள் செய்ய வேண்டிய கால அளவு 1974 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30 ஆம் நாள் வரை நீட்டிக்கப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். சென்னை மாநகரை 150 வட்டங்களாக எல்லை வரையறுப்பதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளமையாலும், அவ்வாறு வரையறுத்த பின்னரே தேர்தல்கள் நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய இயலும் என்பதாலும், இத் தேர்தல்களை நடத்த ஏற்பாடுகள் செய்வதற்கான கால அளவை 1974 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30 ஆம் நாளிலிருந்து மேலும் ஓராண்டிற்கு நீட்டிப்பதென முடிவு செய்யப்பட்டது.

மதுரை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் அதனுள் அடங்கியுள்ள சில சட்டப் பேரவைத் தொகுதிகளின் எல்லைகளை மாற்றியமைக்க வேண்டுமென்று இந்தியத் தேர்தல் தொகுதி எல்லை வரையறை ஆணைக் குழு வெளியிட்ட செயற்குறிப்புகளின் விளைவாகவும் மாநகராட்சியின் தேர்தல் தொகுதியின் எல்லைகள் ஒரு சட்ட மன்றத் தேர்தல் தொகுதியில் எல்லைக்குள் அடங்கி இருக்க வேண்டும் என்பதாலும், மதுரை மாநகராட்சியின் தேர்தல் தொகுதிகளின் எல்லை வரையறுப்பதற்கான செயற்குறிப்புகளுக்கு இறுதி வடிவம் கொடுக்கும் பணி இன்னும் முடிவு பெறவில்லை.

மேலும், மதுரை மாநகராட்சியின் உறுப்பினர்களது பதவிக் காலத்தை 1—11—1974-க்கு அப்பாலும் நீட்டிக்க வேண்டியதில்லை என்றும், மேயர், மாநகராட்சி மன்றம், மாநகராட்சி ஆணையர்

* 18—12—1974 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



ஆகியோரது அதிகாரங்களைச் செலுத்தவும், ஆறு திங்களுக்குள் தேர்தல்களை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவும் தனி அதிகாரி ஒருவரை நியமிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

நகராட்சிகளைப் பொறுத்தவரையில் நிர்வாகக் காரணங்களுக்காக நகராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக் காலத்தை 1975 மார்ச் 1 ஆம் நாள் வரை நீட்டிப்பதென முடிவு செய்யப்பட்டது.

மேற்கூறிய நடவடிக்கைகளை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட சட்டங்களைத் திருத்தியே ஆகவேண்டும். அச்சமயத்தில் சட்ட மன்றக் கூட்டத் தொடர் நடைபெறாததால், தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றச் சட்டங்கள் (இரண்டாவது திருத்த) அவசரச் சட்டத்தைச் சாற்றுரைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மேற்படி அவசரச் சட்டத்திற்குப் பதிலாகக் கொண்டு வரப்படும் சட்ட முன்வடிவு பேரவையின் முன் உள்ளது.

இச்சட்ட முன்வடிவில் மதுரை மாநகராட்சியிலுள்ள வரி விதிப்பு மேல்முறையீட்டுக் குழு அமைப்பில் சில மாற்றங்கள் செய்வதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது. 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் தற்போதைய விதிகளின்படி வரிவிதிப்பு மேல் முறையீட்டுக் குழுவின் தலைவராக மேயரும், மாநகராட்சி மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படும் நால்வர் உறுப்பினர்களாகவும் இருக்கின்றனர். ஆனால், சென்னை மாநகராட்சியில் செயல்படும் இதுபோன்ற குழுவில் நீதித் துறை அதிகாரி ஒருவர் தலைவராகவும், மாநகராட்சி மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படும் இரண்டு பேர் உறுப்பினர்களாகவும் உள்ளனர். இந்த இரண்டு மாநகராட்சிகளின் வரிவிதிப்பு மேல் முறையீட்டுக் குழுக்களின் அமைப்பை ஒரே சீராக்கும் நோக்கத்துடன், மதுரை மாநகராட்சி வரிவிதிப்பு மேல் முறையீட்டுக் குழு அமைப்பில் மூன்று உறுப்பினர்கள் இருக்குமாறு அக்குழு அமைப்பை மாற்றியமைக்க வகை செய்யப்பட்டுள்ளது. இக்குழுவின் தலைவராக துணை நீதிபதி பதவித் தரத்தில் அரசால் நியமிக்கப்படும் நீதித் துறை அதிகாரி ஒருவர் இருப்பார் மற்ற இருவரும் மாநகராட்சி உறுப்பினர்களுக்குள் தேர்ந்தெடுக்கப் பெற்றவர்களாக இருப்பர். மேலும், மதுரை

மாநகராட்சி மன்றம் கலைக்கப்பட நேரிடும் காலங்களில், வரி விதிப்பு மேல் முறையீட்டுக் குழுத் தலைவரே, அக்குழுவின் கடமைகளை ஆற்ற வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. மாநகராட்சிக்குத் தனி அதிகாரி நியமிக்கப்படும் கால அளவின் போது, வரிவிதிப்பு மேல் முறையீட்டுக் குழுவின் அலுவல்களை கவனிக்க துணை நீதிபதி தரத்தில் நீதித் துறை அதிகாரி ஒருவரை நியமிப்பதற்கும், அக்குழுவை தனி அதிகாரியின் அதிகார வரம்பினின்று நீக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் கீழ் மத்திய அரசுக்கு அல்லது மாநில அரசுக்குச் சொந்தமான அல்லது அவற்றின் நிர்வாகத்தின் கீழ் உள்ள, சட்டப்படி இணைந்த நிறுவனங்களின் ஊழியர் எவரும் மாநகராட்சி மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படவோ அவ்வாறு சேர்த்துக் கொள்ளப்படவோ கூடாது. இவ்வூழியர்கள் மாநகராட்சித் தேர்தலுக்குப் போட்டியிடுவதினின்று தடை செய்யும் தற்போதுள்ள விதித் துறை நீக்கப்பட வேண்டுமென்றும், அதற்கிணங்க மேற்படி சட்டத்தின் 55 (2), பிரிவைத் திருத்தப்பட வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

சென்னை, மதுரை மாநகராட்சிச் சட்டங்களின் தற்போதைய விதித் துறைகளுக்கிணங்க, பதவிக் காலம் முடிவடைந்து வெளியேறும் மேயர் அல்லது துணை மேயர், அப்பதவிக்கு மீண்டும் போட்டியிடத் தகுதியுள்ளவராவார். உள்ளாட்சி நிர்வாகத்தில் பல்வேறு உறுப்பினர்கள் பயிற்சி பெற வாய்ப்பு அளிக்கும் எண்ணத்துடன் பதவிக் காலம் முடிவடைந்து வெளியேறும் மேயர் அல்லது துணை மேயர் நேர்விற்கேற்ப, மாநகராட்சி மன்றத்தின் அடுத்த சாதாரணத் தேர்தல் காலம் வரையில் மீண்டும் அப் பதவிக்குப் போட்டியிடத் தகுதியற்றவர் ஆவார் என்று வகை செய்யவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கும் இச்சட்ட முன்வடிவு வகை செய்கிறது.

1975 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் நகராட்சிகள் அனைத்தின் தேர்தல்களையும் நடத்துவது குறித்த அரசின் முடிவை மன்றப்பேரவை உறுப்பினர்கள் அறிவர். ஆனால், நம் மாநிலத்தில் தற்போது நிலவும் வறட்சி, பற்றுக்குறை நிலைமையை முன்னிட்டு சிறிது காலத்திற்குத் தேர்தலை ஒத்திப்போட வேண்டும் என்று



அனைத்துக் கட்சி தலைவர்களுடன் கலந்து ஆலோசித்து எடுக்கப் பெற்ற முடிவிற்கேற்ப நகராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக் காலத்தை 1975, ஜூலை 1 ஆம் நாள் வரையில் நீட்டிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆகவே, இச்சட்ட முன்வடிவை ஏற்றுக்கொண்டு நிறைவேற்றித் தருமாறு இம்மாமன்றத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

### (2) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) 21—12—1974 மாலை தனியார் அலுவல்களை எடுத்துக் கொள்வது குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில், நாளை, அதாவது 21—12—1974 ஆம் நாள், மாலை 4 மணிக்குப் பேரவை கூடி, "தனியார் அலுவல்களை" எடுத்துக் கொள்வதென்றும், ஏனைய அலுவல்கள் ஏற்கனவே அறிவித்துள்ளபடி நடைபெறலாமென்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேரம் இப்பொழுது குறைவாக இருப்பதால், ஒவ்வொருவரும் 5 நிமிடத்திற்கு மேற்படாமல் பேசுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

### (7) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

### (ஈ) தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 52/74)—தொடர்ச்சி

* திரு. ஆலடி அருணா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கிற நகராட்சி சட்டத் திருத்த மசோதா குறித்து எனது கருத்துக்களை மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

அரசாங்கம் தனக்கு இருக்கிற உரிமையை, அதிகாரத்தை அரசியல் சுயநலத்திற்காகவும், தன் கட்சியிலே இருக்கிற பகைமைக்கும் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் இந்தச் சட்டம்

ரப்படி அமைக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு ஆதாரமாக, அடையாளமாக இந்தத் திருத்தம் எப்படி அமைந்திருக்கிறது என்பதை மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். இயற்கையிலே நகராட்சிகளுக்கான தேர்தல் 1971-லேயே நடந்திருக்க வேண்டும், என்றாலும் நகராட்சி உறுப்பினர்கள் பதவிக் காலம் 5 ஆண்டுக் காலமாக உயர்த்தப்பட்டது. இப்பொழுது 4 ஆவது முறையாக, அவர்களது பதவிக் காலம் மேலும் நீடிக்கப்பட்டிருக்கிறது. இவைகளெல்லாம் எப்படிப் பட்ட ஒரு பெரிய சூழ்நிலையை அரசியலிலே ஏற்படுத்தினாலும் நான் பொய்ய தவருக அவற்றைக் கருதாவிட்டாலும், எதிர்காலத்திலே அப்படிப்பட்ட தவறுகள் நேரக் கூடாது என்று நான் கருதுகிறேன். காரணம் மக்களுக்கு ஜனநாயகத்திலே இருக்கிற நம்பிக்கை நாளுக்கு நாள் இப்படிப்பட்ட ஒத்திவைப்புகள் நடந்துகொண்டே இருந்தால் அந்த நம்பிக்கை தளருகின்ற சூழ்நிலை ஏற்பட்டுவிடும். இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளை, குறைபாடுகளை இந்த மன்றத்தின் கவனத்திற்கு நாங்கள் கொண்டு வருகின்ற நேரத்திலே ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் மற்ற மாநிலங்களிலே எப்படி தேர்தல்கள் ஒத்திவைக்கப்படுகின்றன என்ற விவரங்களைக் கொண்டுவரக்கூடும். நல்ல முடிவுகள், நல்ல மரபுகள், நல்ல செயல்கள் எந்த மாநிலங்களிலே நடைபெறுகின்றனவோ அவற்றைப் பின்பற்றுவதைத்தான் நாம் நம்முடைய அரசியல் பயணத்திலே முக்கியமாக வைத்துக் கொள்ள வேண்டும். நம்முடைய தவறுகள், நம்முடைய குறைகள் இவைகளுக்கு ஆதாரமாக மற்ற மாநிலங்களைப் பின்பற்றுவது நல்லதல்ல.

எல்லா நகராட்சிகளுடைய பதவிக் காலமும் நீடிக்கப் பட்டிருந்தும், அவர்கள் என்ன பாவத்தைச் செய்தார்களோ அவர்கள் என்ன கொடுமையைச் செய்தார்களோ தெரியவில்லை, மதுரை மாநகராட்சிக்கு மட்டும் அந்தச் சலுகை, அப்படிப்பட்ட பதவி நீடிப்புக் கொடுக்கப்படவில்லை. அதற்கு என்ன காரணம், தனிப்பட்ட காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் அதற்கு ஊழல் காரணம் என்று சொல்லப் படுகிறது. அது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. என் பதவி நீடிப்பு சென்னை மாநகராட்சிக்குக் கொடுக்கப்படவில்லை என்று யாரும் கேட்கவில்லை. ஆனால் மதுரை மாநகராட்சிக்கு ஓரவஞ்சனை,



மாற்றாந்தாய் மனப்பான்மை ஏன் என்று கேட்க ஆசைப் படுகிறோம். ஆளுங்கட்சியிலே இருக்கிற தனிப்பட்ட அரசியல் பகை காரணமாக ஒரு மாநகராட்சியின் நலன்கள் பாதிக்கப்பட விடக்கூடாது.

நெல்லை நகராட்சி கலைக்கப்பட்ட நேரத்திலே எதிர் வரிசையிலே திராவிட முன்னேற்றக் கழகம் இருந்தபோது நகரத்தின் பணிகள், நகராட்சியின் நலன்கள் எவ்விதம் பாதிக்கப்படும் என்று இந்த மன்றத்திலே ஒரு இலக்கியத்தையே படைத்திருக்கிறது. அந்த நிலைமையைத் தெரிந்து வைத்திருக்கிற ஒரு இயக்கம் அந்த நகராட்சியின் உரிமையைப் பறித்து இருக்கிறது என்றால் அது நியாயந்தானா? தேவைதானா என்று பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 1963 ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சியின் மேயராக திரு. குசேலர் அவர்கள் இருந்தார்கள். அவர்களுடைய பதவிக் காலத்தை அப்போதிருந்த ஆளுங்கட்சி நீடித்துக் கொடுத்தது. ஆனால் மதுரை மாநகராட்சியின் மேயரின் பதவிக் காலத்தை நீடித்துக் கொடுக்க வழியில்லாமல் இந்தச் சட்டம் இருக்கிறது. அப்போது ஆளுங்கட்சியாக இருந்த காங்கிரஸ் நண்பர்களுக்கு அந்தக் காலத்திலே இருந்த அரசியல் பண்பை, அரசியல் நாகரிகத்தைக் கூட இன்றைய தினம் உள்ளவர்கள் ஏன் இழந்துவிட்டார்கள் என்று புரியவில்லை. இதே மாநகராட்சி மேயர் பதவியைப் பற்றி—இந்த மன்றத்திலே மாநகராட்சிகளின் தேர்தல்கள் பற்றி ஒரு சட்டம் வந்த நேரத்திலே—சென்னை மேயருக்கு எந்த முறையை எந்த இலக்கணத்தை எந்த மரபைப் பின்பற்றினீர்களோ அந்த முறையை மதுரை மாநகராட்சிக்கும் பின்பற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அன்றைக்கு அந்தக் கருத்து அலட்சியப்படுத்தப்பட்டது, அந்தக் கருத்துக்கு விரோதமாக நடத்தப்படுகிறது. இந்த மன்றம் எந்த மரபைப் பின்பற்றுவதாக இருந்தாலும் எல்லா இடங்களுக்கும் ஒரே சீராகப் பின்பற்ற வேண்டும்.

மதுரை மாநகராட்சியைப் பொறுத்தவரையிலும் இப்படிப்பட்ட வஞ்சகம் நடந்து இருக்கிறது. சென்னை மாநகராட்சித் தேர்தல் ஒரு ஆண்டிற்குப் பிறகு நடத்தப்படும் என்ற அடிப்படையிலே இங்கே கருத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம்

150 வட்டங்களைப் பிரிக்க வேண்டும் என்று சொல்லப் பட்டிருக்கிறது, அது ஏற்றுக்கொள்ளக் கூடிய வாதமல்ல, ஒத்துக்கொள்ளக் கூடிய நியாயமுமல்ல. ஒரு மாநகரத்தை 150 வட்டங்களாகப் பிரிப்பதற்கு ஒரு ஆண்டு தேவையில்லை. கடந்த முறை இதேமாதிரி குற்றச்சாட்டுச் சொல்லப்பட்ட நேரத்திலே கவுண்டர்பாயில் முறையைக் கொண்டுவரப் போகிறோம் என்று சொல்லப்பட்டது; இப்போது டிவிஷன் பிரிக்கப் போகிறோம் என்று சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட போலிக் காரணங்களை சொல்லாமல் எந்த மாநகராட்சி, நகராட்சித் தேர்தலாக இருந்தாலும் ஒரே காலக்கட்டத்திலே நடத்தி ஜனநாயகத்தின் பண்பைக் காப்பாற்ற அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*THIRU K. M. SUBRAMANIAM : Mr. Deputy Speaker, Sir, I am very much surprised that a new amendment has come extending the term of office of the present Special Officer by one year or extending the elections by one year. We were told like this before. Three times, the extension has come. The first time we were told that they wanted to have fresh enumeration. Afterwards they told that they wanted to increase the divisions and so there should be fresh delimitation. Now we are told that the delimitation is not finished. It is unfortunate that we are actually bringing the death-knell of democracy in this country. Already people are losing faith in democracy by various actions taking place and for which of course we are not responsible.

I am particularly talking about Madras City. An impression is gaining ground that democracy is not the proper form for an administration and that Special Officer should continue.

A Special Officer is a Special Officer and of course the present man is a good Special Officer. But, you cannot always have good Special Officers. Secondly, he has done two things; he has white-washed the latrines and cleaned the roads. But that is not the complete work. He has said that debts of corporation have been cleared. But if you do not spend money, then it is not economy. It is only parsimony. He is practising not economy, but parsimony which is different from economy. Wise spending is what is wanted. The ordinary duties of the Corporation are not being





discharged. Mere white-washing of latrines and cleaning of roads is not all. What are the other things he has achieved? This sort of extension is not fair, nor proper, nor conducive to democracy and that too to one of the best institutional form of Government. In a democracy people should have their voice.

MR. DEPUTY SPEAKER : Please finish in two minutes.

THIRU K. M. SUBRAMANIAM : I have not even finished introduction.

MR. DEPUTY SPEAKER : Be short in introduction and finish quickly in two minutes.

THIRU K. M. SUBRAMANIAM : It is not possible. If necessary, you can extend the time-limit and continue the Bill tomorrow. It has a budget of Rs. 14 crores and how can we speak about it in two minutes?

THIRUMATHI T. N. ANANDANAYAKI : On a point of order, Sir, it is ringing the death-knell of 100 municipalities and how can we finish in two minutes? Give us some more time.

MR. DEPUTY SPEAKER : The Hon. Member can finish quickly.

THIRU K. M. SUBRAMANIAM : This institution has been functioning for more than 100 years. In some sort of way, people are connected with it, for upkeep of good sanitary conditions, for elementary education, etc. I can tell you that after abolition of council, corruption has increased in the Corporation. When Council was there, certain officers were afraid to receive money. To-day how many ney buildings have come out without plans, how many fresh cattle are there without licences, etc? I do not blame the Special Officer? He cannot look after all things. If 26 councillors are charge-sheeted we have found that along with them 400 or 500 workers are also charge-sheeted. That shows the extent of corruption. People have now come to understand the reality. The local citizen knows to whom he should vote hereafter. He may vote hereafter for intelligent and honest people. Election is necessary.

[Thiru K. M. Subramaniam] [1974 டிசம்பர் 20

The Special Officer cannot attend to all things. He has been put in charge of an institution, a big institution which is growing from corruption to corruption. We have been seeing it in the last few days. Anybody can see. He has to look after such a huge institution. How can he do it? He cannot do it. I am very sorry to say that no single individual can look after such a huge institution like the Corporation of Madras. Therefore, the Corporation Council is very necessary. If this democratic institution is there, people can exercise their control and tell the authorities concerned what they want and get things done. The Corporation Council can look after the demands and requirements of the people. Therefore, I request that the Council, I mean the Corporation may be brought into life. Though the Bill says 'one year', I request that Elections may be conducted as quickly as possible, so that we can get back the democratic institution functioning and people can have control over the working of the administration of the Corporation particularly the officers who, I am very sorry to say, have not got out of the rut in spite of the Special Officer.

திரு. கே. டி. கே. தங்கமணி : உதவி சபாநாயகர் அவர்களே, சபைக்கு முன்னால் வந்திருக்கக் கூடிய மசோதா, சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 52/74 பற்றி எங்களுடைய கருத்துக்களை நான் சொல்லலாம் என்று இருக்கிறேன்.

இந்த மசோதாவில் குறிப்பிட்டிருக்கும் முழு விஷயத்தையும் எங்கள் கட்சியின் சார்பாக எதிர்க்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாதிரியான சட்டத்திலே ஒத்திப் போடுவது என்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய விஷயம் அல்ல. சாதாரணமாக ஏதாவது ஒரு சம்பவம் ஏற்பட்டால் ஒரு தடவை தேர்தலை ஒத்திப் போடுவதைப் புரிந்து கொள்ள முடியும். சென்ற ஆண்டு ஜூலை மாதத்தில் தேர்தலை நடத்துவதாக இருந்தது. அந்தச் சம்பந்தப்பட்ட அமைச்சரவர்கள் ஒரு தடவை அல்ல, பல தடவைகள் கண்டிப்பாக பிப்ரவரி மாதத்தில் நகரசபைத் தேர்தல்களும், மதுரை கார்ப்பரேஷன் தேர்தலும் நடைபெறும் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொன்னதற்குப் பிறகு இன்றைக்கு ஜூலை மாதம் வரையிலே தேர்தல் நடக்காது என்று ஏன் சொல்ல வேண்டும்? சென்னை கார்ப்பரேஷன் தேர்தல் இன்னும் ஓராண்டுக் காலம்



1974 டிசம்பர் 20] [திரு. கே. டி. கே. தங்கமணி]

கழித்து நடக்கும் என்று சொல்வதும் பொருத்தமல்ல என்பது மட்டுமல்லாமல் எந்த அளவிற்கு அரசு இந்த மக்களுடைய அபிலாஷைகளைக் கருத்திற்கொண்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கும் இது எடுத்துக்காட்டாக இருக்கிறது.

இந்த மசோதாவிலுள்ள ஊனங்களைப் பற்றி ஆலடி அருணா அவர்கள் சொன்னார்கள். பொதுவாக மதுரையிலே மதுரை கார்ப்பரேஷனாக ஆனவுடனே தேர்தல் நடக்கும் என்று பலரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் நகரசபையிலே தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட ஒரு அமைப்பினால் ஒரு கார்ப்பரேஷனாக மாறியது. அதற்குப் பிறகு கார்ப்பரேஷனை விரிவுபடுத்த வேண்டும், பல பகுதிகளும் சேர்க்கப்பட வேண்டுமென்பதற்காகச் சில ஏற்பாடுகள் செய்யப்பட்டு 65 வார்டுகளாகப் பிரிக்கப்பட்டு, ஏதோ ஒரு வார்டு, இரண்டு வார்டுகளிலே தகராறு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்வதானது நாமே சில தகராறுகளை உண்டாக்கி அந்தத் தேர்தலை ஒத்திப் போடலாம் என்று செய்வது மாதிரியாக இருக்கிறது. மதுரை கார்ப்பரேஷனைப் பொறுத்தவரையிலும் தேர்தல் நடைபெறத் தான் போகிறது என்று நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால் அந்தத் தேர்தல் ஒத்திப் போடப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் ஆலடி அருணா அவர்கள் சொன்ன கருத்துக்களை நானும் வலியுறுத்துகிறேன்.

சென்னையைப் பொறுத்தவரையில் கார்ப்பரேஷனுடைய மேயர், டெபுடி மேயர் என்ற அமைப்பைப் பெற்றிருக்கிறார்கள். ஏற்கனவே சில கன்வென்ஷன்கள் இருந்து வந்து, ஒவ்வொரு ஆண்டிலும் மேயர் மாற்றப்பட வேண்டும், சில குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்தவர்கள்தான் மேயராக இருக்க வேண்டுமென்றெல்லாம் ஏற்பாடு செய்யப்பட்டது. மதுரையைப் பொறுத்தவரையில் அம்மாதிரி அவசியமில்லை என்றெல்லாம் கொண்டு வரப்பட்டது. அன்றைக்கே பேசிய பலரும் மதுரைக்கு இந்த விசேஷ சலுகையைக் கொடுக்கிறீர்கள் என்று எடுத்துக் காட்டினார்கள். ஏன் அப்படி விசேஷ சலுகை காட்டினார்கள் என்பதற்குப் பதில் சொல்லியாக வேண்டும். அப்படிப்பட்ட விசேஷ சலுகை இன்றைக்கு மாற்றப்பட்டு விட்டது. மேயரும், டெபுடி மேயரும், மேயர் மாறத்தான் வேண்டுமென்றும், ஒரு தடவை தேர்தல்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 டிசம்பர் 20

முடிந்த பிறகுதான் அந்த மேயர் திரும்ப வரலாம் என்று கொண்டு வந்திருப்பது அரசியல் காழ்ப்புணர்ச்சியை அல்லது தனிப்பட்டவர்களிடம் உள்ள விருப்பு வெறுப்பைப் பிரதிபலிப்பதாக இருக்கிறது. மதுரையில் தனிப்பட்டவர்களைப் பற்றிச் சொல்ல விரும்பவில்லை. எல்லா நகரசபை உறுப்பினர்களும் இன்னும் கொஞ்ச காலம் உறுப்பினர்களாக இருக்கலாம் என்று சொல்லிவிட்டு, மதுரை கார்ப்பரேஷன் மட்டும் என்ன பாவம் செய்தார்களோ தெரியவில்லை, அதை உடனடியாகக் கலைத்து, உடனே ஸ்பெஷல் ஆபீசரைப் போட்டது சரியான நடவடிக்கை இல்லை என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேமாதிரியாக சில விஷயங்கள் இந்தக் குறிப்பில் வந்திருக்கிறது. இன்றைக்குக் கூட கார்ப்பரேஷனிலே யார் யார் தேர்ந்தெடுக்கப்படக் கூடியவர்கள் என்று வரும்பொழுது பொதுத் துறையிலே பணியாற்றக் கூடியவர்களின் நிலைமை சிக்கலாகத் தான் இருக்கிறது. உதாரணமாக, ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் இருக்கிறது; இது தேசியமயமாக்கப்பட்ட பிறகு இதிலுள்ள உறுப்பினர்களின் நிலைமை என்ன? அல்லது புதிதாகத் துவக்கப்பட்டிருக்கும் சேரன் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் அல்லது பாண்டியன் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் அல்லது இம்மாதிரி கார்ப்பரேஷன்கள் வந்திருக்கின்றனவே அதிலுள்ள உறுப்பினர்களின் நிலைமை என்ன? இவர்களெல்லாம் போட்டி போடலாமா, முடியாதா என்பதைப் பற்றி ஏற்கனவே சர்ச்சையைக் கிளப்பி இருக்கிறோம். அதைப் பற்றி இன்றைக்குத் தெளிவு ஏற்படவில்லை.

இன்றைக்கு அரசாங்கத்தில் உத்தியோகஸ்தர்களாக இருப்பவர்கள் பல நகரசபைகளில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களெல்லாம் மீண்டும் போட்டி போட முடியுமா என்பது சந்தேகத்திற்குரிய விஷயமாக இருக்கிறது. அப்படிப்பட்ட விஷயங்களைப் பற்றியெல்லாம் இந்தத் திருத்தத்திலே எதுவும் கொண்டு வரப்படாமல் ஜனங்கள் மத்தியிலே இருக்கும் மிகமிக முக்கியமான பிரச்னையாக இருக்கும் இந்தத் தேர்தல் பிரச்னையை ஒத்திப் போட்டுக் கொண்டு வருகிறார்கள்.



1974 டிசம்பர் 20] [திரு. கே. டி. கே. தங்கமணி]

இன்றைக்குச் சாதாரணமாக ஜனங்கள் அரசு இந்த விதமான தேர்தல்களைச் சந்திக்கத் தயாராக இல்லை என்று குற்றஞ் சாட்டினால் அது எப்படித் தவறாக இருக்க முடியும்? ஒரு தடவை ஒத்திப்போட்டால் பரவாயில்லை, பல தடவைகள் ஒத்திப் போட்டுக்கொண்டு வருகிறீர்கள். தேர்தல் நடக்கும் என்று சொல்லி, கடைசியில் தேர்தல் நடக்காமலிருந்தால் வேறு என்ன சொல்வது? ஆகவே, இந்தத் திருத்தத்திலே வந்திருக்கும் முக்கியமான விஷயம், சென்னையைப் பொறுத்தவரையில் அன்றைக்கே எதிர் பார்த்தோம். ஆறு மாதத்திலே தேர்தல் நடக்கும் என்று சொன்னார்கள். பல ஆறு மாதங்கள் ஆகிக் கொண்டிருக்கின்றன. எங்களுக்குள்ள சந்தேகமெல்லாம், நகரசபைத் தேர்தல்களாக இருக்கட்டும், கார்ப்பரேஷன் தேர்தல்களாக இருக்கட்டும், பஞ்சாயத்துத் தேர்தல்களாக இருக்கட்டும், எல்லாத் தேர்தல்களும் பொதுத் தேர்தல் காலத்தில்தான் வருமா என்று ஐயப்பாடு எனக்கு இருக்கிறது. அந்தமாதிரி இருந்தால் அதைத் தெளிவாகச் சொல்லிவிடலாம். எங்களுடைய பாலிசியைப் பொறுத்தவரையில் அடிக்கடி தேர்தல்களை நடத்தி ஜனங்களைத் தொந்தரவிற்கு ஆளாக்க விரும்பவில்லை என்று சொல்லலாம். அதனால் பணம் செலவாகிறது என்ற காரணத்தைச் சொல்லலாம். அப்படியில்லாமல் ஏதோ இந்த வறட்சியைக் கொண்டு வந்து காரணமாகக் காட்டி, இந்தத் தேர்தல்களை ஒத்திப்போட வேண்டிய அவசியமில்லை. இதற்குமேல் விரிவாகச் சொல்வதற்கில்லை. இப்பொழுது கேட்டுக் கொள்கிறேன்; இந்த மாதிரி திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கும்பொழுது பல ஊனங்களை, எந்தெந்தக் குறைகள் இருக்கின்றன என்று ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும், எதிர்க் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் எடுத்துக் காட்டியிருக்கிறார்களோ அதற்குரிய திருத்தங்களைக் கொண்டு வர வேண்டுமேயொழிய ஒத்திப் போட வேண்டுமென்று காரணமாகக் கொண்டு வந்து, இப்படிப்பட்ட ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்து, ஏற்கனவே காட்டிய சில விதிகளைக் கூட எடுக்கும் போக்கு சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், முனிசிபல் கவுன்சிலர்களைப் பொறுத்தவரையில் பல நகரசபைகளிலேயும் இன்றைக்கும் கூட தங்களுக்கு வார்டு பிரிவினையில் ஆட்சேபனை இருக்கிறது என்று சொல்கிறார்கள். நான் இன்றைக்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 டிசம்பர் 20

காவது உறுதியாகக் கேட்க விரும்புகிறேன். ஏனென்றால் இது மசோதாவாகத்தான் இருக்கிறது, ஜூன் மாதத்திலேயோ அல்லது ஜூலை மாதத்திலேயோ தேர்தல் கண்டிப்பாக நடக்குமா? அல்லது பழைய மாதிரியேதானா? ஏனென்றால் ஜூலை மாதம் நடக்கப் போகிறது என்று நினைத்து நாங்களெல்லாம் அந்தத் தேர்தலில் ஈடுபட வேண்டுமென்று நினைத்து இருந்தோம். நான் இங்கே இருக்க முடியாத நிலையிலே ஜூலை மாதம் தேர்தல் முடிவு என்னவாக இருக்குமோ என்று நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால் செப்டம்பர் மாதம் வந்து பார்த்தபொழுது தேர்தலே நடக்கவில்லை என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு பிப்ரவரி மாதத்திற்கு ஒத்திப் போட்டிருக்கிறார்கள் என்று கேள்விப் பட்டேன். இன்றைக்கு அமைச்சரவர்கள் கூறுவது . . . .

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இப்படிப்பட்ட செய்திகள் அந்த நாட்டிற்கு வராதா? இங்கே என்ன நடக்கிறது என்று அங்கே தெரியாதா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** . தலைவரவர்களே, இப்பொழுது ஒத்தி வைக்கப்பட்டிருப்பதுகூட சட்டசபையிலுள்ள கட்சித் தலைவர்களெல்லாம் பட்ஜெட் எல்லாம் முடிந்த பிறகு தேர்தல் வைத்துக் கொள்ளலாம், ஜூன் மாதத்திலே வைக்கலாம் என்று சொன்னார்கள். அதை மனதில் வைத்துக்கொண்டுதான் இந்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** அந்த மாதிரி யார் சொன்னார்கள் என்று தெரியவில்லை. பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் நான் தெளிவாகச் சொன்னேன். இது என்னால் எடுக்கப்படக் கூடிய முடிவு அல்ல.

(பிற்பகல் 1-30)

இதை நாங்கள் எங்கள் கட்சியின் முடிவாகத்தான் கலந்து சொல்ல முடியுமே தவிர, இங்கு வந்து நாங்கள் ஒன்றும் சொல்ல முடியாது.

**I cannot commit my party to important issues like elections** என்று உங்களிடத்தில் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன்.



1974 டிசம்பர் 20] [திரு. கே. டி. கே. தங்கமணி]

ஆகவே, தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. சட்ட மன்றத்தில் இதைப் பிரேரேபித்து கொண்டு வரக்கூடிய அரசு எதிர்க் கட்சியினர் எல்லோரும் ஒத்துக் கொண்ட காரணத்தால் கொண்டு வந்த மாதிரி சொல்லுவது சரியல்ல. இதற்குப் பதிலாக இதை நடத்த வேண்டிய அரசு, தேர்தலை இப்போது நடத்துவது என்றால் நிறையச் செலவாகும், மற்றச் சிரமங்கள் இருக்கின்றன என்று ஏதாவது சொல்லி அரசாங்கம் தானே முடிவு செய்ய வேண்டும். அப்படி இல்லாமல் எதிர்க்கட்சியிலே ஏற்றுக் கொண்டார்கள், ஆகவே, தேர்தலை ஒத்திப் போடுகிறோம் என்ற மாதிரியில் பேசும்போதுதான் எங்கள் கட்சியின் நிலையைத் தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இந்த மசோதாவில் இருக்கக்கூடிய பல பகுதிகளை ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்லி இந்த மசோதாவை எதிர்க்கிறேன் என்று கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையில் அனுமதியோடு அவையின் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

**திரு. நா. வீராசாமி :** ஒரு கிளாரிபிகேஷன். மாண்புமிகு தங்கமணி அவர்கள் இந்தத் தேர்தல்களை உடனடியாக நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். அவர்களுடைய கட்சி கேரளாவில் ஆண்டு கொண்டிருக்கிறது. கட்சி என்றால் ஒரே கொள்கைதான் இருக்க முடியும். கேரளாவில் இப்படிப்பட்ட தேர்தல்கள் எப்போது நடைபெற்றது என்ற விவரத்தைக் கூறினால் நல்லது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** கேரள சட்டமன்றத்திலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களைவிட அதிகத் தீவிரமாக எதிர்த்துப் போராடக்கூடிய ஆட்கள் இருக்கிறார்கள் அவர்கள் அதைக் கவனித்துக் கொள்வார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை எங்கள் கட்சியின் சார்பில் வன்மையாக எதிர்க்கிறேன். உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பல தடவை இந்த மன்றத்தில் கூறியிருக்கிறார்கள், நிச்சயமாக நகரசபைத் தேர்தல்கள் வருகிற பிப்ரவரி மாதம் நடக்கும் என்று வலியுறுத்திச்

கூறினார்கள். இந்த மசோதா இங்கு வரும்போது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் இல்லாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது. ஏன் இந்தத் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்படுகின்றன? அவர்கள் கூறிய வாக்குறுதிகள் ஏன் மீறப் பட்டிருக்கின்றன என்ற விளக்கங்களை அவர்கள் கூறக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் இந்தத் தேர்தல்கள் நிச்சயமாக பிப்ரவரியில் நடைபெறும் என்று கூறியிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய வாக்குறுதியைக் காப்பாற்றத் தவறி விட்டார்கள் என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, எதிர்க்க வேண்டுமென்பதற்காகச் சொன்னால் வழ வழா என்று எதிர்த்து முடித்து விடலாம். ரொம்பத் தீவிரமாக எதிர்க்கிற நேரத்தில் நானும் சில விவரங்களைச் சொல்லுவது முறை. அலுவல் ஆய்வுக் குழுவில் தலைவர்கள் எடுத்துச் சொன்ன அபிப்பிராயங்களை மனதில் வைத்துச் செய்யப்பட்டது. அவர்கள் சொன்னதற்காகச் செய்யப்படவில்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** சாதாரணமாக அரசாங்கம் தப்பித்துக் கொள்வதற்கு எதிர்க்கட்சிகளைக் கலந்து முடிவு செய்ததாகக் கூறுவார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் அப்படி ஏமாந்து விடுவார்கள் என்று அவர்கள் கூறுகிறார்களா?

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** நான் ஏமாந்தேனா என்று முடிவு செய்வது பொதுமக்களும், மற்ற உறுப்பினர்களும்தான், அதை நான் விவாதிக்க விரும்பவில்லை. கட்சிக் கூட்டத்தில் நடந்த காரியங்களை எல்லாம் இந்த மன்றத்தில் பேசுவது முறையாக இருக்காது.



**திருமதி த. ந. அனந்தநாயகி:** எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒத்துக் கொண்டார்கள் என்று முதலமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். திரு. கே. டி. கே. தங்கமணி நாடார் அவர்கள் அப்படிச் சொல்லவில்லை என்று சொல்லுகிறார்கள். எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களும் ஒத்துக் கொண்டார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** உங்களுடைய தலைவர் திரு. மாரிமுத்து ஒத்துக் கொள்ளுவதாக அழுத்தந்திருத்தமாகச் சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அலுவல் ஆய்வுக் குழு நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுபற்றிக் கேட்டார்கள். அப்போது கட்சித் தலைவர்கள் அப்படிப்பட்ட ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள்.

**திரு. செ. கந்தப்பன்:** இங்கே திரு. தங்கமணிதான் இருக்கிறார். அம்மையார் அவர்கள் 'நாடார்' என்று சொன்னார். நாடார் எங்கே இருக்கிறார்?

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** பிப்ரவரியில் வைத்தாலும் ஆட்சேபிக்கவில்லை என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பிப்ரவரியில் வைக்க வேண்டுமென்று சொல்லவில்லை. வைத்தால் ஆட்சேபிக்கவில்லை என்றுதான் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தேர்தல்களை நடத்துவதும் நடத்தாமல் இருப்பதும் முழுக்க முழுக்க அரசாங்கத்தைச் சார்ந்தது. எதிர்க்கட்சிகளுக்கு அதில் பொறுப்பு இல்லை என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பல்வேறு நகரசபைகளில், சென்னை கார்ப்பரேஷன், மதுரை கார்ப்பரேஷன் ஆகியவற்றில் ஊழல் பெருகிவிட்டது என்ற காரணங்களால் கார்ப்பரேஷனைக் கலைந்திருக்கும்போது உடனடியாகத் தேர்தல்களை நடத்தியிருக்க வேண்டும்.

கார்ப்பரேஷனைக் கலைத்துப் பல நாட்களான காரணத்தால் நிர்வாகத்தில் பல கோளாறுகள் இருக்கின்றன. மக்களுக்குத் தேவையான காரியங்களைச் செய்ய வழிவகை இல்லை என்று மக்கள்

குறை கூறிக் கொண்டே இருக்கிறார்கள். அந்தந்த வட்டங்களிலுள்ள காரியங்களைக் கவனிக்க கவுன்சிலர்கள் இல்லை. ஸ்பெஷல் ஆபீசரிடம் சொன்னால் கூட கவனிக்க வழி இல்லாமல் இருக்கிறது என்று கூறப்படுகிறது. இந்தத் தேர்தலை நடத்தியிருக்கவேண்டும். இதை நீடித்துக் கொண்டே போவது விரும்பத்தக்கது அல்ல. ஜனநாயக முறையில் இது நிச்சயமாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

முனிசிபல் கவுன்சில் தேர்தல்களை ஒத்தி வைப்பதற்காக ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு காரணம் கூறப்படுகிறது. மூழ்கிப் போகிறவன் கையில் கிடைக்கிற ஸ்ட்ராவை வைத்துக் காப்பாற்றிக்கொள்ள முயல்வது போல் வறட்சியைக் காட்டி தேர்தலை ஒத்திப் போடுகிறோம் என்று கூறுகிறார்கள். இது நிச்சயமாக விரும்பத்தக்கது அல்ல. 1975 ஜூன் மாதத்திலாவது இந்தத் தேர்தல்களை நிச்சயமாக நடத்தும் என்பதற்கான வாக்குறுதியை அளிக்கவேண்டும் என்று கூறி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. எ. வகாப் :** தலைவர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவை வரவேற்கின்ற முறையில் இரண்டொரு கருத்துக்கள் கூறுகிறேன். ஜனநாயக முறைக்கு மாறான காரியங்கள் சில நேரங்களில் நடக்கின்றன என்று சொன்னாலும் தவிர்க்க முடியாத காரணங்களை முன்னிட்டு இப்படிப்பட்ட தேர்தல்கள் தள்ளி வைக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் இப்படி இந்தத் தேர்தல்களைத் தள்ளி வைப்பதற்கான காரணங்களை ஒப்புக் கொள்ளாத நிலையில் பேசினார்கள்.

இருண்ட ஒரு எதிர்காலத்தை நாம் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம். வருகிற ஜூலை மாதத்தில் கூட இந்தத் தேர்தலை நடத்த முடியுமா என்பதுதான் சந்தேகமாக இருக்கிறது. ஜூலை மாதத்தில் கடுமையான பஞ்ச நிலை இருக்கும். குடிக்கத் தண்ணீர் கூடக் கிடைக்குமா என்ற நிலை கூட ஏற்பட்டால் ஆச்சரியப்படத் தேவையில்லை. பொதுத் தேர்தல் சமயத்தில் இந்தத் தேர்தல்களை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து வைத்துக் கொண்டால் அரசாங்கத்திற்குச் செலவு கூடக் குறையும். அப்படி தேர்தல் கமிஷனுக்குத் தெரிவிக்கலாம் நகராட்சித் தேர்தல்கள், பேரூராட்சித் தேர்தல்கள், ஆகியவற்றையெல்லாம் பொதுத் தேர்தல்கள் நடக்கிற





போது நடத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதைப் பற்றி ஆலோசிக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தக் கோரிக்கைகளை நம்முடைய தேர்தல் கமிஷனிடத்தில் சமர்ப்பிக்க வேண்டும். இதனால் செலவுகள் குறைவதோடு சண்டை சச்சரவுகளும் குறையும்.

கட்சி அடிப்படையில் நகராட்சி தேர்தல்கள் எல்லாம் நடத்தப்படுவதில்லை என்றாலும் ஆங்காங்கு கட்சி மனப்பான்மை கொண்டவர்கள்தான் இதிலே ஈடுபடுகிறார்கள். இப்போதுள்ள வறட்சி நிலையில் தேர்தல்களை தள்ளி வைக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர்கள் மனப்பான்மையும் அப்படித்தான் இருக்கிறது என்று தெரிகிறது. அவர்களுக்கும் நாட்டு நிலைமை நன்றாகத் தெரியும்.

நாட்டிலுள்ள சூழ்நிலை, ஜூலை மாதத்தில் எப்படியிருக்கும் என்பது நம்மை விட அவர்களுக்கு நன்கு தெரியும். அவர்கள் தங்களது எதிர்ப்புகளைத் தெரிவித்தாலும் இப்படி ஒருமுகமான கருத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

தேர்தல் நேரத்தில் வோட்டர்கள் லிஸ்ட் பற்றி பல சிக்கல்கள் இருக்கின்றன. ஊராட்சி மன்ற தேர்தலுக்கு ஒரு வோட்டர்ஸ் லிஸ்ட், முனிசிபல் தேர்தலுக்கு ஒரு வோட்டர்ஸ் லிஸ்ட், நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற தேர்தல்களுக்கு ஒரு வோட்டர்ஸ் லிஸ்ட் என்று வரும்போது பலவித சிக்கல்கள் இருந்துகொண்டேயிருக்கின்றன. எனவே, வோட்டர்ஸ் லிஸ்டை முறையாக ஒருமுகப்படுத்தி ஊராட்சி மன்றத் தேர்தலுக்கு யார் யார் வோட்டு போடுகிறார்களோ அவர்களே சட்டமன்றத் தேர்தலுக்கும் வோட்டு போடக் கூடிய விதத்தில் ஒரே வோட்டர்ஸ் லிஸ்டாக கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் தேர்தல்களை கொஞ்சம் அதிக காலத்திற்கு தள்ளிவைத்தால் கூட நலமாக இருக்கும் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சி, சென்னை மாநகராட்சி, நகராட்சிகள் தேர்தல்கள் சட்டம் பற்றி பல்வேறு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். பொதுவாக இந்தத் தேர்தல்களை ஒத்தி

[திரு. செ. மாதவன்] [1974 டிசம்பர் 20

வைக்கக் கூடாது என்பதில் அரசாங்கத்திற்கு மிகுந்த அளவிற்கு கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆனால் நாட்டின் நிலைமைகளை உத்தேசித்து பல்வேறு காரணங்களை கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். தனிப்பட்ட அரசியல் கட்சிகளுடைய எண்ணங்களை மட்டும் கொள்ளக்கூடாது என்ற கருத்தில் பல்வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டு அதற்குப் பிறகு முடிவு எடுக்கப் பட்டது. இதில் பெரிய அரசியல் முக்கியத்துவம் இருப்பதாக நான் கருதவில்லை.

மதுரை மாநகராட்சி பற்றி ஒரு மாறுதல் செய்திருக்கிறோம். அதில் உள்நோக்கம் இருப்பதாக கற்பனை செய்வது நல்லதல்ல. உண்மை தெரியும். நகராட்சியாக இருந்த ஒன்றை மாநகராட்சியாக மாற்றினோம். நகராட்சியாக உள்ள நிலை மாறக் கூடாது என்று இடைக் காலத்தில் ஒரு கொள்கை எடுத்து நிறைவேற்றினோம். புது மாநகராட்சித் தேர்தல் நடப்பதற்கு சென்னை மாநகராட்சி போன்று இருக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் செய்யப்பட்டது. தனிப்பட்ட நபர்களை எடுத்து வைத்துப் பேசுவது அவ்வளவு சரியல்ல. அது பொருத்தமாகாது. அப்படி ஏதாவது நடக்கப் போகிறது என்று எதிர்பார்த்தால் நடக்காது. எப்போதும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு என்னென்ன உண்டோ அவை அப்படியே இருக்கும். யாரும் ஆசைப்பட வேண்டாம்.

ஸ்பெஷல் ஆபீஸர் பிரச்னை பற்றியெல்லாம் சொன்னார்கள். இடைக் காலத்தில் ஒரு முயற்சி சட்டப்படி எடுக்க வேண்டி யிருக்கிறது. அதையும் பெரிதுபடுத்த வேண்டாம். இது நல்லதொரு சட்டம் என்ற முறையில் இதை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கார்ப்பொரேட் பாடியில் வேலை செய்பவர்கள், பல்லவா டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன், பாண்டியன் ரோட்வேஸ் கார்ப்பரேஷன், ஸலம் க்ளியரன்ஸ் போர்ட், ஹௌஸிங் போர்ட், எலக்ட்ரிஸிடி போர்ட்—போத் சென்ட்ரல் அண்ட் ஸ்டேட்—இவற்றில் வேலை செய்பவர்கள் தேர்தலில் நிற்க வசதி செய்து தருகிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஆம்.



1974 டிசம்பர் 20]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு, உள்ளாட்சி மன்றங்கள் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 52/74) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 11 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, "இச் சட்ட முன்வடிவு சட்டமாக்கப்பட வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1.45 மணியளவில் ஒத்தி வைக்கப் பட்டது.

## (8) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders

129. Notifications issued with G.O. Ms. No. 2478, Revenue, dated the 13th June 1974 in regard to exemption in respect of the tax, payable under the Tamil Nadu General Sales Tax Act, 1959 by the Tamil Nadu Small Industries Corporation Limited, Madras on the sale of cycle rickshaws under the Chief Ministers' Rehabilitation Scheme for hand rickshaw pullers. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

130. Notification issued with G.O. Ms. No. 1238, Home, dated the 21st May 1974 in regard to an amendment to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

131. Notification issued with G.O. Ms. No. 572, Home, dated the 13th March 1974 in regard to certain amendments to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

132. Notification issued with Roc. No. 88200/74-F2, dated the 1st July 1974 in regard to passing of no-confidence motion against the Chairman of Vennandur Panchayat Union Concil in Salem District and in regard to removal of him from the office. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

133. Notification issued with G.O. Ms. No. 1544, Home, dated the 22nd June 1974 in regard to exemption from payment of tax leviable under the Motor Vehicles Taxation Act, 1974 in respect of the tank-trunks bearing Registration Nos. APD 3245, AAK 2061 and ADB 3212 belonging to the Indian Oil Corporation Limited. [Laid on the table of the House under section 26 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974).]

134. Notification issued with G.O. Ms. No. 1296, Home, dated the 11th May 1974 in regard to concessional rate of tax in respect of the van, 88 Regular Land Rover Petrol 4 Cylinder Model Right Hand Drive van gifted to the Guild of Service (Central) Madras, by the Organisation of the Save the children Fund, London. [Laid on the table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

135. Notification issued with G.O. Ms. No. 682, Rural Development and Local Administration, dated the 16th March 1974 in regard to declaration of the areas forming the Idappadi Local Planning Area. [Laid on the table of the House under section 128 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1972 (Tamil Nadu Act 35 of 1972).]



136. Notification issued with G.O. Ms. No. 346, Commercial Taxes and Religious Endowments, dated the 25th September 1974 in regard to an amendment to the First Schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959, (Tamil Nadu Act I of 1959).]

*B. Reports, Notifications and Other Papers.*

74. @ Annexure to the Tamil Nadu General Sales Tax (Fourth Amendment) Bill, 1974.

75. @ Annexure to the Tamil Nadu Entertainments Tax (Amendment) Bill, 1974.

---

@ Despatched to Members on 18th December 1974.

## இணைப்பு I

**(93 ம் பக்கத்தில் 134-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.)**

(அ) குடும்ப நலத்திட்டம் குறித்துத் தமிழ்நாடு அரசு தயாரித்த சிறிய திரைப்படங்களின் விவரங்கள் வருமாறு :—

| தொடர் எண்ணும், குடும்ப நலத்திட்டம் குறித்த திரைப்படத்தின் பெயரும். | எடுக்கப்பட்ட படிகள் எண்ணிக்கை. | | திரைப் படத்தின் நீளம். | ஓடும் கால அளவு. |
|---|---|---|---|---|
| | 35 | 16 | | |
| (1) | (2) | | (3) | (4) |
| | மி. மீ. | மி. மீ. | அடி | நிமிடம் |
| 1 செய்தி திரைப்படம்— "நாம் இருவர் நாம் பெறுவதும் இருவர்" | 55 | 75 | 1,000 | 10 |
| 2 வண்ணச்செய்திப்படம்—1 "போதும் ஐயா" | 21 | .. | 500 | 5 |
| 3 வண்ணச் செய்திப்படம்— "வெற்றிகள் குவிந்தாலும்" | 21 | .. | 500 | 5 |
| 4 வள்ளுவர் வாக்கு | .. | 100 | 3,600 | 35 |

அண்மையில் தயாரிக்கப்பட்டுள்ளவை, விரைவில் வெளியிடப்பட உள்ளவை:—

| | | |
|---|---|---|
| 1 "எந்த நாளும் காப்போம்" | ஒரு சுருள் 10 நிமிடம் | கதை வசனம், இயக்குதல்: எம். கே. ராமு.<br>நடிகர், நடிகைகள் :<br>1 தக்ஷிணாமூர்த்தி<br>2 எஸ். எம். இராமநாதன்<br>3 அம்முகுட்டி புஷ்பமாலா<br>4 பாபு |
| 2 "கண் கெட்ட பிறகு" .. | இரண்டு சுருள் 20 நிமிடம் | கதை: மெய்யப்பன், எம். ஏ.<br>இயக்குதல்: ஜி. கே. சுவாமி.<br>நடிகர், நடிகைகள்:<br>1 அசோகன்<br>2 ஓ. ஏ. கே. தேவர்<br>3 சேதுராசன்<br>4 இராமநாதன்<br>5 மாஸ்டர் சேகர்<br>6 சாரா |
| 3 "வாழ்க்கை வளம்பெற"– | இரண்டு சுருள் 20 நிமிடம் | கதை, வசனம், இயக்குதல்: என். கிருஷ்ணசாமி<br>நடிகர், நடிகைகள் :<br>1 மேஜர் சுந்தரராஜன்<br>2 தேங்காய் சீனிவாசன்<br>3 குமாரி சச்சு<br>4 ஜெயசுதா<br>5 காந்திமதி |
| 4 "அன்னையர் இருவர்" | இரண்டு சுருள் 20 நிமிடம் | கதை: மெய்யப்பன், எம். ஏ.<br>இயக்குதல்: கே. பீ. சீனிவாசன்<br>நடிகர், நடிகைகள்:<br>1 சந்திரகாந்தா<br>2 புஷ்பமாலா<br>3 வசந்தகுமார்<br>4 கள்ளபார்ட் நடராசன்<br>5 எஸ். எம். இராமநாதன்<br>6 சுந்தரிபாய் |
| 5 "குரங்கு மனம்" .. | இரண்டு சுருள் 20 நிமிடம் | கதை: மெய்யப்பன், எம். ஏ.<br>இயக்குதல்: திருமலை மகாலிங்கம்<br>நடிகர், நடிகைகள்:<br>1 சேதுராசன்<br>2 வசந்தகுமார்<br>3 எம். பானுமதி |



(இ) இப்படங்களைத் தமிழகத்தின் திரைப்படக் கொட்டகைகளில் திரையிட ஏற்பாடு செய்யும் திட்டம் வருமாறு :—

தமிழ் நாடு அரசு தயாரித்த திரைப்படங்கள் நான்கில் கீழ்க்காணும் மூன்று படங்கள் தமிழகம் முழுவதிலும் உள்ள திரைப்பட அரங்குகளில் சுழற்சி முறையில் காட்டப்படுமாறு இந்திய அரசின் திரைப்படப் பிரிவு மூலமாக அவற்றிற்கு நேராகக் குறிப்பிட்டுள்ள நாட்களன்று வெளியிடப்பட்டன—

| | |
|---|---|
| 1 "நாம் இருவர், நாம் பெறுவதும் இருவர்" | 18— 9—1971 |
| 2 "போதும் ஐயா" | 3—12—1971 |
| 3 "வெற்றிகள் குவிந்தாலும்" | 17— 6—1972 |

"வள்ளுவர் வாக்கு" என்னும் திரைப்படம் நீளமாக அமைந்திருந்ததால் அதனை இந்திய அரசின் செய்தித் திரைப்பட வெளியீட்டுப் பிரிவு மூலமாக வெளியிட இயலவில்லை. இந்தத் திரைப்படத்தில் 16 மி.மீ. அளவிலமைந்த படிகள் 100 எடுக்கப் பட்டன. கிராமங்களிலும் மற்றுமுள்ள இடங்களிலும் இதனைத் திரையிட்டுக் காட்டுவதற்காக 16 மி.மீ. திரைப்படம் காட்டும் கருவியைக் கொண்டுள்ள குடும்ப நலத் திட்டப் பிரிவுகள் அனைத்துக்கும் தொண்டு நிறுவனங்கள் முதலியவற்றுக்கும் இப்படிகள் வழங்கப்பட்டன.

(a) Details of short films on Family Planning produced by the Tamil Nadu Government.—

| Serial number and Name of films on Family Planning. | Number of copies taken. | | Length of film and duration of display. | |
|---|---|---|---|---|
| | 35 mm. | 16 mm. | | |
| (1) | (2) | | (3) | |
| 1 Documentary— | | | | |
| Nam Iruvar, Nam Peruvathum Iruvar. | 55 | 75 | 1,000 ft. | 10 mts. |
| 2 Colour Quickie No. 1— | | | | |
| Pothum Iyyah .. | 21 | .. | 500 ft. | 5 mts. |
| 3 Colour Quickie No. 2— | | | | |
| Vetrigal Kuvinthalum | 21 | .. | 500 ft. | 5 mts, |
| 4 Valluvar Vakku .. | .. | 100 | 3,600 ft. | 35 mts. |

(b) Recently produced and to be released shortly.—

| | | |
|---|---|---|
| 1 Enthanalum Kappom | 1 Reeler<br>10 minutes. | Script, Story and Direction by M. K. Ramu.<br>Star Casting :<br>1 Dakshinamoorthy<br>2 S. M. Ramanathan<br>3 Ammukutty Pushpa-mala.<br>4 Babu. |





| | | |
|---|---|---|
| 2 Kann Kettapiragu | 2 Reeler<br>20 minutes | Story by Thiru Meiyappan M.A.<br>Direction by Thiru G. K. Swamy.<br>Star Casting :<br>1 Ashokan<br>2 O. A. K. Thevar<br>3 Sethurasan<br>4 Ramanathan<br>5 Master Sekar<br>6 Sarala |
| 3 Vazhakai Valampera .. | 2 reeler<br>20 minutes | Story, Script and Direction by Thiru N. Krishna-swamy.<br>Star Casting :<br>1 Major Sundararajan<br>2 Thengai Srinivasan<br>3 Kumari Sachu<br>4 Jayasuda<br>5 Gandhimathi |
| 4 Annaiyar Iruvar .. | 2 reeler<br>20 minntes | Story by Thiru Meiyappan, M.A. Direction by Thiru K. B. Srinivasan.<br>Star Casting:<br>1 Chandrakantha<br>2 Pushpamala<br>3 Vasanthakumar<br>4 Kallapart Natarajan<br>5 S. M. Ramanathan<br>6 Sundari Bai |
| 5 Kurangu Manam .. | 2 reeler<br>20 minutes | Story by Thiru Meiyap a M.A., Directi Thirumalai Mahalingam.<br>Star Casting:<br>1 Sethurasan<br>2 Vasanthakumar<br>3 M. Banumathi |

Proposals if any, to release the Family Planning short films in the Cinema Theatres in Tamil Nadu.

[1974 டிசம்பர் 20

Out of the four films producted by the Government of Tamil Nadu, the following three films were released, through the Films Division, Government of India, in all the Cinema Theatres throughout Tamil Nadu, by rotation, on the dates noted against each :—

1. Nam Iruvar, Nam Peruvathum Iruvar—18th September 1971.
2. Pothum Iyyah—3rd December 1971.
3. Vetrigal Kuvinthalum—17th June 1972.

As the Film "Valluvar Vakku" was long, it could not be released through the circuit of Films Division, Government of India. 100 copies of 16 mm prints have been taken and distributed to all Family Planning units, Voluntary Organisations, etc., which are equipped with 16 mm film projectors for exhibiting the same in all villages and other places.

## இணைப்பு II

[41-ம் பக்கத்தில் 7-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிடாத (*) வினாவிற்குரிய விடையைக் காண்க.]

இக்குழுவை அரசு அமைக்கவில்லை. பொங்கல் சுற்றுலா விழாவை நடத்துவதற்குக் கீழ்க்காணும் உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரால் அமைக்கப்பட்டது :—

1. மாவட்ட வருவாய் அதிகாரி, காஞ்சிபுரம்.
2. வருவாய்க் கோட்ட அதிகாரி, காஞ்சிபுரம்.
3. கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை—கிராமப் பணிகள்), செங்கற்பட்டு.
4. கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை—கிராமப் பணிகள்), சைதாப்பேட்டை.
5. நிர்வாகப் பொறியாளர், பொதுப் பணித் துறை, காஞ்சிபுரம்.



1974 டிசம்பர் 20]

6. நிர்வாகப் பொறியாளர், பொதுப் பணித் துறை, சைதாப்பேட்டை.
7. கோட்டப் பொறியாளர் (மின்சாரம்), செங்கற்பட்டு.
8. மாவட்ட சுகாதார அதிகாரி, காஞ்சிபுரம்.
9. மாவட்ட மருத்துவ அதிகாரி, காஞ்சிபுரம்.
10. வட்டாரப் போக்குவரத்து அதிகாரி, காஞ்சிபுரம்.
11. மாவட்ட வளர்ச்சி அதிகாரி (வடக்கு), காஞ்சிபுரம்.
12. மாவட்ட வளர்ச்சி அதிகாரி (தெற்கு), காஞ்சிபுரம்.
13. மாவட்டத் திட்ட அதிகாரி, காஞ்சிபுரம்.
14. திரு. ரகுபதி, பயிற்சி பெறும் மாவட்டத் துணை ஆட்சித் தலைவர் (பயிற்சி), காஞ்சிபுரம்.
15. திரு. சத்பதி, ஐ.ஏ.எஸ் (பயிற்சி பெறும் மாவட்ட உதவி ஆட்சித் தலைவர்), காஞ்சிபுரம்.
16. வட்டார மக்கள் தொடர்பு அதிகாரி, காஞ்சிபுரம்.
17. நகராட்சிப் பொறுப்பதிகாரி, செங்கற்பட்டு.
18. தலைவர், ஊராட்சி ஒன்றியம், திருக்கழுக்குன்றம்.
19. தலைவர், ஊராட்சி ஒன்றியம், திருப்போரூர்.
20. தலைவர், ஊராட்சி ஒன்றியம், காட்டாங்கொளத்தூர்.
21. ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், திருக்கழுக்குன்றம்.
22. ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், திருப்போரூர்.
23. ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், காட்டாங்கொளத்தூர்.
24. நிர்வாக அதிகாரி, மாமல்லபுரம் நகரியம்.
25. மேலாளர், 'சில்வர் சாண்ட்' விடுதி, மாமல்லபுரம்.
26. மேலாளர், 'கோல்டன் சன்' விடுதி, மாமல்லபுரம்.
27. மேலாளர், வி. ஜி. பன்னீர்தாஸ் & கோ., சைதாப்பேட்டை, சென்னை-15.
28. மேலாளர், இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகம், மாமல்லபுரம்.

இவ்விழா, 13—1—1974-லிருந்து 17—1—1974 வரை 5 நாட்கள் நடத்தப்பட்டது. விழாக் காலத்தில் வரும் சுற்றுலாப் பயணிகளுக்குக் கேளிக்கை நிகழ்ச்சிகளாகப் பொய்க்கால் குதிரை, கரகம்

முதலிய கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. நிகழ்ச்சிகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

13—1—74—பொய்க்கால் குதிரை, கும்மி, கோலாட்டம், மெல்லிசை.

14—1—74—பொய்க்கால் குதிரை, கோலாட்டம், சடுகுடு, பொம்மலாட்டம்.

15—1—74—நாதஸ்வர இசை.

16—1—74—மெல்லிசை.

17—1—74—நடனம், ஜலதரங்கம், மெல்லிசை, பொம்மலாட்டம்.

மேற்கூறிய நிகழ்ச்சிகளுக்கு மொத்தம் ரூ. 10,000 செலவாகியுள்ளது. செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொண்டதன் பேரில் அரசு இத்தொகையை வழங்கி அனுமதித்தது.

Government did not form the Committee. A Committee consisting the following was formed by the Collector of Chingleput for conducting the festival :

1. District Revenue Officer, Kancheepuram.
2. Revenue Divisional Officer, Kancheepuram.
3. Divisional Engineer (Highways and Rural Works), Chingleput.
4. Divisional Engineer (Highways and Rural Works), Saidapet.
5. Executive Engineer, Public Works Department, Kancheepuram.
6. Executive Engineer, Public Works Department, Saidapet.
7. Divisional Engineer (Electricity), Chingleput.
8. District Health Officer, Kancheepuram.
9. District Medical Officer, Kancheepuaram.
10. Regional Transport Officer, Kancheepuram.
11. District Development Officer (North), Kancheepuram.
12. District Development Officer (South), Kancheepuram.
13. District Planning Officer, Kancheepuram.





14. Mr. Raghupathy, Pro. Deputy Collector (Training) Kancheepuram.
15. Mr. Sathpathy, I.A.S. (A.C. Training), Kancheepuram.
16. Regional Public Relation Officer, Kancheepuram.
17. Municipal Commissioner Chingleput.
18. Chairman, Panchayat Union, Tirukkalikundram.
19. Chairman, Panchayat Union, Tiruporur.
20. Chairman, Panchayat Union, Kottankolathur.
21. Commissioner, Panchayat Union, Tirukkalikundram.
22. Commissioner, Panchayat Union, Tirporur.
23. Commissioner, Panchayat Union, Kattankolathur.
24. Executive Officer, Mahabalipuram Township.
25. Manager, Silver Sands, Mahabalipuram.
26. Manager, Golden Sun, Mahabalipuram.
27. Manager, V. G. Paneer Das and Company, Saidapet, Madras-15.
28. Manager, India Tourism Development Corporation, Mahabalipuram.

The festival was organised five days from 13th January 1974 to 17th January 1974. During the festival period cultural programmes like Dummy Horse, Karagam, etc. were organised as entertainments to the visiting tourists. The details of the programmes are indicated below.

| | |
|---|---|
| 13-1-74 | Dummy Horse, Kummi Kollattam and Light Music |
| 14-1-74 | Dummy Horse, Kollattam, Chadugudu, Pupetshow |
| 15-1-74 | Nathaswaram Music |
| 16-1-74 | Light Music |
| 17-1-74 | Dance, Jalatharangam, Light Music and Pupetshow |

A total sum of Rs. 10,000 has been incurred towards the above celebration sanctioned by the Government on the request of the Collector of Chingleput.

[1974 டிசம்பர் 20

இணைப்பு III

[113-ம் பக்கத்திலுள்ள 8ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிடாத வினாவிற்குறிய விடையைக் காண்க]

தமிழகத்தில் மெழுகுவர்த்தி தயாரிக்கும் தொழிற்சாலைகளின் பட்டியல் மாவட்ட வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.—

| மாவட்டத்தின் பெயர். (1) | தொழிற்சாலைகளின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| 1 செங்கல்பட்டு .. .. .. .. | 11 |
| 2 கோயம்புத்தூர் .. .. .. .. | 44 |
| 3 தர்மபுரி .. .. .. .. | 3 |
| 4 கன்னியாகுமரி .. .. .. .. | 13 |
| 5 சென்னை .. .. .. .. | 212 |
| 6 மதுரை .. .. .. .. | 36 |
| 7 நீலகிரி .. .. .. .. | 9 |
| 8 வடாற்காடு .. .. .. .. | 27 |
| 9 ராமநாதபுரம் .. .. .. .. | 52 |
| 10 சேலம் .. .. .. .. | 36 |
| 11 தென்னாற்காடு .. .. .. .. | 13 |
| 12 தஞ்சாவூர் .. .. .. .. | 19 |
| 13 திருச்சி .. .. .. .. | 25 |
| 14 திருநெல்வேலி .. .. .. .. | 19 |
| மொத்தம் .. | 519 |



1974 டிசம்பர் 20]

The number of candle units located in each district are furnished below:—

| Name of district. (1) | Number of units. (2) |
|---|---|
| 1 Chingleput .. .. .. .. | 11 |
| 2 Coimbatore .. .. .. .. | 44 |
| 3 Dharmapuri .. .. .. .. | 3 |
| 4 Kanyakumari .. .. .. .. | 13 |
| 5 Madras .. .. .. .. | 212 |
| 6 Madurai .. .. .. .. | 36 |
| 7 Nilgiris .. .. .. .. | 9 |
| 8 North Arcot .. .. .. .. | 27 |
| 9 Ramanathapuram .. .. .. | 52 |
| 10 Salem .. .. .. .. | 36 |
| 11 South Arcot .. .. .. .. | 13 |
| 12 Tanjavur .. .. .. .. | 19 |
| 13 Tiruchirappalli .. .. .. .. | 25 |
| 14 Tirunelveli .. .. .. .. | 19 |
| Total .. | 519 |

இணைப்பு

(49-ம் பக்கத்திலுள்ள 10 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிடாத வினாவிற்குரிய விடையைக் காண்க.)

அ.—1974-ல் 1,137

இ.—1, போதனா ஆசிரியர்கள்.—அங்கீகாரம் வேண்டப்படும் பாடங்களுக்கு தமிழ்நாடு அரசினரால் நடத்தப்படும் வணிகவியல் தேர்வுகளில் அந்தந்தப் பாடங்களில் தகுதிபெற்றவர்கள் ஆசிரியர்களாக நியமனம் செய்யப் பட வேண்டும்.

[1974 டிசம்பர் 20

| | மனுதாரரின் பெயரும் விலாசமும். (1) | தொழிலின் பெயர். (2) | வழங்கப்பட்ட தொகை. (3) |
|---|---|---|---|
| | | | ரூ. |
| 3 | கு. வீரகாளி, த/பெ. குருசாமி குரவன், பாளையங்கோட்டை ரோடு, தூத்துக்குடி, திருநெல்வேலி. | சைக்கிள் கடை | 750·00 |
| 4 | குட்டிராஜா என்கிற சுடலையாண்டி தாராபுரம் கிராமம், சிவசைலம் அஞ்சல், அம்பாசமுத்திரம் தாலூகா, திருநெல்வேலி. | ஷை | 500·00 |
| 5 | ச. துரைராஜ், த/பெ. சண்முகம், சி. எம். எஸ். நாயுடு தெரு, கருங்குளம் அஞ்சல், ஸ்ரீவை குண்டம் தாலூகா, திருநெல்வேலி. | ஷை | 500·00 |
| 6 | பி. தங்கராஜ், த/பெ. பிச்சைக் காரன், புலியன்குளம், கருங் குளம் அஞ்சல், ஸ்ரீவைகுண்டம் தாலூகா, திருநெல்வேலி. | ஷை | 500·00 |
| 7 | தோடிமுத்து, த/பெ. புலமாடன், சுந்தரராஜபுரம், நலுமாவடி கிராமம், குரும்பூர் அஞ்சல், திருநெல்வேலி மாவட்டம். | ஷை | 500·00 |
| 8 | என். பி. வெள்ளையன்; த/பெ. நித்தன் பள்ளிகூடத்தான், புளியன்குளம், கருங்குளம் அஞ்சல், ஸ்ரீவைகுண்டம் தாலூகா, திருநெல்வேலி மாவட்டம். | ஷை | 500·00 |
| 9 | ந. ராஜேந்திரன், த/பெ. நாரா யணன், ரத்தினபுரி காயல் பட்டிணம், திருச்செந்தூர், திருநெல்வேலி. | ஷை | 500·00 |
| 10 | ச. காத்தப்பன், த/பெ. சப்பாணி, 16-வது வார்டு, சாலடி வடக்கு தெரு, புலியன்குடி அஞ்சல், சங்கரன் கோவில் தாலூகா. | ஷை | 500·00 |



1974 டிசம்பர் 20]

| | மனுதாரரின் பெயரும் விலாசமும். (1) | தொழிலின் பெயர். (2) | வழங்கப்பட்ட தொகை. (3) |
|---|---|---|---|
| | | | ரூ. |
| 11 | எஸ். சி. ரத்தினம், த/பெ. சின்னதம்பி, ராஜாபுதுக்குடி அஞ்சல், (வழி) கங்கை கொண்டான், கோவில்பட்டி தாலூகா. | சைக்கிள் கடை .. | 750·00 |
| 12 | தூ.சி. மாடன், த/பெ. மொட்டை யன் என்கிற பிச்சை, அரிசய நாச்சிபுரம் அஞ்சல் (வழி) செந்தாமரம், திருநெல்வேலி. | மளிகைக் கடை | 1,000.00 |
| 13 | ம. பரமசிவம், த/பெ. மலை யாண்டி, கு. குமட்டியாபுரம், பிள்ளையார் நத்தம், விளாத்தி குளம் அஞ்சல், திருநெல் வேலி மாவட்டம். | ஷை | 500·00 |
| 14 | க. வேலு, த/பெ. கருப்பணன், நெடுங்குளம் இராமம், இராம நாதபுரம் அஞ்சல், சங்கரன் கோவில் தாலூகா, திருநெல் வேலி. | ஷை | 1,000·00 |
| 15 | ம. இருளாண்டி, த/பெ. மாரி யப்பன், 12-வது வார்டு, சங்கிலி வீரன் தெரு, வாசுதேவ நல்லூர், சங்கரன்கோவில் தாலூகா. | வெற்றிலைப் பாக்குக் கடை. | 125·00 |
| 16 | சங்கரன், த/பெ. வெள்ளையன், நெடுங்குளம் தெற்குசங்கரன் கோவில் கிராமம், இராமநாத புரம் அஞ்சல், சங்கரன்கோவில் தாலூகா. | மளிகைக் கடை .. | 1,000·00 |
| 17 | ச. சோமு, த/பெ. சடையன், 2-வது வார்டு, 6, செல்வராஜ், புரம், ஆறுமுகநேரி, திருச் செந்தூர் தாலூகா. | ஓட்டல் .. | 250·00 |
| 18 | அ. சுடலைமுத்து, த/பெ. அங் கப்பன், சுப்பிரமணிபதி, ராதா புரம், சமுத்திரபாண்டியபுரம் அஞ்சல், திருநெல்வேலி மாவட்டம். | மளிகைக் கடை .. | 1,000·00 |

| | மனுதாரரின் பெயரும் விலாசமும். (1) | தொழிலின் பெயர். (2) | வழங்கப்பட்ட தொகை. (3) |
|---|---|---|---|
| | | | ரூ. |
| 19 | சு. பெருமாள், த/பெ. சுந்தரம், புளியன்குளம், கருங்குளம் அஞ்சல், ஸ்ரீவைகுண்டம் தாலுகா, திருநெல்வேலி. | ஓட்டல் .. | 250·00 |
| 20 | ந. ராமச்சந்திரன், த/பெ. நாராயணன், வடக்குத்தெரு, புண்ணாராயல் அஞ்சல், திருச்செந்தூர் தாலுகா, திருநெல்வேலி. | துணி மற்றும் தையற் கடை. | 500·00 |
| 21 | சுடலையாண்டி, த/பெ. தங்கையா சிவத்த குளம், 54-ஏ, பாக்குல்புரம், திருநெல்வேலி. | மளிகைக் கடை .. | 1,000·00 |
| 22 | கந்தசாமி, த/பெ. ஊர்க்காவலன் கள்ளன்கரை, கூரம்புளம் அஞ்சல், தூத்துக்குடி தாலுகா. | ஷை | 1,000·00 |
| 23 | வா. பூபதி, த/பெ. வாலன், சுப்பையா முதலியார்புரம் வீட்டு எண். 89, 3-வது தெரு, தூத்துக்குடி. | ஷை | 500·00 |
| 24 | சா. பூலின், த/பெ. சாமிவேல், வடக்குகச்சேரி, இளையநாயக்கன்பட்டி அஞ்சல், ஸ்ரீவைகுண்டம் தாலுகா. | ஷை | 1,000·00 |
| 25 | வே. செல்லையா, த/பெ. வேலு குலசேகரநத்தம், பரக்கிராம பாண்டிஇராமம், பாரூர் இராமம் and அஞ்சலும், ஸ்ரீவைகுண்டம் தாலுகா, திருநெல்வேலி. | ஷை | 1,000·00 |
| 26 | ரா. சுப்ரமணியன், த/பெ. ராமகிருஷ்ணன், நகம் காலனி, மாத்தியூர், ஸ்ரீவைகுண்டம் தாலுகா. | ஷை | 1,000·00 |
| 27 | ஐயாகுட்டி, த/பெ. ஷண்முகம், புளியன்குளம் இராமம், கருங்குளம் அஞ்சல், ஸ்ரீவைகுண்டம் தாலுகா. | ஷை | 1,000·00 |





| | மனுதாரரின் பெயரும் விலாசமும். (1) | தொழிலின் பெயர். (2) | வழங்கப்பட்ட தொகை. (3) |
|---|---|---|---|
| | | | ரூ. |
| 28 | ல. பால்சாமி, த/பெ. லட்சுமணன், சவலபேரி அஞ்சல், (வழி) இளையநாயக்கன்பட்டி, திருநெல்வேலி. | ஓட்டல் .. | 125·00 |
| 29 | பா. பொன்னையா பாண்டியன், த/பெ. பாப்பகுடியான், கதவு எண். 104, தெரு எண். 4, வார்டு எண். 14, பாண்டியர் தெரு, செங்கோட்டை தாலுகா. | ஓட்டல் .. | 250·00 |
| 30 | மு. பெருமாள், த/பெ. முத்து கூம்பாடி, தலைவாய்புரம் அஞ்சல் (வழி), கைலாசபுரம். | ஷை | 250·00 |
| 31 | திருமதி தமயந்தி, த/பெ. பலவேச முத்து, ஹரிசன் காலனி, மணிமுத்தார் ரோடு, தெற்கு கள்ளிடைக்குறிச்சி இராமம், அம்பாசமுத்திரம் தாலுகா. | துணி மற்றும் தையற் கடை. | 500·00 |
| 32 | ச. ஷண்முகவேலு, த/பெ. சங்கரபாண்டியன், 17-வது வார்டு, கதவு எண். 18-ஏ, புதுமனை தெரு, சங்கரன் கோவ்ல் அஞ்சல், சங்கரன் கோவில் தாலுகா. | ஷை | 250·00 |
| 33 | பி. சித்திரவேலு, த/பெ. பிரமையா, நாப்பூர் மேலத் தெரு, கீழ்த் திருச்செந்தூர் தாலுகா, திருநெல்வேலி. | ஷை | 1,000·00 |
| 34 | மா. பாலையா, த/பெ. மாடசாமி, சவலபேரி அஞ்சல், ஸ்ரீ வைகுண்டம் தாலுகா திருநெல்வேலி. | ஷை | 500·00 |
| 35 | மா. வெயில்முத்து, த/பெ. மகாலிங்கம், 15—1—114 அம்பேத்கார் தெரு, கடையநல்லூர், தென்காசி தாலுகா. | தோல் பதனிடுதல். | 500·000 |

| மனுதாரரின் பெயரும் விலாசமும். (1) | தொழிலின் பெயர். (2) | வழங்கப்பட்ட தொகை. (3) |
|---|---|---|
| | | ரூ. |
| 36 சங்கரன், த/பெ. வேலாயுதம், வடக்கு கரைச்சேரி, இளைய நாயக்கன்பட்டி அஞ்சல், ஸ்ரீவைகுண்டம் தாலுகா. | காய்கறி அண்டு பழக்கடை. | 250 |
| 37 வி. இராமசாமி, த/பெ. வெள்ளைச் சாமி, வடக்குக் கரைச்சேரி, இளையநாயக்கன்பட்டி அஞ்சல், ஸ்ரீவைகுண்டம் தாலுகா. | ஷை | 250 |
| 38 ஆ. சோரிமுத்து, த/பெ. ஆறு முகம், 106/15, அம்பேத்கார் தெரு, கடையநல்லூர், தென் காசி தாலுகா. | ஓட்டல் | 250 |
| 39 கெ. அய்யாகுட்டி, த/பெ. கெங்கையா குடும்பன், லக்கம் மாள் தேவிகிராமம், புங்க ளார்நத்தம் அஞ்சல் (வழி), எட்டையாபுரம், கோவில்பட்டி தாலுகா. | விறகு அண்டு கரிக்கடை. | 250 |
| 40 மொட்டையன், த/பெ. சங்கரன், காலேப்புதூர், ஆலம்பட்டி இராமம், மணியாட்சி பஞ்சாயத்து, கோவில்பட்டி தாலுகா. | மளிகை கடை. | 250 |
| 41 பெ, கிருஷ்ணசாமி, த/பெ. பெருமாள், மேட்டுப்பட்டி, இராமநாதபுரம் அஞ்சல், வாசுதேவநல்லூர் [வழி] சங்கரன்கோவில் தாலுகா. | விறகு அண்டு கரிக் கடை. | 250 |
| 42 அ. பெரியசாமி, த/பெ. அம்மை அடியான், 74-பி, வள்ளுவர் நகர், கடையநல்லூர் ரோடு, கோவில்பட்டி டவுன் & தாலுகா. | மளிகை கடை. | 500 |
| 43 சு. அர்ஜுனன், த. பெ. சுப்பை யன், பாண்டவர் மங்கலம் அஞ்சல் (வழி), கோவில்பட்டி, திருநெல்வேலி. | ஷை | 500 |



| மனுதாரரின் பெயரும் விலாசமும். (1) | தொழிலின் பெயர். (2) | வழங்கப்பட்ட தொகை. (3) |
|---|---|---|
| | | ரூ. |
| 44 ஆ. செல்லையா, த/பெ. ஆசீர் வாதம், மாரியம்மன் கோவில் தெரு, இறத்திய நகர், உடன் குடி இராமம் அண்டு அஞ்சல், திருச்செந்தூர் தாலுகா. | விறகு மற்றும் கரிக் கடை. | 500 |
| 45 மா. அய்யாசாமி, த/பெ. மாசான முத்து, கதவு எண் 5, 6-பி, விளாத்திக்குளம் தாலுகா. | மளிகை கடை.. | 250 |
| 46 திருமதி கன்னியம்மாள், த/பெ. பால்ராஜ், பிரான்சேரி, ஆதிதிராவிட தெரு, கோபால் சமுத்திரம் அஞ்சல், திருநெல் வேலி தாலுகா. | ஷை | 500 |
| 47 சி. தங்கவேலு, த/பெ. சிவ சங்கு, திராவிட கீழ்த் தெரு, புதுமனைக் குரவர் தெரு, கழுகு மலை, கோவில்பட்டி தாலுகா, திருநெல்வேலி ஜில்லா. | விறகு மற்றும் கரிக் கடை. | 250 |
| 48 அ. அண்ணாமலை, த/பெ. அய்யாகுட்டி, கொத்தங்குளம், கோபால் சமுத்திரம் அஞ்சல், அம்பாசமுத்திரம் தாலுகா. | மளிகை கடை.. | 500 |
| 49 க. பெருமாள், த/பெ. காசி நகம் காலனி, மாத்தியூர், ஸ்ரீவைகுண்டம் தாலுகா. | வெற்றிலை பாக்குக் கடை. | 250 |
| 50 பி. கணபதி, த/பெ. பிச்சை, வலசை கிராமம் அண்டு அஞ்சல் (வழி), சேந்தமங்கலம், தென் காசி தாலுகா. | மளிகை கடை.. | 500 |
| 51 சி. குருசாமி, த/பெ. சிவனு, மலையன்குளம், சிதம்பரம் அஞ்சல், சங்கரன் கோயில் தாலுகா. | பொது வியாபாரம் | 500 |

| | மனுதாரரின் பெயரும் விலாசமும். (1) | தொழிலின் பெயர். (2) | வழங்கப்பட்ட தொகை. (3) |
|---|---|---|---|
| | | | ரூ. |
| 52 | கா. சுப்பையா, த/பெ. காட டையன் அம்பலவாசா தெரு, மரந்தை அஞ்சல், தென்காசி தாலூகா. | மளிகை கடை.. | 1,00 |
| 53 | வெ. சோலைமுத்து, த/பெ. வெள்ளையன், எப்போதும் வென்றான் அஞ்சல், ஒட்டப் பிடாரம் துணைத் தாலூகா, திருநெல்வேலி. | விறகு மற்றும் கரிக் கடை. | 500 |
| 54 | த. காசிமணி, த/பெ. தர்மன், மருதைப் பள்ளிக்கூடத் தெரு, மருதை அஞ்சல், தென்காசி தாலூகா, திருநெல்வேலி. | மளிகை கடை.. | 1,000 |
| 55 | சு. ஷண்முகவேல், த/பெ. சுப்பன், வடக்கு கரைச்சேரி இலையநாயக்கன்பட்டி அஞ்சல், ஸ்ரீ வைகுண்டம் தாலூகா. | விறகு மற்றும் கரிக் கடை. | 500 |
| 56 | முப்புடாத்தி அம்மாள், த/பெ. செல்லமாடன், ஐந்தருவி ரோடு, குற்றாலம் அஞ்சல், தென்காசித் தாலூகா, திருநெல்வேலி. | மளிகை கடை.. | 750 |
| 57 | முத்துசாமி, த/பெ. சோலை அழகாபுரி (ம) அஞ்சல், குருவி குளம் (வழி), சங்கரன்கோவில் தாலூகா, திருநெல்வேலி ஜில்லா. | விறகு அண்டு கரி வியாபாரம். | 500 |
| 58 | சுப்பையா, த/பெ. கிருஷ்ணன் சிந்தாமணி, மேலக்கரம், தென் காசி அஞ்சல் (ம) தாலூகா, திருநெல்வேலி. | மளிகை கடை.. | 500 |
| 59 | வேலாயுதம், த/பெ. சுடலை யாண்டி, 4, தியாகராயபுரம், குலசேகரபட்டிணம், திருச்செந் தூர் தாலூகா அண்ட் அஞ்சல், திருநெல்வேலி. | மின்சார வேலை.. | 375 |



| | மனுதாரரின் பெயரும் விலாசமும். (1) | தொழிலின் பெயர். (2) | வழங்கப்பட்ட தொகை. (3) |
|---|---|---|---|
| | | | ரூ. |
| 60 | மரியதாஸ், த/பெ. வேத மாணிக்கம், 19/15, அம்பேத் கார் தெரு, கடையநல்லூர், தென்காசி தாலூகா, திருநெல் வேலி ஜில்லா. | மளிகை கடை.. | 1,000 |
| 61 | பாண்டியன், த/பெ. கந்தசாமி, 182, ராமநாஜாத் விலா, தூத்துக்குடி தாலூகா, திரு நெல்வேலி ஜில்லா. | ஷை | 50 |
| 62 | வேலு, த/பெ. சுப்பாணி, 48-டி, 5-வது வார்டு, உடையார் தெரு, தென்காசி தாலூகா, திருநெல் வேலி ஜில்லா. | ஷை | 500 |
| 63 | கிருஷ்ணன், த/பெ. சிவன் கோத்தகுளம், கோபால சமுத் திரம் போஸ்ட், அம்பா சமுத் திரம் தாலூகா. | ஷை | 250 |
| 64 | நடராசன், த/பெ. ஆறுமுகம், கோல்குண்டா காலனி, அடை யார் கருங்குளம், அம்பா சமுத் திரம் தாலூகா. | ஷை | 500 |
| 65 | தங்கையா பாண்டியார், த/பெ. நல்லூரான் பாண்டியார், கதவு எண் 109, தெரு நெ. 4, வார்டு நெ. 14, செங் கோட்டா கிராமம் (ம) அஞ்சல், திருநெல்வேலி ஜில்லா. | ஷை | 1,000 |
| 66 | முத்தையா, த/பெ. அருணாசலம், கவுத்திட்டன்குளம், கோவில் பட்டி (ம) அஞ்சல், திருநெல் வேலி. | ஷை | 500 |
| 67 | அ. அகஸ்தியன், த/பெ. அழகு முத்து, பெரியகுளம் தெரு, அம்பாசமுத்திரம் தாலூகா, திருநெல்வேலி. | பிரம்புத் தொழில். | 500 |

[1974 டிசம்பர் 20

| | மனுதாரரின் பெயரும் விலாசமும். (1) | தொழிலின் பெயர். (2) | வழங்கப்பட்ட தொகை. (3) |
|---|---|---|---|
| | | | ரூ. |
| 68 | ம. ஷண்முகம், த/பெ. மாடன், ஜனம் வெள்ளக்கால் அஞ்சல், தென்காசி தாலூகா. | விறகு மற்றும் கரிக் கடை. | 500 |
| 69 | ம. இருஷ்ணன், த/பெ. மாடன், ரயில்வே மேட்டுத் தெரு, தென்காசி தாலூகா. | ஷை | 500 |
| 70 | க. பழனி, த/பெ. சுப்பையா, கழ்கூத்தப்பாக்கம் இராமம் அஞ்சல், அம்பாசமுத்திரம் தாலூகா. | ஷை | 500 |
| 71 | ந. கோவிந்தன், த/பெ. நடராசன், கடையநல்லூர் அஞ்சல், தென்காசி தாலூகா. | வெற்றிலைபாக்குக் கடை. | 125 |
| 72 | ஆர். செல்லையா, த/பெ. இராமையா, 16–வது வார்டு அஞ்சல் தெரு, புளியங்குடி அஞ்சல், சங்கரன்கோவில் தாலூகா. | ஷை | 125 |
| 73 | ஆ. அய்யாத்துரை, த/பெ. ஆறுமுக குடும்பன், கலிதீர்த்தான் பட்டி (வழி) இடையக்கல் அஞ்சல், அம்பாசமுத்திரம் தாலூகா. | வாடகை சைக்கிள் கடை. | 500 |
| 74 | பி. சு. பண்டாரம், த/பெ. சுப்பையா, 107, 4-வது தெரு, சங்கரன்கோவில் தாலூகா. | விறகு மற்றும் கரிக் கடை. | 500 |
| 75 | மாயாண்டி, த/பெ. மதன், தொழிலாளர் பள்ளி ரோடு, திருவை இராமம், திருநெல்வேலி தாலூகா. | மளிகை கடை. | 500 |
| 76 | ஜெயமாணிக்கம், த/பெ பெருமாள், பாண்டவர் மங்களம், கோவில்பட்டி தாலூகா, திருநெல்வேலி ஜில்லா. | ஷை | 250 |



1974 டிசம்பர் 20]

| | மனுதாரரின் பெயரும் விலாசமும். (1) | தொழிலின் பெயர். (2) | வழங்கப்பட்ட தொகை. (3) |
|---|---|---|---|
| | | | ரூ. |
| 77 | வேலண்டி, த/பெ. மாடசாமி அரமுண்டார்குளம், உண்ணன் குளம் இராமம், நாங்குநேரி தாலூகா. | மளிகை கடை | 500 |
| 78 | சின்னபழனிவேல், த/பெ. மாடசாமி, 16, தெற்கு தெரு, சாந்தம்மாள்புரம், மேலபாளையம், திருநெல்வேலி ஜில்லா. | ஷை | 800 |
| 79 | ராமையா, த/பெ. பெருமாள், 14, தெற்குத் தெரு, கணேஷ புரம், மேலபாளையம் இராமம், திருநெல்வேலி. | வாடகை சைக்கிள் கடை. | 250 |
| 80 | பார்ப்பநாதன், த/பெ. சண்முகம், நெ. 14, சந்தானம்மாள் இராமம், திருநெல்வேலி தாலூகா. | ஷை | 500 |
| 81 | ஆறுமுகம், த/பெ. அய்யாக்குட்டி, அனைத்தாளையூர், தெங்கைபுரம், திருநெல்வேலி தாலூகா அண்ட் ஜில்லா. | டீக்கடை | 125 |
| 82 | சோமசுந்தரம், த/பெ. மாடசாமி, 95, திருச்செந்தூர் ரோடு, பாளையம்கோட்டை தாலூகா, திருநெல்வேலி ஜில்லா. | பொது வியாபாரம். | ,000 |
| 83 | எஸ். பெரியசாமி, த/பெ. சோலைமுத்து, மீனாட்சிபுரம், விளாத்திகுளம், திருநெல்வேலி. | விறகு மற்றும் கரிக் கடை. | 500 |
| 84 | பட்டாணி, த/பெ. பச்சை, நெ. 62, எராய்ச்சியபுரம், 105–வது வார்டு, தூத்துக்குடி, திருநெல்வேலி ஜில்லா. | துணி மற்றும் தையல் கடை. | 250 |
| 85 | அங்கம்மாள், த/பெ மதுரை வீரன், காந்திநகர், 31–வது வார்டு, தூத்துக்குடி, திருநெல்வேலி ஜில்லா. | விறகு மற்றும் கரிக் கடை. | 500 |

| | மனுதாரரின் பெயரும் விலாசமும். (1) | தொழிலின் பெயர். (2) | வழங்கப்பட்ட தொகை. (3) |
|---|---|---|---|
| | | | ரூ. |
| 86 | மாரிமுத்து, த/பெ. சோலைமுத்து, மீனாட்சிபுரம், விளாத்திகுளம் தாலூகா, திருநெல்வேலி ஜில்லா. | மளிகை கடை | 50[illegible] |
| 87 | ஆம்ரோஸ், த/பெ. சுப்ரமணியம், பூசைப்பட்டி, கோவில் பட்டி அஞ்சல் (ம) தாலூகா, திருநெல்வேலி. | தச்சு வேலை | 250 |
| 88 | சண்முகவேல், த/பெ. பெருமாள், மேலமந்தி அஞ்சல், அரினைய புரம், விளாத்திகுளம் தாலூகா, திருநெல்வேலி ஜில்லா. | விறகு மற்றும் கரிக் கடை. | 500 |
| 89 | அருணாசலம், த/பெ. ராமசாமி, 19, ஜி. போடன்புரம் முதல் தெரு, தூத்துக்குடி, திருநெல் வேலி ஜில்லா. | மளிகை கடை. | 500 |
| 90 | மாசணமுத்து, த/பெ. சுடலை மதன், வார்டு நெ. 4, சுந்தர ராஜ் நகர், சூவாயர்புரம், ஸ்ரீவைகுண்டம் தாலூகா, திரு நெல்வேலி ஜில்லா. | செருப்புக் கடை. | 250 |
| 91 | சுப்பையா, த/பெ. சோலைமுத்து, மீனாட்சிபுரம், விளாத்திகுளம் தாலூகா, திருநெல்வேலி ஜில்லா. | கரி மற்றும் விறகு கடை. | 500 |
| 92 | பிச்சைக்காரி, த/பெ. சிவனு பாண்டியார், கதவு எண் 102, தெரு எண் 4, வார்டு எண் 14, வெங்கோட்டா அஞ்சல் தாலூகா, திருநெல்வேலி ஜில்லா. | வெற்றிலை பாக்குக் கடை. | 250 |

# தமிழ் நாடு சட்டப் பேரவை

**சனிக்கிழமை, 1974 டிசம்பர் 21.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்விகள் 151, 152, 153 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

*Children's Library at General Hospital*

* 154 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that a Children's Library for the Orthopaedic Children's Ward at Government General Hospital, Madras has been opened recently; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) சேவ சக்கரா என்ற சமூக நல நிறுவனத்தால் 3—2—1974 அன்று 170 புத்தகங்கள் நன்கொடையாக வழங்கப் பட்டன.

**திரு. என். கே. பழனிசாமி :** இம்மாதிரி தனிப்பட்டவர்கள் லைப்ரரி வைத்து நடத்துவதைவிட சர்க்காரே நடத்தலாம் அல்லவா? முடக்கு வாதங்கள் போன்ற நோயினால் பாதிக்கப் பட்ட சிறுவர்கள் அதிகப்படியான நாட்கள் தங்கி சிகிச்சை பெறவேண்டியிருப்பதன் காரணமாக அதிகப்படியான நல்ல புத்தகங்களைவைத்து அரசே நடத்த ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, 3-2-1974 அன்று சேவ சக்கரா என்ற சமூக நல நிறுவனத்தாரால் நன்கொடையாக, குழந்தைகள் ஓய்வு நேரத்தை உற்சாகமாகச் செலவிடுவதற்காகப் புத்தகங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அண்மையில் தஞ்சை மருத்துவ மனையில், முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்ட, அல்லது வேறு முடக்குத் தன்மை காரணமாகப் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உற்சாகமூட்டும் வகையில்—படிப்பு சொல்லித் தருகிற வகையில்—ஒரு ஆசிரியர் கூட இதற்காக நியமிக்கப்பட்டு, அதற்காக ஒரு வகுப்பறை முதல் அமைச்சர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. அரசாங்கம் எடுத்துக்கொள்ளுகிற எந்த முயற்சிக்கும் தனிப்பட்டவர்கள் மேலும் உற்சாகமூட்டுவதற்கு இப்படிப்பட்ட நன்கொடைகள் வழங்குவது உள்ளபடியே வரவேற்கத் தக்கதாகும்.

**திரு. எம். சுரேந்திரன்:** முடக்கு வாதத்தினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் குழந்தைகளுக்கு நூல்கள் வழங்குவதைப் போல, முடக்கு வாதம் மற்ற நோய்களினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் எல்லோருக்கும் சிறியவர், பெரியவர் என்று பாராமல்—எல்லா மருத்துவ மனைகளிலுமுள்ள நோயாளிகளும் வாசிப்பதற்கான நல்ல நூல்கள் பலவற்றைச் சேகரித்து நோயாளிகளின் படுக்கைக்கே கொண்டுபோய் அவர்களிடம் கொடுத்து வாங்கும் முறையில் ஒரு ஏற்பாடு செய்தால் அது பெருஞ்சிறப்பாக இருக்கும்; நோயாளிகளுக்கு மிக்க ஆறுதலாகவும் இருக்கும். இம்மாதிரியான ஒரு கருத்தை அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, அது நல்ல நோக்கம்தான். ஆனால், நடைமுறையில் சில இடங்களில் தான் அது செயற்படுத்தப்படக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. உள் நோயாளிகள் பலர் இருக்கக்கூடிய இடங்களில் மட்டுந்தான் அதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்படி சென்னையில் உள்ள பெரிய மருத்துவ மனையில் ஒரு நூல் நிலையம் இயங்குகிறது. நம்முடைய நாட்டில் நோயாளிகள் அல்லாதவர்களே நூலைப் பயன்படுத்தும் முறை குறைவாக இருப்பதால், நூல்களை விரும்பிப் படிக்கும் முறை நோயாளிகளிடம் அவ்வளவாக இருப்பதில்லை. ஆனால், இந்தக் குழந்தைகள் பள்ளிக்கூடம் போய் படிக்க வேண்டிய வயதுடையவர்கள். 4-5-6 வயதிலே உள்ளவர்கள், ஆறு மாத காலம், மூன்று மாத காலம் மருத்துவ மனையில் தங்க நேரிட்டு விடுகிறது.



இதற்கும் அதிக நாள் கூட ஆகலாம், அந்த நேரத்தில் படிக்கும் வாய்ப்பு அடியோடு தவறிவிடாமலிருப்பதற்காக, இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருக்கும்போது இடையில் விடுமுறை பெற்று சிகிச்சை செய்து கொள்ளும்போது, படிப்பு கெட்டுவிடக்கூடாது என்ற வகையில் உதவுவதற்காக இந்த மருத்துவ மனைகளில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இவையெல்லாம்கூட பரிட்சார்த்தமாக, முதல் நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டதற்குப்பிறகு மேலும் இவை எந்த அளவுக்குப் பயன் உடையதாக இருக்கிறது என்று எதிர்காலத்தில் பார்க்கப்பட வேண்டும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மருத்துவ மனையில் நோயாளிகளாக நெடு நாள் இருப்பவர்களுக்குப் புத்தகங்கள் கொடுத்துப் படிக்கச் சொல்கிறார்கள். சோவியத் யூனியன் போன்ற நாடுகளில் அநேகமாக எல்லா மருத்துவ மனைகளிலும் சிறப்பான நூல் நிலையங்களை வைத்திருக்கிறார்கள். பெரிய மருத்துவ மனைகளிலாவது அம்மாதிரி நல்ல நூலகங்களைத் துவக்கி, மற்ற லைப்ரரிகளில் இருக்கக்கூடிய அளவுக்குப் புத்தகங்களை வைத்து நோயாளிகளுக்கு வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சோவியத் யூனியனைக் குறிப்பிட்டார்கள். அங்கே சதுர மைலுக்கு முப்பது பேர் வசிக்கிறார்கள். இங்கே சதுர மைலுக்கு 400 பேர் வசிக்கிறார்கள். இங்கே இருக்கும் பெரிய மருத்துவ மனையில் ஒரு சிறு நகரமே அடங்கிவிடும் அவ்வளவு கூட்டம் இருக்கிற ஒரு சூழ்நிலையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பொதுவாக நோக்கம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. நூலகங்கள் இருக்கவேண்டும் என்பது, முடிந்த அளவுக்கு நிறைவேற்றப்படும்.

### உணவுப் பொருள்கள் மீது வெள்ளி ரேக்கு காகிதம் ஒட்டுதல்

*155 வினா—திரு. கி. ஜெயராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

உணவுப் பொருள்கள் தயாரிப்பின்மீது Silver Foil உபயோகிப்பதைத் தடுக்க மாநில அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?

[1974 டிசம்பர் 21

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** உணவுப் பொருள்கள் தயாரிப்பின்மீது வெள்ளை ஜரிகை (silver foil) உபயோகிப்பதைத் தடுப்பதற்கான விதிகள் மத்திய அரசின் பரிசீலனையில உள்ளன. சட்டப்படி விதிகள் திருத்தப்பட்ட பின்னர் மாநில அரசு அதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்கும்.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, மத்திய அரசின் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், பல ஹோட்டல்களில் இனிப்பு வகைகள் தயாரித்து, அதன்மேல் சிகரெட் பெட்டியிலிருக்கும் சரிகைக் காகிதத்தை மடித்துவைத்து, விடுகிறார்கள். அதை 'ஸில்வர் ஃபாயில்' என்று மக்கள் நம்பி அந்த இனிப்புகளைச் சாப்பிட்டுவிடுகிறார்கள். அதனால், பொதுவாக சமுதாயம் பாதிக்கப்படக்கூடிய அளவில் இருப்பதால், நம்முடைய அரசாங்கமே ஏதாவது நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதை அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட உணவுப் பண்டங்கள் தீமை பயக்கத்தக்கனவாக ஆகிவிடுவதைத் தடுப்பதற்கான விதிமுறைகளும் சட்டமும் மத்திய அரசால் உருவாக்கப்பட்டிருக்கின்றன. 1973 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற ஒரு மாநாட்டில் இதுபற்றிப் பரிசீலிக்கப்பட்டு, அதற்குப் பின்னர் மாநில அரசுகளுக்கு இந்த வெள்ளைச் சரிகையை உணவுப் பண்டங்களின்மீது பயன்படுத்துவதை நிறுத்துவதற்காக ஒரு ஆலோசனை வழங்கினார்கள். அதைத் தமிழக அரசு மேற்கொண்டு மாவட்டங்களில் உள்ள அதிகாரிகளுக்கெல்லாம் தெரிவித்துத் தடுக்கவேண்டும் என்று ஆலோசனை தெரிவிக்கப்பட்டது. அதற்கிடையில் மறுபடியும் மத்திய அரசிடமிருந்து, இந்த ஆலோசனையை உடனடியாக நீங்கள் நிறைவேற்ற வேண்டாம், இதுபற்றி மேலும் ஆலோசித்து வருகிறோம் ஆலோசித்து அதுபற்றித் தேவையான சட்டத் திருத்தங்கள் செய்து உங்களுக்குத் தெரிவிக்கப்பட்ட பிறகு வெள்ளைச் சரிகையை உணவுப் பண்டங்களின்மீது சுற்றி விற்பனை செய்வதைத் தடை செய்யும் நடவடிக்கையை அப்பொழுது எடுத்துக்கொள்ளலாம் என்று அவர்கள் தெரிவித்து விட்டார்கள் ஆகவே, இடையில் நடவடிக்கை எடுக்க வேண்டிய வாய்ப்பு இல்லை



1974 டிசம்பர் 21]

## 'ஐலெண்ட் ஆப் பீஸ்' நிறுவனத்திற்கு உதவி

*156 **வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், களக்காடு கிராமத்தில் அமைக்கப்பட்டிருக்கும் 'ஐலெண்ட் ஆப் பீஸ்' Island of Peace என்னும் நிறுவனம் தமிழ்நாடு அரசிடம் இருந்து யாதேனும் உதவி பெற்று வருகிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) இல்லை.

(இ) இக் கேள்வி எழவில்லை. ஆனால், அவர்கள் அரசினிடம் ஒப்படைக்க விரும்பியதன் காரணமாக அரசு 21—9—1974-இல் அந்த மருத்துவ மனையை எடுத்துக்கொள்ள ஆணை பிறப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, இந்த 'ஐலண்ட் ஆப் பீஸ்' என்ற நிறுவனத்திற்கான நிதி எந்த இடத்திலிருந்து கிடைக்கிறது ? அது எப்படிச் செயல்படுகிறது ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** Frieda Monnier ஆஸ்பத்திரி என்னும் பெயரால் உள்ள நிறுவனம் பெல்ஜியம் ஆர்கனைசேஷனால் பெரும் உதவி பெற்றுக் கட்டப்பட்டு செயல்பட்டு வந்தது. தொடர்ந்து அவர்கள் உதவி செய்ய வாய்ப்பில்லை என்று சொல்லி, மருந்தகத்தைத் தமிழக அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதைப் பரிசீலனை செய்தபோது, சற்று மிகுதியான செலவாகும் திட்டமாக இருந்தாலும்—ரூ. 1,77,533 குறைந்தபட்சம் ஓராண்டுக்குச் செலவாகும் என்றாலும்—அதை திருநெல்வேலியில் உள்ள மருத்துவக் கல்வி நிறுவனத்தோடு தொடர்புடையதாக ஆக்கி, மாணவர்களுக்கு ஓரளவு அதில் ஏதேனும் பயிற்சி வாய்ப்பும் கிடைக்கச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையில் அந்த நிறுவனத்தை அரசு மேற்கொண்டுள்ளது.

[1974 டிசம்பர் 21

## சென்னையிலுள்ள வெளியூர் பேருந்து நிலையங்கள்

*157 வினா—**திரு. கா. வேழவேந்தன்** : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

. சென்னை மாநகரில் உள்ள வெளியூர் பேருந்துகள் நிலையங்களான மூலக்கொத்தளத்தையும், பிராட்வே பேருந்து நிலையத்தையும் சீர்படுத்தி விரிவாக்கும் செயற்குறிப்பு மேன்மேலும் கால தாமதம் ஆவதேன்?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்** : சென்னை நகரின் வெளிப்புறத்தில், வடக்கு, மேற்கு மற்றும் தெற்கு நெடுஞ்சாலைகளில் (கிராண்ட் ட்ரங்க் ரோடு) மூன்று வெளியூர் பேருந்து நிலையங்கள் அமைக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளதால், சென்னை பிராட்வே மற்றும் மூலக்கொத்தளம் ஆகிய வெளியூர் பேருந்து நிலையங்கள் சீரமைப்புத் திட்டம் தற்போது கைவிடப்பட்டுள்ளது. வெளியூர் பேருந்து நிலையங்கள், உள்ளூர்ப் பேருந்து நிலையம் என்ற முறையில் அமைக்கப்படும்போது அவையவை சீரமைக்கப்பட வாய்ப்பு இருக்கிறது.

**திரு. கா. வேழவேந்தன்** : சென்னை நகரத்தில் வடக்குப் பகுதியில் இருக்கிற மூலக்கொத்தளம் பகுதியிலும் பிராட்வே பகுதியிலுமிருந்து இப்பொழுது ஏராளமான பேருந்துகள் வெளி ஊர்களுக்கு ஓடுகின்ற சூழ்நிலை இருந்துகொண்டு வருகிறது. மிகுந்த நெருக்கடியும், வசதிக்குறைவும் இருக்கிற காரணத்தினால் அங்கெல்லாம் அசுத்தமான சூழ்நிலையும்கூட இருந்து வருகிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் புதிய திட்டங்களை விரைவுபடுத்தி, விரைவாக மேற்கொண்டு, பேருந்து நிலையங்களை விசாலமான அந்த இடங்களுக்கு மாற்றுவதற்கு ஒரு தேதியை நிர்ணயிப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்** : இடங்களை அரசு முறையாக நிர்ணயித்த பிறகுதான் தேதி நிர்ணயிக்க வேண்டும். இதிலே சொல்லப்பட்ட மிக முக்கியமான ஆலோசனை, பிராட்வே பகுதியிலிருந்து வெளியூர்களுக்கு 1,000 பஸ்கள் தினந்தோறும் வந்து போய்க்கொண்டிருப்பதால் போக்குவரத்து நெரிசலும், பயணிகளுக்கு இடையூறுகளும் ஏற்படுகின்றன என்ற கருத்தின் அடிப்



1974 டிசம்பர் 21]

படையில், தெற்கு நெடுஞ்சாலைப் பகுதியில் கிண்டிக்குப் பக்கத்தில் ஒரு இடத்தில் அந்த பஸ் போக்குவரத்து நிறுத்தப்படவேண்டும், மேற்குப் பகுதி நெடுஞ்சாலையில் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் அரும்பாக்கத்தில் பஸ்கள் நிறுத்தப்பட வேண்டும், வடக்குப் பகுதியில் மூலக்கொத்தளத்திற்கு அப்பால் ஏறத்தாழ மாதவரத்திற்கு அப்பால் பஸ்கள் நிறுத்தப்பட வேண்டும் என்பதுதான். அரசாங்கம் அதைப் பரிசீலிக்க வாய்ப்பு இருந்த காரணத்தினால் இப்படி பேருந்து நிலையங்களைச் சற்று அதிகத் தொலைவுக்குக் கொண்டு போவதை பெரும்பாலும் மக்கள் விரும்பமாட்டார்கள் என்ற ஐயம் ஏற்பட்டு, நெடுஞ்சாலையில் 3 கல், 6 கல் தொலைவுக்கு பஸ்களைக் கொண்டு நிறுத்துவதற்குப் பதிலாக இடையிலே 4, 5 கல் தொலைவில் தியாகராயநகர் பகுதியிலும், பூந்தமல்லி நெடுஞ்சாலையில் அமைந்தகரைப் பகுதியிலும் நேரு பார்க் பக்கத்திலும், மூலக்கொத்தளத்திலும் பஸ்களை நிறுத்திவைக்க, அந்த இடங்களைச் சீர்செய்து, அவைகளைப் பயன்படுத்துவது நல்லதாக இருக்கும் என்ற ஆலோசனையும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அவைகளைப் பற்றியெல்லாம் தொழில் நுணுக்கமான முறையில் போக்குவரத்துகளைக் கணக்கெடுத்து, அது எந்த அளவுக்குச் செயல்படுத்த முடியும் என்பது ஆராயப்பட்டு வருகிறது. அப்படி ஆராயப்பட்டு முடிவெடுத்ததற்குப் பின்னால்தான் அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுக்க முடியும்.

**திரு. வை. பாலசுந்தரம்** : தலைவர் அவர்களே, குறிப்பாக இந்த மூலக்கொத்தளம் பகுதியிலே உள்ள பஸ் நிலையத்தில் அதிகமாக கருவாடு வாசனை அடிப்பதாகத் தெரிகிறது. ஏனெனில் ஆந்திரப் பகுதியிலிருந்து வருகிறவர்கள் அந்த நிலையத்தில் இறங்குகிறார்கள். அவர்கள் அதிகமாக கருவாடு கொண்டுவருகிற காரணத்தினால் அசுத்தம் அதிகமாக ஏற்படுகிறது என்று மக்கள் தெரிவிக்கிறார்கள். எனவே அதைப்பற்றி அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்** : மக்கள் உண்ணுகின்ற பொருள் கொஞ்சம் நாற்றம் அடித்தாலும் மக்கள் அதை வேறு காலத்தில் விரும்புகிறார்கள். அடுத்த வீட்டில் நாற்றம். அது தம்முடைய வீட்டிற்கு வருகிறபொழுது வாசனை என்று அப்படி ஒரு தன்மை இருக்கின்ற காரணத்தினால் அவைகளுக்கெல்லாம்

[1974 டிசம்பர் 21

நடவடிக்கை எடுக்க முடியாது. பொதுவாக பேருந்து நிலையங்கள் வளர்ச்சி திட்டத்தின்கீழ் வேறு இடங்களில் அமைக்கப்படும் பொழுது அது ஓரளவுக்குக் குறையலாம்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** பிராட்வே பஸ் நிலையத்தை மாற்றுகின்ற பிரச்னை நீண்ட நெடுங்காலமாக இருந்துகொண்டிருக்கிறது. அது இவ்வளவு காலதாமதம் ஆவதற்குக் காரணம் என்ன? அதுபற்றி அரசு விரைவில் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** நீண்ட நெடுங்காலமாக திட்டம் ஆலோசனையில் இருப்பதற்குக் காரணம் ஒரு சரியான முடிவு காணமுடியாத நிலை இருக்கிறது. இரண்டாவதாக, உள்ளூர் பஸ் நிலையத்தை முறைப்படி மேற்கொள்ளவேண்டுமென்றால், 3 அடுக்குள்ள மாடிக் கட்டடம் அமைத்து, பயணிகளுக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் செய்து கொடுக்கவேண்டும். உள்ளூர் பஸ் நிலையம் வருகிறபொழுது—வெளியூர் பஸ் நிலையம் அல்ல—அவைகளை அமைக்கலாம் என்ற ஆலோசனை இருக்கிறது. எதற்கும் திட்டம் போடுவதில் எல்லாவிதமான வசதிகளும் தேவைப்படுகின்றன.

**திரு. எஸ். முருகையன் :** பிராட்வே பஸ் நிலையம் நீண்ட நெடுங்காலமாக உடனடியாகச் சீர்திருத்தம் செய்யப்படும் என்று சொல்லிக் கொண்டு வரப்படுகிறது. இருந்தாலும் பிராட்வேயில் உள்ள பஸ் நிலையத்தில் வண்டிகளில் பிரயாணிகள் ஏறி உட்கார்ந்த பிறகு, பஸ்கள் வெளியே வருவதற்கு 10 நிமிஷம் ஆகிறது. அவ்வளவு இடநெருக்கடி இருக்கிறது. மேலும், அங்கே சுகாதாரம் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. ஆகவே, துப்புரவாளர்களை அதிகமாக நியமித்து சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்கு உடனடியாக வேண்டிய ஏற்பாட்டை அரசு மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அது மாநகராட்சியின் பொறுப்பில் இருக்கிறது. அதனுடைய சுகாதாரத்தைக் கவனிக்கும்படி மாநகராட்சிக்குத் தெரிவிக்கப்படும்.

**திரு. கா. வேழவேந்தன் :** புதிய பஸ் நிலையங்கள் அமைக்கப்படும்பொழுது புறநகரப் பகுதிகளில் அமைக்கப்போவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கிராமப்புறங்களிலிருந்து



1974 டிசம்பர் 21]

வருகிற விவசாயிகள் பெரும்பாலும் கொத்தவால்சாவடி, பழக்கடை, பூக்கடை போன்ற பகுதிகளுக்குத்தான் அதிகமாக வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்த பஸ் நிலையங்களை நெடுந் தூரத்தில் அமைத்துவிட்டால் மீண்டும் வேறொரு பஸ்ஸில் அவர்கள் பிரயாணம் செய்து நகரத்தின் உட்பகுதிகளுக்கு வரவேண்டிய அவசியம் ஏற்படும். ஆகவே, இந்தத் திட்டத்தை மேற்கண்ட வகையில் சீரிய முறையில் அமைப்பதற்கு உரிய வழிவகைகளை அரசு காணுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அதனால் தான் சற்று நீண்ட தொலைவில் வெளியூர் பஸ் நிலையங்களை அமைப்பதைவிட ஒரு இடை தூரத்தில் அமைக்க வேண்டும் என்று ஆலோசனை இருப்பதாகத் தெரிவித்தேன். ஆனால், பக்கத்தில் உள்ள இடங்களிலிருந்து வருகிற பஸ்கள் லோகல் பஸ்கள் என்று கருதப்படலாம். 10, 20 மைல்களுக்கு உள்ளாக உள்ள தூரத்திலிருந்து புறப்பட்டு வருகின்ற பஸ்களை நெடுந்தொலைவு பஸ்களாகக் கருதாமல், உள்ளூர் பஸ்கள் பட்டியலில் அவைகள் இடம் பெறக் கூடும்.

## திருவள்ளுவர் கோட்டம்

*158 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :**
**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளுவருக்கு ஞாபகார்த்தக் கட்டடம் கட்ட அரசு திட்டமிட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (அ) ஆம். திட்டம் செயலாக்கத்தில் உள்ளது.

(இ) ரூ. 48 இலட்ச செலவில் வள்ளுவர் கோட்டம் கட்டப்பெறவிருக்கின்றது.

[1974 டிசம்பர் 21

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, இந்த வள்ளுவர் கோட்டம் தற்பொழுது எந்த இடத்தில் கட்டப்படப் இருக்கிறது? அதன் அமைப்பு முறைகளின் விவரங்களைத் தர இயலுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நுங்கம்பாக்கத்தில் கட்டப்பட்டு வருகிறது. அதன் அமைப்பு முறைகள் எவ்வாறு இருக்கும் என்பதைப்பற்றிப் பத்திரிகைகளில்கூட படங்கள் வெளியிடப்பட்டன.

**திரு. கா. வேழவேந்தன் :** இங்கிலாந்து போன்ற நாடுகளுக்குச் செல்கிறவர்கள் ஷேக்ஸ்பியர் நினைவு இடங்களைப் போய் பார்ப்பதை முக்கியமாகக் கருதுவது போல எதிர்காலத்தில் தமிழில் சிறந்த இலக்கியமான குறளைப் படைத்த வள்ளுவர் நினைவாலயத்தைப் பார்க்கப் போகிறார்கள். அப்படிப்பட்ட சிறப்பான பணிகளை மேற்கொண்டிருக்கிற தமிழக அரசு எந்த ஆண்டில் இதை முடிக்கும் என்று எதிர்பார்க்கலாம்?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** 1975-ம் ஆண்டு டிசம்பர் திங்களுக்குள்ளாக அதனுடைய பணிகள் முடிவடையக்கூடும் என்று அந்தப் பணிகளை ஏற்றுக்கொண்டிருப்பவர்கள் உத்திர வாதம் அளித்திருக்கிறார்கள்.

**திரு. த. சோனையா :** திருவள்ளுவர் ஞாபகார்த்தமாகக் கட்டப் படுகின்ற கோட்டத்தைப்போல தென் பாண்டிய நாட்டில் ஈடு இணை இல்லாத புகழ் படைத்த மருதுபாண்டியனுக்கு நினை வாலயம் ஏதாவது கட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மருதுபாண்டியனைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது திருவள்ளுவருடன் ஒப்பிட்டுச் சொல்லக்கூடாது. கட்டபொம்மனுக்குக் கட்டப்பட்டது போல மருதுபாண்டியனுக்கும் கட்டப்படுமா என்று கேட்டிருக்க வேண்டும். அதுவும் ஆலோசிக்கப்படும்.

**திரு. கோவை செழியன் :** வள்ளுவர் குறள் உலகத்திற்கே வழிகாட்டியாக இருக்கிறது. அந்தக் குறளின் கருத்துக்கள் மக்களுக்கு மனதில் பதிகின்ற வகையில் ஏதாவது போதனை செய்வதற்கு ஏற்பாடு செய்வதை விட்டுவிட்டு கோடிக்கணக்கான



1974 டிசம்பர் 21]

ரூபாய் செலவில் பணம் இல்லாத நேரத்தில் மக்கள் கஷ்டப்படு கின்ற நேரத்தில் இத்தகைய ஒரு நினைவுச் சின்னம் தேவைதானா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** எங்களுக்கெல்லாம் திருவள்ளுவர் நினைவு தேவை. ஆகவே தான் இப்படிப்பட்ட தேவையின் அடிப்படையில் அந்த நினைவுச் சின்னம் எழுப்பப் படுகிறது. கோடிக்கணக்கான ரூபாய் செலவிடப்பட வில்லை. அமைச்சர் அவர்கள் பதிலிலேயே சொன்னார்கள், ரூ. 48 லட்சம் செலவில் கட்டப்படுகிறது.

**திரு. எம். ஏ. லத்தீப் :** இத்தகைய நல்ல காரியங்களைத் தமிழக அரசு செய்து வருகிறது. தென் பாண்டிய நாட்டில் கட்ட பொம்மன் நினைவுச் சின்னம் எழுப்பியதைப்போலவும், திரு வள்ளுவருக்கு நினைவுச் சின்னம் எழுப்புவது போலவும், கம்ப ராமாயணத்தினுடைய இலக்கிய நயத்துக்கு ஒப்ப, அந்த அளவுக்கு ஒரு நல்ல இலக்கியத்தை, சுவை மிக்க ஒரு மாபெரும் காவியத்தைப் படைத்த உமறு புலவருக்கு தென் பாண்டிய நாட்டில் ஒரு நினைவுச் சின்னம் எழுப்பப்படுமா? அண்மையில் கூட அதற்காக ஒரு குழு அமைத்து தனிப்பட்டவர்களால் அதற்கான முயற்சி செய்யப்பட்டுவருகிறது. அதனை அரசாங்கமே ஏற்று உமறு புலவருக்கு நினைவுச் சின்னத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தனிப்பட்டவர்களே அதற்காக ஒரு குழு அமைத்து முயற்சிகளை மேற்கொண்டிருக்கும் பொழுது அதில் போய் அரசாங்கம் தலையிட விரும்பவில்லை. அந்த குழுவிற்கான ஒத்துழைப்பை அரசு தரும்.

**திரு. கு. காமாட்சி :** வள்ளுவர் கோட்டம் அமைவது தமிழ் நாட்டினுடைய சிறப்பை உலகத்திற்கே எடுத்துக் காட்டுவதாக அமைய இருக்கிறது. ஆகவே, உலகத்தார் அனைவரையும் கவரத்தக்க அளவுக்கு அதிலுள்ள குறளை அவர்களும் புரிந்து கொள்ளத் தக்க அளவுக்கு, தமிழில் பொறிக்கப்படுவதைப் போல, ஆங்கிலத்திலும் பொறிக்கப்படுவது நல்ல பயனுடையதாக அமையும். ஆகவே, அதற்கும் வழிவகைகளைச் செய்ய அரசாங்கம் முன்வருமா?

[1974 டிசம்பர் 21

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இப்பொழுது தமிழிலே தான் திருக்குறள் அதிலே பொறிக்கப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. முடிந்தால் ஆங்கிலத்திலும், எல்லாக் குறள்களை இல்லாவிட்டாலும் சில முக்கியமான குறள்கள் மட்டும், பொறிக்கப்படுவதற்கு ஏற்பாடுகளைச் செய்யலாம்.

**திரு. கா. காளிமுத்து:** தலைவரவர்களே, திருவள்ளுவர் பற்றியும், திருக்குறள் பற்றியும் ஆல்பர்ட் ஸ்விச்சர் போன்ற பெரியவர்கள் எழுதிய கருத்துக்களும் அங்கே இடம் பெறுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, அங்கே அமைக்கப்பட்டிருக்கிற நூல் நிலையத்தில் அவர்களுடைய கருத்தோவியங்கள் எல்லாம் இடம்பெறும்.

**திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி:** தலைவரவர்களே, இந்த வள்ளுவர் கோட்டத்தில், அவர் செய்துவந்த தொழில் நெசவுத் தொழில் என்பதால், அங்கே ஒரு தறியும் வைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, வள்ளுவருடைய தொழில் என்ன, அவர் நெசவுத் தொழில் செய்தாரா, அல்லது அமைச்சராக இருந்தாரா, அவருடைய பிறப்பென்ன, வளர்ப்பு என்ன என்பனபோன்ற வரலாற்று விபரங்கள் என்ன என்பதெல்லாம் இன்னும் ஆராய்ச்சிக்குரியதாகவே இருக்கின்றன. ஆகவே, அப்படிப்பட்ட சர்ச்சைகளுக்கு இடமில்லாமல், வள்ளுவருடைய கருத்துக்களுக்குக் குறைபாடு இல்லாமல், அங்கே அவருடைய குறளுக்கு மட்டும் இடமிருக்கும்.

**திரு. எம். சுரேந்திரன்:** சார், கவிஞர்கள், புலவர்கள் பெருமைகளைப் போற்றும் வகையில் பல நினைவுச் சின்னங்கள் கட்டுவது சிறப்பானதுதான். இருந்தாலும் அம்மாதிரியான அமைப்புக்களை நிறுவுவதற்கு முன்னால் நாட்டிலே இருக்கிற மக்கள் அதைக் கண்டுகளித்து, பாராட்டு, பெருமிதம் கொள்கின்ற வகையில் சுபிட்சமாக இருந்தால்தான் பயன்படும். ஆகவே, முதலில் அவர்களுடைய நல்வாழ்வுக்கான காரியங்களைச் செய்து பின்னால் இம்மாதிரியான நினைவுக் கோட்டங்களை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1974 டிசம்பர் 21]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, ஏதோ அந்த விஷயங்களைக் கவனிக்காமல் இந்த வரலாற்றுச் சின்னங்களை அமைக்கின்ற காரியங்களை மட்டும் செய்துகொண்டிருக்கிறோம் என்று சொல்வது சரியல்ல. அதுமட்டுமல்லாமல், இந்த அரசு திடீரென்று மாய மந்திரமாக 48 லட்சம் ரூபாய் செலவில் வள்ளுவர் கோட்டம் அமைத்துவிடவில்லை. அங்கே அமைக்கப்படுகின்ற சிற்பப் பணிகளில் மட்டும் 360 சிற்பத் தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே, சிற்பத் தொழில் செய்கின்ற 360 குடும்பங்களும் அதனால் வாழ்வு பெறுகிறார்கள்.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, நூற்றுக்கணக்கான ஏழை சிற்பத் தொழிலாளர்களுக்கு வேலையளிக்கக்கூடிய இந்தக் கோட்டத்தில் என்னென்ன அமைய இருக்கின்றன? ஏதோ கோட்டம் என்று சொன்னால் மதில் சுவர் கட்டுவதுபோலக் கருதிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கோட்டத்தின் உள்ளே என்னென்ன அமைய இருக்கின்றன? வள்ளுவர் பற்றியும், திருக்குறள் பற்றியும் ஆராய்ச்சி செய்வதற்கு அங்கே இடம் இருக்குமா என்பன போன்ற விபரங்களை முதலமைச்சரவர்கள் விளக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, என்னென்ன இருக்கின்றது என்ற கேள்வியில், 'என்னென்ன இருக்கின்றது' என்பதை எடுத்துவிட்டால் அந்த கேள்வியின் உடலிலே இருக்கின்ற எல்லாம் அமையும்.

**திருமதி ஜோதி வெங்கிடாசலம்:** தலைவரவர்களே, திருவள்ளுவர் சிலையின் பக்கத்தில் அவருடைய மனைவியின் சிலையையும் சேர்த்து வைத்தால் அது பெண்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும். அதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, ஏற்கெனவே மயிலையில் இருக்கிற திருவள்ளுவர் ஆலயம் என்று சொல்லக்கூடிய ஆலயத்தில் திருவள்ளுவருடைய மனைவிக்கும் ஆலயம் இருக்கிறது. இங்கேயும், இந்த நினைவுக் கூடத்திலேயும் வைப்பதற்கு இடம் இருந்து, வைத்தால், நாம் திருவள்ளுவருக்கு எழுப்புகின்ற ஆலயத்தின் நோக்கம் நிறைவேறுமா என்பதை ஆலோசித்து, அம்மையார் அவர்களுடைய யோசனை பிறகு பரிசீலனை செய்யப்படும்.

[1974 டிசம்பர் 21

**திரு. சி. ஆறுமுகம்:** தலைவரவர்களே, நம்முடைய தமிழ் நாட்டின் தலைநகரில் வள்ளுவருக்குக் கோட்டம் அமைப்பதுபோல நம்மையெல்லாம் ஆளாக்கிய பேறறிஞர் அண்ணாவைப்பற்றி, அவர்களுடைய புகழைப்பற்றி சென்னை மாநகரில் அல்லது வேறு மாவட்டங்களில் அல்லது அண்ணா பிறந்த காஞ்சியில் அவர்களுடைய வாழ்க்கையைச் சித்தரிக்கும் வகையில் கோட்டம் ஒன்றை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, நாட்டு மக்கள் அனைவரும் இன்று பார்த்து ஆறுதல் அடையத்தக்க வகையில் அண்ணாவின் கல்லறையை சென்னையில் அமைத்திருக்கிறோம். அரசின் சார்பில் அல்லாமல் அவர் வளர்ந்த கழகத்தின் சார்பில் 'அண்ணா அறிவாலயம்' என்ற பெயரில் ஒரு கோட்டம் அமையவிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, வினாக்கள் 159, 160, 161 ஒத்திவைக்கப்படுகின்றன.

### சிமெண்ட் தொழிற்சாலைகள்.

*162 வினா—திரு. என். கிட்டப்பா:
திரு. என். டென்னிஸ்:
திரு. பெ. சௌந்தரபாண்டியன்:
திரு. என். கே. பழனிசாமி:

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சிமெண்ட் தொழிற்சாலைகள் முழுமையாகச் செயல்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) & (இ) நிலக்கரிப் பற்றாக்குறையாலும் அது குறித்தபடி கிடைக்காமையாலும், மின்சாரத்தட்டுப்பாட்டினாலும், உலை எண்ணெய் பற்றாக்குறையாலும் தமிழகத்தில் உள்ள சிமெண்ட் ஆலைகள் முழு அளவில் இயங்க முடியாத நிலையில் இருந்து வருகின்றன.



1974 டிசம்பர் 21]

**திரு. என். டென்னிஸ்:** தலைவரவர்களே, இதன்மூலம் எவ்வளவு ப்ரொடக்ஷன் பாதிக்கப்பட்டிருக்கிறது? எவ்வளவு தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்? இதைப் போக்க அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் என்னென்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, இதில் நிரந்தரமான பாதிப்பு ஏதும் இல்லை. நிலக்கரி கிடைக்காததே இப்படிப்பட்ட இடையூறு ஏற்படுவதற்குக் காரணமாகும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, நிலக்கரி தற்போது தாராளமாகக் கிடைக்கிறதா? இல்லை என்றால் தாராளமாகக் கிடைக்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இன்றைக்கு என்ன நிலை என்று சொல்ல முடியாது. காரணம் நாளை ரயில்வே வேலை நிறுத்தம் என்று சொன்னால் கஷ்டம் வந்துவிடும். நிலக்கரி கிடைப்பதற்கான நிரந்தரப் பரிகாரம் மத்திய அரசைப் பொறுத்தது.

**திரு. என். கே. பழனிசாமி:** சார், நிலக்கரியில் பற்றாக்குறை இல்லை; கொண்டுவருவதில்தான் தாமதம் ஏற்படுகிறது. ஆகையால் சர்க்கார் இப்போது இரண்டு கப்பல்களை வாங்கியிருக்கிறதே, அந்தக் கப்பல்களில் நிலக்கரியைக் கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நமக்கு நிலக்கரி தாராளமாகக் கிடைப்பதற்கு மத்திய அரசின் 'மைன் டிபார்ட்மெண்ட்', ரயில்வே டிபார்ட்மெண்ட், ஆகிய இரு துறைகளைப் பொறுத்தது. நமக்கு நிலக்கரி கிடைக்காதபோது, கரி தாராளமாக இருக்கிறது, 'வாகன்' இல்லை என்று மைன் டிபார்ட்மெண்ட் சொல்கிறார்கள், இல்லை என்றால் வாகன் இருக்கிறது; கரி இல்லை என்று ரயில்வே டிபார்ட்மெண்ட் சொல்கிறார்கள். எப்படி இருந்தாலும் நமக்கு கரி தேவை.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, இன்றையதினம் சில சிமின்ட் ஆலைகள் மூடிக் கிடக்கின்றன. ஆகவே, கழிந்த ஆண்டு எந்த அளவுக்கு சிமின்ட் உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு தொழிலாளர்களுக்கு

[1974 டிசம்பர் 21

போனஸ் கொடுக்கிற முறையில் சில பிரச்சனைகள் எழுந்திருக்கின்றன. அதற்குத் தீர்வு காணப்பட்டுள்ளதா? அரசுத் தொழிற்சாலைகளில் எந்த அளவுக்கு உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது? அதனால் எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்ற விபரங்களை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இது நிலக்கரிப் பற்றாக் குறையைப்பற்றியது. சில சிமின்ட் ஆலைகளில் வேலை நிறுத்தம் நடப்பது உண்மை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், சிமின்ட் தொழிற்சாலைகள் முழுமையாக வேலை செய்யவில்லை என்று சொன்னார்கள். அப்படியானால் சர்க்காரில் இருக்கக்கூடிய ஆலைகளில் எந்த அளவுக்கு வேலை பாதிக்கப்பட்டிருக்கிறது, எந்த அளவுக்கு உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது? மற்ற ஆலைகளில் எந்த அளவுக்கு உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** 1973, 1974 ஆண்டுகளில் 'ஷார்ட் ஃபால்' என்ற முறையில் ஆலங்குளம் சிமின்ட் தொழிற்சாலையில் 73,210 டன்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, in view of the fact that the new ship has come, will the transport problem of coal be solved and also the frieght which has grown verey high will be reduced in respect of coal?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ரயில்வே வாகன் கிடைப்பதில் உள்ள தகராறு இதன்மூலம் ஓரளவு தீரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. கு. காமாட்சி:** தலைவரவர்களே, தற்போது சிமின்ட் தொழிற்சாலைகளில் தேவைக்கேற்ப சிமின்ட் தயாரிக்க முடியாத நிலை இருக்கிறபோது, மத்திய அரசு சிமின்ட் தொழிற்சாலைகளுக்கு சூப்பர் ஃபைன் என்ற ஒருவகை சிமின்டைத் தயாரித்து என்ன விலைக்கு வேண்டுமானாலும் விற்றுக்கொள்ளலாம் என்று உத்தரவு பிறப்பித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது அரசுக்குத் தெரியுமா? அதன் விபரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.



1974 டிசம்பர் 21]

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தெரியும். மத்திய அரசு இதுபற்றி உத்தரவு போட்டிருக்கிறார்கள். 'சூப்பர் ஃபைன் குவாலிட்டி' என்று சில ரகங்கள் தேவைப்படுவதுதான் காரணம் என்று சொல்லப்படுகிறது.

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவரவர்களே, தமிழ்நாடு அரசு புதிய கப்பல்கள் இரண்டை வாங்கியிருப்பது ஒரு மாபெரும் சாதனையாகும். இது வரலாற்று சிறப்புமிக்க ஒரு காரியம். இந்தக் கப்பல்களைப் பெற்று, வருவதற்காக நம்முடைய அமைச்சரவர்கள் ஜப்பானுக்கு கூட சென்று வந்திருக்கிறார்கள். இந்தக் கப்பல்களை நிலக்கரி கொண்டுவருவதற்கு மட்டும் பயன்படுத்தாமல் வேறு சில காரியங்களுக்கும் பயன்படுத்துவார்களா? மேற்கொண்டும் சில கப்பல்களை வாங்க திட்டம் வைத்திருக்கிறார்களா? இவை பற்றிய விபரங்களை மேல்நாடுகளுக்கு சென்று வந்த அமைச்சரவர்கள் இந்த அவைக்குத் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, தமிழ்நாடு அரசு பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்கு முதன் முதலாக இரண்டு கப்பல்களை வாங்கியிருக்கிறது. தமிழ் நாட்டை தொழில் மயமாக்குகிற அந்த முன்னேற்றகாமான நல்ல திட்டத்தை வெற்றிகரமாக ஆக்குவதற்குத் தேவையான அளவு நிரந்தரமான நிலையில் மின்சாரத்தை உற்பத்திச் செய்வதற்கு நிலக்கரியைக் கொண்டு வருவதன் மூலம்தான் செய்ய முடியும். ஆகவே, தமிழ் நாட்டை தொழில்மயமாக்குவதற்காகவே நாம் வாங்கியிருக்கிற கப்பல்கள் முதன் முதலாகப் பயன்படும். ஆனால் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்த வரையில் அது கல்கத்தாவில் இருந்து தமிழ்நாட்டுக்கு நிலக்கரியைக் கொண்டுவருவது மட்டுமல்லாமல், இதர நாடுகளுக்கு இந்திய அரசால் நடைபெறுகிற வாணிபத்திலும் பங்கு கொண்டு, இந்திய அரசினுடைய வாணிபத்திற்கும் பெரும் துணையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## நிலக்கரி கிடங்குகள்

* 163 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நிலக்கரிகளை சேமித்து வைக்க நிலக்கரி கிடங்குகள் ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எங்கெங்கு ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) இப்பொருள் பரிசீலனையில் உள்ளது.

## இராணிப்பேட்டையில் இரும்புக் குழாய்கள் தயாரிப்பு

* 164 வினா— திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராணிப்பேட்டையில் இரும்புக் குழாய் தயாரிப்பு ஆலை அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை. இராணிப் பேட்டையில் இரும்புக் குழாய் ஆலை அமைக்கும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை. மாநில தொழில் மேம்பாட்டுக் கழகம் மட்டும் ஒரு இரும்புக் குழாய்கள் தயாரிக்கும் தனியார் ஆலை நிறுவுவதற்கு உதவிகள் புரிந்து வருகிறது.

(முற்பகல் 9.30)

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் அரசின் செயல்முறையில் இல்லையென்று சொல்கிறார்கள். இரும்புக் குழாய்கள் தமிழ்நாட்டுக்கு அதிகமாகத் தேவைப்படுகிற காரணத்தினால் உடனடியாக இதைச் செயல்படுத்த நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதைக்கு இல்லை.

## *Survey on availability of Barytes*

*165 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state :

(a) whether any survey into the existence of a new type of barytes has been undertaken in recent times in the State; and

(b) if so, the details thereof?



மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) கடைசியாக நில ஆய்வு 1962 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.

(இ) கோலக்கல் (Barytes) கோயம்புத்தூர், வட ஆற்காடு மாவட்டங்களில் கிடைக்கிறது. இக்கனிமம் வெங்கச்செங்கலுடன் (Quartz) சேர்ந்து உருவாகி இருப்பதால் இக்கனிமத்தை அகழ்ந்தெடுத்து தரத்தை சீர்படுத்துவது தடையாக இருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி : இதன் மூலமாக ஸ்லாப் செய்கிறார்கள். இதற்கு ரொம்ப கிராக்கி இருக்கிறது. ஆகவே சிறு தொழில் கார்ப்பரேஷன் மூலமாகவாவது இதைச் செய்வதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பாரிட்ஸ் ஓரளவுக்குத்தான் கிடைக்கிறது. இதை எடுத்துப் பயன்படுத்துவது uneconomical for large scale exploitation என்று கனிவள நிபுணர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : வடாற்காடு மாவட்டத்தில் இது பெரும் அளவுக்குக் கிடைக்கிறது என்றும், ஜப்பான் நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதாகவும் தகவல் வருகிறது. நம்முடைய மாநிலத்தில் இருந்து எந்த அளவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது ? இதனால் நமக்குக் கிடைக்கக்கூடிய அந்நியச் செலாவணி என்ன ? தனிப்பட்டவர்கள் இந்தத் தொழிலை நடத்துவதற்கு வேண்டிய உதவிகளைச் செய்து தருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஜப்பான் நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுவது பற்றிய விவரம் இல்லை. க்வார்ட்ஸ் பெரும் அளவுக்கு எடுக்க முடியாது என்ற கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

## *Notified Inam Estates*

* 166 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Revenue be pleased to state :

(a) whether a number of cases of inam lands taken over are pending in Coimbatore district at present; and

(b) the reasons for the delay in issuing patta to the kisans in all these cases?

[1974 டிசம்பர் 21

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/1963) கீழ் அறிவிக்கப்பட்ட இனாம் எஸ்டேட்டோ, தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு சிறு இனாம்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1963) கீழ் அறிவிக்கப்பட்ட சிறு இனாம் எஸ்டேட்டோ, கோயம்புத்தூர் மாவட்டத்தில் இன்னும் நிலவரி ஏற்பாடு செய்யப்படாத நிலையில் எதுவுமில்லை.

(இ) சட்டத்தின் தற்போதைய விதித் துறைகளின் கீழ் பட்டா வழங்குவதில் தாமதம் ஏதுமில்லை.

**திரு. எஸ். வடிவேலு :** அவைத் தலைவர் அவர்களே, இனாம் நிலங்களுக்கு ஒருங்கிணைந்த சட்டம் கொண்டுவரப்போவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டு இன்று வரை கொண்டுவரப்படவில்லை. தஞ்சை மாவட்டம் வைதீசுவரன் கோவிலுக்கு அருகில் உள்ள மருவத்தூர் கிராமத்திலே இனாம் நிலங்களில் உள்ளவர்கள் நெல் அளக்கவில்லையென்று கோர்ட்டுக்கு அவர்களை இழுக்கடிக்கிறார்கள். கோர்ட் உத்தரவை ரத்து செய்வதற்கும் அவர்களுக்கே அந்த நிலங்களை பட்டா செய்து கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தஞ்சை மாவட்டத்திற்கு தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

**திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மைனர் இனாம்களைப் பொறுத்தவரையில் அந்த பூமிகளை எல்லாம் அன்கண்டிஷனலாக பட்டா செய்து தருவதாக உறுதி தந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் எல்லா விவசாயி களுக்கும் பட்டா செய்து தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இந்தப் பிரச்சினையை பரிசீலிக்க ஒரு சப் கமிட்டி நியமிக்கப்பட்டது. அந்தக் கமிட்டியின் முடிவுகள் இப்போது வந்திருக்கின்றன. அதன்படி பட்டா கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



1974 டிசம்பர் 21]

## ஜமாபந்தி முறை

* 167 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜமாபந்தி முறையை எடுத்துவிடும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது ?

(இ) எந்த ஆண்டு முதல் பூரணமாக ஜமாபந்தி முறை ஒழிக்கப்படும் என அரசு எதிர்பார்க்கிறது ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) சென்னை மாவட்டத்தில் ஜமாபந்தி நடத்தும் திட்டம் அமுலில் இல்லை. கன்னியாகுமரி மாவட்டத்தைத் தவிர மற்ற மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும், ஒரு வருவாய்க் கோட்டத்தில் ஜமாபந்தி முறை நீக்கப்பட்டுள்ளது.

(இ) இது குறித்து அரசு எந்த முடிவும் இன்னும் எடுக்கவில்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, ஜமாபந்தி முறையை முழுக்க முழுக்க ஒழித்துவிட அரசு கருதியுள்ளதா ? ஆம் எனில் எப்போது நடைமுறைக்கு வரும் ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது குறித்துதான் எந்த முடிவும் இன்னும் எடுக்கப்படவில்லை என்று அமைச்சர் தெரிவித்திருக்கிறாரே.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** முழுவதையும் எடுப்பது குறித்து வருவாய்த் துறை வாரியம் பரிசீலித்து ஒரு அறிவிப்புத் தருவார்கள். அதற்குப் பிறகு பரிசீலிக்கப்படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்த ஜமாபந்தி என்ற சொல்லுக்கு ஒரு தமிழ் வார்த்தையைக் கண்டுபிடிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இது வழக்கத்தில் வந்துவிட்ட சொல். இந்தச் சொல்லுக்கு ஏற்ற ஒரு தமிழ் வார்த்தையை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொன்னால் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிறோம்.

[1974 டிசம்பர் 21

**பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் தொழிற்கூடங்கள்**

*168 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு சமூகநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழுநோய் பிச்சைக்காரர்களுக்குப் பயன்படும் வகையில் புதிய தொழிற்கூடம் அமைத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எங்கெங்கு அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: (அ) & (இ) ஓர் அறிக்கை @ சட்டப் பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. நா. வீராசாமி: இந்த அறிக்கையில் தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கு கவர் தயாரிக்கிற வேலை கொடுக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. கவரைப் பயன்படுத்துகிறவர்கள் பல நேரம் தண்ணீரைத் தேடுவது இல்லை. எச்சிலால் ஒட்டுகிறார்கள். ஆகவே கவர் தயாரிக்கிற வேலையை அவர்களுக்குக் கொடுக்காமல் இருக்க நமது அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை ஆய்வு செய்யப்படும்.

**நீள் தொலைப் பேருந்துப் போக்குவரத்துக் கழகம்**

*169 வினா—திரு. என். கே. பழனிசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீள் தொலைப் பேருந்துப் போக்குவரத்திற்கென ஒரு போக்குவரத்துக் கழகத்தை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) & (இ) நீள் தொலைப் பேருந்துப் போக்குவரத்திற்காக தனியே ஒரு போக்குவரத்துக் கழகம் அமைக்கும் செயற்குறிப்பு உள்ளது.

@ 462–464 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



1974 டிசம்பர் 21]

திரு. என். கே. பழனிசாமி: நீண்டதூர பஸ்கள் பல சமயங்களில் நடுவில் கெட்டுவிடுகின்றன. அவற்றை நல்லமுறையில் ஓட்டுவதற்கு என்ன ஏற்பாடு செய்யப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நிர்வாகத்திறனை மேம்படுத்துவதற்காகத்தான் தனியாகவே போக்குவரத்துக் கழகம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென்று அரசு யோசனை செய்துள்ளது. விரைவில் இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த நீண்டதூரம் போகும் பஸ்களுக்காக தனி கார்ப்பரேஷன் அமைக்க இருக்கிறார்கள். ஏற்கனவே பல்லவா, பாண்டியா, சேரா என்பதாக பல கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டு, அதனால் பல தொழிலாளர்கள் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள். சர்வீஸ் சீனியாரிடிக்கு பல இடைஞ்சல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, இதுபோன்ற இடைஞ்சல் ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இத்தகைய கழகங்கள் அமைப்பதன் மூலம் போக்குவரத்துக் தொழிலாளர்கள் எந்தவகையிலும் பாதிக்கப்படமாட்டார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: பல கழகங்கள் அமைக்கப்பட்டதன் காரணமாக ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் அந்தரமாக இருக்கிறது. இங்கேயுள்ள பல திறமை வாய்ந்தவர்கள் அவற்றுக்குப் போய்விட்ட காரணத்தினால் இது பாதிக்கப்பட்டிருக்கிறது. ஸ்டேட் டிரான்ஸ்போர்டும் ஒழுங்காக நடைபெற வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மற்ற போக்குவரத்துக் கழகங்களை அமைப்பதன் மூலம் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் துறை பாதிக்கப்படமாட்டாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை: நீண்டதூர போக்குவரத்துக் கழகம் அமைக்கப்படுவது என்றால் அது சென்னையில்தான் இருக்கும். இதனால் நாகர்கோயில் போன்ற பிராந்திய ரீஜியனில் உள்ளவர்கள் பாதிக்கப்படமாட்டார்களா என்று அறியவிரும்புகிறேன்.

[1974 டிசம்பர் 21

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தமிழகத்தின்
தலைநகரமாக சென்னை இருக்கும் வரை அந்தக் கழகம்
சென்னையில்தான் இருக்கும். அங்கே ஏற்கனவேகூட
கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் இயங்கிவருகிறது.

**திரு. கோவை. செழியன்:** பேரவைத் தலைவரவர்களே, இந்த
நீண்ட தூரம் போகின்ற பஸ்களில் நான் சில நேரங்களில்
போனேன். அந்த பஸ்களினுடைய இருக்கை, அமைப்பு போன்ற
வைகள் எல்லாம் நீண்ட தூரம் போகமுடியாத அளவிற்குச் சிரம
மாக இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் இப்
பொழுது, ஜப்பானில் புதிய முறையிலுள்ள பஸ்களைப் பார்த்திருப்
பார்கள் என்று நம்புகிறேன். அந்த வகையில், நீண்டதூர பஸ்
களையாவது நல்லமுறையில், ஏர் கண்டிஷன் செய்தோ அல்லது
செய்யாமலோ, வசதியாக வைக்க ஏற்பாடு செய்வார்களா என
அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமசந்திரன்:** தலைவரவர்களே, மாண்பு
மிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல், நான் ஜப்பான்
நாட்டிலேயும் இன்னும் மற்ற நாடுகளிலேயும் உள்ள பேருந்துகளை
எல்லாம் பார்க்க முடிந்தது. சில பேருந்துகளிலேகூடச்
சென்றேன். நம்முடைய பேருந்துகளை சீர்திருத்துகின்ற
வகையில் ஏதேனும் கிடைக்குமா என்று ஆராய்ந்து பார்த்தால்,
அவர்களைவிட, நாமே எவ்வளவோ தேவலாம் போலிருக்கிறது
என்கின்ற கருத்துக்குத்தான் வந்தேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, இப்பொழுது நம் மாநிலத்
தில் பல்வேறு கழகங்கள் அமைக்கப்பட்டு, போக்குவரத்து இலாகா
செயல்படுகின்ற காரணத்தினுல், தொழிலாளர்களுக்கும் அவர்கள்
பெறுகின்ற ஊதியத்தில் பல்வேறு வித்தியாசம் ஏற்பட்டிருக்கிறது.
ஆகவே முணுமுணுப்பு ஏற்படுகிறது. ஆகவே, அவற்றைச் சீர்
படுத்துகின்ற முறையில், எல்லா தொழிலாளிகளுக்கும் ஒரே
மாதிரியான ஊதியம், மற்றும் சலுகைகள் கொடுக்கின்ற வகையில்
ஸ்டேட் முழுவதற்கும் ஒரே கார்ப்பரேஷன் அமைக்க அரசாங்கம்
முன் வருமா என அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன முணுமுணுப்பு தொழி
லாளர்களிடத்தில் இல்லை. வேண்டுமானுல் மாண்புமிகு உறுப்



1974 டிசம்பர் 21] [திரு. ச. இராமச்சந்தி

பினர் அவர்களிடத்திலே இருக்கிறதோ என்னவோ எனக்குத் தெரி
யாது. ஆனுல், பல்வேறு போக்குவரத்துக் கழகங்களாக
அவைகள் அமைக்கப்படவேண்டுமென்பது, பொருளாதார அடிப்
படையில், நிர்வாகத் திறனையொட்டி அமைக்கப்பட்டதேயொழிய
வேறு அல்ல.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** தலைவரவர்களே, போக்கு
வரத்துக்காகப் பல்வேறு கழகங்கள் அமைக்கப்பட்ட பிறகும் சரி,
அமைச்சரவர்கள் பொறுப்பில் அது வந்த பிறகும் சரி, அத்துறை
நல்லமுறையில் இயங்கி வருகிறது. அதிலே சந்தேகம் இல்லை.
ஆனுல், ஒரே ஒரு குறை மட்டும் இன்னமும் இருக்கிறது. நீண்ட
தூரம் சென்று வருகிற பேருந்துகளில் உள்ள குறைகளை டிரைவர்
டெப்போவில் பேருந்தை விட்டுவிட்டுப் போகும்போது குறித்து
வைத்துச் சென்ருல், மறுநாள் காலை அடுத்த டிரைவர் வந்து
வண்டியை எடுக்கும்போது, ஏற்கனவே குறிப்பிட்டுள்ள குறைகள்
அப்படியே இருக்கின்றன என்ற சூழ்நிலைதான் இருந்து கொண்
டிருக்கிறது. அதனுல்தான் பல வண்டிகள் பிரேக்-டவுன்கள் ஆகி
யிருக்கின்றன. நாங்கள் ஏறும்போது, டிரைவர்கள் சொல்லிக்
கொண்டிருக்கிருர்கள், இந்த ரிப்பேர்களை எல்லாம் செய்யச்
சொல்லி பல நாட்களாகச் சொல்லிக் கொண்டிருக்கிருேம், இன்ன
மும் அவை சரி செய்யப்படவில்லையென்று. ஆகவே, இந்த ரிப்
பேர் வேலைகளைச் சரிவர செய்வதற்கு, அங்கங்கு மாவட்ட ரீதி
யிலோ. முக்கியமான கேந்திரங்களிலோ, ஆட்களை அதிகப்படுத்து
வதற்கான திட்டத்தை அரசாங்கம் செய்யுமா என அறியவிரும்பு
கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** வண்டிகளைப் பழுது
பார்க்கின்ற துறையில், நாம் இன்னும் சிறந்த நிர்வாகச் சீர்
திருத்தங்களைச் செய்ய வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன என்
பதை நான் ஒத்துக்கொள்கிறேன். குறிப்பாக, தொழில் நுட்பம்
தெரிந்தவர்களும், வண்டிகளை நல்லமுறையில் ஓட்டுகின்றவர்களும்
நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் பற்ருக்குறையாகத்
தான் இருக்கிருர்கள். ஆகவே, தகுதியானவர்களை உருவாக்கு
வதற்கு. அவற்றிலே அவர்களைப் பயிற்றுவிக்க, ஒரு பயிற்சி கூடம்
Transport Training Institute ஒன்று வைக்க வேண்டுமென்ற
கருத்து, அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. சி. ஆறுமுகம்: தலைவரவர்களே, நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஜப்பான் நாட்டில் அங்குள்ள பேருந்துகளில் பிரயாணம் செய்ததாகத் தெரிவித்துள்ளார்கள். வரவேற்கவேண்டிய காரியம். அதைப்போல், தமிழ்நாட்டிலேயுள்ள நம்முடைய அரசாங்கப் பேருந்துகளில் பயணம்செய்ய வேண்டும். அவர்கள் அறிந்த உண்மையைக் கடைபிடிக்க வேண்டும்.

அடுத்து, தமிழ்நாட்டில் இருக்கிற கண்டக்டர்கள் எஸ்.எஸ்.எல்.சி. படித்திருக்க வேண்டுமென்ற ஒரு விதியை வைத்திருக்கிறார்கள். அதை, கண்டக்டர் லைசென்ஸ் அல்லது 8-வது, 10-வது படித்திருந்தால் போதும் என்று சட்டத்திருத்தம் கொண்டு வந்து நடைமுறையில் அமுலுக்குக் கொண்டு வருமா அரசு என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அத்தகைய திட்டம் எதுவும் இப்பொழுது இல்லை.

### *Pallavan Transport Corporation*

*170 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Transport be pleased to state the number of additional buses proposed to be introduced in the City by the Pallavan Transport Corporation during 1974-75?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பல்லவன் போக்குவரத்துக் கழகம், 1—4—74 முதல் 21—6—74 வரையில், தன்னிடமுள்ள பேருந்துத் தொகுதியுடன் மேலும் 32 பேருந்துகளைச் சேர்த்துள்ளது. 1974-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் மேலும் 30 பேருந்துகள் சேர்க்கப்படும். பேருந்து அடிச்சட்டங்கள் கிடைப்பதைப் பொறுத்து, மேலும் பேருந்துகள் வாங்கிச் சேர்க்கப்படும்.

திரு. என். கே. பழனிசாமி: சார், இப்பொழுது பஸ் நெருக்கடியாகத்தானிருக்கிறது. இன்னும் அதிகமாக—முன்பெல்லாம் 80 பஸ் வருஷா வருஷம் புகுத்தப்பட்டது. ஆனால், இப்பொழுது 64 பஸ்கள் என்று கனம் அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். இன்றைக்கு சர்க்யூட் பஸ்—சுற்றிச் சுற்றி வருகிற பஸ்—இன்னும் டெர்மினல் டு டெர்மினல் லக்ஸுரியஸ் பஸ் இவற்றை விடுவதை



ரத்து செய்து, தேவையான இடத்திற்கு விட்டால் பிரயோஜனமாக இருக்கும். ஏனென்றால், லக்ஸுரியஸ் பஸ்ஸில் இரண்டு பேர், மூன்று பேர்தான் போகிறார்கள். அதையெல்லாம் எடுத்துத் தேவையான இடத்திற்கு விடலாமே?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகம் இந்த ஆண்டு 250 பஸ்களை விடுவதற்கான திட்டத்தைத் தயாரித்து, மத்திய சர்க்காரிடத்திலே, அது சம்பந்தமாக நிதி ஆதாரத்தைக் கோரி, இப்படித்தட்ட ரூ. 3 கோடியை மத்திய அரசாங்கத்திடமிருந்து நாம் அண்மையிலே பெற்றிருக்கிறோம். ஜனவரி மாத இறுதியில் 250 பேருந்துகள் கூடுதலாக விடப்படும்.

### *Substitute for petrol and diesel*

*171 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Transport be pleased to state whether State Transport Corporations have offered a prize scheme of Rs. 1 lakh to those who invent a substitute for petrol and diesel?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஆம், அத்தகைய பரிசுத் திட்டம் ஒன்று அரசிடம் உள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: சார், இதுவரையிலும் ஏதாவது அந்த மாதிரி அப்ளிகேஷன் வந்திருக்கிறதா? ஏதாவது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அந்தத் தகவல் என்னிடத்திலே இல்லை. அதற்காகத் தனியாக ஒரு கமிட்டியை நியமித்து ப்ரொபஸர் ஒய். நாயுடம்மா அவர்கள் அதற்குத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, ஏதேனும் அனுப்பப்பட்டிருந்தால் அந்தக் கமிட்டிக்குச் சென்றிருக்கும்.

### *Idol theft at Vannarpet*

*172 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether

six idols of Panchaloham were stolen on June 15th, 1974 fron Arulthiru Subramaniaswamy Temple situated on the Tambara parani river in Vennarpet, Tirunelveli district?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** ஆம்.

**திரு. என். கே. பழனிசாமி:** இதைக் கண்டு பிடிப்பதற்குச் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? ஏதாவது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவரவர்களே, உடனடியாகக் காவல் துறையிலே புகார் செய்யப்பட்டிருக்கிறது. காவல் துறையினர் கண்டுபிடிப்பதற்கான முயற்சியை எடுத்து வரு கிறார்கள். இதுவரையில் துப்பு துலக்கப்படவில்லை.

## தமிழ்நாடு தெய்வீகப் பேரவை

* 173 வினா—**திரு. டி. வி. சம்பத்:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:

(அ) தமிழ்நாடு தெய்வீகப் பேரவையின் கணக்குகள் தணிக்கை செய்யப்படுகிறதா?

(இ) ஆமெனில், எவ்வாறு செய்யப்படுகிறது?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அ) ஆம்.

(இ) பேரவையின் அமைப்பு விதியின்படி மாநிலக் குழு வினால் தேர்ந்தெடுக்கப்பட்ட தணிக்கையாளர் மூலம் 1383-ம் பசலி வரை கணக்குகள் தணிக்கைச் செய்யப்பட்டன. 1384-ம் பசலி முதல் அறநிலையத்துறையின் மூலம் உள்ள தணிக்கையாளர்களைக் கொண்டு கணக்குகளைத் தணிக்கை செய்ய தீர்மானிக்கப்பட் டுள்ளது.

**புலவர் சி. பழனிச்சாமி:** இந்தத் தெய்வீகப் பேரவை, தமிழ் நாட்டிலே என்னென்ன தொண்டுகள் செய்து வருகின்றன. கிறிஸ்தவ மதத்தினரைப் போன்றும், இஸ்லாமிய மதத்தினரைப் போன்றும், கல்விச்சாலைகள், மருத்துவசாலைகள் இவைகளை யமைத்துப் பொது மக்களுக்கு நேரிடையாகப் பயன்படுகிற தொண்டைச் செய்து வருகிறார்களா என் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவரவர்களே, தெய் வீகத் தொண்டுகள் அத்தனையையும் செய்துவருகிறார்கள்.



## உழவு மாடுகள் வாங்கக் கடன்கள்

* 174 வினா—**திரு. சோ. அழகர்சாமி:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) 1973–74-ல் தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் தாலுகாவில் மாடுகள் வாங்க எத்தனை அரிசனங்களுக்கு பணம் கொடுக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்?

(இ) அவர்களுக்கு பணம் வழங்கப்பட்டுவிட்டதா? இல்லை யெனில் தாமதத்திற்குக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:** (அ) எட்டு அரிசனங்கள் உழவு மாடுகள் வாங்குவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

(இ) உழவு மாடுகள் வாங்க அரிசனங்களுக்கு பணமாக கொடுக்கப்படுவதில்லை. மாறாக உழவு மாடுகளை சந்தையில் வாங்கி அரிசனங்களுக்கு வழங்கப்படுகிறது. சிதம்பரம் வட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட எட்டு அரிசனங்களுக்கு 1973-74 நிதியாண்டு முடிவதற்கு முன்பாகவே மாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

**திரு. சோ. அழகர்சாமி:** இது ஒரு வருஷத்துக்கு முன்னால் போட்ட கேள்வி. அப்பொழுது அங்கு பெரும்பாலும் மாடுகள் வாங்கித் தேர்ந்தெடுக்கப்பட்டும், நீண்ட நாளாகியும் மாடு கொடுக்கப்படவில்லையென்ற புகார் இருக்கிறது. இந்த மாதிரி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு, உடனடியாகக் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை, தாமதம் இல்லாமல் செய்ய அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:** தலைவரவர்களே, மனுக்கள் போட்டபிறகு, அதன் பேரிலே பரிசீலனை செய்து மாடு கொடுத்தால், உள்ளபடியே விவசாயம் செய்வதற்கு அந்தந் தகுதி அவர்களுக்கு இருக்கிறதா என்பதை அறியவும், சில விவரங்களை அறிவதற்கும் கொஞ்ச நாள் ஆகிறது. அதற்குமேல் தேர்ந்தெடுக்க, அவர்களே தேர்ந்தெடுத்த பிறகு, அவர்களையும் அழைத்துச் சென்று மாடுகளை முறையாக வாங்கிக் கொடுக்கிறோம். எப்படியோ மாடுகள் கொடுக்கப்படுகின்றன.

[1974 டிசம்பர் 21

## பர்கூர் மலை ஆதிவாசிகள்

*175 வினா—திரு. சு. எம். நடராசன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

கோவை மாவட்டம், பர்கூர் மலைப்பகுதியில் வசிக்கும் மலையாளிகளையும் ஆதிவாசிகள் பட்டியலில் சேர்க்கும் செயற் குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் :** ஆம்.

**திரு. சு. எம். நடராசன் :** தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத் திலே கொள்ளிமலை பகுதியிலும், ஏர்க்காடு பகுதியிலும் பாலமலைப் பகுதியிலும் இருக்கின்ற மலையாளி இனத்தைச் சேர்ந்தவர்கள் பர்கூர் மலைப் பகுதியில் 10 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இதுவரையிலே ஆதிவாசிப் பட்டியலிலே சேர்க்கப் படாததால் பல இன்னல்களுக்கு ஆளாகிறார்கள். ஆகவே அவர்களையும் இந்தப் பட்டியலிலே சேர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் :** தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் மட்டுமல்ல, தர்மபுரி, கோவை மாவட்டங் களிலேயும் இதே மலையாளிகள் இருக்கிறார்கள். அவர்களையும் ஆதிவாசிகள் பட்டியலிலே சேர்க்கவேண்டுமென்று இந்த அரசு சில ஆலோசனைகளை எடுத்து மத்திய அரசுக்கு அனுப்பியது. அவர்கள் பேசுகின்ற மொழி ஒருங்கிணைந்த மொழியா, வேறு வேறு மொழியா, எத்தனை பேர்கள் இருக்கிறார்கள், எவ்வளவு காலமாக அந்த இடத்தில் குடியிருக்கிறார்கள் என்றெல்லாம் மத்திய அரசுகேட்டு நாம் நம்முடைய பரிந்துரைகளை அனுப்பி யிருக்கிறோம். மத்திய அரசின் முடிவு தெரிந்தவுடன் நாம் அவர்களை இந்தப் பட்டியலில் சேர்ப்பதற்கு ஆவன செய்யலாம்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவர் அவர்களே, ஆதிவாசிகளுடைய குடியிருப்புகள் கோயம்புத்தூர், தர்மபுரி மாவட்டங்களில் உள்ளன என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டத்திலேயும் மலைவாசிகள் இருக்கிறார்கள் அவர்கள் கீழ்நாட்டாரோடு தொடர்பு இல்லாமல் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். அவர்களையும் அந்தப் பட்டியலில் சேர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?



1974 டிசம்பர் 21]

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் :** தலைவர் அவர்களே, நான் சொன்ன இடங்களில் உள்ள மலையாளிகளையும் ஆதிவாசி பட்டி யலிலே சேர்க்கலாமா என்பது கேள்வி. அதற்கு நான் விளக்கி யிருக்கிறேன். புதிய பகுதியை உறுப்பினர் அவர்கள் சொல் கிறார்கள். அங்கே இருக்கிறவர்களும் மலையாளிகள் என்று சொல்கிறார்கள், அப்படியிருந்தால், நான் சொன்ன மூன்று மாவட்டங்களில் மட்டுமல்லாமல் வட ஆற்காடு மாவட்டத்திலேயும் அவர்கள் இருந்தால் அவர்களையும் சேர்த்துக்கொள்ள அரசு முயற்சி எடுத்துக்கொள்ளும்.

## *Science and Technology Plan*

*151 Q.—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state :

(*a*) whether Science and Technology Plan has been formulated by the State Planning Commission; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) இவ்விவரங்கள் அடங்கிய "வறுமைக்கு எதிரான போரில்அறிவியல்" என்ற நூலின்படி ஒன்று, சட்டப் பேரவை நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி :** இந்தத் திட்டம் அமலாவதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்த குழு 106 வகையான ஆராய்ச்சி வளர்ச்சிபற்றிய திட்டங்களை ஆராய்ந்து வெளியிட்டு இருக்கிறார்கள். 16 தலைப்பு களின் கீழே வெளியிட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, 10 ப்ரிவி கவுன்சில்கள் அமைப்பதற்கும் சிபாரிசு செய்திருக்கிறார்கள். Academic Applied Science Foundation என்ற குழு ஒன்று வைக்கவேண்டும் என்றும் Science Foundation என்ற ஒன்று வைக்கவேண்டுமென்றும் சிபாரிசு செய்திருக்கிறார்கள். சயின்ஸ் பவுன்டேஷன் வைப்பதற்கான முடிவை எடுத்திருக்கிறோம். அதன் தலைவராக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பிளானிங் கமிஷன் தலைவராக இருப்பவர் துணைத் தலைவராகவும் இருப்பார்கள். அதைத்தவிர சென்ட்ரல் கமிட்டி தலைவரும் அதிலே இடம் பெறுவார்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 டிசம்பர் 21

The foundation will be located in the State Planning Commission Office திட்டக்குழு இருக்கிற இடத்திலே அது அமையும். It will receive block grant from the Government மொத்த மானியத்தை அக்குழு அரசிடமிருந்து பெறும்.

**டாக்டர் க. நாகராசன்** : தலைவர் அவர்களே, தொழில் நுட்ப பல்கலைக்கழகம் (டெக்னலாஜிக்கல் யுனிவர்சிடி) அமைக்கும் திட்டமும் இந்தத் திட்டத்திலே சேர்ந்திருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : அது அந்தத் திட்டத்தில் வராது. தனியாக முயற்சி எடுத்துக்கொண்டு இருக்கிறோம். அதைப்பற்றி பல்கலைக் கழக மானியக் குழுவும் மத்திய அரசும்தான் முடிவு செய்யவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

**திரு. என். கே. பழனிசாமி** : தலைவர் அவர்களே, இதற்கு மத்திய சர்க்கார் ஏதாவது மானியம் தருவதாக அறிவித்திருக்கிறார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, மத்திய சர்க்காருடைய மானியம் வரவில்லை. பல்கலைக் கழக மானியக் குழுவின் மூலமாகக் கேட்டுப்பெறுவதற்கு நாம் முயற்சித்துக்கொண்டிருக்கிறோம்.

*Yogasana lessons in schools*

* 152 *Q.*—THIRU N. K. PALANISAMY :
THIRU N. KITTAPPA :
Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state :

(*a*) whether there is any proposal under the consideration of the Government to introduce yoga as a part of school curricula; and

(*b*) if so, the details of the same?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : (அ) & (இ) தற்பொழுதுள்ள பள்ளிப் பாடத் திட்டத்தின்படியே 6-ம் வகுப்பிலிருந்து உடற் பயிற்சி வகுப்பில் யோகப் பயிற்சியாகிய ஆசனங்களையும் கற்றுத்தர வகை செய்யப்பட்டுள்ளது.



1974 டிசம்பர் 21]

**திரு. என். கே. பழனிசாமி** : சார், இப்போதிருக்கக்கூடிய பாடமுறையிலே யோகாசன முறை இல்லை. அரை மணி, ஒரு மணி நேரம் வெயிலில் சும்மா உட்கார்ந்திருக்கச் சொல்கிறார்கள் அவ்வளவுதான். ஆகவே இப்படியில்லாமல் தனியாக பாடமுறை ஏற்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளிலே உடற்பயிற்சி வகுப்புகளிலே யோகப் பயிற்சிகள் கற்றுத் தரவேண்டுமென்று எல்லோருக்கும் அறிக்கை கொடுத்திருக்கிறோம். 1-ம் 2-ம் வகுப்புகளில் வாரத்திற்கு 4 பீரியட்களும், 3-ம் வகுப்பிற்கு வாரம் 3 பீரியட்களும் 4—11 வகுப்புகளில் வாரம் இரண்டு பீரியட்களும் உடற்பயிற்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. உடற்பயிற்சிக்கான பாடத் திட்டத்தின் கீழ் யோகாசனங்கள் பயிற்சியும் 6—11 வகுப்புகளில் கற்றுத்தரப் படுகிறது. ஆறும் வகுப்பில் சாம ஆசனம், வஜ்ர ஆசனம், பத்ம ஆசனம், உஷ்டிர ஆசனம், புஜங்க ஆசனம், சலப ஆசனம், பச்சிமோத்தன ஆசனம், யோக முத்திரை ஆசனம், கோமுக ஆசனம் சவாசனம். 7-ம் வகுப்பிற்கு விபரீத கரணி ஆசனம், சர்வாங்க ஆசனம், மத்ஸ்ய ஆசனம், ஹால ஆசனம், பச்சிமோத்தவ ஆசனம், உத்தானபாத ஆசனம், திரிகோண ஆசனம், உத்கட ஆசனம். எட்டாம் வகுப்பிற்கு சர்வாங்க ஆசனம், பத்தஸ்த ஆசனம், பச்சிமோத்தன ஆசனம், ஜானுசிரசு ஆசனம், ஹால ஆசனம், சசாங்கி ஆசனம், தனுர்வக்ர ஆசனம், பார்ஸ்வ திரிகோண ஆசனம், ஜானு கரண ஆசனம். மாணவியருக்கு தனுசு ஆசனம், ஜதசலப ஆசனம் ஹட ஆசனம் சாலுச ஆசனம், வக்கிர ஆசனம், விக்கிரச ஆசனம், தோலங்கல ஆசனம், பக்சன ஆசனம் ஆகியவை கற்றுத்தரப்படுகின்றன. விவரங்களை எல்லாம் அவர்களிடம் கேட்டால்தான் சொல்வார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி** : அமைச்சர் அவர்கள் யோகாசனங்களின் பெயர்களையெல்லாம் படித்தார்கள். ஆசனங்களைப் பற்றிப் புத்தகங்கள் பல வந்திருக்கின்றன. வெளிநாட்டினர் நம்முடைய நாட்டிலே இது சிறப்பாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். சவ ஆசனம் என்று இருக்கிறதே அது வெறுமனே படுத்துக்கிடப்பதுதான், அதையும் சொல்லிக்கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : நான் சொன்னது 6, 7, 8 இந்த வகுப்புகளிலே சொல்லிக்கொடுப்பதைப்பற்றித்தான்.

[1974 டிசம்பர் 21

வண்டியை உருவாக்கும் விதத்தில் பேட்டரியிலே இயக்கத்தக்க அளவிற்கு என்ன செய்யலாம் என்று தொழில் நுட்பக் கல்லூரி இயக்குநர் அதற்கான வசதி வாய்ப்புகளைச் செய்வதில் ஈடுபட்டிருக்கிறார். அதற்கு அரசாங்கத்திடம் மானியம் கேட்க இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி மானியம் கேட்டு வருமேயானால் அரசாங்கம் பரிசீலித்து தக்க முறையில் மானியம் அளித்து ஊக்குவிக்க ஆயத்தமாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

*[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்கு (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]*

## 2. தன்னிலை விளக்கம்.

**நகராட்சித் தேர்தல்களை ஒத்திவைக்க தான் சம்மதித்ததாக முதல்வர் கூறியது குறித்து திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்களின் தன்னிலை விளக்கம்.**

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** பாயின்ட் ஆஃப் பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன், சார். தலைவரவர்களே, நேற்றையதினம் அவையிலே இந்த நகராட்சித் தேர்தல் சம்பந்தமான மசோதா மீது விவாதம் நடந்துகொண்டிருந்தபொழுது நான் இந்த அவையிலே இல்லை. அப்பொழுது நமது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்தத் தேதியை மாற்றுவதற்கு என்னுடைய சம்மதத்தைக் கொடுத்ததாக அறிவித்ததாக நான் அறிகிறேன். அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம் நடந்தபொழுது இந்த விவாதத்தை ஒரு பொருளாக வைத்து விவாதிக்கவில்லை. அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம் முடிந்து போன பிறகு சாதாரணமாகப் பேசிக் கொண்டிருந்தபொழுது பல கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப் பட்டனவே தவிர இதை ஒத்திப் போடுவதற்கு என்னுடைய சம்மதத்தைக் கொடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, நேற்றைய தினம் குறிப்பிட்டபோதும் தலைவர்கள் சொன்ன அபிப்பிராயங் களின் அடிப்படையில் இது செய்யப்பட்டது என்று சொன்னேனே



1974 டிசம்பர் 21] [டாக்டர் மு. கருணாநிதி]

தவிர வேறல்ல. அலுவல் ஆய்வுக் குழுவில் இதை ஒரு பொருளாக வைத்து விவாதிக்கவில்லை என்று சொன்னார்கள். அலுவல் ஆய்வுக் குழுவில் இதை ஒரு பொருளாக வைத்து விவாதிக்கப்படுகிற விவகாரமும் இல்லை இது. அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம் முடிந்தபிறகு சட்டசபை கட்சித் தலைவர்கள் எடுத்துச் சொன்ன அபிப்பிராயத்தின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது என்றுதான் சொன்னேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார்.

**திரு. ஆலடி அருணா :** மாரிமுத்து அவர்கள் ஒத்துக்கொண்டேன் என்று சொன்னார்களா? ஏனென்றால் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதைப் பெரிதாக்க வேண்டாமென்று சொல்கிறேன். அங்கே என்ன நடைபெற்றது என்று எனக்குக்கூடத் தெரியும். அவ்வளவையும் விளக்கமாகப் பேசுவது முறையல்ல. அவர்கள் ஒரு விளக்கம் கொடுத்தார்கள். முதலமைச்சரவர்களும் ஓரளவு பதில் அளித்திருக்கிறார்கள். அந்த அளவோடு விட்டுவிடுவதுதான் நல்லது.

## (3) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

### (அ) சில்லறைக் கடைகளிலிருந்து அரிசி மறைந்தது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து டாக்டர் ஹாண்டே அவர்கள்;

'the sudden disappearance of rice from almost all retail shops in the City consequent to the announcement in the Assembly by the Hon. Chief Minister of price of various sorts of rice'

என்ற பொருள் பற்றி விவாதிக்க வேண்டுமென்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அது எப்படி இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்கத் தக்கது என்பதை அவர்கள் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Hon, Speaker, Sir, the reason for my adjournment motion is very obvious. This particular matter is of urgent public importance and, therefore, I request you to consider my suggestions to adjourn the business of the House. It is urgent because right to-day if you go and inspect a number of shops in the Madras City or in the mofussil areas you will see that practically rice has gone underground. Practically there is no rice available in the open market at all and there is a lot of confusion. The matter is also urgent because a number of persons are standing in front of shops demanding the shopkeepers to sell rice at a particular rate which the Hon. Chief Minister announced on 18th December 1974. The rates announced by the Hon. Chief Minister are as follows :—

| | RS. | |
|---|---|---|
| Coarse variety ... ... ... ... | 1.90 | per kilo |
| Medium variety ... ... ... ... | 2.00 | -do- |
| Fine variety ... ... ... ... | 2.10 | -do- |
| Superfine variety ... ... ... ... | 2.20 | -do- |

Subsequently he also made the statement that the traders who sold rice at higher rates would be dealt with severely. As a result of it, a number of persons had gone in front of the shops and demanded that if the traders sold at a higher rate, they would be dealt with severely. Now a situation has arisen when a number of persons are likely to take the law into their hands and so it is of public importance.

Then on 19th instant he made a statement in the other House and I am not going into it. He had stated that the maximum retail selling prices of rice announced by the State Government would come into effect after the Centre's concurrence had been obtained. He also stated that the Centre had been approached and its concurrence was expected in about a week. This shows that the statements made by the Hon. Chief Minister here and elsewhere are slightly different. If only he had stated clearly on the first day itself what they proposed to do, this complication could have been avoided.



Another point is if the Hon. Chief Minister had made these announcements after he had discussed all these aspects with his Cabinet colleagues and if necessary with the officials concerned like the Food Secretary and the Civil Supplies Commissioner and set up the distribution machinery, this would not have happened. Also the Co-operatives are not in a position to take up this huge task of distribution. I am not trying to put the Government in a tight spot. I only want that the Government should consider the whole problem, as otherwise an explosive situation would arise. Now some of the shopkeepers had stated that since they had purchased it at Rs. 3.15 or 3.20 per kilo, they could sell it only at that rate. I do not know how this particular announcement was made by the Hon. Chief Minister? Was it suddenly made because of the pressure of the No-Confidence Motion? If the business of the House is adjourned to discuss this matter, we can evolve a better method. Otherwise, we will become a laughing stock among the people. As the House is sitting in the afternoon also, we can then discuss it for about one hour so that we can avolve a method for proper distribution of rice to the people.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ள டாக்டர் ஹாண்டே அவர்கள் ஏதோ இந்த அவையிலேயும், வேறொரு அவையிலேயும் முரண்பாடான அறிக்கைகளை நான் சொன்னதாகக் குறிப்பிட்டார்கள். அது முற்றிலும் தவறு. ஏனென்றால் இங்கு வைக்கப்பட்ட அறிக்கைக்கான விளக்கத்தைத்தான் நான் வேறொரு அவையிலே வழங்கினேனேயல்லாமல் இங்கு வைக்கப்பட்ட அறிக்கைக்கு மாறுபாடான அல்லது முரண்பாடான ஒரு அறிக்கையை மற்றொரு அவையிலே நான் வைக்கவில்லை. அது முரண்பாடு என்று சொல்ல வேண்டுமேயானால், இங்கு சில்லறை விலை அல்லது மொத்த விலை இவையிவை என்று அறிவித்துவிட்டு வேறொரு அவையிலே வேறு விலைகளை அறிவித்திருந்தால் அது முரண்பாடானது என்று சொல்லக்கூடும்.

மேலவையில் நான் பேரவையிலே அறிவித்த சில விலைகளை யொட்டி சில கேள்விகள் எழுந்தபோதும், விளக்கங்கள் பெற உறுப்பினர்கள் முனைந்தபோதும் நான் அதுபற்றிய விளக்கங்களை அங்கே சொன்னேனே அல்லாமல் மாறுபட்ட, முரண்பட்ட கருத்து எதையும் இன்னொரு இடத்தில் சொல்லவில்லை.

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 டிசம்பர் 21

டாக்டர் ஹாண்டே அவர்கள் எழுப்பியுள்ள பிரச்சனையில் அவர்கள் கோடிட்டுக் காட்டிய விவரங்கள் அடிப்படையில் சில குறிப்புகளை இந்த அவையின் முன்னால் வைக்க விரும்புகிறேன்.

அரசாங்கம் கொள்முதல் செய்ய முடிவு செய்து, அதன்படி அறிவிக்கப்பட்ட பகுதிகளில் தனியார்கள் மொத்த வியாபாரம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்ற உத்தரவை அரசு நேற்று பிறப்பித்துள்ளது. இந்த உத்தரவின்கீழ் அரசு விரும்பினால் இதிலிருந்து விதிவிலக்கு அளிக்க அதிகாரம் உள்ளது. இந்த விதிவிலக்கைத் தளர்த்தி கூட்டுறவுத் துறையை அரசு உபரி நெல்லை வாங்குவதற்கு அனுமதிக்கும். இந்த விதிவிலக்கு தனிப் பட்ட வியாபாரிகளுக்கு மொத்த வியாபாரம் செய்வதற்குத் தளர்த்திக் கொடுக்கப்படமாட்டாது. அரசு லெவி கொள்முதலையும் கூட்டுறவுத் துறையினர் உபரி நெல்லையும் வாங்குவார்கள்.

உபரிப் பகுதிகளில் இப்போது சம்பா அறுவடை தொடங்கி யிருக்கிற இடங்களிலும் மற்றும் சம்பா அறுவடை வரவிருக்கின்ற இடங்களிலும் லெவி போக மீதியுள்ள உபரி நெல்லை, வாங்கும்படி கூட்டுறவுத் துறையை அரசு கேட்டுக்கொண்டுள்ளது. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை கூட்டுறவுத் துறை எடுத்து வருகிறது.

அதற்கு பல்வேறு ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட வேண்டும், அவைகள் எல்லாம் செய்யப்பட்டு விட்டனவா என்று கேட்டார்கள்.

முன்கூட்டியே மொத்தமாக வாங்குகின்ற அந்த நிலைக்கான ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டு விட்டன. அந்த வேலைகள் இப்போது தொடங்கப்பட்டு விட்டன.

சில்லறை வியாபாரத்திற்கு அரசு நிர்ணயித்துள்ள உச்ச வரம்பு விலைகளை அனுமதிக்கும்படி மத்திய அரசுக்கு எழுதியுள் ளோம்.

இங்கு சொல்லும்போதும் இன்று மாலையிலிருந்து அல்லது நாளைக் காலையிலிருந்து இந்த விலை அமலுக்கு வரும் என்று சொல்ல வில்லை; கொள்கை அறிவிப்பு என்றுதான் சொன்னேன். கொள் முதல் விலை, சில்லறை விலை இப்படி நிர்ணயிக்கப்படுகிறது என்று தான் சொன்னேன்.



1974 டிசம்பர் 21] [டாக்டர் மு. கருணாநிதி]

இந்த உச்சவரம்பு விலைகளை அனுமதிக்கும்படி மத்திய அரசுக்கு எழுதியுள்ளோம். இந்த ஒப்புதல் பெற்ற பிறகு இந்த விலைகள் அமலுக்கு வரும்.

இதற்கிடையே கொள்கை அறிவிப்பைப் பயன்படுத்திக்கொண்டு சிலர் தனியார் கடைகளில் அரிசியை அறிவிக்கப்பட்ட விலை விகிதப் படி தரவேண்டுமென்று கேட்டதாகத் தகவல் வந்தது. இதுபற்றி வியாபாரிகளும் உணவுத் துறைச் செயலாளரைச் சந்தித்துப் பேசினார்கள். அவர்களுக்கு இந்த உச்சவரம்பு விலை அனுமதிக்கப் பட்டு, உத்தரவு பிறப்பிக்கப்படும் வரை நியாயமான விலையில் அரிசி விற்கும்படியும், அரிசியைப் பதுக்கி வைக்காமல் தொடர்ந்து வியாபாரத்தைச் செய்யும்படியும் அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

மற்றொரு அவையிலே இதுதான் விளக்கமாகக் கூறப்பட்டது.

நேற்று நகரில் பல பகுதிகளை உணவுத் துறையினர் சுற்றிப் பார்த்தபோது தனியார் கடைகளிலும் அரிசி வியாபாரம் நடந்து வருவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். எந்தப் பகுதியிலும் தட்டுப் பாடு என்ற நிலை அரசுக்குக் கிடைக்கவில்லை.

தமிழ்நாடு நெல், அரிசி வணிகர்கள் (லைசென்ஸ்) உத்தரவின்கீழ் லைசென்ஸ் வழங்குவதற்கான நிபந்தனைகளில் ஒன்று வியாபாரிகள் தங்களிடமுள்ள அரிசியை விற்பனை செய்யாமல் வைத்திருக்கக் கூடாது என்பதும் ஒன்று. அரிசியை வைத்துக்கொண்டு வியா பாரம் செய்யாமல் இருப்பார்களானால் இந்த விதியின்கீழ் அவர் களுடைய லைசென்ஸ்களை ரத்து செய்வதற்கு வேண்டிய நடவடிக் கைகளை அரசு எடுக்கும்.

ஆகவே, டாக்டர் ஹாண்டே அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு இந்த விளக்கங்கள் போதுமானவை என்று கருதுகிறேன். ஆகவே, இதுபற்றி விவாதம் அவசியமில்லை என்று கூறி இந்தத் தகவல்களை தங்கள் மேலான கருத்துக்கு விடுகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: ஒரு யோசனை. எந்த பாயிண்டிலிருந்து என்று அறிவித்து அவர்கள் இதற்கெல்லாம் முடிவு பண்ணினால் நல்லது. பழைய ஸ்டாக் வாங்கி வைத்திருக்கக் கூடியவர்கள் வாங்கிய விலைக்கு மேல் கொஞ்சம் கூட்டி வைத்து விற்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். இதிலே புதிதாக நிர்ண யிக்கப்படுகின்ற விலைக்கு வரம்பு என்ன? எந்தத் தேதியிலிருந்து வரும் என்று தெளிவாகச் சொல்லிவிட்டால் நல்லது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதைத்தான் மற்றொரு
அவையிலும் கூறினேன். மத்திய அரசு ஒப்புதல் வந்த பிறகு
எந்தத் தேதியிலிருந்து சில்லறை விற்பனை விலைகள் உச்சவரம்பு
நிர்ணயம் என்பதை தேதி குறிப்பிட்டு அரசு அறிவிக்கும். அது
வரையில் இந்த விலைக்கு விற்க வேண்டுமென்ற அச்சத்திற்கு
ஆளாகத் தேவையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு அவையின் மற்ற
அலுவல்களை ஒத்திவைத்து இப்பிரச்னை குறித்து விவாதிக்க
வேண்டிய அவசியமில்லையாதலால் இதற்கு அனுமதி தர மறுக்
கிறேன்.

## (ஆ) பல கல்லூரிகளும், பள்ளிகளும் மூடப்பட்டிருப்பது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாட்டில் பல கல்லூரி
கள் மூடப்பட்டிருப்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள்
திருவாளர்கள் ஆலடி அருணா, கோவை செழியன், ஆர். பொன்
னப்ப நாடார், கே. கந்தசாமி, ஏ. ஆர். மாரிமுத்து, ஏ. சுப்பிர
மணியம், எம். சுரேந்திரன், பி. வெங்கடசாமி ஆகியோர் ஒத்தி
வைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி
பேரவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிப்பதற்
குரியது என்பதைப்பற்றிச் சுருக்கமாகக் கூற வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கோவை செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்
நாட்டில் இருக்கும் கல்லூரிகளில் பாதிக்கு மேற்பட்ட கல்லூரிகள்,
பள்ளிகள் மூடப்பட்டிருக்கின்றன. அரசு சார்பில் எது சொன்
னாலும் இன்றைய உண்மையான யதார்த்த நிலை தமிழ்நாட்டில்
எல்லாப் பகுதிகளிலும் இருக்கக்கூடிய மாணவர்கள் முக்கியமான
சில பிரச்சனைகளுக்காக போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாக, உணவு விலை ஏறிவிட்டது, இப்படி ஏறியிருக்கிற
விலையை இறக்குகின்ற வரையில் போராட்டம் நடத்துவோம்
என்று சொல்லியிருக்கிறார்கள். எம். ஏ. படிக்கின்ற மாணவர்கள்
ஒரு பிரச்சினையைக் கூறியிருக்கிறார்கள். அவர்களுக்குப் பாடமாக
அண்ணா அவர்களுடைய புத்தகத்தை வைக்காமல் நம்முடைய
முதலமைச்சருடைய 'வெள்ளிக்கிழமை' யைப் பாடப் புத்தக





மாக வைத்ததை எதிர்த்துப் போராட்டம் நடத்துகிறார்கள். இப்படிப் போராட்டம் நடத்துகிற மாணவர்கள் தங்களுடைய போராட்டத்திற்கு ஒரு முடிவு ஏற்படுகிற வரையில் போராட்டத்தை நிறுத்துவது இல்லையென்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

மதுரையில் சட்டக் கல்லூரி மாணவர்களுக்குப் பல பிரச்சனைகள் இருக்கின்றன. அவர்களுக்குத் தரக்கூடிய உபகாரச் சம்பளத்தைத் தரவில்லை என்பது ஒன்று. ஹாஸ்டலில் வசதிகள் இல்லை என்பது ஒன்று. எந்தவிதமான வசதிகளும் இல்லையென்று சொல்லுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணிக்கு துணை மானியத்தின் மீது வாக்கெடுப்பு இருக்கிறது. ஆகவே, சுருக்கமாகக் கூறுங்கள்.

**திரு. கோவை செழியன்:** இந்தப் பிரச்சனைகளை வைத்து அந்த மாணவர்கள் அமைச்சர்களை காண வந்தபோது அந்த மாணவர்களை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று மிருகத்தனமாக அடித்திருக்கிறார்கள். ஏற்கனவே குறிப்பிட்ட மாதிரி கண்ணிழந்த மாணவர்களை அடித்திருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் மாணவர்கள் மத்தியில் ஒரு கொந்தளிப்பை உருவாக்கியிருக்கிற காரணத்தால் அவர்கள் மாபெரும் போராட்டத்தை நடத்த முடிவு செய்து போராட்டத்தை நடத்தினார்கள். அந்தப் போராட்டத்திற்கான காரணத்தை ஆராயாமல் கல்லூரிகளையும், ஹாஸ்டல்களையும் மூடிவிடுகின்ற காரணத்தால் பிரச்சனை தீர்ந்துவிடும் என்று அரசாங்கம் நம்பினால் நிச்சயமாக அது நடைபெறாது. இந்தப் பிரச்சனையில் தீர்க்கமாக அரசு முடிவு எடுக்க இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, இன்று தமிழகத்தில் வரலாறு கண்டிராதவண்ணம் என்று சொன்னால் மிகை என்று அவர்கள் சொல்லுவார்கள். அந்த அளவுக்குப் பல கல்லூரிகள் மூடப்பட்டிருக்கின்றன. சென்னையில் சட்டக் கல்லூரி மூடப்பட்டிருக்கிறது. மதுரையில் இருக்கும் சட்டக் கல்லூரி மூடப்பட்டிருக்கிறது. தனியார் துறையில் உள்ள கல்லூரிகளும் மூடப்பட்டிருக்கின்றன என்று பல்வேறு இடங்களிலிருந்து தந்திகள் வந்து கொண்டிருக்கின்றன. மதுரைக்

கல்லூரியில் ஷெட்யூல்டு காஸ்ட் மாணவர்களுக்கும் ஏனைய மாணவர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டிருக்கிறது. வழக்குகளும் பதிவாகி இருக்கின்றன. இப்படி மாநிலம் முழுவதும் கல்லூரிகள் மூடப்பட்டிருக்கின்றன.

பெற்றோர்கள் என்ற முறையில் இப்படி கல்லூரிகளை மூடுவது சரியல்ல என்ற கருத்தை ஆசிரியருக்கு கடிதம் என்ற தலைப்பில் இந்து போன்ற பத்திரிகைகளில் எழுதி வருகிறார்கள். இந்த மாதிரிக் கடிதங்கள் வந்தவண்ணமாக இருக்கின்றன. மாணவர்கள் எல்லாம் தேர்ச்சி பெற்று வருங்காலத்தில் நல்லவர்களாகவும், தகுதிவாய்ந்தவர்களாகவும் ஆக கல்வி முறையிலே சில மாற்றங்கள் தேவை என்பதற்கான கிளர்ச்சியையும் செய்கிறார்கள். யூனியன் தேர்தல்களில் தலையீடு இருக்கிறது என்றும் தெரிவிக்கிறார்கள். பஸ் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே அடிக்கடி விரும்பத்தகாத மோதல்கள் ஏற்பட்டுவிடுகின்றன. இப்படி பல்வேறு காரணங்களால் ராஜ்யம் முழுமையும் இந்த நிலைமை வளருமோ என்ற நிலைமை இருக்கிறது என்று கருதுகிறேன். இந்தமாதிரி நிலையைத் தவிர்க்க அரசாங்கம் நிலையான தீர்வு காண்பது பொருத்தமாக இருக்கும். அண்மையில் நமது சென்னை பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் அவர்கள் இந்தக் கருத்தைப் பற்றி வேறு கல்வி நிபுணர்களிடமிருந்து ஆலோசனை கோரியதாகவும், அவர்கள் மாணவர்களிடையே அமைதியின்மையை எப்படித் தவிர்க்கலாம் என்று ஆலோசனை கூறியிருக்கிறார்கள். பொதுவாக, இந்தமாதிரி ஒரு கிளர்ச்சி மனப்பான்மை அண்மையில் ஏற்பட்டிருக்கிறது. இதைத் தவிர்ப்பதற்கு என்ன செய்யலாம் என்று விவாதிக்க இந்த சபையின் பிற அலுவல்களை ஒத்திவைப்பது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். ஆகவே, சபையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** மதிப்புகுரிய தலைவரவர்களே, தமிழகத்திலே பல்வேறு கல்லூரிகள் மூடப்பட்டு அதனாலே மாணவர்களுடைய படிப்பெல்லாம் தடைப்பட்டிருக்கின்ற நிலைமையை நாம் சாதாரணமானதாக கருதக்கூடாது. பல்வேறு கல்லூரிகளிலே அந்தந்த இடங்களிலே பல்வேறு கோரிக்கைகளை வைத்து பல்வேறுமாதிரியான நிலைமைகள் தோன்றியிருக்கின்றன





என்பதை நாம் உணர்கிறோம். சரியான ஹாஸ்டல் வசதிகள் கிடையாது. பல கல்லூரிகளிலே இந்த மாணவர் மன்றங்களில் தேர்தல் சரியாக நடைபெறவில்லை. கல்வி அமைப்பை மாற்றியமைக்க வேண்டும். இம்மாதிரி பல்வேறு கோரிக்கைகள் ஆங்காங்கு எழுப்பப்பட்டிருக்கின்றன. இம்மாதிரி கோரிக்கையெல்லாம் எழுப்பப்பட்டு அதனாலே கல்லூரி மூடப்படுவது வருந்தத்தக்க ஒன்று. இதைப் போக்குவதற்கு அரசும், பல்கலைக்கழக துணை வேந்தர்களும், பெற்றோர்களைக் கூப்பிட்டுப் பேசி முடிவு காண்பது நல்லது என்று நான் கருதுகிறேன். இந்த அமைதியின்மையை தொடர்ந்து நடக்க விட்டால் வருங்காலத்திலே அவர்களுடைய கல்விப் பணியில் அவர்களுடைய எதிர்காலம் அவ்வளவு நன்றாக அமையாது என்ற முறையிலே அரசு இதிலே போதிய கவனம் செலுத்தி இந்த அமைதியின்மையைப் போக்குவதற்குரிய நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தி சபையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, நாட்டிலே நிலவி வருகின்ற மாணவர் அமைதியின்மையையொட்டி, சில கல்லூரிகள் மூடப்பட்டிருப்பதையொட்டி இங்கே ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்து அதன் மேலாக விவாதிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் வலியுறுத்தி கூறியிருக்கிறார்கள். அமைதியின்மை ஏற்படுவது உள்ளபடியே எல்லோருக்கும் கவலை தருகின்ற ஒன்றுதான். நமக்கு மட்டுமல்ல, எல்லா மாநிலங்களுக்குமே கவலை தருகின்ற ஒன்று. மாநிலங்கள் மட்டுமல்ல, எல்லா நாடுகளுக்குமே கவலை தருகிறதாகும். ஆகவே, இதற்கு சீரான செம்மையான பரிகாரம் காண்பது அவசியம். தமிழகத்தில் மொத்தம் கலைக் கல்லூரிகள் 183 இருக்கின்றன. அதிலே ப்ரொஃபெஷனல் கல்லூரிகள் 44 இருக்கின்றன. ஐ.டி.ஐ. போன்றவைகள் 20 இருக்கின்றன. எல்லாம் சேர்த்து 247 நிறுவனங்கள் கல்விச் சாலைகளாக அமைந்திருக்கின்றன. அதிலே 17—12—1974 வரையில் கணக்கிட்டுப் பார்ப்போமேயானால் 47 கல்லூரிகள் மூடப்பட்டிருக்கின்றன. அதிலே மதுரை கலைக் கல்லூரியும், சென்னை சட்டக் கல்லூரியும் அடங்கும். ஆகவே, அவர்கள் சொல்லியமாதிரி பல்வேறு காரணங்களை வைத்து மாணவர்கள் வேலைநிறுத்தம் என்றுகூட நான் சொல்ல மாட்டேன்,

படிப்பு நிறுத்தம் செய்வதற்கான முறையிலே ஈடுபடுகிறார்கள்.
தொழிலாளர்கள் செய்தால் வேலைநிறுத்தம் என்று ஒப்புக்
கொள்ளலாம். ஆனால் அவர்கள் கல்வி நிறுத்தம் செய்கிறார்கள்.

பொதுவாகப் பார்த்தால் கல்லூரிக்கு கல்லூரி காரணங்கள்
வேறுபடுகின்றன மாணவர்களிடையே இரண்டு கோஷ்டிகளாகப்
பிரிந்து தகராறு வருவது. இன்னும் மாணவர்களுக்கு ஹாஸ்டலில்
வசதி வழங்க வேண்டுமென்று சொல்லி கல்லூரிகள் மூடப்பட்டிருக்
கின்றன. தனியார் வசூலிக்கும் கட்டணமும், அரசு வசூலிக்கும்
கட்டணமும் இணையாக இருக்கவேண்டுமென்று கோரிக்கை
வைத்திருக்கிறார்கள். விடுதி மாணவர்கள் தங்களுக்கு குறைந்த
விலையில் உணவு வழங்க வேண்டுமென்று சில கோரிக்கை
வைத்திருக்கிறார்கள். அவர்கள் வேலைநிறுத்தம் செய்ததற்குப்
பிறகு இந்த கோரிக்கைகளை வைக்கிறார்களே தவிர, அதற்கு
முன்கூட்டியே வருமானால் அவைகளை நிறைவேற்றுவதில் கஷ்டம்
இருக்காது.

வசதி வாய்ப்புக்களைப் பொறுத்தவரையிலும் நாம் ஆண்டுக்கு
ஆண்டு பெருக்கி வருகிறோம் என்பதை எல்லோரும் நன்கு
அறிவார்கள். சட்டமன்றத்திலே இருக்கிற பள்ளி, கல்லூரிகளில்
படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள் எல்லோருக்கும் இது
தெரியும். நாம் படிக்கின்ற காலத்தில் விடுதிகளில் இருந்த
வசதிகளைவிட இப்போது எல்லா வகைகளிலும் வசதிகள் பெருகி
யிருக்கின்றன. ஆண்டுக்கு ஆண்டு கல்வி மான்யக் கோரிக்கை
வருகிறபோது கூட வசதி வாய்ப்புகள் அதிகமாக ஏற்படவேண்டும்
என்பதையும் இந்த மன்றம்தான் முடிவெடுக்கிறது. ஒரு
பத்தாண்டு காலத்திற்கு முன்னால் இருந்ததைவிட யூனிவர்சிட்டி
கிராண்ட்ஸ் கமிஷன் வந்த பிறகு பொதுமன்றம், ஆடிட்டோரியம்
கட்டுவதற்கு 1½, 2, 3 லட்சம் ரூபாய் என்று நிதி தருகிறது மட்டு
மல்லாமல் பல்கலைக்கழக மான்யத்தின் மூலம் நம் உதவியைப்
பெற்று வருகிறது.

வசதிகள் எல்லாம் நிறைவேறிவிட்டன என்று நான் சொல்ல
மாட்டேன், ஓரளவு இப்போது வசதி அதிகமாக இருக்கிறது.
ஆனால் அதையெல்லாம் வேலைநிறுத்தம் செய்வதற்கு முன்கூட்டியே
சொன்னால் நடவடிக்கை எடுக்கமுடியும். நான் கூட 2, 3 தடவை
முதல்வர்கள் மாநாட்டிலே குறிப்பிட்டேன். மாணவர்கள்



விரும்புகிற பேராசிரியர் பிரதிநிதிகள் ஒருவர் இருவர், பெற்றோர்
களின் பிரதிநிதிகள் ஒருவர் இருவர், மாண[illegible] பிரதிநிதிகள்
ஒருவர் இருவர், இந்த மூன்று தரப்பி[illegible] ஒவ்வொரு
கல்லூரிக்கும் இருந்து அணுகவேண்டிய அதிகா[illegible]யும், கல்வி
துறையையும் அணுகி காரியங்களைச் செய்கிறபோ[illegible] மாணவர்கள்
தங்களுடைய வெறுப்பை காட்டிக்கொள்ள மாட்ட[illegible]
100க்கு 90 பங்கு பிரச்சனைகளை ஓரளவு தீர்ப்பதற்கு [illegible]
ஏற்படும். பல்வேறு பிரச்சனைகளிலே எந்தக் கல்லூரியையும்
மூடவேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிடவில்லை. அப்படி
உத்தரவிடாது. கல்லூரி முதல்வர்கள்தான் இதில் முழுப்
பொறுப்பையும் ஏற்றுக் கொள்கிறார்கள். அவர்கள்தான் பொறுப்
பேற்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.
மாவட்ட அதிகாரிகளும், காவல் துறை அதிகாரிகளும்
அவர்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று உத்தரவிட்
டிருக்கிறோம். அரசாங்கக் கல்லூரி முதல்வர்களுக்கு கல்லூரி கல்வி
இயக்குனர் அனுமதி வழங்குகிறார்கள்.

தனியார் கல்லூரிகளுக்கு நாம் எந்தவிதமான உத்தரவும்
தருவதில்லை. விருத்தாசலத்திலே 3 நாட்கள் தொடர்ந்து
கல்லூரியை திறந்து வைத்துங்கூட மாணவர்கள் செல்லாத
காரணத்தால் நான்காம் நாள் மூடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.
விவேகானந்தா கல்லூரியிலே மாணவர்கள் வார்டன் அறைக்
குள்ளே நுழைந்து பொருள்களைச் சூறையாடிய காரணத்தால்
அதை மூடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அங்கே ஒரு
பன்னிரண்டு மாணவர்கள் தொடர்ந்து மன்னிப்புக் கோரி, சுமுக
மான சூழ்நிலை ஏற்பட்டதற்குப் பிறகு இப்போது தொடர்ந்து
நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஜெயின் கல்லூரி தொடர்ந்து
நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நந்தனம் கலைக் கல்லூரியும்,
சட்டப்படிப்புக் கல்லூரியும் இன்னும் திறக்கப்படாமல் இருக்
கின்றன.

(முற்பகல் 10-30)

நியூ காலேஜ்—
23-ம் தேதியில் இருந்து திறக்கிறார்கள். நியூ காலேஜ்—
புதிய கல்லூரி இடையில் மூடப்பட்டு இப்போது திறந்து நடை
பெற்றுவருகிறது. டாக்டர் அம்பேத்கார் கல்லூரி, கிருஸ்டியன்
கல்லூரி நடைபெறுகிறது. சிலபல கல்லூரிகளில் சுமுகமான
சூழ்நிலை ஏற்பட்டு அவை நடந்துவருகின்றன. என்ஜினியரிங்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 டிசம்பர் 21

கல்லூரியில் ஏற்படுகிற விபரீதத்திற்கு, சாதாரண நிலைமையை வைத்துக்கொண்டு கூட வருகிறார்கள் என்பதை ஒரு உதாரணம் மூலம் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். என்ஜினியரிங் கல்லூரி ஒரு நாள் மூடும் சூழ்நிலை ஏற்பட்டது. பிறகு தொழில் நுட்பக் கல்லூரி இயக்குநரும் கல்லூரி முதல்வரும் சேர்ந்து சமாதானம் ஏற்படுத்தினார்கள். பர்ஸ்ட் செமிஸ்டரில் உட்கார வைக்க இணங்கவில்லை. காரணம் அட்டென்ட்டென்ஸ் இல்லை. 68 நாட்களில் 51 நாட்கள் வரவேண்டும். பலபேர்கள் ஒரு நாள் வந்திருக்கிறார்கள். ஒரு மாணவர் ஒரு நாள் கூட வரவில்லை. ஒருவர் 4½ நாட்கள், ஒருவர் 5 நாட்கள் வந்திருக்கிறார்கள். 17 பேர்களை மறுபடியும் செமிஸ்டரில் எழுத உட்கார வற்புறுத்தும் போது கல்லூரி முதல்வரால் முடியவில்லை. மாணவர்கள் பிரதிநிதி களிடம் எடுத்துச் சொல்லியும் ஒரு நாள் வேலைநிறுத்தத்திற்குப் பிறகு தொடர்ந்து நடக்கிறது.

கல்லூரிகளை மூடுவதில் நாமும் கவலை கொள்கிறோம். 183 கல்லூரிகளில் 40 கலைக் கல்லூரிகள் மூடப்பட்டு, மற்றக் கல்லூரிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. இந்த ஆண்டு பட்டமளிப்பு விழாவில் முதல் பரிசுகள் 80 சதவீதம் பெற்றவர்கள் மாணவி யர்கள். மாணவியர்கள் கல்லூரிகள் எல்லாம் ஒழுங்காக நடை பெறுவதே அதற்குக் காரணம். அவர்கள் தேர்வில் சரியாக எழுது கிறார்கள். ஆங்காங்குள்ள நிலைமைகளைச் சரிப்படுத்த இந்தக் குழுக்கள் முயன்று வருகின்றன.

காவல் துறையினர் கல்லூரி முதல்வர்கள் வேண்டுகோள் விடுத் தால் தவிர கல்லூரிக் கட்டடத்திற்குள் போக வேண்டாம் என்று சொல்லியிருக்கிறோம். அவர்கள் வெளியிலிருந்து பாதுகாப்பு தருகிறார்கள். முதல்வர் விரும்பினால்தான் போகவேண்டும் என்று கண்டிப்பாக உத்தரவிட்டிருக்கிறோம். இரண்டு மூன்று நாட்கள் மூடப்பட்டு சிலபல கல்லூரிகள் திறக்கப்பட்டன. சில கல்லூரிகள் கிருஸ்துமஸ் லீவையும் சேர்த்து விட்டிருக்கிறார்கள். டிஸம்பரிலே எல்லாக் கல்லூரிகளுக்கும் விடுமுறை விட்டிருப்பார்கள். இதை சாக்காக வைத்து சிலர் சேர்த்து மூடிவிட்டார்கள். பொது மக்களும் ஒத்துழைக்க வேண்டும், பெற்றோர்களும் ஒத்துழைக்க வேண்டும், ஆசிரியப் பெருமக்களும் ஒத்துழைக்கவேண்டும். பாப்புலர் ப்ரொபஸர்ஸ் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும் என்று அந்தந்தக் கல்லூரிகளுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 டிசம்பர் 20

முடிந்த பிறகுதான் அந்த மேயர் திரும்ப வரலாம் என்று கொண்டு வந்திருப்பது அரசியல் காழ்ப்புணர்ச்சியை அல்லது தனிப்பட்டவர்களிடம் உள்ள விருப்பு வெறுப்பைப் பிரதி பலிப்பதாக இருக்கிறது. மதுரையில் தனிப்பட்டவர்களைப் பற்றிச் சொல்ல விரும்பவில்லை. எல்லா நகரசபை உறுப்பினர்களும் இன்னும் கொஞ்ச காலம் உறுப்பினர்களாக இருக்கலாம் என்று சொல்லிவிட்டு, மதுரை கார்ப்பரேஷன் மட்டும் என்ன பாவம் செய்தார்களோ தெரியவில்லை, அதை உடனடியாகக் கலைத்து, உடனே ஸ்பெஷல் ஆபீசரைப் போட்டது சரியான நடவடிக்கை இல்லை என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேமாதிரியாக சில விஷயங்கள் இந்தக் குறிப்பில் வந்திருக்கிறது. இன்றைக்குக் கூட கார்ப்பரேஷனிலே யார் யார் தேர்ந்தெடுக்கப்படக் கூடியவர்கள் என்று வரும்பொழுது பொதுத் துறையிலே பணியாற்றக் கூடியவர்களின் நிலைமை சிக்கலாகத் தான் இருக்கிறது. உதாரணமாக, ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் இருக்கிறது; இது தேசியமயமாக்கப்பட்ட பிறகு இதிலுள்ள உறுப்பினர்களின் நிலைமை என்ன? அல்லது புதிதாகத் துவக்கப்பட்டிருக்கும் சேரன் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் அல்லது பாண்டியன் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் அல்லது இம்மாதிரி கார்ப்பரேஷன்கள் வந்திருக்கின்றனவே அதிலுள்ள உறுப்பினர்களின் நிலைமை என்ன? இவர்களெல்லாம் போட்டி போடலாமா, முடியாதா என்பதைப் பற்றி ஏற்கனவே சர்ச்சையைக் கிளப்பி இருக்கிறோம். அதைப் பற்றி இன்றைக்குத் தெளிவு ஏற்படவில்லை.

இன்றைக்கு அரசாங்கத்தில் உத்தியோகஸ்தர்களாக இருப்பவர்கள் பல நகரசபைகளில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களெல்லாம் மீண்டும் போட்டி போட முடியுமா என்பது சந்தேகத்திற்குரிய விஷயமாக இருக்கிறது. அப்படிப்பட்ட விஷயங்களைப் பற்றியெல்லாம் இந்தத் திருத்தத்திலே எதுவும் கொண்டு வரப்படாமல் ஜனங்கள் மத்தியிலே இருக்கும் மிகமிக முக்கியமான பிரச்னையாக இருக்கும் இந்தத் தேர்தல் பிரச்னையை ஒத்திப் போட்டுக் கொண்டு வருகிறார்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 டிசம்பர் 21

கல்லூரியில் ஏற்படுகிற விபரீதத்திற்கு, சாதாரண நிலைமையை வைத்துக்கொண்டு கூட வருகிறார்கள் என்பதை ஒரு உதாரணம் மூலம் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். என்ஜினியரிங் கல்லூரி ஒரு நாள் மூடும் சூழ்நிலை ஏற்பட்டது. பிறகு தொழில் நுட்பக் கல்லூரி இயக்குநரும் கல்லூரி முதல்வரும் சேர்ந்து சமாதானம் ஏற்படுத்தினார்கள். பர்ஸ்ட் செமிஸ்டரில் உட்கார வைக்க இணங்கவில்லை. காரணம் அட்டென்ட்டென்ஸ் இல்லை. 68 நாட்களில் 51 நாட்கள் வரவேண்டும். பலபேர்கள் ஒரு நாள் வந்திருக்கிறார்கள். ஒரு மாணவர் ஒரு நாள் கூட வரவில்லை. ஒருவர் 4½ நாட்கள், ஒருவர் 5 நாட்கள் வந்திருக்கிறார்கள். 17 பேர்களை மறுபடியும் செமிஸ்டரில் எழுத உட்கார வற்புறுத்தும் போது கல்லூரி முதல்வரால் முடியவில்லை. மாணவர்கள் பிரதிநிதிகளிடம் எடுத்துச் சொல்லியும் ஒரு நாள் வேலைநிறுத்தத்திற்குப் பிறகு தொடர்ந்து நடக்கிறது.

கல்லூரிகளை மூடுவதில் நாமும் கவலை கொள்கிறோம். 183 கல்லூரிகளில் 40 கலைக் கல்லூரிகள் மூடப்பட்டு, மற்றக் கல்லூரிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. இந்த ஆண்டு பட்டமளிப்பு விழாவில் முதல் பரிசுகள் 80 சதவிதம் பெற்றவர்கள் மாணவியர்கள். மாணவியர்கள் கல்லூரிகள் எல்லாம் ஒழுங்காக நடைபெறுவதே அதற்குக் காரணம். அவர்கள் தேர்வில் சரியாக எழுதுகிறார்கள். ஆங்காங்குள்ள நிலைமைகளைச் சரிப்படுத்த இந்தக் குழுக்கள் முயன்று வருகின்றன.

காவல் துறையினர் கல்லூரி முதல்வர்கள் வேண்டுகோள் விடுத்தால் தவிர கல்லூரிக் கட்டடத்திற்குள் போக வேண்டாம் என்று சொல்லியிருக்கிறோம். அவர்கள் வெளியிலிருந்து பாதுகாப்பு தருகிறார்கள். முதல்வர் விரும்பினால்தான் போகவேண்டும் என்று கண்டிப்பாக உத்தரவிட்டிருக்கிறோம். இரண்டு மூன்று நாட்கள் மூடப்பட்டு சிலபல கல்லூரிகள் திறக்கப்பட்டன. சில கல்லூரிகள் கிருஸ்துமஸ் லீவையும் சேர்த்து விட்டிருக்கிறார்கள். டிஸம்பரிலே எல்லாக் கல்லூரிகளுக்கும் விடுமுறை விட்டிருப்பார்கள். இதை சாக்காக வைத்து சிலர் சேர்த்து மூடிவிட்டார்கள். பொது மக்களும் ஒத்துழைக்க வேண்டும், பெற்றோர்களும் ஒத்துழைக்க வேண்டும், ஆசிரியப் பெருமக்களும் ஒத்துழைக்கவேண்டும். பாப்புலர் ப்ரொபஸர்ஸ் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும் என்று அந்தந்தக் கல்லூரிகளுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.



1974 டிசம்பர் 21] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

சட்டக் கல்லூரி பற்றி திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கூறினார்கள். வருந்தத்தக்க நிகழ்ச்சிதான். இரண்டு கூட்டணிகளாகப் பிரிந்து, தேர்தல் தகராறு ஏற்பட்டு, தேர்தல் நடந்து கொண்டிருக்கும்போது தேர்வுப் பெட்டியை எடுத்துக் கொண்டு போய் தகராறு ஏற்பட்டு, ஒரு குழுவினர் நாங்கள் வெற்றி பெற்றோம் என்று தெரிவிக்கவேண்டும் என்று சொல்லி இரவு 2.30 மணி வரையில் கல்லூரி முதல்வரை கெரோ செய்யும் அளவிற்கு வந்து, போலீஸார் வந்து அவர்களை அகற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது. கல்லூரி மூடப்பட்டது. மூன்று தடவை மூடி, மூடி திறந்துவிட்டார்கள்.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் அங்குள்ள படங்கள் அகற்றப்படும் நிலை ஏற்பட்டதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். பெருந்தலைவர்கள் படங்களை, அவர்கள் யாராக இருந்தாலும், மதிக்கவேண்டிய தலைவர்களை, மதித்து தலைவர்களின் படங்களைத் திறந்து வைக்கிறோம். சட்டக் கல்லூரி மாணவர்களே இப்படிச் செய்கிறார்களே என்று எல்லோருக்கும் வருத்தம் ஏற்படுகிறது. எந்தக் கட்சித் தலைவராக இருந்தாலும், எல்லாக் கட்சித் தலைவர்களும், அந்தந்தக் காலத்தில் திறக்கப்பட்ட படங்களை எல்லாம் அகற்றுவது என்பது ஆகாத ஒன்று. அகற்றப்பட்ட படங்கள் எந்தளவிற்கு இருந்தனவோ, அவற்றை எழுதியவர்களிடமே கொடுத்து, ஒரு படத்திற்கு ரூ. 2,000, ரூ 2,500 ஆகும் என்று சொன்னார்கள், பரவாயில்லை என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தப் படங்களை அதே அளவில் இருக்க வேண்டும் என்று, அந்தச் செலவை கல்லூரியே ஏற்றுக்கொள்ளும் என்ற வாக்குறுதியை அளித்துள்ளார்கள்.

ஒரு கூட்டத்தினர் தேர்தல் நடத்த வேண்டும் என்று சொல்கிறார்கள். ஒரு கூட்டத்தினர் தேர்தல் நடத்தக் கூடாது என்று சொல்கிறார்கள். சட்டப்படி பார்த்தால் தேர்தல் நடத்தவேண்டும் என்பதுதான் உண்மை. தேர்தலை நடத்திவிட்டுத்தான் கல்லூரியைத் திறக்கவேண்டும் என்று சொல்வது சரியல்ல. தேர்தலுக்கு தேதி அறிவித்துவிட்டுத்தான் கல்லூரியைத் திறக்கவேண்டும் என்று சொல்வதும் சரியல்ல. இரண்டு கோஷ்டியினரையும் கூப்பிட்டுப் பேசி பிறகு தேதி வைக்கலாம். இப்போது கல்லூரி திறக்கட்டும். மாணவர்கள் எல்லோரும் கல்லூரிக்கு வரட்டும். பிறகு தேதி வைக்கலாம். சேர்ந்து பேசி தேதி வைக்கலாம்.

அகற்றப்பட்ட படங்கள் மீண்டும் வைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறோம். இந்த அடிப்படையில் பேச முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். என்னிடம் வந்தபோதும் சொல்லியிருக்கிறேன். பல்கலைக்கழக துணைவேந்தர் பொறுப் பேற்றுக்கொள்ள வேண்டும். ஒரு விழாவில் நம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பொறுப்புகளை அரசியல்வாதிகள், அரசியலில் ஈடுபட்டிருக்கிற நாங்கள் வந்து தீர்ப்பதைவிட பல்கலைக்கழக துணை வேந்தர் பொறுப்பேற்று ஆங்காங்குள்ள கல்லூரிகளில் சுமுகமான சூழ்நிலை இருக்கச் செய்யவேண்டும் என்று ஒரு பொது நிகழ்ச்சியில் நமது மாண்புமிகு முதல்வர் அவர்களே சென்னைப் பல்கலைக்கழக துணை வேந்தர் அவர்களை கேட்டுக்கொண்டார்கள்.

விரைவில் சுமுகமான முடிவு ஏற்படும். படங்கள் மீண்டும் திறக்கப்படும். தேர்தல் கட்டாயம் நடைபெறும். தேர்தல் தேதியை உடனடியாக அறிவிப்பதை விட தேதியை பின்னால் அறிவிக்கலாம். முதலில் கல்லூரி திறக்கட்டும் என்று கல்லூரி முதல்வரிடம் சொல்லியிருக்கிறோம். விரைவில் முடிவு ஏற்படும் என்று நம்புகிறோம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கூறியுள்ள கருத்துக்களை ஆலோசித்து நடைமுறைப்படுத்தும்போது வீட்டில் இருக்கிற பிள்ளைகள் படிக்கமுடியாத அளவிற்கு காலம் மாறியிருக்கிறது, அந்த அளவிற்கு நிலைமை இருக்கிறது என்பதை நாம் காண்கிறோம். ஆசிரியர்களிடம் மாணவர்கள் போய் இருப்பது நான்கு மணி நேரம்தான். நான்கு மணி நேரந்தான் ஆசிரியர்களிடம் மாணவர்கள் இருக்கிறார்கள். வீட்டில் 12 மணி நேரம் கெடுத்துத் தான் அனுப்புகிறார்களே தவிர ஆசிரியர்கள் ஆரம்பத்தில் இருந்து தொடங்க வேண்டியிருக்கிறது.

மாணவர்களில் 90 சதவீதம் மாணவர்கள் படிக்கவேண்டும் என்பதில் அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கல்லூரி நடக்கவேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். 90 போக மீதி பத்து பேர்களை எடுத்துக்கொண்டால், அதாவது 10 சதவீதம், தனித்தனியாகப் பார்க்கும்போது மாணவர் ஒவ்வொருவரும் தங்கக் கம்பிகளாகத்தான் இருக்கிறார்கள். அது, தனித்தனியாகப் பார்க்கும்போது, அவர்கள் ஒன்று சேரும்போது எங்கிருந்து அவர்களுக்கு அசாத்தியமான தைரியம் வருகிறது என்று புரியவில்லை.





கல்லூரிகள் நன்கு நடைபெற மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். (குறுக்கீடு). ஒரு மாணவருக்கும் ஒரு பஸ் தொழிலாளருக்கும் இடையே தகராறு ஏற்பட்டால் அந்த அளவோடு பிரச்னையைத் தீர்க்கிற அளவிற்கு இருந்தால் நல்லது. ஜாதிப் பிரச்னையாக மாணவர்கள் ஒரு பக்கம்; பஸ் தொழிலாளர்கள் ஒரு பக்கம் என்று வருகிறது. பத்தாயிரக்கணக்கானவர்கள் நடமாடும் இடத்தில் இங்கு ஒருவர் அங்கு ஒருவர் என்று தகராறு ஏற்படும்போது ஒரு குப்புசாமிக்கும் குமாரசாமிக்கும் ஏற்படுகிற தகராறு மாணவர் உலகத்திற்கும் தொழிலாளர் உலகத்திற்கும் ஏற்படுகிற தகராறாக ஆகி ஒரு பாவமும் அறியாதவர்கள்—மவுண்ட் ரோடில் ஒரு தகராறு என்றால் சைனா பஜாரில் இருப்பவர்கள் அடித்துக் கொள்கிறார்கள். தென் சென்னையில் ஒரு பஸ் நின்றுவிட்டது என்றால் வட சென்னையிலும் பஸ்கள் நின்றுவிடுகின்றன. பல மாணவர்களுக்கு ஸ்ட்ரைக் எதற்காக ஆரம்பிக்கப்பட்டது என்று தெரியாமல் கோட்டைக்கு வந்துவிடுகிறார்கள். என்ன என்று கேட்டால் அவர்கள் கூப்பிட்டார்கள், வந்தோம் என்று சொல்கிறார்கள். பிறகு விளக்குகிறோம் என்று சொன்னதாகச் சொல்கிறார்கள். கூடுமான வரையில் நாங்கள் அறிவுரைகள் வழங்குகிறோம். இந்த முக்கூட்டுக் கழகம் ஒவ்வொரு கல்லூரியிலும் இருந்தால் பிரச்னைகளில் பாதி அங்கேயே தீர்த்துவிடும். ஆக, இதுகுறித்து அவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்று கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விரிவான விளக்கத்திற்குப் பிறகு இதை அனுமதிக்க வேண்டிய தேவையில்லை என்பதால் அனுமதி மறுக்கிறேன்.

### (இ) இந்துக் கடவுளர் உருவச்சிலைகளை எரிப்பதாக திராவிடர் கழகம் எடுத்துள்ள முடிவு குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. கந்தசாமி, திருமதி த. ந. அனந்தநாயகி இருவரும்

" the decision of the Dravida Kazhagam to burn the effigies of the Hindu Gods Sri Rama, Sri Sitha and Lakshmana on the 25th of this month at Madras, is a deliberate and pre-planned act done only with a view to insult the vast majority of Hindu

community. This decision has been published in the daily paper " Tamil Murasu ", dated 17th December 1974 and has caused much distress and restlessness amongst lakhs and lakhs of Hindus which is very likely to affect communal amity and law and order in the State ".

என்ற பொருள்பற்றி விவாதிக்க வேண்டும் என்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி பேரவையை ஒத்திவைக்க வேண்டிய அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை சுருக்கமாகக் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** கனம் சபாநாயகர் அவர்களே, 25-ம் தேதி திராவிடக் கழகத்தினர் இராமர், லஷ்மணர், சீதை ஆகியோருடைய உருவச் சிலைகளைச் செய்து, அவைகளைப் பொது இடத்தில் எரிக்கப்போவதாக ஒரு போராட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். இராமாயணம், மகாபாரதம் இரண்டுமே இந்துக்களால் தொன்று தொட்டு மதிக்கப்பட்டு வருகின்ற அரும்பெரும் காவியங்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. திராவிடக் கழகத்தினர் இன்று அல்ல, தொன்று தொட்டு இப்படிப்பட்ட பல நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார்கள். தமிழகத்தில் இந்துக்களுடைய உணர்ச்சியை புண்படுத்துவதாக இது அமையும். தமிழகத்தில் மட்டுமல்ல, அகில இந்தியாவிலுமே உள்ள இந்துக்களின் மனதை புண்படுத்தும். அவர்களுடைய உணர்ச்சி பாதிக்கப்படும். தமிழகத்தில் இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடந்தால் அது இந்துக்களை புண்படுத்தும் என்பது அரசுக்குத் தெரியும். காரணம், முன்பு கூட கடவுளர்கள் சிலரை அநாகரிகமாக சித்தரித்து ஊர்வலம் நடத்தினார்கள். இன்றைக்கு இருக்கக்கூடிய அரசு இம்மாதிரி நடக்காமல் பாதுகாப்பு கொடுக்க வேண்டிய பொறுப்பை ஏற்றிருக்கிறது. அறநிலையத்துக்கு என்று ஒரு அமைச்சர் இருக்கிறார். அதற்காக ஒரு தனி இலாகாவே இருக்கிறது. அப்படியிருக்கும் பொழுது இப்படி இந்துக்களினுடைய மனதைப் புண்படுத்தக் கூடிய அளவிலே, உணர்ச்சிகளை கிளப்பிவிடக்கூடிய அளவிலே பகுத்தறிவாளர்கள் என்ற போர்வையிலே இராமன், லஷ்மணன், சீதை ஆகியோர்களுடைய உருவங்களைச் செய்து ஊர்வலம் நடத்தி, ஆபாசக் கோஷங்களை எழுப்பி போராட்டம் நடத்தினால், அது உண்மையிலேயே மத உணர்ச்சியை வெகு வேகமாக பாதிக்கும். வெறி உணர்ச்சியை ஒரு பக்கத்தில் கிளப்பிவிடவும் செய்யும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



மதச் சார்பற்ற அரசு என்றால், ஒரு மதத்தினர் மனது புண்படுவதை அரசு பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எந்த மதத்தினராக இருந்தாலும் அவர்களுடைய மனது புண்படக்கூடிய, அவர்களுடைய மத உணர்ச்சிகளை தூண்டிவிடக்கூடிய அளவிலே நிகழ்ச்சிகள் நடத்தப்படக்கூடாது என்பதில் அரசு அக்கறை காட்டுவது மிக, மிக அவசியம். இதைப் போன்ற பிற மதத்தினர்கள் மனம் புண்படக்கூடிய நிகழ்ச்சிகள் நடந்தாலும் அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடக்காவண்ணம் பாதுகாக்க வேண்டியது அரசின் பொறுப்பும் கடமையுமாகும். மதத்தை நம்புபவர்கள் சிலர் இருக்கலாம். மதத்தை நம்பாதவர்கள் சிலர் இருக்கலாம். மதத்தில் நம்பிக்கை இல்லை என்று சொல்பவர்கள் மதத்தை நம்புகின்றவர்களின் மனதைப் புண்படுத்துகிற அளவுக்கு நிகழ்ச்சிகளை நடத்தக்கூடாது. அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடக்காவண்ணம் பாதுகாக்க வேண்டியது அரசின் கடமையாகும்.

கடவுளர்களை அவமானப்படுத்துகின்ற அளவுக்கு போராட்டம் நடத்துவதை அரசு தடுத்து நிறுத்தவேண்டும். அதனால் நாட்டினுடைய அமைதி குலையக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிடக்கூடும். ஆகவே, இந்த அரசு உடனடியாக இது சம்பந்தமாக தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும். மதத்தில் நம்பிக்கை கொண்டவர்களின் உணர்ச்சிகளை புண்படுத்தாமல் பாதுகாக்க வேண்டும், அந்தப் பொறுப்பு அரசுக்கு இருக்கிறது என்ற காரணத்தினால், அந்தப் போராட்டத்தை நடத்தவிடாமல் தடுப்பதற்கு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் அரசு எடுக்க வேண்டும், அது பற்றி விவாதிப்பதற்கு இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, வருகின்ற 25-ம் தேதியன்று திராவிடக் கழகத்தினர் பெரியார் திடலில் இராமர், சீதை, இலக்குமணர் ஆகியோர்களுடைய உருவங்களுக்கு தீயிடுவதாக அறிவித்திருக்கிறார்கள், அந்த அறிவிப்பை ஒட்டி அம்மையார் அவர்கள் ஒரு ஒத்திவைப்பு தீர்மானம் கொண்டுவந்து அதன்பேரில் தன்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களே குறிப்பிட்டார்கள், இன்று நேற்று அல்ல, திராவிடக் கழகத்தினர் பல ஆண்டு காலமாகவே அப்படிப்பட்ட செயல்களைச் செய்து வருகிறார்கள் என்று. [illegible]

ஆண்டு இராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் பெரியார் அவர்கள், இன்றைக்கு அறிவித்திருப்பதைப் போல ஒரு இடத்தில் அல்ல, தமிழ் நாடு முழுவதும் பல்வேறு இடங்களில், இன்று அறிவித்திருப்பதைப் போல தனிப்பட்ட ஒரு இடத்திற்குள்ளே அல்ல, பகிரங்கமாக வீதிகளிலும் தெருக்களிலும் பிள்ளையார் சிலையை உடைப்பது என்று திட்டமிட்டு, அப்படி சிலைகள் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் உடைக்கப்பட்டன. அப்பொழுது இராஜாஜி அவர்கள் அதுபற்றி எந்தவிதமான நடவடிக்கையும் சட்டப்படி எடுக்கவில்லை. அப்படி சிலைகளை உடைத்த இடங்களிலும் யாரும் உடைத்த காரணத்திற்காக கைது செய்யப்படவும் இல்லை. அவர்கள் அந்தப் பிரச்சினையை அலட்சியப் படுத்துவது தான் சிறந்தது என்ற வகையில் ஒரு.கொள்கையை வகுத்து தீவிரமான நடவடிக்கை எதுவும் எடுக்காமலேயே விட்டு விட்டார்கள்.

ஆகவே, இவைகள் பல ஆண்டுகளாகவே திராவிட கழகத்தின் சார்பில் அவர்களுடைய கொள்கைக்கு ஏற்ப நடைபெற்று வருகின்ற சம்பவங்களாகும். ஆனாலும், இவை காரணமாக மற்றவர்களுடைய மனம் புண்படுகிறது என்ற நேரத்திலும், இவற்றின் விளைவுகள் வேறு வகையிலே விபரீதமாக ஆகிவிடக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற நேரத்திலும் இந்த அரசு தலையிட்டு, சட்டம், ஒழுங்கு, அமைதி இவைகளை காப்பாற்றுகின்ற பொறுப்பினை நிச்சயம் ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும். அதை நான் தட்டிக் கழிக்க விரும்பவில்லை.

இதிலே ஒன்றை நாம் மறந்துவிடக் கூடாது. இன்றைக்கு திராவிடக் கழகம் நடத்துகின்ற இராவண லீலா எப்படி உருவாயிற்று என்றால் வடக்கே இராம லீலா நடத்தப்படுவதன் எதிரொலியாகத்தான் இராவண லீலா இங்கே நடத்தப்படுகிறது. அங்கே இராம லீலா நடத்தப்படுகின்ற இடங்களுக்கு நாட்டுப் பிரதமர், மத்திய அமைச்சர்கள் இவர்களெல்லாம் செல்வதும், அந்த இராம லீலா உற்சவத்தில் இராவணன், கும்பகர்ணன், மேகநாதன் ஆகியோர்களுடைய உருவங்களை அவர்கள் எரிப்பதை இவர்கள் கண்டு ரசிப்பதும், தமிழகத்தில் இராவணன் ஒரு தமிழன், இராவணன் ஒரு திராவிடன் என்ற வகையிலே உருவாக்கப்பட்டிருக்கிற வரலாற்று அடிப்படையில் அவரைப் போற்றிக்





கொண்டிருக்கிற பகுத்தறிவாளர்களின் வரலாற்று அணியை ஒப்புக்கொண்டிருக்கிற திராவிடக் கழகத்தினரிடத்தில் ஒரு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

அதன் காரணமாகத் தான் இன்றைய திராவிடக் கழகத் தலைவராக விளங்குகிற மணியம்மையார் இந்தியப் பிரதமருக்கு இது குறித்து ஒரு கடிதம் எழுதி, அதிலே தாங்கள் இங்கே பதிலுக்கு இராவண லீலா நடத்தவேண்டியிருக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கு மதிப்பு மிகுந்த இந்திரா காந்தி அவர்கள் எழுதிய பதில் கடிதத்தில்—அந்தக் கடிதம் எல்லா பத்திரிகைகளிலும் வெளியாகியிருக்கிறது—நாட்டினுடைய பொருளாதார நிலைமைகளை நாம் இன்றைக்கு கவனிக்க வேண்டுமே அல்லாமல், இப்படிப்பட்ட காரியங்களில் நம்முடைய சிந்தனையை செலவிடக்கூடாது' என்று குறிப்பிட்டார்கள். பிரதமரின் அறிவுரை சிலாக்கியமான அறிவுரை தான். ஆனால் இராவண லீலா நடத்துபவர்களுக்கு மாத்திரம் பொருந்துகிற அறிவுரை அல்ல, இராம லீலா நடத்துகிறவர்களுக்கும் சேர்த்துத் தான் இந்த அறிவுரை பொருந்தும் என்பதனை நாம் மறந்துவிட இயலாது. இராவணன் ஒரு திராவிடன், தமிழன் என்ற அளவிலே வரலாறு இருக்கிறது.

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் எழுதிய உலக சரித்திரம் என்ற நூலில் அவர் தன்னுடைய மகளுக்கு எழுதிய கடிதத்தில், பிரியதரிசினி என்ற தலைப்பிட்டு எழுதிய கடிதத்தில் இராமாயணம் ஆரிய திராவிட போராட்டத்தை அடிப்படையாகக் கொண்ட கதை தான் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு நாம் ஏற்றுக் கொண்டிருக்கிற இராமன் கடவுளா அல்லது ஒரு கதாபாத்திரமா என்கின்ற சர்ச்சை முடிந்தபாடில்லை. வால்மீகி எழுதிய இராமன் கடவுளாக சித்தரிக்கப்படவில்லை. இன்னும் தமிழ் பண்பாட்டிற்கு ஏற்றவகையில் கம்பன் இராமனை ஒரு கதாபாத்திரமாகத் தான் உருவாக்கியிருக்கிறான். இந்த ஆராய்ச்சி இன்னும் முடியவில்லை. இந்த ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்பொழுது பிரச்சினை என்னவென்றால் இராவணனை அங்கே கொளுத்துவதன் மூலமாக இராவணனிடம் அன்பு கொண்டிருக்கிற ஒரு சாராரை பகுத்தறிவாளர்களை அது புண்படுத்துகிறது என்பதனால் பல ஆண்டுகள் வேண்டுகோள் விடுத்தும், இராம லீலா தொடர்வதன்

காரணமாக இராவண லீலா நடத்தும் முயற்சியை இவர்கள் இங்கே மேற்கொண்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட முயற்சிகளை மேற்கொண்டதன் மூலம் 'எங்களுடைய வெறுப்பை' முழு அளவில் காட்டிவிட்டோம்' என்பதனை திராவிடக் கழகம் உணர்த்திவிட்டது. இந்த உணர்வுகளை இந்த உருவங்களைக் கொளுத்தித்தான் காட்டவேண்டும் என்பதல்ல. இப்படிப்பட்ட எதிர்ப்பு தமிழகத்தில் உருவாகியிருக்கிறது என்பதைக் கருதி, வடபுலத்தில் நடைபெறுகிற இராமலீலாவை அடுத்த ஆண்டிலாவது நிறுத்துவதற்கு மத்தியில் உள்ளவர்கள் முயற்சி எடுப்பார்கள் என்று நம்புகிறேன். அவர்கள் அதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும். இல்லாவிட்டால் போட்டா போட்டியைப் போல நடந்து, சட்டம், ஒழுங்கு, அமைதி பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை உருவாகும். ஆகவே, மத்திய அரசு இதில் தலையிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிற பொறுப்பையும் தமிழக அரசு ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கிறது. இந்த வாக்குறுதியின் அடிப்படையில் 25-ந்தேதி திராவிடக் கழகம் நடத்த இருக்கின்ற. இராமர், இலக்குமணர், சீதை ஆகியவர்களுடைய உருவங்களை எரிக்கின்ற இந்தக் காரியத்தை கைவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு வேளை அதைக் கைவிட மறுத்தால் அதன் காரணமாக எழக்கூடிய விளைவுகளுக்கு அரசுதான் பொறுப்பு என்கின்ற வகையில் சட்டப்படி அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும் என்பதனையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். எப்படி பக்தர்களின் மனது புண்படக்கூடாது என்பதில் அக்கறை செலுத்துகிறோமோ அதைப்போலவே பகுத்தறிவாளர்களுடைய மனமும் புண்படக்கூடாது என்பதிலும் அனைவரும் அக்கறை செலுத்தவேண்டும் என்பதை எடுத்துச் சொல்லி, நான் கொடுத்த விளக்கத்திற்குப் பின்பும், வேண்டுகோளுக்குப் பின்பும் இந்தக் காரியங்கள் கைவிடப்படாமல் நிறைவேற்றப்படுமானால், அதன் விளைவுகளின் அடிப்படையில் தக்க நடவடிக்கைகளை எடுக்க அரசு தயங்காது. ஆகவே, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்குப் பிறகு இதற்கு அனுமதி தர தேவையில்லை என்று கருதுகிறேன்.





## (4) கவன ஈர்ப்பு.

### (அ) மதுரை அரசினர் மருத்துவமனை சவக் கிடங்கில் பல சவங்கள் கேட்பாரற்று கிடபபதாக வந்த செய்தி குறித்து.

**டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவரவர்களே, மதுரை அரசினர் மருத்துவமனை சவக் கிடங்கில் 200 குழந்தைகள் பிணங்களும், 16 பெரியவர்கள் பிணங்களும் கடந்த 30 நாட்களாக கேட்பாரற்று உள்ளதென்பதுபற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, டாக்டர் ஹண்டே அவர்கள் எழுப்பிய பிரச்னை பற்றி எனக்குக் கிடைத்த சில தகவல்களை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மதுரை அரசினர் மருத்துவமனை சவக் கிடங்கில் 200 குழந்தைகளின் பிணங்களும், 16 பெரியவர்களின் பிணங்களும் கடந்த 30 நாட்களாக கேட்பாரற்று இருப்பதாக கூறப்பட்ட பத்திரிகை செய்தி உண்மை அல்ல. மேலும் 1—12—1974 மதுரை மாலை முரசில் அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனை பிணக் கிடங்கில் 116 ஆண், பெண், குழந்தைகள் ஆகியோரது பிணங்கள் இருப்பதாக வெளியிடப்பட்ட அந்தச் செய்தியும் உண்மை அல்ல.

1974 நவம்பர் 20, 21, 22 ஆகிய தேதிகளில் 22 பெரியவர்களின் பிணங்களும், 50 குழந்தைகளின் பிணங்களும் ஆக மொத்தம் 72 பிணங்கள் இருந்தன. குழந்தைகளுக்காக தனிப் பிணக் கிடங்கு கிடையாது. பெரியவர்களின் அந்த உடல்களோடு குழந்தைகளின் உடல்களையும் வைக்கத்தான் அங்கே ஏற்பாடாகி உள்ளது. குறிப்பிட்ட 72 பிணங்கள் நவம்பர் 20, 21, 22 ஆகிய தேதிகளில் பிணக் கிடங்கின் உள்ளே வைக்கப்பட்டிருக்கின்றன. பிணக் கிடங்கில் கேட்பாரற்ற நிலையில் கிடந்தன என்று சொல்வது தவறு. ஒவ்வொரு பிணத்திற்கும் தனி சீட்டும் தனி இடமும் சொந்தக்காரர்களின் குறிப்புகளும் பதிவு செய்யப்பட்டுள்ளது. உறவினர்களால் கேட்டுப் பெறப்படாத பிணங்களை 22—11—1974 அன்று மாநகராட்சியினர் எடுத்துச் சென்று புதைத்து இருக்கிறார்கள். ஆகவே இதில் கேட்பாரற்றுக் கிடந்தன என்பதற்கோ, மிகுந்த காலதாமதம் ஏற்பட்டது என்பதற்கோ இடமில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. க. அன்பழகன்] [1974 டிசம்பர் 21

1973 ஆம் ஆண்டில் அரசு, மற்றும் தனியார் மருத்துவமனைகளில் தியாமின் ஹைட்ரோ குளோரைடு (Thiamine Hydrochloride), டைக்ரிஸ்டிசன் (Dicrysticin), போர்டிபைடு புரோகெயின் பெனிசிலின் (Fortified Procaine Penicillin), ஏ. டி. எஸ். புரோபிலாக்டிக் (A.T.S. Prophylactic) மற்றும் விடமின் பி1, பி6, பி 12 (Vitamin B1, B6 and B12) ஊசி மருந்துகளை உபயோகித்ததின் காரணமாக அறுவர் இறந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மரணங்களுக்கு அதிர்ச்சியால் ஏற்பட்ட எதிர்விளைவுகள் காரணமாக இருக்கக்கூடுமென அறிவிக்கப்பட்டது. ஏனென்றால் இது சம்பந்தமாக உபயோகிக்கப்பட்ட மருந்துகளைப் பகுத்தாய்ந்ததில் அவை தரமானவையே என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

1974-ஆம் ஆண்டில் அரசு, மற்றும் தனியார் மருத்துவமனைகளில் புரோகெயின் பென்சிலின் (Procaine Penicillin), புரோகெயின் பென்சால் பெனிசிலின் (Procaine Benzyl Penicillin) ஏ.டி.எஸ். (A.T.S.), தியாமின் ஹைட்ரோ குளோரைடு (Thiamine Hydrochloride) மற்றும் டெக்ஸ்டுரோஸ் (Dextrose), ஊசி மருந்துகளை உபயோகித்ததின் காரணமாக 11 பேர் இறந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்களில் பதின்மர் அதிர்ச்சியின் எதிர்விளைவு காரணமாக இறந்ததாகக் கருதப்படுகிறது. டெக்ஸ்டுரோஸ் ஊசி மருந்து குத்தப்பட்ட மற்றுமொருவர் இறந்ததற்கு அம்மருந்துதான் காரணமென்று கூறமுடியாது. இவர்கள் சம்பந்தமாக உபயோகிக்கப்பட்ட ஊசி மருந்துகளைப் பகுத்தாய்ந்ததில், 4 பேருக்கு உபயோகித்த மருந்துகள் தரமானவையே என நிரூபிக்கப்பட்டுள்ளன. மற்றமுள்ள எழு பேருக்கு உபயோகித்த மருந்துகள் சம்பந்தமான பகுத்தாய்வு அறிக்கைகள் இன்னும் எதிர்பார்க்கப்படுகின்றன. இவை தவிர 1974-ஆம் ஆண்டில் மேலும் ஒருவர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்படும் வழியில் சியானோகோபால்மின் (Cyanocobalamin) ஊசி மருந்து போட்டதன் காரணமாக ஏற்பட்ட அதிர்ச்சியின் எதிர்விளைவால் இறந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தப்பட்ட ஊசி மருந்தின் பகுப்பாய்வு அறிக்கை இன்னும் எதிர்பார்க்கப்படுகிறது.



1974 டிசம்பர் 21] [திரு. க. அன்பழகன்]

எதிர்விளைவின் காரணம் மருந்துகளின் தரக் குறைவு அல்ல. நோயாளிக்கு அம்மருந்து ஏற்புடையதாகாமையே வழக்கமான அதன் காரணமாக உள்ளது. ஒரு நோயாளிக்கு ஒரு மருந்து ஏற்புடையதாக இல்லாததால், அம்மருந்தை அந்நோயாளிக்கு ஊசிமூலம் உட்செலுத்தும்போது அவருக்கு உடனே அதிர்ச்சி ஏற்படுகின்றது. அது மரணத்திற்கும் வழிகோலுகிறது. பொதுவாக பெனிஸிலின் (Penicillin) விஷயத்தில் இது மிகப் பொருத்தமானதாகும். பெனிஸிலின் (Penicillin) ஏற்றுக் கொள்ளாமை பொதுவான ஒன்றாகவிருக்கிறது. இதுபோன்ற நிகழ்ச்சிகளை குறைக்கும் நோக்கத்துடன் பதிவு செய்யப்பட்ட மருத்துவர்களின் சீட்டுகளுக்கு மட்டும் பெனிஸிலின் களிம்பு (Penicillin Ointment) நோயாளிக்கு வழங்கப்படவேண்டும் என்று தமிழ்நாடு அரசு எடுத்தியம்பிய கருத்தினை இந்திய அரசு, இன்னும் பரிசீலித்து வருகின்றது. ஏனெனில் தொடர்ந்து பெனிஸிலின் (Penicillin) வெளி உபயோகத்திற்குப் பயன்படுத்துவது பெனிஸிலின் (Penicillin) மருந்து தரப்படுகிறபோது ஏற்றுக் கொள்ளாமைக்கு வழி வகுக்கின்றது வைட்டமின் பி1 (Vitamin B1) ஏ. டி. எஸ். (A.T.S.) போன்ற மருந்துகளாலும் எதிர்விளைவு ஏற்படுகின்றது. பொதுவாக மருந்து ஏற்றுக் கொள்ளாமை குறித்துத் தெரிந்துகொள்ள முதற்கண் சோதனை மருந்து கொடுக்கப்பட வேண்டும்.

இதுபோன்ற நேர்வுகளில் புலனாய்வு செய்யப்பட்ட எல்லா மருந்துகளின் தரத்திலும் குறை எதும் இல்லை, இருந்தபோதும் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக மாநிலம் முழுவதும் உள்ள இருப்பினை முறையிட்டு கிடைக்கப் பெற்றதும் உபயோகத்தினின்று உடனடியாக முடக்கி வைக்கப்படுகிறது. குறிப்பிட்ட மருந்தின் மாதிரி எடுக்கப்படுகிறது. அம் மருந்தின் பகுப்பாய்வு முடிவு கிடைக்கும் வரை அக்குறிப்பிட்ட மருந்துத் தொகுப்பின் உபயோகம் நிறுத்தப்படுகிறது. எந்த மாநிலங்களில் அம் மருந்துகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றதோ அம்மாநிலங்களின் மருந்துக் கட்டுப்பாடு அலுவலர்களுக்கு அந்த அறிவிப்பு உடனே கொடுக்கப்படுகிறது.

இந்த நேர்வுகள் யாவற்றிலும் கண்டறிந்த மிக முக்கியமான கூறு என்னவென்றால், ஒரு மருந்தினை பல நோயாளிகளுக்குக் கொடுத்தும் அம்மருந்தினால் எந்தவித எதிர்விளைவுகளும்

### (6) அறிக்கை அளித்தல்.

**அரிசன நலத் துறை, தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு வாரியம் ஆகியவை குறித்து மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகள்மீது அரசு எடுத்த நடவடிக்கை குறித்து அறிக்கைகள்.**

THIRU THOPPUR THIRUVENGADAM: Sir, I rise to present the 25th and 26th reports of the Committee on estimates on the action taken by the Government on the recommendations of the Committee contained in the reports on

(1) Harijan Welfare Department and

(2) Tamil Nadu Industrial Development Corporation.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது துணை மதிப்பீட்டின் மீது பொது விவாதம்.

### (7) நடைமுறைக் கேள்விகள்.

**(அ) கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப் படாதது குறித்து.**

**திரு. கே. என். குமாரசாமி:** சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். விதி 41-ன் கீழ் நான் 14-ந் தேதியே 3 தீர்மானங்கள் கொடுத்திருக்கி றேன். 20 தேதியான பிறகும் அவை இன்னும் எடுத்துக்கொள்ளப் படவில்லை என்றால் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் இந்த மன்றத்தில் பல முறை சொல்லியிருக்கிறேன். தீர்மானம் கொடுத்தது அல்லது அறிக்கை கொடுத்தது என்னவாயிற்று என்று என்னுடைய அறையிலே கேட்கவேண்டுமேயல்லாமல் இந்த அவையில் கேட்கக் கூடாது என்று பலமுறை சொல்லியிருக்கிறேன். உறுப்பினர்கள் கொடுக்கின்ற தீர்மானங்கள் சம்பந்தப்பட்ட துறைக்கு பதில் பெறுவதற்காக அனுப்பப்படுகின்றன. துறையிலிருந்து பதில் வந்ததும் அவையிலே எடுத்துக்கொள்கிறோம். எடுத்துக் கொள்வதில் தாமதம் ஏற்படுகிறது என்றால் சம்பந்தப்பட்ட துறையிலிருந்து பதில் வர தாமதமாகியிருக்கலாம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் கொடுத்த அறிக்கைகள் பற்றிய விபரங்களை அவையில் கேட்பது முறையல்ல.





### (8) 1974-75-ம் ஆண்டுக்கான செலவு குறித்த இரண்டாவது துணை நிதிக் கோரிக்கைகள் மீது பொது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று ஒரு மணிக்குள் விவாதம் முடிவுற வேண்டும். இன்னும் இருப்பது 2 மணி நேரம் தான். ஆனால் 15 உறுப்பினர்கள் பேசுவதற்கு பெயர் கொடுத் திருக்கிறார்கள். ஆகவே ஒவ்வொருவரும் 5 அல்லது 6 நிமிடங்களில் முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலில் திரு. துரை கோவிந்தராசன் அவர்கள்.

**திரு. துரை கோவிந்தராசன்:** பேரவைத் தலைவரவர்களே, இந்த மன்றத்தில் 1974-75-ம் ஆண்டுக்காக வைக்கப்பட்டிருக்கிற இரண்டாவது துணை மதிப்பீட்டில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்பு கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை பார்க்கிறபோது ஒவ்வொரு அம்சத்தின் வாரியாக பல்வேறு வகைகளுக்கு ஏறத்தாழ 13.43 கோடி ரூபாய் மொத்தம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அறிகி றேன். இருந்தாலும் இந்த மன்றத்தில் என்னுடைய தொகுதியைப் பொறுத்த மட்டில் கடந்த 4 ஆண்டுகளாக பல்வேறு திட்டங்கள் குறித்து எடுத்துச்சொல்லியும் இது வரையில் எந்தவிதமான ஒதுக்கீடும் என்னுடைய தொகுதிக்குக் கிடைக்கவில்லை என்ற பெரிய குற்றச்சாட்டை இந்த மன்றத்தின் முன் வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக பாசனத்திற்கு என்று இந்த துணை மதிப்பீட்டில் இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தாலும், இந்த இரண்டு கோடி ரூபாய்க்கான திட்டங்கள் இராமநாதபுரம், கோவை மாவட் டங்களில் உள்ள பல்வேறு ஏரி, குளங்கள் ஆழப்படுத்தப்படுவதற்கு என்ற அடிப்படையிலே இருந்தாலும், அதையெல்லாம் ஒருமுறை பாராட்டினாலும் கூட என்னுடைய தொகுதியைச் சேர்ந்த ரங்க சமுத்திரம் ஏரி, கட்டளைக்கால்வாய், முதலம்பட்டிவாரி, ஏரி போன்ற பல்வேறு திட்டங்கள் பலமுறை இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லப்பட்டிருந்தும் இதுவரையில் அவை இடம் பெறவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்வேறு திட்டங்களுக்குக் கோடிக்கணக்கில் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சி நிர்வாகத்திற்கு என்று கம்ப்யூட்டர் போன்ற நவீன இயந்திரங்கள் வாங்க 1,33,20,000 ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள் என்று சொன்னால், இன்றைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கும் இந்தத் திட்டத்தினால் அரசின் வேலைகள் விறுவிறுப்பாக நடைபெறும் என்ற கருத்தைக் கொண்டிருந்தாலும் இப்போதும் மாவட்ட நிர்வாகத்தில் ஈடுபட்டிருக்கிற 10 (1) என்ற விதியின் கீழ் பணியாற்றுகிற ஜூனியர் அசிஸ்டன்ட்கள் வேலையிழக்கக்கூடிய நிலைமை ஏற்படும். கம்ப்யூட்டர் போன்ற நவீன கருவிகள் கணக்காய்வு செய்யப்படுமானால் அவர்களிலே பலர் நிச்சயமாக வேலை இழக்கக்கூடிய நிலைமை ஏற்படும் என்பதை தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல. இந்திய துணைக் கண்டத்திலே எங்கும் இல்லாத அளவிற்கு திறமை வாய்ந்த காவல்துறை நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கிறது. இந்த காவல் துறைக்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கி, குறிப்பாக 'ஒயர்லெஸ்' என்று சொல்லப்படுகிற நுண்ணலை சாதனங்கள் வாங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதனால் விறுவிறுப்பாக வேலை செய்ய முடியும் என்று கருதப்படுகிறது. இதனால் உடனுக்குடன் மாவட்டங்களிலே இருக்கக்கூடிய காவல் துறை அலுவலகங்களுடன் தொடர்புகொண்டு, குற்றங்களை சுலபமாகக் கண்டுபிடிக்கலாம். ஆனால் அதையும் இப்போது காவல்துறையை ஆட்சியிலுள்ளவர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வதைப்போல தங்களுக்கே சொந்தமாக்கிக்கொள்ளாமல் இருக்க வேண்டும். ஆங்காங்கே இருக்கின்ற கள்ளக்கடத்தல்காரர்கள், கொள்ளைக்காரர்கள், குற்றவாளிகள் போன்றவர்களைக் கண்டுபிடித்து உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்காக இந்த முறையைப் பயன்படுத்தினால் நன்றாக இருக்கும். அதல்லாமல் ஆளும் கட்சிக்காரர்களுக்கு இப்போது சலுகை காட்டுவதைப்போல இந்த நவீன முறையினால் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டாலும், ஆளும் கட்சிக்குச் சாதகமாக நடந்துகொண்டால் இதனால் எந்தவிதமான பயனும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, "இருங்களத்துக் கணக்கப்பிள்ளை இருந்தும் கெடுத்தான், செத்தும் கெடுத்தான்" என்று ஒரு பழமொழி சொல்வார்கள். அதைபோல தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த





என்னுடைய கந்தர்வகோட்டை தொகுதி இருக்கிறது. இப்போது புதிதாக புதுக்கோட்டை மாவட்டம் அமைக்கப்பட்ட பின்னால், கந்தர்வக்கோட்டையை தஞ்சாவூரிலிருந்து பிரித்து, புதுக்கோட்டையுடன் சேர்த்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொகுதியைப் பிரித்து அமைப்பது எல்லாம் மத்திய அரசினுடைய வேலை; அது மாநில அரசு செய்வதில்லை.

**திரு. துரை கோவிந்தராசன்:** நான் அதைப்பற்றிச் சொல்லவில்லை. புதுக்கோட்டை மாவட்டத்தில் கந்தர்வகோட்டை சேர்க்கப்பட்டிருக்கிறது. கந்தர்வகோட்டை தஞ்சாவூர் மாவட்டத்தோடு இருந்தபோதிலும், 10 ஆண்டு காலமாக சொல்லப்பட்டுவந்த சில முக்கியமானத் திட்டங்கள் அங்கே நிறைவேற்றப்படவில்லை. எத்தனையோ முறைகள் இந்த மன்றத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக ரங்கசமுத்திரம் ஏரி, கட்டளைக் கால்வாய், முதலம்பட்டிவாரி ஏரிகளைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். இதுவரையிலும் அதற்கு ஒன்றும் செய்யப்படவில்லை. இந்த இரண்டாவது துணை மதிப்பீட்டிலும் அதற்கான நிதி ஒதுக்கம் எதுவும் செய்யப்படவில்லை. புதுக்கோட்டை மாவட்டத்துடன் சேர்க்கப்பட்ட பிறகாவது என்னுடைய தொகுதி நல்ல முன்னேற்றம் அடையும் என்று எதிர்பார்த்தேன். அந்த மாவட்டத்தோடு இந்தத் தொகுதி இணைக்கப்பட்ட பிறகும் இதற்கு ஏதாவது முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறதா, இந்தப் பகுதி மக்களின் முன்னேற்றத்திற்கு ஏதாவது திட்டங்கள் வழிவகை செய்யப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இதுவரை ஒன்றையும் காணோம். அந்தத் தொகுதி உறுப்பினர் எதிர்க்கட்சியில் இருக்கிற காரணத்தினால் தான் அந்தத் தொகுதி இதுபோல தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டுவருகிறது என்பதை இந்த நேரத்தில் என்னால் சொல்லாமல் இருக்க முடியாது.

மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் ஜனநாயக முறைப்படி நடந்துகொண்டிருக்கிறார், எல்லா சட்ட மன்ற உறுப்பினர்களும் ஒரே கருத்தோடு செயல்பட வேண்டுமென்ற அறிவுரையை அளிக்கிறார் என்றெல்லாம் சொல்கிற நேரத்தில் முதலமைச்சர் அவர்கள் மதுரையில் பொதுக்குழு, செயற்குழு கூட்டங்களை முடித்துக்

[திரு. துரை கோவிந்தராசன்] [1974 டிசம்பர் 21

கொண்டு வருகிறபோது எங்கள் பகுதியில் ஆடம்பரமான விழா ஒன்றினை அரிசன குடியிருப்பு திறப்பு விழா என்கிற முறையில் அதிகாரிகளைக்கொண்டு ஏற்பாடு செய்து அதில் அவர்கள் வந்து கலந்துகொண்டார்கள். இந்த விழாவுக்கு அந்தத் தொகுதி உறுப்பினர் என்ற முறையில் அதிகாரிகளாவது எனக்கு அழைப்பு அனுப்பினார்களா என்றால் இல்லை. முதலமைச்சராவது அதைப் பற்றிச் சொன்னாரா என்றால் இல்லை. இப்படி அரசாங்க செலவில் நடத்தப்படுகிற ஒரு விழாவுக்கு அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினருக்கே அழைப்பில்லை என்றால், இதுபோன்ற நிகழ்ச்சி உண்மையாக ஜனநாயகத்திற்கு ஒத்தது அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து எனது தாழ்மையான வேண்டுகோள் நமது முதலமைச்சர் அவர்கள் 1962 ஆம் ஆண்டு தஞ்சையில் தேர்தலுக்கு நின்ற நேரத்தில் தென்னங்குடி பனங்குடியை இணைக்கிற பாலத்தைத் தாம் வந்தால் கட்டித்தருவதாக வாக்குறுதி அளித்திருப்பதாக அங்குள்ளவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சர் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த போதும் அந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. இன்றைக்கு முதலமைச்சராகவே இருக்கிறபோதாவது அந்த வாக்குறுதியை நிறைவேற்றித் தருவார்கள் என்று அந்தப் பகுதி மக்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நம்பிக்கையாவது வீணாகாதிருக்க முதலமைச்சர் அவர்கள் தாம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையில் சமர்ப்பித்திருக்கிற இரண்டாவது துணை மானிய அறிக்கையின் மீது என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

முதலமைச்சர் அவர்கள் இந்த அரசாங்கத்தின் சார்பில் சில நல்ல திட்டங்களை இங்கே கொண்டுவந்திருக்கிறார்கள். மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் முன்மாதிரியாகக் கூட பல காரியங்கள் இங்கே செய்யப்பட்டு வருகின்றன என்பதை எல்லோரும் நன்கு அறிவார்கள். அதைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. எனது பகுதியில் இருக்கக்கூடிய பிரச்னைகளைப்பற்றி மட்டும் முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு சுட்டிக்காட்ட இதை வாய்ப்பாகக் கொண்டு சில பிரச்னைகளைச் சொல்கிறேன்.



1974 டிசம்பர் 21] [திரு. க. சுப்பு]

எனது தொகுதியில் திறைக்காடு என்ற பகுதியில் விவசாயத்திற்கு லாயக்கான நிலமாக உள்ள பகுதியை ஏழை மக்களுக்குப் பட்டா செய்து கொடுக்கவேண்டுமென்ற கோரிக்கை இருந்து வருகிறது. இன்னமும் அதை நிறைவேற்றாமல் இருக்கிற காரணத்தினால் அதைப்பற்றி உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமாத்திரம் அல்ல. நெசவாளர்களும், விவசாயிகளும் நிறைந்த பகுதி என்னுடையது. இந்த நேரத்தில் அந்தப் பகுதியில் உணவு நிலை தலையெடுத்து எவ்வளவு கடுமையான மோசமான நிலையில் அதைப் பாதித்திருக்கிறது என்பதை திரு. மாதவன் அவர்கள் நன்றாக அறிவார்கள். அவரும், நானும் அந்தத் தொகுதிக்குச் சென்ற நேரத்தில் அவர்களது கோரிக்கைகளைக் கூட வாங்கிக்கொள்ள முடியாத நிலையில் சென்ற வழியை விட்டுவிட்டு குறுக்கு வழியில் திரும்பி வரவேண்டிய நிலை ஏற்பட்டது என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் குறிப்பாகக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதேமாதிரி நெசவாளர்கள் அத்தனை பேர்களையும் கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் கொண்டுவரவேண்டுமென்பது நமது அரசாங்கத்தின் கொள்கை என அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கொள்கையின் அடிப்படையில் பல சங்கங்கள் நிறுவ அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. எங்கள் பகுதியிலேயே மாதவன் நெசவாளர் சங்கம், தமிழ் முரசு நெசவாளர் சங்கம் என்பதாக எல்லாம் துவங்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் சத்திரப்பட்டி என்கிற இடத்திலுள்ள நெசவாளர்கள் கூட்டுறவு சங்கம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அரசு சிபார்சு செய்து அனுப்பிய பிறகு அங்கே இருக்கக்கூடிய பைனான்ஷியர்—மத்திய வங்கி அதற்கு அனுமதி அளிக்காது நிறுத்திவைத்திருக்கிறது. இதுபற்றி பல முறை முதலமைச்சரிடம் சொல்லியிருக்கிறேன். கூட்டுறவு அமைச்சருக்கும் தெரிவித்திருக்கிறேன். அதற்கு வேறுகாரணங்கள் அங்கே சொல்லப்படுகிறது. அங்குள்ளவர்களும் நெசவாளர்கள் தான். அங்கிருக்கக்கூடிய நெசவாளர்களின் கோரிக்கைக்கிணங்க உடனடியாக அந்த நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கும் அனுமதி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. க. சுப்பு] [1974 டிசம்பர் 21

இன்னொன்று, கூட்டுறவு சங்கங்களில் மாத்திரம் அல்ல, நமது அரசாங்கம் சிக்கன நடவடிக்கையாக சில விளம்பரங்கள் கொடுப்பதைக் கூடத் தவிர்க்கலாம். அதிக எண்ணிக்கையில் வரக்கூடிய பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுப்பது சரி, ஆயிரம் பெண்களைக் காதலித்த ஆசாமி என முதல் பக்கத்தில் வருகிற ஒரு பத்திரிகையில் குடும்பக் கட்டுப்பாடு விளம்பரம் வருகிறது. ஆயிரம் பெண்களைக் காதலித்த ஆசாமி கதையைப்போடுகிற பத்திரிகைக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? இது போன்ற பத்திரிகைகளுக்குக் கொடுக்கக்கூடிய அரசாங்க விளம்பரத்தைக் குறைப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

சில பிரச்னைகளில் கட்சிக் கண்ணோட்டத்தோடுதான் நடந்து கொள்கிறோம் என்றாலும் குழு—குழுக் கண்ணோட்டத்தோடு நடந்துகொள்வதையாவது உடனடியாகத் தவிர்க்கவேண்டுமென்று சொல்ல ஆசைப்படுகிறேன். கட்சி சார்பாகவாவது இயங்க வாய்ப்பிருக்கும். ஆனால் குழு அடிப்படையில் அந்த வாயில்கள் அடைக்கப்பட்டுவிடுகிறது என்று கருதுகிறேன்.

இப்போது வறட்சி நிவாரணப்பணிக்காக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது, வரவேற்கிறேன். பகுதி பகுதியாக அந்த நிதி முறையாகப்போய்ச் சேரவேண்டும் என்பதில் அரசாங்கம் கருத்தாகவே இருக்கவேண்டும். முன்பு 2 கோடி திட்டத்தின் கீழ் வறட்சிப் பணிகள் நடைபெற்றபோதே பல புகார்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்தத் திட்டத்தின் கீழ் மக்களுக்குப் பணம் போய்ச் சேரவில்லை. ஒழுங்கீனங்கள் நடைபெற்றிருக்கின்றன. போலி மஸ்டர் ரோல் தயாரிக்கப்பட்டு பணம் கொடுத்ததாக மோசடி செய்யப்பட்டிருக்கிறது என்பது மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் சொல்லப்பட்டு, அதுபற்றி முதலமைச்சரிடத்திலேயே புகார் கொடுத்திருக்கிறேன். திருப்பிக் கேட்டபோது அது ஆர்.டி.எல்.எ. செக்டரிக்கு போய் இருப்பதாகச் சொன்னார்கள். அங்கே போய் கேட்டபோது தனக்கு வரவில்லை, பி.டபிள்யூ.டிக்குப் போயிருக்கும் என்றார். அங்கே கேட்டபோது சீப் என்ஜினியருக்குப் போயிருக்கலாம் என்றார்கள். அதன் நிலை இப்படித்தான் இருக்கிறதே தவிர, அந்தப் புகார்கள் விசாரிக்கப்பட்டு, குற்றமிழைத்தவர்களின் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை



1974 டிசம்பர் 21] [திரு. க. சுப்பு]

எடுத்தாலொழிய இதுபோன்று நாம் என்னதான் வறட்சிப் பணிக்காக நிதி ஒதுக்கினாலும் அது பொதுமக்களுக்குப் போய்ச் சேரும் என்கிற நிலை ஏற்படாது.

எவ்வளவு பணம் ஒதுக்குகிறோம் என்பது முக்கியமல்ல. ஒதுக்கப்படுவது மக்களுக்குப் போய்ச் சேருகிறதா என்று பார்ப்பதுதான முக்கியம். தவறு நடந்திருப்பதாகப் புகார் கொடுக்கப்பட்டால் அது யாராக இருந்தாலும் அதைப்பற்றிக் கவலைப்படாது இந்த அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ள முன்வந்தாகவேண்டும். அறிவிக்கப்பட்ட கொள்கை எப்படி இருக்கிறதோ, அதன்படி செயல்பட்டாக வேண்டும்.

சென்ற முறை இங்கே ஒரு கொள்கை அறிவிக்கப்பட்டது. சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரை இனி தனியாருக்குச் சர்க்கரை ஆலைகளைக் கொடுக்காமல், கரும்பு உற்பத்தியாளர்களையே பங்குதாரர்களாகக் கொண்ட கூட்டுறவு நிறுவனத்திற்கே கொடுப்பது என்றார்கள். நல்ல அருமையான கொள்கை. வரவேற்றுப் பாராட்டியிருக்கிறோம். (மணி அடிக்கப்பட்டது) நான் ஒன்றும் தவறான ஒன்றைச் சொல்லவில்லை. பொதுவான பிரச்னைகளைத்தான் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எதைப்பற்றிப் பேசுகிறீர்கள் என்கிற கவலை எனக்கில்லை. இன்றைக்கு 15 பேர்கள் பேசப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் பேசிய பிறகு முதலமைச்சர் பேசவேண்டும். ஆகவே ஒவ்வொரு உறுப்பினருக்கும் 5 நிமிடங்கள்தான் ஒதுக்கியிருக்கிறேன். திரு. துரை கோவிந்தராசனுக்கும் 5 நிமிடம் ஆனவுடன் மணி அடித்தேன். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. க. சுப்பு:** பேரவைத் தலைவர் அவர்களுக்கே தெரியும். நான் இங்கே அதிகமாகப் பேசினது கிடையாது. இன்னும் ஒன்றிரண்டு கருத்தைச் சொல்லி முடித்துவிடுகிறேன்.

தனியார் சர்க்கரை ஆலைகளுக்கே இனி அனுமதி கிடையாது, கூட்டுறவு முறையில்தான் சர்க்கரை ஆலைகளை அமைக்கப் போகிறோம் என்கிற அருமையான கொள்கையை இங்கே

[திரு. க. சுப்பு] [1974 டிசம்பர் 21

அறிவித்துவிட்டு, இன்றைக்கு இருக்கக்கூடிய தனியார் சர்க்கரை ஆலைகள் எல்லாம் தங்களுடைய உற்பத்தித் திறனை இரண்டு மடங்காக ஆக்கிக்கொள்ளலாம் என்பதாக அறிவித்து- சக்தி சர்க்கரை ஆலையில் தொழிலாளர் நல அமைச்சரே முன்னிருந்து அதைத் துவக்கி வைத்திருக்கிறார்கள் என்றால், இது நாம் அறிவித்த கொள்கைக்கு—எடுத்த முடிவுக்கு விரோதமாக இல்லையா என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துககாட்ட விரும்புகிறேன்.

அடுத்து, சிக்கனத்திற்குச் சில வழிகளைச் சொல்கிறேன். பல காரியங்களில் மற்ற மாநிலங்களுக்கு தமிழகம் முன்மாதிரியாக இருப்பதுபோல இதிலும் இருக்கலாம். திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையிலேயே முன்பு அறிவிப்பு செய்யப் பட்டதுதான். சட்டமன்றத்திற்கு மேலவை என்று தேவை யில்லை. தேவையில்லாத ஒரு அவையை வைத்துக்கொண்டிருப் பதனால்தான் பல பிரச்னைகள் வருகின்றன. (குறுக்கீடு) இது மேலவையிலுள்ள ஒரு ஆள் இரண்டு ஆளைப்பற்றிய பிரச்னை அல்ல. மேலவையே பல மாநிலங்களில் ஒழிக்கப்பட்டிருக் கிறது. மேற்கு வங்காளத்தில் ஒழிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மேலவையைப்பற்றி இங்கே பேசுவது—அவர்கள் நம்மைப்பற்றி அங்கே பேசுவது என்பது எல்லாம் முறை அல்ல. அதைப்பற்றி இங்கே பேசாமல் இருப்பது நல்லது.

**திரு. க. சுப்பு :** * *

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, * * பற்றிய விவரங்கள் சபைக் குறிப்பிலே இடம் பெருமலிருப்பது நல்லது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நடவடிக்கைக் குறிப்பிலே அவை இடம் பெறாது.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.



1974 டிசம்பர் 21]

**திரு. க. சுப்பு :** அடுத்து, என் ஊரைப் பற்றிய பிரச்னை. எங்கள் ஊரில் வளர்ச்சிப் பணி பற்றிய பல புகார்கள் அதிகாரிகள் மேல் வருகின்றன. * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைத் தலைவரது அனுமதி மறுக்கப்பட்டதை இந்த அவையிலே எழுப்புவது, விமர்சிப்பது தவறு. சுப்பு அவர்கள் பேரவைத் தலைவரைப் பற்றி பேசிய குறிப்பும், புகாரும், பேரவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. க. சுப்பு :** கட்ட பொம்மனுக்கு அமைச்சராகத் தானாவதி பிள்ளை இருந்ததைப் போல், நம்முடைய கலைஞர் அவர்களுக்கு அமைச்சர் மாதவன் கிடைத்திருக்கிறார். நம்முடைய கலைஞர் அவர்கள் திறமையானவர், அவருக்கு இப்படி ஒரு (குறுக்கீடு) உதாரணமாக, என்னுடைய தொகுதியிலே வில்லேஜ் ஆஃபீசர்ஸ்-ஐ ரிமூவ் பண்ணி கடைசிவரைக்கும் ஃபைனல் ஆர்டர் போட்ட பிறகும் ரீ-இன்ஸ்டேட்மென்ட் பண்ண வேண்டுமென்று ஆர்டர் வருகிறது. இராமநாதபுரம் கிழக்குப் பக்கத்திலே இப்படி நடந்திருக்கிறது. உயர்நீதிமன்றம் வரை சென்று, அங்கே உயர் நீதிமன்றத்திலே தவறு நடந்திருக்கிறது என்று சுட்டிக்காட்டப் பட்டிருக்கிறது.

எனக்குத் தெரிந்த ஒன்றிலே, புறம்போக்குப் பட்டா கொடுப் பதிலே, உயர்நீதிமன்றத்திற்குச் சென்று, பட்டா கொடுக்கக் கூடாது என்று தீர்ப்பானதற்குப் பிறகு, குறிப்பிட்ட நபருக்குக் கொடுக்க வேண்டுமென்பதற்காக ஜி.ஓ. போடப்பட்டு உத்தரவுகள் போட வேண்டியது அவசியம்தானா? அந்த வக்கீல் யார், மந்திரிக்குச் சொந்தக்காரரா என்று நான் சொல்ல விரும்ப வில்லை.

அதிகாரிகளைப் பொறுத்தவரையில், குறிப்பிட்ட புகார் கொடுங்கள் என்று சொல்கிறார்கள். நான், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் மேலே புகார் கொடுத்திருக்கிறேன். அதனை டிஸ்ட்ரிக்ட் டெவலப்மென்ட் ஆபீசர் விசாரிக்கப்போகிறார். நான் யார்மேல் புகார் கொடுத்தேனோ அவர் மாற்றப்படவில்லை. விசாரிக்கப் போன அதிகாரி மாற்றப்பட்டிருக்கிறார். அதுதான் வருந்தத் தக்க விஷயம். அந்த டி.டி.ஓ. வந்து, 5, 6 மாதந்தான் ஆகியிருக்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

கிறது. சிவகங்கையில் இருக்கக்கூடிய டி.டி.ஓ. மாற்றப்பட்டிருக் கிறார். எங்கள் தலையெழுத்து அப்படி இருக்கிறது . . (மணி யடிக்கப்பட்டது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் எவ்வளவு வேண்டு மானாலும் பேசுங்கள், நேரமில்லை.

**திரு. க. சுப்பு :** ஆகவே, நான் சொல்வது, மாவட்ட கலெக்ட ரிடத்திலே தெரிவித்தோம். மாற்ற மாட்டோம் என்று சொல்கிறார். இங்கே சம்பந்தப்பட்ட அமைச்சர் அன்பில் அவர்கள் இருக் கிறார்கள். அவர்கள், தனக்குத் தெரியாது என்று சொல்கிறார். இப்படி இவர்களுக்கெல்லாம் தெரியாமலே ஒரு டிரான்ஸ்பர் அதிக முறைகேடான டிரான்ஸ்ஃபர் அதிகமாக நடந்திருக்கிறது. ஆகவே, நான் சொல்வது என்னவென்றால் . . . (மணி அடிக்கப் பட்டது).

***திரு. மு. சத்தியமூர்த்தி :** பேரவைத் தலைவரவர்களே, இன்று 1974-75-ம் வருஷ துணை மானியக் கோரிக்கையின்மீது எங்கள் கட்சியினர் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகின்றேன்.

இந்த ஆண்டு—1974-75-வது மானியக் கோரிக்கையிலும், இரண்டாவது துணை மானியக் கோரிக்கையிலும் பார்த்தோமானால் எங்களது புதுக்கோட்டை மாவட்டத்திற்கு எந்தவிதமான திட்டங்களும் ஒதுக்கப்படவில்லை என்பதனை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, எங்களது புதுக்கோட்டை மாவட்டம் அண்மையிலே புது மாவட்டமாக ஆக்கப்பட்டிருக்கிறது. புது மாவட்டமாக ஆக்கப்பட்டிருக்கிறதென்றால், அது பின்தங்கிய மாவட்டமாக ஆக்கப்பட வேண்டுமென்ற முறையிலேயே அங்கே வானத்தை நம்பி வாழ்கின்ற மக்கள், உழவுத் தொழிலேயே நம்பி யிருக்கிற அந்தப் பாட்டாளி மக்கள், அவர்களுடைய குறைகள் நல்லமுறையிலே தீர்க்கப்பட வேண்டுமென்பதற்காகத்தான் அந்த மாவட்டத்தினைப் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்க வேண்டு மென்பதற்காகத்தான் அது புது மாவட்டமாக ஆக்கப்பட்டிருக் கிறது. அப்படி ஆக்கப்பட்டு, ஏறத்தாழ ஒரு வருஷமாகப்





போகிறது. இதுவரையிலே, உருப்படியான திட்டங்கள் எதுவும் அங்கே செயல்படவில்லை. அதைக் கருத்திலே கொண்டு, அம் மாவட்டத்தை முதலமைச்சரவர்கள் நேரடியான கவனம் செலுத்தி அந்த மாவட்டத்தை அபிவிருத்தி செய்ய வேண்டு மென்றும் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

நாங்கள் பின்தங்கிய மாவட்டக்காரர்களாக இருக்கிற காரணத் தினால், இப்பொழுது நாங்கள் பெரும் வேதனைகளுக்கு, வரலாறு காணாத ஒரு வறட்சியினைச் சந்தித்து கொண்டிருக்கின்றோம். எங்களுடைய மாவட்டத்தினுடைய பிரச்னைகளை எல்லாம் நீங்கள் ஆழ்ந்து கவனித்து அதற்கு ஒரு நல்ல நிரந்தரமான திட்டத்தை அங்குள்ள மக்களுக்கு அளிக்கவேண்டும். வறட்சி நிவாரண நிதியிலே ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ரூ. 2 இலட்சம் ஒதுக்கியிருக்கின்றார்கள் அந்தப் பகுதியிலே. அது போதாது. இன்னும் அதிகமான தொகை ஒதுக்கி அங்குள்ள இன்றைய நிலையைக் கவனிக்கின்ற நேரத்திலே, நிரந்தரமாக அங்கு வாழ்கின்ற மக்களுக்கு, நிவாரணத்தினைச் செய்து கொடுக் கின்ற நேரத்திலே, அன்றாடம் அவர்களுக்கு இருக்கின்ற தேவை களைக் கவனிக்கின்ற நேரத்திலே, அவர்கள் நிரந்தரமாக நல் வாழ்வு வாழக் கூடியவரை செய்ய இந்த அரசு முற்படவேண்டும்.

சில கருத்துக்களை நான் இங்கே சொல்ல ஆசைப்படுகிறேன். விவசாயத்திற்காக, வானத்தையே நம்பி அங்கே வாழக்கூடிய மக்கள் மழைக்காகக் காத்திருக்கிறார்கள். அதற்காக, பெரிய இராட்சச இயந்திரங்களைக்கொண்டு போரிங் போட்டு, அங்கு விவசாயத்திற்கு நல்ல தண்ணீர் கிடைக்கச் செய்ய ஒரு திட்டத்தினை ஏற்படுத்த வேண்டும்.

அறந்தாங்கி பகுதி, கீழ் இராமநாதபுரம் பகுதியைச் சேர்ந்த தாக எங்கள் பகுதியிருக்கிறது. கிழக்கு இராமநாதபுரம் பகுதிக்காக, மத்திய அரசிடமிருந்து உதவிபெற்று நல்ல பல திட்டங்களைச் செய்கின்றார்கள். அதைப்போல், எங்களது பகுதி யையும் பிற்பட்ட பகுதியாக அறிவித்து, மத்திய அரசிடத்திலே போராடி, பின் தங்கிய பகுதிகளுக்கு என்னென்ன சலுகைகள் மத்திய அரசிடமிருந்து கிடைக்கின்றதோ அந்தச் சலுகைகளை எங்களுக்குப் பெற்றுக்கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. மு. சத்தியமூர்த்தி] [1974 டிசம்பர் 21

இப்பொழுது, நமது முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், "வாங்கியிருக்கிற கடன்கள் எல்லாம் நிறுத்தி வைக்கப்படும்" என்று சொல்லி இருக்கிறார்கள். "கூட்டுறவுக் கடன்கள், நிலவள வங்கியிலே கொடுக்கப்பட்ட கடன்கள் இவைகளெல்லாம் அங்கே கெடுபிடி இல்லாமல், வசூலிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்படும்", என்று.

அண்மையிலே ரெவின்யூபோர்ட் மெம்பர் அவர்கள், அந்தப் பகுதிக்குச் சென்றிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே மேலெழுந்தவாரியாகத்தான் சென்று பார்த்தார்கள். அவர்கள் என்ன செய்திருக்கவேண்டும், அங்குள்ள பஞ்சாயத்து யூனியனிலே உள்ள மெம்பர்களையெல்லாம் அழைத்து அந்த மக்களுடைய குறைகளைக் கேட்டு அறிந்திருப்பார்களானால், அங்குள்ள மக்களுடைய நிலை அவர்களுக்குப் புரிந்திருக்கும். அதைக் கேட்டு அறிந்திருப்பார்களோ, இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால், அங்கு மக்கள்படுகின்ற கஷ்டங்களைத் தீர்ப்பதற்கு—வறட்சி நிலையிலே கஷ்டப்படுகிறார்கள்—கிராமங்களிலே நியாய விலைக் கடைகளைத் திறக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 30 நிமிஷம்தான் இருக்கிறது. முதலமைச்சரவர்களுக்கு 15 நிமிஷம், 75 நிமிஷம் மீதி இருப்பதை, 15 மெம்பர்களுக்கு பங்கிட்டுக்கொடுக்க வேண்டும். ஆகவே, ஒவ்வொரு உறுப்பினரும் 5 நிமிஷத்தைத் தாண்டாதவாறு பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன். இம்மாதிரி உத்தரவு போடுவதற்காக உறுப்பினர்கள் தவறாக நினைக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். தலைவர்கள், உறுப்பினர்கள் எல்லோருக்கும் 6 நிமிஷம்தான்.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** தலைவரவர்களே, இந்த அவையில் வைக்கப்பட்டிருக்கும் கூடுதல் செலவு குறித்த, துணை மானியத்தின் மீது எனது கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்... இங்கே இவை வந்திருக்கக்கூடிய நேரத்திலே தமிழ்நாட்டிலே நிலவக்கூடிய பஞ்ச நிலைமைபற்றியும் அதிலும் குறிப்பாக, இராமநாதபுரம் மாவட்டத்திலே இருக்கக்கூடிய நிலைமையை நான் சொல்லாமலிருக்க முடியாது. குறிப்பாக,



1974 டிசம்பர் 21] [திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி]

மற்ற மாவட்டங்களிலே அந்த நிலையிருந்தாலும், இராமநாதபுரம் மாவட்டம் இன்றிருக்கக்கூடிய வறட்சிப் பகுதியாக மட்டு மல்லாமல், பஞ்சப் பகுதியாகவும் மாறியிருக்கிறது என்பதை நாம் நிதர்சனமாகக் காண்கிறோம். அந்த நிலையை அரசு ஏற்றுக் கொண்டு அந்தப் பகுதியை முதலிலே பஞ்சப் பிரதேசமாகப் பிரகடனம் செய்து இப்போது எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கை

(முற்பகல் 11-30)

களோடு மேலும் வேண்டிய வேலைகள் செய்யப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே ரெவின்யூ போர்டு உறுப் பினர்கள் அந்தப் பகுதியைப் பார்க்கச் சென்றிருக்கிறார்கள். அவர்களுடைய பரிந்துரைகள் என்ன என்பதைப் பற்றி இந்த அவைக்குக் கிடைப்பதற்கு முன்பாக இந்த அவை ஒத்திவைக்கப் பட்டுவிடும். எனவே, என்ன என்ன வேலைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்று இந்த அவையிலே உள்ள அந்த மாவட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அறிந்துகொள்ளக்கூடிய வகையிலே தகவல்கள் முன்கூட்டியே ஏதாவது இருந்தால் அந்தத் தகவல்களை இங்கே வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அங்கே எந்தக் கண்மாயிலும் தண்ணீர் இல்லை, குடிநீர் இல்லை. கால்நடைகளுக்கும் தண்ணீர் இல்லை. இனிமேல் அடுத்த மழை பெய்தாலும்கூட விவசாயிகளுக்கு விதைப்பயிர் இல்லை, அவர் களிடம் இருந்ததை எல்லாம் ஏற்கனவே போட்டுவிட்டார்கள், விதைப்பயிர்களை வாங்குவதற்கான சக்தியும் அவர்களிடத்திலே இல்லை. அங்கேயிருக்கிற விவசாயிகள் விதைப்பயிர்கள் பெறக் கூடிய வகையில் விதைப்பயிர்களை போதுமான அளவிற்குத் தயாரித்து அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கால்நடைகளுக்கு அங்கே தீவனம் கிடைக்க வில்லை. ஆயிரம் ரூபாய், இரண்டாயிரம் ரூபாய் பெறுமான மாடுகளையெல்லாம் பாதி விலைக்கு விற்கிறார்கள். மனிதர்களுக்கு எப்படி உதவி செய்ய வேண்டுமென்று நாம் நினைக்கிறோமோ, அதைப்போல் கால்நடைகளுக்கு வேண்டிய தீவனங்களையும் பெற்றுத்தர ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

[திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி] [1974 டிசம்பர் 2

கிராமங்களிலே இருக்கக்கூடிய மக்கள் எல்லாம் வேலை
யில்லாமல் வாழவும் முடியாமல் பணம் இல்லாமல் கிராமத்தை
விட்டு வேறு கிராமத்திற்குச் செல்லக்கூடிய நிலைமை இருக்கிறது.
அவர்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கக்கூடிய முறையில்
கஞ்சித் தொட்டிகளைத் திறக்கவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். விவசாயிகளுக்குக் கொடுத்த கடன்களையெல்லாம்
ஒத்திவைக்கவேண்டும். வங்கிகள் கொடுத்த கடன்கள், கூட்டுறவு
சொசைடி கொடுத்த கடன்கள் இவைகளை ஒத்திவைக்கவேண்டும்.

அதோடு மேற்கொண்டு ஒரு ஆலோசனையையும் நான் சொல்ல
விரும்புகிறேன். அவர்களுக்கு இருக்கக்கூடிய தனியார்களுடைய
கடன்களையும்—கோர்ட் மூலம் டிக்ரி செய்ய யாராவது முன்
வந்தால்—ஒரு ஆண்டுக் காலத்திற்காவது யாரும் வசூல் செய்யக்
கூடாது என்ற முறையிலே ஒரு சட்டம் அவசரச் சட்டம் பிறப்
பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறியைப்பற்றி ஒரு வார்த்தை சொல்லிக்கொண்டு
என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். எனக்கு முன்பு
பேசிய உறுப்பினர்கள் ஏராளமாக கைத்தறி துணி தேங்கியிருப்
பதையும் எதிர்காலத்திலே அவர்களுக்கு வரக்கூடிய
அபாயத்தையும் பற்றிக் குறிப்பிட்டார்கள். இன்னும் ஒரு மாத
காலத்திலே கைத்தறியாளர்கள் எல்லாம் வேலையில்லாமல்
திண்டாடுவார்கள். பஞ்ச நிலையிலே இருப்பார்கள். நம்முடைய
அரசு 1.3 கோடிக்குப் பதிலாக 2 கோடி ரூபாய் செலவு செய்
திருக்கிறது. மேற்கொண்டு செலவுசெய்து இருப்பதற்கான
கோரிக்கை இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு
எல்லாம் தீபாவளி காலத்திலே சாதாரணமாகக் கொடுக்கக்கூடிய
ரிபேட்டைத் தவிர விசேஷ ரிபேட் 10 பைசா கொடுப்பார்கள்,
ஆனால் இந்தத் தடவை விசேஷ ரிபேட் கொடுக்கப்படவில்லை.
தேங்கியிருக்கக்கூடிய துணிகளை விற்பதற்கு விசேஷ ரிபேட்
கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். ஒரு மாத காலத்தில்
பஞ்சத்தைச் சந்திக்கக்கூடிய நிலையிலே இருக்கக்கூடியவர்களுக்கு
நிவாரணங்களைப் போதுமான அளவிற்குச் செய்ய வேண்டுமென்று
கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. வீ. கே. இராஜாப் பிள்ளை:** தலைவர் அவர்களே, 1974-75-ஆம்
ஆண்டுக்கான துணை மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய
கருத்துக்களை இணைத்துக்கொள்ள விரும்புகிறேன்.



1974 டிசம்பர் 21] [திரு. வி. கே. இராஜாப் பிள்ளை]

துணை மானியக் கோரிக்கையிலே இன்று நம்முடைய அரசுக்கு இருக்கிற குறைந்த அதிகாரங்களை வைத்துக்கொண்டே இத்தனை நன்மைகளைச் செய்து இருக்கமுடிகிறது என்றால் உண்மையாகவே இன்னும் அதிகமாக அதிகாரங்கள் இருக்குமானால் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற துணை மானியக் கோரிக்கை 13.4 கோடியாக இருக்காது, ஒருவேளை 130 கோடிக்கே இந்த அவைமுன்னால் வந்திருக்கும் என்று கருதுகிறேன். நான் இதை ஏன் கூறுகிறேன் என்றால் இந்த அவையிலே அதிகமாகப் பேசப்பட்டது அரிசிப் பிரச்னைதான். அதிகமான அதிகாரங்கள் இருந்தால் அதற்காக என்று மானியம் அளிக்கப்பட்டு அதுவும் இதிலே சேர்ந்திருக்கும். நான் விஷயத்தை விட்டு திசைமாறிப் போகிறேன் என்று கருதாமல் ஒரு சிறிய உதாரணத்தைக் கூறி என்னுடைய தொகுதியைப் பற்றிய கருத்துக்களையும் கூறி உரையை முடித்துக் கொள்ளலாம் என நினைக்கிறேன்.

நானும், ஸ்தாபன காங்கிரஸ் கட்சி தலைவராக இருக்கிற திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் இன்னும் கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கிற ஏனைய சட்டமன்ற உறுப்பினர்களும் ஒரு காலத்திலே சுயாட்சி பெற்ற, தன்னாட்சி பெற்ற ஒரு சுதந்திர சமஸ்தானத்திலே இருந்தோம் என்பதை எல்லோரும் அறிவார்கள். இரண்டாவது உலக யுத்தம் வந்த நேரத்திலே அரிசிப் பிரச்னை நாட்டிலே ஏற்பட்ட நேரத்திலே அதை அந்த அரசு எப்படி சமாளித்தது என்பதை தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பிரிட்டிஷார் நேரடி நிர்வாகத்தின் கீழ் இருக்கிற பகுதிகளிலே எல்லாம் அரிசிப் பிரச்னை வந்தபோது அந்த ராஜ்யத்திலே மாத்திரம் அதைச் சமாளித்தார்கள், எப்படி என்றால், பிரிட்டிஷாரிடம் தகவல் மாத்திரம் தெரிவித்துவிட்டு அவர்கள் பர்மா, கியூபா போன்ற இடங்களிலிருந்து நேரடியாக அரிசியைப் பெற்று சமாளித்தார்கள். இன்று உள்ள நிலைமையிலே அந்த நிலைமைக்கு அதிகாரம் இருந்தால் இப்படிப்பட்ட நிலைமை இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அதிக அதிகாரங்கள் வேண்டுமென்ற போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு எல்லோரும் உதவிகரமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய தொகுதியைப் பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. வி. கே. இராஜாப் பிள்ளை] [1974 டிசம்பர் 21

இந்த நிதியாண்டிலே 478 கோடி ரூபாய்க்கு தமிழ்நாட்டிற்கு செலவு செய்யப்பட்டிருக்கிறது. ஜனத்தொகையின் அடிப்படையிலே பார்த்தால்கூட எங்கள் மாவட்டத்தில் 13 லட்சம் ஜனங்கள் இருக்கிறார்கள் என்றால் 14 கோடி ரூபாயாவது அங்கே செலவழிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் நான் தொகையைச் சொல்ல விரும்பவில்லை. குறைந்த தொகை தான் செலவு செய்யப்பட்டிருக்கிறது, ஆகவே இனியாவது எங்கள் மாவட்டத்திற்கு தேவையான அளவுக்கு தொகை ஒதுக்கவேண்டும். உலக்கருவி திட்டம், பொய்கை அணைத் திட்டம், மாம்பழத்துறை திட்டம் ஆகியவற்றை நிறைவேற்ற வேண்டும்.

கன்னியாகுமரி நகரியம் ஆரம்பிக்கப்பட்டு வெகு காலம் ஆகியும் கூட இந்தியாவின் தென் கோடியில் இருக்கிற ஒரு பெரிய நகரமாக இருக்கிறது, இதுவரையில் அரசிடமிருந்து ஒரு பைசாகூட மானியமாகவோ கடனாகவோ வரவில்லை, இனியாவது வழங்க வேண்டும்.

தோவாளையில் ஹவுஸிங் மார்ட்கேஜ் பேங்க் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருடங்கள் ஆகியும்கூட இன்னும் ரிஜிஸ்டர் செய்யப்படவில்லை. அதையும் செய்யவேண்டும். வெள்ளமடம் போன்ற கிராமங்களிலே உவரிநிலம், உப்பு சத்துள்ள நிலமாக இருப்பதால் குடிநீர் இல்லை. ஆகவே, இந்தப் பகுதிகளுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுக்கவேண்டும். தேரூர், தாமரைக்குளம் இந்த இடங்களில் எல்லாம் வாட்டர் போர்டு மூலம் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும், அதை விரைவாகச் செய்யவேண்டும். நாஞ்சில் நாடு விவசாயிகள் நிறைந்த பகுதி, ஆகவே ரோடு வசதிகளையும் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே தொழிற்சாலைகளை நிறைய ஆரம்பிக்க வேண்டும். அலைத்துலையாறுத் திட்டத்தைப் பரிசீலனை செய்யவேண்டும். அந்தத் திட்டத்தின் தண்ணீரை அந்த மாவட்டத்திற்குப் போக எஞ்சிய நீர் இருந்தால் தான் அதை மற்ற மாவட்டங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவர் அவர்களே, 13.4 கோடி ரூபாய்க்கு துணை மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.



1974 டிசம்பர் 21] [திரு. எம். ஏ. லத்தீப்]

வளர்ந்து வருகிற சமுதாயத்திலே ஏற்படுகிற தேவைகளை சந்திக்கின்ற வகையிலே ஏழை எளியோர் வாழ்கின்ற இந்த நாட்டிலே அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையிலே அரசு அவ்வப்போது எடுத்து வருகிற நடவடிக்கைகள் என்ற முறையிலே ஏற்கனவே எதிர்பார்க்கின்ற நிதி ஒதுக்கீட்டுக்கு மேலாக சில செலவினங்கள் ஏற்படுகின்றன. எவ்வளவு தூரம் இந்த அரசு ஏற்படுகின்ற தேவைகளை அவ்வப்பொழுது செய்கிறது, காத்துக் கொண்டிருக்காமல் உடனுக்குடன் செய்கிறது என்பதை இந்தத் துணை மானியக் கோரிக்கை நமக்கு நன்றாக எடுத்துக் காட்டுவதாக அமைந்திருக்கிறது. அதே நேரத்தில் பண வீக்கம் ஏற்பட்டிருக்கிறது, பண வீக்கம் என்றால், விலைவாசி ஏற்றம் என்பது மட்டுமல்ல, பண வீக்கத்திலே அடிப்படையாக இருப்பது அபரிமிதமான இலாபம் நாட்டிலே ஒருசில இடங்களில் ஏற்பட்டிருப்பதாகும். அப்னார்மல் ப்ராஃபிட் என்று சொல்லப்படும் அபரிமிதமான இலாபம் ஏற்படும். இன்றைக்குப் பலவகைகளிலே செலாவணியாகும் ரூபாய் தவறான முறையிலே சென்று விலைவாசி யேற்றத்திற்குக் காரணமாக இருக்கிறது. இன்றைக்குப் பெருத்த அளவிற்கு பொதுச் செலவினங்களைச் செய்து கொண்டிருக்கிறோம். பொதுச் செலவினங்களின் வாயிலாக பணத்தை சர்குலேஷனில் விடுகிறோம். அப்படிச் செலாவணிக்கு விடும்பொழுது ஏற்கனவே செய்த செலவுகளிலிருந்து, அபரிமிதமான இலாபத்தின் மூலமாகப் பணக்காரர்கள் பெற்ற செலாவணியைத் திருப்பி எடுக்கும் முறையைத் திட்டமிட்டு வகுக்க வேண்டும். அப்படிச் செய்தால் தான் ஏற்கனவே செலாவணியிலிருக்கும் பணம் அரசுக்கு வந்து அதன் வாயிலாகப் பொதுச் செலவுகள் செய்ய முடியும்.

correlation between taxation and public expenditure எவ்வளவு அதிகமாக இருக்குமோ அப்படியிருக்க வேண்டும். பல செலவினங்களை நாம் இன்றைக்குச் செய்கிறோம். அபரிமிதமான இலாபம் பெறக்கூடியவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களின் மீது வரிகளை அதிகம் போடுவதற்குத் தயங்கக் கூடாது. அவர்களிடமிருந்து அதிகமான பணத்தை எடுத்துத்தான் மேற்கொண்டு செலவினங்களுக்கான திட்டங்களை வகுக்கவேண்டும். அப்பொழுது தான் பொருளாதாரம் செம்மையாக இருக்க முடியும். சர்க்குலேஷனில் இருக்கின்ற பணத்தின் மதிப்பும் சரியாக இருக்கும்

[திரு. எம். ஏ. லத்தீப்] [1974 டிசம்பர் 21

என்ற முறையில் திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் பொதுச் செலவினங்களை அதிகமாகச் செய்யும்பொழுது. . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எந்த முறையிலே போடலாம் என்று சொல்லுங்கள்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** ஐந்து நிமிஷம் கொடுத்தால் எப்படிச் சொல்வது? நான் பேசியே இருக்கக்கூடாது. எப்படியோ மாட்டிக்கொண்டேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் இரண்டு நிமிடங்கள்தான் இருக்கின்றன.

**திரு. எம். ஏ. லத்தீப்:** அம்மாதிரி இன்றைக்கு இருக்கின்ற பிரச்னைகளைத் தயவு செய்து முதலமைச்சரவர்கள் ஆராய வேண்டும்.

மற்றொன்றையும் முதலமைச்சரவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். பொதுச் செலவினங்களைச் செய்யும்பொழுது உற்பத்தி ஆதாரங்களைத் தொடர்ந்து செய்வதாக இருக்க வேண்டும். ஏழைகளுக்காகக் கட்டிடங்கள் கட்டுகிறோம். சமூகத்தின் வளர்ச்சிக்காக அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தால் உண்மையிலேயே வரவேற்கத் தக்கதுதான். அப்படிப்பட்ட நல்ல திட்டங்களுக்காகக் கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்துக் கட்டிடங்களைக் கட்டும்பொழுது கட்டிடங்களுக்குத் தேவையான பல பொருள்களுக்கு டிமாண்ட் ஏற்படுகிறது. உற்பத்தியின் ஆதாரம் தொடர்ச்சியாக இருந்தால், தொழிற்சாலைகளில் உற்பத்தியின் ஆதாரம் தொடர்ச்சியாக இருந் தால் அதன் விளைவு பொருளாதாரத்தில் மிகுந்த பயனுடையதாக இருக்கும். ஆனால் அந்த அளவிற்குக் கட்டிடங்களைக் கட்டு வதால் ஏற்படவில்லை. எனவே போதிய அளவிற்கு உற்பத்தி ஆதாரங்கள் தொடர்ச்சியாக இருக்கக்கூடிய 'பப்ளிக் எக்ஸ்பெண் டிச்சர்'களைச் செய்ய வேண்டும்.

இன்றைக்கு நாம் தொழில்களில் முதலீடு செய்கிறோம், அதன் வாயிலாக என்ன இலாபம், என்ன வருமானம் என்று பார்க்கிறோம். சமுதாயத்திற்கு, நாட்டிற்கு, இந்த மாநிலத்திற்கு அதனால் என்ன



1974 டிசம்பர் 21] [திரு. எம். ஏ. லத்தீப்]

இலாபம் என்று பார்க்கிறோம். 140 கோடி ரூபாயை இந்த மாநில மக்களுக்காகக் கல்வித் துறையில் முதலீடு செய்கிறோம். அதனால் சமுதாயத்திற்கு என்ன இலாபம் என்று கேட்பதற்கு இந்தச் சமுதாயத்திற்கும், இந்த நாட்டிற்கும், இந்த மாநிலத்திற்கும் உரிமை உண்டு. எப்படி ஒரு துறையிலே, ஒரு தொழிலிலே செய்கின்ற முதலீட்டிற்கு என்ன இலாபம் என்று பார்க்கிறோமோ அதே போல் சமுதாயத்திற்காகச் செய்கின்ற இந்த முதலீட்டின் காரணமாக சமுதாயத்திற்கு என்ன இலாபம் என்று பார்ப்பதற்குச் சமுதாயத்திற்கு உரிமை இருக்கிறது. இலாபத்திற்குப் பதிலாகக் கல்வித் துறையினால் சமூகத்திற்கு மிகப்பெரிய கஷ்டங்களும், நஷ்டங்களும் ஏற்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் உணர்ந்து பார்த்து, எப்படி நாம் சமுதாயத்திற்கு இலாபம் தருகின்ற வகையிலே கல்விச் சாலைகளை மாற்றுவது என்று சிந்திக்க வேண்டும். ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுக்க, பண்பைக் கற்றுக் கொடுக்க, திறமையை வளர்க்க அறிவை வளர்க்கத்தான் இப்படிப்பட்ட கல்விச் சாலைகளே தவிர சமுதாயத்திற்கு கஷ்ட நஷ்டங்களை ஏற்படுத்துகின்ற வகையிலே பொதுச் செலவினங்கள் பயன்படுமேயானால் அது இந்தச் சமுதாயத்தின் நஷ்டத்திற்காக முதலீடு செய்கிறது என்பதை உணர வேண்டுமென்று கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப் பற்றிச் சிந்திக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். தயவு செய்து யாராக இருந்தாலும், முதலமைச்சராக இருந்தாலும் சரி, ஆளுங் கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க் கட்சியாக இருந்தாலும் சரி, தயவு செய்து கல்விச் சாலைகளைவிட்டு வெளியேறுங்கள்.

keep off all educational institutions from your politics

இந்த அரசியலினால் நாடு மிகப் பெரிய கஷ்டத்தைத்தான் சந்திக்கிறது. தயவு செய்து எல்லா கல்விச் சாலைகளிலும் அரசியலை விட்டுவிடுங்கள். அரசியல் அடிப்படையில் தேர்தல்கள் நடத்துவதை விட்டுவிடுங்கள். பல கல்லூரிகளில் மாணவர் தலைவராக நான் இருந்திருக்கிறேன். அப்பொழுது எந்தக் காலத்திலும் அரசியலின் அடிப்படையிலே தேர்தலைச் சந்திக்கவில்லை. என்னுடைய அருமை நண்பர் திரு. சீனிவாசன் அவர்களும் நானும் ஒன்றாகப் படித்தோம். அவர்களும் மாணவர் தலைவராக இருந்திருக்கிறார்கள், நான் கல்லூரியின் மாணவர் தலைவராக

[திரு. எம். ஏ. லத்தீப்] [1974 டிசம்பர் 21

இருந்தேன். அந்தக் காலத்தில் சொந்த ஆசாபாசத்தின் அடிப்
படையில் அரசியலைக் கொண்டு வரவேயில்லை என்பதைச் சொல்லிக்
கொள்கிறேன். அப்படி நடந்தால்தான் ஒழுங்காக நம்முடைய
நாடு உயர்வதற்கு வழியேற்படும். நாம் நாட்டிற்குச் செய்யும்
முதலீட்டினால் என்ன இலாபம் என்று கேட்பதற்கு நாட்டிற்கு
உரிமை உண்டு. கல்விச் சாலைகளில் நாட்டிற்குக் கஷ்ட நஷ்டங்களை
ஏற்படுத்தும் மூலங்களை உற்பத்தி செய்கிறோம், அதைப்பற்றிச்
சிந்திக்க வேண்டுமென்று கூறி அதை இதோடு விட்டுவிடுகிறேன்.

கடைசியாக ஒன்றைக் கூறி முடித்துக் கொள்கிறேன். உற்பத்தி
குறைந்திருக்கிறது, உணவுப் பிரச்னை மிகப்பெரிய பிரச்னையாக
இருக்கிறது. எங்கள் மாவட்டமாகிய வடார்க்காடு மாவட்டம்
உபரி மாவட்டமாக இருந்தது. ஆனால் இப்பொழுது வடார்க்காடு
மாவட்டத்தில் 80 சதவிகிதம், 85 சதவிகிதம் அளவிற்கு கரும்பு
உற்பத்திக்குப் பெரும்பாலான நிலத்தை மாற்றிவிட்டிருக்கிறார்கள்.
கரும்பு உற்பத்தித் திட்டத்திற்கு ஒரு வரையறை செய்யப்பட
வேண்டும். இன்றைக்குக் கரும்பு உற்பத்தி இவ்வளவு நிலத்திலே
தான் செய்யப்பட வேண்டும். மற்ற இடங்களில் பொதுவாக நெல்
உற்பத்தி செய்து கொண்டிருந்தால் அங்கே நெல்லைத்தான்
உற்பத்தி செய்ய வேண்டும் என்று முறைப்படுத்த வேண்டும்.
கரும்பு சாகுபடிக்கு வரி வரம்பிலேயிருந்து விதிவிலக்கு அளித்
திருக்கிறோம். அதைக்கூட விலக்குவதற்கு முயற்சிக்க வேண்டு
மென்று கேட்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்
கிறேன்.

திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு துணைத் தலைவரவர்
களே, 1974-75-ஆம் ஆண்டு இரண்டாவது துணை மதிப்பீடுகளின்
மீது ஒருசில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன்.

இன்றைக்கு நமது தமிழகத்தில் அத்தியாவசியப் பண்டங்
களின் விலை உயர்ந்து அதனால் ஏழை எளிய மக்கள் மிகவும்
பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விலைவாசி உயர்வு பற்றிப் பேசினால்
நமது முதலமைச்சரவர்கள் இது மத்திய சர்க்காரினுடைய
பிரச்னை. விலைவாசி தமிழ்நாட்டுப் பிரச்னை அல்ல. இது அகில
இந்தியப் பிரச்னை என்று சொல்லி விடுகிறார்கள். மத்திய சர்க்கார்
தான் விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று சொல்லிக்
கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதே அரசில் இருப்பவர்கள்தான்



1974 டிசம்பர் 21] [திரு. நா. வெ. குருசாமி]

ஒரு காலத்தில் தமிழகத்தில் விலைவாசி உயர்வைக் கண்டித்து இந்த மாநில சர்க்காரை எதிர்த்து விலைவாசி உயர்வுப் போராட்டத்தை நடத்தினார்கள். இப்பொழுது மத்திய சர்க்காரைக் கேட்டால் பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் இது அகில உலகப் பிரச்னை என்று கூறி விடுகிறார்கள். ஆகவே, முதலமைச்சரவர்களும், இந்திய நாட்டினுடைய பிரதமர் அவர்களும் இம்மாதிரி சொல்லிக் கொண்டிருந்தால் இந்த நாட்டு ஏழை எளிய மக்களுடைய நிலைதான் என்ன என்பதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, அத்தியாவசியப் பண்டங்கள் நியாயமான விலையில் ஏழை எளிய மக்களுக்குக் கிடைக்கும் வகையில் இந்த அரசு நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும்.

குறிப்பாக, அரிசிப் பிரச்னையைப் பொறுத்தவரையிலாவது மானியம் கொடுத்து ஏழை எளிய மக்களுக்கு படியரிசி இரண்டு ரூபாய் என்று போட வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். இதனால் சர்க்காருக்கு எவ்வளவு ரூபாய் நஷ்டம் ஏற்பட்டாலும் கூட பரவாயில்லை, இந்த அரிசிப் பிரச்னையினால் இன்றைக்கு நாட்டுமக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இதில் ஓரளவு நஷ்டம் ஏற்பட்டாலும் கூட அரசு அதை ஏற்றுக்கொண்டு ஏழை மக்களுக்கு வழி செய்தால் ஏழை எளியவர்கள் எல்லோரும் உங்களைப் பாராட்டுவார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த ஆண்டில் 26 நீயணைப்பு நிலையங்களை இந்த மாநிலத்தில் ஏற்படுத்த முடிவு செய்துள்ளதாகக் கூறியிருக்கிறார்கள். எங்கள் மாவட்டத்தில் தேனி பகுதி வியாபார ஸ்தலமாக இருக்கிறது. அங்கே ஒரு நீயணைப்பு நிலையத்தை உடனடியாக ஏற்படுத்த இந்த அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நண்பகல் உணவுத் திட்டத்திற்கு இப்பொழுது ஒரு குழந்தைக்கு 6 காசு என்று இருப்பதை 10 காசு என உயர்த்தியிருக்கிறீர்கள். நல்லமுறையில் அந்தக் குழந்தைகளுக்கு உணவு போட முடியாத ஒரு அவல நிலை இருக்கிறது. ஆகவே, செங்கற்பட்டு, தென்னார்க்காடு, வடார்க்காடு மாவட்டங்களில் இருப்பதைப்

[திரு. நா. வெ. குருசாமி] [1974 டிசம்பர் 21

போல மைய சமையற் கூடங்களை மதுரை மாவட்டத்திலேயும் ஏற்படுத்தி, அங்கு ஏழைக் குழந்தைகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இணைப்புச் சாலை விஷயத்தில், 1,500-க்குக் குறைந்த மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகளைப் போடு வதற்கான திட்டம் இருப்பதாகக் கூறப்படுகிறது. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் மிகவும் மலைப் பகுதியாக, வருஷநாடு போன்று இப்படிப்பட்ட மலைப் பகுதியான இடமாக இருக்கிறது. அங்குள்ள மக்களுக்குச் சாலை வசதி சரியாகக் கிடைக்கவில்லை. ஆகவே, இந்த இணைப்புச் சாலை வசதிகளை எங்கள் மாவட்டத்திற்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொள்ளுவதற் காக வீடு ஒன்றுக்கு 3,000 ரூபாய் அளிக்கப்படுகிறது. இது போதாது. இப்போது இருக்கும் நிலைமையில் 4,000 ரூபாயாவது கொடுத்தால்தான் வீடு கட்ட முடியும். ஆகவே, 4,000 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

மின்சார வாரியத்திற்கு 1.79 கோடி ரூபாய் அதிகமாகக் கொடுப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மழை இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் ஒருசில இடங்களில் கிணறுகளில் இருக்கக்கூடிய தண்ணீரை இறைப்பதற்கு மின் இணைப்புக் கேட்டால் கம்பி இல்லை என்ற பதில்தான் வருகிறது. மின்சார இலாகாவில் கம்பிகளை அதிகமாக வாங்க வழி செய்யவேண்டும். கிராமங்களில் பல்புகள் இல்லாமல் விளக்குகள் எரிவதில்லை. மின்சார வாரிய பட்ஜட் விவாதத்தின்போது ஆளும் கட்சி உறுப் பினர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் இதைப்பற்றி எடுத்துக் கூறியிருக்கிறார்கள். (மணி அடிக்கப்பட்டது) இதையெல்லாம் இலாகா சரிவரக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. காதர்பாட்சா என்ற வெள்ளைச்சாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1974–75-ம் ஆண்டு துணை மதிப்பீடுகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்பு கிறேன்.



1974 டிசம்பர் 21] [திரு. காதர்பாட்சா என்ற வெள்ளைச்சாமி]

அரசினுடைய அரிய சாதனையாக குடும்ப நலத் திட்டம், சமூக நலத்திட்டம் போன்ற திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்திருப்பதை வரவேற்றுப் பாராட்டு கிறேன்.

அரிசன மக்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பத்தாயிரம் வீடுகளைக் கட்டிக் கொடுத்து மேலும் பல ஆயிரக்கணக்கான வீடுகளைக் கட்டிக் கொடுக்க முடிவு செய்திருப்பதற்காக மனதாரப் பாராட்டுகிறேன்.

மாணவர்களுக்கு உணவு விடுதியில் உணவு வழங்குவதற்காகத் தரப்படுகின்ற உதவித் தொகை மாணவர் ஒருவருக்கு 5 ரூபாய் என்று உயர்த்தியிருக்கிறார்கள். அது பற்றாக்குறையாக இருக் கிறது. இன்னும் கொஞ்சம் உயர்த்திக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும்.

ஊராட்சி ஒன்றியத்தின் நிர்வாகத்தில் இருக்கக்கூடிய 100 ஏக்கருக்குக் கீழ்ப்பட்ட கண்மாய்களையும், 100 ஏக்கருக்கு மேற் பட்டிருக்கக்கூடிய பொதுப்பணித்துறைக் கண்மாய்களையும் மராமத்து செய்ய மூன்று கோடி ரூபாய் முனைப்புத் திட்டத்தை அரசு அறிவித்திருப்பதற்காக மனதார நன்றி செலுத்திக் கொள் கிறேன்.

1,500 மக்களுக்குக் கீழ் ஜனத்தொகை உள்ள கிராமங்களுக்குப் புதிய சாலைகளை அமைக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக இந்த அரசைப் பாராட்டுகிறேன்.

இவ்வளவு திட்டங்களைச் செயல்படுத்துகிற நேரத்தில் நான் சார்ந்திருக்கும் இராமநாதபுரம் மாவட்டம் வறட்சியால் வாடிக் கொண்டிருக்கும் அவல நிலையை இந்த அவை அறியுமென்று கருது கிறேன். 'சோதனை மேல் சோதனை, வாழ்க்கை எல்லாம் வேதனை' என்று சொல்லுவார்கள். இந்த நிலைமையில் அந்தப் பகுதி இருக்கிறது.

இராமநாதபுரம் மாவட்டம் இயற்கையின் கோபத்தால் ஒரு வேளை புயலாக வந்து தாக்குகிறது. இல்லாவிட்டால் மழையே இல்லாமல் விவசாயம் பாழடைந்து விடுகிறது. இப்படி அந்தப் பகுதி மக்கள் அல்லலுறும் நிலைமையைப் பார்க்கிறோம். வறட்சியின்

காரணமாக எந்தக் கிராமத்திலும் குடிக்கத் தண்ணீர் இல்லை. உணவு கிடைக்க வழி இல்லை. வேலையில்லாத் திண்டாட்டத்தினால், மதுரை, தஞ்சை, திருநெல்வேலி நோக்கி லட்சக்கணக்கான மக்கள் போகிற அவல நிலை இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசாங்கம் நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்த இருக்கிறது என்று பேரவையில் அறிவித்திருக்கிறார்கள். நான் அதுபற்றி ஒரு ஆலோசனையைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஒரு சில கிராமங்களிலே நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. எங்கள் பகுதியிலே எல்லாக் கிராமங்களிலும் வாங்கிச் சாப்பிடுகின்ற நிலை தான் இருக்கிறதே தவிர, வைத்துச் சாப்பிடுகின்ற நிலை இல்லை. ஆகவே, இருக்கின்ற உணவுப் பொருளை எல்லாக் கிராமங்களுக்கும் சரி சமமாக வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இல்லாவிட்டால் பொதுவாழ்வில் இருப்பவர்களுடைய நிலை மிக மிக மோசமாகப் போய்விடுகிறது. ஒரு கிராமத்தில் உணவுப் பொருள் விநியோகித்து இன்னொரு கிராமத்தில் வழங்கப்படவில்லை என்று சொன்னால் அந்த ஊர் மக்கள் அரசாங்கத்தின் மீது பெரிய குற்றச்சாட்டைக் கூறக்கூடிய நிலைமை ஏற்படுகிறது (மணி அடிக்கப்பட்டது).

வேலை வாய்ப்புக்காக வறட்சி நிவாரணப் பணியில் அதிகமாக நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்காக அரசுக்கு நன்றி. வேலை வாய்ப்புத் திட்டத்தின் வேலைகளை காண்டிராக்டுக்கு விடுகிற முறையை நீக்கி அந்தந்த ஊராட்சி ஒன்றியத்திற்கே குளங்களை மராமத்து செய்வது போன்ற வேலைகளைச் செய்யும் பொறுப்பைக் கொடுத்தால் முழு உதவியும் கிராம மக்களுக்குப் போய்ச் சேர வாய்ப்பு ஏற்படும்.

மனிதர்களுக்கு மட்டுந்தான் உணவு வழங்கும் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். கால்நடைகளுக்குத் தீனி இல்லாமல் விவசாயிகள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். கால்நடைகளுக்குத் தீனியை, வைக்கோலை தஞ்சை, மதுரை போன்ற பகுதிகளிலிருந்து வாங்க வேண்டியிருக்கிறது. கால்நடைகளுக்குத் தீனி வாங்குவதற்காக விவசாயிகளுக்குக் கடன் வழங்கும் திட்டத்தைக் கொண்டு வரவேண்டும். ஒரு பகுதியை மானியமாகக் கூடக்





கொடுக்கலாம். வேலையில்லாத் திண்டாட்டத்தினால் பலரும் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய நிலையில் விவசாயிகளுக்கு விதைகள் வாங்கவும், உரம் வாங்கவும் கடன் கொடுப்பதோடு தக்காவிக் கடன்களையும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

திரு. எம். சுரேந்திரன்: உதவி சபாநாயகர் அவர்களே, முதலமைச்சரும் நிதியமைச்சருமான முதலமைச்சர் அவர்கள் சபையின் அனுமதிக்காக வைக்கப்பட்டிருக்கின்ற இரண்டாவது மானியக் கோரிக்கைக்கு அனுமதி அளிப்பதிலே எந்தவிதமான சங்கடமும் இருந்தது இல்லை. எப்போது மானியக் கோரிக்கைகளைக் கொண்டு வந்தாலும் இந்தச் சபை தாராளமாக அனுமதி அளித்து வருகிறது. ஆனால் அந்த நிதி எல்லாம் சரியாகச் செலவிடப்படுகிறதா என்பதிலேதான் இந்தச் சபைக்கு சமீப காலத்திலே மிக அதிகமான சந்தேகங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பது இங்கே நடந்த நிகழ்ச்சிகளில் இருந்து நாம் தெரிந்து கொள்ள முடிகிறது.

எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல் உணவு வியாபாரம் செய்வதற்கான சாதாரண லைசென்ஸ்கூட இல்லாத தாண்டவராயனுக்கு கோடிக்கணக்கான ரூபாய்களுக்கான டெண்டரை அளித்தார்கள் என்ற குற்றச்சாட்டு சாதாரணமாக விட்டு விடக்கூடியதல்ல என்று இந்த நேரத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இதனால் நாம் அனுமதிக்கின்ற பணம் எல்லாம் முறையாகச் செலவிடப்படுகிறதா என்ற சந்தேகம் ஒவ்வொரு நாளும் அதிகப்பட்டுக்கொண்டே வருகிறது.

இப்போது நம்முடைய மாநிலம் வறட்சியான, பஞ்சமான நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. இதற்காகச் சில பரிகாரங்களை முதலமைச்சர் அவர்கள் இந்தச் சபையில் கூறியிருக்கிறார்கள். இந்தச் சபையில் கூறப்படும் வாக்குறுதிகள் எல்லாம் நிறைவேற்றப்படுமா என்பதிலே இப்போது சந்தேகங்கள் தோன்றியிருக்கின்றன. நேற்றையதினம் நகரசபைத் தேர்தல்களை ஒத்திவைக்க இங்கு மசோதா கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது. இது நிறைவேற்றப்படுவதற்கு முன்னால் பல நேரங்களில் நிச்சயமாகத் தேர்தல் நடக்கும் நடக்கும் என்று கூறினார்கள். இப்படிப் பலநேரங்களிலே கூறினார்கள். கூறியதோடு மட்டுமல்ல முதலமைச்சர் அவர்கள் பொதுக்குழுக் கூட்டம் முடிந்து

வெளியே வந்து பத்திரிகைகளுக்கு அறிவித்தார்கள். 'கட்டாயமாகத் தேர்தல் நடக்கும்; அப்படி நடப்பதன் மூலமாக பொதுத் தேர்தலில் யார் யார் பங்கெடுத்துக் கொள்ளத் தகுதி உள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதை அறிய வாய்ப்பாக இருக்கும்' என்று சொன்னார்கள். நகராட்சித் தேர்தல்கள் மேலும் ஒத்தி வைக்கப்பட மாட்டாது என்று சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் சொன்ன வாக்குறுதியைவிட முதலமைச்சர் அவர்கள் மேலான வாக்குறுதியை அளித்தார்கள். ஆனால், இப்போது மீண்டும் அது ஒத்தி வைக்கப்படுகிறது. ஆகவே, அமைச்சர்கள் கொடுக்கின்ற நம்பிக்கையும், உறுதிமொழியும் ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலை இல்லாமல் போய்விட்டது என்று இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வறட்சி நிவாரணம் என்று சொல்லுகிறபோது பல கருத்துக்கள் சொல்லப்பட்டாலும்கூட மாநிலத்திலே இருக்கிற எல்லா மக்களுக்கும் உணவுத் தட்டுப்பாடு இல்லாமல் கொடுக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்பதை அவ்வளவு பேரும் ஏற்றுக் கொள்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்தவுடனே மிகக் குறைந்த விலையில் அரிசி பல இடங்களில் வழங்கப்பட்டு வந்தது, பிற்காலத்திலே எடுக்கப்பட்டு விட்டது. மக்களுடைய நலனை முதன்மையாகக் கருதி அப்போது அந்த வகையில் அரிசி வழங்கப்பட்டது. அப்படி அவர்கள் வழங்கியது அவர்களுடைய பிரச்சாரத்திற்குத்தான் பயன்பட்டது. இன்றைக்கு உண்மையிலேயே மக்களுக்கு அப்படி ஒரு நிலையைத் தோற்றுவிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அரசாங்கம் பல்வேறு முறைகளில், பல்வேறு காரியங்களில் பணத்தை நஷ்டப் படுத்திக்கொண்டே இருக்கிறது.

(நண்பகல் 12-00)

இதிலே சிறிது நஷ்டப்பட்டாலும், குறைந்த விலையில் அரிசி விற்க அரசுப் பணத்தைச் செலவு செய்தாலும் அது எந்த வகையிலும் நஷ்டமாகாது. என் தொகுதியைப் பொறுத்த வரையில் அந்தப் பகுதியில் மேட்டூர் அணை இருக்கிறது. அந்தத் தண்ணீர் வெளியே செல்கிறது. அந்தப் பகுதி மக்களுக்கு அந்தத் தண்ணீரால் பலன் இல்லை. அங்கு பாசன வசதி உள்ள எந்தவிதமான விவசாயமும் கிடையாது. ஆகவே வறட்சி நிலை நிரந்தரமாக இருந்து கொண்டிருக்கிற பகுதி அது. இப்போது நம் மாநிலத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எந்தெந்தப் பகுதிகளை வறட்சி





யான பகுதிகள் என்று அறிவிக்கிறார்களோ அந்தப் பகுதிகள்தான் வறட்சிப் பகுதிகள் என்று வருமே தவிர மற்றவர்கள் சொல்கிற கருத்துக்கள் எல்லாம் இங்கே வருமா என்பது சந்தேகமாக இருக்கிறது.

* * * *

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, * என்று சொல்வது நல்லதல்ல. நான் சொன்னதும், அவர்கள் சொன்னதும் அவைக் குறிப்பில் ஏறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** * * பற்றிய குறிப்புகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. எம். சுரேந்திரன்:** மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டத்தில் பேசிப் பத்திரிகைகளில் வந்த செய்தி. அதைத்தான் நான் சொல்கிறேன். இன்னொன்று, இப்போது உணவு நெருக்கடி இருக்கிறது. இந்த உணவு நெருக்கடி பற்றிய புள்ளிவிவரங்களை, மற்றவைகளை எல்லாம் வைத்துப் பார்க்கும்போது உணவு இங்கேயே இருக்கிறது என்று இந்த மன்றத்தில் சொல்கிறார்கள், அமைச்சர் அவர்கள்கூடச் சொல்லியிருக்கிறார்கள். பதுக்கல் இருக்கலாம், உணவு இங்கேயே இருக்கிறது என்றெல்லாம் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அந்தப் பதுக்கலைப் பிடிக்க முடியாமல் இருப்பதற்கு காரணம் என்ன என்பதை ஆராயும்போது ஒன்று நான் சொல்கிறேன். யாரும் வேதனைப்பட்டுக்கொள்ளக்கூடாது. சமுதாய சீர்திருத்தப் பணிகளை எல்லாம் எடுத்துச் செய்து கொண்டிருக்கிறோம். கண்ணொளி வழங்கும் திட்டம், கால் நொண்டி, முடமானவர்களுக்கு வாழ்வளிப்பது, பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டம், இதுபோன்ற காரியங்களை எல்லாம் நம் முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துச் செய்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு முன்னால் ஒரு சந்தர்ப்பத்தில் நான் சொல்லி இருக்கிறேன். இது போன்ற காரியங்களை எல்லாம் சமூக சேவாஸ்தாபனங்களிடம் விட்டு விடுவது நல்லது. அவற்றின் விளைவாக ஏற்படும் சாதனை

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

களைப் பற்றி நீங்கள் சொல்லும்போது வேதனைகளைப் பற்றி ஒரு பக்கம் எதிர்க்கட்சியினர் சொல்லவேண்டியிருக்கிறது. இந்தப் பதுக்கல்காரர்கள் யார் என்று பார்க்கும்போது * * இம்மாதிரியான காரியங்களுக்கு அவர்களிடம் நன்கொடை வாங்கிக்கொண்டு அவர்களையெல்லாம் கொடைவள்ளல்களாக மாற்றி இருக்கிற சூழ்நிலையில் அவர்கள் தைரியமாக, தாராளமாக பதுக்கலைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் முன்பே சொல்லியிருக்கிறேன். * * போன்ற அதிகாரிகளை இந்த அவையில் இழுப்பது சரியல்ல என்று. அவர்களைப் பற்றிய குறிப்புகளை அவைக் குறிப்பேட்டிலிருந்து நீக்குகிறேன் என்று ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். எனவே உறுப்பினர் அவர்கள் அந்த முறையை மாற்றிக்கொண்டு இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன்:** ஒருவரையும் குற்றஞ்சாட்டவேண்டுமென்று சொல்லவில்லை. இந்த அரசாங்கம் தங்களுடைய காரியங்களைச் செய்கிறபோது அவற்றின் முன்விளைவுகள், பின்விளைவுகள் இவற்றையெல்லாம் ஆலோசித்துச் செய்யவேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். இதில், யார் யார் கருவிகளாகப் பயன்படுகிறார்கள் என்பதற்காகத்தான் சொல்கிறேன். அப்படி அவர்களைக் கருவிகளாகப் பயன்படுத்துவது நியாயமா என்று கேட்கிற முறையில்தான் இதைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நன்கொடை வசூலிப்பது என்றால் ஏதோ மாநில அரசு மட்டும் செய்கிற காரியம் அல்ல. மத்திய அரசுங்கூட அப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிறது. நல்ல காரியங்களுக்காக நன்கொடை வசூலிப்பதையும், அவற்றிற்காக நன்கொடை கொடுத்திருக்கிறவர்களை நல்ல காரியங்களுக்காக நன்கொடை கொடுக்கிறவர்கள் தவறு செய்தால் விட்டுவிடுவது என்பது நல்லதல்ல. நன்கொடை கொடுத்து யாராவது தவறு செய்யலாம் என்று நினைத்தால் இந்த அரசு யாரையும் விட்டுவைக்காது, விட்டுவைக்கமாட்டோம்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.



**திரு. எம். சுரேந்திரன்:** யார் செய்கிறார்கள் என்பதல்ல. நான் இந்தச் சபையில் பேசுகிறேன். இந்த மாநிலத்தைப் பற்றி, ஏதாவது நடைமுறைக்கேடுகள், தவறுகள் நடந்தால் அதை எடுத்துச் சொல்வது என் கடமை. அந்தக் கடமையைத்தான் நான் இங்கே செய்து கொண்டிருக்கிறேன். அம்மாதிரி பதுக்கல் பேர்வழிகள் தைரியமாக பதுக்கி வைத்துக்கொண்டு இருப்பதற்கும் அந்தப் பதுக்கலைக் கண்டு பிடித்து நடவடிக்கைகள் எடுக்காமல் இருப்பதற்கும் . . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இந்த அரசுக்கு நன்கொடை கொடுத்துவிட்டு அல்லது சமூக நலத் திட்டங்களுக்கு, பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம் அல்லது கண்ணொளி வழங்கும் திட்டம் இவைகளுக்கு நன்கொடை கொடுத்துவிட்டு அதற்குப் பிறகு தவறு செய்துவிட்டு நன்கொடை கொடுத்ததின் காரணமாக தப்பித்துக்கொண்டார்கள் என்ற விவரம் இருந்தால் சொல்வது நல்லது.

**திரு. எம். சுரேந்திரன்:** அதைவிட்டுவிடுகின்றேன். இதை அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டால் போதுமானது என்பது தான் என் கருத்து.

(மணியடிக்கப்பட்டு திரு. துரைசாமி பேசுவதற்கு அழைக்கப் பட்டார்.)

***திரு. சு. துரைசாமி:** தலைவரவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தத் துணை நிதிநிலை அறிக்கையை ஆதரித்து என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

கடந்த நூறு ஆண்டுகளாக இல்லாத அளவிற்கு வறட்சி ஏற்பட்டதின் பேரில் நம் அரசு எடுத்திருக்கிற நடவடிக்கைகள் குறித்து முதல் அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் தெரிவித்தார்கள். வறட்சிப் பகுதிகளில் (1) அரசு கடன்களை வசூலிப்பதை உடனடியாகத் தள்ளி வைக்கும். (2) வறட்சிப் பகுதிகளில் இந்த ஆண்டு நிலவரி வசூலிக்கப்படமாட்டாது. (3) கூட்டுறவு மூலமாக கடன்கள் பெற்றவர்களுக்கும் கடன்கள் வசூல் செய்யப்படுவது தள்ளி வைக்கப்படும். (4) சிறு நிலச் சொந்தக்காரர்களுக்கு லெவியில் இருந்து பூரணமாக விலக்கு அளிக்கப்படும்.

[திரு. சு. துரைசாமி] [1974 டிசம்பர் 21

(5) டீசல் என்ஜின் வாங்க ஆயிரம் ரூபாய் உதவித் தொகை கொடுக்கப்படும். (6) 60,000 மின் இணைப்புகள் கொடுக்கப்படும் என்றெல்லாம் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு முன்பெல்லாம் வறட்சி நிலை ஏற்பட்டால் மாநில அரசு வறட்சி ஏற்பட்டுவிட்டது என்பதைப் பற்றி பல்வேறு கட்சிகளைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுவதைப் பார்த்தும் ஆங்காங்குள்ள மக்கள் பிரதிநிதிகள் பேசுவதைப் பார்த்தும் கடன்கள் வசூலிப்பதைத் தள்ளி வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அதற்குப் பின்னால்தான் மாநில அரசுக் கடன்கள் வசூலிப்பது தள்ளிவைக்கப்படும் நிலை ஏற்பட்டிருப்பதை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் நமது அரசைப் பொறுத்த வரையில் மக்களுடைய கோரிக்கை வருவதற்கு முன்பாகவே நமது முதல் அமைச்சர் அவர்கள் அளித்திருக்கிற சலுகைகளை நாம் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம். வறட்சிப் பணிகளைப் பொறுத்தவரையில் கோவை மாவட்டம் மிகுந்த வறட்சிப் பகுதி என்பதை எல்லோரும் அறிவார்கள். அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. அங்கு 41 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. குறைந்தது ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஐந்து லட்சம் ரூபாய் விதம் குறைந்தது இரண்டு கோடி ரூபாயாவது கோவை மாவட்டத்திற்கு வறட்சிப் பணிகளுக்காக ஒதுக்கினால்தான் பல்வேறு பணிகளைச் செய்ய ஏதுவாக இருக்கும். வறட்சிப் பணிகளைத் துவக்கும் நேரத்தில், குளம் குட்டைகளை அமைக்கும்போது அவை லாபகரமான முறையில் அமையுமா அமையாதா என்பதைப் பார்க்காமல் நம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கோவை மாவட்டத்தில் ஒரு நிகழ்ச்சியில் பேசும்போது குறிப்பிட்டதைப் போல் மக்களுக்குப் பயன்படுகிற திட்டம் என்று சொன்னால் அது லாபகரமான திட்டமா என்று பார்க்காமல் நிறைவேற்ற வேண்டும் என்று தெரிவித்தார்கள். அந்தமுறையில் இந்தக் குளம் குட்டைகளை அமைக்கும்போது அவை லாபகரமான முறையில் அமைகிறதா இல்லையா என்று பார்க்காமல் அந்தப் பணிகளைத் துவக்கவேண்டும்.



1974 டிசம்பர் 21] [திரு. சு. துரைசாமி]

என் தொகுதியில் தொட்டியம்பாளயத்தில் ஒரு குளம் அமைக்க வேண்டும் என்பது நெடுநாளைய கோரிக்கை. வாரணாசி பாலத்தில் ஒரு குட்டை அமைக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த இரண்டு குட்டைகளையும் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதர மாவட்டங்களைப் பார்க்கும்போது கோவை மாவட்டம், விலைவாசி ஏறியிருக்கிற ஒரு மாவட்டமாகும். தஞ்சை, தென் ஆற்காடு மாவட்டங்களை விட கோவை மாவட்டத்தில் அரிசி விலை அதிகமாக விற்கிறது. அதைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொள்ள வேண்டும். கோவை, திருப்பூர் போன்ற நகரங்களில் ஆயிரம் குடும்பக் கார்டுகளுக்கு ஒரு கடை என்ற முறையில் திறக்கப்படவேண்டும். அதோடு கூட ரூ. 500 என்ற உச்சவரம்பு இருப்பதை ரூ. 700 என்று மாற்றவேண்டும். அங்கு பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு ரூ. 600 அளவிற்குச் சம்பளம் வந்து விடும். ரூ. 500 என்ற உச்சவரம்பு இருந்தால் அவர்களுக்கு உணவுப் பொருள்கள் வாங்கமுடியாத ஒரு நிலை ஏற்படும். எனவே, ரூ. 750 என்ற அளவிற்கு உச்சவரம்பை மாற்றி அவர்களுக்கு அரிசி, சர்க்கரை போன்ற சாமான்களோடு எண்ணெய் போன்ற எல்லா வகைப் பொருள்களும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

நகரங்களில் குடும்பக் கார்ட் மூலம் அரிசி கொடுப்பதைப் போன்று எல்லாக் கிராமங்களிலும் இப்படி ரேஷன் கொடுக்கும் முயற்சியை எடுத்துக்கொள்ளவேண்டும். குறிப்பாக, கிராமங்களில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வறட்சி காரணமாக வேலை இல்லை. அவர்கள் உணவுப்பொருள்கள் வாங்குவதற்கு சிரமப்படுகிறார்கள். அவர்களுக்கும் குடும்பக் கார்ட்களுக்கு நகரங்களில் உணவுப்பொருட்கள் வழங்குவதுபோல் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அந்த மக்கள் சோளம் போன்ற புன்செய் தானியங்கள் கொடுத்தால்கூட வாங்கிச் சாப்பிடுவார்கள். எனவே எல்லாக் கிராமங்களுக்கும் அரிசியோடு கூட புன்செய் தானியங்களையும் நியாயவிலைக் கடைகள் மூலம் கொடுப்பதற்கு வழிவகை செய்யவேண்டும்.

லெவி முறை பற்றி முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஒன்றுமட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது) பரம்பிக்குளம் ஆழியாறு வாய்க்கால் திட்டத்தில்

[திரு. சு. துரைசாமி] [1974 டிசம்பர் 21

இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை தண்ணீர் விடுகிறார்கள். அங்கு லெவி முறை ஆரம்பிக்கும்போது ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர்கள் வைத்திருப்பவர்களுக்குப் பாதிப்பு ஏற்படும். எனவே, அந்தப் பகுதியில் லெவி முறையில் ஒரு மாற்றம் செய்யவேண்டும். ஏனெனில், அங்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் தண்ணீர் விடுகிறார்கள். பின்னர், சென்னை நில நீர் கோட்ட ஆய்வாளர் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். பல்லடம், கோவை, பழனி, சேலம், செஞ்சி போன்ற இடங்களில் புதிய கிணறுகள் வெட்டவோ அல்லது இருக்கிற கிணறுகளுக்கு அடி வெட்டு வெட்டவோ கடன் கொடுப்பதில்லை. புதிய கிணறுகள் வெட்ட முடியாது, இருக்கிற கிணறுகளை அடிவெட்டு வெட்ட முடியாது. அங்குள்ள கால்நடைகள் பாதிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே, அதுகுறித்து மறுபரிசீலனை செய்து அந்த ஐந்து இடங்களிலும் புதிய கிணறுகள் வெட்ட, ஏற்கனவே இருக்கிற கிணறுகளுக்கு அடி வெட்டு வெட்ட உதவி செய்ய வேண்டும்.

கைத்தறித் துணி தேங்கி இருக்கிறது. தனியாரிடமும் தேங்கி இருக்கிறது. எனவே, கூட்டுறவுச் சங்கங்கள் என்று மட்டுமல்லாது தனியாரிடமும் தேங்கிக்கிடக்கிற துணிகளையும் வாங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த நிதிநிலை அறிக்கையை ஆதரித்து என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. என். மருதாசலம்:** கனம் துணைத் தலைவர் அவர்களே, 1974–75 ஆம் ஆண்டுக்கான துணை மதிப்பீட்டின் கீழே நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் துணை மதிப்பீட்டிலே இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, அரிசன மக்களுக்கு நமது அரசாங்கம் உதவி அளிக்க வேண்டுமென்று, அவர்கள் படிக்க வேண்டுமென்று, அவர்களுடைய பெற்றோர் களுடைய வருமான வரம்பை ரூ. 2,500-லிருந்து ரூ. 3,000 ஆக உயர்த்தியிருக்கிறது. இப்படி வரம்பு அதிகப்படுத்தப் பட்டிருந்தாலும் தாழ்த்தப்பட்ட மக்கள் அரசாங்கத்தின் உதவியைக் கொண்டு படிக்க முடியுமா என்பதைச் சற்று சிந்திக்க வேண்டும். ஏனென்றால் மில்களில் வேலை செய்கின்ற தொழிலாளி களும், சர்க்கார் காரியாலயங்களில் வேலை செய்பவர்களும், முனிசிபல் தொழிலாளிகளும் ரூ. 250, 300 என்று மாதச் சம்பளம்



1974 டிசம்பர் 21] [திரு. என். மருதாசலம்]

பெறுகிறார்கள். அதை வருஷத்திற்குக் கணக்குப் பார்த்தால் ரூ. 4000 என்று ஆகிறது. இப்படிப்பட்ட நிலைமை இருந்தும் ரூ. 3000 என்ற அளவில்தான் வருமான வரம்பு வைக்கப் பட்டிருக்கிறது. ஆகவே, ரூ. 3000 என்று விதிக்கப்பட்டிருக்கிற வருமான வரம்பை ரூ. 5,000 ஆக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி உயர்த்தினால்தான் அவர்களுடைய குழந்தைகள் அரசாங்க உதவி பெற்றுப் படிப்பதற்கு வசதியாக இருக்கும். ' ஆகவே, இந்த வேண்டுகோளை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 'நைட் கல்லூரி'-யில் படிக்கும் மாணவர்கள் பற்றி முன்னாலேயே அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள். மத்திய சர்க்கார் கொடுக்கக்கூடிய மானியத்தை நிறுத்தி விட்டார்கள். அந்த மானியத்தை மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை வாங்கி ரூ. 50 கட்டிப் படிப்பார்கள். இந்த மானியத்தை இப்பொழுது நிறுத்திவிட்டார்கள். அந்தப் பணம் அவர்களுக்கு இப்பொழுது கிடைக்கவில்லை. ஏனென்றால் மானியம் நிறுத்தப் பட்டு விட்டது. ஆகையினால் தமிழக அரசு இந்த மானியத்தை உடனடியாகக் கொடுத்து அவர்கள் படிப்பதற்கு வழிவகைகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு கூட முனிசிபல் தொழிலாளர்களுக்கு அதிகப்படி யாகச் சம்பளத்தை உயர்த்தியிருக்கிறார்கள். அதாவது, ரூ. 100 அடிப்படைச் சம்பளம், அதைத் தவிர பஞ்சப்படி மற்றவை களெல்லாம் அதிகமாகியிருக்கிறது. அதே மாதிரி முனிசிபல் தொழிலாளர்களுக்குச் சம்பளத்தை உயர்த்தியிருக்கும்பொழுது, முனிசிபாலிடியைச் சேர்ந்த ஆஸ்பத்திரியில் வேலை செய்கின்ற தொழிலாளிகளுக்குச் சம்பளம் உயர்த்தப்படவில்லை. ஆகவே, முனிசிபாலிடி ஆஸ்பத்திரியில் வேலை செய்யும் தொழிலாளர் களுக்கும் முனிசிபல் தொழிலாளர்களைப் போலவே சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவை நகரசபையில் மின்சார இலாகாவில் வேலை செய்யும் ஊழியர்கள் இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்னால் போராட்டம் நடத்தினார்கள், உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார்கள். அவர்களுக்கு அதிகப்படியான கிராஜுவிடி வேண்டும், ரிடையர் ஆகும் வயது வரம்பை 58 ஆக உயர்த்த வேண்டும், சர்வீஸ் அடிப்படையில் வேலை உயர்வு தரவேண்டும்

இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை தண்ணீர் விடுகிறார்கள். அங்கு லெவி முறை ஆரம்பிக்கும்போது ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர்கள் வைத்திருப்பவர்களுக்குப் பாதிப்பு ஏற்படும். எனவே, அந்தப் பகுதியில் லெவி முறையில் ஒரு மாற்றம் செய்யவேண்டும். ஏனெனில், அங்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் தண்ணீர் விடுகிறார்கள். பின்னர், சென்னை நில நீர் கோட்ட ஆய்வாளர் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். பல்லடம், கோவை, பழனி, சேலம், செஞ்சி போன்ற இடங்களில் புதிய கிணறுகள் வெட்டவோ அல்லது இருக்கிற கிணறுகளுக்கு அடி வெட்டு வெட்டவோ கடன் கொடுப்பதில்லை. புதிய கிணறுகள் வெட்ட முடியாது, இருக்கிற கிணறுகளை அடிவெட்டு வெட்ட முடியாது. அங்குள்ள கால்நடைகள் பாதிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே, அதுகுறித்து மறுபரிசீலனை செய்து அந்த ஐந்து இடங்களிலும் புதிய கிணறுகள் வெட்ட, ஏற்கனவே இருக்கிற கிணறுகளுக்கு அடி வெட்டு வெட்ட உதவி செய்ய வேண்டும்.

கைத்தறித் துணி தேங்கி இருக்கிறது. தனியாரிடமும் தேங்கி இருக்கிறது. எனவே, கூட்டுறவுச் சங்கங்கள் என்று மட்டுமல்லாது தனியாரிடமும் தேங்கிக்கிடக்கிற துணிகளையும் வாங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த நிதிநிலை அறிக்கையை ஆதரித்து என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. என். மருதாசலம்:** கனம் துணைத் தலைவர் அவர்களே, 1974–75 ஆம் ஆண்டுக்கான துணை மதிப்பீட்டின் மீதே நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் துணை மதிப்பீட்டிலே இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, அரிசன மக்களுக்கு நமது அரசாங்கம் உதவி அளிக்க வேண்டுமென்று, அவர்கள் படிக்க வேண்டுமென்று, அவர்களுடைய பெற்றோர்களுடைய வருமான வரம்பை ரூ. 2,500-லிருந்து ரூ. 3,000 ஆக உயர்த்தியிருக்கிறது. இப்படி வரம்பு அதிகப்படுத்தப் பட்டிருந்தாலும் தாழ்த்தப்பட்ட மக்கள் அரசாங்கத்தின் உதவியைக் கொண்டு படிக்க முடியுமா என்பதைச் சற்று சிந்திக்க வேண்டும். ஏனென்றால் மில்களில் வேலை செய்கின்ற தொழிலாளிகளும், சர்க்கார் காரியாலயங்களில் வேலை செய்பவர்களும், முனிசிபல் தொழிலாளிகளும் ரூ. 250, 300 என்று மாதச் சம்பளம்





பெறுகிறார்கள். அதை வருஷத்திற்குக் கணக்குப் பார்த்தால் ரூ. 4000 என்று ஆகிறது. இப்படிப்பட்ட நிலைமை இருந்தும் ரூ. 3000 என்ற அளவில்தான் வருமான வரம்பு வைக்கப் ரூ. 3000 என்ற அளவில்தான் வருமான வரம்பு வைக்கப் பட்டிருக்கிறது. ஆகவே, ரூ. 3000 என்று விதிக்கப்பட்டிருக்கிற வருமான வரம்பை ரூ. 5,000 ஆக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி உயர்த்தினால்தான் அவர்களுடைய குழந்தைகள் அரசாங்க உதவி பெற்றுப் படிப்பதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, இந்த வேண்டுகோளை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 'நைட் கல்லூரி'-யில் படிக்கும் மாணவர்கள் பற்றி முன்னாலேயே அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள். மத்திய சர்க்கார் கொடுக்கக்கூடிய மானியத்தை நிறுத்தி விட்டார்கள். அந்த மானியத்தை மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை வாங்கி ரூ. 50 கட்டிப் படிப்பார்கள். இந்த மானியத்தை இப்பொழுது நிறுத்திவிட்டார்கள். அந்தப் பணம் அவர்களுக்கு இப்பொழுது கிடைக்கவில்லை. ஏனென்றால் மானியம் நிறுத்தப் பட்டு விட்டது. ஆகையினால் தமிழக அரசு இந்த மானியத்தை உடனடியாகக் கொடுத்து அவர்கள் படிப்பதற்கு வழிவகைகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு கூட முனிசிபல் தொழிலாளர்களுக்கு அதிகப்படியாகச் சம்பளத்தை உயர்த்தியிருக்கிறார்கள். அதாவது, ரூ. 100 அடிப்படைச் சம்பளம். அதைத் தவிர பஞ்சப்படி மற்றவைகளெல்லாம் அதிகமாகியிருக்கிறது. அதே மாதிரி முனிசிபல் தொழிலாளர்களுக்குச் சம்பளத்தை உயர்த்தியிருக்கும்பொழுது, முனிசிபாலிடியைச் சேர்ந்த ஆஸ்பத்திரியில் வேலை செய்கின்ற தொழிலாளிகளுக்குச் சம்பளம் உயர்த்தப்படவில்லை. ஆகவே, முனிசிபாலிடி ஆஸ்பத்திரியில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் முனிசிபல் தொழிலாளர்களைப் போலவே சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவை நகரசபையில் மின்சார இலாகாவில் வேலை செய்யும் ஊழியர்கள் இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்னால் போராட்டம் நடத்தினார்கள், உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார்கள். அவர்களுக்கு அதிகப்படியான கிராஜுவிடி வேண்டும், ரிடையர் ஆகும் வயது வரம்பை 58 ஆக உயர்த்த வேண்டும், சர்வீஸ் அடிப்படையில் வேலை உயர்வு தரவேண்டும்

என்றெல்லாம் கோரிக்கைகள் வைத்து உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார்கள். அதைப் பற்றி நகரசபை உடனே முடிவெடுத்து, மின்சார போர்டில் கொடுக்கக் கூடிய, அந்த இலாகாவில் வேலை செய்யக் கூடிய ஊழியர்களுக்குக் கொடுக்கக் கூடிய சம்பளத்தை நகரசபை ஊழியர்களுக்கும் தரவேண்டும் என்று தீர்மானம் போடப்பட்டு, அது அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே, அரசு அதன்பேரில் உடனடியாக நடவடிக்கை எடுத்து அங்கே மின்சார இலாகாவில் வேலை செய்யும் ஊழியர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதுக்கரை பிர்க்காவில் ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. போலீஸ் இலாகா நவீன முறையில் நடக்க வேண்டும் என்று சொல்லியிருப்பதை வரவேற்கிறோம். ஆனால் போலீஸார் சில சமயங்களில் வரம்பு கடந்து நடப்பதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கோவை மதுக்கரை பிர்க்காவில் போடிப்பாளையத்தில் ஒரு விநாயகர் சிலை திருட்டுப் போயிற்று. திருட்டைக் கண்டுபிடித்து, திருடியவர்களின் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதில் சந்தேகமில்லை. ஆனால் நிரபராதிகள் இரண்டு பேர்களை போலீஸ் ஸ்டேஷனுக்குக் கூட்டிக்கொண்டு வந்து, லாக்கப்பில் வைத்து முதுகுத் தோல் உரியும்படி அடித்திருக்கிறார்கள். அப்படி அடித்தது மாத்திரமல்ல. அவர்கள் தண்ணீர் கேட்டதற்கு * * * * * * * *

அக்கிரமம் செய்திருக்கிறார்கள். அவர்களின் பேரில் நடவடிக்கை எடுப்பதற்கு போலீஸ் அதிகாரிகளுக்கும், அமைச்சருக்கும் விண்ணப்பம் அனுப்பியும் இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகவே . . . . .

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில வார்த்தைகளை உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். அது 'இண்டீஸண்டாக' இருக்கிறது. ஆகவே, அவைகளை சபைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





**திரு. என். மருதாசலம் :** போலீஸ்காரர்கள் அப்படிப்பட்ட அக்கிரமச் செயல்களைச் செய்யாமல் இருப்பதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த முறைகளையெல்லாம் போலீஸ்காரர்கள் கையாள்வதை நிறுத்திவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது சில வார்த்தைகளை உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். அவைகள் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுவதற்காகவும், உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுவதற்காகவும் சொல்லப்பட்டதே தவிர, அவையின் குறிப்பிலே அவைகள் இடம் பெறுவது நல்லது அல்ல. ஆகவே அந்த வார்த்தைகளை அவையின் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன். உறுப்பினர் இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துவிட வேண்டும்.

**திரு. என். மருதாசலம் :** அடுத்து போத்தனூரில் ஒரு சம்பவம் நடந்தது. ஒரு குத்தகை விவசாயி நிலத்தில் மகசூல் செய்து கொண்டிருந்தான். நிலச் சொந்தக்காரர் விவசாயியை பூமியிலிருந்து அகற்றுவதற்காக நிலத்தை விட்டு வெளியே போகவேண்டுமென்று சொன்னார். குத்தகை விவசாயி இப்பொழுது போக முடியாது, மகசூலை எடுத்துக் கொண்டு தானே போக வேண்டும் என்று சொன்னான். பக்கத்து பூமிக்காரர், நிலச் சொந்தக்காரர் மகசூலுக்கு தீயை வைத்துவிட்டார். அதிலே இரண்டு மாடுகள் செத்துவிட்டன. இதைப்பற்றிப் போலீஸாருக்கு ரிப்போர்ட்டு கொடுத்தும் இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, அவர்களைக் கூப்பிட்டுக் கூட கேட்கவில்லை. அம்மாதிரிச் சம்பவங்கள் நடக்காமல் தடுக்க வேண்டும். . . . . (மணி அடிக்கப்பட்டது)

**திரு. துரை முருகன் :** தலைவர் அவர்களே, தமிழகத்து முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1974–75 ஆம் ஆண்டுக்கான இரண்டாவது துணை மதிப்பீட்டை இந்த மன்றத்தில் வைத்து இருப்பதைக் குறித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன்.

துணை மதிப்பீடானாலும் சரி, அல்லது நிதி நிலை அறிக்கையானாலும் சரி, வேறு பல கொள்கை விளக்கங்களானாலும் சரி, எல்லாவற்றையும் தொகுத்துப் பார்த்தால், இந்த அரசு ஏழை

எளியவர்களுக்கும், நடுத்தர வகுப்பினருக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும். அவர்களுடைய வாழ்வு உயர்வதற்காகத் திட்டப்படுகின்ற திட்டங்கள்தான் தென்படுகின்றன. இந்தத் துணை மதிப்பீட்டில் நீங்கள் பார்த்தால்கூட அரசு அலுவலர்களுக்கான குடும்பப் பாதுகாப்பு நிதி, கிராம அதிகாரிகளுக்கும், பணியாளர்களுக்கும் ரூ. 10 உயர்வு, சமூகநலத் திட்டம், உடல் ஊனமுற்றோர் நல்வாழ்விற்கான திட்டம், அரிசன வீட்டு வசதி வாரியம், பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்களின் பெற்றோர்களின் ஆண்டு வருமானத்திற்கு அதிக உச்சவரம்பு, மாணவர்களுக்கு மதிய உணவு, காவல் துறையை நவீனப்படுத்துதல், சர்க்கரை ஆலைகள், போக்குவரத்து இப்படிப் பல்வேறு முக்கியமான அம்சங்களை, நடுத்தர மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வாழ்வு அளிக்கக்கூடிய பல்வேறு அம்சங்களைக் கொண்டதாக அமைந்திருக்கிறது.

அதேபோல் வருவாய் நிதிநிலை அறிக்கையை எடுத்துக் கொண்டாலும் இப்படிப்பட்ட நல்ல பல திட்டங்கள் இந்த சர்க்காரால் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

எனக்கு முன்னால் பேசியவர்கள் சொன்னதுபோல, வறட்சி நிவாரணம் குறித்து ஏற்கனவே இந்த மாமன்றத்தில் அறிவிக்கப்பட்டிருக்கின்ற திட்டங்களைப் பார்த்தால், அதாவது, அரசுக் கடன்களை வறட்சிப் பகுதிகளில் தள்ளிவைத்தல், வறட்சிப் பகுதிகளில் நிலவரி வசூலிக்கப்படமாட்டாது. கூட்டுறவுப் பகுதிக் கடன்களைத் தள்ளிவைத்தல், 1,600 பம்பு செட்டுகளுக்கு உடனடி மின் இணைப்பு, 60,000 பம்பு செட்கள் அமைக்க தீவிர நடவடிக்கை, விவசாயத்திற்குத் தேவையான பம்பு செட்கள், இப்படிப்பட்ட பணிகளுக்காக ரூ. 5 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. சர்க்காருக்கு ஏறத்தாழ 60, 70 கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் வருகின்ற மதுவிலக்கை நிறுத்திவைத்த திட்டத்தை கைவிட்டு, மீண்டும் மதுவிலக்கைக் கொண்டுவந்தும், இருக்கிற நிதிவசதிக்கேற்ப ஏழை எளியவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று முனைந்திருப்பது, எதிர்க்கட்சிகள் நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் நேரத்தில், நாட்டு மக்கள் மத்தியில் நாம் நம்பிக்கைக்கு உரியவர்கள் என்ற அடிப்படையில் பணியாற்றுகிறோம் என்பதற்கு எடுத்துக்காட்டு. இந்த இரண்டாவது துணை மதிப்பீடும், கலைஞர் அவர்களுடைய பேச்சும் இந்த இரண்டின் மொத்தக் கருத்து ஏழை நடுத்தர





மக்களின் பிரதிநிதி இந்த அரசு என்பதை நிரூபிக்கிறது. முன்பு ஒரு தடவை கலைஞர் அவர்கள் சட்டசபையில் 'இந்த அரசு நாளையே கவிழ்ந்துவிடும் என்று சொன்னாலும், எனக்கு உடலில் உள்ள உயிர் இன்னும் ஒரு நிமிடத்தில் போய்விடும் என்று சொன்னாலும், ஏழை எளிய பாட்டாளி மக்களுக்கு வேண்டிய நற்பணிகளை, திட்டங்களைத் தீட்டிவிட்டுத்தான் என் கரம் ஓயுமே தவிர, அதற்கு முன்னால் ஓய்வு பெறாது' என்று கூறியிருக்கிறார். இம்மாதிரிப் பல நல்ல திட்டங்கள் தீட்டப்படுகின்றன ஒரு பக்கத்தில். மறு பக்கத்தில் நம்பிக்கையில்லை என்ற தீர்மானத்தைக் கொண்டுவருகிறார்கள், கண்டனத் தீர்மானத்தைக் கொண்டுவருகிறார்கள். அதே நேரத்தில் கலைஞர் அவர்கள் அவையிலே இத்தகைய பல நல்ல திட்டங்களைச் சமர்ப்பித்துள்ளார்கள்.

'போற்றுவார் போற்றட்டும்,
புழுதிவாரித் தூற்றுபவர் தூற்றட்டும்
தொடர்ந்து செல்வேன் என்றதோர் கருத்தை
எனதுள்ளம் ஏற்றால் எடுத்து உரைப்பேன்,
எவர் வரினும் நில்லேன், அஞ்சேன்

என்ற செய்யுளுக்கு ஏற்ப கலைஞர் அவர்கள் யார் புழுதியை வாரி இறைத்தாலும் அவற்றைத் துச்சம் என்று கருதி இவைகளையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். எதிர்க்கட்சிகள் எங்கள்மீது நம்பிக்கை இல்லை என்றாலும், நாட்டு மக்கள் எங்கள் மீது நம்பிக்கை வைத்து உள்ளே உட்கார வைத்திருக்கிறார்கள். அந்த நம்பிக்கையைப் போக்கடிப்பதற்குத் தமிழ் நாட்டிலே இதுவரை எந்த அரசியல் கட்சியும் தோன்றவில்லை, தோன்ற முடியாது என்ற தைரியத்தோடு நாம் இன்றைய தினம் நம் பயணத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். இந்தத் துணை மானியக் கோரிக்கை வருகிற இந்த நேரத்தில் என்னுடைய கருத்தை எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேலூர் சர்க்கரை ஆலையைப்பற்றிச் சொன்னார்கள். வேலூர் சர்க்கரை ஆலை என்னுடைய தொகுதியின் மையத்திலே அமைந்திருக்கிறது. ஆகவே, அந்த சர்க்கரை ஆலையின் காரியங்கள் துரிதமாக நடைபெறுவதற்கு வழிவகை செய்ய வேண்டும்.

ராஜா தோப்பு, அணைக்கட்டைப் பொறுத்தவரையிலும் சாதாரணமாக வெத்தேரி, அன்னங்குடி, பி. என். பாளையம், சேனூர், காட்பாடி. தலையாரம்பட்டு ஏரிகளில் நீர் நிறைந்திருக்கும். குடியாத்தம், வாலாஜா தாலுகாக்கள் இன்று பஞ்சத்திலே அடிபட்டுக்கொண்டு இருக்கிறது. இதில் என்னுடைய கருத்தை நான் இங்கே சொல்லிக் கொள்கிறேன். அந்த இரண்டு தாலுகாக்களையும் வட ஆற்காடு ஜில்லாவில் பஞ்சப் பகுதியாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். பாசன ஏரிகளை எல்லோரும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்று அதேபோன்று செய்கிற காரணத்தாலே ஏரிகளில் தண்ணீர் இருக்காது. அதற்காக முதலமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் எந்தெந்த ஏரியிலே ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்களோ அதையெல்லாம் நீக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் ஒன்றை இறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஹரிஜனக் காலனிகளுக்கு . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏரிகளில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டுமென்று சொன்னார்கள். அப்படி அகற்றும்போது இவர்கள் ஸ்டே வாங்காமல் இருந்தால் போதும்.

**திரு. துரை முருகன் :** அப்படி சட்டத்திற்குள் நுழைந்து வக்கீல்கள் உள்ளே வராமல் பார்த்துக் கொண்டால் போதும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, எம்.எல்.ஏக்களாக இருக்கிறவர்கள் அரசாங்கத் துறையிலே வக்கீல் தொழிலை நடத்தாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. துரை முருகன் :** ஜூடிஷியரியில் இருந்தால் எம்.எல்.ஏக்களாக வரக்கூடாது என்று சட்டத்தைப் போடுங்கள். கதவு திறந்திருந்தால் உள்ளே நுழைவோம், நம்முடைய மதிப்பிற்குரிய பொன்னப்ப நாடாரையும் சேர்த்துத்தான். ஹரிஜன காலனிகளைப் பொறுத்தவரையிலும் சாலைகளினால் இணைக்கப்பட வேண்டிய ஒன்றுகளிருக்கிறது. என் தொகுதியில் அங்கே சாலைகளே



இல்லாமல் இருக்கிறது. மேல்பாடி, தேம்பள்ளி, வண்டாந்தாங்கல், வெத்தேரி, அன்னங்குடி, கொத்தமங்கலம், தஞ்சானூர் பகுதிகளில் சாலைகளே இல்லாமல் இருக்கிறது. அவர்கள் சுடுகாட்டுக்குப் போவதற்குக்கூட அவர்களுக்கு வழியில்லை. ஆகவே ஹரிஜன மக்களுக்கு சுடுகாட்டுக்குப் போவதற்கு வழி அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். . . . (மணியடிக்கப்பட்டது).

**திரு. மணலி சி. கந்தசாமி :** தலைவரவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கைமீது என்னுடைய அபிப்பிராயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய திரு. துரை முருகன் அவர்கள் மிகவும் தெளிவாக விளக்கியிருக்கிறார்கள். இந்தத் துணை மானியக் கோரிக்கையில் கண்டிருக்கிற விஷயங்களெல்லாம் மிகவும் வரவேற்கத்தக்க விஷயங்கள். குறிப்பாக சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு குடும்பப் பாதுகாப்புத் திட்டத்திற்குக் கட்ட வேண்டிய தொகையை சர்க்காரே கட்ட முன்வந்திருக்கிறது. ஸ்தல ஸ்தாபனங்களில் வேலை செய்பவர்களுக்கும் இதை விஸ்தரிப்பதெல்லாம் மிகவும் பாராட்டத் தக்கவை. இந்தத் துணை மானியத்தில் எந்தவிதமான தோஷமும் சொல்ல முடியாது. இதிலே அக்கிரமம், அநியாயம் இருக்கிறது என்று யாரும் சொல்ல முடியாது. இந்தத் துணை மானிய கோரிக்கை பற்றியும், சர்க்காரின் கொள்கை நடைமுறை பற்றியும் விமரிசனம் செய்து கொள்வதிலே எனக்கு ஆட்சேபணை கிடையாது.

இன்று ஆளுங்கட்சியைச் சேர்ந்த நண்பர் சுப்பு அவர்கள் பேசுகிற முறை சரியல்ல என்று சொல்லிக் கொள்கிறேன். ஒரு கட்சியில் சேர்ந்து விட்டால் அந்தக் கட்சிக்காரர் என்பதை உணரவேண்டும். இன்று அவருக்கு இருக்கிற பலஹீனம் அவருக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்துவிட்டோம் என்ற உணர்வு குறைவாக இருக்கிறது என்று நான் கருதுகிறேன். ஆளும் கட்சிக்குப் போயிருக்கிறவர் அதை எண்ணி தெளிவு சுளிவாக இல்லாமல் ஏதேனும் ஆத்திரப்பட்டுப் பேசுவது நல்லதல்ல. அவர் சொல்வதில் பல நியாயங்கள் இருக்கின்றன என்பது எனக்குத் தெரியும். ஆனால், இன்று அமலில் இருப்பது கட்சி ஆட்சி முறை. ஜனநாயகத்திலே பார்ட்டி சிஸ்டம் அமலில் இருக்கிறது. அதை ஞாபகம் வைத்துக்கொண்டு அவர் அந்தக்

கட்சியில் சேர்ந்து விட்டோம் என்று சொல்கிற நிலையில் அந்தக் கட்சியின் வருங்காலத்தில் வாழ்வது, தாழ்வது என்பதிலே அவருக்கும் பங்கிருக்கிறது என்பதை எண்ணி அதற்குட்பட்டு அவருடைய விமரிசனம் இருக்கவேண்டும் என்று நான் அவருக்குச் சொல்லிக்கொள்கிறேன். ஆளும் கட்சிக்காரர்களுக்குப் பல சிக்கல்கள் இருக்கின்றன என்பது எனக்குத் தெரியும். பல விஷயங்கள் தப்பாக இருக்கின்றன என்பதை அமைச்சர்களே ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதையெல்லாம் புரிந்துகொண்டு அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்துவிட்டோம் என்ற உணர்வோடு பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர் எனக்கு நீண்ட நாள் நண்பர். அவருக்குப் பல திறமைகள் உண்டு. அந்த வகையில் இதைச் சொல்லிக் கொண்டு சில சில்லறை விஷயங்களைப் பற்றிச் சொல்கிறேன்.

சத்திரம் டிபார்ட்மெண்டிலே இருக்கிற சிப்பந்திகளுக்கு பென்ஷன் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அதை முதலமைச்சரவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது எனக்குக் குறைபாடு. மாவட்ட கலெக்டரைக் கேட்டால் இங்கேயிருந்து வரவேண்டுமென்று சொல்கிறார்கள். இதில் 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அவர்களுக்குக் கொடுப்பதைத் தாமதமின்றி கொடுக்க வேண்டுமென்று தெரிவித்து இந்தத் துணை மானியம் நியாயமானது, நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி சத்தியவாணிமுத்து:** மதிப்புக்குரிய பேரவைத் துணைத் தலைவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிற 1974-75-ம் ஆண்டுக்குரிய துணை மதிப்பீட்டில் என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களைப் பொறுத்த வரையிலும் சில திட்டங்களைப் புதியது என்று கொண்டுவந்திருப்பதாகவும், மேலும் அதிக நிதி ஒதுக்கீடு செய்திருப்பதாகவும் இங்கே கூறப்பட்டிருக்கிறது. ஹரிஜன வீட்டு வசதிக் கழகத்திற்காக நிதி ஒதுக்கம் செய்ததில் ஆண்டுக்கு பத்தாயிரம் வீடுகளைக் கட்டுவது என்றும் அதிலே இதுவரை 3 கோடி ஒதுக்கியிருப்பதாகவும் கூறப்படுகிறது. இந்த ஹரிஜன வீட்டு வசதிக் கழகம் அமைக்கப்பட்டது எப்படி, எந்த அடிப்படையில், எந்த அளவிற்கு, ஒரு வீட்டின் மதிப்பீடு என்ன, எப்படிக் கட்டப்படு





கிறது என்பதற்கு முழு விபரமும் இந்த அவையின் முன்னால் வைக்கப்படவில்லை. ஆனாலும் பத்திரிகையிலே காணுகிறோம், இங்கே ஆயிரம், அங்கே பத்தாயிரம் வீடுகள் என்று சொல்லப்படுகிறது. ஆனால் இந்தத் திட்டம் 1971-72-லேயிருந்து வரையறுக்கப்பட்டு வந்தது. 1972-73-ல் நானே இந்த மன்றத்தில் இந்தத் திட்டத்தை வைத்தேன். 1972-73-ல் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஆண்டுக்கு பத்தாயிரம் வீடுகள் கட்டப்படும் என்று சொன்னார்கள். அதை நாம் அனைவரும் கைதட்டி வரவேற்றோம். 1973-74-ம் ஆண்டும் முடியும் தருவாயில் இருக்கிறது. இப்போதும் பத்தாயிரம் வீடுகள் என்று சொல்கிறார்கள். பத்திரிகையிலே ஆயிரம் வீடுகள் என்றுதான் சொல்வதைப் பார்த்தோம். இந்த முறையிலே ஆயிரம் வீடுகள் வந்துவிட்டன என்று ஒரு தவறான எண்ணம் வருகிறது. ஆண்டுக்குப் பத்தாயிரம் வீடுகள் என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொல்லி இரண்டு ஆண்டுக் காலம் ஆகிவிட்டது. ஆகவே, இதைச் சொல்லிக்கொண்டு போவதிலே பயனில்லை. அதற்கான பணத்தை ஒதுக்கீடு செய்ய வேண்டும், 10,000 வீடுகளைக் கட்டியாக வேண்டும். அது வருமா என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது. ஆகவே, நான் இதை வரவேற்கவில்லை.

(பிற்பகல் 12-30)

வெறும் புள்ளிவிபரங்களை வைத்துக்கொண்டு தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்க முடியாது. அரிசன மாணவர் இல்லங்களில் உணவுக்கென்று ஒரு மாணவனுக்கு 5 ரூபாய் உயர்த்திக்கொடுக்க நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் இது எத்தனை ஆண்டுக் காலமாகக் கேட்கப்பட்டது என்பதைச் சிந்திக்க வேண்டும். இந்த உயர்வு கேட்கப்பட்டபோது இருந்த விலைவாசி என்ன, இப்போது இருக்கிற விலைவாசி என்ன என்பதைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். அப்போது இருந்த விலைவாசிக்கு ஏற்றவகையில் 5 ரூபாய் உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்கப்பட்டது. ஆனால் இப்போது இருக்கிற விலைவாசியை ஒப்பிட்டுப்பார்த்தால் குறைந்தது 10 ரூபாயாவது உயர்த்தித் தரவேண்டும். 5 ரூபாய்தான் உயர்த்தி இருப்பதனால் இதிலும் அவர்களுக்கு பஞ்சம்தான் இருக்கும். நல்ல உணவு, வயிறார உணவு கொடுக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திருமதி சத்தியவாணிமுத்து] [1974 டிசம்பர் 21

நேரம் இல்லாததால் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன். வருமான வரம்பு 2,500 ரூபாயிலிருந்து இப்போது 3,000 ரூபாய்க்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. அதை வரவேற்கிறேன்.

இதைப்போல முன்பு பின்தங்கிய வகுப்பினருக்கு இருந்த வருமான வரம்பு 1,500 ரூபாய் என்றும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு இருந்த வருமான வரம்பு 2,000 ரூபாய் என்றும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால் அதில் ஒரு பெரிய தவறு நடந்திருக்கிறது. ஏற்கெனவே பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்தபோது இந்த வருமான வரம்பை அமைச்சரவை முடிவு செய்தது. ஆனால் ஜி.ஓ. வெளிவரும்போது அந்த முடிவை மாற்றிவிட்டார்கள். தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பின்தங்கியவர்களுக்கும் 2,000 ரூபாய் என்று ஜி.ஓ. வெளியிட்டுவிட்டார்கள். நான் அமைச்சராக இருந்தபோதுகூட இந்தத் தவறு எனக்குத் தெரியாது. பிறகு பலர் இதுபற்றிப் புகார் சொன்னார்கள். அண்ணா அவர்கள் 2,000 ரூபாய் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு என்றுதான் அறிவித்தார்கள். ஆனால் ஆணை வெளிவரும்போது பின்தங்கிய மாணவர்களுக்கும் அந்த 2,000 ரூபாய் என்று போட்டுவிட்டார்கள். இப்போது அண்ணா அவர்கள் இல்லை. அந்த அமைச்சரவையில் இருந்த மற்றவர்கள் இருக்கிறார்கள். நான் இதை எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால், அமைச்சரவையிலே ஒரு முடிவை எடுத்தாலும் அதிகாரிகள் மட்டத்தில் இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறுகின்றன என்பதற்காகத்தான். பின்தங்கியவர்களுக்கு 2,000 ரூபாய் எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது என்று கேட்டால் இப்போதுகூட அதற்குப் பதில் சொல்ல முடியாது. எடுக்கும் முடிவு ஒன்றாக இருந்தாலும், செயல்படுத்தும் முறை இப்படி வேறுவிதமாக இருக்கிறது. இப்போது 2,000 ரூபாயிலிருந்து 3,000 ரூபாய்க்கு உயர்த்தியிருக்கிறார்கள். தற்போது அதை நான் வரவேற்கிறேன்.

அடுத்து, மதிய உணவுக்கு 6 காசு என்று இருந்ததை 10 காசாக உயர்த்தியிருக்கிறார்கள்.

அரிசன மாணவர்களுக்கு மதிய உணவுக்கென்று 15 காசு கொடுக்கப்படுகிறது. நான் அமைச்சராக இருந்தபோதே அதை மாற்ற வேண்டுமென்று சொன்னார்கள். அப்போதே எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து திரு. ஜேம்ஸ் அவர்களும், திரு. குமாரசாமி அவர்களும் இப்போது மஞ்சள் சோறுதான் கொடுக்கிறார்கள்;



1974 டிசம்பர் 21] [திருமதி சத்தியவாணிமுத்து]

அதை மாற்றி நல்ல சத்துள்ள உணவு அளிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அப்படி இருந்தும் இன்றைக்கு பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு 6 காசாக இருந்ததை 10 காசாக உயர்த்தியிருக்கிறார்களே தவிர, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு உயர்த்தவில்லை என்றால் எப்படி நல்ல உணவு அளிக்க முடியும், சத்துள்ள உணவு அளிக்க முடியும்? வெறும் மஞ்சள் சோறுதான் கொடுக்க முடியும். இல்லை என்றால் வெறும் சோறு அல்லது கஞ்சி தான் தரமுடியும் என்பதைச் சொல்லி, அவர்களுக்கு நல்ல சத்துள்ள உணவு தருவதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது 5 ரூபாய் உயர்த்துவதில் ஏறத்தாழ 27 லட்சம் ரூபாய், 2,500 ரூபாய் வருமான வரம்பை 3,000 ரூபாயாக உயர்த்தும் வகையில் 36 லட்சம் ரூபாய், மதிய உணவுத் திட்டத்திற்காக ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். இவ்வளவு செய்தவர்கள் இந்த நகர சுத்தித் தொழிலாளர்கள் பிரச்சனையைக் கவனிக்காமல் விட்டுவிட்டார்கள். மனிதன் இடுகின்ற மலத்தை மனிதனே சுமந்து செல்லும் நிலையை இந்தத் தமிழ்நாட்டிலிருந்து மாற்றுவதற்கு நிதி ஒதுக்கீடு எதும் செய்யப்படவில்லை. இந்தப் பிரச்சனைபற்றி அவ்வப்போது சொல்லும்போது ஒரு லட்சம், இரண்டு லட்சம் என்றுதான் ஒதுக்கியிருக்கிறார்களே தவிர, அதற்கு முழுமையான பரிகாரம் காண முடியவில்லை. மனிதன் இடுகின்ற மலத்தை மனிதனே சுமந்து செல்லும் கொடுமையை அறவே ஒழிக்க வெறும் 16 லட்சம் ரூபாய்தான் தேவைப்படுகிறது. முன்பே நான் இதைத் தெரிவித்திருக்கிறேன். இந்த 16 லட்சம் ரூபாயும் மொத்தமாக அதற்கு ஒதுக்கியிருந்தால் இன்றைக்கு இந்தக் கொடுமை அகற்றப்பட்டிருக்கும். அதிலே ஒரு பெரிய புரட்சியையே நாம் செய்தவர்களாக இருப்போம்.

25,000 பேர்கள்தான் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது மாற்று வேலை கொடுக்கலாம். ஆகவே, எப்படியாவது இந்தக் கேவலமான தொழிலைச் செய்து கொண்டிருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களை அந்தக் கொடுமையிலிருந்து விடுதலை செய்து, அவர்களுக்கு மாற்று வேலை கொடுக்க வேண்டும். அதற்கு 16 லட்சம் ரூபாய்தான் தேவைப்படும். மற்றப் பல திட்டங்களுக்கு லட்சக்கணக்கில்

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 டிசம்பர் 21

அதோடு, இன்னும் இந்த கே.டி.சி. சரியான முறையில் இயங்கவில்லை. பொது மக்கள் இந்தக் கார்ப்பரேஷனைப்பற்றிப் பல்வேறு குற்றங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது அங்கே இருக்கிற பஸ்கள் எல்லாம் ஓட்டை உடைசல்களாக இருக்கின்றன. அதுவுமல்லாமல் இன்னும் பல கஷ்டங்கள் இருக்கின்றன. இப்போது இட நெரிசல் ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் நிர்வாகச் சீர்திருத்தம் என்ற முறையில் பல மாற்றங்களைச் செய்திருக்கிறார்கள். முன்னைவிட ஓடுகின்ற பஸ்களின் எண்ணிக்கையும் குறைந்து இருப்பதாகத் தெரிகிறது. அதனால் குழித்துறையிலிருந்து மாணவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து, நெரிசலினால் கஷ்டப்பட்டு, இந்த கே.டி.சி. பஸ்களை நிறுத்தப் போகிறோம் என்று சொல்லக்கூடிய நிலைமை உருவாகி இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மணி 12.40 ஆகிவிட்டது; சீக்கிரம் முடித்து விடுங்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இன்னும் சில நிமிடங்களில் முடித்து விடுகிறேன்.

அதேமாதிரி இந்த அறிக்கையில் ஃபையர் ஸ்டேஷன்களை அதிகரிக்க இருப்பதாக கூறப்பட்டிருக்கிறது. என்னுடைய பகுதியில் ஃபையர் ஸ்டேஷன் குழித்துறையில் துவங்கப் படுவதற்கு வேண்டிய வழிவகைகளையும் செய்ய வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஹாண்ட்லூம் ரிபேட் என்ற தலைப்பில் ஒரு லட்சத்து ஐம்பதாயிரத்தை 2 லட்சமாக உயர்த்த வழிவகை செய்யப் பட்டிருக்கிறது. பல இடங்களில் கைத்தறித் துணிகளைப் பொறுத்தவரை மந்த நிலை, தேக்க நிலை ஏற்பட்டிருக்கிறது. பல இடங்களில் நெசவாளர்களுக்குக் கிடைக்கிற நூல் அதிக விலையானதாக இருக்கிறது. கோஆப்ரேடிவ் ஆதலால் உயர்ந்து கொண்டே இருக்கிற நிலையைப் பார்க்கிறோம். இதனால் எங்கு பார்த்தாலும் தேக்க நிலை ஏற்பட்டிருக்கிறது. தொழிலாளர்களுக்குக் கூலியும் கட்டுபடியாகவில்லை என்ற கருத்து இருக்கிறது. இதையும் போக்க வழி செய்ய வேண்டும்.



1974 டிசம்பர் 21] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

மதிய உணவுக்கு பத்து காசு கொடுத்திருப்பது மிகவும் காணாது. குறைந்தபட்சம் 25 காசாவது கொடுக்க வேண்டும். படி அரிசி 6 ரூபாய்க்கு விற்கிற நேரத்தில் 25 காசு கூட போதுமானதாக இருக்காது. ஆகவே விலைவாசி உயர்வைக் கணக்கில் கொண்டு இதைக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

லெவி முறையைப்பற்றி ஓரிரு கருத்துக்கள் கூற வேண்டியிருக்கிறது. 50 சென்ட் உள்ளவர்களுக்குக்கூட லெவி போட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதனால் சிறு நிலக்காரர்கள் வெகுவாகப் பாதிக்கப்படக் கூடும். ஆகவே ஒரு ஏக்கர், 2 ஏக்கர் உள்ளவர்களுக்கு விதிவிலக்கு அளிப்பதுதான் சாலச் சிறந்ததாக இருக்குமென்று கருதுகிறேன். அதிகமாக நிலம் வைத்திருக்கிறவர்களிடம் மார்க்கெடபிள் சார்ப்பிளஸ் என்பதாக எல்லாவற்றையும் கொள்முதல் செய்வதைக்கூட நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. 2 ஏக்கராவுக்குக் கீழ் இருக்கிறவர்களுக்கு விலக்கு அளித்தாக வேண்டும்.

கொள்முதல் விலை க்விண்டாலுக்கு 100 ரூபாய் என்று அரசாங்க விலையை நிர்ணயிக்கிறபோது அதில் இருந்து கிடைக்கிற 68 கிலோ கிராம் அரிசி விலை ரூ. 136 என்று வருகிறது. 100-க்கும் 136-க்கும் இடையே இவ்வளவு விலை அதிகம் இருக்க வேண்டுமா? ஹாண்ட்லிங் சார்ஜஸ், மில்லிங் சார்ஜஸ் இவ்வளவு அதிகமாகப் போட வேண்டியதில்லை. இது ஏழை விவசாயிகள்தான் பாதிக்கப்படக்கூடிய அளவுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவர் அவர்களே, என் தொகுதியைப்பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகளோடு முடித்துக் கொள்கிறேன். என் தொகுதி குழித்துறையில் வறட்சி ஏற்பட்டிருக்கிறது, குடிக்கக்கூடத் தண்ணீர் இல்லை என்பதாக பஞ்சாயத்துத் தலைவர் அறிவித்திருக்கிறார். அங்கே உணவுப் பண்டங்கள் இல்லை. உடனடியாக அங்கு நியாய விலைக் கடைகளைத் திறக்க வேண்டும்.

தூத்துக்குடியில் கரிசல்குளம் என்கிற இடத்தில் போலீசார் அத்துமீறி நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பதாகத் தந்தி வந்திருக்கிறது. அந்தப் பகுதியில் என்ன நடந்திருக்கிறது என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதேபோல

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 டிசம்பர் 21

அதோடு, இன்னும் இந்த கே.டி.சி. சரியான முறையில் இயங்கவில்லை. பொது மக்கள் இந்தக் கார்ப்பரேஷனைப்பற்றிப் பல்வேறு குற்றங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது அங்கே இருக்கிற பஸ்கள் எல்லாம் ஓட்டை உடைசல்களாக இருக்கின்றன. அதுவுமல்லாமல் இன்னும் பல கஷ்டங்கள் இருக்கின்றன. இப்போது இட நெரிசல் ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் நிர்வாகச் சீர்திருத்தம் என்ற முறையில் பல மாற்றங்களைச் செய்திருக்கிறார்கள். முன்னைவிட ஓடுகின்ற பஸ்களின் எண்ணிக்கையும் குறைந்து இருப்பதாகத் தெரிகிறது. அதனால் குழித்துறையிலிருந்து மாணவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து, நெரிசலினால் கஷ்டப்பட்டு, இந்த கே.டி.சி. பஸ்களை நிறுத்தப் போகிறோம் என்று சொல்லக்கூடிய நிலைமை உருவாகி இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மணி 12.40 ஆகிவிட்டது; சீக்கிரம் முடித்து விடுங்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இன்னும் சில நிமிடங்களில் முடித்து விடுகிறேன்.

அதேமாதிரி இந்த அறிக்கையில் ஃபையர் ஸ்டேஷன்களை அதிகரிக்க இருப்பதாக கூறப்பட்டிருக்கிறது. என்னுடைய பகுதியில் ஃபையர் ஸ்டேஷன் குழித்துறையில் துவங்கப் படுவதற்கு வேண்டிய வழிவகைகளையும் செய்ய வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஹேண்ட்லூம் ரிபேட் என்ற தலைப்பில் ஒரு லட்சத்து ஐம்பதாயிரத்தை 2 லட்சமாக உயர்த்த வழிவகை செய்யப் பட்டிருக்கிறது. பல இடங்களில் கைத்தறித் துணிகளைப் பொறுத்தவரை மந்த நிலை, தேக்க நிலை ஏற்பட்டிருக்கிறது. பல இடங்களில் நெசவாளர்களுக்குக் கிடைக்கிற நூல் அதிக விலையானதாக இருக்கிறது. கோவாப்ரேடிவ் ஆதலால் உயர்ந்து கொண்டே இருக்கிற நிலையைப் பார்க்கிறோம். இதனால் எங்கு பார்த்தாலும் தேக்க நிலை ஏற்பட்டிருக்கிறது. தொழிலாளர்களுக்குக் கூலியும் கட்டுபடியாகவில்லை என்ற கருத்து இருக்கிறது. இதையும் போக்க வழி செய்ய வேண்டும்.



1974 டிசம்பர் 21] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

மதிய உணவுக்கு பத்து காசு கொடுத்திருப்பது மிகவும் காணாது. குறைந்தபட்சம் 25 காசாவது கொடுக்க வேண்டும். படி அரிசி 6 ரூபாய்க்கு விற்கிற நேரத்தில் 25 காசு கூட போதுமானதாக இருக்காது. ஆகவே விலைவாசி உயர்வைக் கணக்கில் கொண்டு இதைக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

லெவி முறையைப்பற்றி ஓரிரு கருத்துக்கள் கூற வேண்டியிருக்கிறது. 50 சென்ட் உள்ளவர்களுக்குக்கூட லெவி போட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதனால் சிறு நிலக்காரர்கள் வெகுவாகப் பாதிக்கப்படக் கூடும். ஆகவே ஒரு ஏக்கர், 2 ஏக்கர் உள்ளவர்களுக்கு விதிவிலக்கு அளிப்பதுதான் சாலச் சிறந்ததாக இருக்குமென்று கருதுகிறேன். அதிகமாக நிலம் வைத்திருக்கிறவர்களிடம் மார்க்கெடபிள் சார்ப்பிளஸ் என்பதாக எல்லாவற்றையும் கொள்முதல் செய்வதைக்கூட நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. 2 ஏக்கராவுக்குக் கீழ் இருக்கிறவர்களுக்கு விலக்கு அளித்தாக வேண்டும்.

கொள்முதல் விலை க்விண்டாலுக்கு 100 ரூபாய் என்று அரசாங்க விலையை நிர்ணயிக்கிறபோது அதில் இருந்து கிடைக்கிற 68 கிலோ கிராம் அரிசி விலை ரூ. 136 என்று வருகிறது. 100-க்கும் 136-க்கும் இடையே இவ்வளவு விலை அதிகம் இருக்க வேண்டுமா? ஹாண்ட்லிங் சார்ஜஸ், ஹல்லிங் சார்ஜஸ் இவ்வளவு அதிகமாகப் போட வேண்டியதில்லை. இது ஏழை விவசாயிகள்தான் பாதிக்கப்படக்கூடிய அளவுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவர் அவர்களே, என் தொகுதியைப்பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகளோடு முடித்துக் கொள்கிறேன். என் தொகுதி குழித்துறையில் வறட்சி ஏற்பட்டிருக்கிறது, குடிக்கக்கூடத் தண்ணீர் இல்லை என்பதாக பஞ்சாயத்துத் தலைவர் அறிவித்திருக்கிறார். அங்கே உணவுப் பண்டங்கள் இல்லை. உடனடியாக அங்கு நியாய விலைக் கடைகளைத் திறக்க வேண்டும்.

தூத்துக்குடியில் கரிசல்குளம் என்கிற இடத்தில் போலீசார் அத்துமீறி நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பதாகத் தந்தி வந்திருக்கிறது. அந்தப் பகுதியில் என்ன நடந்திருக்கிறது என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதேபோல

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 டிசம்பர் 21

அதன்கோடு என்கிற இடத்தில் பனை ஏறும் தொழிலாளர்களைத் தாக்கியிருக்கிறார்கள். பெண்களைத் தாக்கியிருக்கிறார்கள். விளவங்கோட்டில் இருக்கிற சர்க்கிள் இன்ஸ்பெக்டர்தான் இதற்குக் காரணம்—இது மொழிக் கலவரமாக மாறிவிடுமோ என்கிற பயம் இருக்கிறது. இதை உடனடியாகத் தவிர்க்க தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. முனு ஆதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று கொண்டு வரப்பட்டிருக்கிற துணை மதிப்பீட்டின் பேரில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கொடுத்திருப்பது ஐந்து நிமிடம் தான். வரி வரியாகச் சொல்லி விடுகிறேன்.

இங்கே விவசாயிகளுக்கு மின்வெட்டு இல்லையென்று சொன்னார்கள். விவசாயிகளுக்கும் மின்வெட்டு நடந்து கொண்டிருக்கிறது.

சாதாரணமாக, சொந்த நிலத்தைப் பயிரிடுகிற விவசாயிகளுக்கு அவர்களுடைய தானியத்தை வீட்டுக்கு எடுத்துச் செல்ல பர்மிட் தேவையில்லை என்றார்கள். ஆனால் இன்றைக்கு அவர்கள் பயிரிடுகிற தானியத்தைக் கூட வீட்டுக்குக் கொண்டு போக முடியாத நிலைதான் இருக்கிறது. வழியில் செக் போஸ்டிலேயே மறித்துப் போட்டுவிடுகிறார்கள்.

ஓராண்டுக் காலத்திற்கு முன்னால் அறுந்துபோன கம்பிகளைக் கூடப் போட்டு இதுவரை விவசாயிகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கவில்லை. கேட்டால் வயர் இல்லை என்கிறார்கள். இந்த நிலைதான் மருச்சூர், பழந்தாங்கல் போன்ற பல பகுதிகளில் இருக்கிறது.

அடுத்து, பொதுப் பணித் துறை அதிகாரிகள் செய்கின்ற குறைகளை எங்கள் கவனத்திற்குக் கொண்டுவராமல் இருக்க முடியாது. நிர்வாகத்தில் இருக்கிற சின்னஞ்சிறு அதிகாரிகள் செய்கிற ஊழல்கள் அரசையே பாதிக்கிறது. என் தொகுதியில் பிடபிள்யுடி. ஏ.இ. இருக்கிறார். ஏரியில் ஒரு அடி மண் எடுத்திருந்தால் 2 அடி மண் எடுத்ததாக கான்டிராக்டரை வைத்துக் கொண்டே அவர் தவறான கணக்குகளை எல்லாம் எடுக்கிறார். அங்கே மேஸ்திரியை அழைத்துப் போவதில்லை.



1974 டிசம்பர் 21] [திரு. முனு ஆதி]

எம்.எல்.ஏ. நான்—நான் அ.தி.மு.க. ஆனதாலே நான் சொல்லி நீங்கள் கேட்கப் போவதில்லை என்றே சொல்கிறார். யாருக்கும் பயப்படவில்லை. இந்த எஸ்.ஓ. வுக்கு ஏ.இ. பயப்படுகிறார். இப்படி அடிமட்டத்தில் உள்ளவர்கள் செய்கிற ஊழல்கள்தான் அரசுக்குக் கெட்ட பெயர் அளிக்கிறது. திரு. சுப்பு போல அங்கே இருக்கிற மனச்சாட்சி உள்ளவர்கள் அதைப் பேசுகிறார்கள். அவர்களைப் போன்றவர்கள் நீடூழி வாழ வேண்டும். சும்மா அங்கே இருந்து துதிபாடுகிறவர்களினால்தான் பல சங்கடங்களை உண்டாகின்றன.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** உங்கள் கட்சியிலுள்ள விஷயங்களையும் மனச்சாட்சியோடு பேசுங்களேன்.

**திரு. முனு ஆதி:** இங்கே எதிர்க்கட்சியில் இருக்கிறோம். மனச்சாட்சியோடு உங்களுக்கு எடுத்துச் சொல்கிறோம். எங்கள் கட்சிக்குள்ளேயும் நாங்கள் மனசாட்சியோடுதான் நடந்து கொள்கிறோம்.

திருக்கழுக்குன்றத்தில் எஸ்.ஓ. இல்லை. அடிஷனல் இன்சார்ஜ் போட்டு 18 ஆம் தேதி ஆர்டர் வாங்கியும் எஸ்.ஓ. அங்கே தலைகாட்டவில்லை. இப்படிப்பட்ட நிலைமை நீடித்தால் 76 இல் ஒன்றுமே இல்லாமல் போகும். நான் தவறாகச் சொல்கிறேனா என்பதையும் வேண்டுமானால் விசாரியுங்கள். விரோதம் காரணமாக தனிப்பட்டவர்களைப் பற்றிச் சொல்வதில்லை. அங்கே இருக்கிற எஸ்.ஓ. முதலமைச்சரைப் போல இருக்கிறார். ஒரு மாவட்ட செயலாளர் கையில் இருக்கிறார், இரண்டு எம்.எல்.ஏ.க்கள் கையில் இருக்கிறார்கள். அவர் ஆபீசுக்கே வருவதில்லை. அவர் எங்கே இருக்கிறார் என்று தெரியவில்லை. திருக்கழுக்குன்றத்தில் தவறு செய்துவிட்டு, வீட்டில் இருந்தே அதைச் சரிப்படுத்த முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறது. தொகுதிக்கு நல்லவர்களை அனுப்புங்கள். இதுபோன்றவர்களை அனுப்புவதன் காரணமாகத்தான் அரசுக்கே கெட்ட பெயர்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

விவசாயிகளுக்கு மின்வெட்டு இல்லை என்பதைத் தெளிவாக அமைச்சர் இங்கே சொல்ல வேண்டும். சிறு விவசாயிகள் உற்பத்தி செய்கிற தானியத்தை அவர்கள் தங்கள் வீடுகளுக்கு

அதன்கோடு என்கிற இடத்தில் மரம் வெட்டும் தொழிலாளர்களைத் தாக்கியிருக்கிறார்கள். பெண்களைத் தாக்கியிருக்கிறார்கள். விளவங்கோட்டில் இருக்கிற சர்க்கிள் இன்ஸ்பெக்டர்தான் இதற்குக் காரணம்—இது பெரிய கலவரமாக மாறிவிடுமோ என்கிற ஐயம் இருக்கிறது. இதை உடனடியாகத் தவிர்க்க தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. முனு ஆதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கு கொண்டு வரப்பட்டிருக்கிற துணை மதிப்பீட்டின் பேரில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கொடுத்திருப்பது ஐந்து நிமிடம் நான். வரி வரியாகச் சொல்லி விடுகிறேன்.

இங்கே விவசாயிகளுக்கு மின்வெட்டு இல்லையென்று சொன்னார்கள். விவசாயிகளுக்கும் மின்வெட்டு நடந்து கொண்டிருக்கிறது.

சாதாரணமாக, சொந்த நிலத்தைப் பயிரிடுகிற விவசாயிகளுக்கு அவர்களுடைய தானியத்தை வீட்டுக்கு எடுத்துச் செல்ல பர்மிட் தேவையில்லை என்றார்கள். ஆனால் இன்றைக்கு அவர்கள் பயிரிடுகிற தானியத்தைக் கூட வீட்டுக்குக் கொண்டு போக முடியாத நிலைதான் இருக்கிறது. வழியில் செக் போஸ்டிலேயே மறித்துப் போட்டுவிடுகிறார்கள்.

ஓராண்டுக் காலத்திற்கு முன்னால் அறுந்துபோன கம்பிகளைக் கூடப்போட்டு இதுவரை விவசாயிகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கவில்லை. கேட்டால் வயர் இல்லை என்கிறார்கள். இந்த நிலைதான் பழச்சூர், பழந்தாங்கல் போன்ற பல பகுதிகளில் இருக்கிறது.

அடுத்து, பொதுப் பணித் துறை அதிகாரிகள் செய்கின்ற குறைகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவராமல் இருக்க முடியாது. நிர்வாகத்தில் இருக்கிற சின்னஞ்சிறு அதிகாரிகள் செய்கிற ஊழல்தான் அரசையே பாதிக்கிறது. என் தொகுதியில் பி.டபிள்யூ.டி. எஸ்.ஓ. இருக்கிறார். ஏரியில் ஒரு அடி மண் எடுத்திருந்தால் 2 அடி மண் எடுத்ததாக கான்டிராக்டரை வைத்துக் கொண்டே அவர் தவறான கணக்குகளை எல்லாம் எடுக்கிறார். அங்கே மேஸ்திரியை அழைத்துப் போவதில்லை.



எம்.எல்.ஏ. நான்—நான் அ.தி.மு.க. ஆனதாலே நான் சொல்லி நீங்கள் கேட்கப் போவதில்லை என்று சொல்கிறார். யாருக்கும் பயப்படவில்லை. இந்த எஸ்.ஓ. வுக்கு எ.இ. பயப்படுகிறார். இப்படி அடிமட்டத்தில் உள்ளவர்கள் செய்கிற ஊழல்கள்தான் அரசுக்குக் கெட்ட பெயர் அளிக்கிறது. திரு. சுப்பு போல அங்கே இருக்கிற மனச்சாட்சி உள்ளவர்கள் அதைப் பேசுகிறார்கள். அவர்களைப் போன்றவர்கள் நீடூழி வாழ வேண்டும். சும்மா அங்கே இருந்து துதிபாடுகிறவர்களினால்தான் பல சங்கடங்களை உண்டாகின்றன.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** உங்கள் கட்சியிலுள்ள விஷயங்களையும் மனச்சாட்சியோடு பேசுங்களேன்.

**திரு. முனு ஆதி:** இங்கே எதிர்க்கட்சியில் இருக்கிறோம். மனச்சாட்சியோடு உங்களுக்கு எடுத்துச் சொல்கிறோம். எங்கள் கட்சிக்குள்ளேயும் நாங்கள் மனசாட்சியோடுதான் நடந்து கொள்கிறோம்.

திருக்கழுக்குன்றத்தில் எஸ்.ஓ. இல்லை. அடிஷனல் இன்சார்ஜ் போட்டு 18 ஆம் தேதி ஆர்டர் வாங்கியும் எஸ்.ஓ. அங்கே தலைகாட்டவில்லை. இப்படிப்பட்ட நிலைமை நீடித்தால் 76 இல் ஒன்றுமே இல்லாமல் போகும். நான் தவறாகச் சொல்கிறேனா என்பதையும் வேண்டுமானால் விசாரியுங்கள். விரோதம் காரணமாக தனிப்பட்டவர்களைப் பற்றிச் சொல்வதில்லை. அங்கே இருக்கிற எஸ்.ஓ. முதலமைச்சரைப் போல இருக்கிறார். ஒரு மாவட்ட செயலாளர் கையில் இருக்கிறார், இரண்டு எம்.எல்.ஏ.க்கள் கையில் இருக்கிறார்கள். அவர் ஆபீசுக்கே வருவதில்லை. ஆனால் எங்கே இருக்கிறார் என்று தெரியவில்லை. திருக்கழுக்குன்றத்தில் தவறு செய்துவிட்டு, வீட்டில் இருந்தே அதைச் சரிப்படுத்த முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் போல் உள்ளது. தொகுதிக்கு நல்லவர்களை அனுப்புங்கள். இதுபோன்றவர்களை அனுப்புவதன் காரணமாகத்தான் அரசுக்கே கெட்ட பெயர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

விவசாயிகளுக்கு மின்வெட்டு இல்லை என்பதைத் தெளிவாக அமைச்சர் இங்கே சொல்ல வேண்டும். சிறு விவசாயிகள் உற்பத்தி செய்கிற தானியத்தை அவர்கள் தங்கள் வீடுகளுக்கு

எடுத்துச் சொல்ல அனுமதிக்கப்பட வேண்டும். இதெல்லாம்தான் மக்களிடையே பெரும் வெறுப்பை உண்டாக்கி வருகிறது. என் தொகுதி எஸ்.ஓ. வை வறட்சிப் பணி நிவாரண வேலைகள் நடக்கிற நேரத்தில் அங்கே வைக்காதீர்கள் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்த நிதி மதிப்பீடுகள் விவாதத்தில் நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல துணை மதிப்பீடுகளின் பெயருக்கு ஏற்ப இந்த மதிப்பீடுகளைத் துணையாகக்கொண்டு இதில் சொல்லப் பட்டிருக்கிற விவரங்களுக்குள் ஆழமாகச் செல்லாவிட்டாலும் அவரவர்களுடைய தொகுதிப் பிரச்சினை குறித்தும், ஆங்காங்கு நடைபெற வேண்டிய வேலைத் திட்டங்கள் குறித்தும், இருக்கின்ற குறைபாடுகளை எவ்வாறு களைய வேண்டுமென்பது குறித்தும், அதிகாரிகள் சிலர் தவறான செயல்களில் ஈடுபடுகிறார்கள், அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டுமென்பது குறித்தும், வேறுசில பொதுவான நிலை குறித்தும் மாண்புமிகு உறுப்பினர்களும் கட்சித் தலைவர்களும் எடுத்துக் கூறி யிருக்கிறார்கள்.

நம்முடைய நண்பர் திரு. லத்தீப் அவர்கள் பேசிய நேரத்தில் நம்முடைய சமூக நலத் திட்டங்கள்—துணை மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டிருக்கிற இந்தத் திட்டங்கள் வரவேற்கக் கூடியவை என்று கூறிவிட்டு இந்தத் திட்டங்களால் வருமானக் கூறுகள்—சமுதாயத்திற்கு பொருளாதாரத் துறையில் அரசாங்கத்தின் சார்பில் அமையக் கூடிய அந்தக் கூறுகள் குறைவாக இருக்கின்றன. அவைகளை மேம்படுத்த வேண்டுமென்ற ஒரு நல்ல கருத்தை எடுத்துச் சொன்னார்கள்.

இந்தத் திட்டங்களை, உற்பத்தி ஆதாரங்களை மையமாக வைத்து, இன்றைக்கு நாம் செயல்படுத்தி வருகின்றோம். எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டுமேயானால், ஊனமுற்றோர் நல்வாழ்வுத் திட்டத்தில் அவர்களுக்கென ஒரு பயிற்சித் தொழிற்சாலையை அமைப்பதும் ஒன்றாகும். அண்மையிலே முட்டுக்காடு என்கின்ற பகுதியில், மாமல்லபுரம் செல்லும் பாட்டையில், அதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்று அந்தத் தொழிற்சாலை ஏறத்தாழ ரூ. 10 இலட்சத்திற்கு மேற்பட்ட தொகையில் அமையவிருக்கிறது. அந்தத் தொழிற்சாலையிலே





ஊனமுற்றவர்கள் பயிற்சி பெறுவது மாத்திரமல்ல, அந்தப் பயிற்சி அவர்களுக்கு அளிக்கப்படுகிற நேரத்திலும், பயிற்சி பெற்றவர்கள் அங்கே பணியாற்றுகிற நேரத்திலும் அந்தத் தொழிற்சாலையிலிருந்து மற்றத் தொழிற்சாலைகளுக்குப் பயன்படுகின்ற வகையில் பல உற்பத்திக் கருவிகளையும் அங்கே உருவாக்குவதற்கான அந்தச் சாதனமும் இன்றைக்குப் பொருத்தப்பட்டு இருக்கிறது.

அதைப் போலவே பிச்சைக்காரர் நல்வாழ்வு இல்லங்களில்—மறுவாழ்வு இல்லங்களில்—இதுபோன்ற தொழிற்சாலைகள் உற்பத்தித் திறன் உடையவைகளாக அமைய வேண்டுமென்ற அடிப்படையில் பரனூரில் அன்னிய நாட்டு உறவோடு, அவர்களுடைய நல்ல உதவியோடு அளிக்கப்பட்ட தொழிற் கூடத்தை நம்முடைய இந்திய நாட்டுப் பிரதமர் அவர்கள் சென்ற தடவை வந்திருந்தபொழுது தொடங்கி வைத்தார்கள்.

அது மாத்திரமல்ல, அந்த இல்லங்களிலேயிருக்கிற தொழு நோய் கொண்ட பிச்சைக்காரர்கள், அவர்களால் இயன்ற அளவிற்குக் கைத்தொழிலிலே ஈடுபடுவதற்கும் பாய் முடைதல், நாற்காலிகள் செய்தல், துணி நெசவு செய்தல் ஆகிய இந்தக் காரியங்களிலே ஈடுபடுவதற்கும் அவர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஆகவே, சமூக நலத் திட்டங்கள் பாராட்டத்தக்க வேண்டியவை என்கின்ற வகையோடு மாத்திரமல்லாமல், இப்படிப்பட்டப் பொருளாதாரத் திட்டங்களோடு அவைகளை நாம் இன்றைக்கு இணைத்திருக்கிறோம்.

நம்முடைய அரசின் மிகப் பெரிய திட்டமாக இன்றைக்கு உருவெடுத்திருக்கிற தாழ்த்தப்பட்டோர் வீட்டு வசதி வாரியத்தினுடைய திட்டங்களைப்பற்றியும் இங்கே பேசப்பட்டது. நண்பர் குருசாமி அவர்கள் பேசும்போது, தாழ்த்தப்பட்டோர் வீட்டு வசதி வாரியத்தைப்பற்றிக் குறிப்பிட்டார். அவர்களுக்கு ரூ. 3,000 என்றும், ரூ. 3,500 என்றும் வீடுகளுக்காகத் தருகிறார்கள். அது போதாது என்று குறிப்பிட்டார். அதுவல்ல நிலைமை. அரிசன சகோதரர்களிடம் தனிப்பட்டு அப்படி ரூபாய்களை அளிப்பது கிடையாது. இந்த வாரியத்தின் சார்பில் கட்டப்படுகின்ற வீடுகளின் பெறுமானம் ரூபாய் மூவாயிரமாகவும், மூவாயிரத்து ஐநூறு ரூபாயாகவும், சில இடங்களில் மூவாயிரத்து எழுநூறு ரூபாயாகவும் அமைகிறது. அது

ஆங்காங்கு அடித்தளங்கள் அமைக்க வேண்டியதைப் பொறுத்து, சில இடங்களில் பள்ளமாகவிருப்பதை மேடாக ஆக்க வேண்டியதைப் பொறுத்து, அந்தத் தொகை அளிக்கப்படுகிறதே யல்லாமல், நாம் தனிப்பட்ட முறையில் அந்தத் தொகையை வழங்குவதில்லை.

ஆங்காங்கு வாரியத்தின் சார்பில் நாம் வீடுகள் கட்டுகிறோம். ஏதோ பத்தாயிரம் வீடுகள் என்று விளம்பரம் செய்யப்படுகிறது; ஆயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்படவில்லை என்று திருமதி சத்தியவாணிமுத்து இங்கே கூறினார். அது தவறான தகவல். ஏனென்றால், கடந்த 15—2—1974 இல் தொடங்கப்பட்ட இத் திட்டத்தின்படி டிசம்பர் திங்களோடு பத்தாயிரம் வீடுகளைக் கட்டி அரிசன மக்களுக்கு வழங்கப்படுகிறது. இதிலே விழா நடத்தி, தொடங்கி வைக்கப்பட்ட வீடுகளுடைய எண்ணிக்கைக் குறைவாக இருக்கலாம். பத்தாயிரம் வீடுகளைத் தொடங்கி வைக்கிற விழாவினை, நிகழ்ச்சியினை நடத்த இயலவில்லை யென்பதற்காக அந்த வீடுகளை கட்டப்படவில்லை என்று கூறுவது சரியல்ல. இந்தத் திங்களில் 10,000 வீடுகளும் அந்த 10,000 வீட்டுக்குரிய அரிசன மக்களுக்கும் வழங்கப்பட விருக்கின்றன. தொடர்ந்து நான்கைந்து மாதக் காலத்திற்குள் மேலும் 30,000 வீடுகள் கட்டுவதற்கு வாரியத்தினால் திட்டங்கள் தீட்டப்பட்டு அந்த வேலைகளும் தொடங்கப்பட்டிருக்கின்றன. 1975-ஆம் ஆண்டிற்குள்ளாக ஒரு இலட்சம் வீடுகளைக் கட்டி முடிக்க வேண்டுமென்று வாரியம் திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறது.

தாழ்த்தப்பட்ட மாணவர்களுடைய பெற்றோர்களுடைய ஆண்டு வருமான வரம்பு ரூ. 2,500-லிருந்து ரூ. 3,000-ஆக உயர்த்தப்பட்டிருப்பது பெரிதும் இந்த அவையில் வரவேற்கப்பட்டது என்றாலும், அமைச்சராக இருந்த சத்தியவாணிமுத்து அவர்கள் ஏதோ ஒரு தவறு நடந்துவிட்டது, 1967-லேயே, அண்ணா காலத்திலேயே என்று குறிப்பிட்டார்கள். பெற்றோர்களுடைய வருமான வரம்பு ரூ. 1,500 ஆக இருந்ததை, ரூ. 2,000 ஆக அரிசன மக்களுக்கு மாத்திரம்தான் அண்ணா அவர்கள் 1967-இல் உயர்த்தினார் என்றும், ஆனால் அப்போது ஆர்டர்—உத்தரவு—போட்டவர்கள் அதை மாற்றி, பின்தங்கியவர்களுக்கும் ரூ. 2,000 என்று போட்டு விட்டார்கள் என்றும் சொன்னார்கள். எப்படித்





தான் மனம் துணிந்து தவறு என்று சொல்கிறார்கள் என்றுதான் எனக்குப் புரியவில்லை. எப்படி அரிசனங்கள் இந்தச் சமுதாயத்திலே பின்னடைந்திருக்கிறார்களோ, அதற்கு நேரிடையாகவே—சமமாகவே பின்தங்கிய மக்களும் இந்தச் சமுதாயத்திலே பின்தங்கியிருக்கிறார்கள்.

1967-ஆம் ஆண்டு ஜூலை 31-இல் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, அரிசன மாணவர்களுக்கும், பாக்வார்ட் கிளாஸ் மாணவர்களுக்கும், இருவருக்குமே வருமான வரம்பு ரூ. 1,500 என்று இருந்ததை ரூ. 2,000 ஆக மாற்றி, அரசு ஆணை 1967-ஆம் ஆண்டு ஜூலை 31-ஆம் தேதி போடப்பட்டது.

அதற்குப் பிறகு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் அரிசன மக்களுக்கும் ரூ. 2,000 என்று இருந்ததை 1970-71-இல் மாற்றி அரிசன மக்களுக்கு மட்டும் ரூ. 2,500 என்று உயர்த்தினோம். பின்தங்கிய மக்களுக்கு இருந்த ரூ. 2,000 அப்படியே இருந்தது. இப்போது அரிசனங்களுக்கு ரூ. 2,500 என்பதை உயர்த்தி ரூ. 3,000 என்றும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ரூ. 2,000 என்று இருந்ததை ரூ. 2,500 என்றும் ஆக்கியிருக்கிறோம். ஆகவே, பின்தங்கிய மக்கள் என்றால் சிலருக்கு ஒரு அலர்ஜி. . . .

**திருமதி சத்தியவாணிமுத்து :** நான் கூறியது, அமைச்சரவையில் எடுத்த முடிவு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மாத்திரம்தான்; ஆனால் ஜி.ஓ. போடும்போது இரண்டு பேருக்கும் சேர்த்துப் போட்டார்கள். . . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** 1967-இல் அம்மையார் அவர்கள்தான் அரிசன நல அமைச்சராக இருந்தார்கள், அண்ணா முதலமைச்சராக இருந்தார். 1967-லிருந்து 7 ஆண்டுக் காலம் கேட்காமல் இருந்துவிட்டு இப்போது யார் அந்த ஆர்டரைப் போட்டார்கள் என்று கேட்பது, இவர்கள் அரிசன நல அமைச்சராக எப்படி இருந்தார்கள் என்பதுதான் எனக்குப் புரியவில்லை. இவர்கள் அப்போதல்லவா கேட்டிருக்க வேண்டும். ரூ. 1,500 என்பது அப்பொழுதே பின்தங்கியவர்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இருந்த தொகைதான். அது ரூ. 2,000 ஆக்கப்பட்டது. அது பிறகு அரிசன மக்களுக்கு ரூ. 2,500 ஆக்கப்பட்டது. பின்தங்கியவர்களுக்கு ரூ. 2,000 அப்படியே இருந்தது. இப்பொழுது, அரிசன மக்களுக்கு ரூ. 2,500 என்று இருப்பது, ரூ. 3,000 ஆக உயர்த்தப்

பட்டிருக்கிறது. பின்தங்கிய மக்களுடைய வருமானம் ரூ. 2,000 என்பது ரூ. 2,500 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆகவே, பின்தங்கிய மாணவர்கள் என்றால் ஒரு அலர்ஜி வரக் கூடாது. எப்படி தாழ்த்தப்பட்டவர்கள் சமுதாயத்திலே தாழ்த்தப் பட்டிருக்கிறார்களோ, அதைப்போலவேதான். பின்தங்கியவர்களும் சமுதாயத்திலே தாழ்த்தப்பட்டிருக்கிறார்கள்.

இங்கே துரைமுருகன் தெரிவித்த மாதிரி, நான் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பொழுதே, நான் உறுதியாகத் தெரிவித்தேன், என்னுடைய வாழ்நாளில், நான் பொறுப்பிலே இருக்கிற நேரத்தில், எந்தக் காலத்திலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும், பின்தங்கிய மக்களுக்காகவும் பாடுபட, உழைப்பதற்கு உறுதி எடுத்துக்கொள்வேன் என்றுதான் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன் நான் தெரிவித்தேன். ஆகவே. இப்படிப்பட்ட திசை திருப்பப் படுகின்ற காரியங்களால் நான் சிறிதளவும் பின்தங்கியவர்களுக்குச் செய்கின்ற காரியங்களிலிருந்து பின்வாங்க மாட்டேன். அதே போல், தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பாடுபடுவதிலிருந்தும் பின்வாங்க மாட்டேன்.

பெரியவர் மணலி அவர்கள் இங்கே ஒன்றைச் சொன்னார்கள். சத்திரம் டிபார்ட்மெண்டில் பென்ஷன் தரவேண்டுமென்று உத்தரவிட்டும் செயல்படவில்லையென்று சொன்னார்கள். உத்தரவிடப்பட்டதும் உண்மை, செயல்படாததும் உண்மை. இடையிலே நடந்தது என்னவென்றால், சத்திரம் டிபார்ட் மெண்டிலே பணம் இல்லாததால், அரசாங்கத்தை அந்தச் செலவை ஏற்கும்படியாக, தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டிருக்கிறார் 14—11—1974-இல். அரசாங்கம் அதை ஒத்துக் கொண்டு இப்பொழுது உத்தரவிட்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பணம் உடனடியாக வழங்கப்படும் என்றும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய பேருந்துப் போக்குவரத்துக் கழகங்களைப் பற்றி திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் எடுத்துச் சொல்லி, அதிலேயிருக்கிற குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினார்கள். நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இப்பொழுது உருவாக்கப்பட்டிருக்கிற அமைப்புகளில் எந்த அளவுக்கு நன்மைகள் விளையும் என்பதையெல்லாம் எடுத்துச்





சொன்னார்கள். இந்தப் போக்குவரத்துக் கழகங்கள் தனியாக அமைக்கப்பட்டதும். இன்று போக்குவரத்துத் துறையிலே செய்யபபட்டிருக்கிற ஏற்பாடுகளும், நம்முடைய பேருந்துகளை மேலும் செம்மையாக நடத்துவதற்கான வாய்ப்புகளை இந்த அரசுக்கு வழங்கியிருக்கிறது. பல போக்குவரத்துக் கழகங்கள் உருவாகியிருக்கின்றன. பல்லவன், பாண்டியன், சேரன், சோழன், அண்ணா, கட்டபொம்மன் என்ற பெயரில் போக்குவரத்துக் கழகங்கள் இன்றைக்கு உருவாக்கப்பட்டு நல்ல முறையிலே செயல்படுகின்றன.

மிச்சமிருக்கிற ஒரு பகுதி வட ஆற்காடு, தென்னாற்காடு பகுதி. அதற்கும் ஒரு போக்குவரத்துக் கழகம் உருவாகவிருக்கிறது என்பதையும், அதற்குப் பெயர், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் என்பதையும் தெரிவித்துக்கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். (ஆரவாரம்)

மேலும், பல்வேறு விவரங்கள் இந்தத் துணை மதிப்பீட்டில் எடுத்துச் சொல்லப்பட்டிருந்தாலும், அவைகளுக்கெல்லாம் தனித்தனியாகப் பதில் சொல்ல இயலாது எனினும் இங்குப் பதிவாகியிருக்கிற குறிப்பேட்டிலிருந்து அரசின் அதிகாரிகள் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுப்பதன் மூலமாக, குறைகளைத் தீர்த்து வைப்பார்கள் என்பதை மாத்திரம் கூறி, இந்த நேரத்தில் நல்ல கருத்துக்களை வழங்கிய எல்லா உறுப்பினர் களுக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

(பிற்பகல் 1.00)

## (9) 1974-75-ம் ஆண்டிற்கான செலவு குறித்த இரண்டாவது துணை நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு

### நிதிக் கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள் சட்டம்—நிர்வாகம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி

"நிதிக் கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள் சட்டம் நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,76,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

[1974 டிசம்பர் 21

நிதிக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி

"நிதிக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 10,56,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி

"நிதிக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,33,20,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 15—காவல் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி

"நிதிக் கோரிக்கை எண் 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 16—தீயணைப்பு பணிகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி

"நிதிக் கோரிக்கை எண் 16—தீயணைப்பு பணிகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 26,63,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.



1974 டிசம்பர் 21]

**நிதிக் கோரிக்கை எண் 17—கல்வி**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி

"நிதிக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,63,40,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 19—பொதுச் சுகாதாரம்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி

"நிதிக் கோரிக்கை எண் 19—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 20—வேளாண்மை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி

"நிதிக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ரூ. 36,37,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 21—மீனளம்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி

"நிதிக் கோரிக்கை என் 21—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி

[1974 டிசம்பர் 24

" நிதிக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 15,00,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 24—தொழில்கள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி,

" நிதிக் கோரிக்கை எண் 24—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்"

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 26—கைத்தறியும், துணித் தொழிலும்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி,

" நிதிக் கோரிக்கை எண் 26—கைத்தறியும், துணித் தொழிலும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 70,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் ".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 30—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி

"நிதிக் கோரிக்கை எண் 30—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,00,00,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் ".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது

**நிதிக் கோரிக்கை எண் 31—பின்தங்கிய வகுப்பினர் நலன்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி ;

" நிதிக் கோரிக்கை எண் 31—பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் ".



1974 டிசம்பர் 21]

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 34—உணவுப்பொருள் வழங்கல்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

" நிதிக் கோரிக்கை எண் 34—உணவுப்பொருள் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,81,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் ".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 35—பாசனம்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

" நிதிக் கோரிக்கை எண் 35—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,00,52,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் ".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 38—சாலைகளும், பாலங்களும்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி

" நிதிக் கோரிக்கை எண் 38—சாலைகளும், பாலங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,50,00,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் ".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 41—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வு கால நன்மைகளும்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 41—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வு கால நன்மைகளும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 8,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 42—பல்வகை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி :

"நிதிக் கோரிக்கை எண் 42—பல்வகை என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,83,64,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 44—காட்டு வளத் துறை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 44—காட்டு வளத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,40,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 49—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 49—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 25,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".



நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 50—பாசனம் குறித்த மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 50—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 51—பொதுப் பணித்துறை—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 51—பொதுப் பணித் துறை—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 45,00,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 52—சாலைகள், பாலங்கள் குறித்த குறித்த மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 52—சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 54—காடுகள் குறித்த மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 54—காடுகள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 15,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 55—பல்வகை மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 55—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 74,28,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 56—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 56—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 70,92,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.



**(5) அறிவிப்புகள்—தொடர்ச்சி.**

**(ஈ) தமிழ்நாடு 1974-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு 1974-ம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவை இப்பேரவையில் அறிமுகப்படுத்துவதற்கும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

(7) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

**(ஆ) துணை மானியக் கோரிக்கைகள் மீதும் அவற்றிற்கான நிதி ஒதுக்க சட்டமுன்வடிவுகள் மீதும் விவாதம் அனுமதிப்பது குறித்து**

DR. H. V. HANDE: Sir, on a point of order. Before the Hon. Chief Minister introduces the Appropriation Bill, I would, with your permission, raise a very significant and important point of order. It is this House which has got powers to vote Demands for Grants and therefore it is but proper that we should get adequate time to discuss these Demands and also discuss the Appropriation Bill. Unfortunately we have a rule under which we have to guillotine them at 1 o'clock. In fact the Hon. Chief Minister has got hardly ten minutes to reply to the discussion and several Members who spoke had hardly five minutes to speak. But in the other House, the Members have got time to discuss it for nearly three or four hours even though their number is only 63 and they do not have the rule regarding guillotine. But the number of Members in this House is 234 and they have got hardly enough time to express their views. I request the Hon. Chief Minister through you to place this matter before the Business Advisory Committee and discuss it thoroughly so that in future we can have adequate time as the Members of the Legislative Council get. I hope the Hon. Speaker and the Hon. Leader of the House would discuss the matter and take a decision in regard to this matter.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இதைப்பற்றிச் சொல்வது என்றால் பி.ஏ.சி.யிலோ அல்லது ரூல்ஸ் கமிட்டியிலோ சொல்லலாம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : அப்ரோப்ரியேஷன் பில்லாவது எல்லோருக்கும் பேசுவதற்கு போதுமான வாய்ப்புக் கொடுங்கள். டைம் போதுமான அளவு கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : முன்வரிசையிலே உட்கார்ந்து கொண்டிருக்கின்ற கட்சித் தலைவர்கள் பி.ஏ.சி.யிலே வந்து கேட்டிருக்கலாம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : அதைப்பற்றி இப்போது ஒன்றும் சொல்லக்கூடாது என்று இல்லையே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அதைப்பற்றி இங்கே வந்து பேசுவது சரியல்ல. அதை பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் முடிவு செய்ய வேண்டும். நீங்களெல்லாம் தலைவர்களாக வந்து, பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் வாதாட வேண்டும். அங்கே வராமல் இங்கே வந்து கேட்டால் எப்படி ?

THIRU K. T. K. TANGAMANI : I think Dr. Hande has raised a very significant point. I think certain amendments to the rules are necessary. I think the Rules Committee may be called for and suitable amendments made.

DR. H. V. HANDE : Rules can be changed subsequently. Before that we can evolve these conventions.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : தலைவாவர்களே, இதற்காக விதிமுறைகளை திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொல்வதைப்போல மாற்ற வேண்டிய அவசியம் எதுவும் கிடையாது. நாம் அலுவல் ஆய்வுக் குழுவில் இதை நேற்றையதினமே எடுத்துக் கொண்டு, ஒரு நாள் முன்கூட்டியே எடுத்துக் கொண்டு இரண்டு நாட்களை இதற்கான விவாதங்களுக்கு வைத்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்திருந்தால் நேற்றும், இன்றும் விவாதித்திருக்கலாம். ஹாண்டே அவர்கள் சொல்வதைப்



போல் இன்னும் அதிக நேரமும் கிடைத்திருக்கும். எதிர்காலத்தில் இப்படிப்பட்ட துணை மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதங்களுக்காக இரண்டு நாட்கள், மூன்று நாட்கள் எடுத்துக் கொள்ளலாம் என்று அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு செய்வது நல்லது.

THIRU M, A. LATHEEF : Sir, if rules have to be changed it might be done so. This is supplementary budget and it is very important that we have enough time for discussing it. The supplementary budget is important because, we spend more than what we originally budgeted for and it is all the more important that it is discussed thoroughly by the legislature. It is important that the supplementary estimates are scrutinised by the legislature thoroughly. It carries more importance than the actual budget So, it is absolutely necessary that more time should be allotted. What I say is, let conventions be evolved so that we could discuss these supplementary estimates and so that we could have thorough discussions. So I fully support the contention of Dr. Hande. Suitable conventions may be evolved by the Business Advisory Committee and necessary action may be taken.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவாவர்களே, கில்லட்டின்தான் கடைசி நாள். அதற்கு முன்னாலே எத்தனை வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு செய்து, முதல் நாளே எடுத்துக் கொண்டு விவாதித்து, கில்லட்டின் வரும் நாளில் ஒரு மணிக்கு முடித்துக் கொள்ளும் அளவிலே வைத்துக் கொள்ளலாம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே** : கவுன்சிலிலே டிஸ்கஸ் செய்கிறார்கள். பேப்பரிலே கூட வந்திருக்கிறது. அங்கேயிருப்பது மாதிரி நமக்கும் வாய்ப்பு இருக்க வேண்டும். கவுன்சிலிலே இருப்பது மாதிரி 234 பேர் இருக்கின்ற நம்முடைய சபைக்கும் வாய்ப்பு கொடுங்களேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : We had discussed for hours together the Appropriation Bill previously.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதிக்கக் கூடாது என்று விதி இல்லை. பிசினஸ் அட்வைசரி கமிட்டியில், உறுப்பினர்களுக்கு வாய்ப்பாக இருக்கும்பொருட்டு, எல்லோரும் சேர்ந்து இப்படிப் பொது விவாதத்திலே பேசாவிட்டால் அப்ரோபிரியேஷன் பில்லிலே பேசிக்கொள்ளலாம் என்று முடிவு செய்கிறோம். அதற்கு ஒரு நாள் அல்ல, இரண்டு நாட்கள், மூன்று நாட்கள் வேண்டுமென்று அங்கே கேட்டு வாங்குங்கள். அங்கே கேட்காமல் இங்கே கூறிக் கொண்டிருக்கிறீர்களே.

### (10) அரசினர் சட்ட முன்வடிவு

### தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, நான் இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

பேரவையின் முற்பகல் அலுவல்கள் இந்த அளவில் முடிவுற்று, மாலை 4 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1.14 மணி அளவில் ஒத்திவைக்கப்பட்டது.

[இடைவேளைக்குப் பின்—மாலை 4.00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தலைமையில் பேரவை மாலை 4.00 மணி அளவில் மீண்டும் கூடியது.





### 11. அரசினர் தீர்மானம்

**19—12—1974 ஆம் தேதி கைவிடப்பட்ட சில தனியார் சட்ட முன்வடிவுகளையும் தனித் தீர்மானங்களையும் எடுத்துக் கொள்வது குறித்து.**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, 19—12—1974 அன்று அறிக்கை கொடுத்திருந்த பேரவை உறுப்பினர்கள் அவையில் இல்லாததால் கைவிடப்பட்ட தனியார் சட்ட முன்வடிவுகளும், தனித் தீர்மானங்களும் இன்று மீண்டும் அவையில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

### 12. தனியார் அலுவல்கள்

### (அ) சட்ட முன்வடிவுகள்

**(1) 1974 ஆம் ஆண்டு, மேட்டூர் நகரியம் (ஒழிப்பு-நகராட்சியை விரிவுபடுத்துதல்) சட்ட முன்வடிவு.**

**திரு. எம். சுரேந்திரன் :** 1974 ஆம் ஆண்டு, மேட்டூர் நகரியம் (ஒழிப்பு-நகராட்சியை விரிவுபடுத்துதல்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**திரு. எம். சுரேந்திரன் :** இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

**(2) தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு பொருள் நுகர்வோர் பாதுகாப்புச் சட்ட முன்வடிவு.**

DR. H. V. HANDE : Sir, I move—

"That leave be granted to introduce the Tamil Nadu Consumers' Protection Bill, 1974."

The motion was put and carried and leave was granted.

Dr. H. V. HANDE: Sir, I introduce the Bill.

Mr. SPEAKER: The Bill is introduced.

**(3) தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு உழவர்கள் வேளாண்மைத் தொழிலாளர்கள் கடன்கள் சரிக்கட்டுதல் சட்டமுன்வடிவு.**

Thiru N. K. PALANISAMY: Sir, I move—

"That leave be granted to introduce the Tamil Nadu Agriculturists and Agricultural Labourers' Debts Adjustment Bill, 1974"

The motion was put and carried and leave was granted.

Thiru N. K. PALANISAMY: Sir, I introduce the Bill.

Mr. SPEAKER: The Bill is introduced.

## (ஆ). தனித் தீர்மானங்கள்

### இன்றியமையாப் பொருள்களின் மொத்த வாணிபத்தை அரசு எடுத்துக் கொள்ளுதல்.

Thiru N. K. PALANISAMY: Sir, I move—

"This House recommends to the Government to take over the whole-sale trade of all the essential commodities like rice, coarse grains, cement, sugar, kerosene, other edible oils, manure and pesticides by procuring marketable surplus and by distributing the same by opening fair price shops for every thousand people in the State."

Thiru M. SURENDRAN: Sir, I second the resolution.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு தீர்மானங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு தீர்மானத்திற்கும் எவ்வளவு நேரம் ஒதுக்குவது? எத்தனை மணி வரையில் அவையை நடத்துவது?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** முதல் தீர்மானத்தை இன்று முடித்தால் போதும். இரண்டாவது தீர்மானத்தை இன்று எடுக்க வேண்டுமென்ற அவசியமில்லை.







**மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி:** எதிர்பாராத விதமாக எனக்கு வேறு ஒரு அலுவல் இருப்பதால் 5½ மணிக்கு முடிந்துவிட்டால் நல்லது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் பேசி அமைச்சர் அவர்களுடைய பதில் இன்று இல்லை என்ற அளவில் விட்டுவிடலாமா? ஆயினும் முக்கியமான பொருள் பற்றி இருக்கின்ற காரணத்தால் அமைச்சர் அவர்கள் பதில் கூறினால் தான் அரசாங்கத்தின் கொள்கை என்ன என்று தெரியும். ஆகவே, 5½ மணிக்கு முடித்து விடலாம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** இன்றைக்கு உறுப்பினர்கள் பேசலாம். அமைச்சர் அவர்கள் இன்னொரு நாள் பதில் கொடுக்கலாம். உறுப்பினர்கள் எல்லோரும் மனம்விட்டு பேச வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்ன ஆலோசனையை ஏற்றுக்கொள்ளலாம். இது ரொம்ப முக்கியமான விஷயம். பல கட்சிகளின் சார்பில் பல உறுப்பினர்களின் கருத்துக்களைச் சொல்ல முடியும். அரசாங்கத்தின் கருத்து அடுத்த செஷனில் வந்தால் கூட பரவாயில்லை. முதல் தீர்மானத்தை மட்டும் இன்று முடித்து விட்டால் போதும.
I am not pressing for the second Resolution. I am not interested in the second resolution being taken up today.
அந்த ரைட்டை விட்டுக் கொடுக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் பதில் இன்று இல்லை. மாலை 6 மணி வரை இன்று அவையை நடத்தலாம்.

**திரு. என். கே. பழனிசாமி:** கனம் சபாநாயகர் அவர்களே, இன்று இந்தத் தீர்மானம் அடிப்படையான ஒரு கொள்கையை உருவாக்கக் கூடிய தீர்மானம். விலைவாசி கடுமையான அளவு ஏறியிருக்கிறது. இன்றையதினம் சகல பொருள்களின் விலையும் என்றும் கண்டிராத அளவுக்கு ஏறியிருக்கிறது. ஜனங்களுடைய வாங்கும் சக்தி குறைந்துவிட்டது.
They are faced with too much money

[திரு. என். கே. பழனிசாமி] [1974 டிசம்பர் 21

அதுதான் இன்றைக்கு இருக்கக் கூடிய சமாச்சாரம். ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கக் கூடியவர்கள் கூட கட்டுபடியாகவில்லை என்று சொல்லுகிறார்கள்.

இன்றைக்கு பிக்ஸட் இன்கம் க்ரூப்பை எடுத்துக்கொண்டாலும் சரி அல்லது ஏழை எளிய மக்களை எடுத்துக் கொண்டாலும் சரி அவர்கள் படும் துன்பம் தொல்லை சொல்லி முடியாது. வாரத்திற்கு, ஒரு நாள் கூட அவர்களால் சரியாகச் சாப்பிட முடியவில்லை. ஆயிரம் ரூபாய் வருமானம் வரக்கூடியவர்கள் கூட வெறும் ரசம் சாதத்தைச் சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறார்கள் என்றால் இன்றுள்ள விலைவாசியேற்றத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள். இன்று மக்களால் வாழ்க்கை நடத்த முடியவில்லை. இந்த நிலையை நீங்கள் எப்படி நீக்கப் போகிறீர்கள்? மாநில சர்க்கார் ஆனாலும் சரி அல்லது மத்திய சர்க்காரானாலும் சரி இந்தக் கஷ்டத்தை எப்படித் தீர்க்கப் போகிறார்கள்? இந்தக் கஷ்டம் எப்போது தீரும்? இந்தக் கஷ்ட நிலையைப் போக்க உங்களது கொள்கை என்ன?

இன்று மக்கள் ஒரு நிலை இல்லாத வாழ்க்கையை நடத்துகிறார்கள். இன்று உலகம் பூராவும் விலைவாசி ஏறிவிட்டது, ஆகவே இந்தியாவிலும் ஏறிவிட்டது, எனவே, நமது மாநிலத்திலும் ஏறியிருக்கிறது என்று சொல்கிறார்கள். இது ஒரு வேர்ல்ட் பினாமினன் என்று சொல்கிறார்கள். லண்டன் எக்கனாமிஸ்ட் என்ற பத்திரிகையில் புள்ளிவிவரங்கள் கொடுத்திருக்கிறார்கள். அதைத் தங்கள் அனுமதியுடன் படிக்கிறேன். 1970 இல் 100 புள்ளி என்றால் 1974 இல் 125 புள்ளியாகிறது. வெஸ்ட் ஜெர்மனியில் 1973-74க்கிடையில் 7 பாயின்ட்ஸ் தான் ஏறியிருக்கிறது. ப்ரான்ஸில் நான்கு ஆண்டுகளுக்கிடையே ஏறியிருப்பது 131 பாயின்ட்ஸ். இந்த ஆண்டு 12½. பிரிட்டனில் 144 புள்ளி. இந்த ஒரு ஆண்டில் 15 புள்ளி ஏறியிருக்கிறது. ஹாலந்து 9. இந்தியாவில் 68% ஏறியிருக்கிறது. உலகத்திலேயே அதிகப்படியான விலைவாசி யேற்றம் இந்தியாவில்தான். அதிலும் சென்னை ராஜ்யத்தில் எல்லாவற்றையும் விட ஜாஸ்தி. இது முதலாளித்துவ நாடுகளைப் பொறுத்தவரையில். சோஷலிஸ நாடுகளை எடுத்துக்கொள்வோம்



1974 டிசம்பர் 21] [திரு. என். கே. பழனிசாமி]

To take the example of the German Democratic Republic it has seen a 7 per cent annual rise in consumer prices. The retail consumer prices in 1955, 1960 and 1973 of certain commodities has been :

| Commodity. | 1955 | 1960. | 1973. |
|---|---|---|---|
| Potato [per kg.] .. | 0·12 | 0·12 | 0·17 |
| Black bread [per kg.] .. | 0·52 | 0·52 | 0·52 |
| White bread .. .. | 1·00 | 1·00 | 1·00 |
| Sugar .. .. .. | 3·00 | 1·64 | 1·64 |
| Milk [per litre] .. .. | 2·24 | 0·72 | 0·72 |
| Cheese [per kg.] .. | 8·00 | 7·20 | 7·20 |
| Eggs [each] .. .. | 0·45 | 0·37 | 0·34 |

In the seven commodities listed above the prices of two have remained unchanged, the prices of four have been slashed down and the prices of only one (potatoes) have risen.

The position in the USSR the major country of the socialist world is still more different. The phenomenon of spiralling prices is unknown to the population of the USSR—this is the comment in an editorial in the Soviet Review on the occasion of the fourth reduction in consumer prices during the course of the Ninth Five Year Plan (1971–75). The editorial states further : It is noteworthy that a further reduction in prices has been announced in the Soviet Union, this being the fourth cut in prices during the first half of the 9th Five Year Plan. The cut covers a wide range of products turned out by the heavy and the light industries—TV sets, motor cycles, bicycles, fountain pens, ball point pens, items of house-hold use like soap, detergents, footwear, clothes and other things.

நார்த் வியட்நாம் விடுதலையடைந்து இரண்டு வருடங்கள் ஆகின்றன. அங்கு விலைவாசி ஏறியிருக்கிறது. நார்த் கொரியாவை எடுத்துக் கொண்டால் அங்கு வரி இல்லை, விலையேற்றமும் இல்லை. சோஷலிஸ நாடுகளில் விலைவாசி இறங்கிக் கொண்டு வருகிறது,

[திரு. என். கே. பழனிசாமி] [1974 டிசம்பர் 21

ஆனால் முதலாளித்துவ நாடுகளில் விலைவாசி ஏறிக்கொண்டு வருகிறது. இது வேர்ல்ட் பினாமினனா? விலைவாசி ஏறியிருக்கிறது என்றால் அதற்குக் காரணம் முதலாளித்துவ கொள்கைகளின் விளைவுதான்.

மத்திய சர்க்கார் இருபத்தைந்து ஆண்டுகளாக முதலாளித்துவ கொள்கையை அனுஷ்டித்து வந்ததாலும், தொடர்ந்து அனுஷ்டித்து வருவதாலும்தான் இந்த நெருக்கடி அதிகமாக ஆகியிருக்கிறது. இந்த நெருக்கடிக்கு தீர்வு காண முடியவில்லை.

இன்று உலகம் பூராவும் பெரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. அமெரிக்கா போன்ற நாடுகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வந்ததை இன்று குறைக்க வேண்டியிருக்கிறது. 34 சதவிகிதம் அளவிற்குக் குறைத்துவிட்டது. அதனால் விலைவாசி ஏறுகிறது, வேலையில்லாத் திண்டாட்டமும் ஏற்படுகிறது. மக்கள் வாழ்க்கை நடத்தக் கஷ்டப்படுகிறார்கள்.

அதேமாதிரி ப்ரான்ஸ், பிரிட்டன், வெஸ்ட் ஜெர்மனி போன்ற நாடுகள் பூராவும் ஏற்றுமதி செய்வதைக் குறைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இன்று அரேபியா போன்ற நாடுகளில், அவர்கள் சுதந்திரம் பெற்ற பிறகு, பெட்ரோல், க்ரூட் ஆயில் போன்றவற்றை அவர்கள் எடுத்துக்கொண்டு விட்டதால் அமெரிக்கா அதை எடுத்து விநியோகம் செய்ய முடியவில்லை. 35,000 கோடி டாலர் வருட வருமானம் வந்தது. இன்று அவற்றை நாஷனலைஸ் செய்து விட்டதால் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. நியூயார்க் ஸ்டாக் எக்சேஞ்சில் இரண்டு லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு கீழே விழுந்துவிட்டது. ஜெனரல் மோட்டார்ஸ், அது ஒரு பெரிய கம்பெனி, இன்று மூடப்பட்டு விட்டது.

இட்டலியில் பெட்ரோல் விலை ஏறிவிட்ட காரணத்தால், கார்களுக்குத் தேவையான உருப்புகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் பல மூடப்பட்டு விட்டன. அங்குள்ள மோட்டார் உறுப்புகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளில் இருபது லட்சம் பேர்கள் வேலை செய்து வந்தது இரண்டு லட்சம் பேர்கள் என்ற அளவிற்குக் குறைந்து விட்டது. ஐயாயிரம் மில்லியன் டாலர்



1974 டிசம்பர் 21] [திரு. என். கே. பழனிசாமி]

கடன் இருக்கிறது. அமெரிக்காவில் என்ன செய்கிறார்கள் என்றால் 15 சதவிகிதம் பூமியை ஃபாலோவாகப் போடு என்று சொல்கிறார்கள். ஒரு யு.என். எக்ஸ்பர்ட் சொல்கிறார். வருடம் ஒன்றுக்கு 380 மில்லியன் டன் மாமிசம் சாப்பிட்டு வந்தார்கள். இன்று அதில் 15 சதவிகிதம் அளவிற்கு மாமிசம் சாப்பிடுவதைக் குறைத்துவிட்டால் பல கோடி மக்களுக்கு உணவு கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். ஆக, இன்று விலைவாசி ஏறியிருக்கிறது, உற்பத்தியைக் குறைக்கிறார்கள் என்ற நிலைதான் ஏற்பட்டிருக்கிறது.

இன்று நம் மாநிலத்தில் கோவையை எடுத்துக் கொண்டால் 55 மில்கள் இருக்கின்றன. இந்த ஆண்டு பாலன்ஸ் ஷீட்டில் 45 கோடி ரூபாய் லாபம் வந்திருக்கிறது. ப்ரொடக்ஷனை குறைத்துவிட்டார்கள். இன்று உலகத்தில் உள்ள எல்லா முதலாளிகளும் ப்ரொடக்ஷனைக் குறைந்து விலையை ஏற்றி விடுகிறார்கள். மக்கள் வாங்க முடியாத அளவிற்கு விலைகளை ஏற்றுவது என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதேமாதிரி நம்முடைய இந்தியாவை எடுத்துக் கொண்டால் பஞ்சம் என்று சொல்கிறார்கள். ஜனங்களிடத்திலே கையிலே காசு கிடையாது. மத்திய சர்க்கார் நிதி அமைச்சர் அவர்கள் கூட சமீபத்தில் சொல்லியிருக்கிறார் ஒரு ரூபாயின் வால்யூ 25 பைஸாவாகக் குறைந்து விட்டது என்று. ஆகவே, இன்றையதினம் பாவர்டி லைன், வறுமை லைனுக்கு கீழே இருக்கக்கூடியவர்கள் முன்பு 30 கோடி இருந்தார்கள்; இப்போது அது கிட்டத்தட்ட 50 கோடி பேர்களாக உயர்ந்துவிட்டது. இருந்தாலும் விலைவாசி ஏறியிருக்கிறது. யார் ஏற்றியது? முதலாளித்துவ நாடுகளெல்லாம் ஏற்றிவிட்டன.

போர்ச்சுகலில் பார்க்கிறோம் (குறுக்கிடு) அங்கே கம்யூனிஸ்டு கட்சி கொஞ்சம்—அதை எதிர்த்து நடத்தக்கூடிய போராட்டம். அதேமாதிரி கிரீஸ், சைப்ரஸ் நாட்டில் நடந்த இன்ஸிடெண்ட். கிரீஸில் பெரிய மாற்றம். இத்தாலியில் கிறிஸ்டியன் டெமாக்ரடிக் பார்ட்டி சர்க்கார் இரண்டாக உடைந்திருக்கிறது. இடதுசாரி பக்கம் சாய்ந்தது. அதேமாதிரிதான் பிரிட்டனிலும். உலகத்திலே இந்தமாதிரி இரண்டு வகையிலே போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. அதுதான் இந்தியாவிலும் நடக்கிறது.

[திரு. என். கே. பழனிசாமி] [1974 டிசம்பர் 21

இந்தியாவில் ஜெயப்பிரகாஷ் நாராயணனுக்கும் இந்திரா காந்திக்கும் போராட்டம் அல்ல. இது இரண்டு விதமாக பிளந்து இருக்கிறது. 1971 ஆம் ஆண்டிலே அது தோற்றது. அதற்குப் பின்னாலே டாடா மெமோரண்டம் என்று சொல்லி பிரதம மந்திரியே அந்தக் கொள்கையை வற்புறுத்த வேண்டும் என்று சொன்னார்கள். மறுபடியும் ஒவ்வொன்றாக, ஒவ்வொரு மாநிலத்திலும் இம்மாதிரி கிளப்பி விடுவது. இம்மாதிரி ப்ரொகாஸிவ் கோஷங்களை வைத்து கிளப்பி விடுவது. வோட்டுக்கள் வாங்கி அவர்கள் பார்லிமெண்டிற்கோ அல்லது சட்டசபைகளுக்கோ வர முடியாது. எப்படியாவது அதிகாரம் வேண்டும் என்று போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த சர்க்காருக்கு ஏன் இந்த புத்தி வர வேண்டும்? ஜெயப்பிரகாஷ் நாராயணனை எதிர்க்கிறோம் என்று சொல்லி ஊர்வலம் வந்துவிட்டால் மட்டும் போதாது, எதிர்த்து விட முடியாது. கொள்கை மாற்றம் வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்த சர்க்காரைக் கூறுகிறீர்கள்?

**திரு. என். கே. பழனிசாமி:** மத்திய சர்க்காரைத்தான். ஊர்வலம் நடத்தினால் மட்டும் போதாது, கொள்கை மாற்றம் வேண்டும். கடைப்பிடிக்கக் கூடிய கொள்கை என்ன? முதலாளித்துவ முறையில் இந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியாது.

விவசாயத்தை எடுத்துக்கொள்வோம். விவசாயத்திற்கு 40 கோடி ஏக்கர் இருக்கிறது. இந்திரா காந்தி அவர்கள் முதலில் வந்தபொழுது 'டைம் பௌண்ட் ப்ரோகிராம்' என்று சொன்னார்கள். 1972 ஆம் வருடத்துக்குள் நிலச் சீர்திருத்தம் அமுல் செய்யப்படும் என்று சொன்னார்கள். 1973-க்குள் மொத்த வியாபாரத்தை சர்க்கார் எடுத்துக்கொள்ளும் என்ற அடிப்படையில் வோட்டு வாங்கினார்கள். வோட் வாங்கி ரொம்ப நாட்கள் கூட ஆகவில்லை. ஒன்று கூட நிறைவேற்றப்படவில்லை.

40 கோடி ஏக்கர் நிலம் இருக்கிறது. நிலச் சீர்திருத்தத்திற்காக ஒரு கமிட்டி போட்டார்கள். அந்தக் கமிட்டி கிராமப்புறங்களில் சர்ப்ளஸ் லாண்ட் 5 கோடி ஏக்கர் இருப்பதாகச் சொல்லியது.



1974 டிசம்பர் 21] [திரு. என். கே. பழனிசாமி]

ஆனால் 27 லட்சம் ஏக்கர்தான் வந்தது. சரியான முறையில் நிலச் சீர்திருத்தம் அமுலாகவில்லை. நம்முடைய மாநிலத்தில் கூட. 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் ஸீலிங் வைத்து 2 லட்சம் ஏக்கர் இருப்பதாகச் சொன்னார்கள். 10,000 ஏக்கர் இருப்பதாக கடைசியில் சொன்னார்கள். இப்பொழுது 27,000 ஏக்கர் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, நிலச் சீர்திருத்தம்தான் அடிப்படை.

கிராமப்புறத்திலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை முதலாளித்துவ முறையில் இனி தீர்க்க முடியாது. இன்றைய தினம் க்ரீன் ரெவல்யூஷன்—பசுமைப் புரட்சி என்று சொல்கிறார்கள். பசுமைப் புரட்சி 10 சதவிகிதம் பூமியில்தான் உண்டாயிற்று. ஓரளவுக்கு ஒரு வருஷம் அதிகமாக விளைந்தது. படிப்படியாக குறைந்துபோய் விட்டது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பசுமைப் புரட்சியில் விவசாய அபிவிருத்தி ஏற்பட்டது என்று சொல்ல முடியாது. டிராக்டர்கள் போன்றவைகளை உபயோகப்படுத்துகிறார்கள். டிராக்டர்களை உபயோகப்படுத்துகிற காலத்தில் என்ன ஆகிறது? இண்டர்னல் மார்கெட் குறைகிறது. காரணம் டிராக்டர்களை உபயோகப்படுத்துவதினால் பல பேர்களுக்கு வேலை இல்லாமல் போய் விடுகிறது. அதிகப்படியான பேர்களுக்கு வேலை இல்லாமல் போய் விடுகிறது. உற்பத்தியாகின்ற சரக்கு விற்கக் கூடிய அளவு குறைந்து விடுகிறது. ஆகவே, நிலச் சீர்திருத்தத்தை இன்னும் தீவிரமாக அமல்படுத்த வேண்டும் அடிப்படையிலே. உணவு உற்பத்திக்கு பல கோடிக்கணக்கான ரூபாய் செலவழிக்கப்படுகிறது. நான்கு, ஐந்து ஐந்தாண்டுத் திட்டங்களில் இதற்காக ஒதுக்கப்பட்ட பணம், உரத்திற்காகவும், கிணறுகள் வெட்டுவதற்காகவும், கடனாகவும் மான்யமாகவும் கொடுக்கப்பட்ட பணம் யாருக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறது? பணக்கார விவசாயிகளுக்குத்தான் போய்ச் சேர்ந்திருக்கிறது. அதனால்தான் ப்ரொக்யூர்மெண்டு செய்ய முடியவில்லை. அவர்களே சர்க்காரை எதிர்க்கிறார்கள். மொத்த வியாபாரிகளுடன் சேர்ந்து கொண்டு அவர்களே சர்க்காரை எதிர்க்கக் கூடிய நிலைமையைப் பார்க்கிறோம்.

[திரு. என். கே. பழனிசாமி] [1974 டிசம்பர் 21

இன்று விவசாய உற்பத்தி காபிடலிஸ்டு மார்க்கெட்டுக்குப் போகிறது. கரும்பு உற்பத்தியை எடுத்துக்கொண்டால் கொஞ்சம் வைத்துக் கொள்ளலாம். மீதியைக் கொண்டு போய் மார்க்கெட்டிலேதான் விற்க வேண்டும். பருத்தியை எடுத்துக் கொண்டாலும் அதை மார்க்கெட்டில்தான் கொண்டுபோய் விற்க வேண்டும். நெல் உற்பத்தி செய்பவர்கள் வேண்டுமானால் கொஞ்சம் வைத்துக் கொண்டு மீதியை விற்கப் போகிறார்கள்.

(திரு. எஸ். வடிவேல் அவர்கள் எதிர்க்கட்சியினர் முன்வரிசையில் அமர்ந்துகொண்டிருந்தார்)

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** எதிர்க்கட்சித் தலைவர்கள் இல்லை என்ற குறையைப் போக்குவதற்காக திரு. வடிவேல் அவர்கள் அவர்களுடைய கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்களா?

**திரு. என். கே. பழனிசாமி :** ஆகவே, சரக்கு மார்க்கெட்டுக்குப் போகும்பொழுது மிகவும் குறைவான விலை கொடுத்து வாங்கக் கூடிய நிலையைப் பார்க்கிறோம். கரும்புக்கும் குறைவான விலை கொடுத்து வாங்குகிறார்கள். மற்ற பொருள்களுக்கும் நியாய விலை கொடுப்பதில்லை. விவசாயிகளை மார்க்கெட் ஒரு பக்கம் தாக்குகிறது. இன்னொரு பக்கத்தில் சர்க்கார் வாட்டுகிறார்கள். வட்டிக்காரர்கள் வாட்டுகிறார்கள். ஆகவே, இப்படியெல்லாம் விவசாயிகளைப் பிழிந்து கசக்கக்கூடிய நிலைமையைப் பார்க்கிறோம்.

நெல் விலையைக் குறைத்துப்போட்டிருக்கிறார்கள். நமது அரசாங்கம் நிர்ணயித்திருக்கிற விலை சரிதான். அவர்கள் கமிட்டி போட்டு ரூ. 74 என்று நிர்ணயித்தார்கள். அதனால் ஏற்கனவே பெரிய மொத்த வியாபாரிகள் பூராவையும் கொள் முதல் செய்து ஏராளமாக ஸ்டாக் வைத்திருக்கிறார்கள். இப்படி விலை குறைந்திருந்தால் வெளியே அவர்கள் அதிகமான விலைக்கு விற்கமுடியும். ஆகவே, ரூ. 74 என்ற விலையை அதிகப்படுத்தக் கூடாது. அதிகப்படுத்தினால் அவர்கள் லாபம் கெட்டுப் போகும் என்று மானிபுலேஷன் செய்தார்கள். ஆந்திராவில் கணக்குப் போட்டுப் பார்த்தால் ஒரு ஏக்கருக்கு 1644 டன் வருகிறது. மெனூர் போடுவதையெல்லாம் சேர்த்து கணக்குப் போட்டால்



1974 டிசம்பர் 21] [திரு. என். கே. பழனிசாமி]

ஒரு குவிண்டாலுக்கு ரூ. 50 வருகிறது. கொடுப்பது ரூ. 74. ஆகவே ரூ. 24 லாபம் இருக்கிறது என்று காட்டப்பட்டது. அவர்கள் சொன்னது 1971-ம் ஆண்டு விலையை வைத்து. இன்றைக்கு இருக்கக்கூடிய விலையை வைத்துப் பார்த்தால் ரூ. 100, 110 இருக்கும். விவசாய உற்பத்திக்கு உரம் முதலியவை களெல்லாம் போடவேண்டியிருக்கிறது. தண்ணீர் வந்தாலும் வரும், இல்லாவிட்டாலும் இல்லை. இவ்வளவு கஷ்டப்பட்டு பயிர் செய்து அறுவடை செய்யக்கூடிய காலத்தில் அவர்களுக்கு நியாயமான விலை, 'இன்ஸெண்டிவ் ப்ரைஸ்' இருந்தால்தான் கொள்முதல் செய்ய முடியும். இந்த சர்க்கார் நிர்ணயித்திருக்கக் கூடிய விலை சரிதான். ஆகவே, சர்க்கார் மேலும் இதைக் கீழே விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கரும்பை எடுத்துக்கொள்ளலாம். கரும்பில் முதலாளிகள் கொள்ளையடிப்பது சர்க்காருக்குத் தெரியும். உற்பத்தியை எடுத்துக்கொண்டால் உரம் போடுவது போன்ற தையும் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும். அது மட்டும் அல்ல. ஓப்பன் மார்க்கெட் ஷுகர், கண்டிரோல் ஷுகர் இரண்டும் சேர்ந்தால் கூட ரூ. 300, 350 ஆகிறது. சர்க்கார் 478 பவுண்டுக்கு போன வருஷத்தில் விற்றது. இந்த வருஷம் 600 பவுண்டுக்கு விற்கிறது. ஒரு டன் பாரிஸ், லண்டனில் கொண்டுபோய் விற்கக்கூடிய சர்க்கரைக்கு இவர்கள் ரூ. 7,000, 8000 என்று கொடுப்பது ரூ. 1,000. எவ்வளவு கொள்ளை? ஏன் நியாயமான விலை கொடுக்கக்கூடாது? 2, 3 மாதங்களுக்கு முன்னாலே ட்ரைபார்டைட் கமிட்டி போட்டார்கள். வரக்கூடிய லாபத்தில் 50 பங்கு எடுத்து விவசாயிகளுக்கு கொடுத்தால் ரூ. 175 மட்டும் கிடைக்கும். அதை சர்க்கார் ஒத்துக் கொண்டாலும் கூட நடைமுறையில் கொண்டுவரவில்லை. சக்தி ஷுகர்ஸ் மகாலிங்கம் அவர்கள் 10½ சதவிகிதம் ரெகவரி வருகிறது, 100 ரூபாய் வருகிறது என்று சொன்னார்கள். அதே மாதிரி தர்மபுரி ஷுகர் மில்லில் 11½ சதவிகிதம் ரெகவரி வருகிறது. அங்கு கொடுப்பது ரூ. 85 தான். சர்க்கார் ரூ. 100 நிர்ணயித்திருக்கிறார்கள். அதிகப்படியான விலைக்கு, நியாயமான விலைக்கு கட்டுபடியாகக்கூடிய விலைக்கு ஏன் வாங்கக்கூடாது. யு.பி. யில், மகாராஷ்டிராவில் ஒரு குவிண்டாலுக்கு 13½, 14½ சதவிகிதம் போன வருஷம் விலையை ஏற்றியிருக்கிறார்கள்.

[திரு. என். கே. பழனிசாமி] [1974 டிசம்பர் 21

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டால் எந்தச் சட்டத்தின் கீழ் ஏற்றுவது என்று கேட்கிறார்கள். யு.பி. சர்க்கார் எந்த சட்டத்தின் கீழ் விலையை ஏற்றியிருக்கிறது ? ஏன் இந்த சர்க்கார் அதைக் கடைப்பிடிக்கக்கூடாது ? சக்தி ஷுகர்ஸ் மகாலிங்கம் அவர்கள் ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். இம்மாதிரி விலை போதாது, குறைந்தது ரூ. 150 ஆவது கொடுக்க வேண்டும், அப்படியில்லாமல் போனால் கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகள் நெல்லுக்குத்தான் போய்விடுவார்கள் என்று சொல்லியிருக்கிறார். ஆகவே இதை உடனடியாக ஏன் முக்கியமான பிரச்சினையாகக் கருதக்கூடாது ? அதேமாதிரி
மாலை 4.30)
னஸ்பதி. வனஸ்பதி 7 தடவை இந்த வருஷத்தில் விலை ஏறி விட்டது. ஒரு கிலோவிற்கு கிட்டத்தட்ட 87 காசுக்கும் அதிகமாக ஒவ்வொரு தடவையும் ஏற்றிக்கொண்டே வந்திருக்கிறார்கள். அதேமாதிரி உரம். 1957 வரையிலும் நாம் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து வந்தோம். நமக்கு நாமே வேண்டியதை உற்பத்தி செய்ய வேண்டுமென்ற அக்கறை கிடையாது. 1971-ம் வருஷத்திலே டாட்டா கூட ஒரு ஒப்பந்தம். இண்டஸ்ட்ரியல் சட்டப் பிரகாரம் தொழிற்சாலை பூராவும் சர்க்காரின் கையிலே இருக்க வேண்டும். 240 கோடி ரூபாய்க்கு அவர்களுக்கு பர்மிட் கொடுத்தாகிவிட்டது. அது இன்னும் நடைமுறையிலே வரவில்லை. காரணம் என்னவென்றால் அவர்கள் அதிகமான சலுகை கேட்கிறார்கள். கிட்டத்தட்ட 4 வருஷமாகியும் இன்னும் அந்த உரத் தொழிற்சாலைக்கு நடவடிக்கை எடுக்கவில்லை.

**திரு. துரைமுருகன் :** மணி இப்போது 4-30 ஆகிறது. அவையில் இப்போது இருப்பவர்களும் போய்விட்டால் பிறகு சபை நடத்துவது எப்படி? ஆகவே காஃபி வரவழைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** காஃபியோடு டிபனும் வந்தால் நன்றாக இருக்கும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இதுவரையில் ஆஃப்டர்னூன் செஷன் இருந்தபோதெல்லாம் காஃபி வரவழைக்கப்பட்டிருக் கிறது. ஆகவே இந்த முறையும் வரவழைக்கலாம்.



1974 டிசம்பர் 21]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்று தனியார் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அரசாங்கத் தீர்மானமாக இருந்தால் வரவழைக்கலாம். உறுப்பினர் என்ன சொல்கிறார் என்று தெரிந்துகொள்ள வேண்டாமா?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இது நடப்பது சட்ட மன்றத்தில் தான். ஆகவே அரசுதான் வரவழைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்பாடு செய்கிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** காஃபி வருவதால் எவ்வளவு நேரம் ஆனாலும் நான் பதில் சொல்லி விடுகிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி :** ஆகவே, இந்த உர விஷயம் 1957-க்குப் பிறகுதான் சர்க்காருக்கே ஞாபகம் வருகிறது. இப்போது சிந்திரி, நெய்வேலி இந்த இரண்டு இடங்களில் உரத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. உரத் தொழிற்சாலைகள் தனியாரிடம் இருப்பதால்தான் அவர்களுக்கு கொள்ளை லாபம் கிடைக்கிறது. அவர்களுக்கு அரசாங்கம் சப்சிடி கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே விவசாயிகளுக்கு நியாயமான முறையிலே உரம் கொடுக்க வேண்டும். அதேமாதிரி கடன். விவசாயிகள் உற்பத்தி சரியான முறையிலே செய்ய வேண்டும். உற்பத்தியான பொருட்களுக்கு நியாயமான விலை வேண்டும். விவசாயிகள் போடுகின்ற உரங்கள் அவர்களுக்கு நியாயமான அளவில் தேவையான அளவில் கொடுக்கவேண்டும். உற்பத்தி, கொள்முதல், விநியோகம் இந்த மூன்றும் ஒன்றுக்கொன்று இணக்கமாக இருக்க வேண்டும்.

இன்றையதினம் விவசாய உற்பத்தியில் ஸ்டாக்னேஷன் இருக்கிறது. உற்பத்தி குறைகிறது. உற்பத்தி குறைகிறது என்று சொன்னால் வருமானமும் குறைகிறது. ஏழ்மையும், வறுமையும் அதிகரிக்கிறது. அமெரிக்காவிலிருந்து 20 லட்சம் டன் கோதுமையை இந்தியாவிற்கு திருப்பிவிடக்கூடிய காலத்தில் கூட இவ்வளவு பெரிய அட்வர்ட்டைஸ்மெண்ட் கிடையாது. கிஸ்ஸிங்கர் வருகிறார் என்று சொன்னவுடனே இந்த மொனாப் பொலிஸ்ட் பிரஸ்கள் அவ்வளவு பெரிய அட்வர்ட்டைஸ்மெண்ட்.

[திரு. என். கே. பழனிசாமி] [1974 டிசம்பர் 21

ஆகவே செல்ஃப்-ரிலையன்ஸ் கொள்கை அடிப்படையை மாற்ற விவசாயத் துறையிலே பசுமைப்புரட்சி மாத்திரம் போதாது, விவசாயத்தை புனரமைப்பு செய்ய வேண்டும்.

நிலமில்லாத விவசாயிகளுக்கு நிலத்தை கோவாப்பரேடிவ் ஃபார்ம் முறையிலே கொடுத்தால் உணவு உற்பத்தி அதிகமான அளவு நடக்கும். மத்திய சர்க்கார் கொள்முதல், விநியோகம் என்று செய்தார்கள். கிட்டத்தட்ட 48 லட்சம் டன் கொள்முதல் செய்தார்கள். மொத்த வியாபாரிகளின் லைசென்சை ரத்து செய்தார்கள். இருந்தபோதிலும் வியாபாரிகளிடம் சொல்லி நெல்லை விற்காதீர்கள் என்று சொன்னார்கள். கடைசியில் மோசமான நிலைமைக்குப் போய் அந்த மொத்த வியாபாரம் போய்விட்டது. மறுபடியும் வியாபாரிகளிடம் போய் நீங்கள் கொள்முதல் செய்யக்கூடிய நெல்லை 50 சதவிகிதம் 105 ரூபாய்க்கு கொடுங்கள் என்று சொன்னார்கள். ஆகவே மொத்த வியாபாரத்தைக் கைவிடுவதற்குக் காரணம் நிலப் பிரபுக்கள்.

அது மட்டுமல்ல. பெரிய டெபுடேஷனே போனது ஆல் இந்தியா லெவெலில். வியாபாரிகளுக்கும், கொள்ளைக்காரர்களுக்கும் பணிந்து போகக்கூடிய நிலைமை சர்க்காருக்கு. 50 சதவிகிதம் கொள்முதல், 50 லட்சம் டன் எதிர்பார்த்தார்கள். ஆனால் 20 லட்சம் டன்தான் கொள்முதல் ஆனது. கொள்முதல் கம்மி என்று சொன்னவுடனே, வறட்சி . பல மாவட்டங்களில் இருக்கிறது என்று சொன்னவுடனே முதலாளிகளும், நிலப் பிரபுக்களும் பதுக்கலை ஆரம்பித்தார்கள். அதில் பங்களா -தேஷ் விவகாரத்தில் அவர்களுக்கு உணவு போட வேண்டிய அவசியம் வந்துவிட்டது. அதற்குப்பிறகாவது கொள்முதலை சரியாக செய்திருக்கவேண்டும். அதையும் செய்யவில்லை. மொத்த வியாபாரிகளும், நிலப் பிரபுக்களும் பதுக்குவதைப் பார்க்கிறோம். விலை ஏறுகிறது. விலை ஏறுகிறபோது பப்ளிக் டிஸ்ட்ரிப்யூஷன் கிடையாது. ஆகவே இந்த கண்ணோட்டம் நமக்கு வேண்டும். மொத்த வியாபாரத்தை சர்க்காரே எடுக்கவேண்டும். இப்போது 40 ஆயிரம் எக்கரில் தஞ்சாவூரில் பயிர் காய்ந்துவிட்டது. மற்ற ஸ்டாண்டிங் கிராப்ஸ் மோசமான நிலைமையிலே இருக்கிறது என்று சொன்னால் அரிசி என்ன விலை விற்கப்போகிறது என்று தெரியாது. ஒரு கிலோ என்ன விலை என்பதற்குப் பதிலாக நூறு அரிசி பொட்டலம் என்ன விலை என்று வந்தாலும் ஆச்சரியமில்லை. சர்க்கார் எப்படி இதைச் சரிப்படுத்தப் போகிறார்கள் என்பதற்கு திட்டவட்டமான கொள்கை கிடையாது. சர்க்கார் முதலில் ஸ்டாக் செய்யவேண்டும். அதற்கு என்னதான் பெரிய நிலப்பிரபுக்களை மிரட்டினாலும் அசையாது. காரணம், சர்க்காரிடம் ஸ்டாக் கிடையாது. சர்க்காரே நேரடியாக ஹோல்சேல் லைசென்சையெல்லாம் ரத்து செய்துவிட்டு, ஏற்று நடத்த வேண்டும். பல கோவாப்பரேடிவ் சொசைடிகளில் ஓவர் ட்யூ. அதிலே எவ்வளவு ஊழல் நடந்தாலும் மறுபடியும் அவர்களிடம்தான் கொடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அதற்கு கிராமப் பகுதிகளில் ஆயிரம் பேருக்கு ஒரு கடை வீதம் அமைத்து அந்த முறையில் செய்யலாம்.



1974 டிசம்பர் 21] [திரு. என்! கே. பழனிசாமி]

சமீபத்தில் அரசாங்கம் கொள்முதல் இன்ன விலைதான் என்று அறிவித்தார்கள். ஆனால், சர்க்கார் கையில் ஸ்டாக் இல்லை. அதனால் வெளியே ஒரு மூட்டை 400 ரூபாய்க்கு விற்கும் நிலைமை ஏற்படும். எங்கள் ஊரில் மெட்ரூஸ் படி ஒன்று 8 ரூபாய்க்கு விற்கிறது. சர்க்காரிடத்தில் போதுமான ஸ்டாக் இருந்தால் அவர்கள் அப்படி விலையை ஏற்றமாட்டார்கள். இப்போது ஸ்டாக் இல்லை என்று தெரிந்து வைத்துக்கொண்டு கொள்ளையடிக்கிறார்கள். இன்ன விலைக்குத்தான் விற்கவேண்டுமென்று சொன்னால் அரிசியே இல்லை என்று சொல்லிவிடுவார்கள். இப்போது அந்த நிலைமைதான் இருந்துகொண்டிருக்கிறது. அண்மையில் வெளியிட்ட சர்க்காரின் அறிவிப்பினால் கடைகளில் அரிசி இல்லை என்று சொல்லிவிட்டார்கள். அதற்குப் பிறகு இன்னும் உத்தரவு பிறப்பிக்கவில்லை என்று சொன்னபின்னால் விற்கிறார்கள். நாளை மத்திய சர்க்காரின் அனுமதி பெற்று இன்ன விலை என்று சொன்னால் மீண்டும் அரிசி கிடைக்காது.

இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் சமாளிக்க வேண்டுமானால் அரசாங்கத்திடம் போதுமான ஸ்டாக் இருக்க வேண்டும். அதற்குப் அதற்கு கட்டாய கொள்முதல் செய்ய வேண்டும். அதற்குப் பின்னால் ஆயிரம் கார்டுக்கு ஒரு நியாயவிலைக் கடை என்ற அளவில் கடைகளைத் திறக்க வேண்டும். அப்படிச் செய்தால் வெளியே விலை குறையும். ஆகவே, இந்த விஷயத்தில் சர்க்கார் கொள்கை என்ன என்று திட்டவட்டமாக அறிவிக்க வேண்டும்.

[திரு. என். கே. பழனிசாமி][1974 டிசம்பர் 21

இன்றைக்கு 20 லட்சம் டன் பற்றாக்குறை என்று சொல்லியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட இனி அடுத்த வருஷம்தான் வெள்ளாமை வரும். அதுவரையில் அரிசி விநியோகத்திற்கு மத்திய சர்க்கார் உத்தரவாதம் கொடுக்க வேண்டும். இப்போது 2,000 கடைகள் திறந்திருக்கிறார்கள். அதுவும் சென்னை, கோவை நகரங்களில்தான் இருக்கிறது. மற்ற இடங்களில் இல்லை. அங்கேயும் யார் யாருக்கு சர்க்கரை கார்டு இருக்கிறதோ அவர்களுக்குத்தான் தானியம் கிடைக்கிறது. ஏழை எளிய மக்களுக்கு, அரிசனங்களுக்கு கிடைப்பதில்லை. ஏழை எளியவர்களிடம் இருந்த சர்க்கரை கார்டுகளையும் காப்பிக் கடைக்காரர்கள் விலைக்கு வாங்கிவிட்டார்கள். அதையெல்லாம் பார்த்து, எல்லோருக்கும் நியாயவிலையில் எல்லாப் பொருட்களும் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கான நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டும்.

சர்க்கார் போதுமான அளவுக்கு கொள்முதல் செய்ய வேண்டுமானால், எங்கே ப்ரொக்யூர்மென்ட் செய்யப்படுகிறதோ அங்குள்ளவர்களுக்கு இன்சென்டிவ் கொடுக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் தாங்களாகவே முன்வந்து கொள்முதலுக்குக் கொடுப்பார்கள். எப்படியாவது உணவு விலை குறைந்தால்தான் மற்றப் பொருட்களில் விலை குறையும்.

இப்போது மக்களுடைய சம்பாத்தியம் முழுவதும் அரிசிக்கே போய்விடுகிறது. அதனால் மற்ற பொருட்கள், துணிமணிகள், சைக்கிள் போன்றவைகளை வாங்குவதற்கு மக்களிடம் பணம் இல்லை. அதனால் அவைகளை வாங்க முடியவில்லை. வாங்காவிட்டால் தேக்கம் ஏற்படும். அப்போது வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும். இப்படியே பல கஷ்டங்கள் தொடர்ந்து ஏற்படும். ஒழுங்காக வியாபாரம் நடக்க வேண்டுமென்றால் மக்கள் கையில் காசு இருக்க வேண்டும். கட்டுப்படியான விலைக்கு சாமான்கள் கிடைக்க வேண்டும். அதற்கெல்லாம் ஒரே வழி மொத்த வியாபாரத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதுதான்.

ரைஸ் மில்களில் சர்க்கார் நெல் அரைப்பதற்குக் கொடுக்கிறார்கள். மில்களில் நெல்லை வேக வைக்கிறார்கள். அதன் பிறகு 8 நாளைக்கு உப்புத் தண்ணீரில் ஊற வைக்கிறார்கள். அப்படிச்



1974 டிசம்பர் 21] [திரு. என். கே. பழனிசாமி]

செய்வதனால் 4 மூட்டை 5 மூட்டை அரிசி உபரியாக கிடைக் கிறது ; அதை விற்று 1,500 ரூபாய் லாபம் அடைகிறார்கள். உப்புத் தண்ணீரில் ஊற வைப்பதனால் அரிசி கெட்டுப்போகிறது. ஆகவே, சர்க்காரிடம் இருக்கிற 12 ரைஸ் மில்களிலும் அதிகமாக வேலை செய்து, நெல் முழுவதையும் அங்கே அரைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படி முடியவில்லை என்றால் பெரிய பெரிய ரைஸ் மில்களை சர்க்கார் வாடகைக்கு எடுத்து அரைக்கலாம்.

தனியார் மில்களுக்கு 'ஓவர் ஹெட் சார்ஜ்' 45 சதவிகிதம் கொடுக்கப்படுகிறது. 25 சதவிகிதம் கொடுத்தாலே போதுமானது. ஏனென்றால், ஒரு மூட்டை தவிடு 25 ரூபாய்க்கு விற்கிறது. தவிடு என்றால் உமியையும் சேர்த்துதான் அரைத்துக் கொடுக்கிறார்கள். ஆகவே, ஓவர் ஹெட் சார்ஜ் குறைத்துக் கொடுத்தால் போதுமானது.

இன்றைக்கு எல்லா இடங்களிலும் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. அதுவும் தாங்கமுடியாத வறட்சி ஏற்பட்டிருக்கிறது. அரிசி எடுத்துச் செல்ல கன்ட்ரோல் இருக்கிறது ; சர்க்காரும் விநியோகம் செய்யவில்லை. அப்படியானால் அங்கே இருக்கிற வர்கள் எதைச் சாப்பிடுவார்கள்? கன்ட்ரோல் வைத்தால் சர்க்காரே விநியோகம் செய்ய வேண்டும். வறட்சிப் பகுதி என்று அறிவித்துவிட்டால் என்னென்ன நடவடிக்கை அங்கே எடுக்க வேண்டுமோ அதை உடனடியாக எடுக்க வேண்டும். அதற் கெல்லாம் வழி பிறக்க வேண்டுமென்றால் மொத்த வியாபாரத்தை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லி, இந்த தீர்மானத்தை சர்க்கார் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. பெ. சீனிவாசன்:** தலைவரவர்களே, திரு. பழனிசாமி அவர்கள் முன்மொழிந்திருக்கிற இந்தத் தீர்மானம் இன்றைய ஆளும் கட்சியினுடைய கொள்கைக்கு ஒத்துவரக்கூடியதுதான் என்று நான் கருதுகிறேன்.

இன்றைக்கு இங்கே இருக்கிற ஆளும்கட்சி மட்டுமல்லாமல், அகில இந்திய அடிப்படையிலே ஆளுகின்ற கட்சியாக இருந் தாலும், எதிர்வரிசையிலே உட்கார்ந்திருக்கிற கட்சிகளாக இருந் தாலும் அத்தனை பேர்களும் ஒரே குரலில் எங்களுடைய கொள்கை சோஷலிசம் என்றுதான் சொல்கிறார்கள். அறிஞர் அண்ணா

அவர்கள் ஒரு கருத்தை அழகாகச் சொல்வார்கள். "முதலாளித்துவத்தை வளர்க்கின்ற ஒரு கட்சியாக இருந்தாலும் தங்களுடைய லட்சியம் சமதர்ம சோசலிசம்தான் என்று சொல்லித் தீரவேண்டியிருந்தாலும் இந்த நாட்டு மக்கள் அந்த சமதர்ம திட்டங்களை விரும்புகிறார்கள்" என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொல்வார்கள்.

அதைப்போல இன்றைக்கு நம்முடைய அரசாங்கத்தின் கொள்கை எப்படிப்பட்ட சோசலிசமாக இருந்தாலும், ஒரு சோசலிச சர்க்காரை நடத்துகிறோம் என்று மாநில அரசும் சொல்கிறார்கள்; மத்திய அரசும் சொல்கிறார்கள். ஆனால், நடைமுறையில் இந்த தத்துவங்களுக்கு பல்வேறு வகையான ஊறுகள் நேர்வதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இங்கே அத்தியாவசியப் பொருட்களை அரசாங்கமே எடுத்து விற்பனை செய்ய வேண்டும்; அதிலே வியாபாரிகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது என்று திரு. பழனிசாமி அவர்கள் தன்னுடைய தீர்மானத்தை முன்மொழிந்து சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு நம்முடைய நாட்டில் நிமிர் நிமிரென்று விலைகள் ஏறிக்கொண்டிருக்கின்றன. இப்படி விலைகள் ஏறுவதால் மக்களுக்கு நியாயமான பலன் கிடைக்கவில்லை. விவசாயிகளுக்கு, பொருட்களை உற்பத்தி செய்கின்றவர்களுக்கு உரிய பலன் கிடைப்பதற்கில்லை. அவர்கள் எல்லாம் ஏறுகின்ற விலைவாசியைப் பார்த்து வேடிக்கை பார்க்க முடிகிறதே தவிர அவர்கள் உரிய பயனடைய முடியவில்லை என்பதை நாம் உணர்கிறோம். அந்த பலனையும் இந்த நாட்டிலே இருக்கிற ஒரு வர்க்கம், வியாபார வர்க்கம் அனுபவித்துக்கொண்டிருக்கிறது. 2 ரூபாய், 3 ரூபாய்க்கு விற்ற அரிசி இன்றைக்கு 7 ரூபாய்க்கு விற்கிறது. இந்த விலை உயர்வு உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு கிடைக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. உற்பத்தியாகின்ற பொருட்களை இடையிலே இருந்து வாங்கி ஸ்டாக் வைக்கிற வியாபாரிகளுக்குத்தான் அந்த விலை கிடைக்கிறது.

அத்தியாவசியப் பொருட்களை சர்க்காரே கொள்முதல் செய்து நியாயமான விலைக்கு விற்பனை செய்ய வேண்டும். உதாரணமாக அரிசி, சிமின்ட், சர்க்கரை, மண்ணெண்ணெய், உரம் போன்ற





பொருட்கள் இருக்கின்றன. இந்தப் பொருட்கள் எல்லாம் இன்றைக்கு கிடைப்பதே கஷ்டமாக இருக்கிறது. சாதாரண மக்களுக்கு கிடைப்பதில்லை. இப்படிப்பட்ட பொருட்களையாவது அரசாங்கம் ஒட்டுமொத்தமாக கொள்முதல் செய்து எல்லோருக்கும் நியாய விலையில் கிடைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒரு பக்கத்தில் விலைவாசி ஏற்றத்துக்கு காரணம் மத்திய சர்க்கார் என்பதை நான் உணர்கிறேன். சர்க்கரை வியாபாரத்தில் மத்திய அரசின் தலையீடு இருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. ஆனாலும், இங்கே இருக்கிற விநியோக முறையில் நிர்வாகச் சீர்கேடு எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை மக்கள் அறிவார்கள்; அரசாங்கமும் அதை மறுக்க முடியாது. எங்கே பார்த்தாலும் சிமின்ட், சர்க்கரை விவகாரத்தில் நியாயமான முறை பின்பற்றப்படவில்லை. அரசாங்கத்தின் அனுமதி பெற்றிருப்பவர்கள் தவறுகள் செய்கிறார்கள். சிலர் நியாய விலைக்கு பெற்று, பதுக்கி வைத்து, அதை அதிக விலைக்கு விற்கிற பழக்கம் இங்கே இருந்து கொண்டிருக்கிறது. ஒருசிலர் மட்டுமல்ல; சில குடும்பங்களே இத்தகைய வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கின்றன என்று சொன்னால் எந்த அளவுக்கு இங்கே ஊழல் இருக்கிறது என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

நம்முடைய பொருளாதார நிபுணர்கள் கம்யூனிசம், காபிட்டலிசம் இந்த இரண்டிலும் இருக்கின்ற தத்துவங்களை உணர்ந்து, அதை ஆராய்ந்து பார்த்து இந்த இரண்டும் நமக்கு ஒத்துவராது என்று கண்டறிந்து, இந்த இரண்டுக்கும் மத்தியிலே, இந்த இரண்டு தத்துவங்களும் இணைந்த சோசலிசம்தான் நமக்கு ஏற்ற கொள்கை என்று அறிவித்தார்கள். இந்த சோசலிசக் கொள்கையை நல்ல முறையில் செயல்படுத்துவதற்கு ஏற்ற முறையில் கூட்டுறவுத் தத்துவங்களைச் சொன்னார்கள். ஆனால், கூட்டுறவுத் தத்துவம் இன்றைக்கு நம்முடைய நாட்டில்—பல்வேறு மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது தமிழ்நாட்டில் சிறப்பாக நடைபெறுவதாக பலர் சொல்கிறார்கள். குறிப்பாக இன்றைக்கு ஆளும் கட்சியில் இருக்கிறவர்கள் அடிக்கடி சொல்வதை கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், கூட்டுறவு இன்றைக்கு எந்த அளவுக்கு நடைபெறுகிறது? அதன் நோக்கம் நிறைவேறுகிறதா? அதன் பயன் மக்களுக்குப் போய்

[திரு. பெ. சீனிவாசன்] [1974 டிசம்பர் 21

சேருகிறதா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை என்பதை நான் இங்கே குற்றச்சாட்டாகச் சொல்ல விரும்புகிறேன். இந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்களை உருவாக்குகின்ற முறையிலே ஏராளமான குறைபாடுகளை நாம் விதைத்துவிடுகிறோம்.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், 1967-க்குப் பின்னால் கூட்டுறவு ஸ்தாபனங்களை கைப்பற்ற வேண்டுமென்ற முயற்சியில் அதிலும் சிறப்பாக இப்போது முதலமைச்சராக இருக்கின்ற கலைஞர் அவர்கள் பதவிக்கு வந்த பின்னால் இந்த கூட்டுறவு ஸ்தாபனங்கள் சிலவற்றை கைப்பற்ற செய்த ஏற்பாடுகளை நான் நேரடியாகப் பார்த்து மிகவும் வருத்தப்பட்டேன். அங்கிருக்கிற பொது மக்கள் தேர்தல் முறைகளிலும், நிர்வாகத்திலும், விநியோகத்திலும் எல்லாவற்றிலும் பங்கேற்கும் அமைப்பாக அது இல்லாமல் ஒரு அமைச்சர் அவர்களுடைய சாதுர்ய திட்டத்தினால் செயல்படுகிற சுயநலத் தன்மை கொண்ட அமைப்பாக மாறி விட்டதேதான் அதனால் ஏற்படக்கூடிய நன்மை ஏற்படாமல் போனதற்குக் காரணம். எங்கள் மாவட்டத்தில் இருக்கிற சென்ட்ரல் கோவாப்பரேடிவ் பாங்க் தலைவரை மாற்ற, மதுரை பாங்க் தலைவரை மாற்ற, இதுபோல மற்ற மாவட்ட பாங்க் தலைவர்களை மாற்ற நமது அரசாங்கம்—ஆளுங்கட்சியினர் எடுத்துக் கொண்ட தவறான முயற்சிகளேதான் கூட்டுறவு தத்துவத்திற்கே உலைவைத்தது என்பதை எடுத்துக் காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு சென்டிரல் பாங்க் டைரெக்டாராக ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர் வருவதற்கு, ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர் தலைவராக வருவதற்கு இல்லாத சொஸைடிகள் எல்லாம் உருவாக்கப்பட்டன.

லிப்ட் இர்ரிகேஷன் சொஸைடிகள் என்பது நமது அமைச்சர் கண்டுபிடித்த சொஸைடி. லிப்ட் இர்ரிகேஷன் சொஸைடிகளினால் எந்தவிதமான பலனும் கிடையாது. அதன் மூலமாக ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்களை உள்ளே நாமினேஷன் மூலமாகப் புகுத்த இது ஒரு கண்துடைப்பு—இதிலே வந்தவரை அங்கே தலைவராகத் தேர்ந்தெடுக்க எல்லாவிதமான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு—தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். ஆளுங்கட்சியினர் அந்த இடங்களைப் பிடித்துக்கொள்ள வேண்டுமென்ற மனப்பான்மை—நிர்வாக மனப்பான்மை—போட்டி மனப்பான்மை



1974 டிசம்பர் 21] [திரு. பெ. சீனிவாசன்]

தேர்தலில் வெற்றி பெற்று வந்தவர்களைவிட இதுபோன்ற சின்னஞ்சிறு சொஸைடிகள் மூலமாக நாமினேஷன் பெற்றவர்கள் ஆதிக்கம்பெற திட்டமிட்டது கூட்டுறவு அமைப்பையே சீர்குலைத்து விட்டது—சாதாரண எழுத்தறிவு கூட இல்லாதவர்கள்—கையெழுத்துப் போடத் தெரியாதவர்கள்—கட்சிக்காரர் என்ற அடிப்படையில் தலைவராகக் கூட வந்து நிர்வாகத்தை உருக் குலைத்துவிட்டார்கள்.

நம்முடைய மாநிலத்தில் கூட்டுறவு இயக்கம் நாசம் அடைவதற்குக் காரணம் அதிகாரத்தில் இருப்பவர்கள்—ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் அளவுக்கு மீறி தவறான வழிகளில் உள்ளே நுழைந்து கொள்வதற்கு வழி வகுத்துக் கொடுத்தது தான் என்பதை மனச்சாட்சி உள்ளவர்கள் மறுக்கமாட்டார்கள். நமது திரு. பழனிசாமி அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தின் நோக்கம் நிறைவேற வேண்டுமானால்—இன்றிருக்கிற கூட்டுறவு அமைப்பு இந்த நோக்கத்தையே செல்லரித்து விடும் என்பதை யாரும் மறுக்க முடியாது.

இன்று நாட்டில் இருக்கிற கோவாப்ரேஷன் the greatest embodiment of corruption என்று சொல்லக்கூடிய அளவுக்கு எல்லா வகையான ஊழல்களையும் சட்டபூர்வமாக, அதிகார பாதுகாப்போடு செயல்படுத்தக் கூடிய இடங்களாக மாறி யிருக்கிறது. இந்த நிர்வாகத்தின் மூலம் நிச்சயமாக இன்று இருக்கிற இந்தத் தத்துவத்தைச் செயலாக்க முடியாது. கூட்டுறவு ஸ்தாபனங்களையே மாற்றி அமைத்தாக வேண்டும். மாற்றி அமைத்தாலொழிய விவசாயிகளுக்கும், உற்பத்தியாளர்களுக்கும் எந்தவிதமான பலனும் ஏற்பட முடியாது.

என்னுடைய வட்டாரத்தைப் பற்றிச் சொல்ல முடியும். எங்கள் வட்டாரத்தில் தோட்டத்தில் மிளகாய் வற்றல் போடப் படுகிறது. மிளகாய் வற்றலை விருதுநகர் மார்க்கெட்டுக்கு கொண்டு வருகிறார்கள். மிளகாய் வற்றலை மார்க்கெட்டுக்கு வரத் தொடங்கியதில் இருந்து க்விண்டால் 300 ரூபாய், 250 ரூபாய் என்கிற அளவில் சில மாதங்கள் விலை தொடர்ந்து இருந்து வரும். மிளகாய் வற்றல் வரத்து நின்றவுடன் அந்த விலை அதற்குப் பிறகு ஒண்ணரை மடங்கு, இரண்டு மடங்கு கூட உயர்ந்துவிடும்.

[திரு. பெ. சீனிவாசன்] [1974 டிசம்பர் 21

எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. ஒரு முறை எங்கள்
தோட்டத்து மிளகாயை க்விண்டால் 350 ரூபாய் என்று
மார்க்கெட்டில் போட்டு வந்தோம். சில நாட்களுக்குப் பிறகே
அது கடைசியில் மார்க்கெட்டில் க்விண்டால் 1,200 என்று விற்கப்
பட்டது. இதைத் தடுப்பதற்கு—இதுபோன்று விவசாயிகள் பலன்
அடைய முடியாது போவதைத் தடுப்பதற்காக மார்க்கெட்டிங்
சொஸைடிகளை ஏற்படுத்தி வைத்தார்கள். விருதுநகரில் ரொம்ப
ப்ரம்மாண்டமான விலையுயர்ந்த நிலத்தில் நாஷனல் ஹைவேஸ்
பக்கத்திலேயே மார்க்கெட்டிங் சொஸைடி அமைந்திருக்கிறது.
அதற்குத் தலைவராக இருக்கிறவருக்கு அலுவலகம் இருக்கிறது—
ஜீப் இருக்கிறது. விருதுநகர் மார்க்கெட் உலகிலேயே மிகவும்
புகழ்பெற்ற மார்க்கெட்—பொள்ளாச்சி—விருதுநகர் என்பது
போல வியாபார தலங்களில் சில குறிப்பிட்ட இடங்கள்தான்
இருக்கின்றன. அவற்றில் விருதுநகர் உலகத்திலேயே சிறந்தது--
டெலிபோனிலேயே பல லட்சங்கள் புரட்டக்கூடிய நகர்
விருதுநகர். அந்த மார்க்கெட்டிங் சொஸைடிக்குள்
வியாபாரிகளே மிகவும் சாமார்த்தியமாக உள்ளே புகுந்து
கொண்டுவிட்டார்கள். அந்தத் தொகுதி எம்.எல்.ஏ. என்ற
முறையில் என்னிடம் கொஞ்சம் அச்சம் இருந்தது. எனக்கும்
மேலே போய் அதையும் சமாளித்துவிட்டார்கள். அங்கேயுள்ள
மார்க்கெட்டிங் சொஸைடி தலைவர் ஜெயராம ரெட்டியார்—அவரே
வியாபாரி. வியாபார லைசென்சு உள்ளவர் அதன் தலைவராக வரக்
கூடாது. என்றாலும் வியாபார லைசென்ஸ் உடைய அவரே
தலைவராக வந்தார். அவருக்கு விவசாயம் குறைவு—வியாபாரம்
தான் பிரதானம்—இன்றைக்கு வியாபாரிகளுக்கு என்னென்ன
வகையில் உதவி செய்யலாமோ அந்த அந்த அளவுக்குத்தான்
அங்கே அவர் செயல்படுகிறார். விவசாயிகளுக்கும் அதற்கும்
சம்பந்தமே இல்லாமல் போய்விட்டது. விவசாயிகளிடம்
மார்க்கெட்டிங் சொஸைடி எங்கே இருக்கிறது என்று கேட்டால்
கூடத் தெரியாது. வியாபாரிகள் கையில் அது சிக்கிக்
கிடக்கிறது. சில ஊர்களில் மார்க்கெட்டிங் சொஸைடி நல்ல
முறையில் நடப்பதாக அமைச்சர் அவர்கள் எங்கள் ஊருக்கு
வந்தபோது கூடத் தெரிவித்தார்கள். ஆனால் விருதுநகரில் உள்ள
நிலைமை இதுதான்—அமைச்சர் வந்து பார்த்தாரே அதற்குப்
பின்னால் என்ன ஏற்பட்டது? அந்தக் குறை களையப்படாமல்
அப்படியேதான் இருக்கிறது.



1974 டிசம்பர் 21] [திரு. பெ. சீனிவாசன்]

உற்பத்தி செய்கிற விவசாயி பருத்தி போடுவான்—இடையில் கொத்தமல்லி—பருப்பு போடுவான்—கொத்தமல்லி ஒரு மாதத்தில் வரும்—அவற்றை நல்ல விலை வருகிற வரை வைத்திருக்க அவனுக்கு பொருளாதார வசதி போதாது. வாங்கிய கடனைக் கொடுக்க அதை சந்தைக்கு எடுத்துப் போகிற அன்றைக்கு வியாபாரிகள் என்ன விலை வைக்கிறார்களோ அதற்கு கொடுத்துவிட்டு வருகிற நிலைதான் இன்னமும் இருக்கிறது. இப்படி விவசாயிகளுக்கும் எவ்விதப் பயனும் இல்லாமல்—வாங்கி உண்பவர்களுக்கும் எவ்விதப் பயனும் இல்லாமல் இடையில் இருக்கிற ஒரு வர்த்தகக் கூட்டம்தான் கொள்ளை லாபம் அடித்துக் கொண்டு வருகிறது. விவசாயிகளுடைய கஷ்டத்தைப் போக்க--அவர்கள் கொண்டுவருகிற சரக்குகளின் மீது அப்போதைக்கு அவர்களுக்குத் தேவையான பணத்தைக் கொடுத்து அவர்களது சரக்கை மார்க்கெட்டிங் சொஸைடியில் வைத்து நல்ல விலை வருகிறபோது விற்று அந்த விவசாயிகளுக்கு பலனைக் கொடுக்க வேண்டும் என்று அமைக்கப்பட்ட மார்க்கெட்டிங் சொஸைடிகளில் எல்லாவிதமான அரசியலும் புகுந்து வியாபாரிகளும் புகுந்து இன்றைக்கு விவசாயிகளுக்கு அவற்றில் சம்பந்தம் இல்லாமல் ஆகிவிட்டது. விவசாயத்திற்கு சம்பந்தம் இல்லாதவர்களின் பிடியில்தான் அவை சிக்கிக் கொண்டிருக்கின்றன. இதுபோல விவசாயிகளுக்கு பெரிய அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது.

இன்றைக்கு உற்பத்தி செய்கிறவர்கள் குறைந்த வருவாயைத் தான் பெறுகிறார்கள்—வாங்கி உண்பவர்களுக்கும் எவ்விதப் பயனும் இல்லை. இன்றுள்ள நிலைமையில் இடையில் திட்டமிட்டு வணிகர் கூட்டம்தான் இந்த லாபத்தை அடைந்து வருகிறார்கள். இந்த லாபத்தை அடைவதற்கு இவர்கள் ஒன்றும் பெரிதும் பாடுபடவில்லை. டெலிபோனைச் சுற்றுவதைத் தவிர வேறு பாடு இல்லை.

அதிலும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு நிச்சயமாக எல்லா வியாபாரிகளும் கொஞ்சம் அச்சப்பட்டார்கள். இந்த நிலைமையை இவர்கள் மாற்றிவிடுவார்கள் என்று நினைத்தார்கள் உற்பத்தி செய்கிறவர்களை வணிகக் கூட்டம் சுரண்டாது இருக்கக் கூடிய ஒரு நிலைமையை இவர்கள் உருவாக்கி விடக் கூடும் என்று நினைத்தார்கள். ஆனால் எப்படியோ வணிகக் கூட்டம் இவர்களையும் வளைத்துவிட்டது. நான் கேள்விப்

பட்டேன். விருதுநகர் வியாபாரிகள் சொன்னார்கள். கடலைக்கு 25 சதவிகிதம் லெவி கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவு போட்டார்கள். உத்தரவு போட்டவுடன் அவர்கள் வந்து அமைச்சர் அவர்களைச் சந்தித்தார்கள். சந்தித்ததற்குப் பின்னால் சமரசம் ஏற்பட்டது. அந்தச் சமரசம் எப்படி ஏற்பட்டது? சட்டப்படி ஏற்பட்டதா? அதை அமைச்சர் அவர்கள் விளக்கியாக வேண்டும். வெளியில் பகிரங்கமாகச் சொல்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் முதலில் தலைப்பு இல்லாத நிதியாக 10 லட்சம் கேட்டார்கள். கொடுத்தோம். வெளியில் கூச்சல் குழப்பம் உண்டானவுடன் அதை ஊனமுற்றோர் நல வாழ்வுக்காக என்று தலைப்பிட்டுக் கொடுக்கச் சொன்னார்கள். கொடுத்தோம் என்கிறார்கள்.

இன்றைக்கு அவர்களுடைய எண்ணம் நிறைவேறிவிட்டது. ஊனமுற்றோர் நலத்திற்காக நிதி வாங்குவது தவறு அல்ல. நல்ல காரியத்திற்கும் கூட மோசமான இடத்தில் இருந்து நிதி வாங்கக் கூடாது. அதன்மூலம் ஏராளமான ஊழல்கள்தான் மலிந்து கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட நடைமுறையின் காரண மாகத்தான் பல்வேறு இடங்களில் ஊழல்கள் ஏற்படுகின்றன.

இன்றைக்கு திரு. பழனிசாமி சொன்ன இந்தத் திருத்தத்தை வெற்றிகரமாகச் செய்வதற்கு ஒரே ஒரு வழி கூட்டுறவு முறைதான். இந்தக் கூட்டுறவு முறை மூலமாகத்தான் அதைச் செயல்படுத்த வேண்டும். அதற்கு அடிப்படையாக இதை தேசீயக் கொள்கை யாக ஏற்றுக்கொண்டு—ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள விவசாயி கள்—உற்பத்தியாளர்கள் உறுப்பினராக இருக்கவேண்டும் என்ற ஒரு சட்டத்தை அரசாங்கம் கொண்டுவரலாம்.

(மாலை 5.00)

அப்படி விவசாயிகள் மாத்திரமல்லாமல், நகரத்திலே இருப் பவர்களுக்கும், அங்கே வாங்கி உண்பவர்களுக்கும், கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்தி, அவர்களுக்கு வேண்டிய அத்தியவாசியப் பண்டங்களை ஒரு குறிப்பிட்ட காலத்திற்காவது கட்டுப்படுத்தி அரசாங்கம் செயல்பட முடியும். அப்படிச் செயல்படுத்தினால் பதுக்கல் ஒழியும், விலைவாசிகள் குறையும். விலைவாசிகள் உயர்ந் திருப்பது செயற்கையானது. எந்தத் தேவையுமில்லாமல் ரூ. 3 க்கு விற்ற அரிசி ரூ. 7 க்கு விற்கிறது. அரசாங்கக் கொள்கை திடீர் திடீர் என்று மாறுகிறது. ஒரு நாள் கேட்டை திறக்கிறார்கள், மறு நாள் மூடுகிறார்கள். ஒரு நாள் தடை





போடுகிறார்கள், மறுநாள் நீக்குகிறார்கள். நாம் மாநில சுயாட்சி கிறார்கள், மறுநாள் நீக்குகிறார்கள். நாம் மாநில சுயாட்சி கேட்கின்றோம். இவ்வளவு சின்ன மாகாணத்தில் உங்களுக்கு இருக்கும் அதிகாரத்தை நீங்கள் தீவிரமாக, திட்டவட்டமாக அறி வித்துச் செயல்பட முடியவில்லையென்றால், பரந்து இருக்கும் நாட்டில், இவ்வளவு பெரிய கட்சி ஆளுகின்ற நேரத்தில் எவ்வளவு பெரிய ஊழல்கள் ஏற்படும் என்பதை இன்றைக்கு எண்ணிப் பார்க்க வேண்டும்.

கிராம மட்டத்திலே இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படுமானால், கூட்டுறவுச் சங்கங்கள் நல்முறையில் நடைபெறுமானால், நடை முறையில் நிச்சயமாக எந்தவிதமான ஊழலும் ஏற்படாது. கூட்டுறவுச் சங்கங்களில் நியமன உறுப்பினர்களைப் போடுவது, ஆளுங்கட்சி உறுப்பினர்களைப் புகுத்துவது, மந்திரிகளுக்கு வர வேற்பு கொடுப்பது, அதற்கு கூட்டுறவுச் சங்கப் பணத்தை எடுப் பது என்று இந்த விதத்தில் நிலைமை ஏற்படுமானால், மக்களுக்காக ஏற்பட்டிருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படமுடியாது. பழனிசாமி அவர்கள் பல்வேறு பொருள்களைச் சொல்லியிருக் கிறார்கள். பூச்சிக் கொல்லி மருந்து, உரம் போன்று பல பொருள் களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் அன்றைக்கே சொன்னோம். நாங்கள் சட்டசபையிலே பேசியபிறகு, ஏராள மான கடிதங்கள் வருகின்றன. இங்கே போய் கையெழுத்து வாங்கிவிட்டு வா, அங்கே போய் கையெழுத்து வாங்கி விட்டு வா என்று அறிவிக்கிறார்கள் என்று கடிதம் வருகிறது. இந்த மாவட்டத்திற்கு இவ்வளவு, இந்த வட்டாரத்திற்கு இவ்வளவு, இதற்குமேல் கொடுக்கமுடியாது, இத்தனை ஏக்கருக்கு இவ்வளவு என்று அரசாங்கம் திட்டவட்டமாக நிர்ணயித்து விநியோகிக்க வேண்டும். அந்த அடிப்படையிலே பார்த்தால் இந்தத் தீர்மானம் நல்ல தீர்மானம். அரசாங்கம் படிப்படியாக குறிப்பிட்ட ஒன்றிரண்டு பொருள்களையாவது எடுத்துக்கொண்டு தனிப்பட்டவர் களுடைய ஆதிக்கத்தை ஒழிக்கவேண்டும்.

விலைவாசி உயர்வுக்கு அடிப்படைக் காரணம் என்ன? விலை வாசி உயர்வு என்று சொல்லும்போது, எந்த ஊர்வலம் நடந் தாலும் அல்லது ஆளுங்கட்சி சார்பில் கூட்டம் நடந்தாலும் அத்தனை பேருடைய பேச்சிலும் அடிபடுவது, அரிசி விலையைக் குறைக்கவேண்டுமென்பதுதான். அரிசி விலையைக் குறைக்க வேண்டுமென்று கேட்பது அடையாளத்திற்காகக் கேட்பது. அரிசி

விலை குறைந்தால், மற்றப் பொருள்களின் விலைகள் தானுகக்குறை
யும் என்பதை அறிந்துதான் அரிசி விலை குறையவேண்டுமென்று
சொல்கிறேம். நான் முதலமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்
வேன், அரிசியைப் பொறுத்தவரை முழுக்க முழுக்க அரசே
எடுத்துக் கொள்ளவேண்டும். தனியார் அரிசியை விற்பதை,
கொண்டு போவதை, ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு
மாவட்டத்திற்குக் கொண்டு போவதை, நம் மாநிலத்திலிருந்து
வெளிமாநிலத்திற்குக் கொண்டு போவதை, தாண்டவராயன்
போன்றவர்கள் அதிலே ஈடுபடுவதை தடைசெய்ய வேண்டும்.
இப்பொழுது ஆயிரம் பேருக்கு ஒரு கடை என்றிருப்பதை,
குறைந்த அளவு 1,500 பேருக்கு அல்லது 2,000 பேருக்கு என்று
வைத்து, குறிப்பிட்ட கடையிலே இருக்கிற கார்ட் ஹோல்டர்ஸ்
நிச்சயம் அக்கடையிலே அரிசி வாங்கலாம் என்ற நிலைமையை
உருவாக்கலாம். அல்லது ரைஸ் மில்களை தேசியமயமாக்கி
அரசாங்கமே கொஞ்சகாலத்திற்கு எடுத்துக்கொண்டு அறைப்பது,
விற்பது போன்ற எல்லா வேலைகளையும் அரசாங்கமே எடுத்துக்
கொள்ளுமானுல், விலையைக் குறைக்கமுடியும். அவர்களிடம்
நீங்கள் அறைவைக்குக் கொடுத்து, உங்களுக்குத் தெரியாமல்
கமிஷன் எடுப்பது, ஐஸ் கட்டி பிரயாணம் செய்வதுபோல்
இருக்குமே தவிர, அரசாங்கமே இதனைச் செய்தால் எந்தவிதமான
இன்னலும் இருக்காது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

அதற்கு முதல் கட்டமாக, அரிசியை தனியார் விற்பதற்குத்
தடை விதிக்க வேண்டும். அரசாங்கக் கடைகளின் மூலமோ,
அல்லது நியாய விலைக் கடைகளின் மூலமோ, கூட்டுறவு சங்கங்
களின் மூலமோ இப்படி ஏற்பாடு செய்து விற்ருல், வெளியே
உண்மையாக மார்க்கெட்டிலே நிச்சயமாக விலைவாசி குறையும்.
அப்படி இல்லாவிட்டால், நிச்சயமாக என்ன பாடுபட்டாலும்
முதலமைச்சரவர்கள் சொன்ன விலைக்கு எந்தக் காலத்திலும்
கிடைக்காது. தனியார் வியாபாரம் இருக்குமானுல், தனியார்
இந்த மாவட்டத்திலிருந்து அந்த மாவட்டத்திற்குக் கொண்டு
போகலாம் என்று வரையறுக்கப்பட்டு அனுமதிக்கப்படுவார்
களானுல், ஒருவேளை தஞ்சாவூர் மாவட்டத்தில்—முதலமைச்சர்
மாவட்டம்—அவர்கள் கொடுத்து வைத்தவர்கள்—நான் கூட ஒரு
கூட்டத்திற்குப் போகும்போது ரூ. 2½ க்குக் கிடைக்கிறதைப்
பார்த்தேன், ரொம்ப வயிற்றெரிச்சலாக இருந்தது. அதே அரிசி
சென்னையில் ரூ. 7-க்குக் கிடைக்கிறது.



ஆகவே, அந்த நிலைமையை மாற்ற வேண்டுமானுல், அரிசி வியாபாரத்தை முழுக்கமுழுக்க அரசே ஏற்றுக்கொண்டு ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு, நம் மாநிலத்திலிருந்து வெளிமாநிலத்திற்குக் கொண்டுபோவது என்ற அடிப்படையில் எல்லாப் பொருள்களின் விலையையும் கட்டுப்படுத்த முடியும். அந்த அடிப்படையில் திரு. பழனிசாமி அவர்கள் மற்ற பொருள்களையும் குறிப்பிட்டிருக்கிருர்கள். அதையும் நிச்சயமாகத் தாராளமாக நாம் செய்யலாம். அந்த அடிப்படையில் இந்தத் தீர்மானத்தை எங்கள் கட்சியின் சார்பிலே வரவேற்று நான் ஆதரித்து முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவரவர்களே, தோழர் பழனிசாமி அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை ஆதரித்து சில விஷயங்களைப் பேச விரும்புகிறேன்.

அரசாங்கத்தினுடைய கொள்கையை படிப்படியாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிற கொள்கையைத்தான் அவர் தீர்மான வடிவமாகக் கொடுத்து, இங்கு பல கருத்துக்கள் சொல்லப்பட்டு வருகின்றன. அரசினுடைய பொறுப்பிலே, உணவு தானிய வர்த்தகத்தை ஏற்று நடத்த வேண்டுமென்று பல்லாண்டுகாலமாக, ஏறத்தாழ 20 ஆண்டுகாலமாக நம்முடைய நாட்டிலே இருக்கக் கூடிய நல்ல எண்ணம் உடையவர்கள், ஜனநாயகம்மீது அக்கறை உடையவர்கள் அடிக்கடி எடுத்து சொல்லிக்கொண்டு வந்திருக்கிருர்கள். அதை அடிப்படையாகக் கொண்டுதான் இன்றைய தினம் அரசாங்கம் உணவு தானிய வர்த்தகத்தை ஓரளவு சில பொருள்களைப் பொறுத்தவரை தொடங்கியிருக்கிருர்கள். அந்த முறையிலே பார்த்தால் தனியார் வியாபாரம் என்று சொல்வது அரசை மோசடி செய்வது மாத்திரமல்லாமல், இலாபத்தைக் குறிக்கோளாகக் கொண்டு, மக்களுடைய கஷ்டத்தை அறியாமல் அவர்கள் எந்த அளவுக்கு இலட்சக்கணக்கான ரூபாயை இலாபமாகக் கொள்ள முடியுமோ அந்த அளவிற்குப் பெற, அதே நோக்கத்தோடு இன்றைய தினம் வர்த்தகர்கள் தங்களுடைய தொழிலை ஆரம்பித்து நடத்திக் கொண்டிருக்கிருர்கள்.

அந்த வகையில் பார்த்தால், ஆண்டு ஒன்றுக்குப் பல கோடி ரூபாயை ஆதாரமாகப் பெறுகிருர்கள். இவ்வளவும் ஏழை, எளிய மக்களிடமிருந்து மோசடி செய்து, சர்க்கார் ஒரு விலையை நிர்ணயம் செய்தாலும், அதைவிட அதிகமாக விற்கின்ற ஒரு

நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இன்றையதினம் அரசு நெல் விலையை நிர்ணயம் செய்திருக்கிறது. இவ்வளவுக்குத்தான் விற்க வேண்டுமென்று நிர்ணயம் செய்திருக்கிறது. அந்த விலைக்குச் சர்க்கார் கொள்முதல் செய்கிறது. ஆனால், தனிப்பட்ட வியாபாரிகள் சர்க்கார் கொள்முதல் விலையைவிட அதிக விலை கொடுத்து வாங்குகிறார்கள். எப்படி அவர்களுக்குக் கட்டுபடியாகிறது என்பதை அரசாங்கம் யோசிக்கவேண்டும். கட்டுபடியாகக் கூடிய நிலைமையை அவர்கள் உருவாக்குகிறார்கள். எப்படியாவது. கள்ளச் சந்தையிலோ, அல்லது மாவட்டம் விட்டு மாவட்டம் உணவுதானியங்களை அப்புறப்படுத்துகிறார்கள் என்பது நன்றாகத் தெரிகிறது. எவ்வளவுதான் உஷாராக இருந்தாலும், காவல் துறையினரைப் போட்டுத் தடுத்தாலும் பல்வேறு வகையிலே அவர்கள் அதிக இலாபத்திற்கு விற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பது இன்றைக்கு நாடு அறிந்த உண்மையாகும். அந்த முறையிலேதான் இன்றைக்கு அரசாங்கம் தனக்கு ஏற்படக்கூடிய நிர்வாகக் கஷ்டங்கள் இருந்தாலும், அத்தியாவசியப் பண்டங்கள் அனைத்தையும் தானே ஏற்று நடத்தவேண்டும். தனி வியாபாரிகளுக்கு விற்பனை செய்கின்ற அதிகாரத்தை அரசாங்கம் வழங்கக் கூடாது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவற்றை வழங்குகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கூட்டுறவுச் சட்டத்தைத் திருத்தி, அதிலே தவறு ஏற்படாமல் இருக்க நடவடிக்கையை எவ்வளவு தூரம் எடுக்க முடியுமோ அதையும் அரசாங்கம் எடுத்தாக வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்கள், மற்றும் வேறு பல சங்கங்கள் எல்லாம் இருந்து கொண்டிருக்கின்றன. அந்தச் சங்கங்கள் மூலமாக, அத்தியாவசியப் பண்டங்களை, உணவு தானியங்களை விநியோகம் செய்வது மாத்திரமல்லாமல், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் இரண்டு ஆண்டுகாலமாக அது வர்த்தகம்போல் வாங்கிவிற்கின்ற நிலையிலே இருக்கிறது. விற்பனை செய்கின்ற நிலையிலே, பரவலாக எல்லா மாவட்டங்களிலும், எல்லா தாலுகாக்களிலும் விற்பனை நிலையங்களை ஏற்படுத்தியாகவேண்டும். கிராமங்களில் இருக்கிற மக்கள்தான், வியாபாரிகளுடைய கொள்ளை இலாபத்திற்கு, வர்த்தகச் சூதாடிகளுடைய கொள்ளைக்கு ஆளாகிறார்கள். விவரம் தெரியாத மக்களை இன்றைய தினம் வியாபாரிகள் சுரண்டிக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுக்க வேண்டுமென்று சொன்னால், சுமார் 1,000 மக்கள் இருக்கக்கூடிய ஒரு பிரதேசத்திற்கு ஒரு நியாய விலைக் கடை என்று வைத்து, அத்தியாவசியப்





பண்டங்களை, தானியங்களை விநியோகம் செய்கின்ற பொறுப்பை
அரசாங்கம் எடுத்துக்கொண்டு வருகிறது. பல்லாயிரக்கணக்
கானவர்கள் இப்பொழுது வேலையில்லாமல் திரிந்து கொண்டிருக்
கிறார்கள். நாட்டிலே, எம்.எஸ்ஸி., பி.ஏ., பி.எஸ்ஸி., படித்
தவர்கள் எல்லாம் வேலைகிடைக்காமல் திரிந்து கொண்டிருக்
கிறார்கள். இந்த வருஷம் இதனை ஆரம்பித்ததாலே, கொள்முதல்
விவகாரங்களை மேற்கொண்டதன் மூலமாக, நூற்றுக்கணக்கான
வர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க முடிந்தது. அதற்கும் இது
உதவிகரமாக இருக்கும். வியாபாரிகள் அடிக்கின்ற கொள்ளை
யைத் தடுத்து நிறுத்தி அவர்கள் பெறுகின்ற இலாபத்தை அர
சாங்கத்தின் பக்கம் திருப்பி, இம்மாதிரி வேலையில்லாமல் இருப்
பவர்களுக்கு வேலை கொடுக்க நம்மால் முடியும். அந்த முறை
யிலே இன்றைய தினம் ஆயிரம் மக்கள் கொண்ட பிரதேசங்
களிலே எல்லாம் நியாய விலைக் கடைகளைத் திறந்து அவற்றின்
மூலமாக மக்களுக்கு உடனடியாகத் தேவைப்படுகின்ற அத்தியா
வசியப் பண்டங்களையும் சாமான்களையும் கொடுக்க அரசாங்கம்
தைரியமாக நடவடிக்கை எடுக்கவேண்டும். இதிலே யோசனை
செய்வதிலே பலனில்லை.

இரண்டு வியாபாரம் ஒரு நாட்டிலே நடைபெறவிடக்கூடாது.
ஒரு பக்கம் தனியார்கள் தங்களுடைய வியாபார சூதாட்டத்தை
நடத்தி கொள்ளையடிக்கிறார்கள், அரசாங்கத்திற்குப் போட்டியாக
நடத்திக்கொண்டிருக்கிறார்கள், அவர்கள்தான் இந்த நாட்டிலே
நெருக்கடியை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள், உணவு நெருக்
கடிக்குக் காரணமே அவர்கள்தான், அவர்கள் அரசாங்கத்தின் நேர்
விரோதியாக வேலைசெய்துகொண்டிருக்கிறார்கள், எப்படியாவது
இந்த நாட்டிலே ஒரு நெருக்கடியை உருவாக்கவேண்டுமென்று
கங்கணம் கட்டிக்கொண்டு மக்களை சுரண்டிக்கொண்டிருக்கிறார்கள்,
அதைப்போக்கவேண்டுமானால் சகலப் பொறுப்புகளையும் அரசே
ஏற்றுக்கொள்ளவேண்டும். அதற்கு நியாயமான விலையில் அர
சாங்கம் பொருட்களை வாங்கவேண்டும், அந்த வகையிலே
மக்களுக்கு கொடுக்கவேண்டும், இந்தத் தீர்மானத்தை நான்
ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.
வணக்கம்.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவர் அவர்களே, திரு.
என். கே. பழனிசாமி அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற அத்தியா
வசியப் பொருட்களை நியாயவிலையிலே கொடுக்கவேண்டுமென்ற

[திரு. கே. என். குமாரசாமி] [1974 டிசம்பர் 21

வாய்ப்பை உருவாக்கவேண்டுமென்று கொண்டுவரப்பட்டிருக்கிற
தீர்மானத்தை நான் ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல
விரும்புகிறேன்.

இன்றைக்கு நம்முடைய நாட்டிலே விலைவாசியேற்றம்
சாதாரண மக்கள் ரொம்ப சிரமப்படக்கூடிய சூழ்நிலைக்குப்போய்க்
கொண்டு இருக்கிறது. எந்த அளவிற்கு விலையைக் கட்டுப்படுத்தி
பண்டங்களை நியாய விலைக்குக் கொடுக்கிறோம் என்பது விநியோக
முறையிலே இருக்கிற கோளாறு காரணமாக சிரமங்களை ஏற்
படுத்திவிடுகிறது. எவ்வளவுதான் உற்பத்தியானாலும் அந்த
உற்பத்தி எப்படி விநியோகிக்கப்படுகிறது என்பதைப்பொறுத்துத்
தான் இருக்கிறது, அந்தக் கொள்கையிலே ஏற்படுகிற கோளாறு
காரணமாக விலையேற்றம் இருந்துகொண்டிருக்கிறது. உணவுப்
பிரச்னையைப்பற்றி எல்லோரும் சொன்னார்கள். விலையைக் குறைப்
பதற்கு ஓப்பன் மார்க்கெட்டிலே அரசே கொள்முதல் செய்து
வெளிச்சந்தையிலே நியாயமான விலைக்கு விற்க ஏற்பாடு செய்ய
வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் ஓப்பன் மார்க்கட்டிலே
என்ன நிலைமை? விலை ஏறிக்கொண்டே இருக்கிறது, அரசாங்கம்
விலையைக் குறைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொன்
னார்கள், அது நடைபெறவில்லை. விலையேறிக்கொண்டேதான்
போகிறது. கூட்டுறவுத் துறை மூலமாக விலையைக் குறைக்க
லாம் என்று சொல்கிறார்கள். அரசாங்கமே உணவுப் பொருள்
கார்ப்பரேஷன் என்ற ஒன்றை 110 கோடி ரூபாய் முதல்போட்டு
கொள்முதல் செய்து குறைந்த விலைக்கு மக்களுக்குக் கொடுக்க
ஏற்பாடுசெய்வோம் என்று சொன்னார்கள். ஆனால் அரசாங்கம்
கொள்முதல் செய்த நெல்லைக்கூட திருப்பி வாங்கமுடியாத நிலைமை
தான் இருக்கிறது. அரசாங்கத் துறையிலேயும் சரி நன்றாகச்
செயல்படுவதில்லை.

கூட்டுறவுத் துறையிலே சரியான முறையில் நடத்தப்படும்
என்று சொல்கிறார்கள். அங்கேயும் சரியாக அமலாகப் போவ
தில்லை. படிப்படியாக நாம் இப்படியே சொல்லிக்கொண்டேபோய்
அது இருக்கத்தான் போகிறது, ஓட்டைகள் இருக்கத்தான் செய்
யும் என்ற நிலைமை வரப்போகிறது. விலைவாசியைக்குறைக்க
முடியாத அளவிற்கு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. அதற்
குக் காரணம் என்ன என்று ஆராய்ந்து பார்த்து முடிவு எடுக்க
வேண்டுமேயொழிய அமைச்சர்கள் பதில் சொல்லிவிட்டுப்போய்
விட்டால் போதாது, தவறு செய்தவர்கள்மீது நடவடிக்கைகளை
எடுக்கிறோம் என்று சொல்லிவிட்டுப் போவது மட்டும் போதாது.



1974 டிசம்பர் 21] [திரு. கே. என். குமாரசாமி]

ஆராய்ந்து பார்த்து எங்கே தவறு ஏற்பட்டது, ஏன் தவறு
ஏற்பட்டது என்று பார்ப்பதற்கு அந்த இலாகாவும் அமைச்சரும்
வரவேண்டும். அப்படியிருந்தால் கொள்கையிலே கொண்டு
வந்ததை நிறைவேற்றவேண்டும், அப்படியில்லையென்றால் நிர்வாகத்
திலே உள்ள கோளாறு காரணமாக கொள்கை நல்ல கொள்கை
யாக இருந்தாலும்கூட கொள்கை தவறாக ஆகிவிடுகிறது. எந்தக்
கொள்கையை கையாளவேண்டுமென்று முடிவுசெய்யமுடியாமல்
அரசாங்கம் திண்டாடிக்கொண்டிருக்கிறது.

உற்பத்தி பெருகினால் விலைவாசி குறையும் என்று நாம் தத்
துவம் பேசுகிறோம். உற்பத்தியை தனியார் துறையிலே விட்டு
விட்டால் அவர்கள் லாப நோக்கத்தோடுதான் வியாபாரம் செய்
வார்கள், தனியார்களிடத்தில் பச்சாதாபத்தோடு அவர்கள்
மக்களுக்கு நீ விலையைக் குறைத்துக் கொடு என்று சொன்னால்
கேட்பார்களா, கேட்கமாட்டார்கள். அப்படி இருக்கக்கூடிய
சமுதாய அமைப்பிலே என்னசெய்ய வேண்டுமென்பதை சிந்தித்
துப் பார்க்க வேண்டும். உற்பத்தி பெருகினாலும் விலைவாசி ஏறு
கிறது, பற்றாக்குறை இல்லாவிட்டாலும் விலைவாசி ஏறுகிறது
என்றால் என்ன பொருள்? உற்பத்தி இருந்தாலும் விலை ஏறிக்
கொண்டே இருக்கிறது, வியாபாரிகளிடம் பொறுப்பை ஒப்படைத்
ஒப்படைத்தால், ஏஜண்டுகளிடம் பொறுப்பை ஒப்படைத்தால்
அவர்கள் லாபத்தை நோக்கமாகக் கொண்டிருப்பார்கள்,
மக்களுக்கு ஒழுங்காக நியாயமாகக் கொடுக்கமாட்டார்கள்.
கூட்டுறவுத் துறையிலே உணவு விநியோகம் செயல்படுத்தப்போவ
தாகச் சொல்லப்படுகிறது. கூட்டுறவுத் துறையிலே ஊழல்தான்
இருக்கிறது என்பது நமக்குத் தெரியும், எங்கே பார்த்தாலும்
ஊழல் ஊழல் என்று சொல்கிற நிலைமை வந்து மக்கள் பயப்படுகிற
அளவுக்கு வந்துகொண்டிருக்கிறது. எப்படி அதைக் கட்டுப்
படுத்தி மக்களுக்கு நியாயமான விலையிலே உணவுப் பொருட்களைக்
கொடுக்கப்போகிறோம்?

விவசாயிகளுக்கு நியாயமான விலைகொடுக்கவேண்டுமென்பது
உண்மைதான். அதனால் விலையேறி விடும் என்று சொல்லமுடி
யாது. ஓப்பன் மார்க்கட்டிலே கொள்முதல் அரசாங்கம் ஒரு
விலையை வைத்து இருந்தாலும் அதற்கு மேல் 10 ரூபாய் கொடுத்து
வாங்கி 100 சதவீதம் லாபம் வைத்து கொள்ளையடிக்கிறார்கள்
ஏஜன்ட்கள். குறிப்பிட்ட ஏஜன்ட்களுக்கு லைசென்ஸ் கொடுத்து
அவர்கள்தான் வாங்கமுடியும் விற்கமுடியும் என்றமுறை இருக்கிற

காரணத்தினாலேதான் அவர்கள் அதைச் செய்கிறார்கள். அவர்கள் நினைத்தபடி செய்கிறார்கள். அந்த முறை கூடாது என்று முடிவு எடுத்தால்தான் கொள்ளையடிப்பதைத் தடுக்கமுடியும். ஏஜண்ட் முறை, லைசென்ஸ் முறை முழுக்க முழுக்க ஒழிந்தாகவேண்டும். அரசாங்கம் தானே கொள்முதல் செய்யவேண்டும், அரசாங்கம் எல்லாப் பொருட்களையும் கொள்முதல் செய்கிற சக்தியைப் பெற வேண்டும். அரசாங்கம் நிர்வாகத்தை முழுக்க முழுக்கப் பயன்படுத்தினால்தான் நம்மால் சமாளிக்கமுடியும். நம்முடைய தமிழ் நாட்டிலே சாதாரண மக்கள் குறைந்த விலையிலே அத்தியாவசியப் பண்டங்களைப் பெறக்கூடிய முறையிலே வழிசெய்யவேண்டுமென்று நாம் இங்கே உட்கார்ந்துகொண்டிருக்கிறோம், சாதாரண மக்களுக்கு உதவிசெய்யவேண்டுமென்று நாம் வலுவோடு இங்கே உட்கார்ந்துகொண்டிருக்கிறோம், சுதந்திராக் கட்சி வலுவான கட்சியாக இங்கே இல்லை, மற்ற கட்சிகள் எல்லாம் இதற்குத் தடை சொல்லவில்லை. அப்படியிருக்கும்போது ஏன் மக்கள் இவ்வளவு கஷ்டப்படவேண்டும். ஏன் மக்கள் வாழமுடியாத நிலைமை வந்துவிட்டது.

பருத்தி மார்க்கெட் கீழே போகாமல் இருக்க அரசாங்கம் நியாய விலை கொடுத்து வாங்கி ஏற்பாடு செய்யுமென்று சொன்னார்கள், ஆனால் நடைமுறையிலே முடிந்ததா? உற்பத்தி நாட்டிலே பெருக வேண்டுமென்று சொல்கிறோம், ஆனால் ஆலைகளை நிறுத்திக் கொண்டிருக்கிறார்கள். உற்பத்தியை முடக்குகிறார்கள், ஏன் முடக்குகிறார்கள்? காரணம் கேட்டால் எங்களுக்கு மின்சாரம் இல்லை என்கிறார்கள், ஏன் ஜெனரேட்டர் இருக்கிறதே ஏன் இயங்கவில்லை என்று கேட்டால் எங்களுக்கு டீசல் விலை குறையவில்லை என்கிறார்கள், இப்படி ஏதோ காரணம் சொல்லிக்கொண்டு இருக்கிறார்களே தவிர வேறு ஒன்றும் இல்லை. அவர்களுக்கு லாபம் இல்லை என்று சொன்னால் ஒட்டு மொத்தமாக உற்பத்தியைக் குறைப்பதற்கு முதலாளிகள் முயற்சிக்கிறார்கள். அப்படியானால் அரசாங்கத்தின் நடவடிக்கை என்ன? முதலாளிகள் என்ன செய்கிறார்கள்? மெஷினை நிறுத்தி உற்பத்தியைக் குறைத்தாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கமுடியாது. அரசாங்கத்தின் கொள்கை என்ன? ஏன் நிறுத்தினார்கள் என்று கேட்க நாதி கிடையாது நாட்டிலே. தனியார் துறையிலே உள்ள நிலைமை, அவர்களை நம்பி உற்பத்தி முழுவதையும் கொடுத்ததன் விளைவு, அவர்களுக்கு இலாபம் இல்லை என்றால் உற்பத்தியை முடக்குகிறார்கள். அதைக் கேட்பதற்கு நாட்டிலே முடியவில்லை என்றால் எப்படிப்



பொருட்களைக் குறைந்தவிலைக்குக் கொடுக்க முடியும்? சர்க்கார் எப்படி அந்தக் கொள்கையை ஏற்க முடியும். இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒவ்வொன்றையும் சிந்தித்துச் சிந்தித்துப் பார்க்கும்பொழுது நிலைமைகள் எப்படி இருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும்.

நியாய விலையில் உணவு கொடுக்க வேண்டும், நியாய விலைக் கடைகளை ஏற்படுத்த வேண்டும். சர்க்காரின் கொள்கை என்ன சொல்கிறது? கார்ப்பரேஷனில் உள்ள 500 ரூபாய் சம்பளம் வாங்கும் அத்தனைபேருக்கும் நியாய விலைக் கடையில் அரிசி கொடுக்கிறது. ஆனால் கிராமத்தில் 3 ரூபாய், 3½ ரூபாய் கூலி வாங்குகின்றவர்களுக்கு அரிசி கொடுக்கிறோமா என்றால் மூன்றாம் பட்சம்தான். கிராமத்தைப் புறக்கணிக்கிறோம். நகரசபைகள், பஞ்சாயத்துக்கள், நகரப் பஞ்சாயத்துக்கள். பிறகு மைனர் பஞ்சாயத்து, கடைக்கோடியிலே கிராமங்களைப் பார்க்கிறோம். 3½ ரூபாய் கூலி பெறுகின்ற விவசாயிக்கு நியாய விலையில் அரிசி கொடுக்கவில்லை. மாதம் 500 ரூபாய் வாங்குபவர்களுக்கு நியாய விலைக் கடைகளில் அரிசி கொடுக்க முயற்சிக்கிறோம். அப்படி 3½ ரூபாய் கூலி வாங்குகின்ற விவசாயத் தொழிலாளிக்குப் கொடுப்பதற்கு ஏன் முன்வரவில்லை? எதையெடுத்தாலும் கிராமங்களைப் புறக்கணித்துக்கொண்டே இருப்பதன் மூலம் நம்முடைய நிலைமை என்ன? ஏன் அவைகள் புறக்கணிக்கப்படுகின்றன? அதைக் கேட்டால் இப்பொழுது சொல்கிறார்கள், சோளம், ராகியைத்தான் கிராமங்களிலே சாப்பிடுகிறார்கள், அதை அவர்களுக்கு நியாய விலையில் போடுவதற்கு ஏற்பாடு செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த சோளம், ராகியையாவது விநியோகிப்பதற்கு கார்டுகள் ஒழுங்காக விநியோகிக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. கார்டுகள் இல்லை, அச்சாகி வருவதற்கு ஒரு மாதமாகும் என்று சொல்கிறார்கள், இப்படி நிர்வாக இயந்திரம் ஜாக்கிரதையாக நடவடிக்கை எடுக்காததன் காரணமாக மக்கள் கொதிப்படைந்திருக்கிறார்கள். கிராமங்கள் புறக்கணிக்கப்படுமானால் இந்த நாட்டினுடைய பொருளாதாரம் பாழ்பட்டுப் போகும் அளவிற்குப் போய்விடும் என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வறட்சி நிவாரண நடவடிக்கை என்று எடுத்துக்கொண்டால், போன வறட்சியின்பொழுது 17 கோடி ரூபாயை மத்திய அரசாங்கம் கொடுத்தது. அப்பொழுது அந்த வேலையைச் செய்யும்பொழுது அதை எப்படிச் செய்தோம், எந்த அளவிற்குச் செய்து முடித்

[திரு. கே. என். குமாரசாமி] [1974 டிசம்பர் 21

தோம் என்று பார்க்கிறோமா? அதிலேகூட பலவிதமான சங்கடங்கள் விளைந்திருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் பார்க்க வேண்டும். இப்படி எல்லாப் பொருட்களும் இன்றைக்கு விலையேறியிருப்பதன் காரணமாக மக்கள் திண்டாடுகிறார்கள். இதற்கு என்ன வழி என்பதை நாம் பார்த்தாக வேண்டும். என்ன வழி? இப்பொழுது கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக உணவைக் கொள்முதல் செய்து விற்பனை செய்யப் போவதாகச் சொல்கிறார்கள். சரியாக நடக்குமா? தனிப்பட்ட வியாபாரிகள் இருக்கும் வரையில் இந்த அரசாங்கம் கூட்டுறவு மூலமாகக் கொள்முதல் செய்து ஜனங்களுக்கு நியாய விலையில் கொடுத்து விட முடியுமா? தனிப்பட்ட வியாபாரிகளை அனுமதித்து விட்டு இதையும் செய்யலாம் என்றால் நடக்காது.

ஆகவே, கூட்டுறவு முறையிலே இந்த வேலைகளைச் செய்வது என்றால் தனிப்பட்டவர்கள் கைகளிலே அறவே தொடாத அளவிற்குச் செய்தாக வேண்டும். அரிசி முழுவதையும் அரசாங்கம் கொடுத்து விநியோகிக்கின்ற பொறுப்பையும் எடுக்க வேண்டும். அத்தியாவசியப் பண்டங்களான கடலை எண்ணெய், எண்ணெய் போன்றவைகளையும் தனியார் கைகளிலே ஒப்படைக்கக் கூடாது. முழுவதையும் கொள்முதல் செய்து நாமே கூட்டுறவு மூலம் விற்பனை செய்ய வழிவகைகளைச் செய்ய முடியும்.

நம் நாட்டில் வியாபாரிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள். எந்தப் பொருளுக்குக் கட்டுப்பாடு வருகிறதோ அந்தப் பொருளைப் பதுக்கி வைப்பதில் மிகமிக கெட்டிக்காரர்கள் நம்முடைய வியாபாரிகள். அந்த வியாபாரிகள் பதுக்குகிறார்கள், அதனால் அபரிமிதமான இலாபத்தைச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு நாம் இடமே கொடுக்கக் கூடாது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி இந்தப் பிரச்னையில் அரசாங்கம் தெளிவான கருத்தோடு இருக்க வேண்டும். அப்படித் தெளிவான கருத்தோடு நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் இப்பொழுது ஏறிய விலை எப்படி இறங்காமல் இருக்கிறதோ அதைவிட மோசமான சூழ்நிலை ஏற்பட்டு விடும் என்பதை இந்த நோத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, துணியும் அத்தியாவசியப் பொருள்தான். கைத்தறித் துணி தேங்கியிருக்கிறது. அதை நியாய விலையில், குறைந்த விலையில் கொடுப்பதற்கு சாத்தியக் கூறுகளை உண்டாக்கலாம். அந்தத் துணிகளை வாங்கும் சக்தியை மக்கள் வறட்சியின்



1974 டிசம்பர் 21] [திரு. கே. என். குமாரசாமி]

காரணமாகவும், வறுமையின் காரணமாகவும் இழந்திருக்கிறார்கள். எந்தெந்தப் பொருட்களை நியாய விலையில் விற்க முடியுமோ அவைகளை விற்பதற்கு அரசாங்கம் முழு சக்தியையும், முழு இயந்திரத்தையும் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டு எனக்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறி விடை பெறுகிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** துணைத் தலைவரவர்களே, முக்கிய அத்தியாவசியப் பொருட்களுடைய மொத்த வியாபாரத்தை அரசாங்கமே ஏற்று நடத்தி, ஆயிரம் பேர்களுக்கு ஒரு நியாய விலைக் கடை என்ற முறையிலே அரசாங்கம் கடைகளை நடத்தி மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்ற இந்தத் தீர்மானத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களையும் இணைத்துக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக, இன்றைக்கு வியாபாரிகளின்மீது சந்தேகங்களும், ஐயப்பாடுகளும் ஏற்படுகின்ற வகையில் நாட்டிலே பல காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பது ஓரளவிற்கு உண்மை என்பதை நானும் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் ஒட்டுமொத்தமாக வியாபாரிகள் எல்லாம் ஏதோ சமூக விரோத சக்திகள் என்ற அடிப்படையிலே அவர்களை வர்ணிப்பதும், வியாபாரம் தனிப்பட்டோரால் நடத்தப்படுமேயானால் நாட்டுமக்களுக்கு நன்மை பயக்காது என்று எண்ணுவதும் சிறந்ததாக இருக்காது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

வியாபாரி என்று சொன்னாலே பரோபகாரி என்று சொல்கிறார்கள். அவனைத் திரிகால சஞ்சாரி என்றும் சொல்வார்கள். ஏனென்றால், கடந்த காலத்தில் உற்பத்தியாகிய பொருளை நிகழ்காலத்து மக்களுக்குக் கொடுத்து, நிகழ்காலத்திலே உற்பத்தியாகக் கூடிய பொருளை வருங்காலத்து மக்களுக்குக் கொடுக்கின்ற வகையில் காரியங்களை ஆற்றுகின்றவன் வியாபாரி. அதுமட்டுமல்லாமல், அவன் காலத்தை வெல்வது மட்டுமல்ல, தூரத்தையும் வெற்றி கொள்ள வேண்டியவனாக இருக்கிறான்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

எங்கேயோ அமெரிக்க நாட்டிலே உற்பத்தி செய்த பொருளை இந்திய நாட்டிலேயிருக்கும் நாம் அனுபவிக்கும்படி செய்யக் கூடிய இடைச் சாதனமாக விளங்குபவன் வியாபாரி. ஆகவே, ஒட்டுமொத்தமாக வியாபாரியை சமூக விரோத சக்தி என்ற அடிப்படையில் வர்ணிப்பதை என்னைப்போன்றவர்கள் பலரால்

செலவினைப் பற்றிய அரசாணை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். பல்கலைக்கழக [illegible] அடிப்படையில் ஆசிரியர்களுக்குக் கொடுத்தால், அதையொட்டி உயர்நிலைப் பள்ளிகளிலே இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கும், பிறகு துவக்கப் பள்ளிகளிலே இருக்கிற ஆசிரியர்களுக்கும் கொடுக்கவேண்டும். இவர்களுக்குச் சமமாக இருக்கிற மற்றவர்களுக்கும் தர வேண்டும். இதனால் பல்வேறு சங்கடங்கள் ஏற்படும் என்ற முறையிலே அந்த பரிந்துரையை ஏற்க முடியாத நிலைமையில் இருக்கிறது. மறுபடியும் இதைப்பற்றி முழுவதும் அறிந்த கல்வியமைச்சர்கள் மாநாட்டைக் கூட்ட வேண்டுமென்று மத்திய அரசு எண்ணியிருக்கிறது. இப்போது புதிதாக சொல்லப்பட்ட விகிதங்கள் பரிசீலனையில்தான் இருக்கின்றன. அதனாலே நாம் கருத்த முறை தான் நடைமுறையிலே இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், யூனிவர்சிட்டி கிராண்ட்ஸ் கமிஷன் சிபாரிசின்படி பேராசிரியர்களுக்கு அதிகமாகக் கொடுக்கப்படுவதில் 80 சதவிகிதம் மத்திய சர்க்கார் 5 ஆண்டுகளுக்குக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்களே, அது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: சொல்லியிருக்கிறார்கள். கூடுதலாக ஆகிற செலவில் 80 சதவிகிதம் மத்திய சர்க்காரும் 20 சதவிகிதம் நம்முடைய சர்க்காரும் ஐந்தாண்டுகளுக்கு ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். அவர்களே முழுவதும் தருகிறேன் என்று சொன்னால்கூட ஏற்றுக் கொள்ள முடியாத நிலைமை இருப்பதால் அதிலே பல்வேறு சங்கடங்கள் ஏற்படும் என்று பலர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அதனால் மறுபடியும் கல்வியமைச்சர்கள் கூட்டத்தைக் கூட்டுவதற்கு மத்திய கல்வியமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்கிறார்கள்.

*Regional Engineering College.*

*105 Q.—Thiru N. K. Palanisamy: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether it is a fact that the number of seats in the Regional Engineering College, Tiruchirappalli has been increased from the current academic year; and

(b) if so, the details thereof?

நிச்சயமாக ஏற்க முடியாது. ஆனால் நாட்டிலே இன்றைக்கிருக்கின்ற நிலைமைகளை அனுசரித்து விலைவாசியேற்றத்தினுடைய அடிப்படையிலே பணத்தினுடைய மதிப்பு குறைந்துவிட்டதன் அடிப்படையிலே, மக்கள் அன்றாடம் தங்கள் வாழ்க்கையில் அனுபவித்துக் கொண்டிருக்கிற இன்னல்களை அடிப்படையாக வைத்து ஏதாவது ஒரு நிவாரணத்தைப் பெற முடியுமா, அதிலே இதுவும் ஒரு வழியாக இருக்க முடியாதா, இதைக்கூடப் பரீட்சார்த்தமாகப் பார்த்தால் என்ன என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பார்களேயானால் நிச்சயமாக என்னுடைய ஆதரவு அதற்கு உண்டு. இன்றைக்கு நாட்டிலே மிகப்பெரிய விபரீதமான நிலைமை உருவாகியிருக்கிறது. எந்தவொரு துறையிலே வாழக்கூடியவர்களாக இருந்தாலும், எந்தச் சாராராக இருந்தாலும் நிம்மதியாக வாழ்கிறார்களா என்றால் இல்லை என்ற அடிப்படையிலேதான் இன்றைக்கு நாட்டிலே நிலைமைகள் உருவாகியிருக்கின்றன. மிகப்பெரிய பதவியிலே இருக்கிற, ஒரு மாதத்திற்கு இரண்டாயிரம் அல்லது நான்காயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகின்ற ஒரு அதிகாரியானாலும், 100 ரூபாய், 150 ரூபாய் பெறுகின்ற ஒரு கடைநிலை ஊழியனாக இருந்தாலும் இன்றைக்கு வாழ்க்கையை மிகவும் கஷ்டமாக நடத்தக்கூடிய நிலைமையிலே இருக்கிறோம் என்றுதான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம், இன்றைக்கு நாட்டிலே ஏற்பட்டிருக்கிற சில பொருளாதார விசித்திரங்கள்தான். அதிலே முக்கியமானது இன்றைக்கு நடுத்தர மக்கள் என்று சொல்லப்படக்கூடியவர்கள், ஃபிக்செட் இன்கம் குரூப் என்று சொல்லப்படுகின்ற நிரந்தரமாக குறிப்பிட்ட வருமானத்தில் வாழக்கூடியவர்கள் எவ்வளவுதான் வருமானம் பெற்றாலும் அதனுடைய மதிப்பு இன்றைக்கு எல்லோரும் ஆச்சரியப்படும் அளவிற்குக் குறைந்துவிட்டிருக்கிறது. சென்ற ஆண்டு 100 ரூபாய் பெற்றிருந்தால் இந்த ஆண்டு அதனுடைய மதிப்பு 48 ரூபாய் அல்லது 50 ரூபாய் என்ற அளவிற்குத்தான் கொள்ள முடியும். ஆகவே, இன்றைக்கு ஃபிக்செட் இன்கம் குரூப் என்று சொல்லப்படக்கூடியவர்கள் மிகவும் பரிதாபத்திற்குரிய நிலையில் இருக்கிறார்கள்.

(மாலை 5.30 மணி)

300 ரூபாயை வருமானமாக இன்றைக்கு ஒருவன் ஒரு மாதத்திற்குப் பெறுகிறான் என்றால் அதனுடைய மதிப்பு இன்றைக்கு 120 ரூபாய் 150 ரூபாய் என்ற அளவுக்குத்தான் இருக்கிறது. பிக்ஸட் இன்கம் குரூப்பின் நிலைமை இன்று இப்படி இருக்கிறது.



இவர்களை விட மிகப் பரிதாபத்திற்குரியவர்கள் நிரந்தரமாக வாடகையின் அடிப்படையில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். ரெண்டல் இன்கம் போன ஆண்டு வாடகையின் வாயிலாக 500 ரூபாயாக இருந்திருக்குமானால் இந்த ஆண்டு 200 ரூபாய்க்கு மாறியிருக்கிறது. வாழ்க்கைச் செலவு அதிகமாகியிருக்கிறது.

அரசாங்கம் பலருக்கு பென்ஷன் கொடுக்கிறது. தனிப்பட்ட நிறுவனங்கள் பலருக்கு பென்ஷன் என்ற முறையில் கொடுக்கிறது. பென்ஷன் பெறக்கூடியவர்கள் என்ன நிலைமையில் இருக்கிறார்கள்? வருமானம் பாதிக்குக் குறைந்த நிலையில் இருக்கிறது. அவர்கள் எல்லாம் கடைக்குச் சென்று அத்தியாவசியப் பொருள்களை வாங்கச் சென்றால் அவர்கள் விரும்பக்கூடிய பொருள்கள் கிடைக்காது. அத்தியாவசியமான பொருள்களின் மிக அத்தியாவசியமானது அரிசியும் மற்ற தானியங்களும், இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையில் சாதாரண நிலைமையில் இருக்கக்கூடியவர்களும் அவற்றைப் பெற்று தங்களுடைய வாழ்க்கையை நடத்த வழி என்ன என்று பார்க்கும்போது வியாபாரிகளுடைய இடம் பொருளாதாரத்தில் என்ன என்ற பிரச்சினை வருகிறது.

இன்றைக்கு நாட்டில் உற்பத்தி குறைந்திருக்கிற காரணத்தால் அரிசி கிடைக்கவில்லையா? உற்பத்தியை ஓரளவு பெருக்கியிருக்கிறார்கள். ஆனால் பங்கீட்டிலேதான் குறைபாடு இருக்கிறது. அதனால் பொருள்கள் பற்றாக்குறை, விலையேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சர்க்கார் தருகிற புள்ளி விவரங்களிலிருந்து உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறார்கள் என்பது புரிகிறது. மிகப் பெரிய புரட்சியை ஏற்படுத்தியிருக்கிறோம் என்று சொல்லும் அளவுக்கு பசுமைப் புரட்சியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். நாம் நினைத்துக் கூட பார்க்க முடியாத இடங்களில் எல்லாம் கூட புஞ்சை நிலங்கள் நஞ்சை நிலங்களாக மாறிவிட்டன. உற்பத்தி பெருகியிருக்கும் இந்த நிலைமையில் எப்படி நாட்டுமக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்காமல் இருக்கின்றன என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

எனக்கு இருக்கின்ற மகிழ்ச்சியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் அரிசியை மட்டும் சொல்லாமல் வாழ்க்கைக்குத் தேவையான அத்தனை பொருள்களையும் சர்க்கார் பங்கீட்டு முறைகளில் சீர்திருத்தம் செய்து கொடுப்பதற்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில்

கூறியிருப்பதுதான். அதை நான் வரவேற்கிறேன். இன்று அரிசி விலை மட்டும் ஏறவில்லை. எல்லாப் பொருள்களின் விலையும் ஏறியிருக்கிறது. இந்தப் பொருள்களின் விலையைக் கட்டுப் படுத்த வேண்டுமென்றால் அரசால் நடத்தப்படும் கடைகளின் வாயி லாக அவர்களுடைய பங்கீட்டுச் சாதனங்கள் வாயிலாக மட்டுந் தான் தீர்க்க முடியும் என்று யாராவது கருதுவார்களானால் நிச்சய மாக முடியாது.

அடிப்படையான சில பொருளாதார சீர்கேடுகள் நம்முடைய நாட்டில் நடந்திருக்கின்றன. அவற்றைப் போக்க வழி என்ன என்று பார்க்கவேண்டும். சீர்கேடுகளைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதை ஒரு மாதத்திலோ, ஓராண்டிலோ நிறுத்திவிட முடியாது. அதற்குக் காலம் தேவை. அதைத் தான் காலையில் கூட நான் சொன்னேன். பிரையாரிடி—முன் னுரிமை கொடுக்க சில விஷயங்களில் தவறி விட்டோம். பொதுச் செலவினங்களும், மற்றச் செலவினங்களும் தனியாரால் செய்யப் பட்டாலும், சர்க்காரால் செய்யப்படுவதாக இருந்தாலும் அது சில பொருளாதார விளைவுகளை ஏற்படுத்துகிறது. இது சாதாரண விஷயம், எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இதை நான் இங்கே விளக்கிப் பேச வேண்டிய அவசியமில்லை.

இன்றைக்குக் கூட சர்க்காருடைய கொள்கை என்ற அளவில் சில சீர்திருத்தங்களைச் செய்யவேண்டுமென்று அறிவித்ததை கொள்கையாக ஏற்றுக் கொண்டு மகிழ்ச்சி தெரிவித்தாலும் சில கொள்கைகளைத் திட்டமிட்டுச் செய்ய வேண்டியவர்களாக இருக் கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். investment in social spheres).

சமுதாய மக்களுக்காக முதலீடுகள் செய்கிறோம். கல்வியில் முதலீடு செய்கிறோம். மருத்துவத்தில் முதலீடு செய்கிறோம். அப்படி நாம் முதலீடுகள் செய்யும்போது அவற்றிலே இருந்து உற்பத்தி பெருகுவதற்கும் நாட்டுமக்கள் வாழ்க்கை மேம்பாடு அடைவதற்கும் என்ன வழி வகுக்கப்படுகிறது என்று ஆராய நாம் அடிக்கடி தவறிப் போகிற காரணத்தால்தான் பல சிக்கல்கள் உருவாகின்றன.

இன்றைக்குக் குடிசை மாற்று வாரியம் வைத்திருக்கிறோம். நல்ல திட்டம்; புரட்சிகரமான திட்டம். சமுதாயத்தில் மறு மலர்ச்சி ஏற்படுத்தும் திட்டம். நல்ல நோக்கத்தோடு செய்யப் படுகிற திட்டம். அதிலே எந்தவிதமான குறைபாடும் இல்லை.



இன்றைக்கு அந்தத் திட்டத்தின்கீழ் பல கட்டடங்களைக் கட்டு கிறார்கள். கட்டும்போது கோடிக்கணக்கான ரூபாயை முதலீடு செய்கிறோம். அதிலே முதலீடு செய்யும்போது அதற்கான பொருள்களுக்கு டிமாண்ட் ஏற்படுகிறது. செங்கல்லுக்கு டிமாண்டு ஏற்படுகிறது; சுண்ணாம்புக்கு டிமாண்டு ஏற்படுகிறது; சிமெண்டுக்கு டிமாண்டு ஏற்படுகிறது; இரும்புக்கு டிமாண்டு ஏற் படுகிறது. இந்த டிமாண்டு அதிகமாக அதிகமாக அந்தத் தொழிற்சாலைகளில் உற்பத்தி அதிகமாகிறது. வேலை வாய்ப்பு அதிகமாகிறது. கட்டடத்தில் வேலை வாய்ப்பு கிடைக்கிறது. வேலை வாய்ப்பு அதிகமானால் உற்பத்தி பெருகுகிறது; உற்பத்தி பெரு கினால் வேலை வாய்ப்பு அதிகமாகிறது. இது எவ்வளவு தூரம் நடக்கிறது? மூன்று கோடி, நான்கு கோடி, ஐந்து கோடி என்று முதலீடு செய்து இந்த வேலைகள் முடிந்த உடனே எந்தவிதமான உற்பத்தியும் தொடர்ச்சியாக நடைபெறுவதில்லை. வேலை வாய்ப்பு களோ வருமானமோ இருப்பதில்லை. ஆகையால் இத்தகைய காரியங்களைச் செய்யும்போது மிகுந்த நிதானத்தோடும் பொரு ளாதார விளைவுகளைக் கவனித்தும் செய்யவேண்டும் என்று பொருளாதார நிபுணர்கள் சொல்லுகிறார்கள்.

இவ்வளவு பெரும் தொகைகளைத் தொழிற்சாலைகளில் ஈடு படுத்துவோமானால் தொழிற்சாலை கட்டும்போதும் வேலை வாய்ப்பு ஏற்படும்; அதற்குப் பிறகும்—

perennial source of income and perennial source of employment

நிரந்தரமாக வேலை வாய்ப்பு கிடைக்கும்; உற்பத்தி பெருகும். இது தொடர்ச்சியாக நடக்கும். அதன் விளைவுகள் பொருளா தாரத்தில் மகிழ்ச்சிகரமாக இருக்கும்.

அதைச் செய்ய நாம் தவறி விட்டோம். மிக அதிமகான அளவு சமுதாயக் காரியங்களுக்குச் செலவழிக்கிறோம். அது பொருளா தார அடிப்படையில் எத்தகைய சிக்கல்களை ஏற்படுத்துகிறது என்பதை முன்கூட்டியே நிர்ணயிக்காத காரணத்தால் இப்போது சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை உணரவேண்டும்.

எல்லோருக்கும் கல்வி கொடுக்க வேண்டுமென்பது தேவை தான். கல்வி இல்லாதவன் முழு மனிதனாக முடியாது. கல்விக் காக 140 கோடி ரூபாயை ஒவ்வொரு ஆண்டும் செலவழிக்கிறோம். பொதுச் செலவில் இப்படிச் செய்கிறோம். இது எவ்வளவு பெரிய பயங்கரமான பொருளாதார விளைவுகளை ஏற்படுத்துகிறது.

என்பதை உணரமுடியாமல் செய்கிறோமோ என்ற ஐயப்பாடு ஏற்படுகிறது. அவ்வளவு கோடி ரூபாயை கட்டடங்களிலும், ஸ்காலர்ஷிப் போன்றவற்றுக்கும் செலவழிக்கிறோம். மாணவர்களின் வசதிக்காகச் செலவழிக்கிறோம். அந்த மாணவர்கள் வெளியே வரும்போது நாட்டின் உற்பத்திப் பெருக்கத்திற்கு, பொருளாதார வளத்திற்கு என்ன ஆக்கமும் ஊக்கமும் ஏற்படுகிறது என்பதைக் கணக்கில் எடுத்து ஆராய்வோமானால் பொதுச் செலவினங்களைச் செய்கிற காரணத்தால் பண வீக்கம் ஏற்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

மாநில அரசுக்கு இதிலே இருக்கும் பங்கு நூற்றுக்கு ஒன்று தான். இவ்வளவு பெரிய தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இதை இந்த மன்றத்தில் விவாதிப்பதன் வாயிலாக இதற்கு ஒரு பெரிய முடிவைக் கண்டுவிட முடியுமா என்றால் நிச்சயமாக முடியாது. இது தேசியப் பிரச்சினை. இந்தியா பூராவுக்கும் உள்ள பிரச்சினை. தமிழ்நாட்டோடு அடங்கிவிடக் கூடிய பொருளாதாரம் இல்லை. சட்டங்கள் இருக்கின்றன. திட்டங்கள் இருக்கின்றன. பொருளாதார விளைவுகளைக் கருத்தில் கொண்டு தமிழ்நாட்டிலே இருந்து நாம் எந்தத் தடையையும் செய்துவிட முடியாது. அப்படித் தடை செய்தாலும் மத்திய அரசு இருக்கிறது நம்மைத் தடை செய்ய.

புஞ்சை தானியங்கள் நாட்டு மக்களுக்கு, குறிப்பாக தென் மாவட்டங்களில் வாழ்கிற மக்களுக்குப் பிரதான உணவு. அதை வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லக்கூடாது என்று தடை விதிக்க தமிழக அரசு விரும்பினால் அத்தகைய தடையை விதிக்கக் கூட அதிகாரம் இல்லையென்று மத்திய அரசு தடுத்து விடுகிறது. இதனால் இங்கிருக்கின்ற புஞ்சை தானியங்கள் வெளி மாநிலங்களுக்குச் செல்ல இங்கே இருக்கின்ற மக்கள் அரிசியை நாட வேண்டியிருக்கிறது. வேறு வழி இல்லை. ஆகையால், அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதன் வாயிலாகச் சில சில பிரச்சினைகளைத் தடுத்துவிட முடியும், நிவர்த்தி செய்ய முடியும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

இதன் வாயிலாக ஒரு நிவாரணம் கிடைக்கும் என்று விரும்பினால் தவறு. மத்திய ஆட்சியில் இருக்கிற சில திட்டங்களை மாற்றியமைக்க வேண்டும். மத்திய ஆட்சியில் இருக்கிற இண்டஸ்ட்ரியல் பாலிஸி ஆப் தி கவர்ன்மெண்ட் ஆப் இந்தியா என்ற பாலிஸியைக் கூட மாற்றியமைக்காவிட்டால் தமிழ்நாட்டில்



எவ்வளவு சிறப்பான திட்டங்களை வகுத்தாலும் உங்கள் திட்டங்கள் தமிழ்நாட்டில் வாழ்கிற மக்களின் பொருளாதார வளத்தை நிச்சயமாக வளர்க்க முடியாது.

இந்தியா முழுவதற்குமாக தீட்டப்படுகிற திட்டம் மத்திய அரசால் தீட்டப்படுகிறது. அவர்கள் தீட்டும் திட்டங்கள் வாயிலாக, அவர்கள் நிறைவேற்றுகிற திட்டங்களின் வாயிலாக ஆயிரம் ஆயிரம் கோடி ரூபாய் விடப்படுகிறது. அதன் விளைவுகள் என்ன என்று தெரியாமல் செலாவணியை விட்டிருக்கிறார்கள். அதனுடைய பொருளாதார விளைவுகளைக் கவனிக்காமல் செய்கிறார்கள். (குறுக்கீடு.) மத்திய அரசு என்று சொன்னவுடன் அம்மையாருக்கு கோபம் வருகிறது. இது ஒரு அரசியல் பிரச்னை அல்ல; இது ஒரு பொருளாதார பிரச்னை. இதைக் குறுகிய எண்ணத்தில், கட்சி அடிப்படையில் பார்க்கவேண்டிய அவசியமில்லை. தமிழ்நாட்டில் ஒருவர் ஆட்சியில் இருக்கலாம், மத்தியில் ஒருவர் ஆட்சியில் இருக்கலாம். ஆனால், பொருளாதாரம் என்பது நீடித்திருக்கக்கூடிய ஒரு நிலை.

இன்று நாம் செலவினங்களைச் செய்யும்போது விளைவுகளைக் கண்டுபிடிக்காமல், திட்டங்களைத் தீட்டி உணர்ச்சிபூர்வமான பிரச்னையாகக் கருதி அவற்றை நடத்திக் கொண்டு வருகிறோமே தவிர திட்டங்களின் உண்மை நிலையை அறிந்து திட்டங்களைத் தீட்டுகிறோமா என்றால் அப்படிப்பட்டதொரு நிலை இல்லாமல் இருக்கிறது. இதற்குக் காரணம் அரசியல். அரசியலில் பொருளாதார அடிப்படையில் திட்டங்கள் தீட்டும் நிலைமை இன்று இல்லை. அரசியல் நிலைமை மாறும்போது, மத்திய அரசாக இருந்தாலும் சரி, அல்லது மாநில அரசுகளாக இருந்தாலும் சரி அரசியல் அரங்கத்தின் தேவைகளுக்கு ஏற்ப திட்டங்களை நாம் தீட்டுகிறோம். பொருளாதார நிலையை நாம் பார்ப்பதில்லை. ஆகவேதான் இத்தகைய பிரச்னைகள் ஏற்படுகின்றன.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் பேசும்போது நான்-டெவலப்மெண்ட் ஸ்கீம்களுக்கு அதிகத் தொகை ஒதுக்குவதனால் பண வீக்கம் ஏற்படுகிறது என்ற மாதிரி சொல்கிறார்கள். கல்விக்கு 140 கோடி ரூபாய் ஒதுக்குவதுதான் பண வீக்கத்திற்குக் காரணம் என்ற கருத்தை சொன்னார்கள். கல்விக்காகச் செலவழிக்கப்படுவது நான்-டெவலப்மெண்ட் ஸ்கீமா, அல்லது டெவலப்மெண்ட் ஸ்கீமா என்று தெரிவிப்பார்களா?

[1974 டிசம்பர் 21

**திரு. எம். ஏ. லத்தீப்:** மிகப் பெரிய கேள்வியை நான் முடிக்கும் தறுவாயில் கேட்கிறார்கள். உறுப்பினர்கள் சீக்கிரம் முடியுங்கள் என்று என்னை நெரிக்கிறார்கள், என்னை கெரோ செய்கி றார்கள். (சிரிப்பு.) கல்விக்காகச் செலவழிப்பது டெவலப்மென்ட் தான். அது நான்-டெவலப்மென்ட் என்பதில் வராது. அதன் விளைவுகளை ஆராயாமல், மாற்றுத் திட்டங்கள் வகுக்காமல் செய்வதன் காரணத்தினால் விளைவுகள் பயங்கரமாக இருக்கின்றன என்று சொன்னேனே தவிர அதை நான்-டெவலப்மென்ட் ஆக்டிவிட்டி என்ற அளவில் நான் சொல்லவில்லை.

இன்றிருக்கிற பொருளாதாரக் கொள்கைகளையும், அமைப்பு களையும் மத்தியில் இருப்பவர்களும் மற்றவர்களும் மாற்றியமைக் காத வரையில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள், சர்க்கார் நிறுவனங்கள் மூலம் பங்கீடு செய்வதால் விலைவாசிகள் குறைந்து மக்கள் வாழ்க்கையில் வளமும் மகிழ்ச்சியும் ஏற்படும் என்று நினைப்பது தவறு. அடிப்படையான சில திட்டங்களை வரை யறுத்துத்தான் இப்படிப்பட்ட திட்டங்களைத் தீட்டவேண்டும். ஜனநாயக நாட்டில் ஆட்சித் துறையின் சார்புடைய சில நிறுவனங் களால் நடத்தப்படுகிற சில காரியங்களைப் பார்க்கிறோம். பல க்வாஸி கவர்ன்மென்ட் பாடீஸ் என்று சொல்லி நடத்துகிறார்கள். அவற்றின் பொறுப்பிலுள்ளவை எத்தன்மையில் இருக்கின்றன என்பதை இந்த அவையிலும் மற்ற அவைகளிலும் சுட்டிக்காட்டப் பட்டிருப்பதைப் பார்க்கிறோம். நாட்டின் மிகப் பெரிய பங்கீட்டுத் திட்டத்தை முழுமையாக ஆட்சிக்கே விட்டுவிட்டு அதன் வாயிலாக பங்கீடு செய்வதால் நாட்டின் நிலை சீர்பட்டுவிடும் என்று நாம் எதிர்பார்ப்பது நாம் உண்மை நிலையை உணராத ஒரு போக்காகும் என்ற அளவிற்கு மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பரீட்சார்த்தமாக சில திட்டங்களை வகுத்து, நியாயவிலைக் கடைகள் என்று சொல்லப்படுவதன் மூலமாக ஒட்டுமொத்தமாக பொருள்களை சேகரித்து, மொத்த வியாபாரிகள் மீது அதிகம் கண்ட்ரோலும் கண்டிப்பும் வைத்து அவர்கள் வாயிலாக சில திட் டங்களை பங்கீட்டு முறை மூலம் நடத்துவது முதல் படி. அப்படிச் செய்வதன் மூலம்தான் நாட்டின் நிலை சீர்படுமே தவிர திடீரென்று ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்து வியாபாரிகளை எல்லாம் அகற்றி விட்டு அரசாங்கமே எல்லாவற்றையும் ஏற்று நடத்துவது என்றால் அது நிச்சயமாக முடியாது. வியாபாரிகளை எடுத்துவிட்டால் யார் சேல்ஸ் டாக்ஸ் கட்டுவது, வியாபாரிகளை எடுத்துவிட்டால்



1974 டிசம்பர் 21] [திரு. எம். ஏ. லத்தீப்]

யார் இன்கம் டாக்ஸ் கட்டுவது? வியாபாரிகளை எடுத்து விட்டால் நாட்டிலே நடக்கிற பொருளாதார காரியங்களை ஆற்றுவது யார்? உங்களுக்கு டாக்ஸே வராது. அதிகாரிகள் எல்லாம் உட்கார்ந்து விடவேண்டும். இன்கம் டாக்ஸ் ஆபீசர்கள், சேல்ஸ் டாக்ஸ் ஆபீசர்கள், அஸெஸிங் அத்தாரிட்டீஸ் போன்றவர்களுக்கே தேவை இல்லை என்ற நிலை உருவாகும்.

எனவே, ' வியாபாரிகள் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டு தாழ்த்துவது என்பது கூடாது. வியாபாரிகளும் பொறுப்புணர்ச்சி யோடு நடந்து கொள்ளவேண்டும். இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருப்பதன் காரணமே சில வியாபாரிகள் செய்கிற தில்லு முல்லுகள் காரணமாக, அவர்கள் தவறுகள் செய்கிறார்கள் என்ற அடிப்படையில்தான் இந்தத் தீர்மானம் உருவாகியிருக்கிறது. வியாபாரிகளும் அவர்களின் பொறுப்புகளை உணர்ந்து பொறுப்பு ணர்ச்சியோடு நடந்துகொண்டால், செய்கிற வியாபாரத்தில் நியாய மான லாபத்தை மட்டும் எதிர்பார்த்து, கொள்ளை லாபம் பெற விரும்பக் கூடாது என்ற அடிப்படையில் வியாபாரிகளும் நியாய உணர்ச்சியோடு நடந்துகொண்டால் நாட்டில் இத்தகையதொரு எண்ணம் உருவாகாது. இல்லை, அவர்கள் அப்படி கொள்ளை லாபத் திற்காக இருப்பார்களேயானால் அவர்களை அழிக்க மிகப் பெரிய புரட்சி ஏற்படும். அதுதான் இந்தத் தீர்மானத்தின் நோக்கம் என்றால், அந்த அளவிற்கு அது இருந்தால் அதை ஆதரித்து அமர் கிறேன்.

**திரு. நா. வெ. குருசாமி:** தலைவர் அவர்களே, திரு. பழனிசாமி அவர்கள் கொடுத்திருக்கிற தீர்மானத்தின் மீது எனது சில கருத் துக்களை கூற விரும்புகிறேன்.

குறிப்பாக, அவர்களுடைய தீர்மானத்தில் அரிசி மற்ற நவ தானியப் பொருள்களை எல்லாம் சர்க்கார் கொள்முதல் செய்து ஏழை மக்களுக்குக் கொடுக்கும் விதத்தில் வியாபாரிகளுக்கு அந்த வியாபாரத்தை விட்டுவிடாமல் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விநியோகிக்கப்பட வேண்டும் என்று அவர்கள் தீர்மானத்தில் குறிப் பிட்டிருக்கிறார்கள். இந்தத் தீர்மானம் மிகவும் முக்கியமான ஒரு தீர்மானமாகும். அம்மாதிரி செய்தால் ஏழை மக்கள் நல்ல முறையில் அரிசி வாங்கி உண்ண முடியும். தனியார்களிடம் இந்த வியாபாரத்தை விட்டு விட்டு இந்த முறையில் படி அரிசி ஒரு

ரூபாய் அல்லது இரண்டு ரூபாய் என்று நிர்ணயம் செய்து அந்த அடிப்படையில் விநியோகம் செய்யவேண்டும் என்று சொன்னால் அவர்கள் சரியான முறையில் விநியோகம் செய்ய மாட்டார்கள். காரணம், இரண்டு மூன்று நாட்களில், நம் முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்தவுடன் பல மாவட்டங்களில் இன்று அரிசி தனியார் கடைகளில் கிடைக்கவில்லை என்ற தகவல் வந்திருக்கிறது.

எனவே, நம் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் இன்றுள்ள வறட்சி நிலைமையில் அதை மனதில் கொண்டு இந்த அரசு கூட்டுறவு சங்கங்கள் மூலம் சீரான முறையில் விநியோகம் செய்யவேண்டும். அப்படி விநியோகம் செய்யும்போது எந்த முறையில் விநியோகம் செய்ய வேண்டுமென்றால் இப்போது கூட்டுறவுச் சங்கங்கள், குறிப்பாக உரம், சர்க்கரை, மண்ணெண்ணெய் போன்ற பொருள்கள் விநியோகம் செய்யும் கூட்டுறவுச் சங்கங்கள் பத்து மைல் தொலைவில் இருக்கின்றன. இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வந்தால்தான் பொருள்கள் கிடைக்கும் என்ற அவல நிலை இருக்கிறது. அப்படி அல்லாமல் நாம் போலிங் ஸ்டேஷன் ஏற்படுத்துகிறோமே அதேபோல் 500 மக்களுக்கு ஒரு நியாயவிலைக் கடை என்ற முறையில் நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டு பொருள்கள் விநியோகிக்கப்படவேண்டும். இந்த வறட்சி நிலையில் அதை நல்லமுறையில் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குறிப்பாக சிமெண்ட் பற்றி தீர்மானத்தில் கூறியிருக்கிறார்கள். சிமெண்ட் விநியோகம் சரியான முறையில் இல்லை. தனியார்கள் கடையில் ரூ. 20 விற்கிறது. இன்னொரு கடையில் ரூ. 21 விற்கிறது. மற்ற ஊராட்சி ஒன்றியங்களில் ரூ. 20-க்கு விற்கிறார்கள். ஆனால், அவர்கள் நியாயமாக விற்க வேண்டிய விலை ரூ. 18 என்று சொல்லப்படுகிறது. அப்படியிருந்தும் அநியாயமாக கொள்ளையடிக்கவேண்டும் என்கின்ற ஒரு எண்ணத்தின் பேரில்தான் இம்மாதிரி அதிக விலைக்கு விற்கப் படுகிறது. ஆகவே, இதை சர்க்கார் கட்டுப்படுத்த வேண்டும்.

மண்ணெண்ணெய், சர்க்கரை போன்ற அத்தியாவசியமான பண்டங்களை கூட்டுறவு சங்கங்களின் மூலம் விநியோகம் செய்கிறோம். பத்து மைல்களுக்கு அப்பால், நான்கு மைல்களுக்கு அப்பால் கிராமப்புறங்களில் ஒரு கூட்டுறவு சங்கம் இருக்கும்.



கிராம மக்கள் அவ்வளவு தொலைவில் உள்ள கூட்டுறவு சங்கத்திற்குச் சென்று வாங்கவேண்டிய அவல நிலை இருக்கிறது. ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கூட்டுறவுச் சங்கமாவது ஏற்படுத்தவேண்டும். அப்படி ஏற்படுத்த முடியவில்லை என்றால் மண்ணெண்ணெய், சர்க்கரை போன்ற அத்தியாவசியமான பண்டங்களை விநியோகிக்கும் பொறுப்பை அங்கிருக்கும் ஒரு தனியார் கடைக்காவது ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

உரத்தைப்பற்றி கடந்த நான்கு நாட்களாக நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். உரம் சரியான முறையில் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக விநியோகிக்கப்படவில்லை, அது ஏழை விவசாயிகளுக்கு ஒழுங்கான முறையில் போய்ச் சேரவில்லை. ஆகவே, இந்த உரம் போன்ற அத்தியாவசியமான பண்டத்தை கூட்டுறவு சங்கங்கள் மூலமாக சரியான முறையில் விநியோகம் செய்வதற்கு நமது உணவு அமைச்சர் அவர்கள் தக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பூச்சி கொல்லி மருந்துகளைப் பொறுத்தவரையில், அவை பல இடங்களில் விற்கப்படுகின்றன. அதையெல்லாம் நமது சர்க்கார் மூலமாக கொள்முதல் செய்து, எல்லாவற்றையும் டிபார்ட்மெண்ட் மூலமாகத்தான் விற்கவேண்டும் என்பதற்கான ஏற்பாட்டையும் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆகவே, திரு. பழனிசாமி அவர்கள் கொண்டு வந்த இந்தத் தீர்மானம் ஏழை மக்களுக்கு பயன்படக்கூடிய ஒரு நல்ல தீர்மானம் என்று கூறி, அதை ஆதரித்து, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. ஆலடி அருணா:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தத் தனி நபர் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

இந்தத் தீர்மானம் ஏன் கொடுக்கப்பட்டிருக்கிறது, இப்படி தீர்மானம் கொடுக்கவேண்டிய நிலை ஏன் ஏற்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்கும்பொழுது, தற்பொழுது விநியோகத்தில் இருக்கிற பலஹீனங்கள், குறைபாடுகள், தவறுகள் இவற்றின் காரணமாகத்தான், தனிப்பட்ட வியாபாரிகள் நாட்டில் முறையாகவும், சரியாகவும் நடந்துகொள்ளவில்லை என்பதன்

காரணமாகத்தான், அரசாங்கமே வியாபாரத்திற்கு பொறுப் பேற்றுத் தீரவேண்டிய நிர்ப்பந்தத்தை உண்டாக்கவேண்டும் என்ற அவசியத்திற்கு எதிர்க்கட்சிகள் உள்ளாகியிருக்கின்றன.

எனவே, வர்த்தக சூதாடிகள், சமுதாயத்தில் இருக்கிற பலஹீனங்களை பயன்படுத்திக்கொண்டு, சமுதாயத்தில் இருக்கிற பற்றாக்குறையை பயன்படுத்திக்கொண்டு, சட்டத்திலுள்ள சந்து பொந்துகளில் நுழைந்து கோடிக்கணக்கான ரூபாயை சம்பாதிக் கக்கூடிய சூழ்நிலையை பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். எனவே தான் வியாபாரிகளுடைய கொடுமையின் காரணமாகவும், தனிப்பட்ட முதலாளிகளின் ஆதிக்கத்தின் காரணமாகவும், ஏழை எளிய பாட்டாளி மக்களுக்கு, அரசாங்கம் என்ன தான் உத்தரவு போட்டாலும், என்னதான் நடவடிக்கை எடுத்தலும், எவ்வளவு தான் தீவிரமான முயற்சிகளில் ஈடுபட்டாலும், எதிர்பார்த்த பலனை நம்மாலே பெற முடியவில்லை. எனவே, இப்படிப்பட்ட சூழ்நிலைக்கு அரசாங்கத்தினுடைய தற்போதைய கொள்கையும் காரணம் என்பதையும் நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை.

அரசாங்கம் விலைவாசியைக் கட்டுப்படுத்தி, இன்றியமையாத பொருள்களை ஏழை எளிய மக்களுக்கு குறைந்த விலையில் நியாயமான விலையில் கொடுப்பதற்கு முயற்சி செய்யவில்லை என்று தான் சொல்லவில்லை. அந்த முயற்சி வெற்றி பெறவில்லை, முறையாக செயல்படுத்தப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் அரசாங்கத் திற்கு உணர்த்தவேண்டும் என்று தான் கூறுகிறேன். இன்றைக்கு இருக்கிற நெருக்கடியை ஏற்றுத் தீரவேண்டிய பொறுப்பு இந்த அரசாங்கத்திற்குக் கட்டாயம் இருக்கிறது. அரசாங்கம் அத்தியாவசியமான பொருள்களை தானே வாங்கி வாணிபம் நடத்தவேண்டிய பொறுப்பில் தள்ளப்பட்டிருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். ஜனநாயகத்தில் சில பலஹீனங்கள் இருக்கின்றன. மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கவேண்டும், உற்பத்தியை அதிகரிக்க வேண்டும், உற்பத்தியை அரசாங்க ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரவேண்டும், அல்லது விநியோகத்தை அரசாங்கத்தின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரவேண்டும். உற்பத்தியின் ஒரு பகுதியை கையில் வைத்துக்கொண்டு, விநியோகத்தில் ஒரு பகுதியை கையில் வைத்துக்கொண்டு செயல் பட்டால் நாம் எதிர்பார்த்த பலன் நம்முடைய திட்டங்களினால் பெற முடியாது. அத்தியாவசிய பண்டங்களைப் பொறுத்த வரையில்



அரசாங்கம் உற்பத்தியை முழுவதையும் தன்னுடைய ஆதிக்கத்தில் வைத்துக்கொள்ள முடியுமா என்றால் நிச்சயமாக முடியாது. ஆனால், நிச்சயமாக விநியோகத்தை வைத்துக்கொள்ள முடியும். எனவே தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தீர்மானத்தை இந்த அரசாங்கம் ஏற்கவேண்டும் என்று நான் வேண்டிக் கொள்கிறேன்.

இது ஏதோ எதிர்க்கட்சியினரால் தரப்படுகின்ற கொள்கை என்று அரசாங்கம் இதை அலட்சியப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. காரணம் இதே கொள்கையை அண்ணாவின் தலைமையில் தி.மு.க. இயங்கிய காலத்தில் மிகத் தெளிவாக இந்த மன்றத்தில் விளக்கியிருக்கிறார்கள் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள். அவர்கள் 1959-60-ம் ஆண்டில் இதே மன்றத்தில் பேசும்பொழுது தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

> 'இரண்டு லட்சம் டன் தானியத்தை மட்டுமே சர்க்கார் கொள்முதல் செய்து வியாபாரம் செய்வது என்று முடிவு செய்வது எங்களால் கண்டிக்கக்கூடியது. பாதிக் கிணறு தாண்டுவது போலத்தான் இந்த இரண்டு லட்சம் டன் உணவு தானியத்தை சர்க்கார் கொள்முதல் செய்வது என்பதாகும். மொத்தத்தில் எடுத்து, பொறுப்புள்ள அதிகாரியிடத்தில் ஒப்புவித்து நிர்வாக ஊழல் மலியாத நிலையில் அந்த வியாபாரத்தை நடத்தவேண்டும் என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.'

என்று மாண்புமிகு கலைஞர் அவர்கள் எதிர்தரப்பில் இருக்கும் பொழுது மிக அருமையாக விளக்கியிருக்கிறார்கள். ஆகவே, உணவு அமைச்சர் அவர்கள், கலைஞர் அவர்கள் அப்பொழுது குறிப்பிட்டது போல், பாதிக் கிணறு தாண்டாமல் முழுக் கிணறும் தாண்ட வேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** நான் தாண்ட வில்லை, அப்படியே தான் இருக்கிறேன்.

**திரு. ஆலடி அருணா:** தாண்டுகிறது என்ற அந்த வார்த்தையை வைத்துக்கொண்டு தாண்டவம் ஆடவேண்டியதில்லை. நான் கொள்கை ரீதியாக சொல்கிறேன். இதை கலைஞர் அவர்கள் மட்டும் சொல்லவில்லை. நம்முடைய நாவலர் கூட எதிர்க்கட்சித்

[திரு. ஆலடி அருணா] [1974 டிசம்பர் 21

தலைவராக இருந்தபொழுது இதே கருத்தை வற்புறுத்தி யிருக்கிறார் :

"இன்றியமையாத பண்டங்கள் திரட்டி மக்களுக்கு வழங்குவதில் ஈடுபட்டிருக்கிறவர்கள் செய்யும் குற்றங்கள் காரணமாகத் தான் விலைவாசி உயருகிறது என்று ஒரு காரணம் சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத பண்டங்களைத் திரட்டி வழங்குகின்ற பொறுப்பு அளிக்கப்பட்ட தனிப் பட்டவர்களிடம் இல்லாமல் அரசாங்கமே அந்தப் பொறுப்பை ஏற்று, அந்தக் குற்றங்கள் நடைபெறாமல் திறமையான முறையில் நிர்வகிக்கும் முறையில் ஏற்பாடுகளை செய்ய முயல வேண்டும்."

நாவலர் கருத்து நஞ்சாக இருக்குமா? கலைஞர் அவர்களுடைய கருத்து கழிக்கக்கூடியதா? ஆகவே, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சியின் சார்பில் தீர்மானம் தரப்படுகிறது என்று எண்ணாமல், கடந்த காலக் கொள்கையை கவனத்திற்குக் கொண்டுவருகிறார்கள் என்பதை மனதில் கொண்டு கடமையாற்ற முன்வரவேண்டும் என்று கூறி, விடைபெறுகிறேன்.

**திரு. கே. கந்தசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, சபையின் முன்பு கொண்டுவரப்பட்டுள்ள இந்தத் தனி நபர் தீர்மானத்தை என்னுடைய கட்சியின் சார்பாக எதிர்த்து சில கருத்துக்களைச் சொல்வதற்கு முற்படுகிறேன். அத்தியாவசியமான பண்டங்களின் வியாபாரத்தை அரசு ஏற்று, மக்களுக்கு அவைகளை விநியோகம் செய்யவேண்டும், அந்தப் பொறுப்பை உடனடியாக நடை முறைக்குக் கொண்டுவரவேண்டும் என்ற கருத்தை வற்புறுத்தி யிருக்கிறார்கள். அது நல்ல கருத்து என்பதை சாதாரணமான நிலையில் இருக்கும்பொழுது நாம் ஒத்துக்கொள்ளலாம். இன்று பரீட்சார்த்தமாக கடந்த 25 ஆண்டு காலமாக நமக்கு சுதந்திரம் கிடைத்த பிறகு சோஷலிஸத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற குறிக்கோளோடு பல ஸ்தாபனங்களை, தனியார் ஸ்தாபனங்களை எல்லாம் அரசு மேற்கொண்டு, பொது உடைமை ஸ்தாபனங்களாக ஆக்கி, நடைபெறுகின்ற நிலைமைகளைப் பரிசீலித்துப் பார்க்க கடமைப்பட்டிருக்கிறோம்.

ஏதோ காரணத்திற்காக மக்களுக்கு அதிக நன்மை கிடைக்கும் என்ற ஆர்வத்தின் காரணமாக, இருக்கிற எல்லாத் துறைகளையும் அரசே ஏற்று நடத்தவேண்டும் என்றால், மனிதனின் மனப்போக்கு



1974 டிசம்பர் 21] [திரு. கே. கந்தசாமி]

நிலை மாறாமல் இருக்கும்பொழுது, எதிர்பார்த்த அளவுக்கு மக்கள் மாற்றத்திற்கு தகுதி இல்லாத நிலையில் இருக்கக்கூடிய காரணத்தினால் எல்லா வியாபாரத்தையும், அத்தியாவசியப் பொருள்களின் வியாபாரத்தையும் அரசே ஏற்று நடத்துவது என்பது இயலாத காரியம். அப்படி ஆசைப்பட்டு முயன்றால், மாண்புமிகு உறுப்பினர் ஆலடி அருணா அவர்கள் கூறியதுபோல, அது தான், அரைக் கிணறு தாண்டியதற்கு ஒப்பாகுமே ஒழிய, வேறு ஒன்றுமில்லை. ஆகவே, அதைச் செய்யாமல் 'ஸ்லோ பட் ஸ்டடி' என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள், நாம் மெதுவாக இருந்தாலும் அதை நிதானம் தவறாமல் மக்களுக்கு இன்னல்கள் ஏற்படாத வகையில், நன்மை பயக்கத்தக்க வகையில் பரிசீலனை செய்து பார்த்து, செயல்படவேண்டும் என்ற கருத்தை வற்புறுத்திக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு என்றுமே இல்லாத கடுமையான ஒரு நிலை நாட்டை எதிர்நோக்கியிருக்கிறது. மக்களுடைய உயிர்ப் பிரச்னையாக உணவுப் பிரச்னை மாறியிருக்கும்பொழுது யாருக்கும் பாதகம் ஏற்படாத முறையில் செயல்படவேண்டும். உணவுப் பொருள்களை, அத்தியாவசியப் பண்டங்களை அரசு கூட்டுறவுத் துறை மூலம் வழங்கும்பொழுது, எதிர்க்கட்சியினர்களும், மற்ற கட்சியினர்களும், கிராமப் பிரமுகர்களும் கொண்ட ஒரு உஷார் கமிட்டி போட்டு எந்தத் தவறுகளும் நடக்காத அளவுக்கு விநியோகம் செய்யவேண்டும் என்ற கருத்தும் அரசுக்கு வழங்கப் பட்டிருக்கிறது. சில ஸ்தாபனங்களில் நடைமுறையில் அந்த நிலையை கலெக்டர்கள் போன்றவர்கள் வலியுறுத்திச் செயல்பட்டு வருகிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதை நடைமுறையில் மாநில அளவில் நல்ல முறையில் செயல்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 6-00)

இப்படி அதை நாம் செய்து முடித்த பின்னால், அதில் நடை முறையில் வெற்றி கண்ட பின்னால், மற்ற அத்தியாவசிய பொருட் களையும் ஏற்று நடத்துவது சிறந்தது என்ற நிலையை விளக்கி இப்போது அத்தியாவசிய பொருட்கள் வியாபாரத்தை அரசு ஏற்று நடத்தத் தேவையில்லை என்றும், தனிப்பட்ட நபர்களை செய்யவேண்டுமென்றும் நான் கூறுகிற நேரத்தில், தனிப்பட்ட நபர்கள் பண்ணுகிற தவறுகளை அரசாங்கம் பார்த்துக்கொண்டு சும்மாயிருக்கக் கூடாது.

[திரு. கே. கந்தசாமி] [1974 டிசம்பர் 21

ரஸ்கின் என்ற பேரறிஞர் 'அன் டு தி லாஸ்ட்' என்ற புத்தகத்தில் குறிப்பிடுகிறார். 'நோபிளஸ்ட் புரொஃபெஷன் இன் தி வோர்ல்டு—ஐடியலிஸ்ட்டிக் வோர்ல்டு' என்று குறிப்பிடுகிறார். நம்முடைய லத்தீப் அவர்கள் சொல்கிறபோதுகூட சொன்னார்கள். 'உட்டோப்பியன் தியரி' என்று சொல்வார்கள் ஆங்கிலத்திலே. இவர்கள் சர்க்காருக்கு மதிப்பு வைத்து செயல்படவேண்டும். 'சர்வீஸ் டு தி சொசைட்டி' என்ற மென்டாலிட்டியோடு செயல் படுகிறபோது வியாபாரிகளை நாம் நம்பலாம்.

இன்றைய நிலைமையில் வியாபாரிகள் எப்படியும் லாபம் சம்பாதிக்கவேண்டுமென்று பார்க்கிறபோது அவர்களை அரசு மிகவும் கண்காணிப்போடு கவனித்து தவறுகள் அல்லது மக்களுக்கு விரோதமான முறையில் செயல்களைச் செய்கிறபோது கடுமையான தண்டனைக் கொடுக்கும் வகையில் சட்டத்தை மாற்ற வேண்டியிருந்தாலும் மாற்றலாம் என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். கலப்படம் செய்தால் மிகவும் கடுமையாக தண்டிக்கவேண்டும்.

உணவுப் பொருளைப் பொறுத்தவரையில் விவசாயிகளுக்குப் பாதுகாப்பு இருக்கிறதா என்று பார்த்தால் கலைஞர் அவர்கள் நல்ல முறையிலே அறிவித்தார்கள். அது மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால் கிராமப் புறங்களில் நேற்றையதினம் நான் பார்க்கிறபோது நியாயமான விலைக்கு அவர்கள் விற்கமுடியாது என்று அஞ்சுகிற நிலைமை இருக்கிறது. அரசு குறிப்பிட்ட விலைக்கு மேல் விற்றாலும், அல்லது குறைந்த விலைக்கு விற்றாலும் அவர்களுக்கு ஆபத்து என்ற நிலைமை இருக்கிறது. It is indirect enforcement of compul-sory ale upon the agriculturints who form the majority in the society. ஆக, சமுதாயத்தில் பெருவாரியாக இருக்கிற ஏழை விவசாயிகள்மீது கட்டாய விற்பனைக்கு நிர்ப்பந்தம் மறைமுகமாகத் திணிக்கப்பட்ட சட்டமாகும் என்று அவர்கள் அஞ்சுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு இழைக்கப்பட்டிருப்பது நியாயம்தானா என்று அரசு கருணை கூர்ந்து பரிசீலிக்கவேண்டும். நியாயமில்லை என்று கூறுகிறார்கள். நானும் அப்படித்தான் நினைக்கிறேன். சம்சாரிகள் தங்களுடைய நெல்லை விற்கவேண்டிய நிலை ஏற்பட்டால் அந்த நிலையில் சட்டத்தைத் தளர்த்தி அவர்களுக்குப் பாதுகாப்பு தரவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன், வணக்கம்.



1974 டிசம்பர் 21]

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த முக்கியமான தீர்மானத்திலே நானும் என் கட்சி சார்பாக ஒரு சில கருத்துக்களை கூற முற்படுகிறேன். இந்தத் தீர்மானத்தைக் கொள்கை அளவிலே நான் ஒப்புக்கொள்கிறேன். இதை எப்படி நடைமுறையிலே அமுல்படுத்த வேண்டுமென்பதைப் பற்றி மிகவும் உன்னிப்பாக கவனிக்க வேண்டிய பிரச்னையாக இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

அரசு வாணிபம் என்று சொன்னால் உடனே பொது மக்களுக்கு ஆபத்து வந்துவிடுகிறது என்பதை ஒருபுறம் வைத்துக் கொண்டு இன்று வாங்கிச் சாப்பிடுகிற மக்களின் கஷ்டம், இன்னல்களை மனதிலே வைத்துக்கொண்டு இதை ஆற அமர சிந்தித்து அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும். எப்படி கோதுமை வியாபாரத்தை முழுமையாக ஏற்றுக்கொள்கிறோம் என்று மத்திய அரசாங்கம் சொல்லி கடைசியில் வர்த்தக சூதாடிகளுடைய நிர்ப்பந்தத்தால் விட வேண்டி வந்ததோ, அதே மாதிரி தமிழக சர்க்காரும் விட்டு விடக்கூடாது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

நாட்டிலே இருக்கிற உணவுப் பிரச்னை மிகவும் மோசமாக இருக்கிறது. தமிழ் மாநிலம் உபரி மாநிலம் என்று பெருமிதத்தோடு கூறிவந்த நமக்கு இன்றைய தினம் மத்தியிலேயிருந்து உணவுப் பொருளைக் கோரி பெறவேண்டிய நிலை இருப்பதைப் பார்க்கிறோம். இப்போதிருக்கிற நிலவரத்தில் வறட்சி நிலைமை இன்னும் கடுமையாக இருக்குமென்று நினைக்கிறேன். அண்மையிலே நம்முடைய மத்திய அமைச்சர் உயர்திரு ஜகஜீவன் ராம் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதை இந்த அவைத் தலைவருடைய அனுமதியோடு கூறுகிறேன். பாட்னாவிலே அக்டோபர் 20-ந்தேதி

'Patna, October 20.—Addressing the concluding two-day session of the Bihar Anti-Fascist convention, Thiru Jagjivan Ram is reported to have said :—

" At least I cannot assure you a full meal but I can assure you that no one will be allowed to die of starvation ".' அதாவது ஒரு நாள் ஒரு வேளை உணவிற்கு மாத்திரம் உத்திரவாதம் அளிக்கலாமே தவிர அதையும் நிச்சயமாக அளிக்க முடியுமா என்ற ஐயப்பாட்டோடு கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 டிசம்பர் 21

அது மட்டுமின்றி யாரையும் பட்டினி சாவு ஏற்படுவதற்கு அனுமதிக்க மாட்டேன் என்ற பயங்கரமான கருத்தைக் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தமாதிரி நிலைமை இருக்கிற நேரத்தில் நாட்டிலே நாம் என்ன செய்ய வேண்டுமென்று பார்க்கவேண்டும். மேல்நாட்டிலே அதுவும் அமெரிக்காவிலே பி.எல். 480-படி அவர்கள் போடுகிற 'ஸ்ட்ரிங்ஸ்' என்று சொல்கிறார்களே அது தேவைதானா என்று நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். உலகத்திலேயே அமெரிக்கா, கனடா, அர்ஜென்டைனா, ஆஸ்திரேலியா இந்த நான்கு நாடுகளில் தான் உணவுப் பொருட்கள் அதிகமாக இருக்கின்றன. அங்கு விளைகிற கோதுமையைத்தான் உலகத்திலேயே பல்வேறு பகுதி களுக்கு அவர்கள் கொடுக்கிற நிலைமையைப் பார்க்கிறோம். இந்த நேரத்தில் நாமும் பிச்சைப் பாத்திரத்தை ஏந்திக்கொண்டு அந்த நாடுகளிடம் வாங்குவதற்காகச் செல்லவேண்டியது அவசியம்தானா என்று நாம் பார்க்க வேண்டும்.

இப்போது உற்பத்தி குறைந்திருக்கிறது என்று அரசாங்கப் புள்ளி கூறுகிறது. அதிலும் இன்று 20 லட்சம் டன் துண்டு விழுகிறது என்று அமைச்சரவர்கள் தன் கருத்தைக் கூறி இருக்கிறார்கள். மொத்தமாக 55 லட்சம் டன் என்று கூறினாலும் அதிலே 20 லட்சம் டன் என்று துண்டு விழுகிறது. இந்த நிலையில் நாட்டிலே நாம் என்ன செய்யவேண்டுமென்று ஆராய வேண்டும். சாதாரணமாக இன்றிருக்கிற நமது பொருளாதாரம் புரொடக்ஷன் ஓரியண்டடாக இருந்துகொண்டே இருக்கிறது. இது கன்ஸ்யூமர் ஓரியண்டடாக இருக்கவில்லை என்று பல்வேறு கருத்தையெல்லாம் கூறிக்கொண்டே இருக்கிறார்கள்.

இதில் இருக்கிற இந்த சப்ளை அண்டு டிமாண்ட் அந்த அடிப்படையிலே நாம் பார்க்கிற நேரத்தில் உணவு பங்கீடு அதே மாதிரி அத்தியாவசிய பண்டங்களெல்லாம் இருந்தால் பொருத்தமாக இருக்குமென்று நான் கருதுகிறேன்.

இன்று என். ஜி. ஓக்களைப் பார்த்தால் அவர்கள் டி. ஏயைக் கூட்டவேண்டுமென்றும், வாழ்க்கைப் புள்ளி அடிப்படையிலே கொடுக்க வேண்டுமென்றும் கோருகிறார்கள். என்னைக் கேட்டால் வாழ்க்கைப் புள்ளி அடிப்படையில் டி. ஏயைப் பணமாகக் கொடுப் பதற்குப் பதிலாக அத்தியாவசியப் பண்டங்களை சப்சிடைஸ்டு



1974 டிசம்பர் 21] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

ரேட்டில் முன்பு யுத்த காலத்தில் ரெயில்வே தொழிலாளர்களுக்கு கொடுத்தார்களே. அதே மாதிரி கொடுப்பதுதான் பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். இன்று நாட்டிலே பார்த்தால் அரிசி, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் ஒன்றுமே மலிவான விலையில் கிடைக்கவில்லை. ஆகையினால் இந்த மாதிரி நெருக்கடி நிலைமை வருகிற நேரத்தில் நாமும் சிரத்தை யோடு காரியங்களை ஆற்றவேண்டும். ஊதாரித் தனமான செலவு களைக் குறைத்துக்கொள்ளவேண்டும். பொருளாதார சித்தாந்தம் என்னவென்றால் 'நான்-புரொடக்டிவ் எக்ஸ்பெண்டிச்சர் ஷுட் பி

அவாய்டட்'—'புரொடக்டிவ் எக்ஸ்பெண்டிச்சர் ஷுட் பி எங்க ரேஜ்ட்' அதாவது புரொடக்ஷன் ஓரியண்டடாக இருக்கவேண்டும். இதற்கு அடிப்படையாக மின்சாரம் இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

மின்சாரம் இன்னும் தட்டுப்பாடாக இருக்கிறது. இன்னும் நாம் கேரளாவிலிருந்து மின்சாரத்தைப் பெறும் நிலையில் இருக்கி றோம். விவசாயிகளுக்கு மின் வெட்டு இல்லை என்று அறிவித் தாலும் போதிய அளவில் மின்சக்தி கொடுக்காத காரணத்தாலே, அவர்கள் விசைத் தடங்களெல்லாம் இயக்கமுடியாத நிலைமையில் இருக்கிறது. ஆகவே அடிப்படையில் மின்சார உற்பத்தியை உயர்த்துவதற்கும், அதே மாதிரி வேறு கன்ஸ்யூமர் குட்ஸ் உற்பத்தி செய்வதற்கும் திட்டங்களை தீட்ட வேண்டும், அப்படித் தீட்டினால் அது தான் மிகவும் பொருத்தமானதாக இருக்குமென்று நான் கருதுகிறேன். யுத்த காலத்திலே என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டதோ, அதே மாதிரி செய்வதுதான் பொருத்தமானதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

இன்று ஏழை மக்கள் எல்லாம் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். "ஏழை என்றும் அடிமை என்றும் எவனும் இல்லை நாட்டில்" என்று கூறியது இன்றைக்கு நமக்கு வேடிக்கையாக இருக்கிறது. இன்றைக்கு நாட்டிலே இருக்கின்ற நிலைமை, உயர்ந்தவனுக்கும் தாழ்ந்தவனுக்கும், இடையிலே இருக்கிற இடைவெளி பெரிதாக இருக்கிறது.

நாம் எல்லோரும் சமதர்மத்தைப் பற்றி அதிகமாக பேசுகிறோம். ஆனால் நாட்டிலே இருக்கிற ஏழை எளிய மக்கள், தொழிலாளர் வர்க்கம் பொருளாதாரத்திலே சிக்கித் தவித்துக்கொண்டிருக்கிற மக்களை முன்னேற்றுவதற்காக இந்தக் காரியங்களைச் செய்வது பொருத்தமாக இருக்கும். ஒரு குறிப்பிட்ட வருவாய் உள்ள

வர்கள் நிச்சயமாக இன்றைக்கு கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஒருவேளை இது பட்டணத்திலே இருக்கிறவர்களுக்குத்தான் என்று யாரும் எண்ணவேண்டாம். கிராமங்களிலே இருக்கிற மக்களுக்கும் இதே நிலைதான்.

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இன்று காலையிலேகூட நான் பேசும்போது குறிப்பிட்டேன். இன்றைக்கு அரசாங்கத்தின் கொள்முதல் விலைக்கும், விற்கின்ற விலைக்கும் அதிக இடைவெளி இருக்கிறது என்று கூறினேன். ஒரு குவின்டால் நெல்லில் 68 அல்லது 65 கிலோ அரிசி கிடைக்கும் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கிறோம். ப்ரொக்யூர்மெண்ட் பிரைஸ் 100 ரூபாய் என்று இருந்தால் அதை அரிசியாக மாற்றி, அரசாங்கம் விற்பனைக்கு நிர்ணயம் செய்திருக்கிற விலை 136 ரூபாய். ஆக 100 ரூபாய்க்குக் கொள்முதல் செய்து, 136 ரூபாய்க்கு விற்கிறது. இவ்வளவு இடைவெளி வேண்டுமா? உற்பத்தி செய்கிறவர்களுக்குக் கட்டுபடியாகக்கூடிய விலை கிடைக்க வேண்டாமா என்று ஆலோசிக்க வேண்டும். ஒரு வேளை இதில் ஏதாவது கஷ்டம் இருந்தால் அவர்களுக்கு சப்சிடி ரேட்டில் உரம், பூச்சிக்கொல்லி மருந்து இன்னும் மற்ற மற்ற பொருட்களை கொடுத்து, உதவி செய்வது பொருத்தமாக இருக்கும். விவசாயப் பெருங்குடி மக்கள் நிச்சயமாக உழைத்தால்தான் இந்த நாட்டிலே பொருளாதார சுபிட்சம் ஏற்படும். ஏர் முனைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று விரிவாகப் பேசுவதற்கு நேரம் இல்லை. ஆகவே, இந்தத் தீர்மானத்தை நான் கொள்கை அளவில் முழுக்க முழுக்க ஆதரிக்கிறேன்.

அரசு வாணிபம் சம்பந்தமாக, காரைக்குடியில் நடைபெற்ற காங்கிரஸ் மகாநாட்டில்கூட, அரசு வாணிபம் வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். எங்கள் கட்சியிலேகூட அரசு வாணிபம் தேவை இல்லை என்று சொல்கிறவர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் நான் தெளிவாகக் கூறுகிறேன். இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையில் நம்முடைய மக்களை ஊக்குவிக்க வேண்டுமானால், ஏழை எளிய மக்கள் வாழ்க்கையில் சுபிட்சம் அடைய வேண்டுமானால், நிச்சயமாக அரசு வாணிபம் செய்து, அத்தியாவசியப் பொருள்களை அரசு விநியோகம் செய்வதுதான் சாலச் சிறந்தது என்ற கருத்தைக் கூறி, இந்தத் தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன். **வணக்கம்.**



**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில் இதைக் கொண்டு வந்தவர்களும், அநேகமாக இதை ஆதரித்துப் பேசியவர்களும் இது சர்க்காருக்கு உகந்த கொள்கைதான் என்று சொல்லியிருக்கிறார்கள்.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னால் இதே மன்றத்தில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்த கொள்முதல் பற்றியும், மக்களுக்குக் கிடைக்கக்கூடிய அத்தியாவசியப் பொருட்களுக்கு அரசு செய்த விலை நிர்ணயம் பற்றியும் ஒரு கொள்கையை வகுத்து, அதை மாண்புமிகு உறுப்பினர்களின் விவாதத்திற்காக வைத்தார்கள். என்றாலும் அதற்கு முன்பே மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்துவிட்டதால், தனியார் தீர்மானம் நடக்காது ஒரு நாள் போய்விட்டது என்ற காரணத்தால், மீண்டும் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்து, பல கருத்துக்களைச் சொல்லியிருந்தாலும் கூட, நாங்கள் புதிதாகக் கொண்டிருக்கிற கொள்கையை யாரும் அதிகமாகக் குறை கூறவில்லை. ஒரே ஒரு விவாதத்தை மட்டும் பரவலாக எல்லோரும் குறிப்பிட்டார்கள். அதாவது எல்லோரும் கூட்டுறவுத் துறையை சாடுவதுபோல் பேசினார்கள்.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் அரசு வாணிபத்தை துணிந்து செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். நாங்கள் துணிந்துதான் இதைச் செய்துகொண்டிருக்கிறோம். இருந்தாலும் இதை ஆதரிக்கிறவர்கள் கூட கூட்டுறவுத் துறையைப் பற்றி அதிகமாகப் பேசியதையும், நாம் எடுத்துக் கொண்டிருக்கிற துணிச்சலான காரியத்திற்குக் கூட்டுறவுத் துறை எவ்வளவு வலுவுடையதாக இருக்கிறது என்பதையும் சர்க்கார் அலசிப் பார்க்காமல் இல்லை. அதுபற்றிய விபரங்களை நான் பின்னால் சொல்கிறேன்.

இந்தத் தீர்மானத்தின்மீது விவாதத்தை ஆரம்பிக்கின்றபோது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அகில உலக வாழ்க்கைத் தரத்தையும் எடுத்துச்சொல்லி, இந்தியாவில் இருக்கிற வாழ்க்கைத் தரத்தையும் எடுத்துச் சொல்லி, சோசலிச நாடுகள் பற்றியும் எடுத்துச்சொல்லி, இறுதியில் இந்தியா ஒரு முதலாளித்துவ நாடு என்று ஒப்புக்கொண்டு, அவர்களுடைய கொள்கையை எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள்.

ஆக, இந்தியா ஒரு முதலாளித்துவ நாடு. நாம் இந்த
முதலாளித்துவ நாட்டிலிருந்துதான் பேசிக்கொண்டிருக்கிறோம்.
இந்தியாவுக்கு என்று ஒரு அரசு இருக்கிறது. இங்கு நடைபெறு
வது நம்முடைய மாநில அரசு. இந்தச் சூழ்நிலையில் செய்யப்
பட்ட காரியங்களை மட்டும் நாம் அலசிப் பார்க்க வேண்டும். அகில
இந்திய கொள்கையில் அவர்கள் என்னென்ன காரியங்கள் செய்
வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறார்கள்; என்னென்ன
காரியங்களை செய்யச் சொல்லியிருக்கிறார்கள். அவைகளை
நீங்கள் ஏன் செய்யவில்லை என்று இங்கே பேசியிருக்க
வேண்டும்.

திரு. பழனிசாமி அவர்கள் பேசும்போது சொன்னார்கள்
நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்வதைப் பற்றிச் சொன்னார்கள்.
ஆனால் நாங்கள் நிர்ணயம் செய்த விலையை மத்திய அரசு ஒப்புக்
கொள்ளவில்லை. டிசம்பர் 15-ந் தேதி வரையில் 90 ரூபாய் விலை
நிர்ணயத்தை ஒப்புக்கொள்ள முடியாது என்று திட்டவட்டமாகச்
சொல்லிவிட்டார்கள். அதற்குப் பிறகு நம்முடைய முதலமைச்சர்
அவர்கள் இரண்டுமுறை பிரதமரைச் சந்தித்துப் பேசிய பிறகு,
15-ந் தேதிக்குப் பின்னால் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆக,
இங்கு உற்பத்தி செய்கிற பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்
வதற்குக் கூட நமக்கு அதிகாரம் கிடையாது என்பது உங்களுக்குத்
தெரியும். அப்படி இருந்தும், நாங்கள் முயற்சி எடுத்து ஒரு
புதிய கொள்கையை எந்த அளவுக்கு கொண்டுவர முடியும் என்று
உங்களுக்குத் தெரிந்திருந்தாலும் கூட இந்த அரசின்மீது
கண்டனக் கணைகளைத் தொடுக்கிறீர்கள். திரு. பழனிசாமி அவர்கள்
ஒரு பொதுவுடைமையாளர். பொதுவுடைமைத் தத்துவங்களில்
நன்றாக ஊறியவர். அவர் தன்னுடைய உரையில் வாய் தவறியோ
என்னவோ இந்தியா ஒரு முதலாளித்துவ நாடு என்று சொல்லி
விட்டார். உண்மையை ஒத்துக்கொண்டார்கள். இந்த முத
லாளித்துவ நாட்டில் தமிழ்நாடு ஒரு மாநிலம்தான். இதை நாம்
கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

நம்முடைய கொள்கையைப் பற்றிப் பேசுகிறபோது, எங்
களுடைய கட்சியிலிருந்து பிரிந்து சென்றிருக்கிற திரு. ஆலடி
அருணா அவர்களும், மற்றும் பல நண்பர்களும் கலைஞரின்
கொள்கை, நாவலரின் கொள்கை, அண்ணாவின் கொள்கை இவை
களை விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் அப்படிச்





சொல்வதன் மூலம் இந்தக் கொள்கைகளை நாங்கள் விட்டுவிட்
டோம் என்ற குற்றச்சாட்டை சுமத்தப் பார்க்கிறார்கள். இடை
யிடையே ஊழல் என்று கூட சொன்னார்கள். ஊழல் என்பதற்குச்
சில சந்தேகங்களையும் குறிப்பிட்டிருந்தார்கள். பணம் இருப்
பவர்களிடம் இருந்து வாங்கக்கூடாது என்று எந்த சர்க்கார்
கொள்கை வகுக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. பணக்காரர்
களிடமிருந்து பணத்தை வாங்கித்தான் தீரவேண்டும். அதைக்
கொண்டுதான் ஏழை எளிய மக்களுக்கு நல்லதைச் செய்ய முடியும்.

**திரு. பெ. சீனிவாசன்:** பணக்காரர்களிடமிருந்து பணத்தை
வாங்கக் கூடாது என்று சொல்லவில்லை. அதை ஒரு 'நெகோசி
யேஷன்' என்ற முறையில் வைத்துக்கொள்ளக் கூடாது.
உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், நீங்கள் லெவி
வேண்டுமென்று சட்டம் போட்டீர்கள். சட்டம் போட்டவுடன்
வியாபாரிகள் வருகிறார்கள். வந்தவர்களிடம் 'பார்கெயின்'
நடக்கிறது. 10 லட்சம் ரூபாய் கொடுத்தால் லெவியை எடுத்து
விடுகிறோம் என்று சொல்கிறீர்கள். அந்தப் பணத்தை ஊன
முற்றோர் நல நிதி என்று சொல்லிக்கொள்கிறீர்கள். அதுதான்
கூடாது என்று சொல்கிறோம். அரசாங்க கஜானாவிலிருந்து
பணத்தை எடுத்து அதற்குச் செலவிடுங்கள். பணக்காரர்களிடம்
வரி போட்டு பணத்தை வாங்குங்கள். அதை யாரும் குறை
சொல்லமாட்டார்கள். இருப்பவர்களிடம் வரி மூலம் பணத்தைப்
பெற்று. அதைக்கொண்டு நல்ல காரியங்களைச் செய்யுங்கள்.
யாரும் வேண்டாமென்று சொல்லவில்லை. நன்கொடை என்ற
பெயரால் இப்படிப் பணத்தை வாங்கிவிட்டுச் செய்வது லஞ்சத்
திற்கு ஒப்பாகும். அது கூடாது என்று சொல்கிறோம்.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, திரு. சீனிவாசன்
அவர்கள் ஒரு பெரிய குற்றச்சாட்டைச் சொல்கிறார்கள். 10
லட்சம் ரூபாய் நெகோசியேஷன் என்ற முறையில் வாங்கியதாகச்
சொல்கிறார்கள். இப்படி யாரிடமிருந்து வாங்கப்பட்டது என்
பதைச் சொல்லாமல் பொத்தாம் பொதுவில் சொல்லக்கூடாது.
ஆதாரம் இல்லாமல் சொல்லக்கூடாது என்று நீங்களே சொல்லி
யிருக்கிறீர்கள். மீண்டும் அவர்கள் ஆதாரம் இல்லாமல் சொல்வது
சரியா?

[1974 டிசம்பர் 21

**திரு. பெ. சீனிவாசன் :** நன்கொடை வாங்கப்பட்டிருக்கிறது.
முதலமைச்சர் கூட சொல்லியிருக்கிறார். ஊனமுற்றோர் நிதிக்
காகக் கொடுப்பதாகச் சொன்னது ஊனமாக இருக்கிறது என்று 6
லட்சம் ரூபாய் கொடுத்திருப்பதற்குச் சொன்னார். அந்த லெவிச்
சட்டமும் நீக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் லெவி போட்டு, நன்
கொடை கொடுத்ததற்குப் பின்னால் லெவி நீக்கப்பட்டிருக்
கிறது—வேறு பெயரில் வாங்கினால் லஞ்சம்--அரசாங்கம்
வாங்கினால் நன்கொடை.

**திரு. கோவை செழியன் :** தலைவர் அவர்களே, நான் சென்ற
முறையே சட்டசபையில் இதே குற்றச்சாட்டை கூறினேன்.
ஏறத்தாழ 20 லட்சம் வசூல் செய்தார்கள். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது விவாதமே தவிர வேறு
நன்கொடை வசூல் பற்றியது அல்ல.

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : திரு.** சீனிவாசன்
பேசும்போது கடைசியிலேயே குறிப்பிட்டார்கள். நல்ல காரியத்
திற்காகத்தான் நிதி வாங்கினார் என்று சொன்னார். கூடவே
பேரம் பேசப்பட்டது. முதலமைச்சர் 10 லட்சம் வாங்கினார்
என்றார். அவர் 20 லட்சம் என்று சொல்கிறார். (குறுக்கீடு)
வேறு யார் பேசும்போது வேண்டுமானாலும் குறுக்கிடுங்கள்.
நீங்கள் பேசுவதை நான் கேட்டுக்கொண்டிருக்கவில்லையா? என்
னிடம் வைத்துக்கொள்ளாதீர்கள். (குறுக்கீடு)

நாம் லெவி 13—5—1974 இல் போட்டிருக்கிறோம். இப்படி லெவி
போடுவதற்கே இந்த அரசுக்கு அதிகாரம் கிடையாது. சட்டம்
கிடையாது. சிறுதானியங்களுக்கு லெவி போட அனுமதி
அளிக்க வேண்டுமென்று மத்திய அரசைப் பல மாதங்களாகக்
கேட்டுவந்தோம். இப்போதுதான் அப்படி போட்டுக்கொள்ள
லாம் என்ற உத்தரவு வந்திருக்கிறது. நாம் நிலக்கடலைக்கு லெவி
போட வேண்டுமென்று இரண்டாண்டுகளாகவே வாதிடுகிறோம்.
நமக்கு அதுபோல அதிகாரம், சட்டம் இல்லாத நிலையில்
வியாபாரிகளே முன் வந்து அதுபோல லெவி கொடுப்பதாக
ஒப்புக்கொண்டதால் அப்படி நல்ல மனது படைத்து முன்வந்த
வர்களிடம் கையெழுத்து வாங்கினோம். அவர்களிலேயே சிலர்



1974 டிசம்பர் 21] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

இதை எதிர்த்து கோர்ட்டுக்குப்போனதும் தெரியும். கோர்ட்டில்
வியாபாரிகளே அது போல ஒப்புக்கொண்டிருப்பதால் ஒன்றும்
செய்வதற்கு இல்லை யென்று சொல்லிவிட்டதும் எல்லோருக்கும்
தெரிந்திருக்கும். லெவி போட எங்களுக்குச் சட்டம் இல்லை.
அவர்களாகவே கொடுக்க ஒப்புக் கொண்ட லெவியை எடுத்தது
பத்தாவது மாதத்தில் எடுத்ததற்கும் நன்கொடை வாங்கிய
தற்கும் என்ன சம்பந்தம்?

நல்ல காரியத்திற்குப் பணம் உள்ளவர்கள் கொடுக்கிறார்கள்.
நல்ல கையும் கொடுக்கிறது. குஷ்டரோகக் கையும் கொடுக்கிறது
பணம் உள்ளவர்கள் குஷ்டரோகிகள் என்று அண்ணா சொன்னார்.
ஒரு லட்சம் இருந்தால் என்ன, பத்து லட்சம் இருந்தால் என்ன,
ஒரு நாளைக்கு 6 லட்சம் வாங்குகிறவர்களாக இருந்தால் என்ன?
இன்றைக்கு பணம் உள்ளவர்களிடத்தில்தான் போய்ச் சேர்ந்திருக்
கிறார்கள். நல்ல காரியத்திற்கு யார் பணம் கொடுத்தாலும்
வாங்கத்தான் வேண்டியிருக்கிறது. இன்றைக்கு லட்சாதிபதி
களிடம் இருந்து விடுபட முடியவில்லை. கொடுமைக்கார வியா
பாரிகளிடம் இருந்து தப்ப முடியவில்லை. அவர்களைக் கொடுமைக்
காரர்கள் என்று சொல்லக்கூடாது என்று திரு. லத்தீப் சொன்
னார்கள் என்றாலும் அவர்கள் கொடுமைக்காரர்கள்தான். அவர்
களிடம் இருந்து தப்ப முடியவில்லை. இதற்கு ஒரே காரணம்
நாம் இந்திய சர்க்காருக்கு உள்ளடங்கி இருப்பதுதான். திரு.
பழனிசாமியே சொன்னார்கள்—இந்திய நாடு முதலாளித்துவ பிடி
யில்தான் இருக்கிறது. இதில் இருந்து செயல்படக் கூடிய நிலைமை
தான் நமக்கு இருக்கிறது என்பதால் அண்ணாவின் கொள்கையை
பாதி தான் நிறைவேற்ற முடிகிறது. (குறுக்கீடு)

இந்திய ஒருமைப்பாட்டில் எனக்கு அக்கறை உண்டு. சுதந்
திரத்திற்காக காங்கிரசில் இருந்து போராடியவன் நான். அதற்குப்
பிறகுதான் இந்த இயக்கத்திற்கு வந்தேன். இங்கே இருக்கிற
காங்கிரஸ்காரர்களை விட நான் மூத்தவன் என்று சொல்ல முடியும்.
அங்கிருந்துதான் தந்தை பெரியாரிடம் வந்தேன். தென்னாட்டு
காந்தி அண்ணாவின் தலைமையில் இருந்தவன். நான் சொல்ல
வந்தது இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்த திரு. பழனிசாமி
யின் கருத்தைத்தான். அவர் இந்தியா ஒரு முதலாளித்துவ நாடு
என்றார். இந்த நாட்டில் நாம் மத்திய சர்க்காருக்கு கீழே இருப்
பதால் இந்த லிவகார எல்லைக்குள் இருந்துதான் பல காரியங்களைச்
செய்ய வேண்டியிருக்கிறது.

[1974 டிசம்பர் 21

**திரு. பெ. சீனிவாசன் :** நன்கொடை வாங்கப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் கூட சொல்லியிருக்கிறார். ஊனமுற்றோர் நிதிக் காகக் கொடுப்பதாகச் சொன்னது ஊனமாக இருக்கிறது என்று 6 லட்சம் ரூபாய் கொடுத்திருப்பதற்குச் சொன்னார். அந்த லெவிச் சட்டமும் நீக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் லெவி போட்டு, நன் கொடை கொடுத்ததற்குப் பின்னால் லெவி நீக்கப்பட்டிருக் கிறது—வேறு பெயரில் வாங்கினால் லஞ்சம்--அரசாங்கம் வாங்கினால் நன்கொடை.

**திரு. கோவை செழியன் :** தலைவர் அவர்களே, நான் சென்ற முறையே சட்டசபையில் இதே குற்றச்சாட்டை கூறினேன். ஏறத்தாழ 20 லட்சம் வசூல் செய்தார்கள். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது விவாதமே தவிர வேறு நன்கொடை வசூல் பற்றியது அல்ல.

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : திரு. சீனிவாசன்** பேசும்போது கடைசியிலேயே குறிப்பிட்டார்கள். நல்ல காரியத் திற்காகத்தான் நிதி வாங்கினார் என்று சொன்னார். கூடவே பேரம் பேசப்பட்டது. முதலமைச்சர் 10 லட்சம் வாங்கினார் என்றார். அவர் 20 லட்சம் என்று சொல்கிறார். (குறுக்கீடு) வேறு யார் பேசும்போது வேண்டுமானாலும் குறுக்கிடுங்கள். நீங்கள் பேசுவதை நான் கேட்டுக்கொண்டிருக்கவில்லையா? என் னிடம் வைத்துக்கொள்ளாதீர்கள். (குறுக்கீடு)

நாம் லெவி 13—5—1974 இல் போட்டிருக்கிறோம். இப்படி லெவி போடுவதற்கே இந்த அரசுக்கு அதிகாரம் கிடையாது. சட்டம் கிடையாது. சிறுதானியங்களுக்கு லெவி போட அனுமதி அளிக்க வேண்டுமென்று மத்திய அரசைப் பல மாதங்களாகக் கேட்டுவந்தோம். இப்போதுதான் அப்படி போட்டுக்கொள்ள லாம் என்ற உத்தரவு வந்திருக்கிறது. நாம் நிலக்கடலைக்கு லெவி போட வேண்டுமென்று இரண்டாண்டுகளாகவே வாதிடுகிறோம். நமக்கு அதுபோல அதிகாரம், சட்டம் இல்லாத நிலையில் வியாபாரிகளே முன் வந்து அதுபோல லெவி கொடுப்பதாக ஒப்புக்கொண்டதால் அப்படி நல்ல மனது படைத்து முன்வந்த வர்களிடம் கையெழுத்து வாங்கினோம். அவர்களிலேயே சிலர்



1974 டிசம்பர் 21] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

இதை எதிர்த்து கோர்ட்டுக்குப்போனதும் தெரியும். கோர்ட்டில் வியாபாரிகளே அது போல ஒப்புக்கொண்டிருப்பதால் ஒன்றும் செய்வதற்கு இல்லை யென்று சொல்லிவிட்டதும் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். லெவி போட எங்களுக்குச் சட்டம் இல்லை. அவர்களாகவே கொடுக்க ஒப்புக் கொண்ட லெவியை எடுத்தது பத்தாவது மாதத்தில் எடுத்ததற்கும் நன்கொடை வாங்கிய தற்கும் என்ன சம்பந்தம்?

நல்ல காரியத்திற்குப் பணம் உள்ளவர்கள் கொடுக்கிறார்கள். நல்ல கையும் கொடுக்கிறது. குஷ்டரோகக் கையும் கொடுக்கிறது பணம் உள்ளவர்கள் குஷ்டரோகிகள் என்று அண்ணா சொன்னார். ஒரு லட்சம் இருந்தால் என்ன, பத்து லட்சம் இருந்தால் என்ன, ஒரு நாளைக்கு 6 லட்சம் வாங்குகிறவர்களாக இருந்தால் என்ன? இன்றைக்கு பணம் உள்ளவர்களிடத்தில்தான் போய்ச் சேர்ந்திருக் கிறார்கள். நல்ல காரியத்திற்கு யார் பணம் கொடுத்தாலும் வாங்கத்தான் வேண்டியிருக்கிறது. இன்றைக்கு லட்சாதிபதி களிடம் இருந்து விடுபட முடியவில்லை. கொடுமைக்கார வியா பாரிகளிடம் இருந்து தப்ப முடியவில்லை. அவர்களைக் கொடுமைக் காரர்கள் என்று சொல்லக்கூடாது என்று திரு. லத்தீப் சொன் னார்கள் என்றாலும் அவர்கள் கொடுமைக்காரர்கள்தான். அவர் களிடம் இருந்து தப்ப முடியவில்லை. இதற்கு ஒரே காரணம் நாம் இந்திய சர்க்காருக்கு உள்ளடங்கி இருப்பதுதான். திரு. பழனிசாமியே சொன்னார்கள்—இந்திய நாடு முதலாளித்துவ பிடி யில்தான் இருக்கிறது. இதில் இருந்து செயல்படக் கூடிய நிலைமை தான் நமக்கு இருக்கிறது என்பதால் அண்ணாவின் கொள்கையை பாதி தான் நிறைவேற்ற முடிகிறது. (குறுக்கீடு)

இந்திய ஒருமைப்பாட்டில் எனக்கு அக்கறை உண்டு. சுதந் திரத்திற்காக காங்கிரசில் இருந்து போராடியவன் நான். அதற்குப் பிறகுதான் இந்த இயக்கத்திற்கு வந்தேன். இங்கே இருக்கிற காங்கிரஸ்காரர்களை விட நான் மூத்தவன் என்று சொல்ல முடியும். அங்கிருந்துதான் தந்தை பெரியாரிடம் வந்தேன். தென்னாட்டு காந்தி அண்ணாவின் தலைமையில் இருந்தவன். நான் சொல்ல வந்தது இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்த திரு. பழனிசாமி யின் கருத்தைத்தான். அவர் இந்தியா ஒரு முதலாளித்துவ நாடு என்றார். இந்த நாட்டில் நாம் மத்திய சர்க்காருக்கு கீழே இருப் பதால் இந்த வியகார எல்லைக்குள் இருந்துதான் பல காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது.

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1974 டிசம்பர் 21

தமிழ்நாடு உணவைப் பொறுத்தவரையில் அதிக இண்டெக்ஸ்
உடையதாக உள்ளது என்று சொன்னார். அது சரியல்ல. இந்தி
யாவிலே 382 இண்டெக்ஸ் இருந்தால் தமிழகத்தில் இன்றைக்கு
344 தான் இருக்கிறது. 44 புள்ளி குறைந்துதான் இருக்கிறது

வருகிற ஆண்டில் கூட 20 லட்சம் குறைந்துவரும் உணவு
தானியம் என்று சொல்லியிருக்கிறோம். அதற்கான கணக்கையும்
சொல்ல முடியும். தொடர்ந்து கிடைத்திருக்கிற மழை அளவைப்
பார்த்தால் தெரியும். 71 செப்டம்பரில் 175 மில்லி மீட்டர் மழை
என்றால் 72-ல் 122 மில்லி மீட்டர்தான் கிடைத்தது. 72 அக்டோ
பரில் 273 மில்லி மீட்டர் கிடைத்தது என்றால் 73 அக்டோபரில் 200
மில்லி மீட்டர்தான் கிடைத்தது. அதுவே 73 நவம்பரில் 81.1
மில்லி மீட்டர்தான். இதனால் சென்ற ஆண்டே நாம் 57 லட்சம்
கிடைக்கும் என்று சரியாகத்தான் புள்ளிவிவரம் தயாரித்தோம்
என்றாலும் கிடைத்தது அவ்வளவு அல்ல. சென்ற ஆண்டு வழக்க
மாக பிப்ரவரி 28 தேதி வரைக்கும் மேட்டூர் தண்ணிவிடப்படு
வதற்குப் பதிலாக 12 ஆம் தேதியே அடைத்துவிட்டார்கள்.
மேட்டூரில் தண்ணீர் இல்லை. அதனாலே பயிர் பாதிக்கப்பட்டது.
விரோக பயத்தை உண்டாக்கக்கூடாது என்பதற்காக அப்போதே
சில விவரங்கள் தெரிவிக்கப்படாமல் இருந்திருக்கலாம்.

நவரையை எடுத்துக்கொண்டால் தென்னாற்காடு. வடாற்காடு,
செங்கல்பட்டு இதெல்லாம் உபரியான மாவட்டங்கள். இந்த
வருஷம் அங்கே எட்டில் ஒரு பங்கு கூட கிடைக்கவில்லை. சேலம்
போன்ற பகுதியில் இரண்டாண்டுகளாகவே மழை இல்லை. அந்தப்
பகுதிக்குச் சென்று பார்த்தால் மக்கள் படுகிற கஷ்டத்தை உணர
முடியும். சென்ற ஆண்டே 2 லட்சம் ஏக்கரா சேதம் ஏற்பட்டது.
இந்த ஆண்டு சொல்ல வேண்டியதில்லை. நம்முடைய தேவை 57
லட்சம் டன். டிசம்பர் கடைசிக்குள் மழை வரலாம் என்
கிறார்கள். மழை சில இடங்களில் பெய்திருப்பதையும் பார்க்
கிறோம். எல்லாம் நல்லபடியாக இருந்தால் எதிர்பார்ப்பது 37
லட்சம் டன். நமக்கு ஏற்படுகிற பற்றாக்குறையை நாம் **சரி**
செய்யவேண்டும்.

**திரு. பெ. சீனிவாசன்** : உற்பத்தி குறைந்திருக்கலாம். இந்த
வருஷம் மழை இல்லை. இந்த நூற்றாண்டிலேயே இதுபோல
இருந்தது இல்லை என்றெல்லாம் சொல்லப்படுவதை ஏற்றுக்கொள்



1974 டிசம்பர் 21]

கிறோம். ஆனால் ஒன்றைக் கவனிக்க வேண்டும். இன்றைக்கு ஒரு படி 7 ரூபாய் என்றால் ஆயிரம் மூட்டை வேண்டுமானாலும் கிடைக்கிறது. அரிசி இருக்கிறது. காங்கிரஸ் ஆட்சியில் அரிசியே இல்லை. இப்போது அதிக விலை கொடுத்தால் எங்கிருந்தோ வேண்டிய அளவு கிடைக்கிறது. இதைத் தடுக்கக்கூடாதா? இதற்கு என்ன வழி என்பதுதான் என்னுடைய கேள்வி.

(மாலை 6.30 மணி)

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:** அதனைக் கூடிய விரைவிலே தடுப்பதற்காகத்தான் இரண்டு நாளைக்கு முன்னாலே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு கொள்கையை பிரேரேபித்திருக்கிறார். உபரி பகுதியிலே கூட்டுறவுத் துறை மூலமாக, தனிப்பட்ட வியாபாரிகளிடம் விடாமல், கொள்முதல், விநியோகிக்க இருக்கிறோம் என்று சொன்னார். நான், உங்களை மீண்டும் மீண்டும் கேட்டுக்கொள்வது அந்தக் கொள்கைக்கு ஒத்தாசையாக இருப்பீர்களானால், நிச்சயமாக அண்ணா கண்ட சோஷலிசத்தை நாம் பெறமுடியும் என்று நான் உங்களுக்குக் கூறிக்கொள்கிறேன்.

இப்பொழுது, நாம் சீராக விநியோகம் செய்து வருகிறோம். விநியோக முறையை எல்லோரும் கண்டித்திருக்கிறார்கள். ஆகவே, கூட்டுறவுத் துறையிலே எங்கெங்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதென்று எனக்குத் தெரியும். இப்பொழுது மட்டுமல்ல, 30 ஆண்டுகளாகக் கூட்டுறவுத் துறை தமிழ் நாட்டிலே யார் யார் கையிலே இருந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். அவைகளையெல்லாம் எப்படி சீராக்கிக்கொண்டு வந்திருக்கிறோம் என்பதை நான் உங்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கிருக்கிற நிலைமை, கூட்டுறவு துறையிலே கன்ஸ்யூமர் தொடர்பு, பெருகிவருவதை, அவர்கள் அதிகமாகப் பொருள்கள் வாங்குவதை அன்றைக்கு மேலவையிலே சொன்னேன். 1973-74-லே ரூ. 68.98 கோடிக்குக் கூட்டுறவு துறையிலே பொருள்களை மக்கள் நம்பிக்கையோடு வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதிலேயும் இந்த 5 மாதத்திலே சொல்கிறேன், 1974-75-லே ரூ. 52.41 கோடிக்குக் கூட்டுறவு துறையிலே விற்பனையாகியிருக்கிறது. மக்களுக்கு அன்றாடம் தேவைப்படுகிற அரிசி போன்ற அத்தியாவசியப் பொருள்களை மக்கள் பெற்றிருக்கிறார்கள். இது மொத்த விற்பனை. சிறப்பு அங்காடிகளிலே மட்டும் ரூ. 16 கோடிக்கு (ரூ. 15.82 கோடி)

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1974 டிசம்பர் 21

வியாபாரம் நடந்திருக்கிறது. இந்த இரண்டு மூன்று ஆண்டுக்
காலத்திற்குள் இந்த அளவு வளர்ந்திருக்கிறது. இதற்கு முன்னே
தனிப் பட்டவர்களிடம் இருந்த பணம் கூட்டுறவுத்துறைக்கு
வந்திருக்கிறது என்று சொன்னால், மக்களிடம் எவ்வளவு நம்பிக்
கையை கூட்டுறவுத் துறை பெற்றிருக்கிறது என்பது தெரிய
வரும். 5 மாதத்திலே ரூ. 52 கோடி அதுவும் சிறப்பு அங்காடி
களிலே ஒரு மாதத்திற்குக் கிட்டத்தட்ட ரூ. 3 கோடி என்ற
அளவிலே தொழில் நடந்து கொண்டிருக்கிறது. மக்கள் விரும்பி
வாங்குகிறார்கள். இதனால், தனியார்கள் பல இடங்களிலே
கடைகளை மூடுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நாணய
மாகவும் சுத்தமாகவும் வேலை செய்கின்ற சிறப்பங்காடி என்று,
அகில இந்தியாவிலே சிந்தாமணி சிறப்பங்காடி பரிசு பெற்றிருக்
கிறது. இதைச் சொன்னாலும் இங்கு நீங்கள் கேட்கப் போகிறீர்
களா? அகில இந்தியாவிலே பரிசு பெற்றிருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** நிச்சயமாக அந்த மாதிரி பரிசு
பெற்றால் அதை நாங்கள் பாராட்டுவோம். அதைப்பற்றி நாங்கள்
ஆட்சேபிக்க மாட்டோம்.

(திரு. பெ. சீனிவாசன் எழுந்தார்)

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி :** சட்டசபை
தானே இது. சபாநாயகர் இருக்கிறார். அவர் எழுந்துகொள்ளும்
போது நான் உட்கார்ந்து கொள்கிறேன். நீங்களும் உட்காருங்கள்.

இப்பொழுது திரு. பொன்னப்ப நாடார் கூட முழுத் திருப்தி
யுடன் சொல்லவில்லை. பரிசு பெற்றால் என்று சொல்கிறார். ஒரு
அமைச்சர், நான் சொல்கிறேன், பரிசு வாங்கியிருப்பதாகச் சொல்
கிறேன். வாயாலே ஒரு வாழ்த்தாவது சொல்லுங்கள், பாராட்டுகி
றேன் என்று சொல்லுங்கள்.

**திரு. கோவை. செழியன் :** தலைவரவர்களே, சிந்தாமணி கூட்
டுறவு அங்காடியிலே நிறைய இலாபம் வருகிறது. அதை நிர்வகிக்
கின்றவர்கள் அரசியல்வாதிகள் அல்ல. தங்களுடைய கட்சியைச்
சேர்ந்தவர்களும் அல்ல. அதனுடைய தலைவர், பல தொழிற்சாலை
களை நிர்வகிக்கின்றவர். இலாபம் சம்பாதித்துக் கொண்டிருக்கிற



1974 டிசம்பர் 21] [திரு. கோவை செழியன்]

அவருடைய கையிலே அது இருக்கிற காரணத்தினாலே, இலாபத்
தைக் காட்டுகிறார். எவ்வளவு போகிறதோ அது தெரியாது.
ஆனால் இலாபம் வருவதற்கு அதுதான் காரணம்.

**திரு. பெ. சீனிவாசன் :** சிந்தாமணியிலே இலாபம் வருகிறது,
பரிசு வாங்கியிருக்கிறது. இப்பொழுது நேரம் இல்லை. இல்லா
விட்டால் அமைச்சருக்கு மாலை கூடப் போடுவேன், பாராட்டு
கிறேன், உண்மையாய் பாராட்டுகிறேன். என் அந்தச் சங்கத்திலே
கையாளப் படுகின்ற முறைகளை மற்ற காமதேனு போன்ற
கூட்டுறவு நிறுவனங்களிலும் பயன்படுத்தக் கூடாது. மற்ற
கூட்டுறவு நிறுவனங்கள் தொடர்ந்து நஷ்டத்திலே நடந்து வரு
வதற்குக் காரணம் என்ன? ஏன், சிந்தாமணியிலே கையாளப்படு
கிற முறையை இந்தப் கையாண்டு இலாபத்திலே நடத்தக்
கூடாது?

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி :** தலைவரவர்களே,
செழியன் அவர்கள் சொன்னதற்கும், சீனிவாசன் அவர்கள்
சொன்னதற்கும் இரண்டுபேர் சொன்னதற்கும் சேர்த்துப் பதில்
சொல்கிறேன். செழியன் சொன்னதற்கு---அங்கு உள்ளே நடப்
பது எனக்குத் தெரியாது. அது கோயம்புத்தூர் விவகாரம்.
ஆலை முதலாளி அவர் சொல்வதைப் பார்த்தால் வெறும் ஆலை
முதலாளிகள்கிட்டே கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று தெரி
கிறது.

நண்பர் திரு. சீனிவாசன் இதை எப்படி நடத்துவதால் சிறப்பு வரு
கிறது என்று கேட்கிறார்கள்? இப்பொழுது தமிழகத்தில் 17 சிறப்
பங்காடிகள் இருக்கின்றன. அவற்றிலே 16 சிறப்பங்காடிகளை
இலாபத்திலே நடத்தி வருகிறோம். ஒரு அங்காடியிலே மட்டும்
இலாபம் இல்லை. ஒரு ஆண்டுக்கு முன்னாலே, 4, 5 சிறப்பங்
காடிகள் இலாபத்திலே இருந்தன. ஆனால், இப்பொழுது ஒரு அங்
காடியிலேதான், திருநெல்வேலியிலே இருப்பதுதான், கொஞ்சம்
இலாபத்திலேயில்லாமல் இருந்து வருகிறது. அதுவும் இப்
பொழுது சிறப்பாக நடந்து வருகிறது. அதை நல்லமுறையிலே,
நடத்த முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. சட்டமன்றம் ஆரம்
பித்ததிலிருந்து, கூட்டம் போடும்போதெல்லாம், கூட்டுறவு
ஒழிக, கூட்டுறவு ஒழிக என்று சொன்னால் நாடு எப்படி மாறும்?

திரு. குமாரசாமி அவர்கள் சொன்னார்கள், கூட்டுறவு வேண்டா மென்று. அவர் கூட்டுறவும் கூடாது, சிவில் சப்ளைஸ் கார்ப்ப ரேஷனும் கூடாது என்று சொன்னார். இரண்டும் வேண்டாம் என்றால் எங்கே போவது? பிர்லாவிடம் போவதா? . . . .

திரு. கே. என். குமாரசாமி: அமைச்சர் அவர்களுக்குச் சொல் கிறேன், இரண்டும் வேண்டாம் என்று சொல்லவில்லை. இரண்டி லும் நடக்கிற ஊழல்களை நிவர்த்தி பண்ண முயற்சி செய்ய வேண்டுமென்றுதான் சொன்னேன். நம்முடைய முயற்சி பல வீனமாகி வருவது கூடாது, அதனைச் செயல்படுத்தியாகவேண்டு மென்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: சோஷலிசக் கொள்கை எல்லோருக்கும் தெரிந்த கொள்கை. சோஷலிசத்தை நேரு கொண்டு வந்தார்கள். மாதிரி சோஷ லிசத்தைப் பிடிக்க முயற்சித்து வந்தோம். எல்லோரும் கடைப் பன்மை தேசியமயமாக்கினாலும் இலாபம் இல்லை என்று சொன்னதை, இலாபகரமாக்குவதுதான் அது சாபக்கேடாக இருந்தது. மிலுடைய கொள்கையாக இருக்கவேண்டுமே யொழிய அப்படியே, முற்போக்குக் கட்சி விடக்கூடாது என்று நடவடிக்கை எடுத்தோம்.

கூட்டுறவுத் துறையிலே 10 சதவிகிதம் தவறு இருக்கலாம். அதற்காக, நாமே ஒழித்து விட்டால் எப்படி? எங்கெங்கு, என் னென்ன தவறு நடக்கிறது என்பதை என் கவனத்திற்கோ, அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய கவனத்திற்கோ, அல்லது அதிகாரிகள் கவனத்திற்கோ கொண்டு வந்து, அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லையென்று சொன்னால் பிறகு கேட்கலாம். அதற்காகக் கொள்கையை எப்படி எதிர்ப்பது?

நேற்று, திருமதி அனந்தநாயகி அவர்கள் சொன்னார்கள், இப் பொழுது இங்கு இல்லை. பிராந்தியிலே அவர்கள் பேசியது கண்டிப் பாக இருந்தது. கூட்டுறவுத் துறைக்கு விடக் கூடாது, விடக் கூடாது என்று. கூட்டுறவுத் துறையிலே யார் இருக்கிறார்கள்? ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இருக்கிறார்கள். கூட்டுறவு துறையிலே பயிற்சி பெற்ற அதிகாரிகள் இருக்கிறார்கள். வருகிற இலாபம் கன்ஸ்யூமருக்குப்போகிறது. அந்த அம்மா என்ன சொல்கிறார்? அவர்கள் நம் வழக்கறிஞர்—இங்கேயும் வழக்கறிஞர்கள் இப்பொழுது அமர்ந்திருக்கிறார்கள். நான் வழக்கறிஞர் அல்ல. பெருந்தன்மை யோடு முதலமைச்சர் இந்த வியாபாரம் தனிப்பட்டவர்களிடம்





இருக்கக் கூடாது, இலட்சக் கணக்கான ரூபாய் வருவாய் வந்தா லும், கூட்டுறவுத் துறையிலே சர்க்கார் மயமாக்கவேண்டும், தேசிய மயமாக்கவேண்டும் என்று கொண்டு வரும்? சிறப்பான கொள்கையை, நாம் இடி முழக்கம் செய்து கெடுத்து விடுவது நாட்டுக்கு நல்லதல்ல என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படு கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய அமைச்சர் கூட்டுறவுத் துறை அங்காடிகள் மூலம் ரூ. 52 கோடி—5 மாதத்திலே விற்பனையாகியிருப்பதாகப் பெருமையாகக் குறிப்பிட்டார்கள். நானும் பெருமையோடு ஏற்றுக்கொள் கிறேன். ஆனால், ரூ. 52 கோடிக்கு என்று கணக்கிட்டால் வருடத்திற்கு ரூ. 120 கோடி—கணக்காகிறது. தமிழ் நாட்டில், மொத்த அத்தியாவசியப்பண்டங்களின் விற்பனை ரூ. 3,500 கோடி என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதில், ரூ. 120 கோடி எத்தனை பர்சன்டேஜ்? அதையேபெரிதாக நினைத்துக் கொண் டிருந்தால்? மேற்கொண்டு போகமுடியாதா? இது ரொம்பக் குறைவு என்பதை அமைச்சர் அவர்கள் உணர்வார்களா?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: நான் உணர் கிறேன். நீங்களெல்லாம் ஆதரித்தால் இன்னும் வரும். ஒரு ஆண்டிற்கே ரூ. 60 கோடி என்று கணக்குச் சொல்லியிருக்கிறேன். இப்பொழுது 5 திங்களில் ரூ. 52 கோடி என்று சொல்கிறேன். எல்லோரும் சேர்ந்து சிறுகடைகளை ஒழித்தால், தனியாரிடம் இருக்கிற சான்ஸ் போய்விடும். கூட்டுறவு அங்காடிகளிடம் அனைத்தும் வர முழுக்கப் பாடுபடவேண்டும், அதற்கான நட வடிக்கைகளை எடுத்து வருகிறோம். நான் அமைச்சராக இல்லாத பொழுது, சட்டமன்றங்களிலே பலர் பேசக் கேட்டிருக்கிறேன், சீனி போன்ற சில்லறை பொருட்கள் விற்கின்ற உரிமையை அவர்கள் கட்சிக்காரர்களுக்கே கொடுத்துவிட்டார்கள், அவர்களே விற்கிறார்கள் என்று. இப்பொழுது நிலைமை என்ன? சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன்—கூட்டுறவுத் துறை எடுத்ததற்குப் பிறகு. எல்லோரும் உங்கள் கட்சிக்காரர்கள்தான் இருக்கிறார்கள், அதனால் ஊழல் நடக்கிறது, அதனாலே விநியோகமே தப்பு, என்று சொல் கிறார்கள்.

மொத்தமாகப் பார்த்தால் தமிழ்நாட்டிலே 9,037 விநியோகம் செய்கிற இடங்கள் இருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் 7,220 இருக்கின்றன, பஞ்சாயத்துக்களில் இருப்பவை 774, தனியார்

நுகர்வோர் சங்கங்கள் 329, தனியார்களிடம் இருப்பவை 714. தனியார்களிடம் இருக்கின்றவைகளையும்—மொத்தம் 9,037 இல் தனியார்களிடம் இருப்பது 714 தான்—எடுத்துக்கொள்வதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்கிறோம். இந்த 714-ஐ எடுக்காமல் இருப்பதற்குக் காரணம் சில சில பெரு நகரங்களிலே இடங்கள் கிடைக்காத காரணத்தால்தான். அதையும் இன்னும் 5, 6 மாதங்களில் சரிசெய்துவிடவேண்டுமென்ற நோக்கத்திலேதான் இருக்கிறோம்.

ஆகவே, விநியோக முறையைப் பொறுத்தவரையிலே எவ்வளவு தீவிரமாக சிறப்பாகச் செய்ய முடியுமோ அவ்வளவு சிறப்பாகச் செய்து வருகிறோம். இது எல்லாம் சோஷலிசக் கொள்கையல்லவா? கூட்டுறவுக் கொள்கை நல்ல கொள்கை. அந்த முறையிலேதான் விநியோக முறையிலேயும் கூட்டுறவுக் கொள்கையைக் கொண்டு வருவது சரியல்லவா? அவர்கள் இந்தக் கொள்கையை ஆதரிப்பதற்குப் பதிலாக எங்கள் மேல் இருக்கிற ஆத்திரத்தால் இந்தக் கொள்கையை தவறு என்று சொல்கிறார்கள். . . . . .

திரு. பெ. சீனிவாசன்: கூட்டுறவுத் துறையே கூடாது என்று சொல்வது எங்களுடைய கொள்கை அல்ல. அவர்கள் கூட்டுறவுக் கொள்கை நல்ல கொள்கை என்று சொன்னதற்காகப் பாராட்டுகிறோம். அந்தக் கூட்டுறவுத் துறையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் கட்சியினுடைய தலையீட்டைத் தடுக்க வேண்டும் என்று சொன்னோம். அது உங்களால் முடியவில்லை. அமைச்சர் அவர்கள் என்னுடன் வந்தால் நான் வேண்டுமானால் காட்டுகிறேன். விருதுநகரிலே இருக்கக் கூட்டுறவுச் சங்கம் புகழ்வாய்ந்த கூட்டுறவுச் சங்கமாக இருக்கது. அதிலே நல்லவர்கள் [illegible] வி. வி. [illegible] வேண்டியவர்கள் இருக்கிறார்கள். [illegible] அதிலே இப்போது அரசாங்கம் புதிதாக 3 பேர்களை நியமித்திருக்கிறது. அவர்களால் ஒரு பெட்டி கூட அங்கே வாங்க [illegible] அவர்களுக்கு இதுவரையில் அந்த ஸ்டோர் எங்கே இருக்கிறது என்று கூடத் தெரியாது. அவர்களைப் [illegible] அங்கே [illegible] எல்லாம் [illegible] வெளியே [illegible] என்ன என்று கேட்டால் டைரக்டர்களை மிரட்டு[illegible] செயலாளர் அமைச்சரிடம் சொல்வேன் என்று மிரட்டுகிறார். இப்படி தேர்தலில் நிற்க வேண்டியவர்களை, சம்பந்தம்



இல்லாதவர்களை நியமித்திருக்கிறார்கள். வேண்டுமானால் உங்களுடைய ஆடிட்டர்கள் இருக்கிறார்கள், ஆடிட் இருக்கிறது கணக்குப் பார்க்கச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:** சட்டத்திற்குப் புறம்பானதாக எப்படி நாமினேஷன் செய்திருந்தாலும் நீக்குவதற்குத் தயாராக இருக்கிறது அரசாங்கம். திரு. சீனிவாசன் போன்றவர்களுக்கு அந்தச் சட்டம் தெரியும். ஆகவே, அவர்கள். . . . .

**திரு. வீ. மலைக்கண்ணன்:** சட்ட மன்ற உறுப்பினர் நண்பர் சீனிவாசன் அவர்கள் பேசியபோது விருதுநகரில் உள்ள கூட்டுறவுத் துறையில் இராமநாதபுரம் செயலாளர் மிரட்டுகிறார், அமைச்சரிடம் சொல்லி மிரட்டச் சொல்கிறார் என்று சொல்கிறார். யார் அவர், என்ன விவரம் என்று சொல்லமுடியுமா?

**திரு. பெ. சீனிவாசன்:** விருதுநகர் கூட்டுறவு சொஸைடியில் வரதராஜன் என்ற வட்டச் செயலாளர் நியமிக்கப்பட்டிருக்கிறார். சுந்தரலிங்கம் என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இன்னொருவரும் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர்களுக்கும் கூட்டுறவிற்கும் சம்பந்தமே கிடையாது. அந்த ஸ்டோர் எங்கே இருக்கிறது என்று கூட அவர்களுக்குத் தெரியாது. நான் குறையாகச் சொல்லவில்லை, அவர்கள் அங்கே போகிறார்கள், இதைப்பற்றிக் கேட்டால் மந்திரியிடம் சொல்வேன் என்று மிரட்டுகிறார்கள். அங்கே டைரக்டர்களாக காங்கிரஸ்காரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எங்களிடம் வந்து சொல்கிறார்கள். வேண்டுமானால் கேட்டுப் பாருங்கள் தெரியும்.

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:** தனிப்பட்டவர்களைப்பற்றி சொல்கிறார்கள். இவர்களைப்பற்றி எங்களுக்குத் தெரியாது, அவர்களுக்குத்தான் தெரியும். கூட்டுறவுத் துறைக்கு குவாலிபிகேஷன் என்ன என்று அவர்களுக்குத் தெரியும். இருக்கிற குவாலிபிகேஷனுக்குத் தகுந்தபடிதான் நியமிக்கப்பட்டு இருப்பார்கள். அப்படியில்லையென்றால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கூட்டுறவுத் துறையிலே உள்ள கிளைச் சங்கங்களில் எடுத்ததுபோக இன்னும் 359 சங்கங்களின்மேல்தான் இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. 11 ஆயிரம் சில்லரை சங்கங்களில்

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1974 டிசம்பர் 21

நிர்வாகத் தவறுகள் காரணமாக, மிஸ்—அப்ரோபிரியேஷன்
காரணமாக பாதிக்கப்பட்டுள்ள இந்த 359 சங்கங்களைப் பொறுத்த
வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. நா. வெ. குருசாமி : 15 கிராமங்களுக்கு, 20 கிராமங்களுக்கு
ஒரு கூட்டுறவுச் சங்கம் என்று இருக்கிறது. உறுப்பினர்களின்
எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. அதுமட்டுமல்ல, சில
இடங்களிலே மக்கள் 10 மைல், 5 மைல் நடந்து சென்று
பொருட்களை வாங்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே,
அதிகப்படியாக சங்கங்களை அமைக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு
செய்வார்களா ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி. மக்களுக்கு விநி
யோகத்திலே கஷ்டம் இருக்கிறது, க்யூ வரிசை அதிகமாக இருக்
கிறது என்பதை உத்தேசித்து தான் நம்முடைய முதலமைச்சர்
அவர்கள் ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். எல்லா மாவட்ட
ஆட்சித் தலைவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்னையில்
1,500 முதல் 2,000 கார்டுகளுக்கு ஒரு கடை என்று
வைக்கப்பட்டு இருக்கிறது. அதற்குள்ளேதான் விநியோகம்
வைக்கப்படவேண்டும். நாங்கள் நிதர்சனமாகப் பார்த்தோம்.
ஒரு இடத்திலே 1,500 பேர்கள் என்ற முறையிலே நடத்திப் பார்த்
தோம். அங்கே க்யூ வரிசை இல்லை. 1,800-லிருந்து 2,000 கார்டுகள்
வரையில் ஒரு இடத்திற்கு இப்போது கொடுக்கலாம் என்று
கொடுத்திருக்கிறோம். நிர்வாகத்திலே பல கஷ்டங்கள் இருக்
கின்றன. நஷ்டங்கள் இதனால் இருக்கின்றன. இருந்தாலும் பரவா
யில்லை, இந்த நஷ்டத்தை சர்க்கார் ஏற்றுக்கொள்ளலாம் என்ற
முறையிலே அப்படி முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்
திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த
முறையைக் கிராமங்களுக்கும் கொண்டுவர ஏற்பாடு செய்யலாம்.

விலைவாசிபற்றி அதிகமாகச் சொல்லப்பட்டது. அகில இந்தியா
விலேயே நம்முடைய தமிழ்நாட்டிலேதான் குறைவாக இருக்கிறது.
அரிசி விலைதான் அதிகமாக இருக்கிறது. அதைச் சொல்வதில்
நானும் உங்களோடு சேர்ந்து கொள்கிறேன். வியாபாரிகள்
கையில் நிறைய கொள்முதல் செய்யச்சொல்லி விநியோகம் செய்
யச் செய்தோம். சில்லரை விநியோகங்களை முதலில் நாம் கையில்
வைத்துக்கொள்ள வேண்டுமென்ற முறையிலே நாம் செய்து
வந்தோம். குஜராத்திலே நடந்த துப்பாக்கிச் சூடு இங்கே இல்லை,



1974 டிசம்பர் 21]

மகாராட்டிரத்திலே நடந்த கொடுமை, கடுமையான பட்டினி இங்கே இல்லை. அந்த நேரத்திலே தமிழ் நாட்டிலே அரிசி 2½ ரூபாய்க்குத்தான் விற்றது. அந்த நேரத்திலே திடீரென்று மத்திய சர்க்கார் கட்டுப்பாட்டை எடுத்தார்கள். சிறுதானியக் கட்டுப் பாட்டை எடுத்தார்கள். அதனால் தான் நிலைமை இந்த அளவுக்கு வந்தது. அதைப்பற்றி இங்கே யாரும் பேசுவதில்லை. கஷ்டம் வந்தால் மனிதன் என்ற முறையிலேதான் பார்க்கவேண்டும், கட்சி பார்க்கக்கூடாது. எங்கள் பக்கத்திலிருந்து யாராவது வீக் ஆக பேசினால் அது பெருந்தன்மையாக இருக்கலாம் என்று சொல் வார்கள். ஆனால், இங்கேயிருந்து அங்கே போனவுடன் அங்கே போய் உட்கார்ந்துவிட்டால் அவர்கள் புடம்போட்ட தங்கம் என்று சொல்லி விடுகிறார்கள்.

இந்த நிலைமை ஏற்படுவதற்கு யார் என்ன செய்தார்கள் என்று பார்க்கவேண்டும். நவம்பர் மாதம் 80 ரூபாய்தான் கோர்ஸ் கிரெய்ன் விற்றுக்கொண்டு இருந்தார்கள். ஏப்ரலில் 135 ரூபாய்க்கு ஏறியிருக்கிறது. முதலாளிகளை விடக்கூடாது என்று சீனிவாசன், மாரிமுத்து எல்லோரும் சொல்கிறார்கள், அந்த முறையிலேதான் நாங்கள் முதலாளிகளை விடாமல் மக்களைப் பாதுகாப்போம் என்ற முறையிலே சில்லரை வியாபாரம் மொத்த வியாபாரம் எல்லா வற்றையும் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிடம் கொடுக்க ஏற்பாடு செய்தோம். ஆனால், அவர்கள் திடீரென்று கட்டுப்பாட்டை எடுத்துவிட்டார்கள். அதனால் மகாராட்டிரத்திலிருந்தும், குஜராத்திலிருந்தும் சேட்கள் எல்லாம் வந்து கொள்முதல் செய்து விட்டார்கள். நாம் எல்லாம் தமிழ்நாட்டிலே பிறந்தவர்கள், கொஞ்சம் யோசித்துப் பார்க்கவேண்டும், தமிழ்நாட்டிலே கஷ்டம் வருகிறது, தமிழன் கஷ்டப்படுகிறான் என்றால் அதை எல்லோரும் கண்டிக்கக்கூடாதா ?

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : புஞ்சை தானிய விநியோகம் சம் பந்தமாக அவர்கள் தலையிடக்கூடாது என்று உங்கள் கட்சியின் மூலமாகத் தீர்மானம் போட்டு அனுப்புவதற்குத் தயாராக இருக் கிறீர்களா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : திரு. மாரிமுத்து அவர்களுக்குத் தெரியும். ஏரியில் தண்ணீர் நிரம்பியிருக்கும்போது தான் மண்ணைப் போட்டு கரையைப் பலப்படுத்த வேண்டும்.

[1974 டிசம்பர் 21

இப்போது மண்ணை வெட்டிப் போட்டால் ஏரியிலே தண்ணீர் இல்லையே, இப்போது மண்ணைப் போட்டு என்ன பயன்? 80 ரூபாய்க்கு விற்றபோது வாங்குவதற்கு ஆள் இல்லை. மதுரை போன்ற இடங்களில் வாங்க ஆள் இல்லை என்று சொல்லப்பட்ட நிலை இருந்தது. விலை 60 ரூபாய்க்கு வந்துவிட்டது. இது சம்பந்தமாக சிறுதானியம் உற்பத்தி செய்த வியாபாரிகள் எனக்குத் தந்தி கொடுத்தார்கள், உடனே நான் மாநிலக் கூட்டுறவு ஸ்தாபனம் எந்தெந்தப் பகுதிகளிலே இருக்கிறதோ அதை 80 ரூபாய்க்குக் குறையாமல் வாங்க வேண்டுமென்று விலையை ஏற்றி வைத்தோம். இது ஜனவரியில் நடந்தது. திடீரென்று அசாதாரண நிலைமை இருக்கும்பொழுது குஜராத்திலே அப்பாதமிச் சூடு நடந்தது பற்றி நான் முதலிலேயே சொல்லியிருக்கிறேன். மத்திய உணவு அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நாமெல்லாம் இந்தியாவிலே, ஒரே தேசத்திலே வாழ்கிறோம், அங்கே துப்பாக்கிச் சூடு நடக்கிறது. நீங்கள் 80 ரூபாய்க்கு விற்கவில்லை என்று சொன்னார்கள். ஆனால் அவருடைய ஸ்டேட்மெண்ட் என்னைக் காட்டிக் கொடுப்பது மாதிரி பேசினால் என்ன செய்வது?

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: நான் காட்டிக்கொடுக்கவில்லை. திறந்துவிட்டோம் என்றால் திரும்ப மூடினால் திரும்ப வருகிறது.

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள், இந்தச் சிறுதானியங்களுக்கான கட்டுப்பாட்டை நீக்கி அதனால் வெளியே போய்விட்டதால் பற்றுக்குறை ஏற்பட்டது என்று சொன்னார்கள். 43 இலட்சம் டன் உற்பத்தியாக இருக்கும்பொழுது நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்திருக்கிறார்கள். இப்பொழுது 53 இலட்சம் டன் உங்கள் கணக்குப்படி ஆகிறது. வெளியே போகிறது என்றால் எவ்வளவு போகிறது என்று நீங்கள் கருதுகிறீர்கள்? எதனால் இந்தப் பற்றாக்குறை? இதைக் கொஞ்சம் விளக்கினால் நல்லது.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: நாளடி, நவரை, சம்பா ஆகியவைகளில் குறைவு ஏற்பட்டது, மழை இல்லாததால் மட்டுமல்ல, மேட்டூர் அணையைச் சீக்கிரம் மூடிவிட்டார்கள். அதனாலும் அத்தகைய குறைவு ஏற்பட்டது. நவரை மூன்று ஜில்லாக்களில் உபரி வரும், அதுவும் இல்லை என்று சொன்னார்கள்.



1974 டிசம்பர் 21] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

இந்தக் கஷ்டம் வரும்பொழுது சிறுதானியத்தைத் திறந்துவிட்டார்கள். 80 ரூபாய், 100 ரூபாய், 120 ரூபாய் என்று கொடுத்தார்கள். போனது எவ்வளவு என்ற கணக்கை என்னால் போட முடியவில்லை. இதுதான் விலை ஏறியதற்குக் காரணம். ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள்.

திரு. ஆலடி அருணா: ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். அமைச்சரவர்கள் சீக்கிரம் முடித்துவிடுங்கள். முடிந்தபிறகு ஒன்றிரண்டு விளக்கம் கேட்டால் சொல்லுங்கள்.

திரு. ஆலடி அருணா: ஒரேயொரு விளக்கம். மாண்புமிகு அமைச்சரவர்கள் அண்மையில் ஏற்பட்ட வறட்சி, பருவமழை தவறியது இவைகளைக் காரணமாகச் சொன்னார்கள். ஆனால் ஏற்பட்டிருக்கின்ற விபரீத நிலைமைகள் கடந்த 4 மாதங்களில் அல்ல, 10 மாதங்களாக தமிழகத்தில் விலைவாசி ஏறி இருக்கிறது, அரிசி, மற்ற தானியங்களின் விலை ஏறியிருக்கிறது. நீங்கள் சொல்லும் காரணத்தினுடைய பயணம் தொடங்கி 4 மாதங்கள்தான் ஆகிறது.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அநியாயமாகப் பழியைச் சொல்கிறார்கள். சிறுதானியக் கட்டுப்பாட்டை எடுத்ததால் விலை ஏறியது என்று சொல்கிறார்கள். ஆனால் ஏற்கனவே எஸ்டிமேட் கமிட்டியில் பேசியிருக்கிறோம். செயற்கைப் பஞ்சம் உருவாக்கப்பட்டிருக்கிறது என்று. 4,500 டன் நெல்லும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதெல்லாம் புதுக் கதை.

திரு. கே. என். குமாரசாமி: நான் சொல்ல வருவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். பேசி முடிக்கப்பட்ட பேச்சை மறுபடியும் பேசிக்கொண்டிருந்தால் முடியாது. எஸ்டிமேட் கமிட்டியை ஏன் எடுத்தீர்கள்?

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, உணவு தானியங்களை நாம் கட்டுப்பாட்டில் வைத்திருந்து, அந்த உணவு தானியக் கட்டுப்பாட்டையும் ஏமாற்றி கொண்டு போய் இருக்கிறார்களே. அப்படியில்லையென்றால் பஞ்சம் ஏற்பட்டிருக்காது, விலை ஏறி இருக்காது, அதைப்பற்றிக் கொஞ்சம் கூட அமைச்சரவர்கள் சொல்லவில்லையே.

[1974 டிசம்பர் 21

இப்போது மண்ணை வெட்டிப் போட்டால் ஏரியிலே தண்ணீர்
இல்லையே, இப்போது மண்ணைப் போட்டு என்ன பயன்?
80 ரூபாய்க்கு விற்றபோது வாங்குவதற்கு ஆள் இல்லை. மதுரை
போன்ற இடங்களில் வாங்க ஆள் இல்லை என்று சொல்லப்பட்ட
நிலை இருந்தது. விலை 60 ரூபாய்க்கு வந்துவிட்டது. இது
சம்பந்தமாக சிறுதானியம் உற்பத்தி செய்த வியாபாரிகள்
எனக்குத் தந்தி கொடுத்தார்கள், உடனே நான் மாநிலக்
கூட்டுறவு ஸ்தாபனம் எந்தெந்தப் பகுதிகளிலே இருக்கிறதோ
அதை 80 ரூபாய்க்குக் குறையாமல் வாங்க வேண்டுமென்று
விலையை ஏற்றி வைத்தோம். இது ஜனவரியில் நடந்தது.
கிறேன்று அப்பாதிரி நிலைமை இருக்கும்பொழுது
குஜராத்திலே அப்பாக்கிச் சூடு நடந்தது பற்றி நான் முதலிலேயே
சொல்லியிருக்கிறேன். மத்திய உணவு அமைச்சரவர்கள் சொல்லி
யிருக்கிறார்கள். நாமெல்லாம் இந்தியாவிலே, ஒரே தேசத்
திலே வாழ்கிறோம், அங்கே துப்பாக்கிச் சூடு நடக்கிறது. நீங்கள் 80
ரூபாய்க்கு விற்கவில்லை என்று சொன்னார்கள். ஆனால் அவருடைய
ஸெர்ரசென்டேட்டிவ் என்னைக் காட்டிக் கொடுப்பது மாதிரி
பேசினால் என்ன செய்வது?

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: நான் காட்டிக்கொடுக்கவில்லை.
திறந்து விட்டோம் என்றால் திரும்ப மூடினால் திரும்ப வருகிறது.

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்
சரவர்கள் சொன்னார்கள், இந்தச் சிறுதானியங்களுக்கான கட்டுப்
பாட்டை நீக்கி அதனால் வெளியே போய்விட்டதால் பற்றுக்குறை
ஏற்பட்டது என்று சொன்னார்கள். 43 இலட்சம் டன் உற்பத்தி
யாக இருக்கும்பொழுது நம்முடைய தேவையைப் பூர்த்தி
செய்திருக்கிறார்கள். இப்பொழுது 53 இலட்சம் டன் உங்கள்
கணக்குப்படி ஆகிறது. வெளியே போகிறது என்றால் எவ்வளவு
போகிறது என்று நீங்கள் கருதுகிறீர்கள்? எதனால் இந்தப் பற்றாக்
குறை? இதைக் கொஞ்சம் விளக்கினால் நல்லது.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தாளடி, நவரை,
சம்பா ஆகியவைகளில் குறைவு ஏற்பட்டது, மழை இல்லாததால்
மட்டுமல்ல, மேட்டூர் அணையைச் சீக்கிரம் மூடிவிட்டார்கள்.
அதனாலும் அத்தகைய குறைவு ஏற்பட்டது. நவரை மூன்று
ஜில்லாக்களில் உபரி வரும், அதுவும் இல்லை என்று சொன்னார்கள்.



1974 டிசம்பர் 21] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

இந்தக் கஷ்டம் வரும்பொழுது சிறுதானியத்தைத் திறந்துவிட்
டார்கள். 80 ரூபாய், 100 ரூபாய், 120 ரூபாய் என்று கொடுத்
தார்கள். போனது எவ்வளவு என்ற கணக்கை என்னால் போட
முடியவில்லை. இதுதான் விலை ஏறியதற்குக் காரணம். ஏ. ஆர்.
மாரிமுத்து அவர்கள் சொன்னார்கள்.

திரு. ஆலடி அருணா: ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் . உட்காருங்கள்.
அமைச்சரவர்கள் சீக்கிரம் முடித்துவிடுங்கள். முடிந்தபிறகு
ஒன்றிரண்டு விளக்கம் கேட்டால் சொல்லுங்கள்.

திரு. ஆலடி அருணா: ஒரேயொரு விளக்கம். மாண்புமிகு
அமைச்சரவர்கள் அண்மையில் ஏற்பட்ட வறட்சி, பருவமழை
தவறியது இவைகளைக் காரணமாகச் சொன்னார்கள். ஆனால் ஏற்
பட்டிருக்கின்ற விபரீத நிலைமைகள் கடந்த 4 மாதங்களில் அல்ல;
10 மாதங்களாக தமிழகத்தில் விலைவாசி ஏறி இருக்கிறது, அரிசி,
மற்ற தானியங்களின் விலை ஏறியிருக்கிறது. நீங்கள் சொல்லும்
காரணத்தினுடைய பயணம் தொடங்கி 4 மாதங்கள்தான் ஆகிறது.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள்
அநியாயமாகப் பழியைச் சொல்கிறார்கள். சிறுதானியக் கட்டுப்
பாட்டை எடுத்ததால் விலை ஏறியது என்று சொல்கிறார்கள். ஆனால்
ஏற்கனவே எஸ்டிமேட் கமிட்டியில் பேசியிருக்கிறோம். செயற்
கைப் பஞ்சம் உருவாக்கப்பட்டிருக்கிறது என்று. 4,500 டன்
நெல்லும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதெல்லாம் புதுக் கதை.

திரு. கே. என். குமாரசாமி: நான் சொல்ல வருவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். பேசி
முடிக்கப்பட்ட பேச்சை மறுபடியும் பேசிக்கொண்டிருந்தால் முடி
யாது. எஸ்டிமேட் கமிட்டியை ஏன் எடுத்தீர்கள்?

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, உணவு
தானியங்களை நாம் கட்டுப்பாட்டில் வைத்திருந்து, அந்த உணவு
தானியக் கட்டுப்பாட்டையும் ஏமாற்றி கொண்டு போய்
இருக்கிறார்களே. அப்படியில்லையென்றால் பஞ்சம் ஏற்பட்
டிருக்காது, விலை ஏறி இருக்காது, அதைப்பற்றிக் கொஞ்சம் கூட
அமைச்சரவர்கள் சொல்லவில்லையே.

[1974 டிசம்பர் 21

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:** கட்டுப்பாட்டில் வைத்திருந்தோம். கட்டுப்பாட்டைத் திறந்து, குஜராத்திலேயும், மகாராஷ்டிரத்திலேயும் சேட்டுகளை விட்டு வாங்கச் சொல்லியிருக்கிறார்கள். மீண்டும் அதைத்தான் சொல்கிறேன். மாநில அளவிற்குக் கொள்கைகளை அவர்கள் சொன்னார்கள். நான் அகில இந்தியக் கொள்கையைப் பேசுகிறேன். ஆகவே, மாநில அளவிலே உட்கார்ந்து பேசி, மாநிலத்திற்கான சக்தியைத் தேடித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்ன கொள்கையைச் செய்திருக்கிறோம் என்றால், நேற்று முன்தினம் முதலமைச்சரவர்கள் கொள்கையைப் படித்தார்கள். அதற்கான விளக்கங்களைக் கூட, தொண்டே அவர்களும், மற்றவர்களும் கேட்டிருக்கிறார்கள். மத்திய சர்க்காருக்கும், மக்களுக்கும் கிடைக்கின்ற 'ரீடெயில் பிரைஸ்' பற்றி மத்திய சர்க்காரின் அங்கீகாரம் வர வேண்டுமென்று அனுப்பியிருக்கிறோம். அதை ஒத்துக்கொண்டார்கள் என்றால் இன்றைக்கு எல்லாக் காரியங்களும் சிறப்பாக நடக்கும். மற்ற நடவடிக்கைகள் தீவிரமாக நடக்க பாதுகாப்புச் சட்டபடி அந்தப் பிரச்னைகளையெல்லாம் நிறைய எடுத்திருக்கிறோம். (குறுக்கீடு) எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். ஆகவே, இந்தக் கொள்கையைப் பொறுத்தவரையில் நீங்கள் ஆதரிக்க வேண்டும். கூட்டுறவுத் துறை மூலம் செய்ய வேண்டுமென்ற கொள்கை நாம் ஏற்படுத்தியிருக்கிற சோஷலிசக் கொள்கை. தனியாரிடமிருந்து விற்பனையை எடுக்க சர்க்கார் முயற்சிக்கிறது. வேறு திசை திருப்பி தனியாருக்குச் சாதகமாகவும், கூட்டுறவுத் துறையில் எடுக்கின்ற கொள்கையைக் கண்டித்தும் அந்த எண்ணத்தை நிராகரித்தும் கூற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு சர்க்கார் கொள்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு, அவர்களுடைய தீர்மானத்தை வாபஸ் வாங்கிக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பெ. சீனிவாசன்:** அமைச்சரவர்கள் சிறுதானியங்களுக்கான கட்டுப்பாட்டை மத்திய அரசாங்கம் நீக்கியதாகச் சொன்னார்கள். இப்பொழுது இருக்கும் விவாதத்தின்படி உணவுப் பொருட்கள் முழுவதையும் அரசாங்கமே எடுத்து விநியோகம் செய்தால் மத்திய அரசாங்கம் தலையிடுவதற்கு இடமில்லை. மத்திய அரசாங்கத்திற்கு உரிமையிருந்தாலும், கொள்முதல் செய்வது,



1974 டிசம்பர் 21] [திரு. பெ. சீனிவாசன்]

விற்பது இரண்டையுமே, களத்திலேயே செய்து சிறுதானியங்கள் உபரியைக் கொள்முதல் செய்தால் வியாபாரிகள் வாங்குவதற்குச் சந்தர்ப்பமே இருக்காது. அதற்காகவாவது சர்க்கார் இந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:** எங்கெங்கே பொருள்கள் கிடைக்கின்றனவோ அங்கேதான் கொள்முதல் செய்ய முடியும். அந்தக் கொள்முதலை கூட்டுறவுத் துறையிலே செய்யலாம், தனியார் துறைக்கு விடப் போவதில்லை.

**திரு. கோவை செழியன்:** பேரவைத் தலைவரவர்களே. . . .

**திரு. கே. கந்தசாமி:** பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார், இது முக்கியமான பிரச்னை. உணவுப் பிரச்னை முக்கியமான பிரச்னை. அதில் ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிறகு கேளுங்கள்.

**திரு. என். கே. பழனிசாமி:** கனம் சபாநாயகர் அவர்களே, சர்க்கார் எடுத்திருக்கும் நடவடிக்கைகள் முழுவதும் வெற்றிகரமாக நடக்க வேண்டுமென்பதற்காகத்தான் இதிலுள்ள சில குறைபாடுகளை எடுத்துச் சொல்லி சரியாக அமலாக்குவதற்காகத்தான் இந்தத் தீர்மானம்.

லெவி என்று போட்டிருக்கிறார்கள். லெவி என்று போட்டு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனே நேரடியாக 'டோடல் ப்ரொக்யூர்மென்ட்' என்று வைத்து, 10 எக்கர்களுக்கு மேல் இருக்கும் நிலங்களில் செலவு போக மீதமுள்ள நெல் அத்தனையையும் கொள்முதல் செய்தால்தான் போதுமான ஸ்டாக் கிடைக்கும். ஆனால் சர்க்கார் லெவி என்று போட்டு மீதி உள்ள நெல்லை அவர்கள் விற்பதற்கு அனுமதி கொடுக்கிறீர்கள். இதனால் கண்டிப்பாக பிளாக் மார்க்கெட், கள்ளப் பணம் பூராவும் கடலை எண்ணெய், இம்மாதிரி உணவுப் பொருள்களில் மேய்கிறது. எல்லாவற்றிலும் மேய்கிறது. ஆகவே, அந்த முறையிலே சர்க்கார் கொள்முதல் செய்து கோவாப்பரேட்டிவ் ஸ்டோருக்குக் கொடுத்து விநியோகம் செய்வதுபற்றி ஆட்சேபணை இல்லை அம்மாதிரி செய்யுங்கள்.

ஏனென்றல், இன்றைக்குள்ள வியாபார முறையே வேறு. இதைப் புரிந்துகொள்ள வேண்டும். காரணம் என்னவென்றல், முன்பெல்லாம் நெல் உற்பத்தியில் தேவையான அளவிற்கு, கொஞ்சம் சாப்பாட்டிற்கு வைத்துக்கொண்டு மீதி உடனே மார்க்கெட்டிற்குப் போகும். அதைச் சிறுசிறு வியாபாரிகள் கொள்முதல் செய்து மாற்றிக் கொண்டு போவார்கள். ஆனல் இன்றைக்கு நிலைமை அப்படி இல்லை. பணம் கிடைக்கிறது என்று ஏ.எம். இண்டஸ்ட்ரிஸ் போன்றவர்கள் 19 கோடி 17 கோடி ரூபாய் என்று, பெரிய ஏகபோக முதலாளிகள் ஏராளமான பணத்தை வைத்துக்கொண்டு வியாபாரத்தை நடத்துகிறார்கள். ஆகவே, அதிகமாக விளைந்துங்கூட விலை இறங்காததன் காரணம் இதுதான். ஆகவே, இந்தக் குறைபாடுகளை நீக்கிஞல் நான் இந்தத் தீர்மானத்தை வாபஸ் பெறுகிறேன். இல்லாவிட்டால் வற்புறுத்துவேன்.

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:** நாம் கொள்கைகளை எடுத்திருக்கிறோம். இடையிலே எந்தக் குறைபாடுகள் இருந்தாலும், உறுப்பினர்கள் எந்தெந்தக் குறைபாடுகளைச் சொல்கிறார்களே, அவைகளுக்கு நடவடிக்கை எடுக்கிறோம்.

(இரவு 7.00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. கந்தசாமி அவர்கள் மட்டும் ஒரு விளக்கம் கேட்பார்கள்.

**திரு. கே. கந்தசாமி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணவுப் பொருள் நிலவரத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது மழையின்மையால் வறட்சியின் காரணமாக எதிர்பார்த்த அளவுக்கும் கிடைக்காது, 37 லட்சம் டன்தான் கிடைக்குமென்று கூறினார்கள். நான் கிராமப் புறங்களில் சென்று சுற்றிப் பார்த்தேன். மதிப்பிற்குரிய திரு. கார்த்திகேயன், போர்டு மெம்பரைக் கலந்து பேசினேன், அவர்கள் எதிர்பார்த்த அளவு கூட கிடைக்காது என்று கூறுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு விளக்கத்தைக் கேள்வி யாகக் கேட்கலாமென்றுதான் அனுமதி அளித்தேனேயல்லாமல் புதிய பிரசங்கத்தைச் செய்யக் கூடாது. புதிய கருத்தைக் கோரிக்கையாக வைக்க முடியாது.



**திரு. கே. கந்தசாமி:** 20 லட்சம் ஷார்ட்டேஜ் என்று சொல்லு கிறார்கள். பஞ்சாபில் உபரி; ஆந்திராவில் உபரி. ஆளும் கட்சி உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மத்திய அரசிடம் என்ன சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் என்ன முயற்சி எடுத்தார்கள்? நம்முடைய அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து இப்போது விலை குறைவாக இருக்கும்போதே முன்கூட்டியே வாங்கி ஸ்டாக் வைத்துக் கொள்ளுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. திரு. பழனிசாமி, அவருடைய தீர்மானத்தை வற்புறுத்துகிறரா?

**திரு. என். கே. பழனிசாமி:** நான் என்னுடைய தீர்மானத்தை வற்புறுத்துகிறேன்.

திரு. என். கே. பழனிச்சாமி அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இந்த அளவில் முடிவுற்று, 23—12—1974 திங்கட் கிழமை காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7.03 மணி அளவில் ஒத்தி வைக்கப் பட்டது.

## 13. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

137. Notification issued with G.O. Ms. No. 667, Rural Development and Local Administration, dated the 16th March 1974 in regard to declaration of the areas forming the Arcot local planning area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

138. Notification issued with G.O. Ms. No. 1959, Rural Development and Local Administration, dated the 4th September 1974 in regard to an amendment to the rules in Part III and IV of Schedule III to the Madurai City Municipal corporation Act,

1971. [Laid on the table of the House under section 432 (2) of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971)].

139. Notification issued with G. O. P. No. 1, Commercial Taxes and Religious Endowments, dated the 20th July 1974 in regard to exemption from the tax payable under the Tamil Nadu General Sales Tax Act, 1959 by the Seva Samajam Boys Home, Saligram, Madras-26 on the sale of products manufactured by the inmates of the institution. [Laid on the table of the House under section 53(5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

140. Notification issued with G.O. Ms. No. 246, Revenue, dated the 19th January 1974 in regard to exemption from the tax payable under the Tamil Nadu General Sales Tax Act, 1959 by the christian Medical college and Hospital, Vellore on the sales of certain chemicals and biological agents to Research centres and Government Agencies. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

141. Notification issued with G.O. P. No. 2443, Revenue, dated the 11th June 1974 in regard to certain amendments to the Revenue Department Notification III No. 485 of 1966 published in Part III of the Fort St. George Gazette, Extraordinary, dated the 30th March 1966. [Laid on the table of the House under section 53(5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

142. Notification issued with G.O. Ms. No. 333, Co-operation, dated the 25th July 1974 in regard to an amendment to the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. [Laid on the table of the House under section 119(4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961)].

143. Notification issued with G.O. Ms. No. 170, Exercise and Prohibition, dated the 29th August 1974 in regard to empowering of all Assistant Collectors, Sub-Collectors, Revenue Divisional Officers and Assistant Commissioners of Exercise to compound offences in certain cases involving possession of liquor not exceeding



20 litres and below. [Laid on the table of the House under section 34(5) of the Tamil Nadu Excise Act, 1971 (Tamil Nadu Act 34 of 1971)].

144. Notification issued with G.O. Ms. No. 686, Rural Development and Local Administration, dated the 18th March 1974 in regard to declaration of the areas forming the Arni Local Planning area. [Laid on the table of the House under section 123(2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

145. Notification issued with G.O.Ms. No. 1634, Rural Development and Local Administration, dated the 8th July 1974 in regard to declaration of the areas forming the Kotagiri Local Planning Area. [Laid on the table of the House under section 123(2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

146. Notification issued with G.O. Ms. No. 680, Rural Development and Local Administration, dated the 16th March 1974 in regard to declaration of the areas forming the Nagapattinam Local Planning area. [Laid on the table of the House under section 123(2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

147. Notification issued with G.O. Ms. No. 1966, Education, dated the 29th November, 1974 in regard to the date on which the Tamil Nadu Recognised Private Schools (Regulation) Act, 1973 shall come into force. [Laid on the table of the House under section 57(2) of the Tamil Nadu Recognised Private Schools (Regulation) Act, 1973 (Tamil Nadu Act 29 of 1974)].

148. Notification issued with G.O. Ms. No. 673, Rural Development and Local Administration, dated the 16th March 1974 in regard to declaration of the areas forming the Turaiyur Local Planning area. [Laid on the table of the House under section 123(2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

149. Notification issued with G.O. Ms. No. 687, Rural Development and Local Administration, dated the 18th March 1974 in regard to declaration of the areas forming the Ootacamund

Local Planning area. [Laid on the table of the House under section 123(2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

150. Notification issued with G.O. Ms. No. 1845, Rural Development and Local Adminisartion, dated the 18th March 1974 in regard to declaration of the areas forming the Rameswaram Local Planning area. [Laid on the table of the House under section 123(2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

151. Notification issued with G.O. Ms. No. 685, Rural Development and Local Administration dated the 18th March 1974 in regard to declaration of the area forming the Manaparai Local Planning area. [Laid on the table of the House under section 123(2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

B. *Reports, Notifications and other papers.*

76. Report of the Committee on Estimates on the action taken by the Harijan Welfare Department.

77. The Report of the Committee on Estimates on the action taken by the Tamil Nadu Industrial Development Corporation.

@ 78. List of unstarred questions and answers from Nos. 1 to 35.

@ Laid on the table of the House on 20th December 1974.



## இணைப்பு

(27-ம் பக்கத்தில் 168-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க)

### விடை

(அ) ஆம்.

(இ) செங்கற்பட்டு மாவட்டத்தில் பரனூரில் நிறுவப்பட்டுள்ள மறுவாழ்வு இல்லத்தில் தொழுநோய் பிச்சைக்காரர்களுக்குப் பயன்படும் வகையில், காட்பாடியில் உள்ள ஸ்விடன் நாட்டு செஞ்சிலுவை சங்கத்தின் மறுவாழ்வு தொழிற்பிரிவு நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் ஒரு தொழிற்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. இத்தொழிற்கூடம் மேற்கண்ட நிறுவனத்தால் நிர்வகிக்கப்படுகிறது. இத்தொழிற்கூடம் இந்தியப் பிரதமரால் 10—9—74 அன்று தொடங்கப் பெற்று நடைபெற்று வருகிறது. இத்தொழிற்கூடத்தில் சக்கரம் இணைத்த நாற்காலிகள், உடல் ஊனமுற்றோர்க்கு வழங்குவதற்கு மூச்சக்கர வண்டிகள் முதலிய எஃகு சாமான்கள் செய்வதில் தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கு பயிற்சியளிக்கப்படுகிறது. மேலும் இந்த பரனூர் இல்லத்தில் இரண்டு விசைத்தறிகள் இந்த ஆண்டில் நிறுவப்பட்டு இல்ல உறுப்பினர்களுக்கு வேண்டிய வேட்டி, துண்டு போன்ற ஆடைகள் நெய்யப்படுகின்றன. மேலும், பரனூர், உளுந்தூர்பேட்டை, பர்கூர் ஆகிய இல்லங்கள் ஒவ்வொன்றிலும் 3 கைத்தறிகள் இயங்கி வருகின்றன. இவைகள் நோயாளிகள் புண்களுக்குக் கட்டுப்போடுவதற்கு வேண்டிய துணிகள் handage cloths ) மற்றும் துண்டுகள் நெய்கின்றன. மேலும் எல்லா இல்லங்களிலும் பாய் பின்னுதல், பண்ணைத் தொழில், கோழி வளர்த்தல், செருப்புத் தைத்தல் தையல் வேலை முதலியவை நடைபெறுகின்றன. மேலும் இவ்வில்லத்தில் 100 தொழுநோய் நெசவாளர்களுக்கு ஒரு கைத்தறி கூட்டுறவு சங்கம் நிறுவ செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

உளுந்தூர் பேட்டையிலுள்ள மறுவாழ்வு இல்லத்தில் தமிழ்நாடு மண்பாண்டப்பொருள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் ஒரு மண்பாண்டப்பொருள் செய்யும் கிளைத் தொழிற்சாலை நிறுவ செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில்...

இருந்து வருகிறது. மேலும் புதுக்கோட்டை இல்லத்தில் எழுது
பொருள் அச்சக இயக்குநர் ஒத்துழைப்புடன் உறைகள்
செய்யும் பிரிவு ( (envelope making unit) ) நிறுவ
ஆணையிடப்பட்டுள்ளது.

நிற்க, கதர் மற்றும் கிராமக் கைத்தொழில் வாரியத்தின்
ஒத்துழைப்புடன் உளுந்தூர்பேட்டை இல்லத்தில் 2 நெசவு
தொழில் (நூல் நூற்றல்) நிலையமும், தீப்பெட்டி செய்தல்,
தோல்பொருள் செய்தல், திருவண்ணாமலை வட்டத்தில் உள்ள
மல்லவாடி இல்லத்தில் பனை ஓலைப்பாய் நெய்தல், தீப்பெட்டி
செய்தல், புதுக்கோட்டை இல்லத்தில் பனை ஓலைப் பாய் நெய்தல்,
தீப்பெட்டி செய்தல், பரனூர் இல்லத்தில் தோல் பொருட்கள்
செய்தல் முதலிய கைத்தொழில்கள் நடைபெற்று வருகின்றன..
மேலும் இவ்வில்லங்களில் வசதி வாய்ப்புக்கேற்றவாறு, காகிதம்
செய்யும் தொழில், செங்கற் உற்பத்தி தொழில், கல்லுடைக்கும்
தொழில், பனை நாரிலிருந்து பிரஷ் தயாரிக்கும் தொழில்
போன்றவை துவக்கப்பட இருக்கின்றன.

## தமிழ் நாடு சட்டப் பேரவை

—————

### திங்கட்கிழமை, 1974 டிசம்பர் 23.

—————

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், திரு. நா. கணபதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. நடைமுறைக் கேள்விகள்.

### (அ) அவசரப் பொது முக்கியத்துவம் இல்லாத ஒரு வினாவை குறுகிய கால வினாவாக அனுமதித்தது குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள். குறுகிய கால வினா எண் 1.

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டர், சார். இந்தக் குறுகிய கால வினாவிலே என் பெயரும் வந்திருக்கிறது. நான் ஏற்கெனவே வினாவைக் கொடுத்துப் பல நாட்கள் ஆகிவிட்டன. நான் வேறு முறையில் கொடுத்திருந்தேன். சட்ட மன்ற நடைமுறைகளின்படி, கேள்வி கொடுத்த நான்கு நாட்களுக்குள்ளாக துறையினருக்குப் போய், 15 நாட்களுக்குள் துறையிலிருந்து விடை வரவேண்டு மென்றும் இருக்கிறது. ஆனால், இதில் சம்பந்தப்பட்ட பிரச்சினை நான் 21ந் தேதி சட்டமன்றத்தில் குற்றச்சாட்டாக எழுப்பிய பிரச்சினை. இந்தப் பிரச்சினையை நான் குற்றச்சாட்டாக எழுப்பினேன். ஆனால், ஒரு அங்கத்தினர் மாண்புமிகு சோனையா அவர்கள் 21ந் தேதி மாலையில் இந்தக் கேள்வியைக் கொடுத்து, அது குறுகிய கால வினாவாகக் கருதப்பட்டு, மாலையிலேயே அதற்குப் பதிலும் துறையிலிருந்து பெறப்பட்டு, அது இன்றைய வினாப் பட்டியலில் சேர்க்கப்பட்டு உறுப்பினர்களுக்கு சுற்றறிக்கையாக அனுப்பப்பட்டிருக்கிறது. இது மிக மிக முக்கியமாக, சட்ட மன்ற வரலாற்றிலேயே இல்லாத அளவுக்குத் துரிதமாக நடைபெற்றிருக்கிறது. இதற்குப் பதில் வேண்டும் என்பது தான். இதை அனுமதிக்கக்கூடாது என்பதல்ல என் நோக்கம். ஆனால், அந்த வினாவைக் குறித்து நான் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது இதுதான். "இராமநாதபுரம் மாவட்டம் அருப்புக் கோட்டை வட்டத்தில் மறவர் பெருங்குடி கிராமத்தில் பட்டத்தாலாச்சியம்மன் கோயிலுக்குச் சொந்தமான ஊரணியை

[திரு. க. சுப்பு] [1974 டிசம்பர் 23

மேற்படி கோயிலுக்கே பட்டா வழங்குமாறு ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா? ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?" என்பது கேள்வியாகும். இதில் என்ன அர்ஜன்ட் பப்ளிக் இம்ப்பார்டன்ஸ் இருக்கிறது என்பது புரியவில்லை. நான் குற்றச்சாட்டில் கூறியது இது. இதை அர்ஜன்ட் பப்ளிக் இம்பார்டென்ஸ் உள்ளதாகக் கருதி ஷார்ட் நோட்டீஸ் கேள்வியாக ஏன் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. ஆனால், நான் கொடுத்த கேள்வி டிஸ்-அலவ் செய்யப்பட்டிருக்கிறது. பின்னால் என் கேள்வி என்ன ஆயிற்று என்று கேட்டால், ஒரு மணி நேரத்திற்குள் திரு. சோனையா அவர்களால் கேள்வி போடப்பட்டு, மாலையிலேயே துறையினருக்கு அனுப்பி, மாலையிலேயே பதில் பெறப்பட்டு, மாலையிலேயே எங்களுக்கு சர்க்குலர் வருகிறது. அப்படி இது என்ன ரொம்ப அவசியமானது என்று தெரியவில்லை. இதில் எந்தவித அர்ஜன்ஸியும் இருப்பதாகச் சொல்ல முடியாது. இது மிஸ்-யூஸ் ஆப் பவர் என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. இதில் பப்ளிக் இம்பார்டன்ஸ் இல்லை. ரொம்ப அவசரமாக விவாதிக்கப்பட வேண்டிய பிரச்சினை அல்ல.

ஆனால், இது விவாதத்திற்குரிய பிரச்சினை. விவாதத்திற்குரிய இந்த பிரச்சினையை எப்படி வினா நேரத்திற்குள் கேட்பது என்று தெரியவில்லை. துணைவினாக்களில் இதை விவாதிக்க முடியாது. ஆகவே, விதி 40இன்கீழ் அரை மணி நேர விவாதத்தைத் தாங்கள் அனுமதிப்பதுதான் பொருத்தமாக இருக்கும். அதில் நாம் எல்லா விவரங்களையும் எடுத்துப் பேச வாய்ப்பாக இருக்கும். வினா என்று கேட்டால் இந்தப் பிரச்சினை அவ்வளவாக வேறு யாருக்கும் தெரிந்திருக்க நியாயம் இல்லை. ஒரு சில பேருக்கு இரண்டு பேருக்கு இந்தப் பிரச்சினை நன்றாகத் தெரியும். நாங்கள் இரண்டு மூன்று கேள்விகளில் விளக்கம் பெற அவ்வளவாக இடம் இல்லை என்ற காரணத்தால் இதைக் குறுகிய கால வினாவாக அனுமதித்தது விதிகளுக்கு முரண்பட்டதாகும். ஆகவே 40-வது விதியின்கீழ் அரை மணி நேர விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும். 57-வது விதியின்கீழ் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் கொடுத்த வினா 18ந் தேதி துறைக்கு வந்து சேர்ந்திருக்கிறது. அதே மாதிரி திரு. சோனையா அவர்கள் கொடுத்த வினாவும் அதே பொருளில் இருந்ததால் ஒன்றாக வருகின்றன. அது 18ந் தேதி அனுமதிக்கப்பட்டது. 21ந் தேதி திரு. சோனையா அவர்கள் கொடுத்த குறுகிய கால வினா அனுமதிக்கப்பட்டது. இரண்டும் ஒரே



1974 டிசம்பர் 23] [பேரவைத் துணைத் தலைவர்]

பொருள் பற்றியிருந்ததால் இரண்டு வினாக்களும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதிலே வேறு விதமான விவாதத்திற்கு இடமில்லை. எனினும் உறுப்பினர் அவர்கள் எழுதிக் கொடுத்தால் துறையிலிருந்து பரிசீலனை செய்து அதைப்பற்றி மேல் நடவடிக்கை எடுக்கலாம். இப்பொழுது வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் விடை அளிக்கலாம்.

திரு. க. சுப்பு: நான் எழுதிக்கொடுத்திருக்கிறேன். ஒன்றிரண்டு கேள்விகள் கேட்டு விடுவதால் இந்தப் பிரச்சினை முடிந்துவிடக்கூடியதல்ல. ஒரு கேள்வி இரண்டு கேள்விகளை அனுமதிப்பதால்மட்டும் முடியக் கூடியதல்ல. இது குற்றச்சாட்டாகக் கூறிய பிரச்சினை. விவாதத்திற்குரிய பிரச்சினையாகக் கொண்டுவரப்பட்டது. சுவையாக விவாதிக்கப்பட வேண்டிய பிரச்னையாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்பொழுதுதான் துறைக்கு எழுதிக் கொடுத்திருப்பதாகச் சொல்கிறார். அதன்மீது பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும். இப்பொழுது வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் விடை அளிப்பார்கள்.

## 2. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

### மறவர் பெருங்குடி கிராமத்தில் பட்டா வழங்கல்

* 1. குறுகிய கால வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு திரு. க. சுப்பு:

வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் அருப்புக்கோட்டை வட்டத்தில் மறவர் பெருங்குடி கிராமத்தில் பட்டத்தாலாச்சியம்மன் கோயிலுக்குச் சொந்தமான ஊரணியை மேற்படி கோயிலுக்கே பட்டா வழங்குமாறு ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ): சிவகாசி உதவி வட்டாட்சியரால் பட்டத்தாலாச்சியம்மன் கோவிலுக்காக கோவில் அறங்காவலர் திரு. இராமசாமி செட்டியார் பெயரில்

[1974 டிசம்பர் 23

2.17 ஏக்கர் நிலத்திற்கு பட்டா வழங்கியதை எதிர்த்து அரசிடம் மேல்முறையீடு செய்யப்பட்டிருக்கிறது. மேல்முறையீடு அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. க. சுப்பு : துணைத் தலைவர் அவர்களே, இதிலே குறிப்பிட்ட மனுதாரர்களுக்குப் பட்டா வழங்கக்கூடாது என்று, அசிஸ்டென்ட் செட்டில்மென்ட் ஆபீசர், போர்டு ஆப் ரெவின்யூ, அரசாங்கம், அதற்கு மேல் ஹைகோர்ட் வரை சென்று, இவர்களுக்கெல்லாம் பட்டா வழங்கக் கூடாது என்று கொடுத்திருக்கும் தீர்ப்பு அரசாங் கத்திற்குத் தெரியுமா? அதற்குப்பின்னல் இதற்கென்று தனியாக ஜி.ஓ. 990—போட்டு, அதன்பிறகு ஒருவருக்குப் பட்டா வழங்குமாறு சொல்லியிருப்பது உண்மையா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இராமனுத புரம் மாவட்டத்தில் அருப்புக்கோட்டை வட்டத்தில் மறவர் பெருங் குடி கிராமத்தில் பட்டத்தாலாச்சியம்மன் கோயில் என்று ஒன்றுண்டு. அந்தக் கோயில் யாருக்குப் பாத்தியம், அந்தக் கோயில் இருக்கும் இடம், அதற்கு முன்னல் உள்ள காலி இடம், அதற்கு முன்னல் உள்ள ஊரணி யாருக்குப் பாத்தியம் என்பது பிரச்சினை. கோவில் 25 சென்ட் ; காலி இடம் 25 சென்ட். ஊரணி 1 ஏக்கர் 98 சென்ட். ஆக இந்த இரண்டு ஏக்கரா 48 சென்ட் யாருக்குப் பாத்தியம். இந்தக் கோவிலுக்குப் பொறுப்பாளர் யார் என்று 1913 ஆம் ஆண்டு டிஸ்ட்ரிக்ட் முன்சிப் கோர்ட்டிலும், 1916 ஆம் ஆண்டு சப்- கோர்ட்டிலும், 1917 ஆம் ஆண்டு ஹைகோர்ட்டிலும் வாதம் நடந்தது. அந்த வாதத்தில் பட்டா கொடுக்கின்ற பிரச்சினை எழுப்பப் படவில்லை. யாருக்குச் சொந்தம் என்றுதான் அங்கே நிர்ணயிக்கப் பட்டது. யாருக்குச் சொந்தம் என்று மூன்று நீதி மன்றங்கள் நிர்ண யித்திருக்கின்றார்களோ, அவர்களுக்கே அசிஸ்டென்ட் கலெக்டர் பட்டா கொடுத்திருக்கிறார். அரசாங்க உத்தரவிலே பட்டா கொடுக் கச் சொல்லி எந்த உத்தரவும் போடப்படவில்லை. மாண்புமிகு உறுப் பினர் குறிப்பிடும் உத்தரவில் நீதி மன்றத் தீர்ப்புகளின்படி அசிஸ்டென்ட் கலெக்டர் பட்டா கொடுக்கலாமா என்பதைப்பற்றி ஆராய அவர்களுக்கு அரசு உத்தரவு போட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல. யார் யார் ஆட்சேபித்தார்கள் என்று சொன் ஞர்கள். அந்தக் கிராமத்தில் சில பேர் ஆட்சேபித்தார்கள். என்ன ஆட்சேபணை என்று டி.ஆர்.ஓ.வைவிட்டு விசாரணை செய்யச்



1974 டிசம்பர் 23]

சொன்னேம். இப்படிப் பட்டா கொடுத்துவிட்டால் ஊரணியைப் பொது மக்கள் பயன்படுத்துவது தடைப்பட்டு விடுமோ என்று அச்சம் தெரிவித்தார்கள். மண் எடுப்பது தடை பட்டுவிடுமோ என்று அச்சம் தெரிவித்தார்கள். அந்த அச்சத்தைத் தவிர்க்கும் வண்ணம் அசிஸ்டென்ட் கலெக்டர் பட்டா கொடுக்கும்போது "ஸப்ஜெக்ட் டு செர்ட்டன் கண்டிஷன்ஸ்", பொதுமக்கள் ஊரணி யிலிருந்து தண்ணீர் எடுக்கலாம், பொதுமக்கள் ஊரணியிலிருந்து மண் எடுக்கலாம் என்று கண்டிஷன் போடப்பட்டிருக்கிறது.

திரு. க. சுப்பு : இது யாருக்குச் சொந்தம் என்பதெல்லாம் விவாதிக்கப்பட்டு, ஒரு குறிப்பிட்ட வகுப்பாருக்குச் சொந்தம் என்று தீர்மானிக்கப்பட்டு, அவர்களுக்குப் பட்டா கொடுக்கவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. அரசாங்க உத்தரவிலே மறு பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது. ரீ-கன்ஸிடரேஷன் என்று போட்டு அதற்குச் சாதகமாக இருப்பதற்காக, ரீகன்சிடரேஷன் பெட்டிஷன் வாங்கிக்கொண்டு ஒரு ஜி.ஓ. போடுகிறார்கள். அந்த ஜி.ஓ. நீதி மன்றத் தீர்ப்புக்கு இன்டர்ப்ரடேஷன் செய்து, பட்டா கொடுக்கச் சாதகமாகப் போடப்பட்டிருக்கிறது. அந்த ஜி.ஓ.வின் காப்பிகூட வைத்திருக்கிறேன். அந்த ஜி.ஓ. இருக்கும் காரணத்தினலேதான் நான் இந்தப் பட்டாவை இந்தக் குறிப்பிட்ட வகுப்பாருக்குக் கொடுப் பதைத் தவிர வேறு வழி இல்லை என்று சிவகாசி சப்-கலெக்டர் எழுதி யிருக்கிறார். இதைத் தவிர வழியில்லை என்று சொல்கிறார். பட்டா கொடுத்தது நியாயம் இல்லை என்று .........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : துணைக் கேள்வி சுருக்க மாக இருக்கவேண்டும். "பாயின்ட்"டை மட்டும் குறிப்பாகக் கேட்கவேண்டும்.

திரு. க. சுப்பு : 1913இலிருந்து வந்திருக்கிற விவகாரம். நான் ஏற்கெனவே குற்றச்சாட்டாக வைத்திருக்கக்கூடிய விவகாரம். இந்த விவகாரத்தை குறுகிய கால வினவின் மூலமாக அவ்வளவு எளிதிலே தீர்த்துவிட முடியாது. அரை மணி நேர விவாதத்திற்குத் தாங்கள் அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விளக்கமாகச் சொல் லாமல் சுருக்கமாகச் சொல்லுங்கள். இதுகுறித்துப் பரிசீலனை செய்து முடிவு சொல்கிறேன்.

[1974 டிசம்பர் 23

(திரு. சுப்பு நின்று கொண்டிருந்தார்)

மற்ற உறுப்பினர்கள் துணைக் கேள்வி கேட்க வழி விடுங்கள்.

திரு. த. சோனையா : தலைவர் அவர்களே, இதிலே ஜாதிப் பிரச்னை எழுப்பப்பட்டதா? பட்டா கொடுப்பதை ஆட்சேபித்தவர்கள் என்ன காரணங்களைக் கூறியிருக்கிறார்கள் என்பதை அரசு அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, பட்டா கொடுப்பதை ஆட்சேபித்தவர்கள் என்ன ஆட்சேபித்தார்கள் என்று தான் முன்பே சொன்னேன். மண் எடுக்க உரிமை வேண்டும், தண்ணீர் எடுக்க உரிமை வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அரசாங்கம் மறுபரிசீலனை செய்யும்படி உத்தரவைப் போட்டிருக்கிறது. அதிலே எந்தத் தவறும் இல்லை. ஜாதி பிரச்னை பற்றிச் சொன்னார்கள். நான் ஜாதியைப்பற்றிப் பேசி இந்த மன்றத்தின் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. மன்றத்திலே சார்ஜ் செய்த தாணாவதிப் பிள்ளை ஜாதி அதிலே இல்லை.

THIRU K. T. K. TANGAMANI : It is an important question. Under Rule 40, you may allow an half-an-hour discussion.

MR. DEPUTY SPEAKER : We will discuss about it after the Hon. Speaker comes.

*Police Medals*

* 176 Q.—THIRU P. ETTIAPPAN : Will the Hon. the Chief Minister be pleased to state :

(a) whether it is a fact that the Chief Minister (Arignar Anna) Police Medals of 1973 have also been awarded to persons who had received medals of the President of India : and

(b) if so, the reasons therefor?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம். நால்வர் பெற்றுள்ளனர்.

(இ) தமது நிகரற்ற கடமையுணர்விற்காக தமிழக முதல்வர் பதக்கம் பெற தகுதியுடைய ஒரு பணியாளர் தான் திறமையாகப் பணியாற்றியதற்காக ஏற்கனவே குடியரசுத் தலைவர் பதக்கம் பெற்ற காரணத்தினால், தனக்கு முதல்வர் பதக்கம் பெற வாய்ப்பு



1974 டிசம்பர் 23]

இல்லையே என்று வருந்திடக் கூடாதென்ற நோக்கத்தில் அப்படிப்பட்ட பணியாளர்களுக்கும் முதல்வர் பதக்கம் வழங்க விதிகளில் வகை செய்யப்பட்டுள்ளது. ஆனால் குடியரசுத் தலைவரின் பதக்கம் வாங்கிய ஒருவர், வாங்கிய காலத்திலிருந்து ஓராண்டு முடிந்த பின்னரே, முதல்வர் பதக்கம் பெற தகுதியுடையவர் ஆவர் என்று நாம் வகை செய்திருக்கிறோம். முன்னால் குறிப்பிட்ட நால்வரும் தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கம் வழங்கும் திட்டம் துவக்கப்படுவதற்கு முன்னரே குடியரசுத் தலைவர் பதக்கம் பெற்றவர் ஆவர்.

திரு. பூ. எட்டியப்பன் : இந்தத் திட்டத்தின் கீழ் பல பதக்கங்களை ஒருவரே பெற்றுக்கொள்வதால் மற்றவர்களுக்கு ஒரு அருவருப்பு ஏற்படக் காரணமாக இருப்பதாலும், மற்றவர்களுக்கு அதே தகுதி உள்ளவர்களுக்கு அல்லது அடுத்த தகுதி உள்ளவர்களுக்கும் பதக்கங்கள் வழங்குவது என்பது அவர்களை ஊக்குவிப்பதாக இருக்கும் என்ற காரணத்தால், அதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்களது பணிக் காலத்தில் ஒரே ஒரு முறை மாத்திரம் பதக்கங்கள் அளிக்கப் பெறுவதற்கு இப்பணியினர் தகுதி உடையவர்களாவார்கள் என்று விதி இருக்கிறது. சிறப்புப் பணிக்காக குடியரசுத் தலைவர் பதக்கம் பெற்றவர்கள் தனிச் சிறப்பு வாய்ந்த கடமைப்பற்று உறுதிக்குரிய பதக்கங்கள் பெற அதே ஆண்டில் தகுதி உடையவர் அல்ல என்றும் இருக்கிறது. குடியரசுத் தலைவர் பதக்கத்தைப் பெற்ற காலத்திலிருந்து ஒரு ஆண்டு முடிந்த பிறகே முதல் அமைச்சர் பதக்கத்தைப் பெற அவர்கள் தகுதி உடையவர்களாகிறார்கள். குடியரசுத் தலைவர் பதக்கத்தைப் பெற்ற பிறகு முக்கியமான வீரச் செயலில் ஈடுபட்டு, அவர்கள் மேற்கொண்டு ஒரு பெரிய பேராபத்துக் காலத்தில் யாரையாவது காப்பாற்றி இருந்தால் அந்த வீரப்பதக்கம் பெற அவர்கள் தகுதியற்றவர் என்ற அளவில் நாம் ஒதுக்கிவிட முடியாது.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : முதல் அமைச்சர் பதக்கத்தைப் பெற காவலர்கள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்? சான்றிதழ்களை வைத்தா? அல்லது தேர்ந்தெடுப்பதற்காக மாநில அளவில் ஏதாவது குழு இருக்கிறதா?

[1974 டிசம்பர் 23

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: குறைந்தபட்சம் பத்தாண்டுகளுக்குக் குறையாமல் நல்லமுறையில் பணியாற்றினார்கள் என்ற சான்றிதழ் பெறுகிறவர்களாக இருப்பார்களேயானால் அவர்களுக்கு சிறப்புப் பதக்கங்கள், தனிச் சிறப்புப் பதக்கங்கள் அளிக்கப்படுகின்றன. அதல்லாமல் பிற நேரங்களில் வேறுபல திருடர்களைப் பிடிக்கிற முயற்சிகளில் ஆபத்துக்காளாகி வீரச் செயல்கள் புரிந்திருப்பார்களேயானால் அதற்கும் அவர்களுக்கு அந்தத் தகுதியின் அடிப்படையில் அளிக்கப்படுகிறது.

திரு. வை. பாலசுந்தரம்: மிகத்திறமை உள்ளவர்களுக்குத்தான் இந்தப் பரிசுகள் கிடைக்கின்றன. இப்படிப்பட்டவர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதிலும் சலுகை வழங்கப்படுகிறதா? அப்படியெனில் எவ்வளவு பேர்களுக்கு அப்படி பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்தப் பதக்கத்திற்கும் பதவி உயர்வுக்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது. ஆனால் பதக்கம் அளிக்கப்படுகிற நேரத்தில் அவர்களுக்கு என்று ஒரு பண முடிப்பு வழங்கப்படுகிறது.

திரு. நா. வீராசாமி: குடியரசுத் தலைவர் பதக்கம் பெற்ற ஒரு ஆண்டுக் காலத்திற்குப் பிறகுதான் முதல் அமைச்சர் அவர்கள் அளிக்கிற அண்ணா பதக்கம் பெறமுடியும் என்று ஒரு விதி இருக்கிறது. ஆனால் குறிப்பிட்ட அந்த ஆண்டில் ஒரு சப்-இன்ஸ்பெக்டர் அல்லது இன்ஸ்பெக்டர், அந்தக் கோட்டகரியில் சேர்ந்தவர்கள், அந்த ஆண்டு தான் அந்தப் பரிசு பெறுவதற்கு உரியவர்கள் என்று பரிந்துரை செய்யக்கூடும். அடுத்த ஆண்டு அவர்கள் பதவி உயர்வு பெற்று அடுத்த கோட்டகரிக்கு போய்விடக்கூடும். எனவே, அதை மனதில் கொண்டு அந்த விதியை எடுத்துவிட்டு ஒரே ஆண்டில் இரண்டு பதக்கங்களும் பெறலாம் என்ற ஏற்பாட்டைச் செய்ய நம் அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அப்படிப்பட்ட ஒரு சிக்கல் இருக்கிறதா என்பதைக் கவனித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை பிறகு பரிசீலிக்கச் செய்யலாம்.



1974 டிசம்பர் 23]

திரு. கே. ஏ. வகாப்: குடியரசுத் தலைவர் பதக்கம் பெற அதைச் சிபாரிசு செய்வது யார்? அதேமாதிரி தமிழக முதல்வர் பதக்கத்தைப் பெற சிபாரிசு செய்வது யார்? அதிகாரிகளா அல்லது பொது மக்கள் அபிப்பிராயம் ஏதாவது கோரப்படுகிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதிகாரிகள், அதிகாரிகள் குழு, பிறகு அரசு இவர்கள் மூலமாகத்தான் சிபாரிசு செய்யப்படுகிறது. இதில் பொது மக்கள் அபிப்பிராயங்கள் எதுவும் தனியாக கோரப்படுவதில்லை.

திரு. த. சோனையா: காவலர்களைப் போன்று அரசு ஊழியர்களிலும் சிலபேர்கள் தங்கள் உயிரைப் பெரிதாக மதிக்காமல் ஆபத்தான நேரங்களில் மற்றவர்களுக்கு உதவி செய்து அவர்களைக் காப்பாற்ற தங்கள் உயிரைக் கூட விடுகிற அளவிற்கு சில அரசு அலுவலர்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் இந்தப் பதக்கங்கள் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதற்கு ஆண்டுதோறும் வரையறுத்து அதற்கு ஒரு நிகழ்ச்சி ஏற்பாடு செய்து பதக்கம் அளிப்பதற்கு திட்டம் எதுவும் இல்லை. ஆனால் உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் யாராவது அரசு அலுவலர்கள் அப்படிப்பட்ட செயல்களில் ஈடுபட்டிருப்பார்களேயானால் அதற்குத் தேவையான நேரத்தில் சிறப்பு அம்சமாக எடுத்துக்கொண்டு முதல் அமைச்சர் நிதியிலிருந்து அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: முதல் அமைச்சர் பதக்கம் அளிக்கும் நேரத்தில் பண முடிப்பும் வழங்குவதாகச் சொன்னார்கள். எவ்வளவு தொகை தற்போது வழங்கப்படுகிறது? அதை உயர்த்தித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: குடியரசுத் தலைவர் பதக்கம் பெறுபவர்களுக்கு எந்தவிதமான மானியமும் அளிக்கப்படுவதில்லை. ஆனால் அண்ணா பிறந்த நாளில் வழங்கப்படுகிற முதல் அமைச்சர் பதக்கம் பெறுகிறவர்களுக்கு காவலர்கள், தலைமைக் காவலர்கள், தீயணைப்புப் படையினர், லீடிங் பைர்மென், ட்ரைவர்கள் மற்றும் இணையான பதவியில் இருப்பவர்கள் இந்தப் பதக்கத்தைப் பெறுபவர்களாக இருந்தால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. சப்-இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர், நிலைய அதிகாரிகள், கோட்ட தீயணைப்பு உதவி அதிகாரிகள்

மற்றும் இணையான பதவியில் இருப்பவர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்கள் இந்தப் பதக்கத்தைப் பெறுபவர்களாக இருந்தால் இரண்டாயிரம் ரூபாய் ஒவ்வொருவருக்கும் மானியம் வழங்கப்படுகிறது. காவல்துறை டெப்டி சூப்பரின்டென்டென்ட், கோட்ட தீயணைப்பு அதிகாரி (Grade I and II) போன்றவர்களுக்கு, அவர்கள் இந்தப் பதக்கத்தைப் பெறுபவர்களாக இருந்தால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் மூவாயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. வீரச் செயல்களுக்கு அளிக்கப்படுகிற பதக்கங்களையொட்டி மூவாயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது.

திரு. கே. என். குமாரசாமி: நாட்டின் உற்பத்தித் துறையில் திறமை பெற்றவர்களுக்கு, அவர்கள் விவசாயிகளானாலும் சரி அல்லது தொழில் துறையில் இருப்பவர்களானாலும் சரி, அவர்களுக்கும் முதல் அமைச்சர் பதக்கம் வழங்க ஏற்பாடு செய்வது பரிசீலிக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்தக் கேள்வி காவலரைப் பற்றியது.

திரு. கே. கந்தசாமி: காவலர்கள் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் கடமையாற்றுவதற்காக பரிசு கொடுக்கிறோம். அதேபோல் அரசு ஊழியர்கள், செக்போஸ்ட்களில் இருக்கிற ரெவின்யூ அதிகாரிகள் நல்ல முறையில் பாதுகாத்து வருகிறார்கள். இன்று கூட ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டரை தாக்கிவிட்டு ஓடிவிட்டதாக செய்தி வந்திருக்கிறது. எனவே, தங்கள் உயிரைக் கூட பொருட்படுத்தாமல் தங்கள் கடமைகளை நிறைவேற்றுகிற ரெவின்யூ அதிகாரிகளுக்கும் சிறப்புப் பரிசு, அண்ணா மெடல் அல்லது முதல் அமைச்சர் பரிசு போன்றவற்றை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: முன்பே சொன்னேன். காவலர்கள் அன்னியில் வேறு அரசு அலுவலர்கள் தீரச்செயல்களில் ஈடுபட்டு உயிர் இழந்தால் அல்லது அங்கஹீனமடைந்தால் அல்லது காயமுற்றால் அவைகளையெல்லாம் அரசு சிறப்பு அம்சமாகக் கருதி கவனிக்கும்.

திரு. கோவை செழியன்: பொதுவாக நம் காவல்துறை, தமிழ் நாடு காவல் துறை மிகத்திறமையான ஒரு துறையாகும். இதில் பணியாற்றுகிறவர்கள், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கூறியபடி உயிரை அர்ப்பணம் செய்து வாழ்நாள் முழுவதும் பணி





யாற்றுகிறார்கள். அப்படி அதிகப்படியாக தியாகம் செய்கிற இப்படிப்பட்ட அதிகாரிகளுக்கு பத்ம ஸ்ரீ, பத்ம பூஷன் போன்ற பட்டங்கள் தரவேண்டுமென்று மத்திய அரசுக்கு இந்த அரசு பரிந்துரை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்படிப்பட்ட பட்டங்கள் எந்தெந்த தகுதி படைத்தவர்களுக்கு அளிக்கப்படுவது என்று மத்திய அரசு ஒரு நிர்ணயம் செய்திருக்கிறது. அந்தத் தகுதியில் அடங்குகிற அதிகாரிகள் இருப்பார்களானால் அவர்களை சிபார்சு செய்வதற்கு இந்த அரசுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

### *Perspective State Plan*

* 177 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Perspective State Plan has been submitted to Government by the State Planning Commission; and

(b) if so, whether a copy of the same will be placed on the table of the House?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(ஆ) நீண்டகாலத் திட்டங்கள் (ஆங்கிலம், தமிழ் உரை இரண்டும்) அச்சில் உள்ளன. அவை தயாரானவுடன் பேரவை முன் வைக்கப்படும்.

திரு. என். கே. பழனிசாமி: இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு பணத்தை எவ்வாறு திரட்டப்போகிறோம். திட்டக் குழு சமர்ப்பித்த அறிக்கையில் பவர் டெவலப்மென்ட்டுக்கும், பாசன வசதிக்கும் பரிந்துரை செய்திருப்பது சரியல்ல என்றும் போதுமானதல்ல என்றும் சொல்லப்படுகிறது. அதை சரி செய்வதற்கு என்ன செய்யப்போகிறது சர்க்கார்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்தத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றுவதற்கு மாநில அரசு முழுத் தொகையையும் செலவு செய்வது என்பது இயலாத காரியம். மத்திய அரசு சார்பில் திட்டப்படுகிற திட்டங்களுக்கு அனுசரணையாகவும் மாநில அரசு மேற்கொள்ளவேண்டிய திட்டங்களுக்கு அனுசரணையாகவும் திட்டக் குழு காரியங்களை ஏற்கின்றன.

[1974 டிசம்பர் 23

திரு. கே. டி. கே. தங்கமணி : திட்டக் குழுவிற்கு ஒரு உதவித் தலைவரை புதிதாக நியமிக்கப் போகிறார்கள். அந்த அடிப்படையில் தான் இந்தத் திட்டக் குழு சிபார்சு வந்திருக்கிறதா? அந்த சிபார்சுகளின் பேரில் சபையின் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். எப்போது அதை விவாதத்திற்கு வைத்துக்கொள்ள வேண்டும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏற்கெனவே ஒரு வரைவுத் திட்டம் இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது. முழுமையான திட்டம் அச்சு வேலைகள் முடிந்த பிறகு அவையிலே வைக்கப்பட்டு, அலுவல் ஆய்வுக் குழுவில் இதைப்பற்றி ஆராய்ந்து ஒரு நாள் விவாதத்தை வைத்துக்கொள்ளலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்தத் திட்ட மதிப்பீட்டில் இப்பொழுது ஏதாவது துண்டு விழுகிறதா? அப்படி துண்டு விழுகிறது என்று சொன்னால் அதை ஈடு செய்வதற்கு என்ன வழிவகைகள் செய்யப்போகிறீர்கள்? அதிலும் குறிப்பாக மாவட்ட ரீதியில் டிஸ்டிரிக்ட் பிளானிங் ஸெல் என்று ஒன்று இருக்கிறதே, அவைகள் பல பரிந்துரைகளை தந்திருக்கின்றனவே, அவைகளில் ஏதாவது "ப்ருனிங்" நடந்திருக்கிறதா, குறைக்கப்பட்டிருக்கிபறதா என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாவட்ட அளவிலே எடுத்துச்சொல்லப்பட்ட கருத்துக்கள், திட்ட நிலைகள் எல்லாமே ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அவைகளெல்லாம் இன்றைக்கு பரிசீலனையில் இருந்துவருகின்றன. எவ்வளவு துண்டு விழுகிறது என்பதெல்லாம், நிதி நிலைமைகளைப் பற்றியெல்லாம் இதில் எடுத்துக்கூற இயலாது. அதனுடைய கருத்துக்களின் அடிப்படையில் நம்முடைய ரிஸோர்ஸஸ் என்ன, மத்திய சர்க்கார் திட்டத்திற்கு எவ்வளவு தருகிறது என்று நாம் ஆராய்ந்துகொண்டிருக்கிறோம். அந்த அளவில் மத்திய அரசு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தை இன்னும் முழுமையாக ஆக்காமல் சந்தேகத்தில் வைத்துக்கொண்டிருக்கிறது. ஆகவேதான், ஆண்டு திட்டம் என்கின்ற அளவிலே பணம் ஒதுக்க வேண்டும் என்று தெரிகிறது. இதிலே அவர்கள் நாம் கேட்ட பணம் கொடுக்கத் தயாராக இல்லை. தொடர்ந்து விவாதித்துக்கொண்டிருக்கிறோம்.



1974 டிசம்பர் 23]

திரு. கே. டி. கே. தங்கமணி : பட்ஜெட் விவாதத்தின் போதாவது இம்மாதிரியான திட்டங்களுடைய பரிசீலனைகளின் நிலை தெரிந்திருந்தால் உதவியாக இருக்குமே? அந்த முறையில் அடுத்து நடக்கக் கூடிய சட்டசபை கூட்டத் தொடரில் செயல் திட்டங்கள் உருவாக்கப் படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அச்சுப் பணிகள் எவ்வளவு விரைவிலே முடிக்க முடியுமோ அந்த அளவுக்கு முடிப்பதற்கு இந்தக் கேள்வியின் மூலமாக அரசு முயற்சி எடுத்துக்கொள்ளும்.

திரு. கா. வேழவேந்தன் : தமிழ் நாடு அரசு மிகச் சிறப்பாக இந்தியாவிலேயே ஒரு மாநிலத்தில் முன்னோடியாக இந்தத் திட்டத்தை சிறப்பான முறையிலே தீட்டியிருக்கிறது. டாஸ்க் போர்ஸ் என்ற அமைப்புகளை, துணை அமைப்புகளை வைத்துக்கொண்டு, நிபுணர்களையும் சேர்த்துக்கொண்டு சிறந்த சிபார்சுகளை அது தயாரித்திருக்கிறது. அடுத்த திட்டம் அதைக் கொண்டு எப்பொழுது துவங்கப் படும்? அந்தந்தத் துறையில் தயாரிக்கப்பட்டுள்ள அந்தந்த சிபார்சுகளை மீண்டும் அந்தந்த துறைக்கு அனுப்பி அவற்றை நிறைவேற்றுவதற்கான சாத்தியக் கூறுகளை அரசு ஆராய்வதற்கு முனையுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதற்கென்று அமைக்கப்பட்ட துணைக் குழுக்களின் பணிகளெல்லாம் முடிவுற்றுவிட்டதன் காரணமாக அவைகளெல்லாம் இப்பொழுது இல்லை. இப்பொழுது "ரெவியூயிங் விங், ரிஸர்ச் விங், அட்மினிஸ்டிரேடிவ் விங்" என்கின்ற மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, எதிர்காலப் பணிகளைப் பற்றி பரிசீலிக்கப்படுகிறது.

திரு. ஏ. ஆர் மாரிமுத்து : இந்த மாநில திட்டக் குழு எந்த விதி முறைகளின்படி நடைபெறுகிறது? அதாவது மத்திய சர்க்காரில் இருக்கிற பிளானிங் கமிஷனின் ஆலோசனைகளின் பேரில்—எப்படி எப்படி இருக்கவேண்டும் என்று ஆலோசனையின் பேரில்—இதன் செயல்கள் நடைபெறுகின்றனவா? அல்லது நாமே இதற்கு என்று ஒரு வழிமுறைகளை வைத்துக்கொண்டோமோ? நாமே வழிமுறைகளை வைத்துக்கொண்டிருந்தால் இப்பொழுது இருக்கிற திட்ட முறையை மாற்றி, கிராம மட்டத்தில் ஒரு திட்டம் உருவாக்கி, இன்றைக்கு இருக்கிற நிலைமைகளில் கிராம மட்டத்தில் திட்டம்போட்டு, ஆங்காங்கு இருக்கிற ரிஸோர்ஸஸ் பூராவையும் மனித சக்தி, பண சக்தி எல்லாவற்றையும் பயன்படுத்துவதற்கு திட்ட முறையை மாற்றி அமைப்பதற்கு இந்த அரசு ஆலோசிக்குமா?

[1974 டிசம்பர் 23

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நம்முடைய அரசு தான் இந்த முயற்சியை முதன்முதலாகத் தொடங்கியது. இதற்கு மத்திய அரசினுடைய பாராட்டுதலும் இருந்தது. மத்திய அரசு இதை வரவேற்றது. இப்படி எல்லா மாநிலங்களிலும் மாநில அளவில் திட்டக் குழுக்களை அமைக்கவேண்டும் என்ற யோசனையைக் கூட நம்முடைய மாநிலத்தை இணைத்துக்காட்டி மத்திய அரசின் அமைச்சர் கூட எடுத்துக்கூறியிருக்கிறார். அதுபற்றி ஏடுகளில் கூட வந்திருக் கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டது போல கிராமப் புறங்களில் இருந்து தான் திட்டம் தொடங்கவேண்டும், அவைகளைப் பரிசீலிக்க வேண்டும் என்ற அடிப்படையில் தான் இந்தத் திட்டத்தை மேற்கொள்ளவேண்டும் என்று நாம் மாநில அளவில் அமுலாக்கி அந்த முறைக்கு ஏற்ப மாவட்ட அளவில் திட்டமிடுவதற்கான பணி களுக்காக நாம் முயற்சிகளை மேற்கொண்டு, அந்த வகைகளில் தான் மாநில திட்டக் குழு தன்னுடைய ஆராய்ச்சியை நடத்தி முடித்திருக் கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாநில திட்டக் குழுவுக்கு உதவும் வகையிலே மாவட்ட திட்ட குழுக்களை எப்பொழுது துவக்க இருக்கிறது இந்த அரசாங்கம் என்பதை அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாவட்ட அளவிலே திட்டத்திற்கான பணிகள் அநேகமாக முடிக்கப்பட்டுவிட்டன.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister on what basis the State Planning Commission prepared the Plan ? Suppose the Collector did not consult the MLAs or did not have discussion on the same in the District Development Council meeting. Then on what basis they sent the report to Government and how are the plans prepared by the Commission?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தத் திட்டக் குழுவி னுடைய வேலைகள் ஆங்காங்கு இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது மேலவை, நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கலந்து செய்யக் கூடிய பணிகள் அல்ல. நண்பர் மாரிமுத்து அவர்கள் எடுத்துக் காட்டியது போல கிராமப்புறங்களில் மாநில அளவில் திட்டங்களைத் தயாரிப்பதற்கு அதிகாரிகளைப் போட்டிருக்கிறோம். மேலும் அந்தக் குழுவில் உத்தியோகப்பற்றற்றவர்களையும் போட்டிருக்கிறோம். அந்த அளவில் தான் இந்த ஆராய்ச்சி நடைபெற்றது.



1974 டிசம்பர் 23]

திரு. கே. என். குமாரசாமி : இந்த மாநிலக் குழு திட்டமிடுவதற்கு ஏதாவது புதியதாக வருவாய் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா? அந்த வருவாயைக் கொண்டு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிற சூழ்நிலை யோடு மத்திய அரசு திட்டக் குழு நமக்கு கொடுக்கின்ற பணத்திற்கும் இதற்கும் வித்தியாசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நாம் கேட்டிருக்கிற அளவுக்கு பணம் அவர்கள் ஒதுக்குவதற்கு இப்பொழுது இயலாத நிலைமையில் இருப்பதாக மத்திய அரசு கூறியிருக்கிறது. நம்முடைய மாநில திட்டக் குழுவின் பரிந்துரைகளைக்கொண்டு தான் நம்முடைய ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி மத்திய அரசுக்கு எடுத்துக் கூறி வருகிறோம். மற்ற விவரங்கள் தற்பொழுது எந்த அடிப்படையில் எவ்வளவு ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்கின்ற விவரங்களையெல்லாம் மாநிலக்குழுவின் திட்டங்களைப் பற்றி விவாதித்துத் தான் எடுத்துச் சொல்வதற்கு ஏதுவாக இருக்கும்.

திரு. செ. கந்தப்பன் : அருகாமையிலிருந்து திட்டமிடப்படுகிற பணிதான் செம்மையாக இருக்க இயலும் என்பதை மாநில திட்டக் குழுவின் அறிக்கை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கிறது. ஓரளவுக்கு டெல்லியின் ஒத்துழைப்பு இருக்கிறது. ஆனால் முன்னுரிமை களை, "பிரையாரிடீஸ்" பற்றி டெல்லியில் பாலிஸி வகுக்கப்படுகின்ற காரணத்தினால் நம்முடைய தேவைகள், நமக்கு இருக்கின்ற ஆதாரங் கள் இவைகளைக்கொண்டு வகுக்கப்பட்டிருக்கின்ற திட்டம் சமயத்தில் பயனற்றதாக ஆகிவிடுமோ என்று அஞ்சுகின்ற அளவுக்கு நிலைமை இருக்கிறது என்பதைக் கருத்தில் கொண்டு, மத்திய அரசு எல்லா மாநிலங்களிலும் திட்டக் குழுவைப் பொறுத்த அளவில் ஒத்துக் கொண்டிருக்கிற காரணத்தினால், எதிர்காலத்தில் மாநில அளவில் கீழ் மட்டங்களில் திட்டங்கள் வகுக்கப்பட்டு, டெல்லி அமைப்பு ஒரு "கோஆர்டினேடிங் ஏஜென்ஸி"யாக இருக்கவேண்டும், அப்பொழுது தான் மாநில திட்டங்கள் செம்மையாக நிறைவேற்றப்படும் என்ற கருத்தை தமிழக அரசு சார்பில் மத்திய அரசிடம் வற்புறுத்து வார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தக் கருத்து பல நேரங் களில் டெல்லியில் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. தொடர்ந்து வற்புறுத் தப்படும்.

திரு. நா. வீராசாமி: மத்திய அரசு நாம் கல்வித் துறையிலும், சுகாதாரத் துறையிலும் முன்னேறியிருக்கிறோம் என்று சொல்லி, நமக்குத் தரவேண்டிய பங்கை தர மறுத்திருக்கிறது. அதையெல்லாம் நம்முடைய பிளானிங் கமிஷன் மத்திய அரசுக்கு எடுத்துச்சொல்லி, நமக்கும் மற்ற மாநிலங்களுக்குக் கிடைக்கக்கூடிய நிதி ஆதாரங்கள் கிடைக்கவேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறதா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாநில திட்டக் குழு அப்படிப்பட்ட வற்புறுத்தலை செய்ய முடியாது. வேண்டுமானால் மத்திய திட்டக் குழுவின் தலைவரிடமும், உறுப்பினர்களிடமும் மாநிலத் திட்டக் குழு கலந்து பேசமுடியும். அப்படி ஒரு முறை கலந்து பேசியிருக்கிறார்கள். இதற்கான பொறுப்பை மாநில அரசு தான் ஏற்றுக்கொள்ளவேண்டும். நாம் தொடர்ந்து இது பற்றி எடுத்துக் கூறிக்கொண்டு வருகிறோம்.

திரு. கா. காளிமுத்து: உருவாக்கப்படுகின்ற திட்டங்கள் விஞ்ஞான சோஷலிஸ அடிப்படையில் உருவாக்கப்படுகின்றனவா அல்லது பொருளாதார நோக்கம் கொண்டு உருவாக்கப் படுகின்றனவா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சோஷலிஸ அடிப்படையில் உருவாக்கப்படுகின்றன.

திரு. வை. பாலசுந்தரம்: பொது மக்களுக்கு பயன்படக்கூடிய சிறப்பான திட்டங்கள் இதில் அடங்கியிருக்கும் என்று கருதுகிறேன். அதனால் நம்முடைய தமிழ் நாட்டு கோவில்களுக்கு ஏராளமான சொத்துக்கள் இருக்கின்றன. அதிலிருந்து கோடிக்கணக்கில் பணத்தை எடுத்து அரசு இதற்குப் பயன்படுத்த முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கோவில் சொத்துக்கள் அந்தந்தக் கோவில்களுக்கும் அந்தந்தக் கோவில்களில் வேலை செய் கின்ற ஊழியர்கள், அலுவலர்களை பாதுகாப்பதற்கும், காப்பாற்று வதற்கும் பயன்பட்டது போக, மிச்சம் உள்ளதை நல்ல காரியங் களுக்குப் பயன்படுத்தவேண்டும் என்று அரசாங்கத்தின் சார்பில் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் உதவிகரமாக இன்றைக்கு அற நிலையங்கள் இருந்து வருகின்றன.



திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்: இந்தத் திட்டங்களை யெல்லாம் நிறைவேற்றுவதற்குப் போதுமான நிதி வசதி இல்லை என்று மத்திய அரசு கூறிவருவதன் காரணமாக வொர்ல்டு பாங்கை அணுகி, குறைந்த வட்டியில் ஏராளமான பணத்தைப் பெற்று இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இவைகளெல்லாம் கவனிக் கப்படும்.

## *Scout Movement*

* 178 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state:

(*a*) whether there is any proposal under the consideration of the Government to give incentive to children joining Scout movement; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) &(இ) ஆம். சாரணர் இயக்கத்தில் மாணவர்கள் சேர ஊக்கமளிக்கும் பொருட்டு அரசு 10,000 மாணவர்களுக்கு இலவசமாக சீருடை வழங்க இரண்டாவது பகுதி திட்டத்தின் கீழ் ரூ. 2.00 லட்சம் வழங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: அவர்களுக்கு டிரஸ் அலவன்ஸ் கொடுக்கப்படுவது மாத்திரமல்லாமல் இந்த இயக்கத்திற்கு முன்பு மாதிரி அதிகமான முக்கியத்துவம் கொடுக்காததற்கு என்ன காரணம்? ஆகவே, டிரஸ் அலவன்ஸ் மட்டும் போதாது. அதை இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்திக் கொடுத்து, இன்ஸென்டிவ் கொடுத்து, அந்த முறையில் இதைச் சரியான இயக்கமாக விரிவுபடுத்த சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதை மேலும் மேலும் ஊக்குவிக்கவேண்டும் என்பதற்கான முறையில் தான் இப்பொழுது திட்டமிடப்பட்டு வருகிறது. குறிப்பாக ஒவ்வொரு பள்ளியிலும் குறைந்தது 10 சதவிகித மாணவ, மாணவியர்கள் சாரணர் இயக்கத்தில் சேர்க்கப்படவேண்டும் என்று அண்மையில் ஆணையின் மூலமாக எல்லாக் கல்வி நிலையங்களுக்கும் வற்புறுத்தப்

பட்டிருக்கிறது. இதை தீவிரமாக செயல்படுத்துவதுமல்லாமல், ஏற்கெனவே உள்ள பயிற்சி ஆசிரியர்களுக்கு இப்பொழுது ஊதியம் தருவதில்லை. அவர்கள் தங்களுக்கு ஊதியம் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதுவும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. ஆக, நிதிநிலைதான் இவைகளுக்கெல்லாம் காரணமாக இருக்கிறது. நிதி வசதியைப் பெருக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(முற்பகல் 9-30)

திரு. ஏ. சுவாமிதாஸ்: தலைவரவர்களே, கல்வி பயில்கின்ற காலத்தில் இந்த சாரணர் இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றுகின்ற மாணவர்களுக்கு, அவர்கள் படிப்பு முடிந்து அரசாங்க வேலைக்கு மனு போடும்போது வேலை வாய்ப்பளிப்பதில் முன்னுரிமை அளிக்கப் படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அத்தகைய தன்மைகளை கொண்டுவரவேண்டுமென்ற எண்ணம் எனக்கு உண்டு. என்.சி.சி. இயக்கத்திற்கு அடுத்தபடியாக இருப்பது சாரணர் இயக்கம். ஆகவே, சாரணர் இயக்கத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் சான்றிதழ் அளிக்கப்பட்டு, வேலை வாய்ப்புகளில் அவர்களுக்கு முன்னுரிமை அளிப்பதுபற்றி பரிசீலனை செய்யவேண்டுமென்று கல்வித் துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

திரு. கே. கந்தசாமி: தலைவரவர்களே, இன்று நாம் கல்வியை அதிகமாகப் பரப்பிக்கொண்டிருந்தாலும்,

We are having only quantitative education and not qoouitatce education. Qualitative and character making education is essential for our future generation. அவர்களைச் சிறந்த பண்பாளர் களாக, கட்டுப்பாடுடையவர்களாக உருவாக்க, அப்படிப்பட்ட ஒரு சந்ததியினரை உருவாக்க இந்த சாரணர் இயக்கம் உறுதுணையாக இருக்கும். ஆகவே, அவர்களுக்கு மற்ற ஆசிரியர்களுக்கு எவ்வளவு ஊதியம் வழங்கப்படுகிறதோ அதைப்போல சாரணர் ஆசிரியர் களுக்கும் சம்பளம் கொடுத்து, 50 சதவிகிதத்திற்கு மேற்பட்ட மாணவர்களை இந்த சாரணர் இயக்கத்தில் ஈடுபடுத்தி, சிறந்த கட்டுப்பாட்டையும் ஒழுக்கத்தையும் ஏற்படுத்த அரசு முன்வருமா?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, 2, 3 ஆண்டுகளுக்கு முன்பு எல்லாப் பள்ளிகளிலும் சேர்த்து 30,000-க்கு மேற்பட்டவர்கள்தான் சாரணர் இயக்கத்தில் சேர்ந்து இருந்தார்கள். கடந்த 2, 3 ஆண்டுகளில் மேற்கொண்ட முயற்சிகள் காரணமாக 72,000-க்கு மேற்பட்டவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். இன்றைக்கு தமிழ்நாடு முழுவதிலும் சேர்த்து ஏறத்தாழ 75 லட்சம் மாணவர்கள் இருக்கிறார்கள். மொத்தம் உள்ள மாணவர்களில் 10 சதவிகிதம் என்று சொன்னாலும் கூட $7\frac{1}{2}$ லட்சம் பேர் இருக்க வேண்டும். ஆனால் 72,000 தான் வந்திருக்கிறது. அது கூட மற்ற மாநிலங்களில் உள்ளதை விட அதிகம். ஆகவே, 2, 3 லட்சம் மாணவர்கள் சாரணர் இயக்கத் தில் வந்தாலே மிக அதிகமாகும். அதனால் இப்போதைய சூழ்நிலையில் தனி ஆசிரியர்கள் தேவையில்லை என்று கருதப்படுகிறது. ஆனால் இந்தப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கிற ஆசிரியர்களுக்கு 10 ரூபாய் சிறப்பு ஊதியம் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த 10 ரூபாய் அளித்தாலும் 5,40,000 ரூபாய் அதிகச் செலவாகும். ஆகையால் அந்தக் கருத்து பரிசீலனையில் இருக்கிறது. மாணவர் களைப் பொறுத்தவரையில் இன்னும் அதிகமானவர்கள் இந்த சாரணர் இயக்கத்தில் சேரவேண்டுமென்ற முயற்சியை அரசு மேற்கொண்டிருக் கிறது.

திரு. ஆலடி அருணா: தலைவரவர்களே, சாரணர் இயக்கத்தில் பயிற்சி பெறும் மாணவர்கள், மேல் வகுப்புக்குச் செல்லும்போது தனிச் சலுகை காட்டப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்போது பரீட்சார்த்தமாக 250 பள்ளிகளில் உடற்பயிற்சி போன்ற சிறப்புப் பயிற்சி பெறுகின்றவர்கள் மேல்வகுப்புகளுக்குச் செல்லும் போது இதை ஒரு சிறப்பு தகுதியாக கருதி எடுத்துக்கொள்ள வேண்டு மென்று சொல்லியிருக்கிறோம். அதோடு இதையும் சேர்த்துக் கொள்வது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை: தலைவரவர்களே, சில மாதங் களுக்கு முன்னால் தமிழ்நாட்டிலிருந்து சாரணர்களும், அமைச்சரவர் களும் வட நாட்டில் ஜம்போரிக்கு சென்றிருந்தபோது, அவர்கள் சரியாக நடத்தப்படவில்லை என்றும், மாணவர்கள் துன்பப் பட்டார்கள் என்றும் பத்திரிகையில் செய்தி வந்ததே. அது உண்மையா?

[1974 டிசம்பர் 23

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது ஒரே ஒரு பத்திரிகையில் வந்த செய்தியாகும். அந்த பத்திரிகையில் வந்த செய்தியைப்போல் யாரும் துன்பப்படவில்லை. அந்தப் பயணத்தில் கலந்து கொண்ட மாணவர்களும் துன்பப்பட்டதாகச் சொல்லவில்லை. அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க சில இடங்களில் ரயில் நிறுத்தப்பட்டது. வழியில் பல இடங்களை மாணவர்கள் பார்க்க வேண்டுமென்று விரும்பினார்கள். குறிப்பாக திரும்பி வரும்போது ஆக்ராவில் 8 மணி நேரம் நிறுத்தி வைக்கவேண்டுமென்று மாணவர்கள் கேட்டார்கள். அப்படி நிறுத்தி வைப்பதற்கு ரயில்வே அமைச்சரை ஒரு எம்.பி. மூலம் பார்த்து, பேசி, அனுமதி பெறப்பட்டது. அதன்படி மாணவர்கள் அங்கே 17 மணி நேரம் தங்கி, பல இடங்களை பார்வையிட்டார்கள். அதனால் 48 மணி நேரத்தில் சென்னைக்கு வந்துசேர வேண்டிய ரயில், மாணவர்கள் ஆங்காங்கே இறங்கிப் பார்க்க வேண்டுமென்று சொன்னதன் காரணமாக தாமதமாக வந்து சேர்ந்தது. பணத்தைப் பொறுத்தவரையில் யாரும் துன்பப்படவில்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இந்த சாரணர் இயக்கம் மற்ற மாநிலங்களை விட நம்முடைய மாநிலத்தில் சிறப்பாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. சிறப்புடையவர்களாக இருக்கிறார்கள் என்பதற்காக குடியரசுத் தலைவரிடம் அல்லது மத்திய அரசிடமிருந்து ஏதாவது பரிசு தரப்பட்டிருக்கிறதா அல்லது பாராட்டு வழங்கப்பட்டிருக்கிறதா? பரிசுகள் தந்திருந்தால் என்னென்ன பரிசுகள், அதைப் பெற்றவர்கள் யார் யார் என்ற விவரத்தை அளிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்தில் சாரணர் இயக்கம் சிறப்பாகச் செயல்படுகிறது என்று பாராட்டி சாரணர் இயக்கத்தின் தலைவர் என்ற முறையில் எனக்கு "சில்வர் எலிஃபன்ட்" ஒன்றும், கல்லூரிக் கல்வி இயக்குநர் திரு. சிட்டிபாபு அவர்களுக்கு பதக்கமும் தரப்பட்டிருக்கிறது. அது தவிர 7 பேர்களுக்கு வெள்ளிப் பதக்கம் தரப்பட்டிருக்கிறது. 25 மாணவர்களுக்கு சிறப்புப் பரிசுகளாக பதக்கங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, இந்த சாரணர் இயக்க மாணவர்கள் மத்தியில் கட்டுப்பாடு, ஒழுங்கு, பண்பாடு வளருகிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இன்றைய சூழ்நிலையில் அது மிகவும் இன்றியமையாதது. இன்றைக்கு மாணவர்களில் சிலர்



1974 டிசம்பர் 23]

ஒழுங்கு, கட்டுப்பாடு இல்லாமல் இருக்கிறார்கள் என்று அமைச்சரவர்கள் ஏற்கெனவே பேசியிருக்கிறார்கள். இப்போது குறிப்பாக மாணவர்களிடையே "ஹிப்பியிசம்" பரவிக்கொண்டிருக்கிறது. தெருவிலே போகும்போது மாணவன் யார், மாணவி யார் என்று தெரியவில்லை. பள்ளிக்கூடத்திற்குப் போகிறேன் என்று சொல்லி விட்டு சினிமாவுக்குப் போகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விளக்கம் வேண்டாம், குறிப்பாக கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. கோவை செழியன் : மாணவர்கள் மத்தியில் அப்பேர்ப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறாமல், அவர்கள் ஒழுங்கு, கட்டுப்பாட்டுடன் இருக்க எல்லோரும் சாரணர் இயக்கத்தில் சேர வேண்டுகோள் விடப்படுமா? அதோடு, சாரணர் மாணவர்களுக்கு இப்போது "ஆஃப் பான்ட்" கொடுக்கப்படுகிறது, அது அவ்வளவு நன்றாக இல்லை. ஆகவே, அவர்களுக்கு நன்றாக இருக்கவும், அதை விரும்பி மாணவர்கள் இந்த இயக்கத்தில் சேருவதற்கு முன்வருவதற்கும் ஏற்ற வகையில் "ஃபுல் பான்ட்" வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சாரணர்களுக்கு என்று ஒரு தனி உடை உலகம் முழுவதும் இருக்கிறது. அப்படிப்பட்ட உடையாக இருந்தால்தான் மாணவர்கள் உடற்பயிற்சி செய்வதற்கும் மற்ற பணிகளுக்கும் வசதியாக இருக்கிறது. இந்த இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிற மாணவர்களுக்கு பண்பாட்டு உணர்வு, ஒழுக்க உணர்வு ஏற்படுகிறது; அவர்களை இந்த உடையில் பார்க்கிற மற்றவர்களுக்கும் ஒரு கட்டுப்பாட்டு உணர்வு, ஒழுக்க உணர்வு ஏற்படுகிறது; மாணவர்கள் இப்படிப்பட்ட சீருடைகளை அணிந்து நிற்கும்போது அந்தப் பள்ளிக்கூடத்திற்கே ஒரு தனி அழகு ஏற்படுகிறது என்ற குறிப்புகளைத்தான் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்துப்படி அதிக அளவில் இந்த இயக்கத்தில் மாணவர்கள் சேரவேண்டும்; அவர்களிடம் ஒழுங்கு, கட்டுப்பாடு, பண்பாடு வளரவேண்டும் என்ற அடிப்படையில்தான் எல்லா முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது.

[1974 டிசம்பர் 23

படந்தாலுமூடு தனியார் பள்ளி

* 179 வினா—திரு. ஏ. சுவாமிதாஸ்: மாண்புமிகு கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் படந்தாலுமூடு என்னுமிடத்திலுள்ள ஒரு தனியார் உயர்தர பாடசாலையில் 1973 இறுதி ஆண்டு தேர்வின்போது முறைகேடு நடந்தது என்று தக்கலை கல்வி அதிகாரி அவர்கள் அறிக்கை அனுப்பியது உண்டா?

(இ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) 1973 மார்ச் மாதத்தில் நடந்த இடைநிலைக் கல்விச் சான்றிதழ் பொதுத் தேர்வின் போது கன்னியாகுமரி மாவட்டத்தில் படந்தாலுமூடு என்ற இடத்தில் டி.சி.கே. உயர்நிலைப்பள்ளி மையத்தில் ஒழுங்கீனச் செயல்கள் நடைபெற்றதற்காக அம்மையத்தில் பணி புரிந்த தலைமை கண்காணிப்பாளருக்கு உரிய தண்டனை அளிக்கப்பட்டது. மற்றும் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு சிறு சிறு அறைகளை ஒதுக்காமல், எளிதில் பார்வையிடக் கூடியதும், பெரிய அறைகளாகத் தேர்ந்தெடுக்குமாறும், உதவிக் கண்காணிப்பாளர்கள் நியமன விஷயத்தில் மிக்க பொறுப்பானவர்களும், கண்காணிப்பில் சிறந்தவர்களாயிருப்பவர்களை, வெளிப் பள்ளிகளிலிருந்து நியமிக்குமாறும் தலைமைக் கண்காணிப்பாளருக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும், மேற்கூறப்பட்ட பள்ளியை அக்டோபர் 1974, மார்ச் 1975 ஆகிய பொதுத் தேர்வுகளுக்கு மையமாக அனுமதிப்பதில்லை எனவும் முடிவு எடுக்கப்பட்டது.

திரு. ஏ. சுவாமிதாஸ்: சார், இந்த பாடசாலையில் ஒழுங்கு முறை சரியில்லை என்று கல்வி அதிகாரி அறிக்கை தந்த பிறகும் அதில் நடவடிக்கை எடுக்காமல், நான் இந்த கேள்வியை கேட்டப் பிறகுதான் நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரிகிறது. இப்படி ஒழுங்கீனமாக நடந்துகொண்ட அந்த பள்ளியில் நிரந்தரமாக மாணவர்கள் தேர்வு எழுத அனுமதிக்காமல், அவர்கள் பக்கத்தில் இருக்கும் பள்ளிகளுக்குச் சென்று தேர்வு எழுத ஏற்பாடு செய்யப்படுமா?



1974 டிசம்பர் 23]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அந்தமுறையில்தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஒழுங்கீனம் நடைபெற்றதாக தகவல் கிடைத்தவுடனேயே, கிடைத்த இரண்டு நாட்களில் தலைமைக் கல்வி அதிகாரி அங்கே சென்றிருக்கிறார். அன்றைக்கு ஒழுங்காக நடைபெற்றிருக்கிறது. இருந்தபோதிலும் அதற்கு முன்னால் ஒழுங்கீனம் நடைபெற்றது என்பதற்கான தகுந்த ஆதாரங்கள் கொடுக்கப்பட்டிருப்பதால் மூன்றாண்டு காலத்திற்கு அந்த மேற்பார்வையாளர் எந்தத் தேர்வுக்கும் நியமிக்கப்படக் கூடாது; வேறு வருவாய் வரக்கூடிய எந்த பொறுப்பும் அவரிடம் ஒப்படைக்கப்படக் கூடாது என்று திட்டவட்டமாகச் சொல்லி உத்தரவிடப்பட்டிருக்கிறது. ஒழுங்கீனம் நடைபெற்றதன் காரணமாக 35 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படாமல் இருந்தது. பிறகு மாணவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் சந்தேகத்தின் பேரால் நிறுத்தி வைக்கப்பட வேண்டியவர்கள் அல்ல என்று கருதி, அவர்களுக்கு மறு பரீட்சை நடத்தி, சான்றிதழ் தரலாம் என்று முடிவு செய்யப்பட்டது. அப்படிச் செய்ததில் ஒரே ஒரு மாணவர்தான் தேர்ச்சி பெற்றார்; மற்றுள்ள 34 பேர்கள் தோல்வியடைந்தனர். அதுமட்டுமல்லாமல், 1974–75-ம் ஆண்டில் அந்தப் பள்ளியில் தேர்வு நடத்த அனுமதிக்கக் கூடாது என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்தப் பள்ளிக்கூடத்தில் காப்பி அடிப்பதற்கு ஹெட்மாஸ்டர், ஆசிரியர்கள் உடந்தையாக இருந்தார்கள் என்றும், குறிப்பாக விடைத்தாள்கள் மாயமாக மறைந்தன. பஸ்ஸில் காணாமல்போய்விட்டது என்றெல்லாம் புகார்கள் வந்ததே, அவை உண்மைதானா? அந்த விடைத்தாள்கள் கைப்பற்றப்பட்டனவா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தேர்வு நடத்தப்பட்டது ஒழுங்கீனமாக நடந்தது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. விடைத்தாள்கள் காணாமற்போன விவரம் இல்லை. இதுபற்றி முழுவிசாரணை நடத்தப்பட்டுதான் தலைமை ஆசிரியர், மற்ற ஆசிரியர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். டென்னிஸ்: இந்தப் பள்ளிக்கூடத்தில் பல ஆண்டுகளாகவே ஒழுங்கீனங்கள் நடைபெற்று வந்திருக்கின்றன. பள்ளியில் சேர்ந்தால்போதும், படிக்காமலேயே ஜெயித்துவிடலாம் என்ற

[1974 டிசம்பர் 23

படந்தாலுமூடு தனியார் பள்ளி

* 179 வினு—திரு. ஏ. சுவாமிதாஸ்: மாண்புமிகு கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் படந்தாலுமூடு என்னுமிடத்திலுள்ள ஒரு தனியார் உயர்தர பாடசாலையில் 1973 இறுதி ஆண்டு தேர்வின்போது முறைகேடு நடந்தது என்று தக்கலே கல்வி அதிகாரி அவர்கள் அறிக்கை அனுப்பியது உண்டா?

(இ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) 1973 மார்ச் மாதத்தில் நடந்த இடைநிலேக் கல்விக் சான்றிதழ் பொதுத் தேர்வின் போது கன்னியாகுமரி மாவட்டத்தில் படந்தாலுமூடு என்ற இடத்தில் டி.சி.கே. உயர்நிலேப்பள்ளி மையத்தில் ஒழுங்கீனச் செயல்கள் நடைபெற்றதற்காக அம்மையத்தில் பணி புரிந்த தலைமை கண்காணிப்பாளருக்கு உரிய தண்டனை அளிக்கப்பட்டது. மற்றும் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு சிறு சிறு அறைகளை ஒதுக்காமல், எளிதில் பார்வையிடக் கூடியதும், பெரிய அறைகளாகத் தேர்ந்தெடுக்குமாறும், உதவிக் கண்காணிப்பாளர்கள் நியமன விஷயத்தில் மிக்க பொறுப்பானவர்களும், கண்காணிப்பில் சிறந்தவர்களாயிருப்பவர்களே, வெளிப் பள்ளிகளிலிருந்து நியமிக்குமாறும் தலைமைக் கண்காணிப்பாளருக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும், மேற்கூறப்பட்ட பள்ளியை அக்டோபர் 1974, மார்ச் 1975 ஆகிய பொதுத் தேர்வுகளுக்கு மையமாக அனுமதிப்பதில்லே எனவும் முடிவு எடுக்கப்பட்டது.

திரு. ஏ. சுவாமிதாஸ்: சார், இந்த பாடசாலேயில் ஒழுங்கு முறை சரியில்லே என்று கல்வி அதிகாரி அறிக்கை தந்த பிறகும் அதில் நடவடிக்கை எடுக்காமல், நான் இந்த கேள்வியை கேட்டப் பிறகுதான் நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரிகிறது. இப்படி ஒழுங்கீனமாக நடந்துகொண்ட அந்த பள்ளியில் நிரந்தரமாக மாணவர்கள் தேர்வு எழுத அனுமதிக்காமல், அவர்கள் பக்கத்தில் இருக்கும் பள்ளிகளுக்குச் சென்று தேர்வு எழுத ஏற்பாடு செய்யப்படுமா?



1974 டிசம்பர் 23]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அந்தமுறையில்தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஒழுங்கீனம் நடைபெற்றதாக தகவல் கிடைத்தவுடனேயே, கிடைத்த இரண்டு நாட்களில் தலைமைக் கல்வி அதிகாரி அங்கே சென்றிருக்கிறார். அன்றைக்கு ஒழுங்காக நடைபெற்றிருக்கிறது. இருந்தபோதிலும் அதற்கு முன்னால் ஒழுங்கீனம் நடைபெற்றது என்பதற்கான தகுந்த ஆதாரங்கள் கொடுக்கப்பட்டிருப்பதால் மூன்றாண்டு காலத்திற்கு அந்த மேற்பார்வையாளர் எந்தத் தேர்வுக்கும் நியமிக்கப்படக் கூடாது; வேறு வருவாய் வரக்கூடிய எந்த பொறுப்பும் அவரிடம் ஒப்படைக்கப்படக் கூடாது என்று திட்டவட்டமாகச் சொல்லி உத்தரவிடப்பட்டிருக்கிறது. ஒழுங்கீனம் நடைபெற்றதன் காரணமாக 35 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படாமல் இருந்தது. பிறகு மாணவர்களேப் பொறுத்தவரையில் அவர்கள் சந்தேகத்தின் பேரால் நிறுத்தி வைக்கப்பட வேண்டியவர்கள் அல்ல என்று கருதி, அவர்களுக்கு மறு பரீட்சை நடத்தி, சான்றிதழ் தரலாம் என்று முடிவு செய்யப்பட்டது. அப்படிச் செய்ததில் ஒரே ஒரு மாணவர்தான் தேர்ச்சி பெற்றார்; மற்றுள்ள 34 பேர்கள் தோல்வியடைந்தனர். அதுமட்டுமல்லாமல், 1974–75-ம் ஆண்டில் அந்தப் பள்ளியில் தேர்வு நடத்த அனுமதிக்கக் கூடாது என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்தப் பள்ளிக்கூடத்தில் காப்பி அடிப்பதற்கு ஹெட்மாஸ்டர், ஆசிரியர்கள் உடந்தையாக இருந்தார்கள் என்றும், குறிப்பாக விடைத்தாள்கள் மாயமாக மறைந்தன. பஸ்ஸில் காணுமல்போய்விட்டது என்றெல்லாம் புகார்கள் வந்ததே, அவை உண்மைதானு? அந்த விடைத்தாள்கள் கைப்பற்றப்பட்டனவா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தேர்வு நடத்தப்பட்டது ஒழுங்கீனமாக நடந்தது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. விடைத்தாள்கள் காணுமற்போன விவரம் இல்லே. இதுபற்றி முழுவிசாரணை நடத்தப்பட்டுதான் தலைமை ஆசிரியர், மற்ற ஆசிரியர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். டென்னிஸ்: இந்தப் பள்ளிக்கூடத்தில் பல ஆண்டுகளாகவே ஒழுங்கீனங்கள் நடைபெற்று வந்திருக்கின்றன. பள்ளியில் சேர்ந்தால்போதும், படிக்காமலேயே ஜெயித்துவிடலாம் என்ற

அடிப்படையிலேயே சேர்க்கப்படுகிறார்கள். இதன் தலைமை ஆசிரியர் மற்ற ஆசிரியர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கை போதுமானதாக இல்லையென்று கருதப்பட்டால் வேறு நடவடிக்கை எடுப்பதுபற்றியும் யோசிக்கலாம். இந்தப் பள்ளி 2 ஆண்டுகள் தேர்வு மையமாக இருக்கக்கூடாது என்று செய்திருக்கிறோம். வேண்டுமானால் இந்தக் காலத்தையும் நீட்டிக்கலாம்.

*Farmers Education and Functional Literacy Centres*

*180 Q.—THIRU N.K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state the places in the State where Farmers Education and Functional Literacy Centres are proposed to be opened during 1974-75?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இம்மாநிலத்தில் 1974–75-ம் நிதியாண்டில் கீழ்க்கண்ட 5 மாவட்டங்களில் குறிப்பிட்ட ஊராட்சி ஒன்றியம் பகுதிகளில் உழவர் செயல்முறை எழுத்தறிவுத் திட்ட மையங்கள் திறக்கப்பட இருக்கின்றன:—

(1) கோவை மாவட்டத்தில் பேரூர் மற்றும் மதுக்கரை.

(2) தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம், திருப்பனந்தாள் பகுதிகள்.

(3) வட ஆற்காடு மாவட்டத்தில், ஆற்காடு, வாலாசா.

(4) திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடி மற்றும் குருவிக்குளம்.

(5) தென் ஆற்காடு மாவட்டத்தில் ஒலக்கூர் மற்றும் மரக்காணம்.

திரு. என். கே. பழனிசாமி: முன்பு அடல்ட் எஜுகேஷன் என்று இருந்ததைத்தான் உழவர் செயல்முறை எழுத்தறிவுத்திட்டம் என்று மாற்றப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதை எந்த முறைக்கு வெற்றிகரமாக செயல்படுத்த திட்டமிடப்பட்டிருக்கிறது? விவசாய பருவத்தில் விவசாயத்தைப்பற்றிப் போதிக்கப்படுமா? எப்படி நடைமுறை?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஏற்கெனவே முதியோர் கல்வி என்று இருந்தது. முதியோர் கல்வி என்றால் அதில் பொதுவாக எல்லோரும் வருவார்கள். ஆனால் உழவர் செயல்முறை எழுத்தறிவு திட்டம் என்கிற அடிப்படையில் உழவர் பெருமக்களுக்கு அவர்களுக்கு உழவுத்துறையைப் பொறுத்தவரையில், அதிலுள்ள வணிகத்துறையைப் பொறுத்தவரையில் என்னென்ன சொற்களை அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டுமோ அவற்றை எழுதப்படிக்கக் கற்றுக்கொடுப்பதற்கு இது வகை செய்கிறது. அதுவும் இத்திட்டம் உடுமல்பேட்டையில் துவங்கப்பெற்று நல்ல பலன் அளித்திருக்கிறது. வெற்றிதந்திருக்கிறது என்கிற காரணத்தினால்தான் 120 மையங்களில் துவங்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 5 மாவட்டங்களில் மேலும் 150 மையங்கள் துவங்க இருக்கிறது. ஏற்கெனவே இந்தத் திட்டத்தின் அடிப்படையில் 6 மாதம் பயிற்சி அளித்தது போதுமானதாக இல்லையென்ற கருத்து தெரிவிக்கப்பட்ட காரணத்தினால் இப்போது அதை ஓராண்டு அளவுக்கு உயர்த்தவும் முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. தோப்பூர் திருவேங்கடம்: இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த ஒன்றியங்கள் எந்த அடிப்படையில் அரசால் தேர்ந்தெடுக்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாவட்டத்திற்கு இரண்டு ஒன்றியங்கள் ஆங்காங்கு இருக்கிற கல்வி அதிகாரி, மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியவர்களுடைய பரிந்துரைகளைக் கொண்டு கல்வி அதிகாரி அரசுக்குப் பரிந்துரை செய்கிறார். அந்தப் பரிந்துரையின் அடிப்படையில்தான் இந்த மையம் தேர்ந்தெடுக்கப்படுகிறது.

கோவையில் செயற்கை உறுப்புகள் தயாரிப்பு நிலையம்

* 181 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் செயற்கை உறுப்புகள் தயாரிக்கும் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) எழாது.

திரு. சு. துரைசாமி : கடந்த பத்தாண்டு காலமாகவே கோவை மருத்துவ மனையில் உடல் ஊனமுற்றோர்களுக்கு உடலுறுப்புகளை தயாரிக்க வசதியின்றி சென்னையில்தான் வந்து பெறவேண்டியிருக் கிறது. அதற்கும் நானூறு, ஐநூறு என்று செலவாகிறது நான்கைந்து மாதங்களும் ஆகின்றன. ஆகவே பத்தாண்டுகளாக கோவை மருத்துவ மனையில் இருந்து வருகிற குறையைப் போக்க அங்கே உடலுறுப்புகளை உற்பத்தி செய்கிற தொழிற்சாலையைத் துவங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அப்படிப்பட்ட வசதிகளை படிப் படியாகத்தான் நிறைவேற்ற வேண்டும். சென்னையில் துவங்கப் பட்டிருப்பது இன்னும் நல்லமுறையில் விரிவு செய்யப்படவில்லை. இரண்டாவது கட்டமாக மதுரையிலும், மூன்றாவதாகத் தஞ்சை யிலும் ஏற்படுத்தப்பட்ட பிறகுதான்—அது வளர்ச்சி அடைகிற நிலை யில் இன்னொரு கட்டத்தில் கோவையில் துவங்கப்படுவதை ஆராய வேண்டும். இந்தக் கருவிகளை ரீஜனல்—வட்டார அடிப்படையில் தயாரிக்கக்கூடிய வாய்ப்புதான் நன்றாக இருக்கிறது. அப்படி தயாரிக் கப்படுகிற உறுப்புகளை கோவையில் நல்லமுறையில் பொருத்துவதற்கு ஏற்பாடு செய்ய முடியும்.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : கோவையில் மதுரை, தஞ்சைக்கு அடுத்ததாக நான்காவது உடலுறுப்புத் தயாரிக்கும் பிரிவு ஏற்படுத்தப் படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கோவை தொழில் நிறைந்த பகுதி—நிறைய விபத்துகள் ஏற்படக்கூடிய பகுதியாக இருக் கிறது. ஆகவே சென்னைக்கு அடுத்ததாக கோவை என்ற நிலைமையை ஏற்படுத்த முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நகரங்களைப் பொறுத்தவரை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வகையில் முதன்மை அளிக்கப்படு கிறது. விபத்தில், கொலையில் என்று பார்த்தால் கோவைக்கு முதன்மையிடம் கூடக் கொடுக்கலாம். ஆனால் மருத்துவக் கல்லூரி என்ற அடிப்படையில் போஸ்ட் க்ராஜ்வேட் சென்டர்கள் அமைந் துள்ள அடிப்படையில் சென்னை மருத்துவக் கல்லூரி, அடுத்தது ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி வரும். இங்கும் கூட போதுமான அளவுக்கு உடலுறுப்புகளைத் தயாரிக்கக் கூடிய நிலை வளரவில்லை. அண்மையில் புதிதாக சமூக நலத் திட்டத்தின் அடிப்படையில் ஊனமுற்றோர் மறுவாழ்வு நிதியைக்கொண்டு உடலுறுப்புகளைத் தயாரிக்க ஒரு பெரிய அமைப்பை ஏற்படுத்துகிற திட்டம் ஆலோசனை



யில் இருக்கிறது. இதற்குப் பிறகு சென்னை மருத்துவக் கல்லூரிபோல மதுரையில் அமைந்துள்ள எர்ஸ்க்கின் ஆஸ்பத்திரி நல்ல முறையில் வளர்ச்சி அடைந்து வருவதால் அங்கே அமைப்பதுபற்றிய நிலை வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : ரீஜனல் பேசிஸில் இதை அமைப்ப தாகச் சொன்னார்கள். மேற்கு ரீஜனில் இருக்கிறது. தெற்கு ரீஜனில் இருக்கிறது. கிழக்கு ரீஜன் பலவீனமாக இருக்கிறதே, இங்கே அமைக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மைய அரசு ரீஜனல் பேசிஸில் தான் உற்பத்தி செய்கிறார்கள். சென்னையில் இப்போது ஒரு பெரிய அளவில் உடலுறுப்புகள், மற்றும் உடலூனமுற்றோர்களுக்குப் பயன் படக்கூடிய கருவிகள் ஆகியவற்றை தயாரிக்க ஆலோசனை இருக்கிறது. ஏற்கெனவே பூனாவில் இருக்கிறது. அதுபோல இங்கே நிச்சயமாக நல்ல முறையில் உருவாகும் என்று எதிர்பார்க்கிறோம்.

### திருப்புவனம் மருத்துவமனை

* 182 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் மருத்துவமனைக்கு கிழக்குப் பக்கமாக உள்ள இடத்தை மருத்துவமனைக்கு அரசு வாங்கு வதற்கு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

### *Drugs for the Masses Programme*

* 183 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether the State Government have received any Central assistance from the "Drugs for the Masses" programme of the Central Government under the Fifth Plan;

(b) if so, the details thereof;

(c) whether the State Government on its own efforts have any plans to create "Drugs for the Masses" Scheme; and

(d) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடம் இல்லை.

(உ) இல்லை.

(எ) கேள்வி எழவில்லை.

DR. H. V. HANDE : Is it not a fact that the Central Government announced sometime ago both in press statement and also in Parliament that they are allotting some funds for giving drugs to the poor people. May I know whether they are doing so, whether funds had been allotted and may I also know whether the State Government is aware that large sections of poor people are not able to get medicine at a cheap rate?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பத்திரிகையிலே வந்த செய்தி தவறு; அரசாங்கத்திற்கு எவ்விதமான செய்தியும் இல்லை. அரசாங்கத்திற்கு வந்த செய்திகளையே நாங்கள் நம்பவில்லை. ஆகவே, பத்திரிகையிலே வந்த செய்திகளை நம்பி எதையும் சொல்வதற்கு நான் விரும்பவில்லை. மருந்துகளை விலை மலிவாக அளிக்க மத்திய அரசு ஏதாவது முயற்சி எடுக்க வேண்டுமென்பது பல கட்டங்களிலே ஆலோசனையிலே இருக்கிறது. முதலாவது, மூலப்பொருட்கள் கிடைக்காமலிருப்பது. அதற்குப் பெட்ரோலியம் அண்ட் கெமிக்கல் இண்டஸ்ட்ரி உதவவேண்டுமென்று மருத்துவத் துறை அமைச்சு கேட்டிருக்கிறது. அதே போல், வெளிநாட்டு மூலதனத்திலே மருந்துகள் உற்பத்தி செய்யப்படும் தொழிற்சாலைகள் நடைபெறுகின்றன. அவைகளை நம் நாட்டு மூலதனத்தைக் கொண்டோ, அல்லது நாஷனலைஸ் செய்வதன் மூலமோ, சிக்கனமாக மருந்து செய்யப்படலாம் என்ற நிலைமை இருக்கிறது. மூன்றாவது, விலைக் கட்டுப்பாடு என்று வைப்பது. மருந்துகளின் விலையை அவ்வப்போது உயர்த்துகிறார்கள். அதற்குக் கட்டுப்பாடு வைப்பது. நான்காவது, ஒவ்வொரு மருந்துக்கும் டிரேட் மார்க் கொடுப்பதைவிட, மருந்துகளுடைய கன்டென்ட்டை, உட்பொருளை, மேலே கொடுக்க வேண்டும், தனித் தனி டிரேட் மார்க் கூடாது என்று சொல்கிறார்கள். இவைகளெல்லாம் மத்திய அரசின் ஆலோசனையில் இருக்கிறது.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, இன்று பல உயிர் காக்கும் மருந்துகள் கிடைக்காத நிலைமையிருக்கிறது. அநேக நோயாளிகள் அதனால் மிகவும் அவதிப்படுகிறார்கள். "கெரெய்ன்" போன்ற மருந்துகள், காக்கா வலிப்பு போன்ற நோயாளிகளுக்கு மிகவும் இன்றியமையாத மருந்துகள் கிடைக்காமல் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவை கிடைக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?



மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, கிடைக்காத மருந்து கிடைக்க தமிழக அரசு விண்ணப்பம் மட்டும்தான் கொடுக்கலாம். மத்திய அரசு ஒரு வேளை மருந்து கிடைக்குமானால், கிடைக்க வழிவகை செய்ய முயற்சி செய்யலாம். வெளிநாடுகளிலிருந்து வர வேண்டிய மருந்துகள் வராமல் போனால், கிடைக்காமலிருக்கலாம். ஆனால் பல மருந்துகள் கிடைக்காததற்கு அதற்கு மாற்று மருந்துகள் இருப்பதுதான் காரணம். ஆகவே, டிரேட் மார்க் போடுவதற்குப் பதிலாக, கருப்பொருளையே, உட்பொருளையே கொண்டு அழைக்க வேண்டுமென்ற கருத்து இருக்கிறது. அந்தவகையிலே, அதற்கு ஈடான மருந்து கிடைக்கும் என்ற கருத்தை நம்முடைய மருத்துவத் துறையைச் சேர்ந்தவர்கள் தெரிவிக்கிறார்கள்.

*Tuberculosis Sanatorium, Thanjavur*

* 184 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to make improvements to the Mahatma Gandhi Tuberculosis Sanatorium, Thanjavur; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

*Minor Irrigation Schemes*

* 159 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether it is a fact that the Government proposes to set up a Corporation for speedy implementation of Minor Irrigation Schemes in Tamil Nadu; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், முன்பு இந்த மைனர்
இரிகேஷனுக்கு, சிறுபாசனத் திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம்
கொடுத்ததுபோல், இப்பொழுது இரண்டு மூன்று ஆண்டுகளாகத்
கொடுக்காததற்குக் காரணம் என்ன? ஏற்கெனவே, பல சிறுபாசனத்
திட்டங்கள் போன்றவைகளை எல்லாம் நடைமுறையில் கொண்டு
வருவதற்கு ரொம்ப தாமதம் இருக்கிறது. ஒரு சமயம் மத்திய
சர்க்கார் நமக்குக் கொடுத்துவந்த மானியத்தைக் குறைத்துவிட்டார்
களா, அல்லது சர்க்கார் தரப்பிலே கவனக் குறைவாக இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, ஏற்கெனவே
நடைபெற்றதைவிடத் துரிதமாக வேலை நடைபெறுகிறது. அதிக
மான பணத்தை ஒதுக்கியிருக்கிறோம். மைனர் இரிகேஷனுக்காக
ரூ. 3 கோடி ஒதுக்கப்பட்டு, சிறு ஏரிகள் இவைகளைச் சீர்படுத்தி
ஸ்டேன்டார்டுக்குச் கொண்டுவர ஏற்பாடு செய்து இருக்கிறோம்.
புதிய குட்டைகள் தேவையான திட்டம். அந்தத் திட்டம் வேகமாக
நடைபெற ஏற்பாடுகளைச் செய்துவருகிறோம்.

திரு. கோவை செழியன் : மைனர் இரிகேஷன் திட்டத்திலே
பான்ட் ஸ்கீம் மிக முக்கியமான ஒன்றாகும். இது சம்பந்தமாகத்தான்
அரசாங்கத்திலே இருக்கிற அமைச்சர்களிடையே கருத்து மாறுபாடு
இருக்கிறது. பொதுவாக, கிணறுகளுக்குத் தண்ணீர் ரீ-சார்ஜிங்
வருவதற்கு பான்ட் ஸ்கீம் மிக முக்கியமானது. அது நிறைவேறாத
தற்கு உள்ள காரணம். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் விளக்கம்
சொல்லவேண்டாம். Preface வேண்டாம். The hon. Member
may ask supplementaries without making any preface.

திரு. கோவை செழியன் : குவஸ்டியன்தான். அதைச் சொல்லித்
தான் குவஸ்டியன் வரும். எந்த ஊர், என்ன என்று எப்படி கேட்க
முடியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆமாம், கேள்வி
அப்படித்தான் சொல்லமுடியும்.



The hon. Member may simply asks the question. The hon. Member need not paraphrase அவ்வளவுதான்.

திரு. கோவை செழியன் : ஆகவே, இந்தத் திட்டங்களை உடனடியாக நிறைவேற்றுவதற்கு ரெவின்யூ டிபார்ட்மெண்டும் பி.டபிள்யூ.டியும் சேர்ந்து முடிவெடுப்பதால் காலதாமதம் ஆகிறது. அப்படியில்லாமல் ஒரே ஒரு கார்ப்பரேஷன் இருந்தால் இந்த வேலை துரிதமாக ஆகாதா? ஆகவே, அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஏதோ பாண்ட் ஸ்கீம் நிறைவேற்றுவதில் அமைச்சர்களுக்குள் கருத்து வேறுபாடென்று சொன்னார்கள். நிச்சயமாக இல்லை. இப்பொழுது பொதுப்பணித் துறையே அதைக் கவனித்து வருகிறது. துறைகளுக்குள் கருத்து வேறுபாடு இல்லை. வருவாய்த் துறைக்கும் பொதுப் பணித்துறைக்கும் நிச்சயமாக எந்தவிதக் கருத்து வேறுபாடும் இல்லை.

*Alathurayaru Scheme*

* 160 Q.—THIRU T. GANAPATHY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the estimates for Alathurayaru scheme, west of Panagudi in Vellioor Panchayat Union, Nanguneri taluk;

(b) whether the Government have accorded the necessary sanction; and

(c) if so, when the Scheme is likely to be inaugurated?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ரூ. 19.85 லட்சம்.

(இ) ஆம்.

(உ) ஏற்கெனவே 2—8—1974 அன்று துவக்கப்பட்டுள்ளது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இதற்கு இது வரை ஒப்பந்தக்காரரிடம் வேலையை ஒப்படைக்கவில்லை. அது சம்பந்தமாக டெண்டர் கோரியிருக்கிறார்கள் என்று கூறுகிறார்களே, இந்த வேலை எப்பொழுது தொடங்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஒப்பந்தக்காரர் இந்த டெண்டர் கேட்டிருப்பார் என்று நான் நினைக்கிறேன். மற்ற விவரம் என்னிடத்திலே இல்லை. மேற்கொண்டு தனிக் கேள்வி போட்டால் சேகரித்துத் தருகிறேன். ஆனால், வேலை துரிதமாக நடைபெற வேண்டுமென்றுதான் அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

## மானாமதுரை வைகையாற்றுப் பாலம்

* 161 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் வைகை ஆற்றின் குறுக்கே உள்ள தரைப்பாலம் உடைந்துபோய் உள்ளது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) இப்பழுதடைந்த தரைப்பாலத்திற்கு அருகில் உள்ள இரும்பாலான பழைய பாலம் இப்பொழுதுள்ள போக்குவரத்திற்கு பயன்படுவதால் மேற்கண்ட தரைப்பாலத்தை பழுது பார்க்கும் எண்ணம் தற்போது இல்லை.

திரு. த. சோனையா: தலைவரவர்களே, மானாமதுரை வைகையாற்றின் குறுக்கே ஏற்கெனவே இருந்த அந்தத் தரைப் பாலத்தின் பெரும் பகுதி உடைந்து உடைந்து போகிறது. ஆனால், மானாமதுரை என்பது இரு கரையிலும் இருக்கிறது. இக்கரையிலே இருக்கிறவர்கள் அக்கரையிலுள்ள ஊருக்குச் செல்ல முடியவில்லை—அக்கரையிலே இருக்கிறவர்கள் இக்கரையிலுள்ள ஊருக்கு வர முடியவில்லை, வேனில் காலத்திலே தண்ணீர் சூடாக இருக்கிறது, நடந்து போக முடியவில்லை. அதனாலே, அந்தப் பாலத்திட்டத்தை மறுபரிசீலனை செய்து, எப்படியும் அந்தப்பாலத்தைக் கட்ட அரசு இனிமேலாவது முயற்சி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இப்பொழுது நிதி நிலைமை சரியில்லாத காரணத்தால், அதுபற்றி யோசனையில்லையென்று சொன்னேன். அரசாங்க நிதிநிலை சரியான பிறகு அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.



## சேலம் உருக்காலைத் திட்டம்

* 185 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் உருக்காலைத் திட்டம் அமைவதில் நம் மாநில அரசின் கடமை ஏதும் பாக்கி உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) இல்லை.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, தமிழகத்தைத் தொழில் மயமாக்குகின்ற இந்தச் சேலம் உருக்காலைத் திட்டம் மேன்மேலும் காலதாமதம் ஆவதன் காரணம் என்ன? இதற்கு மத்திய அரசு உடனடியாகப் போதிய பண உதவி அளிக்கவேண்டுமென்று நமது மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துகிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பலமுறை இதுபற்றி வற்புறுத்தப்பட்டு வருகிறது. முதலமைச்சரவர்கள் அளவிலே வற்புறுத்தப்படுகிறது. கொஞ்ச நாட்களுக்கு முன்னால், மத்திய அமைச்சர், எதனாலே கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்றால், பொதுவான நிதிப் பற்றாக்குறை என்றுதான் காரணம் எழுதியிருக்கிறார்கள்.

*186 Q.—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether additional allotment was given for Salem Steel Plant during 1974 by the Centre; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) கேள்வி எழவில்லை.

திரு. என். கே. பழனிசாமி: சேலம் ஸ்டீல் கார்ப்பரேஷன் ஏற்படுத்தியதற்குப் பிறகு, மற்ற பப்ளிக் செக்டார் போல், இதற்கும் வேலை நின்றுவிட்டது. வேலை தொடர்ந்து நடைபெற, இந்தச் சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஏற்கெனவே பலமுறை வற்புறுத்தப்பட்ட விவரங்களையெல்லாம் இந்த மன்றத்திலே தந்திருக் கிறேன். பணப் பற்றாக்குறையென்று பதில் சொல்கிறது மத்திய அரசு.

திரு. எஸ். ஆறுமுகம் : தலைவரவர்களே, நம்முடைய மாநில அரசைப் பொறுத்தவரை, இரும்பாலைத் திட்டத்திற்காக அவர்கள் கோரும் நிலங்களைக் கையகப்படுத்திக் கொடுத்துக்கொண்டிருக் கிறோம். அவைகள் நல்ல நஞ்சை நிலங்களாக, விவசாய நிலங்களாக இருக்கின்றன. ஆகவே, இன்று அந்த நிலங்களில் பணிகள் துவங்காத காரணத்தினால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் தரிசாகவிருக் கின்றன. ஆகவே, அந்தப் பகுதிகளில் உள்ள நிலங்களை, விவசாயிகள் லீஸுக்குக் கேட்டால் அரசு கொடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது நல்ல யோசனை, ஆனால், நமக்கு அதிகாரம் கிடையாது. இந்த யோசனை மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்படும்.

திரு. ஆலடி அருணா : தலைவரவர்களே, சேலம் இரும்பாலையில் குறித்த காலத்தில் உற்பத்தி ஏற்படுமா? அந்த் இரும்பாலையில் தமிழக அரசுக்கும்—நமக்கும் பங்கு வேண்டுமென்று கோரப்பட்டதே அதைத் தர மத்திய அரசு முன் வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முன் வரவில்லை. விரைவாக நடத்தப்படவேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம்.

*Additional Judges for High Court*

* 187 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to address the Government of India to increase the number of High Court Judges in view of the large number of pending cases; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) மாநில அரசு மூன்று உயர் நீதி மன்ற கூடுதல் நீதிபதி பதவிகளுக்கு அனுப்பிய செயற்குறிப்பை, இந்திய அரசு ஏற்று, குடியரசுத் தலைவரின் ஒப்புத



லுடன் அனுப்பியுள்ளது. அதன்படி இம்மூன்று உயர்நீதி மன்ற கூடுதல் நீதிபதி பதவிகள் ஒவ்வொன்றும், கூடுதல் நீதிபதிகள் பதவி மேற்கொண்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகள் வரை இருக்கும்.

(முற்பகல் 10-00)

திரு. என். கே. பழனிசாமி : சார், ஹைகோர்ட்டிற்கு ஒரு கேஸ் போனால் கிட்டத்தட்ட ஹியரிங்குக்கே 2, 3 வருஷம் ஆகிவிடுகிறது. இப்போது மூன்று ஜட்ஜுகள் நியமிக்கப்பட்டிருப்பதன் காரணமாக அந்தக் காலதாமதம் குறையுமா அல்லது பழையபடியேபோல் இருக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பொதுவாகவே நம்முடைய உயர்நீதி மன்றத்தில் காலதாமதம் குறைவு. இருந்தாலும் கூடுதலாக நீதிபதிகள் வேண்டுமென்று கேட்டார்கள், நாம் கொடுத்திருக் கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனுமதி யோடு கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இப்போது உயர்நீதி மன்றத் திலே ஒரு சில இடங்களில் நீதிபதிகளை நியமிக்காமல் காலியாக வைத்திருக்கிறார்கள். அதையும் நிரப்புவதைப்பற்றி மாநில அரசாங்கம் மத்திய அரசைக் கேட்டு இருக்கிறதா? மதுரையிலே ஒரு பெஞ்ச் அமைக்கவேண்டுமென்று கேட்டிருந்தோம். அது என்ன ஆயிற்று?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முதல் கேள்விக்கு பதில், நாம் சில பரிந்துரைகளைச் செய்து மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம், மத்திய அரசிலே காலதாமதம் ஆகிறது. மதுரைக்கு வேண்டு மென்று நாம் தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டு வருகிறோம், அதுவும் மத்திய அரசின் பரிசீலனையில்தான் இருக்கிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : மத்திய அரசுக்கு பரிந்துரை அனுப்பியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதிலே யாராவது தாழ்த்தப்பட்டவர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.

[1974 டிசம்பர் 23

மாண்புமிகு திரு. செ. மாதவன். ஏற்கெனவே பலமுறை
வற்புறுத்தப்பட்ட விவரங்களையெல்லாம் இந்த மன்றத்திலே தந்திருக்
கிறேன். பணப் பற்றுக்குறையென்று பதில் சொல்கிறது மத்திய
அரசு.

திரு. எஸ். ஆறுமுகம் : தலைவரவர்களே, நம்முடைய மாநில
அரசைப் பொறுத்தவரை, இரும்பாலைத் திட்டத்திற்காக அவர்கள்
கோரும் நிலங்களைக் கையகப்படுத்திக் கொடுத்துக்கொண்டிருக்
கிறோம். அவைகள் நல்ல நஞ்சை நிலங்களாக, விவசாய நிலங்களாக
இருக்கின்றன. ஆகவே, இன்று அந்த நிலங்களில் பணிகள் துவங்காத
காரணத்திஞல் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் தரிசாகவிருக்
கின்றன. ஆகவே, அந்தப் பகுதிகளில் உள்ள நிலங்களை, விவசாயிகள்
லீஸுக்குக் கேட்டால் அரசு கொடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது நல்ல யோசனை, ஆனால்,
நமக்கு அதிகாரம் கிடையாது. இந்த யோசனை மத்திய அரசுக்குத்
தெரிவிக்கப்படும்.

திரு. ஆலடி அருணா : தலைவரவர்களே, சேலம் இரும்பாலையில்
குறித்த காலத்தில் உற்பத்தி ஏற்படுமா? அந்த இரும்பாலையில்
தமிழக அரசுக்கும்—நமக்கும் பங்கு வேண்டுமென்று கோரப்பட்டதே
அதைத் தர மத்திய அரசு முன் வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முன் வரவில்லை. விரைவாக
நடத்தப்படவேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம்.

*Additional Judges for High Court*

*187 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the
Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to address the Government
of India to increase the number of High Court Judges in view
of the large number of pending cases; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) மாநில அரசு
மூன்று உயர் நீதி மன்ற கூடுதல் நீதிபதி பதவிகளுக்கு அனுப்பிய
செயற்குறிப்பை, இந்திய அரசு ஏற்று, குடியரசுத் தலைவரின் ஒப்புத



974 டிசம்பர் 23]

டன் அனுப்பியுள்ளது. அதன்படி இம்மூன்று உயர்நீதி மன்ற
டுதல் நீதிபதி பதவிகள் ஒவ்வொன்றும், கூடுதல் நீதிபதிகள் பதவி
மற்கொண்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகள் வரை இருக்கும்.

(முற்பகல் 10-00)

திரு. என். கே. பழனிசாமி : சார், ஹைகோர்ட்டிற்கு ஒரு கேஸ்
பாஞல் கிட்டத்தட்ட ஹியரிங்குக்கே 2, 3 வருஷம் ஆகிவிடுகிறது.
ப்போது மூன்று ஜட்ஜுகள் நியமிக்கப்பட்டிருப்பதன் காரணமாக
ந்தக் காலதாமதம் குறையுமா அல்லது பழையபடியேபோல்
ருக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பொதுவாகவே நம்முடைய
யர்நீதி மன்றத்தில் காலதாமதம் குறைவு. இருந்தாலும் கூடுதலாக
திபதிகள் வேண்டுமென்று கேட்டார்கள், நாம் கொடுத்திருக்
றோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனுமதி
பாடு கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இப்போது உயர்நீதி மன்றத்
லே ஒரு சில இடங்களில் நீதிபதிகளை நியமிக்காமல் காலியாக
வத்திருக்கிறார்கள். அதையும் நிரப்புவதைப்பற்றி மாநில
ரசாங்கம் மத்திய அரசைக் கேட்டு இருக்கிறதா? மதுரையிலே
ந பெஞ்ச் அமைக்கவேண்டுமென்று கேட்டிருந்தோம். அது என்ன
யிற்று?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முதல் கேள்விக்கு பதில், நாம்
பரிந்துரைகளைச் செய்து மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம்,
த்திய அரசிலே காலதாமதம் ஆகிறது. மதுரைக்கு வேண்டு
ன்று நாம் தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டு வருகிறோம்,
துவும் மத்திய அரசின் பரிசீலனையில்தான் இருக்கிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : மத்திய அரசுக்கு பரிந்துரை
னுப்பியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதிலே
ராவது தாழ்த்தப்பட்டவர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.

[1974 டிசம்பர் 23

திரு. கோவை செழியன் : தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்திற்கு நீதிபதிகள் நியமிக்க அரசு சிபாரிசு செய்யும்போது கட்சிக் கண்ணோட்டத்தோடு செய்வதாகக் குற்றச்சாட்டு இருக்கிறதே, நீதிபதிகளாக வருவதற்கு சில யோக்கியதாம்சங்கள் இருக்கின்றன, சில தவறுகள் செய்தவர்களைக்கூட அதற்கு சிபாரிசு செய்வதாகத் தெரிகிறதே அது உண்மைதானா? எதிர்காலத்திலாவது அவ்வாறு செய்யாமல் தகுதியானவர்களுக்குக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசியல் கட்சிச் சண்டையை நம்மோடு வைத்துக்கொள்ளலாம். உயர்நீதி மன்றத்திற்கு அதை எடுத்துச்செல்லக்கூடாது. நாம் தகுதிகளைப் பார்த்துதான் சிபாரிசு செய்கிறோம். உச்ச நீதி மன்றம் அதைப்பற்றி முடிவு எடுப்பார்கள்.

## சிறு தொழில் நிறுவனத்திலிருந்து கடன்கள்

* 188 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு கடன் உதவி வேண்டி 1973 ஆம் ஆண்டில் வந்துள்ள கோரிக்கைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) அதில் எத்தனை பேருக்கு கடன் உதவி அளிக்கப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) விவர அறிக்கை @ சட்டப் பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, சிறு தொழில் வளர்ச்சிக்காக வழங்கப்படுகின்ற கடன்கள் எந்த எந்த அடிப்படையிலே வழங்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிறு தொழில் வளர்ச்சிக்காக என்று யார் பணம் கேட்டாலும் வழங்கப்படுகிறது. தொழில் நல்ல முறையிலே நடக்குமா மூலப்பொருள்கள் கிடைக்குமா, விற்பனையாகுமா என்பதையெல்லாம் பரிசீலனை செய்துதான் முடிவு எடுப்பார்கள்.

@ 616–617-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1974 டிசம்பர் 23]

திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி : சிறு தொழில் கடன்களுக்காக போடப்படுகின்ற மனுக்கள் அதிகமாக சென்னைக்கு வர வேண்டியிருப்பதால் காலதாமதம் ஆகிறது. மதுரை போன்ற இடங்களில்—அங்கே அனுமதிவழங்க வேண்டிய தொகையின் அளவை அதிகமாக்கி—ஒரு பிரிவை ஏற்படுத்தி விரைவிலே அனுமதி கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதே 25 ஆயிரம் ரூபாய் அளவிலே மாவட்ட அளவிலே முடிவு எடுக்கலாம் என்று போட்டிருக்கிறோம்.

## சைதாப்பேட்டை வருவாய்க் கோட்டம்

* 189 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள சைதாப்பேட்டை வருவாய்க் கோட்டத்தை சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரின் எல்லைக்குள் கொண்டுவரும் செயற்குறிப்பு மேலும் காலதாமதம் ஆவதேன்?

(இ) எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இச்செயற் குறிப்பின்மீதான நடவடிக்கை ஒத்திப் போடப்பட்டுள்ளது.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தினுடைய தலைநகரம் சைதாப்பேட்டையிலிருந்து 60, 70 மைல்கள் தொலைவிற்கு மாற்றப்பட்டுவிட்டது. இப்போது கிரேட்டர் மெட்ராஸ் என்ற திட்டத்தின் அடிப்படையில் பொன்னேரி, கும்முடிப்பூண்டி, சைதாப்பேட்டை ஆகியவையெல்லாம் சென்னையோடு இணைகின்றன. ஆகவே வருவாய்த் துறையிலும் அவை சென்னையோடு இணைவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த குறிப்பு 30—3—1974 இல் பரிசீலிக்கப்பட்டு அது ஒத்திவைக்கப்படுவதாக முடிவுசெய்யப்பட்டது.

[1974 டிசம்பர் 23

## வைத்தியநாதபுரத்தில் தீ விபத்து

* 190 வினு—டாக்டர் எச். வி. ஹாண்டே: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டத்தைச் சார்ந்த வைத்தியநாதபுரம் என்ற கிராமத்தில் 17—7—1974 அன்று ஏற்பட்ட தீ விபத்தினுல் பல வீடுகள் பாதிக்கப்பட்டது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(இ) ஆமெனில் அதில் பாதிக்கபட்டவர்களுக்கென அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) 17—7—1974 அன்று அரியலூர் வட்டம் வைத்தியநாதபுரம் கிராமத்தில் பகல் 1-00 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டது. அத்தீவிபத்தில் 48 குடிசைகளும், 31 மாட்டுக்கொட்டகைகளும் எரிந்துபோய் விட்டன. வீடிழந்த 48 நபர்களுக்கும் தலா ரூ. 80 வீதம் அரியலூர், கோட்டாட்சித் தலைவரால் உதவிப்பணம் வழங்கப்பட்டுள்ளது.

DR. H. V. HANDE: Sir, even though the Government have announced that they are going to pay a sum of Rs. 80 per head to the victims in the accident, I understand that nowhere the amount has been paid. I have also received complaints that the amount has not been paid, though the Government has sanctioned. May I know from the Hon. Minister whether the amount has been paid to the victims?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இங்கே வந்திருக்கிற பதில்படி 48 பேர்களுக்கு ரூபாய் 80 வீதம் மொத்தம் 3,840 ரூபாய் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

## வேளாண்மைக் கடன்கள், மானியங்கள்

* 191 வினு—திரு. எம். முத்தையா: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

வேளாண்மைத் துறையால் விவசாயிகளுக்கு என்னென்ன பயிர் வகைகளுக்கு முறையே அரசு மானியமும், கடன்களும் கொடுக்கப்படுகிறது?



1974 டிசம்பர் 23]

மாண்புமிகு திரு. சி. பா ஆதித்தனுர்: விவர அறிக்கை @ பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கை விவரமாக இருக்கிறது. இதிலே நெல்லுக்கு 375 ரூபாய் மானியம் கொடுக்கப்படுவதாகச் சொல்லப் பட்டிருக்கிறது. நெல்விளைவிக்கக்கூடிய அத்தனை பேர்களுக்கும் கொடுக்கப்படுகிறதா, நெல்லுக்குக் கொடுப்பதைப் போன்று நிலக் கடலை சூரியகாந்தி போன்றவைகளுக்கு 125 ரூபாய் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. செயல் விளக்கப் பாத்திகள் போடுகிறவர்களுக்கு செலவுக்கு என்று மட்டும் பணம் கொடுக்கப்படுகிறதா அல்லது விவசாயிகள் போடுவதற்கும் பணம் கொடுக்கப்படுகிறதா? நிலம் இல்லாத ஏழைகளுக்கு ரூ. 5,035 கொடுக்கப்படுவதாகச் சொல்லப் பட்டிருக்கிறதே, அது எதற்காக கொடுக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு விடை இந்த அறிக்கையிலேயே இருக்கிறது. வேறு விளக்கம் கொடுக்கத் தேவையில்லை.

'Intensive Agricultural Area Programme Composite Demonstration Plots'.

எங்கே விளக்கப் பாத்திகள் இருக்கிறதோ அங்கே 375 ரூபாய்
அளவிற்கு மானியம் கொடுக்கப்படுகிறது. கிரவுண்ட் நட் பற்றிக்
குறிப்பிட்டார்கள் Demonstration Plots -க்கு மட்டிலும் கொடுக்
கப்படுகிறது. மூன்ருவதாக துணைக் கேள்வி கேட்டார்கள்.
லேண்ட்லஸ் ரிபேட்ரியட்ஸ் என்ற முறையிலேதான் 5,035 ரூபாய்
6 வருடத்தில் திருப்பி கொடுக்கக்கூடிய முறையிலே கடனுகக் கொடுக்
கப்படுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: இப்போது பலவிதமான படங்கள் செய்திச் சுருள் செய்திச் சுருள் என்று பிடித்துக்கொண்டிருக்கிருர் களே, வேளாண்மைத் துறையிலே வருகிற இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை செய்தி சுருளாக எடுத்து மக்களுக்குக் காட்டினுல் நன்மையாக இருக்கும், அக்ரிகல்சுரல் டிபார்ட்மெண்டிலிருந்து இனிமேலாவது அதற்கு ஏற்பாடு செய்து மக்களுக்கு விளக்க ஏற்பாடு செய்வார்களா?

---

@ 618-628-ம் பக்கங்களில் இணைப்பு II-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1974 டிசம்பர் 23

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேளாண்மைத் துறையில் போடப் படுகிற நல்ல திட்டங்கள் என்று சொன்னார்கள். அதற்காக அவர் களுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். செய்தித் சுருள் என்பது என்னுடைய மேற்பார்வையில் இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: சார், இந்த விவர அறிக்கையிலே டாப்பியோகாவுக்கு லோன் கொடுப்பதாக விவரம் காணப்படவில்லை. இப்போது கன்னியாகுமரி, திருநெல்வேலி ,சேலம் ஆகிய மாவட்டங் களிலே மக்கள் வள்ளிக்கிழங்கை அதிகமாக நாடி ஜீவிக்கிறார்கள். ஆகவே, வள்ளிக்கிழங்கு விவசாயத்தை அபிவிருத்தி செய்கிற வகை யிலே ஒரு ஆண்டு லோன் அதைப் பயிர் செய்வதற்காக என்று கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, மரவள்ளிக்கிழங்கை, ஜவ்வரிசிக்காக பயிர் செய்வதற்கு கோவாப் ரேடிவ் சென்ட்ரல் பாங்க் மூலம் கடன் கொடுக்கிறார்கள். ஆனால் விரிவான திட்டம் மாநில அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் ஆய்வில் இருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத் தில் தீவிர சாகுபடித் திட்டம் அமலில் இருந்து வருகிறது. 375 ரூபாய் மானியம் கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. எத்தனை பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது, யார் யாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தைக் கூறமுடியுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தனியாகக் கேள்வி கேட் டால் விவரம் சேகரித்துக் கொடுக்கமுடியும்.

திரு. எம். சுரேந்திரன்: அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது விவசாயத் துறையிலே நல்ல திட்டங்களைச் செயல்படுத்துவ தாகச் சொன்னார்கள். அந்தத் திட்டங்களைப் படம்பிடித்து மக்களுக் குக் காட்டக்கூடாதா என்று கேள்வி கேட்கப்பட்டபோது தன்னிடத் திலே அந்த அதிகாரம் இல்லை என்று சொன்னார்கள். கூட்டுப் பொறுப்பிலே அமைச்சரவை இயங்குகிறது, அந்த அமைச்சரவையிலே நல்ல காரியங்களைப்பற்றி சினிமா எடுத்து செய்தியாகக் காட்டுவதற்கு அதைப்பற்றி கேபினட்டிலே விவாதிப்பதற்கு ஏன் ஒரு செயற்குறிப் பைத் தயாரிக்கக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.



1974 டிசம்பர் 23]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, உறுப்பினர் சொன்னது நல்ல யோசனை. ஆனால் அது விவாதித்து முடிவெடுக்க வேண்டிய காரியம் என்று சொன்னேன்.

திரு. ஏ. எம். இராஜா: தலைவரவர்களே, இந்த பருத்தி தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் விசைத் தெளிப்பான்கள் வாங்குவதற்கு 25 சதவீதம் மான்யம், அதிகப்பட்சம் 200 ரூபாய் மான்யம் வழங்கப் படுவதாக கூறப்படுகிறது. பருத்தி சாகுபடித் தீவிரத் திட்டத்தின் கீழ் விசைத் தெளிப்பான்கள் கேட்டால் அந்த டி.ஏ.ஓ. ஆபீஸ்களில் விசைத் தெளிப்பான்கள் கிடைப்பதில்லை. அந்த விசைத் தெளிப்பான் கள் கிடைப்பதற்கு உடனடியாக அமைச்சரவர்கள் ஏற்பாடு செய் வார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, குறிப் பிட்ட எந்த இடத்தில் இந்த மானியமோ அல்லது கடன் உதவியோ கொடுக்கவில்லை என்றால், அது கவனிக்கப்படும்.

திரு. ஏ. எம். இராஜா: தலைவரவர்களே, கோபி டி.ஏ.ஓ. ஆபீசில் கேட்டும், அங்கே கிடைப்பதில்லை, வருவதில்லை என்று சொல்கிறார் கள். அந்தப் பகுதியிலே வரலட்சுமி, டி.பி.எஸ். போன்ற பருத்திகளைப் போட்டிருக்கிறோம். அதற்கு வாரத்திற்கு ஒருமுறை ஃபெஸ்டிசைட்ஸ் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. எனவே, விசைத் தெளிப்பான்கள் உடனடியாகக் கிடைக்க ஆவன செய்வார் களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, விசைத் தெளிப்பான்கள் கொடுப்பது, கிரவுண்ட்நட் இவைகளுக்குக் கொடுத்து வருகிறோம். தனியாகக் கேள்வி கேட்டால் முழு விவரங் கள் கோவை மாவட்டத்தைப்பற்றிச் சொல்ல முடியும்.

## கோயில்பட்டியில் விநியோகிக்கப்பட்ட கம்பு விதைகள்

* 192 வினா—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்ற ஆண்டு (1973) வேளாண்மைத் துறை மூலம் கோயில்பட்டி தாலுக்காவில் விநியோகித்துள்ள H B 3 கம்பு விதை எங்கு தயாரிக்கப்பட்டது?

(இ) என்ன விலையில் விநியோகிக்கப்பட்டது?

[1974 டிசம்பர் 23

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) & (இ) விவர அறிக்கை @ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, சென்ற ஆண்டு வாங்கிய ஹெச். பி. 3 வீரியக் கம்பு விதைகள் 6,390 கிலோ. இதில் பெரும்பகுதி சக்தி சுகர்ஸ் லிமிடெட்டில் சுமார் 500 கிலோவும், அதிகமாக பாரி கம்பெனியில் 4,998 கிலோவும், மத்திய மாநில விதைப் பண்ணையிலிருந்து சுமார் 800 கிலோவும் விநியோக்கப்பட்டிருக்கிறது. இது முளைக்காமல் இதை வாங்கிப்போட்ட விவசாயிகள் ஏக்கருக்கு 1,000 ரூபாய், 500 ரூபாய் என்று நஷ்டப்பட்டது அமைச்சரவர்களுக்கும் தெரியும். போன ஆண்டு தனிப்பட்ட கம்பெனிகளில் கொடுத்தது எவ்வளவு மோசமாக இருந்தது என்பதை உணர்ந்து, அதனால் ஏற்பட்ட நஷ்டத்திற்கு அவர்களிடமிருந்து நஷ்ட ஈடு வாங்கவில்லை என்றாலும், இனிமேலாவது அந்தக் கம்பெனிகளுக்கு எந்தவிதமான ஆர்டரும் கொடுக்காமல், அவர்கள் தயாரிக்கின்ற உரிமையையும் கொடுக்கக்கூடாது என்று சொல்லும் முறையில் உத்தரவு பிறப்பித்து, விவசாயிகளுக்கு வேண்டிய விதைகளை சர்க்கார் பண்ணையிலேயிருந்தே தயாரித்துக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, தற்போது சர்க்காருடைய விதைப் பண்ணையிலிருந்து தயாரிக்கப்படும் விதைகள் போதுமானவை அல்ல என்று நான் ஒப்புக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையைக் கவனித்து முடிவெடுக்கப்படும்.

*Potato Seed Farm at Hosur*

* 193 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal to produce seed potatoes at Hosur by starting a Potato Seed Farm; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) ஆம்.

@ 628 -ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1974 டிசம்பர் 23]

(இ) 30 ஏக்கர் அளவில் ஒரு விதைப்பண்ணையைத் துவக்கி சிம்லாவில் இருந்து பெறப்படும் ஆதார விதைகளிலிருந்து விதைப் பெருக்கம் செய்து விவசாயிகளுக்கு விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

*Manufacture of drilling rigs*

* 194 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that drilling rigs are manufactured at the Government Agricultural Engineering Workshop at Washermanpet; and

(*b*) if so, the number manufactured during 1973?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) ஆம்.

(இ) 1973 ஆம் ஆண்டில் எதுவும் தயாரிக்கப்படவில்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், இப்பொழுது சர்க்காருக்குத் தேவையான "ரிக்ஸ்" பூராவும் தனியார் கம்பெனிகளின் மூலமாக வாங்கப்படுகிறது. "ரிக்ஸ்"-க்கு 5 லட்சம், 6 லட்சம் ரூபாய் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. அவைகளை நாமே உற்பத்தி செய்தால் 2½ லட்சம் ரூபாய்க்குள் செய்ய முடியும். நமது தேவையும் அதிகமாக இருக்கிறது. ஆகவே, நம் சர்க்காரே இதைச் செய்வதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, நமது ஓர்க்ஷாப்பில் "பெர்கஷன் டிரில்ஸ்" என்று தயாரிக்கிறோம். ஏறக்குறைய இரண்டு லட்சம் ரூபாய் செலவாகிறது. தனியாரிடத்தில் வாங்குவதென்றால்கூட, அது அரசுத் துறையில் தயாரிக்கப்படும் அவர்களுடைய தயாரிப்பிலிருந்து கூடியவரையில் அவர்களிடமிருந்து தான் வாங்கிக் கொண்டிருக்கிறோம்.

திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் வாங்கியிருக்கும் டிரில்கள் ரிப்பேராகியிருப்பதால் மாவட்ட விவசாய அதிகாரி இருக்கும் இடத்தைத் தலைமையிடமாக வைத்து, அங்கே பழுதுபார்ப்பதற்கு ஓர்க்ஷாப் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, அது கொஞ்சம் கொஞ்சமாக விரிவுபடுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண்கள் 115 மற்றும் 116 மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களின் வேண்டுகோள்படி தள்ளிவைக்கப்படுகின்றன.

### Employment in Film Industry

* 195 Q.—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether any communication from the Centre on the proposed legislation to regulate employment in film industry has been received by this Government; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) & (இ) 1972 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் மத்திய அரசு இவ்வரசுக்கு அனுப்பிய குறிப்பில் திரைப்படத் தொழிலாளர்களுக்காக உத்தேசிக்கப்பட்ட சட்டம் இன்னும் முடிவு செய்யப்படவில்லையென்றும், முடிவு எடுக்கப் பட்டவுடன் இவ்வரசுக்குத் தெரியப்படுத்தப்படும் என்றும் தெரிவித் தது. மத்திய அரசின் பதில் இன்னமும் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. என். கே. பழனிசாமி: சார், அமைச்சரவர்கள் அனுப்பி யிருக்கும் பரிந்துரையில் ஸ்டுடியோவில் வேலைபார்க்கும் டெக்னிஷி யன்கள் மற்றும் இருப்பவர்களுக்கு என்னென்ன பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது என்று சொல்வார்களா?

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, தமிழ் நாட்டிலுள்ள குறிப்பிட்ட சட்டங்கள் எல்லாம் ஸ்டுடியோ திரைப்பட தொழிலாளர்களுக்கும் பொருந்தும். ஆனாலும் இது அகில இந்திய மட்டத்திலே உள்ள பிரச்னையானதினாலே மத்திய அரசு இதற்கான சட்டத்தை உருவாக்கித் தர வேண்டுமென்று நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

'Legislation for film industry workers'

என்ற தலைப்பிலே கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி மத்திய அரசு குழு போட்டு ஆராய்ந்து வருகிறார்கள். முடிவெடுத்த பிறகு ஒரு சட்டம் வரும் என்று நான் கருதுகிறேன்.



திரு. என். கே. பழனிசாமி: சார், 1947-வது ஆண்டு "இண்டஸ்டிரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட்" இவர்களுக்கும் பொருந்துமா? இல்லையென்றால் அப்படிப் பொருந்தக்கூடிய சட்டமாகத் திருத்து வதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இவர் களுக்குக் கீழ்க்கண்ட சட்டங்களெல்லாம் பொருந்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

Factories Act, Payment of Wages Act, Industrial Disputes Act, Employees State Insurance Act, Employees Provident Fund Act and Industrial Employees Standing Orders

இவ்வளவும் அவர்களுக்கும் பொருந்தக் கூடியவைகள்.

### Power Project Unit

* 196 Q.—Thiru N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether it is a fact that a power project Division—one of the units of the Bharat Heavy Electricals Limited, will be located in Madras; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) & (இ) தலைவரவர்களே, பாரத் கனரக மின் இயந்தர நிறுவனம் சென்னையில் "ப்ராஜக்ட் டிவிஷன்" ஆரம்பித்துள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: சார், பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் பெரிய பெரிய தொழில்களையெல்லாம் ஆரம்பித்திருக்கிறது. நம்முடைய ஸ்டேட்டிலே பவர் டெவலப்மெண்டை வைத்திருக்கிறது. இதற்கு என்ன அர்த்தம். அதனுடைய "ஃபங்ஷன் என்ன"?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, செய்யப் பட்ட கன இயந்திரங்களை வழங்குவதும் அமைத்தலும், "சப்ளை அண்ட் எரெக்ஷன்" இதன் குறிக்கோளாக அமையும்.

திரு. வா. மை அப்துல் ஜப்பார்: தலைவரவர்களே, சென்னை போன்ற பெரிய நகரங்களில் இம்மாதிரி மேலும் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படுவதால் பல பிரச்னைகள் ஏற்படுகின்றன. தொழிலாளர் களுக்கான குடியிருப்பு வசதி, தண்ணீர் வசதி, மின்சார சப்ளை போன்ற

[1974 டிசம்பர் 23

பலவிதமான பிரச்னைகள் ஏற்படுகின்றன. இம்மாதிரி கச்சாப் பொருட்கள் வெளி மாநிலங்களிலிருந்து வந்து இயக்குகின்ற தொழில் நிறுவனங்களை, வறட்சிப் பகுதிகளில் தொழிலாளர்களுக்கு வேலை யில்லாமல் இருக்கிறதே, அந்தப் பகுதிகளுக்கு விஸ்தரித்தால் அந்தப் பகுதியும் முன்னேற்றம் அடையும். இம்மாதிரி தலைநகரங்களில் ஜனத்தொகையினால் ஏற்படும் பிரச்னைகளையும் சமாளிக்க முடியும். இந்த அம்சத்தை அரசு கவனத்திற்குக் கொண்டு இனி எதிர்காலத்தில் இம்மாதிரி பெரிய தொழிலை ஆரம்பிப்பது என்றால், வறட்சிப் பகுதி களில் ஆரம்பிப்பதற்கு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, இது பாரத் ஹெவி எலக்டிரிகல்ஸ் லிமிடெட் பற்றிய கேள்வியாகும். வசதிக் கேற்ப அதை இந்த இயந்திரங்களை வழங்குதல், அமைத்துத் தருதல் வசதிக்காக இந்த "ப்ராஜக்ட் டிவிஷனை" ஆரம்பித்திருக்கிறார்கள். இது நம் அரசாங்கத்தைப் பொறுத்த காரியம் அல்ல.

திரு. என். கே. பழனிசாமி : சார், இம்மாதிரி "சப்ளை அண்ட் எரெக்ஷன்" என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். இதனால் நம்முடைய ஸ்டேட்டிற்கு என்ன பயன்? நம் சர்க்காருக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் உண்டு?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, இது மத்திய சர்க்காரின் நிறுவனம்.

## லாரிகளுக்குப் பர்மிட் வழங்கல்

* 197 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத் துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

நீண்ட தூரம் செல்லும் லாரிகளுக்குப் பர்மிட் வழங்குவதை நிறுத்திவைக்கக்கோரி மத்திய அரசு நமது மாநில அரசிடம் வலி யுறுத்தியுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, லாரிகளுக்கு இத்தகைய பர்மிட் கிடைக்காததால் முக்கியமான நேரங்களில், உணவுத் தட்டுப் பாடு ஏற்படும் நேரத்தில்கூட, நீண்ட தூரத்திற்கு உணவுப் பொருட் களை எடுத்துச் செல்கின்ற நெருக்கடியான சூழ்நிலைகளில்கூட வருந்து கிற நிலை ஏற்பட்டு, வேகன்கள்கூட இரயில்வேயில் கிடைக்காத



1974 டிசம்பர் 23]

அளவில் மோசமாகிவிடுகிறது. லாரிகளுக்குப் பர்மிட் கிடைப்பதில் தீவிர கவனம் செலுத்தி, இந்த லாரி பர்மிட்டுகளை விரைந்து பெறு வதற்கு நமது மாநில அரசு மத்திய அரசோடு போராட முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, எண்ணெய்ப் பற்றாக்குறைக் காரணமாக மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்தியதனால், அந்த வகையிலே 500 கிலோ மீட்டர் போகின்ற லாரிகளுக்கு அனுமதி வழங்க வேண்டாமென்று தெரிவித்தார்கள். ஆனால் அந்த உத்தரவு நடைமுறைக்கு ஏற்றது அல்ல என்ற கருத்தை நம் அரசு மத்திய சர்க்காரிடம் எடுத்து சொல்லி வருகிறது. மத்திய அரசு மறு பரிசீலனை செய்வதாகச் சொல்லி வருகிறார்கள்.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இப்படி பர்மிட்களை வழங்குவது நிறுத்தி வைப்பது நம்முடைய மாநிலத்தில் மட்டும் தான் நடைபெறுவதாக தெரிகிறது. பக்கத்திலே இருக்கின்ற ஆந்திராவில் அவ்வளவு லாரிகளுக்கும் அவர்கள் பர்மிட் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் பலபேர் லாரி வாங்கி வைத்துக் கொண்டு பர்மிட் இல்லாமலே—ஏறத்தாழ ஒரு லட்சம் முடக்கம் செய்து—பலபேர் இருக்கிறார்கள். மற்ற மாநிலங்களைப் போல நம்முடைய மாநிலமும் பர்மிட் வழங்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, உறுப்பினர் சொன்னதுபோல் இந்திய அரசு அந்தக் கருத்தை தெரி வித்தவுடன் தமிழ்நாடு அதை நிறைவேற்றியது. ஆனால் மற்ற மாநிலங்கள் அதை நிறைவேற்றவில்லை. நாம் இப்போது மற்ற மாநிலங்களைப்போல அந்த உத்தரவை ரத்து செய்து விட்டோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தங்கமணி.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, we are trying our best to catch your eyes. But your eyes are concentrated on files. May I submit. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யார் யார் கை தூக்கினார்கள் என்று பெயர் சொல்லட்டுமா? தங்கமணி. அலடி அருணா, அனந்த நாயகி, லத்தீப். நான் பார்த்துக் கொண்டு இருக்கிறேன்.

[1974 டிசம்பர் 23

திரு. கே. 'டி. கே. தங்கமணி: அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் நேரத்தில் போதுமான டீசல் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் பத்திரிகையிலே ஒரு செயதி வந்து இருக்கிறது. மத்திய சர்க்கார் போதுமான டீசல் எண்ணெய் தருவதாக சொல்கிறார்கள் என்று. மத்திய சர்க்காரிடம் போதுமான டீசல் எண்ணெய் இருப்பதாக செய்தி வந்திருக்கிறது. அது உண்மையா? டிசல் எண்ணெய் போதுமானது கொடுக்கப்படுகிறதா? இந்த மாதிரி லாரி பர்மிட் தாமதம் ஆவதற்கு அரசு வேறு ஏதாவது காரணம் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, டீசல் பற்றாக்குறை என்பது அந்நிய செலாவணி நெருக்கடி காரணமாக ஏற்பட்டு உள்ளது என்பது மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும். டீசலை எந்த அளவுக்குச் சிக்கனப் படுத்துகிறார்களோ, அந்த அளவுக்கு நல்லது என்று மத்திய அரசு நமக்குத் தெரிவித்து இருக்கிறது. இந்த அடிப்படையில் அவர்கள் சில யோசனைகள் தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால் வேளாண்மைத் துறையைப் பொறுத்த வரையில் எந்த வகையான பற்றாக்குறையும் இருக்கக் கூடாது என்பதுதான் இந்த அரசாங்கத்துடைய கொள்கை. மத்திய அரசாங்கத்துடைய கொள்கையும் அது தான். போக்குவரத்துத் துறையில் சிக்கனம் கையாள மத்திய அரசு கொள்கை கையாளப்பட்டு வருகிறது. இன்று ஏற்பட்டு இருக்கும் பொருளாதார நெருக்கடியில் நல்ல பலன் அளிக்கும் என்ற கருத்தை நம் அரசு ஏற்றுக் கொண்டது. ஆனால் இப்போது இங்கே இருக்கின்ற சூழ்நிலையை ஒட்டி இதை லாரிகளுக்கு அமுல் படுத்துவது சரியல்ல என்பதை மத்திய அரசாங்கத்திற்கு தெரிவித்து இருக்கிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சேஸிஸ் உற்பத்தி செய்கிற கன தொழிற்சாலை அதிபர்கள் இப்போது மத்திய அரசாங்கத்திடம் சொல்லி இருக்கிறார்களாம். இதன் காரணமாக லாரி வாங்க ஆள் இல்லாமல் இருக்கிறார்கள், ஆகையினால் லாரிக்கு போட்ட கட்டுப்பாட்டை உடனடியாக நீக்க வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். அகர்கான நடவடிக்கை மத்ய அரசு எடுத்து வருவதாக தெரிகிறது. இங்கே இருக்கின்ற அரசு மேலும் ஆரிகப்படுத்த எழுதி இருக்கிறதா, நடவடிக்கை எடுக்குமா என்று தெரிவிப்பீர்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சங்கிரன்: தொழிலதிபர்கள் சாமர்த்தியக்காரர்கள்.



1974 டிசம்பர் 23]

திரு. முனு ஆதி: தலைவர் அவர்களே, இந்த அடிப்படையில் 4 ஸ்டேட், 3 ஸ்டேட் பர்மிட் என்று லாரிகளுக்குத் தருகிறார்கள். அதை வாங்கிய உடன் மற்றவர்களுக்கு மேல் விலைக்கு விற்பதாக தெரிகிறது. மற்றவர்களுக்கு மாற்றவிடாமல் தடுக்க அரசுக்கு யோசனை உண்டா? இதன் காரணமாக இதிலே பல ஊழல்கள் நடைபெறுவதாக தெரிகிறது. இதை ஒட்டி அரசாங்கம் செயல்பட முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாநிலங்களுக்கு இடையே இருக்கின்ற போக்குவரத்து பர்மிட் அதிகப் படுத்துவதன் மூலம், அனுமதிகள் தாராளமாக எல்லோருக்கும் கொடுப்பதன் மூலம் தான் செய்ய வேண்டும். ஒன்று இரண்டு குறைகள் ஏற்படுமானால் அவற்றைத் தவிர்க்க உறுப்பினர் சொன்னதை போல் செய்வதுதான் வழி.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, பெட்ரோல், டீசல் ஆகிய இந்த அத்யாவசியப் பொருள்கள் பங்கீட்டுக்கு மத்திய அரசு என்ன விகிதாச்சாரம் வைத்து இருக்கிறது. மாநிலங்களுக்கு இடையே என்ன விகிதாச்சாரம் அடிப்படை? நமது மாநிலத்திற்கு கொடுக்கிற விகிதாச்சாரம் எத்தனை சதவிகிதம் என்று மாண்புமிகு அமைச்சர் தெரிவிப்பாரா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் இந்த டீசல், பெட்ரோலியம் பொருள்களை எந்த அடிப்படையில் பகிர்ந்து தருகிறார்கள் என்பதும் நாம் அதிலே கலந்து கொள்ளப் படவில்லை என்பதும் தெரியாத, புரியாத புதிராக இருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, இந்த பர்மிட் தடை செய்கிற பிரச்னையிலே எத்தனை லாரிகள் புதிதாக வாங்கினவர்கள் பர்மிட் அப்ளிகேஷன் போட்டு பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்ற விவரம் அரசுக்கு வந்து இருக்கிறதா என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, பாதிக்கப்படவில்லை. எல்லா அனுமதிகளும் வழங்கப்பட்டு இருக்கின்றன.

[1974 டிசம்பர் 23

திரு. எஸ். முகமது கோதர் முகைதீன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களே, இப்போது பர்மிட் தடை நீக்கி இருப்பதாக தெரிவித்தார்கள். நமது மாநில அளவுக்கு கொடுக்கிற அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறதா, இன்டர் ஸ்டேட் பர்மிட் கொடுக்கப் பட்டு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இன்டர் ஸ்டேட், இண்ட்ரா ஸ்டேட் இரண்டுக்கும் இப்போது அனுமதி வழங்கப்படுகிறது.

திரு. ஆலடி அருணா: தலைவர் அவர்களே, இந்த லாரி போக்குவரத்து தனியார் கையில் இருப்பதால் கடத்தல் வளரக் காரணமாக இருக்கிறது. இதனால் லாரி போக்குவரத்தை அரசே ஏற்றுக் கொண்டு நடத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, படிப்படியாக மேற்கொள்ள வேண்டிய காரியம்.

திரு. எம். சுரேந்திரன்: பெர்மிட் தருவதிலே டீசல் பற்றாக்குறைக் காரணம். இதை சிக்கனமாக பயன் படுத்த வேண்டுமென்று மத்திய அரசு ஆலோசனை கூறியதன் பேரிலே அம்மாதிரி செய்யப்பட்டது என்றும் அதற்கு பின்னால் இப்போது மத்திய அரசு அப்படி ஆலோசனை கூறியதை மற்ற மாநிலங்கள் ஏற்றுக் கொள்ளாத நிலை, இதை ரத்து செய்கிறோம் என்று மந்திரி பதில் கூறினார்கள். இதிலே எது உண்மை? மத்திய சர்க்கார் சொல்கிறது நியாயமா, சரி என்று ஏற்றுக் கொள்ள வேண்டுமா? அதே நேரத்தில் வேண்டியது இல்லை என்று சொல்வதும், இதிலே எது சரியானது என்று தெரியப்படுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களில் மட்டுமல்ல. மத்திய அரசும் இதைப் பரிசீலனை செய்கிறது. எண்ணெய் சிக்கனம் செய்ய வேண்டியது என்பது ஒன்று. அதை எப்படி செயல்படுத்துவது என்பது மற்றொன்று. சிக்கனப் படுத்த வேறு முறைகளைக் கையாளலாமா என்பதை மத்திய அரசு பரிசீலனை செய்கிறது. அதனால் தான் அந்த உத்தரவை நாம் ரத்து செய்தோம்.



1974 டிசம்பர் 23]

## ஆலயங்களிலுள்ள அணிகலன்கள்

198 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயில்களில் உள்ள அணிகலன்களைப் பரிசோதித்து பார்க்கும் பணி யாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: கோவில்களில் உள்ள அணிகலன்களை பரிசோதித்து சரி பார்க்கும் பணி இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை உதவி ஆணையாளர்கள் நிலையில் உள்ள நகைகள் சரி பார்க்கும் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரப்பாண்டியன்: தலைவர் அவர்களே, கோவில்களில் உள்ள நகைகளை சரி பார்க்கிற நேரத்தில் பொற்கொல்லர்கள் பணி பயன்படுத்தப் படுமா? இனிமேல் பயன் படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, நகைகள் சரிபார்க்க அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் பயன்படுத்தப்படுகிறார்கள். நம்முடைய மாநிலத்தில் உதவி ஆணையாளர்கள் நிலையில் நான்கு இடங்களில்—சென்னை, திருச்சி, தஞ்சை, மதுரை—அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கீழே தொழில் நிபுணர்கள், பொற்கொல்லர்களாகப் பணிசெய்கிறார்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, இந்து ஆலயங்களில் உள்ள ஏராளமான நகைகள் நீண்ட காலத்திற்கு முன்பு செய்யப்பட்டவை அண்மையில் அவைகள் சில களவு போன சம்பவங்கள் நடைபெற்று இருக்கின்றன. ஆலயங்கள் சம்பந்தப்பட்ட நகைகளை தேசிய உடைமையாக்கப்பட்ட வங்கிகளில் வைக்க அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, தற்போது இந்த நகைகளை ஆலயங்களில் பாதுகாத்து வைத்து இருக்கிறோம். இந்த நகைகளை திருவிழாக்களில் பயன்படுத்தவேண்டிய காரணத்தால் வங்கிகளில் வைத்து, திருப்பி எடுக்கவும், மீண்டும் வைக்கவும், சிரமங்கள் ஏற்படுகின்றன. கோவில்களில் சிறந்த பாதுகாப்பு செய்து

நகைகளை காப்பாற்றி வருகிறோம். அங்கத்தினர் அவர்கள் எந்தக் கோயிலில் நகைகள் களவு போய் இருக்கின்றன என்ற தகவல் கொடுத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[முற்பகல் 10-30]

திரு. கே. கந்தசாமி : எவ்வளவு நாட்களுக்கு ஒரு முறை இது சோதனை செய்யப்படுகிறது? திரு. எட்மண்ட் அவர்கள் சொன்னது போல் நீண்ட காலத்திற்கு அதைச் ,சோதனை செய்யாமல் விட்டு விடுவதால்தான் தவறுகள் நடக்க வழி ஏற்படுகிறது. ஆகவே, அடிக்கடி சோதனை செய்து பாதுகாப்பாக அந்த நகைகளை ,வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அடிக்கடி பரிசோதனை செய்ய வேண்டுமென்ற நிலையில்தான் தற்போது அலுவலாளர்களில் சில பேரை அதிகப்படுத்தி அதற்கான ஏற்பாடுகள் எல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. வை. பாலசுந்தரம் : தமிழ் நாட்டுக் கோயில்களில் 500 ஆண்டுகளுக்கு முற்பட்ட அணிகலன்களும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட அணிகலன்களும் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட அணிகலன்கள் எந்தெந்தக் கோயில்களில் இருக்கின்றன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பழமையான கோயில்கள் எல்லாவற்றிலும் இருக்கின்றன.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : கோயில்களில் செலுத்தப்படுகிற பொன் ஆபரணங்களை மாற்றி அதைப் போல் பித்தளையில் செய்து வைத்து விடுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. எதிர்காலத்திலாவது இந்த மாதிரித் தவறு ஏற்படாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பொன் ஆபரணங்கள் இருப்பதுதான் தெரியும்.

திரு. கே. என். குமாரசாமி : ஆலயங்களில் நகைகளைப் பாதுகாப்பதற்கு செக் பண்ணுவதற்கு அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் ஒவ்வொரு ஆலயத்திலும் மாற்று அணிகலன்கள் வைக்கப்படுவதாகப் புகார் இருக்கிறது. அத்தகைய புகார் அரசுக்கு வந்திருக்கிறதா?



மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அப்படி மாற்று அணிகலன்கள் வைக்கப்பட்டிருப்பதாக எந்தவிதமான புகாரும் வரவில்லை. உண்மையான நகைகளைப் போலி நகைகளைக் கொண்டு மாற்றிவிடாதிருக்க, அதைக் கண்காணிக்கத் தொழில் நுட்ப உதவியாளர்கள் இருக்கிறார்கள். மற்ற அதிகாரிகள் இருக்கிறார்கள். அப்படியும் ஏதேனும் தவறு நடந்தால் பொறுப்பாளர்கள், அறங்காவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்; இப்போது எடுக்கப்பட்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : இப்படிப்பட்ட கோயில்களில் ஒரு தர்மகர்த்தா பதவியிலிருந்து போய் அடுத்த தர்மகர்த்தா சார்ஜ் எடுக்க வரும்போதுதான் நகைகளைச் சரிபார்த்துக் கொடுக்கிறார்கள். ஆகவே, ஏறக்குறைய ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறைதான் சரிபார்க்கக் கூடிய நிலைமை இருக்கிறது. மூன்று மாதத்திற்கு ஒரு முறை, ஆறு மாதத்திற்கு ஒரு முறை "பீரியாடிகல் இன்ஸ்பெக்ஷன் பை தி இன்ஸ்பெக்டிங் அதாரிடி" இருந்தால்தான் ஒழுங்காக இருக்கிறதா என்று கண்காணிக்க முடியும். அதற்கு இந்த அரசு வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அப்படி வழிவகைகள் இருக்கின்றன. இடைக்காலத்திலே சோதனை செய்யப்படுகின்றன.

## திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் ஆலயத் திருப்பணி

* 199 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

திருவண்ணாமலை ஸ்ரீ அருணாசலேஸ்வரர் கோயில் திருப்பணி வேலை எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : திருக்கோயிலின் மேற்கு கட்டை கோபுரம் 1 லட்ச ரூபாய் செலவில் முற்றிலும் திருப்பணி செய்யப்பட்டுள்ளது. கிழக்கு ராஜ கோபுரம், வல்லாள மகாராஜ கோபுரம் ஆகியவைகளின் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. மேற்கு ராஜ கோபுரம் மற்றும் கிளி கோபுரம் ஆகியவை திருப்பணி செய்ய ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : திருவண்ணாமலைக் கோயில் திருப்பணி வேலை எப்போது துவக்கப்பட்டது? எப்போது முடிவுறும்? வெளிநாட்டு உதவி ஏதேனும் கிடைத்துள்ளதா?

[1974 டிசம்பர் 23

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இந்தக் கோயிலின் திருப்பணி வேலை 1971-ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. 1970-ம் ஆண்டில் சுமார் 44.95 லட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு அனுமதிக்கப்பட்டுள்ளது. மலேஷியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு அறங்காலவர், தலைவர், நிர்வாக அதிகாரி சென்று நன்கொடைகள் வசூல் செய்து வந்திருக் கிறார்கள். முதற்கட்டமாக 12 லட்சத்து 500 ரூபாய் நன்கொடை யாக தமிழ்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் வசூல் செய்யப் பட்டுள்ளது. இந்தப் பணி சுமார் ஐந்தாண்டுக் காலத்தில் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எஸ். முருகையன் : திருவண்ணாமலை கோயில் திருப்பணியில் கிரிப் பிரதட்சிணம் வரும்போது இருக்கக்கூடிய "அடி அண்ணாமலை" கோயிலும் சேர்க்கப்பட்டிருக்கிறதா? சேர்க்கப்பட்டிருந்தால் அதற்கு எவ்வளவு மதிப்பீடு?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அந்தக் கோயில் சேர்க்கப் படவில்லை என்று தெரிகிறது. விடுபட்டுப் போயிருந்தால் அதையும் எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து கேள்வி 200 . . .

திரு. முனு ஆதி : இரண்டு தடவையாகக் கையைத் தூக்கியும் என்னைக் கூப்பிடவில்லை. சபாநாயகர் பார்த்தும் புறங்கணிக்கிறார். தயவு செய்து என்மீது ஏதேனும் உங்களுக்குக் கோபம் இருந்தால் சொல்லிவிடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டிரான்ஸ்போர்ட் மினிஸ்டர் கேள்வியில் உங்களுக்கு அனுமதி கொடுத்தேன். திருவண்ணாமலைக்கும் திரு. முனு அதிக்கும் தொடர்பு இல்லை என்ற காரணத்தால்தான் கூப்பிடவில்லை.

## சீர்காழியிலுள்ள அரிசன கூட்டுறவு பால் வழங்கு சங்கம்

* 200 வினா—திரு. டி. வி. சம்பத் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :—

(அ) சீர்காழி வட்டத்திலுள்ள அரிசன கூட்டுறவு பால் வழங்கு சங்கம் இப்பொழுது செயல்படாமல் இருப்பது உண்மையா?

(இ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?



1974 டிசம்பர் 23]

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : (அ) ஆம்.

(இ) சீர்காழி வட்டம் செம்மங்குடியில் இருந்த ஒரே ஒரு அரிசன கூட்டுறவு பால் வழங்கும் சங்கம் செயல்படவில்லை. சங்க கையிருப்புத்தொகை கையாடல் செய்தது சம்பந்தமாக முன்னால் சங்க செயலாளரிடமிருந்து கையாடல் செய்தத் தொகை வசூல் செய்யப் பெற்று, மற்றும் அன்னார் மீது தொடரப்பட்ட வழக்கு காவல் துறையின் புலனாய்வில் இருக்கிறது. மேலும் பணம் கையாடல் செய்யப்பட்ட காலத்திற்குரிய வட்டியை வசூலிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மேற்படி நடவடிக்கைகள் யாவும் முடிந்தபின்னர் டி சங்கத்தைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு. என். கிட்டப்பா : சீர்காழி வட்டத்திலுள்ள அரிசன கூட்டுறவு பால் வழங்கும் சங்கத்தில் பிரச்னைக்குரியவராகச் சொல்லப்படக்கூடியவர் அந்தத் தொகுதியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் என்று சொல்லப்படுகிறது. அங்கே நிறையப் பணம் கையாடல் செய்யப்பட்டிருப்பதற்கு மூலகாரணமே அவர்தான் என்றும் அங்கே நம்பப்படுகிறது. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் அவர் செல்வாக்கைப் பயன்படுத்தி தப்பித்து வருகிறார்கள். ஆகவே, அந்தப் பகுதி பொதுமக்களின் எண்ணத்தை மனதில் வைத்து நல்ல நடவடிக்கையை சட்டப்படி விரைவில் எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : கையாடல் செய்யப்பட்ட பணம் அத்தனையும் வசூலாகிவிட்டது. எந்தத் தேதியில் கையாடல் செய்யப்பட்டதோ, அந்தத் தேதியிலிருந்து வட்டி வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. கையாடல் செய்ததற்காக குற்றப் பிரிவின்படி வழக்கு பதிவு செய்யப்பட்டு வழக்கு நடந்து வருகிறது.

திரு. என். கிட்டப்பா : கையாடல் செய்த தேதியிலிருந்து இது வரை மூன்று நான்கு ஆண்டுகள் ஆகியிருக்கும். இவ்வளவு நாட்கள் கடந்து போய்விட்டாலும் இனிமேலாவது அரசு தீவிரமாக சீக்கிர மாக நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையின்பேரில் தீவிரமான நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : [1974 டிசம்பர் 2
முடிவுற்றன. விளுக்கள்—விடைகள்

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்
பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது
என்பதைக் குறிக்கும்.]

## 3. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

### (அ) மதுரைக் கல்லூரியில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் கைதானதும் அதனுல் ஏற்பட்ட பதட்டநிலையும் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதுரைக் கல்லூரியில் 100
தாழ்த்தப்பட்ட மாணவாகள் கைது செய்யப்பட்டது. அதனுல்
அங்கு ஏற்பட்டிருக்கும் பதட்ட நிலை குறித்து விவாதிக்க 42-வது விதி
யின் கீழ் திருவாளர்கள் ஏ. ஆர். மாரிமுத்து, கே. டி. கே. தங்கமணி,
ஆர். பொன்னப்ப நாடார், திருமதி ஜோதி வெங்கடாசலம்,
திரு. ஜேம்ஸ், திருமதி சத்தியவாணிமுத்து ஆகியவர்கள் ஒத்தி
வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிருர்கள். இது எப்படி பேரவை
யின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிப்பதற்கு ஏற்றது
என்பதைப் பற்றி சுருக்கமாகக் கூறவேண்டுமாறு கேட்டுக்
கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, மதுரைக்
கல்லூரியிலே ஏற்பட்ட இந்தச் சம்பவத்தைப் பற்றித் தெரிந்து
கொள்ளுவதற்காக நான் நேற்று மதுரைக்குச் சென்று வந்தேன்.
இன்றைக்கு மதுரைக் கல்லூரி முன்னுல் இரண்டு போலீஸ் லாரிகள்
வைக்கப்பட்டிருக்கின்றன. மதுரைக் கல்லூரி பிரின்சிபால் வீட்டு
முன்னுல் ஒரு போலீஸ் லாரி வைக்கப்பட்டிருக்கிறது. அங்கு மாணவர்
களையும், பேராசிரியர்களையும் கலந்து பேசியதற்குப் பிறகு நான்
இந்தச் சபைக்கு முன்னுல் சொல்ல விரும்புவது—அங்கிருக்கக்கூடிய
ஹாஸ்டல் மாணவர்களுக்குள்ளே ஏதோ சம்பவங்கள் ஏற்பட்டிருக்
கின்றன. ஆனுல் கடந்த மூன்று மாத காலமாகவே வெளியில் இருக்
கக்கூடியவர்கள் உள்ளே புகுந்து ஒரு பகுதியைச் சேர்ந்தவர்கள்
இன்னொரு பகுதியைச் சார்ந்த மாணவர்களைத் தாக்குவதும், அதற்கு
ஏற்றுர்போல் இன்னொரு பகுதி மாணவர்களுக்காக வெளியிலிருந்து
ஆட்கள் வருவதும் என்ற நடைமுறையில் சிக்கல்கள் ஏற்பட்டிருக்
கின்றன.



1974 டிசம்பர் 23] [திரு கே. டி. கே. தங்கமணி]

கடைசியாக, பிரின்சிபால் வீட்டுக்கு முன்னுல் அரிசன மாணவர்கள் சென்று தங்களில் சிலரை சஸ்பெண்ட் செய்தது தவறு என்று எடுத்துச் சொல்லப் போயிருக்கிருர்கள். அந்த நேரத்தில் இன்னொரு தரப்பு மாணவர்களை ஏவிவிட்டு, "நீங்களும் ஊர்வல மாகச் செல்லவேண்டும்" என்று சொல்லி அதனுல் ஏற்பட்ட அடி தடியில் போலீசார் சரியான முறையில் நடவடிக்கை எடுத்திருக் கிருர்கள். இரண்டு சாராரையும் கைது செய்திருக்கிருர்கள். 70 பேர் கைது செய்யப்பட்டு விடுதலை அடைந்திருக்கிருர்கள்.

இதேமாதிரி நந்தனம் கல்லூரியில்கூட மாணவர்கள் சிக்கலை அவர்களோடு நிறுத்தாமல் வெளியார் தலையிட்டிருக்கிருர்கள். இந்த மாதிரி கல்லூரிகளில் எற்படுகிற அடிதடிகளுக்குக் கடைசியில் வெளி யார் தலையிடுவது சிக்கலை மேலும் சிக்கலாக்கிக் கொண்டுவருகிறது. எனவே, இந்த விஷயத்தில் எந்தக் கல்லூரியாக இருந்தாலும் கல்லூரி மாணவர்களிடையே ஏற்படக்கூடிய தகராறுகளில் வெளியார் தலை யிட்டு இம்மாதிரி ஜாதிப் பிரச்னையாக ஆக்குவது மிக மிக சிக்கலை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது. எனவே கல்லூரிகளைப் பொறுத்த வரையில் கல்வி அமைச்சராகட்டும் அல்லது இதில் சம்பந்தப்பட்டிருக் கூடிய முதல் அமைச்சர் அவர்களைப் போன்றவர்கள் இப்படி எந் தெந்தக் கல்லூரிகளில் வெளியார் தலையீடு காரணமாக ஜாதிப் பிரச்னைகள் உருவாக்கின்றனவோ, அவற்றில் உடனடியாக தலையிட்டு அதை மேலும் வளர விடாமல் செய்யவேண்டும் என்ற கருத்தைக் கூறுவதற்காகத்தான் இதைக் கொண்டு வந்தேன்.

அரசு அந்த இடத்தில் போதுமான அளவிற்கு ஜாக்கிரதையாக இல்லாமல் இருந்திருக்கிருர்கள். செப்டம்பர் முதற்கொண்டே தொடர்ந்து நடந்துகொண்டிருக்கக்கூடிய ஒரு விஷயம். ஏற்கெனவே அந்தக் கல்லூரி மூடப்பட்டு பலர் தலையிட்டு அது திறக்கப்பட்டு இரண்டு தினங்களில் மறுபடியும் மூடப்பட்டிருக்கிறது. இதில் அரசு அஜாக்கிரதையாக இருந்திருக்கிறது. அங்குள்ள மாணவர்களிடையே, கல்வி கற்க வந்துள்ள மாணவர்களிடையே, ஜாதிக்கு அப்பாற்பட் டிருக்கக்கூடிய மாணவர்களிடையே, ஜாதிப் பிரச்னையை ஊட்டக் கூடிய முறையில் வெளியார் தலையீடு இருக்கிறது என்ற காரணத்தால் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை நான் இங்கே கொண்டு வந்திருக் கிறேன்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 டிசம்பர் 23

அதோடு, அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது என்ன சமாதானம் சொன்னாலும் கூட இம்மாதிரியான சம்பவங்கள் ஏற்படாமல் இருப்பதற்காக, இதற்கு யார் மூலகாரணமாக இருக்கிறார்கள் என்று பார்த்து அரசு நடவடிக்கை எடுக்கும் என்று சொன்னால்தான் இன்றைக்கு இந்தக் கல்லூரி மட்டுமல்ல மற்றக் கல்லூரிகளிலும் இம்மாதிரியான சம்பவங்கள் ஏற்படாமல் இருக்க உதவிகரமாக இருக்கும்.

இதில் நடவடிக்கை எடுப்பதில் அரசாங்கம் காலதாமதமாக்கி யிருக்கிறது என்பது என் குற்றச்சாட்டு என்று சொல்லிக்கொண்டு இந்த அவையை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி விவாதிப்பதன் மூலமாகத்தான் உண்மையில் மாணவர்களிடையே ஒரு திருப்தி ஏற்பட்டு—என்னதான் நிர்பந்தப்படுத்தினாலும் ஜனவரியில் மாணவர்கள் நிச்சயமாக கல்லூரிக்குப் போகத்தான் போகிறார்கள், பரீட்சைக்கு தயாராக்கிக் கொள்ள போகத்தான் போகிறார்கள், மேலும் இப்படிப்பட்ட ஜாதிப் பிரச்சினைகள் வராமல் இருக்க உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க உதவியாக இருக்கும் என்ற முறையில் அவையை ஒத்தி வைத்து விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, மதுரைக் கல்லூரியில் மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட ஜாதிக் கலவரத்தைப் பற்றித்தான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து பேசவேண்டு மென்று விரும்புகிறோம்.

ஏற்கெனவே, பல மாதங்களாக அங்கு பின்தங்கிய மாணவர் களுக்கும் தாழ்த்தப்பட்ட சமுதாய மாணவர்களுக்கும் இடையே ஜாதிப் பூசல்கள் ஏற்பட்டு வந்திருக்கின்றன. மாண்புமிகு எதிர்கட்சி உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டதைப் போல் வெளியார் தலையிட்டு இந்தக் கலவரத்தை அதிகப்படுத்து கிறார்கள். தாழ்த்தப்பட்ட சமுதாய மாணவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இருக்கவில்லை. தாழ்த்தப்பட்ட சமுதாய மாணவர் களுக்கு உள்ள குறைபாடு என்னவென்றால் கல்லூரி அதிகாரிகள் பிற் பட்ட வகுப்பு மாணவர்களுக்கு உடந்தையாக இருந்து இந்தச் சண்டையை அதிகமாக்கிக் கொண்டு வருகிறார்கள் என்றுதான் அவர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள்.



1974 டிசம்பர் 23] [திருமதி சத்தியவாணிமுத்து]

கடந்த அக்டோபர் மாதம் நான் மதுரைக்குச் சென்றிருந்த போது, ஏற்கெனவே அவர்கள் 16 மாணவர்கள்மீது இந்தக் கலவரம் ஏற்பட்டதால் கிரிமினல் குற்றச்சாட்டுக்கள் போடப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். மாணவர்கள், ஷண்முகசுந்தரம், ராமையா, முத்து, சக்கரை, சந்தானசேகரன் என்று இப்படி 16 பேர்கள்மீது செக்ஷன்ஸ் 147, 148, 323, 324

' rioting, rioting, with deadly weapons, simple hurt, grievous hurt '

என்கின்ற அளவிற்கு இப்படிப்பட்ட பயங்கரமான செக்ஷன்களின் கீழ் அந்த மாணவர்கள்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது என்று அறிகிறேன். வெளியில் இருந்து வருகிற பின்தங்கிய வகுப்பு மாணவர் கள், அதிலும் மிகவும் வசதி படைத்தவர்கள் என்னவானாலும் பரவா யில்லை, நாங்கள் இருக்கிறோம், நீங்கள் தொடர்ந்து செய்யுங்கள் என்றும், நாங்கள் உங்களுக்குப் பக்கபலமாக இருக்கிறோம் என்றும் அந்த ஜாதி மாணவர்களிடம் சொல்லியிருப்பதாக என்னிடம் எடுத்துச் சொன்னார்கள். இது விரும்பத்தக்கதல்ல. இதுதான் சூடு பிடித்து மேலும் இரண்டு சமுதாய மாணவர்களுக்கிடையே கலவரம் அதிகமாகிக் கொண்டுவருகிறது. இதற்கு அந்த ஜாதி மாணவர் களுக்குக் கால்லூரி அதிகாரிகள் துணையாக இருக்கிறார்கள், வெளியில் இருப்பவர்களும் துணையாக இருக்கிறார்கள் என்று சொல்லுவது சாதாரண விஷயம் அல்ல. மாணவர்கள் சம அந்தஸ்தில் பழகும் வாய்ப்பை அரசு கொடுத்திருக்கிறது. கிராமப்புறங்களில் தாழ்த்தப் பட்ட சமுதாய மக்கள் அந்த ஜாதிக்காரர்களிடம் தங்கள் வாழ்க்கையை ஒப்படைத்திருக்கிற காரணத்தால் இன்றைக்கும் கொஞ்ச நேரம் அடங்கிப் போகிறார்கள். கொஞ்ச நேரம் அவர்கள் உணர்வு காட்டுகிறார்கள். ஆனால் மாணவர்கள் சம அந்தஸ்தில் பழகுவதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருப்பதன் காரணமாக, அவர்கள் படிக்கிறவர்கள், விவரம் தெரிந்தவர்கள், அவர்களிடையே ஜாதி உணர்வுகள் ஏற்பட்டு தாக்கிக் கொள்கிற அளவிற்கு வருமானால் அது வருங்காலத்தில் ஒரு அபாய அறிகுறியாக அமையும் என்பதை அரசு உணர்ந்து தகுந்த நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டும்.

இன்று நூறு பேர்களுக்கு மேலாக கைது செய்யப்பட்டிருக் கிறார்கள். நேற்று முன் தினம் பல பேர்கள் விடுவிக்கப்பட்டிருப்ப தாகக் கூறுகிறார்கள். ஏன் அந்த மாணவர்கள்மீது இப்படிப்பட்ட பயங்கரமான குற்றச்சாட்டுக்களை போலீஸ் போடவேண்டும்? கலவரம் ஏற்பட்டது என்றால், இரண்டு பேர்கள் மீதும் நடவடிக்கை

எடுக்கலாமே. இரண்டு பேர்களுக்குமிடையே சமாதானம் ஏற்படுத்
துவது போலீஸ், கல்லூரி அதிகாரிகளின் தலையாய கடமையாகும்.
ஆனால் ஒருசாரார் மாணவர்கள்மீது இப்படிப்பட்ட பயங்கரமான
குற்றச்சாட்டுக்களைப் போடுவது அவர்களுக்கு மேலும் ஆத்திரத்தை
யும் வேதனையையும் அதிகமாக ஆக்குகிறது. அதேபோல்தான்
ஸ்டான்லி மருத்துவ மனையில்கூட. . .

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன் :</u> இது இந்த அட்ஜோர்ன்மெண்ட்
மோஷனுக்கு உட்பட்டதல்ல. கொடுக்கப்பட்டிருக்கும் பிரச்னை
பற்றி சொல்லலாமே தவிர, வேறு ஒரு பிரச்னை பற்றிப் பேசினால்
அதுபற்றிய விளக்கத்தை நான் இடையில் சொல்வதற்கு வாய்ப்பில்லை.
தனியாக அதுபற்றி தீர்மானம் கொடுத்தால் அதற்கான விளக்கங்
களைச் சொல்லமுடியும்.

<u>திருமதி சத்தியவாணிமுத்து :</u> இப்படிப்பட்ட க்ரிமினல் குற்றச்
சாட்டுக்களை, வழக்குகளைப் போட்டால் அந்த மாணவர்கள் என்ன
செய்வார்கள்?

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன் :</u> க்ரிமினல் குற்றம் மாணவர்கள்
செய்தால் க்ரிமினல் வழக்குதான்போடுவார்கள். மாணவர்கள்
செய்யும் க்ரிமினல் குற்றங்களை க்ரிமினல் குற்றங்கள் அல்ல என்று
கருதுவதற்கு அரசுக்கு வழி கிடையாது.

<u>திருமதி சத்தியவாணிமுத்து :</u> எல்லா மாணவர்கள்மீதும் அந்தக்
குற்றச்சாட்டைப் போட்டால் பரவாயில்லை.

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன் :</u> குற்றம் செய்கிற மாணவர்கள்
மீது, யார் தாக்கப்பட்டார்களோ அவர்கள் வழக்கு பதிவு செய்து
நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அது அரசாங்கம் எடுத்த
நடவடிக்கை அல்ல.

<u>திரு. கே. டி. கே. தங்கமணி :</u> ஒரு மிகவும் சிக்கலான விஷயத்
தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். ஏற்கெனவே முடிந்த
விஷயத்தைப்பற்றி—அமைச்சர் அவர்கள் சொல்வதைப் பார்த்தால்
கேஸ் போட்டவர்கள்மீது கேஸ் போட்டே தீரவேண்டும் என்ற
கருத்து உருவாகிவிடும்.



<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன் :</u> திரு. தங்கமணி அவர்களும்
புரிந்துகொள்ளாமல் இடையில் விளக்கம் கொடுக்கிறார்கள். தாழ்த்
தப்பட்ட சமுதாய மாணவர்கள்மீது வழக்கு போட்டிருக்கிறார்கள்.
வழக்கு பதிவாகியிருக்கிறது. இடையில் அரசு எந்த நடவடிக்கையும்
எடுக்கவில்லை. தனிப்பட்டவர்கள் புகார்கள்மீது போலீஸ்
நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஒரு பிரச்னைப்பற்றிப் பேசும்போது
வேறு ஒரு பிரச்னையை இடையில் சேர்த்தால் என்னால் விளக்கம்
தரமுடியாது. அதற்காக ஒரு தீர்மானத்தைக் கொடுத்து பேசும்
போது அப்போது அதற்கான விளக்கங்களைத் தர முடியும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> ஒரு பொருள்பற்றித்தான் இந்த
ஒத்திவைப்புத் தீர்மானம். அதைப்பற்றிப் பேசும்போது தமிழ்
நாட்டில் நடக்கிற விஷயங்களை எல்லாம் கொண்டு வந்து எப்படிப்
பேசுவது? மதுரையில் நூறு பேர்கள் மீது நடவடிக்கை எடுத்திருப்
பதாகக் கூறுகிறார்கள். அதைப்பற்றிப் பேசுவது நல்லது.

<u>திருமதி சத்தியவாணிமுத்து :</u> இதுபோன்ற பல கல்லூரிகளிலும்
தாழ்த்தப்பட்ட சமுதாய மாணவர்கள் இப்படிப்பட்ட குற்றச்
சாட்டுகளுக்கு ஆளாக்கப்பட்டு வழக்குகள் தொடரப்படுகின்றன.
இது ஒரு அதிருப்தியை ஏற்படுத்துகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையை
கல்லூரிகளில் உருவாக்காமல் கல்லூரி அதிகாரிகள் அல்லது
போலீஸ் அல்லது அரசாங்கம் இருசாராரிடையே சமாதானத்தை
ஏற்படுத்தவேண்டும். மாணவர்களிடையே ஏற்படும் ஜாதிச்
சண்டையைக் குறைக்கவேண்டும் என்பதுதான் என் கோரிக்கை.
மாணவர்கள் மத்தியில் ஜாதி உணர்வுகள் ஏற்படுவது நல்லதல்ல
என்பதை நான் மீண்டும் மீண்டும் கூறிக்கொள்கிறேன். அந்த மாண
வர்கள் மீதுள்ள வழக்குகளைத் திரும்பப் பெறவேண்டும். அப்படி
திரும்பப் பெற்றால்தான் மாணவர்களிடையே கலவரம் எழாது.
எனவே, அங்கு மாணவர்கள் மீது போடப்பட்டுள்ள வழக்குகளைத்
திரும்பப் பெற வேண்டும் அதுதான் இதற்குச் சரியான பரிகாரமாகும்
என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

<u>திரு. ஆர். பொன்னப்ப நாடார் :</u> தலைவர் அவர்களே, இந்தப்
பிரச்னையில் இவ்வளவு சூடான விவாதம் இல்லாமல் இதைச் சுமுக
மாக தீர்ப்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்றே நான் கருது
கிறேன். விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் திடீரென்று அந்தப் பகுதியில்
ஏற்பட்டுவிட்டன. அதிலும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மாணவர்

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 டிசம்பர் 23

களுக்கும் பிற்பட்ட மாணவர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டு வெளியார் தலையிடுகிற ஒரு அவல நிலை ஏற்பட்டிருக்கிறது என்று பல்வேறு கருத்துக்கள் இங்கே கூறப்பட்டுள்ளன. இந்தமாதிரியான நிகழ்ச்சி நடந்த நேரத்தில் ஆரம்பத்தில் போதுமான அளவில் போலீஸ் பாதுகாப்பு இல்லை என்றெல்லாம் என்னிடம் புகார்கள் தந்துள்ளார்கள். இப்போது பாதுகாப்பு அளித்திருப்பதாக எனக்குத் தகவல் எல்லாம் வந்திருக்கிறது. இதில் யார் குற்றவாளிகள் என்ற பிரச்னையில் புகாமல் இந்த மாதிரியான நிகழ்ச்சிகள் இன்னும் பல்வேறு இடங்களில் ஏற்படா வண்ணம் வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது சிறப்பாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

மதுரையில் இந்த நிகழ்ச்சி நடந்த நேரத்தில் வெளியார்கள் சென்று இருக்கிறார்கள் என்று சொன்னால், அதற்கு அதிகாரிகள் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு இருக்கவேண்டும். உதாரண மாக கல்லூரியில் இருக்கின்ற ஆசிரியர்கள் எல்லாம் அதற்கு நடவடிக்கைகள் எடுத்து இருக்கவேண்டும். அதே மாதிரி போலீஸ் நடவடிக்கைகள் எடுப்பதற்கும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து இருக்கவேண்டும்.

ஜாதிகள் இல்லை என்று நாம் மேடையில் பேசுகிறோம். ஆனால் இன்று நாட்டிலே இந்த மாதிரி ஜாதிப் பூசல்கள் அடிக்கடி வந்த வண்ணம் இருக்கின்றன. அதுவும் மாணவர்கள் வசிக்கும் விடுதியில் ஏற்படுகிறது. அதே மாதிரி கல்லூரியில் ஏற்படுகிறது. இப்போது தாழ்த்தப்பட்ட மாணவர்களைத் தனி விடுதியில் வைக்கிறார்கள். அதே மாதிரி பிற்பட்ட மாணவர்களைத் தனி அறையில் வைத்து இருக் கிறார்கள். அவர்களை ஒரே அறையில் வைத்து அவர்கள் இருவரும் அன்னியோன்னியமாக பழகுவதற்கு, சௌஜன்யமாகப் பழகுவதற்கு வாய்ப்பாக ஒரே விடுதியில் வசிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கூற விரும்புகிறேன். குறிப்பாக அந்த அடிப்படையில் இன்னும் திருத்தம் செய்து இதில் தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அங்கே வழக்கறிஞர்கள் சென்று இருக்கிறார்கள். அந்த வழக்கறிஞர்களைக் கூட மிரட்டி போராட்டம் நடத்தியிருக்கிறார்கள் என்று தந்தி வந்திருக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்னையில் உண்மை நிலை என்ன என்று தெரிந்து, மேலும் அதைப் பெரிது படுத்தாமல் அதைச் சரிகட்டுவதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.



1974 டிசம்பர் 23]

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மதிப்பிற்குரிய தலைவரவர்களே, மதுரைக் கல்லூரியில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி இங்கே மதிப்பிற் குரிய உறுப்பினர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள். இது மிகவும் மனதிற்கு வேதனை தரக்கூடிய செய்தியாகும். நாட்டிலே ஜாதிய எண்ணங்கள் ஒழிந்து எல்லோரும் சமம், எல்லோரும் சகோதரர் களே என்ற மனோபாவம் வளர்ந்து சமுதாயத்திலே ஒரு பெரும் மாற்றம் ஏற்பட வேண்டும் என்று நாம் செயல்பட்டுக் கொண்டிருக்கும் போது, எங்கே ஜாதி ஒழிய வேண்டும், ஜாதிய எண்ணங்கள் தவிர்க் கப்பட வேண்டும், எங்கே ஜாதிய எண்ணங்கள் தலை தூக்கக்கூடாது என்று நினைக்கிறோமோ அங்கே தாழ்ந்தவன், உயர்ந்தவன் என்று பாகுபாடு தோன்றி இருக்குமானால் அதை விட வருத்தம் தரத்தக்க செய்தி வேறு எதுவும் இருக்க முடியாது. அதற்குக் காரணம் என்ன என்பதை நாம் கண்டுபிடித்தாக வேண்டும்.

மாணவர்கள் இளமையில் இதையெல்லாம் மறந்து வாழவேண்டிய நேரத்தில், அவன் தாழ்ந்தவன், நான் உயர்ந்தவன் என்று அங்கே இருப்பதற்குக் காரணம் என்ன, எப்படி இது ஏற்பட்டது, இதிலே வெளியார்கள் யார் தலையிட்டு இருக்கிறார்கள், வெளியாருடைய தலையீடு எப்படி ஏற்படுகிறது என்பதையெல்லாம் நாம் ஆராய வேண்டும். இதைச் சாதாரண ஒரு நிகழ்ச்சியாகக் கருதிவிடக் கூடாது. இப்படி மதுரையில் நடந்தது என்று சொன்னால், நாம் ஒரு குற்றச்சாட்டு சொல்லி, அதோடு விட்டுவிடுவோமானால் இந்த நடவடிக்கைகள் வேறு இடத்தில் பரவ ஏதுவாக இருக்கும். ஆகவே, அரசு இதிலே மெத்தனமாக இல்லாமல், அடிப்படையில் இந்தப் பாகு பாடு எப்படி வந்தது என்பதைக் கண்டறிந்து அதைப் போக்குவதற்கு நாம் முயற்சிகளை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்வதோடு, அங்கே ஒரு சுமுகமான சூழ்நிலை தற்சமயம் ஏற்பட வழிவகை காணவேண்டும். அதற்காக, மாணவர்கள் பேரில் வழக்குப் போடப்பட்டு இருந்தால் அதையெல்லாம் திரும்பப் பெற்று அவர்களிடத்தில் சுமுகமான உறவு ஏற்பட நாம் வழி செய்ய வேண்டு மென்று எடுத்துச்சொல்லி, இதற்கு வழிகாண இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மதுரை கல்லூரி மாணவர்கள் விடுதியில் பிற்பட்ட மாணவர்கள், தாழ்த்தப்பட்ட மாணவர்களிடையே ஏற்பட்ட சச்சரவின் காரண மாக ஏற்பட்ட பதட்ட நிலை பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டுக் காட்டினார்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 டிசம்பர் 23

மாண்புமிகு உறுப்பினர் தங்கமணி அவர்கள் குறிப்பிட்டதைப் போல் இருசாரார் மாணவர்களிடத்திலும் மனமாச்சர்யங்கள் ஏற்பட்டு, வெளி ஆட்களும் அதில் தலையிட்ட காரணத்தால் கொந்தளிப்பு ஏற்பட்டது என்று குறிப்பிட்டார்கள். இதிலே ஒரு சாரார் குற்றம் செய்தார்கள், இன்னொரு சாரார் குற்றம் செய்யவில்லை என்று சொல்லமுடியாது. மாண்புமிகு அம்மையார் அவர்கள் எடுத்துச் சொல்கிறபோது, பிற்பட்ட மாணவர்கள் எல்லாம் குற்றம் செய்தது போலவும், தாழ்த்தப்பட்ட மாணவர்கள் ஒன்றும் செய்யாதது போலவும் சொன்னார்கள். இங்கே வந்திருக்கும் தகவல்படி இருசாராரும் ஒருவரையொருவர் தாக்கியிருக்கிறார்கள். மாண்புமிகு தங்கமணி அவர்கள் சொன்னதுபோல் செப்டம்பர் திங்களில் இருந்தே தொடர்ந்து இது நடைபெற்றுக்கொண்டு வந்திருக்கிறது. அவ்வப்போது அதைக் கட்டுப்படுத்திக்கொண்டு வந்தாலும், மீண்டும் மீண்டும் வந்திருக்கிறது.

23-ம் தேதி கலவரம் ஏற்பட்டு, 29-ம் தேதி கல்லூரியை மூடி வைத்து இருக்கிறார்கள். மறுபடியும் 3-ம் தேதி திறந்தார்கள். 4—10—1974 மீண்டும் கலவரம் ஏற்பட்டு, 10 நாள் விடுமுறை விட்டார்கள். மறுபடியும் சில நாள் கழித்து மாச்சர்யம் வந்திருக்கிறது. 23—11—1974 முதல் விடுமுறை அளிக்கப்பட்டது 24—11—1974 அன்று மறுபடியும் கலவரம் ஏற்பட்டது. அதில்—மாண்புமிகு உறுப்பினர் தங்கமணி கூட குறிப்பிட்டார்கள்—வெளியார் தலையிட்டு இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கல்லூரி முதல்வர். மாவட்ட ஆட்சித் தலைவர், காவல் துறை கண்காணிப்பாளர், ஆகியோரை அழைத்து இதில் வெளியார் யார் தலையிட்டு இருந்தாலும் கண்டிப்பாக இருக்கவேண்டுமென்று தெரிவித்தார்கள். அவர்கள்மீது கட்டாயம் நடவடிக்கை எடுக்கப்படும். மாவட்ட ஆட்சித் தலைவரும், மற்றவர்களும் எடுத்த முயற்சிகளின் பலனாக அங்கே ஒரு சமரச சமாதான நிலை ஏற்பட்டது.

கல்லூரி விடுதியில் மாணவர்களிடையே ஏற்பட்ட மோதல் வருந்தத்தக்கதொன்றாகும். கல்லூரி விடுதிதான் மாணவர்கள் ஒருவருக்கொருவர் சுமுகமாகப் பழகி மாச்சர்யங்களை மறந்து ஜாதிய உணர்வுகள் இல்லாமல் வளர்வதற்கு ஏற்ற இடமாகும். அந்த இடத்தில் இப்படி நடைபெற்றது வருந்தத்தக்கது. இவற்றைத் தடுக்க அரசாங்கமும் குறித்த நேரத்தில் நடவடிக்கை எடுத்து இருக்கிறது. கல்லூரி அதிகாரிகளும், மாவட்ட ஆட்சித் தலைவரும்



1974 டிசம்பர் 23] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இதில் கண்காணிப்பாக இருந்து ஓரளவிற்குச் சமாதானம் செய்தும் கூட மீண்டும் மீண்டும் இது நடைபெற்றுக்கொண்டே வருகிறது. பல தடவை சமாதானம் ஏற்பட்டு கடைசியாக 1—12—1974 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் மாணவர்களையும், ஊர்பிரமுகர்களையும் கூட்டி வைத்து சமாதானம் செய்து 4—12—1974 அன்று கல்லூரி திறக்கப்பட்டது. 17-ம் தேதி மறுபடியும் கலவரம் நடைபெற்று இருக்கிறது. 13 நாட்கள் சுமுகமாகக் கல்லூரி நடைபெற்று இருக்கிறது. பிறகு மறுபடியும் கலவரம் ஏற்பட்டு இருக்கிறது.

தாழ்த்தப்பட்ட மாணவர்கள் முதல் நாள் காவல் துறைக்குச் சென்று மகஜர் கொடுத்து இருக்கிறார்கள். மறுநாள் 400 பிற்பட்ட மாணவர்கள் சேர்ந்துகொண்டு ஒரு கோரிக்கை கொடுத்து இருக்கிறார்கள். இருசாராரும் வழக்குப் பதிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டதால் போலீசார் வழக்குப் பதிவு செய்து இருக்கிறார்கள். கொடுத்த வழக்குகளைப் பதிவு செய்யாமல் இருப்பார்களானால், மாணவர்கள் கொடுத்த புகாரைக் காவல் துறை அதிகாரிகள் பதிவு செய்யவில்லை என்ற குற்றச்சாட்டு வரும். அந்த வழக்குகளைத் திரும்பப் பெறலாம். ஆனால் எந்தக் கட்டத்தில் திரும்பப் பெறுவது? இருசாராரும் வழக்கை வாபஸ் பெறத் தயாராக இருக்கிறார்கள் என்ற கட்டத்தில்தான் செய்யமுடியும். ஆகவே, இந்தத் திங்கள் இறுதி வரையில் விடுமுறை விடப்பட்டு இருக்கிறது. இதிலே வெளியார்கள் தலையிட்டு இருக்கிறார்கள். அவர்கள் யார் என்பதைக் கண்டுபிடித்து வழக்குப் போடப்படும். ஆகவே, இந்தத் திங்கள் இறுதி வரையில் விடுமுறை விடப்பட்டு இருக்கிறது. 2—1—1975 அன்று கல்லூரி திறக்க இருக்கிறார்கள். அதற்குள் சமாதான சூழ்நிலை ஏற்பட வழி உண்டு. ஆகவே, பிறகு வழக்கை வாபஸ் வாங்குவதைப் பற்றி யோசிக்கலாம்.

ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்படாத வரையில் அதை நாம் வாபஸ் வாங்குவது நல்லதல்ல. 1-ம் தேதிக்குள் ஒரு நல்ல சூழ்நிலை ஏற்படுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். ஊர்பிரமுகர்கள், பெற்றோர்கள், சமூகப் பெரியவர்கள், மாணவர்கள் அடங்கிய சமாதானக் குழு ஒன்றை அமைத்து இப்பிரச்சினையில் சுமுகமான முறையில் ஒரு தீர்வு காண வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரை அரசாங்கம் கேட்டுக்கொண்டு இருக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்சினைகுறித்து விவாதிக்க இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 டிசம்பர் 23

எடுத்துக் கூறி, இங்கே கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்ட அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று எடுத்துக்கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அளித்த விளக்கத்திற்குப் பிறகு இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைத்து, இது குறித்து விவாதிக்க அனுமதி மறுக்கிறேன்.

## (ஆ) காங்கேயம்–பொங்கலூர் பகுதியில் உரிய அளவு தண்ணீர் விடப்படாததால் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, காங்கேயம்–பொங்கலூர் பகுதியில் சட்டப்படி இவ்வாண்டு விடவேண்டிய தண்ணீர் விடாததால் விவசாயிகளிடையே ஏற்பட்ட கொந்தளிப்பையும், இன்று கலெக்டர் ஆபீஸ் முன்பு மறியல் செய்ய இருப்பதையும் முன்னிட்டு விவாதிக்க வேண்டுமென்று, தமிழ்நாடு சட்டப்பேரவை 42-வது விதியின் கீழ் திரு. கோவை செழியன் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள். இது எப்படி அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அளவுக்கு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை திரு. கோவை செழியன் விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோவை செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு சட்டப்பேரவை விதி 42-ன் கீழ் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த செய்தியை இந்தச் சட்டமன்றத்தில் இன்று விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காங்கேயம்–பொங்கலூர் பகுதியில் பரம்பிக்குளம்–ஆளியாறு பாசனத் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு எங்களுக்கு நீர் கிடைக்க வேண்டும். இது சம்பந்தமாகச் சென்ற சட்டமன்றக் கூட்டத்திலே நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்தேன். அதிலே மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நிச்சயமாக இந்த டர்ன் முழுவதும் தண்ணீர் தருவதாக கியாரண்டி தருகிறேன் என்று சொன்னார்கள். நான் அப்போது சொன்ன குற்றச்சாட்டு எல்லாம், எங்களுக்கு விடவேண்டிய தண்ணீரை உடுமலை பகுதிக்குப் பிரித்துத் தருகிறீர்கள், ஆகவே, எங்களுக்குத் தண்ணீர் வராது



1974 டிசம்பர் 23] [திரு. கோவை செழியன்]

என்பதாகும். அதைப்பற்றிக் கவலைப்படாதீர்கள், தண்ணீர் அதிகம்
இருக்கிறது, ஆகவே, தருகிறேன் என்று சொன்னார்கள். ஆனால்
இப்போது என்ன நிலைமை என்றால் விடவேண்டிய காலத்தில் தண்ணீர்
விடாமல் ஒரு மாதம் கழித்துத் தண்ணீர் விட்டார்கள். அதற்குச்

[முற்பகல் 11-00]

சொன்ன காரணம் வாய்க்கால்களெல்லாம் சரியில்லை என்பது.
ரூ. 85,000 சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. வாய்க்கால்கள் சரி
செய்யப்படவில்லை என்று சொல்கிறார்கள். ஏற்கெனவே தண்ணீர்
வருவதற்கு இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னதாகவே இந்தக்
வாய்க்கால்களைச் சரி செய்யும் காரியங்களைச் செய்திருக்கலாம்.
அதைச் செய்யத் தவறிவிட்டார்கள். ஒரு மாதத்திற்குப் பின்னாலே
தண்ணீர் வந்தது. தண்ணீர் வந்தவுடன் அங்கிருக்கிற விவசாயிகள்
பொருள்களை விற்று, பெண்கள் தாலியைக்கூட விற்று விதைத்தார்கள்.
20 நாட்களுக்குத் தண்ணீர் வந்திருக்கிறது. பிறகு தண்ணீர் நின்று
விட்டது. பயிரெல்லாம் காய்ந்துவிட்டது. கேட்டால் மெயின்
தெனால் "பர்ஸ்ட்" ஆகிவிட்டது, உடைந்துவிட்டது என்று சொன்
னார்கள். மறுபடியும் அதிகாரிகளிடமும் சம்பந்தப்பட்ட பொறியா
ளர்களிடமும் எடுத்துச் சொன்னதின்பேரில் அது சரிசெய்யப்பட்டுத்
தண்ணீர் வந்தது. 15 நாட்களுக்கு வந்தது. மறுபடியும் விதைத்
தார்கள். இப்பொழுது மறுபடியும் பயிர் காய்ந்துபோய்விட்டது.

இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமை என்னவென்றால், இரண்டு
நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் விடுவதாகச் சொல்கிறார்கள்.
தண்ணீர் வருவதே இல்லை. அதுவும் டெய்ல் எண்டுக்கு தண்ணீர்
வருவதில்லை. அதற்குக் காரணம் இந்த வாய்க்கால் கட்டுகிற
பொழுது டெய்ல் எண்டுக்குத் தண்ணீர் போய் சேரக்கூடிய முறையில்
பெரியதாகக் கட்டப்படவில்லை. ஜாஸ்தியாகத் தண்ணீர் விட்டால்
"ஓவர்ஃப்ளோ" ஆகிவிடுகிறது. டெய்ல் எண்டுக்குத் தண்ணீர் வருவ
தில்லை. அமைச்சர் அவர்கள் நிச்சயமாகத் தண்ணீர் தருவதாக
உத்திரவாதம் தந்தார்கள். தண்ணீர் கிடைக்காத காரணத்தினால்
பயிர்கள் காய்ந்துபோய்விட்டன. விவசாயிகள் மழை இல்லாமல்,
வேறு வழியின்றி போராட்டத்தில் இறங்கிவிட்டார்கள். சென்ற
முறை சட்ட மன்றக் கூட்டத்தில் அமைச்சர் அவர்கள் உத்திரவாதம்
தந்தார்கள். அந்த உத்தரவாதம் காப்பாற்றப்படவில்லை என்பது
தான் என்னுடைய குற்றச்சாட்டு. அதனால்தான் விவசாயிகள்
போராட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள்.

பொதுவாக பரம்பிக்குளம்—ஆளியாறுத் திட்டத்தின்கீழ் இன்னும் மூன்று மாதங்களுக்குமேல் தண்ணீர் தேவைப்படுகிறது. தேவையான தண்ணீர் நம்மிடத்தில் இருக்கும். ஆனால் மழை பொய்த்துப்போன காரணத்தினால் இருக்கிற கொள் அளவு தண்ணீர் குறைவாக இருக்கிறது. அதன் காரணமாக அதிகமான தண்ணீர் வேண்டும் என்று கேரள அரசாங்கத்திடமும் கேட்டிருக்கிறோம் என்று இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்பொழுது கூறியிருக்கிறேன். அப்படி தண்ணீர் கேட்டு வாங்கினால் கொள் அளவை அதிகமாக ஆக்க முடியும். அந்த அளவுக்குக் கால்வாய்களில் தண்ணீர் அதிகமாகப் போகும். அதிக நாட்களுக்குத் தண்ணீர் தொடர்ந்து கொடுக்க முடியும். பயிர்களை எப்படியும் காப்பாற்ற வேண்டும் என்ற கவலையிலும் அக்கறையிலும் விவசாயிகளுக்கு இருக்கிற அக்கறையில் அரசாங்கத்திற்கு இருக்கிற அக்கறை எள் அளவுக்கும் குறையவில்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இதற்கு மேல் இந்தச் சபையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டிய அவசியமில்லை. தலைமைப் பொறியாளர் அவர்களும் அடிக்கடி அரசாங்கத்துடன் தொடர்புகொண்டு அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார். விவசாயிகளையும் கலந்துகொண்டு செய்யவேண்டும் என்ற யோசனையும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த ஒத்திவைப்பு தீர்மானத்திற்கு அவசியமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோவை செழியன் : ஒரே ஒரு சந்தேகம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு இதற்கெல்லாம் ஒரு முறை இருக்கிறது. அமைச்சர் பதில் சொல்லிவிட்டார். இப்பொழுது என்ன சந்தேகம்?

திரு. கோவை செழியன் : நான் சொல்ல வருவது ஒரு சீரியஸ் மாட்டர். அதைப்பற்றி ஒரு சந்தேகம் கேட்கிறேன். டெய்ல் எண்ட் கால்வாய் சிறியது என்றால் வட்டமலைக் கால்வாய் ஒன்றுதான் சிறியது. போன முறை அமைச்சர் என்ன சொன்னார்? "தண்ணீர் நிறைய இருக்கிறது. உங்களுக்கு நான்கு மாதங்களுக்குத் தருவோம், அதற்கு வேண்டிய தண்ணீர் இருக்கிறது" என்று சொன்னார். உடுமல்பேட்டைக்குத் தண்ணீர் தராமல் இருந்திருப்பார்களேயானால் எங்களுக்கு நிச்சயம் தண்ணீர் கிடைத்திருக்கும். போன வருஷம் பூராவும் தண்ணீரைப் பங்கு போட்டுக் கொடுத்தார்கள். இப்பொழுது தண்ணீர் இல்லை என்று சொல்கிறார்கள். அதற்காகத் தான் நான் கேட்கிறேன். எங்கள் தண்ணீரை எதற்காக உடுமலைப் பேட்டைக்கு விடவேண்டும்? அதிகமாகத் தண்ணீர் இல்லை என்றால் ஏன் உடுமலைப்பேட்டைக்கு விடவேண்டும்? அதனால்தானே எங்களுக்கு இப்பொழுது கஷ்டம் வருகிறது. அதற்குப் பதில் சொல்லுங்கள். அதற்குப் பதிலே சொல்லவில்லையே?





மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது சரியான வாதம் அல்ல. நான் நிறைய தண்ணீர் இருக்கிறது, தருகிறேன் என்று சொன்னதாகக் கூறுகிறார் : மேல்நீரார் தேக்கத்தில் நிறைய தண்ணீர் இருக்கிறது என்று அதை நம்பிக்கொண்டு தண்ணீர் இருக்கிறது என்று சொன்னேன். ஆனால் காலத்தில் மழை பெய்யவில்லை. மழை பெய்திருக்குமானால் தண்ணீர் அளவு கூட இருக்கும். தண்ணீர் இப்பொழுது நிச்சயம் இருந்திருக்கும். மழை பெய்யாமல் இருந்த காரணத்தினால்தான் இந்தத் தகராறெல்லாம். மழை பெய்திருந்தால் திரு. செழியன் அவர்களுக்கு இவ்வளவு கோபம் வந்திருக்காது. அங்கு பயிர் காப்பாற்றப் படவேண்டும் என்பதில் அரசுக்கும் அக்கறை இருக்கிறது என்பதை அந்தப் பகுதி விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நான் தெளிவாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அரசாங்கம் எல்லா நடவடிக்கைகளும் எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு, இதற்கு அனுமதி தருவதற்கு மறுக்கிறேன்.

## குமரி மாவட்ட லட்சுமிபுரம் கல்லூரியின் நிர்வாக குறைபாடுகளை குறித்து.

(இ) குமரி மாவட்ட லட்சுமிபுரம் கல்லூரியின் நிர்வாகக் குறைபாடுகள் குறித்துத் தக்கலை வருவாய்க் கோட்ட அலுவலர் அலுவலகம் முன் நடத்தப்படும் உண்ணாவிரதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியோர்

'the fast before the Revenue Divisional Officer, Thuckalay, pressing for twelve months' arrears, appointing special officer for managing the College, and ratifying students admission for degree course by the Staff of the Lakshmipuram College in Kanyakumari District from 12th December 1974 onwards.'

என்ற பொருள்பற்றி விவாதிப்பதற்கு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அது எப்படிச்சபையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கும் அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த உண்ணாவிரதம் 12—12—1974 முதல் தக்கலை ஆர்.டி.ஓ. அலுவலகத்திற்கு முன்பு ஆரம்பிக்கப்பெற்றிருக்கிறது. அதிலே பேராசிரியர்கள் இருக்கிறார்கள், மாணவர்கள் இருக்கிறார்கள். இதிலே பிரச்சினை என்னவென்றால், 10 வருஷங்களுக்கு முன்னதாக இந்தக் கல்லூரி தனியாரால் துவக்கப்பட்ட ஒரு கல்லூரியாக இருக்கிறது. இதிலே ரூ. 5 லட்சம் இருப்பு வைப்பு நிதி வைக்கவேண்டும் என்று ஒரு விதி இருக்கிறது. ஆனால் ரூ. 3½ லட்சம் தான் வைப்பு நிதியாக வைத்திருக்கிறார்கள். மேலும் பணம் கொடுக்காததன் காரணமாக இந்தத் தகராறு ஏற்பட்டிருக்கிறது. அந்த நிர்வாகத்தில் இரண்டு நிர்வாகம் இருக்கிறது. போட்டி நிர்வாகங்கள் இருக்கிற காரணத்தினால் இந்தக் கல்லூரியில் இருக்கிற ஆசிரியர்களுக்கு 12 மாதங்களாகச் சம்பளம் கிடைக்கவில்லை என்ற ஒரு பரிதாபகாமான விஷயத்தை கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பன்னிரண்டு மாதக்காலமாக ஊதியம் இல்லாமல் வேலை செய்கின்ற ஆசிரியர்களுடைய நிலைமை இப்படி இருக்கிற நேரத்தில் மாணவர்களுக்கு வேறொரு இன்னலும் ஏற்பட்டிருக்கிறது. பட்டப் படிப்புக்கு சுமார் 1,000 மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் புதிய அமைப்பியாளர்கள் மறுக்கப்பட்டிருக்கிறது என்ற ஒரு நிலைமையும் அங்கே உருவாகி, இம்மாதிரி நிலைமையும் அங்கே இப்பொழுது இருக்கிற நிலைமையும் சேர்ந்து, படித்துக்கொண்டிருக்கிற மாணவர்களுடைய நிலை மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது. அவர்கள் 6 மாதக்காலமாக தொடர்ந்து படித்துக்கொண்டிருக்





கிறார்கள். அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் அவர்கள் பட்டப்படிப்புக்கு நுழைவதற்கான அங்கீகாரம் செய்துவிடவேண்டும் என்பதையும் நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

பத்து ஆண்டுகள் செயல்படுகிற கல்லூரியில் அங்கே பூசல் இருக்கின்ற காரணத்தால் அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டும். அதுதான் சிறந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன். அது இல்லா விட்டால் ஒரு ஸ்பெஷல் ஆபீசர் நியமனம்செய்து இந்த நிர்வாகத்தைச் சீரமைத்து நல்ல முறையில் நடத்துவதற்கு அரசாங்கம் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இப்போது ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்காக வேண்டுமானால் அங்கே இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவரையோ, அங்கே இருக்கின்ற சீப் எஜுகேஷன் ஆபீசர் அவர்களையோ அல்லது டைரக்டரேட் சொல்கிற அதிகாரியையோ அனுப்பினால் அவர்களுக்குச் சம்பளம் கொடுத்து இந்த மாதிரியான சிக்கலில் இருக்கின்ற பிரச்சினையைத் தீர்க்கலாம்.

இயக்குநர் வீட்டுக்கு முன்னால் சில மாணவர்கள் உண்ணாவிரதம் இருக்கின்றனர் என்று தகவல் கிடைத்து இருக்கிறது. அங்கே இருக்கின்ற நிர்வாகம்—முன்பு இருந்த நிர்வாகம் மோசமான நிலையில் இருக்கின்றது. டொனேஷன் என்ற முறையில், ஆசிரியர்களிடமிருந்தும் பல்வேறு கணக்கில் வாங்கி இருக்கிறார்கள். மாணவர்களிடமிருந்தும் வாங்கி இருக்கிறார்கள். பல்வேறு கணக்குகளிலே பணம் சரியாக இல்லை. முன்பு இருந்த நிர்வாகத்திற்கு எதிராக மக்கள் அதிருப்தி அடைந்து இருக்கிறார்கள். இதை மேலும் வளர விடாமல் சுமுகமான சூழ்நிலை உருவாக்க வேண்டும்.

ஆசிரியர்கள்மீது வழக்குத் தொடர்ந்து அவர்கள் சிறையில் இருக்கிறார்கள். இம்மாதிரி வேறு கல்லூரிகளிலும் வளராமல் இருப்பதற்கான முறையில் பொதுவான முன்னேற்பாடுகள் செய்ய வேண்டும். இந்த நிலையைப்பற்றிப் பேசி உடனடியாக ஒரு உடன் பாடு காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பன்னிரண்டு மாதச் சம்பளம் உடனடியாகக் கொடுக்கப்பட வேண்டும். அதே மாதிரி அங்கீகாரம் கொடுக்க வேண்டும். இது மட்டுமின்றி இந்த மதுரைப் பல்கலைக் கழகத்தில் இருக்கின்ற இரண்டு செனேட் உறுப்பினர்கள், அந்த ஜில்லாவைச் சேர்ந்தவர்கள், அவர்கள் இந்தக்

[1974 டிசம்பர் 23

கல்லூரியை எப்படியாவது ஒழித்துவிட வேண்டுமென்று ஒரு நிலை எடுத்து இருக்கின்றார்கள் என்று எல்லாம் புகார் வந்து இருக்கின்றது. அதனால்தான் அரசாங்கம் தலையிட்டு வேண்டிய நன்மை செய்து தர வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: பத்து ஆண்டுகளுக்கு மேல் இந்தக் கல்லூரி நடைபெறுகிறது. கல்லூரியில் சாதாரணமாக தலைவர்கள் பேசுவதற்கு மாணவர்கள் வசதி கொடுக்கிறார்கள். இந்த மாதிரி இந்தக் கல்லூரியிலே மாணவர்கள் மத்தியிலே பேசுவதற்கு ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்தது. இந்த நிர்வாகத்துடைய திறமைக் குறைவைப்பற்றி எல்லாம் சொன்னார்கள். அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. சென்ற தடவை நான் தெரிவித்து இருக்கிறேன். எப்படித் தனியார் நடத்துகின்ற பள்ளியிலே இருக்கின்ற ஆசிரியர்கள் பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறார்கள் என்பது பளிச் என்று தெரிகிறது. எந்த விதமான ஊதியமும் கொடுக்கவில்லை. மாண வர்கள் படித்தும் பிரயோசனம் இல்லை என்ற காரணத்தால், மாணவர்களும், அந்த ஆசிரியர்கள் கோரிக்கையையும் சேர்த்து உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்களைப் பழி வாங்குவது சரி யில்லை. சீக்கிரமாக இந்தக் கல்லூரியை அரசு ஏற்று நடத்த வேண்டும். இந்தச் சட்டம் வருவதற்கு முன்னாலே இந்தச் சட்டத்திலே நடவடிக்கை எடுத்து இந்த ஆசிரியர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். இதற்குப் பல்கலைக் கழகம் ஒருபட்சமாக இருப்பது வருந்தத் தக்கது. பல்கலைக் கழகத்திற்கு அப்பாற்பட்ட விஷயமாகக் கருதி அரசு இதைத் தீர்க்க வேண்டுமென்று சொல்லக் கடமைப் பட்டு இருக்கிறேன். எவ்வளவு ஆசிரியர்கள் இங்கே 12 மாதம் ஊதியம் பெறாமல் இருக்கிறார்கள். பல இடங்களில் 10, 12 வருடம் டெம்பரரியாக இருக்கின்ற அவல நிலை இருக்கிறது. இது ஆசிரியர் களைப் பாதுகாப்பதற்கான ஒரு வாய்ப்பாக இருக்கும் என்று விவாதத்தில் சொல்லி இந்தச் சபையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கோருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், மாண்புமிகு கே. டி. கே. தங்கமணி அவர்களும் லட்சுமிபுரம் கலைக் கல்லூரியைப்பற்றி எடுத்து சொல்லி இருக்கிறார்கள். நான் நிலைமையை விளக்க இருக்கிறேன்.



1974 டிசம்பர் 23] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இந்த கல்லூரியைப் பொறுத்த வரையில் 1964–65ம் ஆண்டு இது ஏற்பட்டது. பத்து ஆண்டுக் காலம் நடைபெற்று வருகிறது. ஆனால் இந்தக் கல்லூரியிலே பல்வேறு விதமான அளவுக்கு இரு பிரிவினர் இருந்து இரண்டு பிரிவினர்களுக்கும் தகராறு ஏற்பட்டு யார் கரெஸ்பாண்டெண் என்ற தெளிவு இல்லாமல் இரண்டு பேரும் வழக்குத் தொடுத்து இருக்கிறார்கள். வழக்கு நீதி மன்றத்தில் இருக் கின்றது. நம்முடைய விதிமுறைகள் தாளாளர் மூலமாகச் சம்பளம் பட்டுவாடா செய்ய வேண்டுமென்று இருக்கிறது. வழக்கு மன்றத்தில் தீர்ப்பு அளிக்காத நிலையில் இன்னாரை தாளாளர் என்று ஏற்றுக் கொள்ள வேண்டுமானால் நீதி மன்றத்திற்குப் பதில் சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

மற்றொன்று, 1973 செப்டம்பரிலிருந்து ஊதியம் வழங்கப்பட வில்லை. இருந்தும் மதுரைப் பல்கலைக் கழகம் மானியம் வழங்க வேண்டுமென்று அரசு கருதிக்கொண்டு இருந்தது. அப்படியிருந்தும் கூட, ஆசிரியர்களின் நலன் கருதி அரசு, தாளாளர் என்று ஒருவரை வைத்துக்கொண்டு, நம் கல்லூரிக் கல்வித் துணை இயக்குநரை அனுப்பி, 15—5—74 அன்றும் 16—5—74 அன்றும் அங்கே இருக்கச் செய்து, ஆசிரியர்களின் மூன்று மாதச் சம்பளத்தை பட்டுவாடா செய்யச்சொன்னோம்.

இரண்டு பேரும் வழக்கு மன்றம் போய்விட்டார்கள் என்பது மட்டுமல்ல, சென்ற இரண்டாண்டுக் காலம் கணக்கைத் தணிக்கைக்கு அனுப்பவில்லை. அதனால் அரசாங்கம் மானியம் அளிப்பதற்கு இல்லை. அப்படி அளித்தாலும் அதன் கணக்குப் பூராவும் அவர்கள் கொடுப் பார்களா, அவற்றை ஏ.ஜி. அவர்கள் ஏற்று ஒப்புதல் அளிப்பார்களா என்ற ஐயப்பாடு இருக்கிறது. கட்டவேண்டிய கட்டணம் கட்டப் படவில்லை. தவணையில்கூடக் கட்டச்சொல்லலாம்.

1974–75-ம் ஆண்டிற்குப் பல்கலைக்கழகம் பட்டப் படிப்பிற்கு அனுமதி கொடுக்கக்கூடாது என்று சொல்லியிருந்தும், பொது மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு அனுமதி கொடுக்கப்பட்டு, அவர்களைச் சேர்த்து இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, ஆசிரியர் களிடமிருந்தும் ஏராளமான நன்கொடை அவர்கள் வாங்கி இருக் கிறார்கள். மாவட்ட ஆட்சியாளர் குறிப்பிலிருந்தும் அவர்கள் ஏராளமான நன்கொடை வாங்கிக்கொண்டு இருப்பதாகத் தெரிகிறது.

மாணவர்களிடமிருந்து அட்மிஷன் கொடுக்கும் நேரத்திலும் நன்கொடை வசூல் செய்து இருக்கிறார்கள். இது கணக்கில் கொண்டுவரப்படவில்லை. மாணவர்கள் கட்டிய தொகையிலிருந்தும், மற்றவர்கள் கொடுத்த பல்வேறு தொகையிலிருந்தும் எடுத்துச் சம்பளம் ஓரளவு கொடுத்து இருக்கிறார்கள். மேற்கொண்டும் சம்பளம் தர வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது. நான் நேற்றுகூடக் கேட்டேன். இந்தச் சூழ்நிலையில் அரசாங்கம் எப்படி ஈடுபடவேண்டும், ஈடுபடமுடியுமா, ஆசிரியர்களுக்குத் தனியாகச் சம்பளம் கொடுக்கமுடியுமா என்று கேட்டேன். நீதி மன்றத்தில் இருப்பதால், பல்கலைக்கழகம் இதில் தலையிட்டு ஒன்றும் செய்வதற்கு இல்லை. கணக்கு நம்மிடம் தணிக்கைக்கு வராததால் அரசாங்கம் மானியம் எதுவும் அளிக்கமுடியாது என்று சட்ட நிபுணர்கள் கூறுகிறார்கள்.

மாணவர்களைப்பற்றி திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கூறினார்கள். மாணவர்கள் எந்தப் பாவமும் அறியாதவர்கள், இந்த நல்ல மாணவர்களைக் கெடுக்கக்கூடாது. மாணவர்களைத் தேர்வுக்கு அனுமதிக்க சிண்டிகேட்டும், பல்கலைக்கழகமும் முடிவு எடுத்து இருக்கிறது. மாணவர்களைப்பற்றிய அந்தத் தகராறு முடிந்துவிட்டது.

ஆசிரியர்களுக்குச் சம்பளம் தரவேண்டும். அதற்குத்தான் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் குறிப்பிட்டார்கள். ஒரு வழி செய்ய முடியும். நேற்றுக்கூடக் கேட்டேன். பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் இதற்கு வழி இருக்கிறதா என்று கேட்டேன். சட்டமுறைப்படி அதிலும் வழியில்லை. "மிசா" உபயோகப்படுத்த வழி இருக்கிறதா என்றும் கேட்டேன். (சிரிப்பு) மிசாவின் கீழும் நடவடிக்கை எடுக்க முடியாது. இதற்கு ஒரு வழி இருக்கின்றது. மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் சொன்னார்கள். இரண்டு சாராரிடமிருந்தும் தாளாளர் யார் என்று முடிவு செய்கிற வரையில், கணக்குச் சரி செய்கிற வரையில், இந்தக் கல்லூரி தொடர்ந்து நடைபெற ஆசிரியர்கள், மாணவர்கள் நலன் கருதி, தற்காலிகமாக அரசாங்கம் பொறுப்பேற்றுச் செய்யலாம் என்று சம்மதம் தெரிவித்து இருசாராரும் கையெழுத்திட்டுக் கடிதம் வாங்கி, கல்லூரி முதல்வர் தந்து விடுவார்களானால் அதை வைத்துக்கொண்டு ஆசிரியர்களுக்குச் சம்பளம் தர, கல்லூரியை நடத்த முடியும். இந்த அடிப்படையில் செய்யலாம், மறுபடியும் கோர்ட்டுக்குப் போகக்கூடாது. ஒரு சாராரிடம் மட்டும்



வலியுறுத்துவது சரியாகாது. இரு சாராரும் அரசை "கேர் டேக்கர்" என்று வைத்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்துவிட்டால் இதில் ஒரு சுமுகமான முடிவு ஏற்படும் என்று நம்புகிறேன். அப்படிச் செய்துவிட்டால் நீதிமன்றத்தில் தீர்ப்பு வெளியிடுகின்ற வரையில் அரசே அந்தக் கல்லூரியின் நிர்வாகத்தை நடத்தும். அரசின் நிர்வாகத்தில் எடுத்துக்கொண்டால், திரு. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டதைப் போல, ஒரு ஸ்பெஷல் ஆபீசரையோ அல்லது வேறு நிர்வாக அதிகாரியாக கல்லூரிக் கல்வித் துணை இயக்குநரையோ அல்லது அரசாங்கம் நியமிக்கும் ஒரு அதிகாரியையோ வைத்து அந்தக் கல்லூரியின் நிர்வாகத்தை நடத்தலாம்.

இருசாராருடைய ஒப்புதலையும் பெற, மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நீதிமன்றத்திலிருந்து தீர்ப்பு வரும்வரையில் கல்லூரியின் நிர்வாகத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்று இருசாராரும் எழுதிக்கொடுத்துவிட்டால், அதன் பிறகு வழக்குத் தொடர முடியாது. கல்லூரியின் கணக்கு வழக்குகளை எல்லாம் அரசாங்கமே பார்த்துக்கொள்ளும். மாவட்ட ஆட்சித் தலைவர் நாளை அல்லது மறுநாள் பதில் சொல்வதாகத் தெரிவித்திருக்கிறார். நாங்கள் தெரிவித்தமாதிரி ஒப்புதல் தந்துவிட்டால் ஆசிரியர்களுக்கு ஒழுங்காகச் சம்பளம் வழங்கமுடியும், நிர்வாகமும் ஒழுங்காக நடைபெறும். இப்போது மாணவர்கள் பிரச்சனை ஓரளவு தீர்ந்துவிட்டது. நிர்வாகத்தை மேற்கொள்வதற்கு கன்னியாகுமரி மாவட்டச் சட்ட மன்ற உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டும். பொதுமக்களும் ஒத்துழைக்க வேண்டும். பொதுமக்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் அந்த இரு சாராரையும் வற்புறுத்தி அரசாங்கம் நிர்வாகத்தை ஏற்று நடத்துவதில் ஆட்சேபணை இல்லை என்ற ஒப்புதலைப் பெற்றுத் தந்துவிட்டால் போதும். சட்டத்துறை அந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறது. அதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த விளக்கத்திற்குப் பிறகு அவையை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: சார், ஒரு கிளாரிபிகேஷன். இப்போது இரு கோஷ்டி மானேஜ்மென்ட் இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆசிரியர்களைப் பொறுத்தவரையில்,

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 டிசம்பர் 23

மாணவர்களைப் பொறுத்தவரையில், பொதுமக்களைப் பொறுத்த
வரையில், இந்த ஒரு கோஷ்டியிலே நம்முடைய சட்டமன்ற
உறுப்பினர் திரு. பாலையா அவர்கள் தலைவராக இருக்கிறார்கள்.
அமைச்சரவர்கள் தெரிவித்த மாதிரி, திரு. பாலையா கோஷ்டியினரிட
மிருந்து "தீர்ப்பு வரும்வரையில் அரசு நிர்வாகத்தை எடுத்துக்
கொள்வதில் ஆட்சேபணை இல்லை" என்று இப்பொழுதே வேண்டு
மானாலும் எழுதித்தரும்படி சொல்கிறேன். மற்றவர்களை நீங்கள்
அணுகவேண்டும்.

அந்தக் கல்லூரிக்கு 35 ஏக்கர் நிலம் இருக்கிறது 4.2 லட்சம்
என்டோமென்ட் கொடுத்திருக்கிறது என்றாலும் சிறுபான்மை
மானேஜ்மென்ட் கையில் இருப்பதால் எப்படியாவது அந்தக்
கல்லூரியை அழித்துவிட வேண்டுமென்று முடிவு செய்து, திட்ட
மிட்டு வேலைசெய்து வருகிறார்கள். அரசாங்க உத்தியோகஸ்தர்கள்
மூலமோ, மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமோ அவர்களை நிர்ப்பந்
தித்து, அவர்களுடைய சம்மதத்தைப் பெறவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> : இந்த ஒரு சாரார்
சம்மதம் தந்துவிட்டால், அதைக் காட்டி மற்றவர்களிடம் சம்மதம்
பெற வசதியாக இருக்கும். மாவட்ட ஆட்சித் தலைவரின்மூலமாக
அவர்களின் சம்மதத்தையும் விரைவில் பெற முடியும் என்று கருது
கிறேன். அதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைக்க
வேண்டும்.

<u>திரு. கே. டி. கே. தங்கமணி</u> : சார், ஒழுங்காக நடைபெறாத
கல்லூரிகளை அரசாங்கம் ஏற்று நடத்த உரிமை இல்லை என்றால்
அதற்குத் தனியாக ஒரு மசோதா கொண்டுவரப்படுமா?

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> : தலைவரவர்களே,
அப்படி ஒரு சட்டத்தைக் கொண்டுவர முயற்சிகள் செய்துகொண்டி
ருக்கிறோம். வேறு 2, 3 மாநிலங்களில் சட்டம் இயற்றியிருப்பதாகத்
தெரிகிறது. அந்த மாநிலங்களிலிருந்து விபரங்கள் பெற்று, பரிசீலனை
செய்யச் சொல்லியிருக்கிறோம். முழு விபரங்கள் தெரிந்த பின்னால்,



1974 டிசம்பர் 23] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அதை ஒரு சட்டமாகக் கொண்டுவர சிலபல ஆண்டுகள் ஆகுமென்றால், ஒரு அவசரச் சட்டத்தின்மூலம் கொண்டுவர முடியுமா என்றுகூட ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இதுபற்றி மேலும் விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதால், இத்தீர்மானத்திற்கு அனுமதி அளிக்க மறுக்கிறேன்.

<u>(ஈ) கோவை, மதுரை, நெல்லை, சென்னை போன்ற இடங்களில் ஆலை உரிமையாளர்கள் எடுத்துள்ள நடவடிக்கையால் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்து.</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திருவாளர்கள் ஏ. சுப்பிரமணியம், கே. என். குமாரசாமி, கே. டி. கே. தங்கமணி, என். மருதாசலம் ஆகியோர் கோவை, மதுரை, சென்னை மற்றும் திருநெல்வேலி போன்ற இடங்களிலுள்ள ஆலை உரிமையாளர்கள் எடுத்துள்ள நடவடிக்கையால் ஆலைத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள்குறித்து விவாதிக்க ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். சபையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கக்கூடிய அளவுக்கு எப்படி முக்கியத்துவம் வாய்ந்தது இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் என்பதைச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். முதலில் திரு. கே. என். குமாரசாமி அவர்கள்.

<u>திரு. கே. என். குமாரசாமி</u> : தலைவரவர்களே, தமிழ்நாடு சட்டமன்ற விதி 42-ன்கீழ் தொழிலாளர் முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். கோவை பஞ்சாலையில் இரவு ஷிப்ட் நிறுத்தப்பட்டும், பகல் ஷிப்ட் நிர்வாகத்தினரால் வேண்டுமென்றே நிறுத்தப்பட்டும், அதனால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டும் ஏராளமான தொழிலாளர்களுக்கு " லே ஆஃப் " கொடுக்கப்பட்டும் இருப்பதால் ஒரு நெருக்கடியான நிலைமை உருவாகியிருக்கிறது என்பதை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அதைப்பற்றி விவாதிக்க அவையை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இதே குறிப்பிட்டப் பிரச்சனை
குந்தது ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் இருக்கிறது.
இது ரொம்ப முக்கியமானது என்றுதான் ஒத்திவைப்புத் தீர்மானத்
தன்மீது கருத்துச் சொல்லவேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள் அதைவிட
என்று கருதுகிறேன். இந்தப் பஞ்சாலைகள் சம்பந்தமாகக் குறிப்பிட
வேண்டுமென்றால், இன்றைக்குத் தமிழ்நாட்டில் இருக்கிற எல்லா
மில்களிலும் அநேகமாக சில ஷிப்டுகளை மூடிவிட்டார்கள்.

மதுரையிலுள்ள "ஹார்வி" மில்லில் வாரத்தில் 6 நாள்
வேலைக்குப் பதிலாக 5 நாள் வேலை என்று வந்துவிட்டது. கிட்டத்
தட்ட எல்லா ஆலைகளிலும் அந்த நிலைமைதான். இன்றைக்கு விலை
வாசி ஏறியிருக்கிற இந்த நேரத்தில் வேலை இல்லாவிட்டால் முழுச்
சம்பளம் கிடைக்காது. அதனால் ஏற்படுகிற கஷ்டம் சொல்ல
முடியாதது. வேலை இல்லாத காலங்களில் 50 பேர்களுக்கு மேல்
உள்ள தொழிற்சாலைகளில் அரைச் சம்பளம் வழங்கவேண்டுமென்
றிருக்கிறது. அதன்படி இப்போது அரைச்சம்பளம் கொடுக்கிறார்
கள். அம்மாதிரி இல்லாமல் முழுச் சம்பளம் வேண்டுமென்று தென்
பிராந்திய ஆலைத் தொழிலாளர் பிரதிநிதிகள் இம்மாதம் 8-ந்தேதி
தூத்துக்குடியில் கூடி, ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார்கள்.
அப்போது அமைச்சரவர்கள் அங்கே வந்திருந்தார்கள். வேலை
இல்லாத காலங்களில் 50 சதவிகிதம் சம்பளம் என்பதற்குப் பதிலாக
75 சதவிகிதம் தரலாம் என்று சொல்லி, அதற்கு மேல் $12\frac{1}{2}$ சதவிகிதம்
மத்திய சர்க்காரும், $12\frac{1}{2}$ சதவிகிதம் மாநில சர்க்காரும் தரலாம்
என்று முடிவு செய்வது நல்லது என்று சொல்லிவந்தார்கள்.

தற்போது மின்சார வெட்டு ஏற்பட்டு, ஏற்கெனவே அவர்களுக்கு
ஸ்டாக் இருக்கிறது என்ற காரணத்தால் 6 நாள் வேலையை 5 நாள்
வேலை என்று ஆக்கி இருக்கிறார்கள். இப்போது மின்சார வெட்டைக்
காரணமாகச் சொல்லி எல்லா மில்களிலும் அநேகமாகப் பாதி நாள்
தான் வேலை நடைபெறுகிறது. அதனால் ரொம்பக் கஷ்டம் ஏற்பட்
டிருக்கிறது. ஆகவே, இந்தமாதிரியான நேரங்களில் வேலை இல்லாத
தொழிலாளர்களுக்கு என்ன பாதுகாப்புக் கொடுக்க வேண்டு
மென்பதை அரசாங்கம் முடிவு செய்ய வேண்டும். இல்லை என்றால்
இன்றைக்கு இருக்கக்கூடிய விலைவாசியில் இன்னும் மோசமான
நிலைமை ஏற்படும்.





இப்போது ஸ்டாக் இருக்கிற காரணத்தினால்தான் மின்சார வெட்டை ஒரு சாக்காக வைத்து, "லே ஆஃப்" கொடுக்கிறார்கள். ஆகவே, லே ஆஃப் கொடுக்கும் காலங்களில் அவர்களுக்கு முழுப் பாதுகாப்புக் கிடைக்கின்ற வகையில் அரசாங்கம் ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். அந்த வகையில் பொதுவாக, மத்திய அரசுக்குச் சட்டத்தைத் திருத்த அதிகாரம் இருக்கிறது. மாநில அரசுக்கு இல்லை என்றாலும் மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்யலாம். அந்தவகையில் ஒரு சட்டத்தை உருவாக்க, தமிழ்நாடு அரசாங்கம் மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன்னோடியாக இருக்கின்ற வகையில் "லே ஆஃப்" காலத்தில் முழுச் சம்பளம் கொடுக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்தால் அது தொழிலாளர்களுக்குப் பெரிய உதவியாக இருக்கும். அதற்கு ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தால் எதிர்க் கட்சியில் இருப்பவர்களும் ஆதரவு தருவார்கள்.

இன்றைக்கு 200-க்கு மேற்பட்ட பஞ்சாலைகளில் பணியாற்றுகின்ற ஒன்றே முக்கால் லட்சம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார் கள் என்றால் இது அரசாங்கத்திற்குப் பெருமை தரக்கூடிய விஷயம் அல்ல. ஆகவே, இதில் அரசாங்கம் எந்த அளவுக்குக் கவனம் செலுத்த முடியுமோ அந்த அளவுக்குக் கவனம் செலுத்தவில்லை. அதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை என்று நான் குற்றஞ்சாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் தொழிலாளர் பிரச்சனைபற்றி ஒரு விரிவான விவாதம் நடைபெறுவதாக இருந்தால், அதில் எல்லாக் கட்சி உறுப்பினர்களும் கருத்துச் சொல்லக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படும். அது ஓரளவு இந்தப் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கும், பஞ்சாலைத் தொழிலதிபர் களுக்கும் மன நிறைவு ஏற்படுவதாக இருக்கும். ஆகவே, இந்தச் சபையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, விவாதிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, 1974 அக்டோபர் முதல் வாரத்திலிருந்து தமிழகத்திலுள்ள பஞ்சாலைகளில் வேலைவாய்ப்பு நிலைமை நூல் மற்றும் துணி ஆகியவற்றின் தேக்கத் தால் பாதிக்கப்பட்டது. 1974-ஆம் ஆண்டு அக்டோபர்–நவம்பர் மாதங்களில் கோவையில் உள்ள மது ஸ்பின்னிங் மில்ஸ் மற்றும் கதிரி மில்ஸ் ஆகியவற்றில் ஒரு ஷிப்டு நிறுத்தப்பட்டது.

[திரு. க. இராசாராம்] [1974 டிசம்பர் 23

1974 டிசம்பர் முதல் தேதியிலிருந்து 40 சதவிகிதம் மின் வெட்டானது வேலை வாய்ப்பு நிலைமை பாதிக்கப்படுவதற்கு மேலும் ஒரு காரணமாகிறது. சில பஞ்சாலைகளில் ஜெனரேட்டர்மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டதாலும் கையிருப்பிலுள்ள நூல் மற்றும் துணி வெளியே செல்வதில் ஏற்பட்ட சிறிது முன்னேற்றத்தின் காரணமாகவும் வேலைவாய்ப்பு நிலைமை நவம்பர் 74 லிருந்த நிலையை விட டிசம்பர் 74-ல் முன்னேற்றம் அடைந்திருப்பதாகத் தோன்றுகிறது.

பொதுவாகப் பல பஞ்சாலைகளில் நிரந்தர தொழிலாளர்களுக்கு ஒரு வாரத்தில் ஒன்று அல்லது இரண்டு நாட்களும், தற்காலிக மற்றும் பதிலித் தொழிலாளர்களுக்கு அதிகமான அளவிலும் லே-ஆப் கொடுக்கப்பட்டு வருகிறது. தேசியப் பஞ்சாலைக் கழகத்தால் ஏற்கப் பட்டுள்ள பஞ்சாலைகளிலும் மற்றும் கூட்டுறவு நூற்பு ஆலைகளிலும் உள்ள தொழிலாளர்களுக்குக் குறிப்பிடத்தக்கவகையில் லே-ஆப் கொடுக்கப்படவில்லை.

தற்போதுள்ள நிலைமையில் படிப்படியாக முன்னேற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[முற்பகல் 11–30]

திரு. தங்கமணி அவர்கள் பேசும்போது தூத்துக்குடியில் நடை பெற்ற தொழிலாளர் மகாநாட்டைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்த மகாநாட்டுக்கு நானும் சென்றிருந்தேன். அந்த மகாநாட்டில் ஒரு கருத்தையும் சொன்னேன். ஏற்கெனவே அகில இந்திய மட்டத்தில் தொழிலாளர் நல அமைச்சர்களைக் கூட்டி லே ஆப் செய்கிற காலங் களில் 60 சதவிகிதம் ஆவது ஊதியம் தரப்படவேண்டுமென்ற ஒரு தீர்மானத்தையாவது நிறைவேற்றி அனுப்பலாம் என்று தெரிவிக்கப் பட்டது. முதலில் 60 சதவிகிதம் ஊதியம் பெறப் போராடுங்கள். அதற்குப் பிறகு முழு ஊதியத்தையும் பெறக்கூடிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னேன். அங்கே அவர்கள் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். அதன்படி லே ஆப் காலங் களில் தொழிலதிபர்கள் 75 சதவிகிதம் ஊதியம் தரவேண்டும் என்றும் மத்திய அரசு 12.5 சதவிகித ஊதியமும், மாநில அரசு பாக்கியையும் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.



1974 டிசம்பர் 23] [திரு. க. இராசாராம்]

தொழிலதிபர்கள் 75 சதவிகிதம் தர முன்வந்து, மத்திய அரசு 12.5 சதவிகிதம் தர முன்வந்தால் மாநில அரசுக்கு மீதியைத் தருவதில் எந்த விதமான தயக்கமும் இல்லையென்றும் தெரிவித்துவிட்டு வந்திருக் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு, இதைப்பற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லையென்று கருதுகிற காரணத்தினால் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

## (உ) சங்ககிரி சிமெண்ட் ஆலைத் தொழிலாளர் போராட்டத்தில் தொழிலாளர் பலர் கைதானதும் அதன் விளைவுகளும்குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. எட்மண்ட், திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. எம். சுரேந்திரன், திரு. கே. டி. கே தங்கமணி ஆகியோர் சங்ககிரியிலுள்ள சிமெண்ட் ஆலையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் தங்களின் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டம் நடத்தியதில் பெண்கள் உட்பட பலர் கைது செய்யப்பட்டு இருப்பதையும், அதனால் தொழில் வளர்ச்சி பாதிக்கப்பட்டிருப்பதையும், அதன் காரணமாக திருநெல்வேலி மற்றும் சேலம் மாவட்டத்திலுள்ள இந்தியா சிமின்ட் தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் போராட்டம் நடத்தி வருவதையும்பற்றி ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக் கிறார்கள். அவை எப்படி முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பற்றிச் சுருக்கமாக விளக்க வேண்டும். திரு. எம் சுரேந்திரன்.

திரு. எம். சுரேந்திரன் : சபாநாயகர் அவர்களே, இங்கே நான் அளித்திருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானம் சபையின் கவனத்திலே ஒரு முக்கிய கருத்தாக எடுத்துக்கொண்டு ஒரு அடிப்படையான அம்சத்தைத் தெரிவிக்க வேண்டுமென்ற கருத்தோடு கொண்டுவரப் பட்டது என்பதை முதலில் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

மூலதனக்காரர்களின் ஆதிக்கியம் குறைந்து, உழைப்பாளர்களின் ஆதிக்கம் மேலோங்கவேண்டுமென்ற ஒரு காலகட்டத்தில் நாம் இருக்கிறோம் என்பதை உணர்ந்துகொள்ளவேண்டும். இங்குள்ள சிமிண்ட் தொழிற்சாலையில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலா ளர்கள் வேலை செய்கிறார்கள். அந்தத் தொழிற்சாலையில் வருடா

[திரு. க. இராசாராம்] [1974 டிசம்பர் 23

1974 டிசம்பர் முதல் தேதியிலிருந்து 40 சதவிகிதம் மின் வெட்டானது வேலை வாய்ப்பு நிலைமை பாதிக்கப்படுவதற்கு மேலும் ஒரு காரணமாகிறது. சில பஞ்சாலைகளில் ஜெனரேட்டர்மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டதாலும் கையிருப்பிலுள்ள நூல் மற்றும் துணி வெளியே செல்வதில் ஏற்பட்ட சிறிது முன்னேற்றத்தின் காரணமாகவும் வேலைவாய்ப்பு நிலைமை நவம்பர் 74 லிருந்த நிலையை விட டிசம்பர் 74-ல் முன்னேற்றம் அடைந்திருப்பதாகத் தோன்றுகிறது.

பொதுவாகப் பல பஞ்சாலைகளில் நிரந்தர தொழிலாளர்களுக்கு ஒரு வாரத்தில் ஒன்று அல்லது இரண்டு நாட்களும், தற்காலிக மற்றும் பதிலித் தொழிலாளர்களுக்கு அதிகமான அளவிலும் லே-ஆப் கொடுக்கப்பட்டு வருகிறது. தேசியப் பஞ்சாலைக் கழகத்தால் ஏற்கப் பட்டுள்ள பஞ்சாலைகளிலும் மற்றும் கூட்டுறவு நூற்பு ஆலைகளிலும் உள்ள தொழிலாளர்களுக்குக் குறிப்பிடத்தக்கவகையில் லே-ஆப் கொடுக்கப்படவில்லை.

தற்போதுள்ள நிலைமையில் படிப்படியாக முன்னேற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[முற்பகல் 11-30]

திரு. தங்கமணி அவர்கள் பேசும்போது தூத்துக்குடியில் நடைபெற்ற தொழிலாளர் மகாநாட்டைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்த மகாநாட்டுக்கு நானும் சென்றிருந்தேன். அந்த மகாநாட்டில் ஒரு கருத்தையும் சொன்னேன். ஏற்கெனவே அகில இந்திய மட்டத்தில் தொழிலாளர் நல அமைச்சர்களைக் கூட்டி லே ஆப் செய்கிற காலங்களில் 60 சதவிகிதம் ஆவது ஊதியம் தரப்படவேண்டுமென்ற ஒரு தீர்மானத்தையாவது நிறைவேற்றி அனுப்பலாம் என்று தெரிவிக்கப் பட்டது. முதலில் 60 சதவிகிதம் ஊதியம் பெறப் போராடுங்கள். அதற்குப் பிறகு முழு ஊதியத்தையும் பெறக்கூடிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னேன். அங்கே அவர்கள் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். அதன்படி லே ஆப் காலங்களில் தொழிலதிபர்கள் 75 சதவிகிதம் ஊதியம் தரவேண்டும் என்றும் மத்திய அரசு 12.5 சதவிகித ஊதியமும், மாநில அரசு பாக்கியையும் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.



1974 டிசம்பர் 23] [திரு. க. இராசாராம்]

தொழிலதிபர்கள் 75 சதவிகிதம் தர முன்வந்து, மத்திய அரசு 12.5 சதவிகிதம் தர முன்வந்தால் மாநில அரசுக்கு மீதியைத் தருவதில் எந்த விதமான தயக்கமும் இல்லையென்றும் தெரிவித்துவிட்டு வந்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு, இதைப்பற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லையென்று கருதுகிற காரணத்தினால் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(உ) சங்ககிரி சிமெண்ட் ஆலைத் தொழிலாளர் போராட்டத்தில் தொழிலாளர் பலர் கைதானதும் அதன் விளைவுகளும்குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. எட்மண்ட், திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. எம். சுரேந்திரன், திரு. கே. டி. கே தங்கமணி ஆகியோர் சங்ககிரியிலுள்ள சிமெண்ட் ஆலையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் தங்களின் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டம் நடத்தியதில் பெண்கள் உட்பட பலர் கைது செய்யப்பட்டு இருப்பதையும், அதனால் தொழில் வளர்ச்சி பாதிக்கப்பட்டிருப்பதையும், அதன் காரணமாக திருநெல்வேலி மற்றும் சேலம் மாவட்டத்திலுள்ள இந்தியா சிமின்ட் தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் போராட்டம் நடத்தி வருவதையும்பற்றி ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். அவை எப்படி முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பற்றிச் சுருக்கமாக விளக்க வேண்டும். திரு. எம் சுரேந்திரன்.

திரு. எம். சுரேந்திரன் : சபாநாயகர் அவர்களே, இங்கே நான் அளித்திருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானம் சபையின் கவனத்திலே ஒரு முக்கிய கருத்தாக எடுத்துக்கொண்டு ஒரு அடிப்படையான அம்சத்தைத் தெரிவிக்க வேண்டுமென்ற கருத்தோடு கொண்டுவரப் பட்டது என்பதை முதலில் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

மூலதனக்காரர்களின் ஆதிக்கியம் குறைந்து, உழைப்பாளர்களின் ஆதிக்கம் மேலோங்கவேண்டுமென்ற ஒரு காலகட்டத்தில் நாம் இருக்கிறோம் என்பதை உணர்ந்துகொள்ளவேண்டும். இங்குள்ள சிமின்ட் தொழிற்சாலையில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அந்தத் தொழிற்சாலையில் வருடா

வருடம் போனஸ் தொகை—போனஸ் சட்டத்திற்கு உள்ளிட்டதாக இல்லாமல் மாமூலாகப் பத்து வருஷங்களாக ஒரு நடைமுறையைப் பின்பற்றித் தந்து கொண்டிருந்தார்கள். அதாவது அதிக லாபம் வந்தாலும்சரி அதைக் கணக்கில் கொள்ளாது 20 சதவிகிதம் போனஸ் என்பதை மாமூலாக நடைமுறையில் கொண்டிருந்தார்கள். போன ஆண்டு நஷ்டம் என்றாலும்கூட நடைமுறையையொட்டி 20 சதவிகிதம் கொடுத்தார்கள். நஷ்டம் ஏற்பட்டாலும், லாபம் ஏற்பட்டாலும் 20 சதவிகிதம் போனஸ் கொடுப்பதாக மானேஜ்மெண்டு தரப்பில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கு வாக்குறுதியும் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இவ்வருடத்தில் ஏராளமான நஷ்டம் வந்திருக்கிறது என்று சொல்லி 8-1/3 சதவிகிதம்தான் போனஸ் சட்டப்படி போனஸ் தரப்படும் என்று சொன்ன காரணத்தினால் ஏறக்குறைய 1½ மாதங்களுக்கு மேலாக வேலை நிறுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. இந்த வேலை நிறுத்தக் கிளர்ச்சியின் காரணமாக ஆயிரக்கணக்கான பேர்கள் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். பெண்களும் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இதனால் தொழிலாளர்களுக்கு ஒரு பக்கம் பலவிதமான துன்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்றாலும் இன்று நாட்டிலே சிமிண்ட் ஸ்கேர்சிடி இருக்கிறது. இந்த நேரத்தில் இந்த வேலை நிறுத்தம் காரணமாக சிமிண்ட் உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. இந்த நிலைமை தொடர்ந்தால் அடுத்த ஆண்டு நஷ்டத்தையும் இது அதிக அளவுக்கு ஏற்படுத்தப்போகிறது என்பதையும் அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

அவர்கள் புதியதாகக் கோரிக்கை எதையும் வைக்கவில்லை. நடைமுறையில் பத்தாண்டுகளுக்கு மேலாக இருந்து வருவதைத்தான் இந்த வருடமும் செயல்படுத்தவேண்டுமென்றுதான் அவர்கள் கேட்டிருக்கிறார்களேதவிர வேறு ஒன்றும் இல்லை. அமைச்சர் அவர்கள் பல சந்தர்ப்பங்களில் அவர்களைக் கூட்டி வைத்துப் பேசுகின்ற நிலையைப் பார்க்கிறோம். ஆயினும் நிலைமை ஒரு பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது—அரசியல் கட்சிகளும், பொதுமக்களும் சேர்ந்து இதை வலுப்படுத்தக்கூடிய நிலைமை ஏற்படுமோ, இது மற்ற மற்றத் தொழிற்சாலை



களுக்கும் பரவுமோ என்ற பிரச்சினை இருக்கிறது—ஆகவே உடனடியாக இதுபற்றி விவாதிக்க இந்த அவை நிகழ்ச்சிகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, இது சங்ககிரி சிமிண்ட் ஆலையைப்பற்றிய முக்கியமான பிரச்சினையாகும். இப்போது உற்பத்தி குறைந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். ஏற்கெனவே ஒருநாள் நமது தொழிலமைச்சர் சொல்கிறபோது போதுமான நிலக்கரி வராத காரணத்தினால் உற்பத்தி குறைந்திருக்கிறது என்று சொன்னார்கள். இப்போது தனியாக கப்பல் வந்தாகிவிட்டது. அதிகமான நிலக்கரியைக் கொண்டுவர வாய்ப்பு ஏற்படும். ஆகவே உற்பத்தி சம்பந்தமாக முதலாளிகளின் கவலையைத் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும்.

ஆனால், இன்றைக்கு தொழிலாளர்களது நிலைமைதான் கஷ்டமான நிலையில் இருக்கிறது. மூவாயிரம் பேர்கள் பணியாற்றக்கூடிய இந்த இடத்தில் ஆயிரம் பேர்கள் சிறையில் இருக்கிறார்கள் என்றால் இது சர்க்கார் பெருமைபடக் கூடிய விஷயம் அல்ல. சிறையில் இருப்பவர்களை எல்லாம் விடுதலை செய்வதுதான் பேச்சுவார்த்தையில் நல்ல முடிவு ஏற்படுவதற்கு ஒரு சுமுகமான நிலையை உருவாக்க உதவிகரமாக இருக்கும். என்னுடைய குற்றச்சாட்டு என்னவென்றால் ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகும் கூட தொழிலாளர்கள் விடுதலை செய்யப்படுவதில்லை—வழக்குகள் வாபஸ் பெறப்படுவதில்லை. தொழிலாளர்கள் கேட்பது நியாயம்—வேலைநிறுத்தம் 50, 50 நாட்களாக நடந்து கொண்டிருக்கிறது. உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. ஊதியம் கிடைக்காத நிலைமையில் ஆயிரக்கணக்கானவர்கள் சிறையில் இருக்கிற நிலைமைதான் இருக்கிறது. இது சேலம் மாவட்டத்திற்கு மட்டுமல்ல. சிமிண்டு தொழிலைப்பற்றி சரியான விவரங்களைத் தெரிந்துகொள்ள ஊதிய முறை, போனஸ் முறை ஆகியவைபற்றிய கருத்தோட்டத்தை தெரிவிக்க சபையை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிக்கவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I had already given an identical motion both on W.S. Insulators and on this subject. I do not know why it has been left out. Sometimes Rule 41 is given preference. Sometimes Rule 42 is brought first. Let us know which should be given the first preference. I had already given notice under Rule 41.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதே மார்ட்டர்தான் என்றாலும் நீங்கள் வேறு விதியின் கீழ் அதைக் கொடுத்துவிட்டு, இந்த விதியின் கீழ் கொடுத்துள்ளவர்களோடு உங்கள் பெயரையும் ப்ராக்கெட் பண்ணவேண்டுமென்று கோர முடியாது. அது வேறு விதியின் கீழ் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் சங்ககிரியில் உள்ள இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட் தொழிற்சாலையிலும், குவாரியிலும் சேர்த்து மொத்தம் சுமார் 2,432 தொழிலாளர்கள் (சிப்பந்திகள் உட்பட) வேலை செய்கின்றனர். இத்தொழிற்சாலையில் கீழ்க்கண்ட தொழிற்சங்கங்கள் உள்ளன:

1. இந்தியா சிமெண்ட்ஸ் தொழிலாளர்கள் சங்கம் (எல்.பி.எப்.), சங்ககிரி மேற்கு.

2. இந்தியா சிமெண்ட்ஸ் எம்ப்ளாயீஸ் யூனியன், (ஐ.என்.டி.யூ.சி.), சங்ககிரி மேற்கு.

3. இந்தியா சிமெண்ட்ஸ் மைனிங் ஓர்க்கர்ஸ் யூனியன், (ஏ.ஐ.டி.யூ.சி.), சங்ககிரி மேற்கு.

4. திரு. கருணாகரனை செயலாளராகக் கொண்ட சங்ககிரி சிமெண்ட்ஸ் ஆலைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம், (சி.ஐ.டி.யூ.), சங்ககிரி மேற்கு.

5. திரு. மகாதேவனை செயலாளராகக் கொண்ட சங்ககிரி சிமெண்ட்ஸ் ஆலைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம், (சி.ஐ.டி.யூ.), சங்ககிரி மேற்கு.

1973–74 ஆண்டிற்கு போனஸ் கோரி மேற்கூறியுள்ள தொழிற் சங்கங்கள் நிர்வாகத்தினருக்கு 1974 ஆண்டு அக்டோபர் மாதத்தில் 11—11—1974 முதல் வேலைநிறுத்தம் செய்ய உத்தேசித்திருப்பதாக நோட்டீஸ் அனுப்பினர். இந்தத் தொழில் தகராறை சேலம் தொழிலாளர் துறை அலுவலர் சமரச நடவடிக்கைக்கு எடுத்துக் கொண்டார். இதற்கிடையில் தொழிற்சங்கங்கள் முன்னமே அறிவித்தவாறு 11—11—1974 அன்று இரவு 12 மணி முதல் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர்.



இந்த நிறுவனத்தில் போனஸ் தொகை இலாப நஷ்டக் கணக்குப்படி கொடுப்பது வழக்கமில்லையென்றும், கடந்த ஆண்டுகளில் அதிக லாபம் வந்திருந்தாலும் நஷ்டம் ஏற்பட்டிருந்தாலும் நிர்வாகத்தினர் ஊதியத்தில் 20 சதவிகிதத் தொகையை போனசாக கொடுத்துள்ளார்கள் என்றும், 20 சதவிகித போனஸ் கொடுத்து வருவது வழக்கமாதலால் 1973–74 ஆண்டிற்கும் அதே விகிதத்தில் போனஸ் தரப்பட வேண்டும் என்று கோரினார்கள். சென்ற ஆண்டில் (1972–73) தொழிற்சாலை ரூ. 35 இலட்சம் நஷ்டம் அடைந்திருந்தபோதிலும் சட்டப்படி 8-1/3 சதவிகிதம் போனஸ் மட்டிலும் கொடுக்க வேண்டியிருந்தும், அடுத்த ஆண்டில் அபிவிருத்தி ஏற்படும் என்ற நல்லெண்ணத்துடன் ஒதுக்கப்பட்டிருந்த தொகையிலிருந்து 1972–73-க்கு 20 சதவிகித போனஸ் பட்டுவாடா செய்யப்பட்டது. ஆனால், தொழிற்சாலையின் நிலைமை எதிர்பார்க்கப்பட்ட அளவு 1973–74-ல் அபிவிருத்தி அடையாததாலும் மேலும் நிலக்கரி பற்றாக்குறை மற்றும் மின்சார வெட்டு ஆகிய பல காரணங்களால் 1973–74-ல் ரூ. 1.48 கோடி நஷ்டம் ஏற்பட்டதாலும், தொழிலாளர்களுக்கு 8-1/3 சதவிகிதம் போனஸ்தான் கொடுக்கமுடியும் என்று நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

ஒப்பந்தம் ஏற்படாததால் சேலம் தொழிலாளர் துறை அலுவலர் சமரச முறிவு அறிக்கை அனுப்பினார். அதனைப் பரிசீலித்து 28—11—1974 தேதிய அரசு ஆணை எண் 2295-படி (தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை) இத்தொழில் தகராறு, சென்னை தொழில் நடுவர் மன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பவில்லை. இந்த வேலைநிறுத்தத்தின் தொடர்பாக தொழிலாளர்கள் சிலர் மறியல் செய்தார்கள். இது சம்பந்தமாக இதுநாள் வரை 1,012 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேற்கொண்டு என் முன்னிலையில் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

திருநெல்வேலி சங்கர் நகரிலுள்ள இந்தியா சிமெண்ட் தொழிற்சாலையிலும் குவாரியிலும் சேர்த்து மொத்த சுமார் 2,450 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். 25—11—1974 அன்று இந் நிறுவனத்தைச் சேர்ந்த சிமெண்ட் மற்றும் குவாரி தொழிலாளர் முன்னேற்ற சங்கம், நெல்லை மாவட்டப் பொதுத் தொழிலாளர்கள் சங்கம் மற்றும் திருநெல்வேலி தாலுகா தேசிய பொதுத்

[திரு. க. இராசாராம்] [1974 டிசம்பர் 23

தொழிலாளர்கள் சங்கங்கள் சங்ககிரியிலுள்ள தொழிற்சங்கங்கள் கோரியுள்ளபடி அதே விகித போனஸ் தங்களுக்கும் தரப்பட வேண்டுமென்றும், அதை முன்னிட்டு 10—12—1974 முதல் வேலைநிறுத்தம் செய்யப்போவதாக வேலைநிறுத்த அறிக்கை கொடுத்துள்ளனர். சங்கர் நகரிலுள்ள மொத்த 5 சூளைகளில் தற்பொழுது 3 சூளைகளில் தான் வேலை நடந்துவருகிறது, மற்ற இரண்டு சூளைகளிலும் 40 சதவிகித மின்சார வெட்டினாலும், மற்றும் நிலக்கரி பற்றாக்குறையினாலும் வேலை நடைபெறவில்லை. தற்போது சுமார் 60 சதவிகித தொழிலாளர்கள் வேலைக்குச் சென்று வருகின்றனர். உற்பத்தி பாதிக்கப்படவில்லையென்றும் நிர்வாகம் தெரிவித்துள்ளது. எனவே, இது பற்றி அரசு தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருப்பதால், பேரவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைத்து இதனை விவாதிக்கத் தேவையில்லையென்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இதனைப்பற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லையென்ற காரணத்தால், இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

## 4. அரசினர் தீர்மானங்கள்.

### (அ) விதி 41(3)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"பேரவையின் விதி 41(3)-ஐத் தளர்த்தி, இரண்டுக்கு மேற்பட்ட தீர்மானங்களை இன்று எடுத்துக் கொள்ளலாம்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

## 5. கவன ஈர்ப்பு.

### (அ) மாணவர் போராட்டத்தினால் விவேகானந்தா, ஜெயின் ஆகிய கல்லூரிகள் மூடப்பட்டது குறித்து.

Dr. H. V. HANDE : Sir, on behalf of Thiru P. Soundarapandian I wish to call the attention of the Hon. Minister for Education and Tourism to a matter of urgent public importance,



1974 டிசம்பர் 23] (Dr. H. V. Hande)

namely, the closure of Vivekananda College in Mylapore, Jain College and other Colleges in the State due to students agitation.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 6—11—1974 அன்று விவேகானந்தா கல்லூரியின் விடுதியைச் சேர்ந்த சுமார் 150 மாணவர்கள் கல்லூரி மாணவர் மன்றத்தின் உப-தலைவரால் தூண்டப்பட்டு வெளியே இருந்து எதிர்ப்பைத் தெரிவித்து விடுதிக் காப்பாளர்களின் அறைகளைச் சூறையாடினர். இந்த வன்முறையினாலும், பொருட்களுக்கு ஏற்பட்ட சேதத்தினாலும் கல்லூரி நிர்வாகம் கல்லூரியை 7—11—1974-லிருந்து காலவரையறையின்றி மூட முடிவு செய்தது. பின்பு விடுதி மாணவர்களின் பெற்றோர்களுடன் கல்லூரி முதல்வர் நடத்திய உரையாடல்களின் மூலம், வன்முறையில் ஈடுபட்ட மாணவர்கள் யாவரும் ஓர் விசாரணைக் குழுவின் முன்பு வந்து, தங்களது தவறான செய்கைகளுக்கு மன்னிப்பு கோரினர். கல்லூரி 25—11—1974 திங்கட்கிழமையிலிருந்து திறக்கப்பட்டு ஒழுங்காக நடைபெற்றுவருகிறது.

25—11—1974 அன்று மீனம்பாக்கம் ஜெயின் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள், மாணவர்களுக்காக வழங்கப்பட்டுள்ள "எல்லா வழிகளிலும் பேருந்துகளில் செல்வதற்காக உள்ள சலுகை" அட்டைகளை பேருந்து நடத்துனர்கள் கிழித்துப் போட்டனர் என்று குற்றம் சாட்டி வகுப்புகளுக்கு வராமல் இருந்தனர். ஆகவே, கல்லூரி அந்த வார இறுதியான 30—11—1974 வரை மூடி வைக்கப்பட்டது. 2—12—1974 அன்று, கல்லூரி மீண்டும் திறந்த போதிலும், நகரத்திலுள்ள எல்லாக் கல்லூரிகளும் 2—12—1974-லிருந்து 8—12—1974 வரை மூடப்பட்டிருந்ததை ஒட்டி இக் கல்லூரியும் மூடப்பட்டது. பின்பு கல்லூரிப் பேரவையின் பரிந்துரைப்படி கிறிஸ்த்மஸ் விடுமுறைக்காக முன்பாகவே மூடப்பட்டது. இக் கல்லூரி 3—1—1975 அன்று மீண்டும் திறக்கும்.

தமிழ்நாட்டில் 183 கல்லூரிகள் உள்ளன. இந்த 183 கல்லூரிகளில் 34 கல்லூரிகள்தான் சமீபத்தில் பல்வேறு காரணங்களுக்காக மூடப்பட்டன. அதற்கான காரணங்களை நான் பலமுறை சொல்லியிருக்கிறேன்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 டிசம்பர் 23

பொதுவாக, சம்பந்தப்பட்ட கல்லூரிகளின் முதல்வர்கள் அங்குள்ள நிலையையும் மாணவர்களிடையே உள்ள பதட்ட நிலையையும் பொறுத்து, தேவையிருந்தால் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றுமுள்ள அதிகாரிகள் ஆகியோரைக் கலந்தாலோசித்து கல்லூரி மூடுவது பற்றி முடிவு எடுக்கிறார்கள். கல்லூரியை மூடுவது கடைசியாக தவிர்க்க இயலாத நிலையில் செய்யப்படுகிறது. இதற்கான முடிவு எடுக்கும் பொறுப்பு கல்வி நிலையங்களின் அதிகாரிகளுக்கே விடப்படுகிறது. மாணவர்களின் கோரிக்கைகள் அனேகமாக பொதுத்தன்மை வாய்ந்ததாக உள்ளன. சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் குறிப்பிட்ட கோரிக்கைகளின் மேல் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட இரண்டு கல்லூரிகளும் இப்பொழுது அமைதியாக நடைபெறுகின்ற நிலையிலுள்ளன. ஒரு கல்லூரி நடைபெற்று வருகிறது, மற்றொரு கல்லூரி 3—1—1975 அன்றிலிருந்து நடைபெறும்.

## (ஆ) அரசினர் பொது மருத்துவமனையிலுள்ள அறுவைச் சிகிச்சைக் கூடங்கள் அடிக்கடி மூடப்படுவது குறித்து.

DR. H. V. HANDE: Sir, I wish to call the attention of the Hon. Minister for Public Health to a matter of urgent public importance, namely, the frequent closure of several surgical theatres in General Hospital as a result of widespread prevalence of Tetanus and the need to prevent Tetanus from becoming endemic inside the hospital premises.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: சென்னை அரசினர் பொது மருத்துவ மனையில், 7 அறுவைச் சிகிச்சைக் கூடங்கள் உள்ளன. கடந்த நான்கு மாதக் காலத்தில் இவற்றில் 6 கூடங்கள் இடையே மூடப்பட்டிருந்தன. இதற்குக் காரணம், அக்கூடங்களில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட சில நோயாளிகளுக்கு வலிப்பு நோய் ஏற்பட்டதாகும்.



1974 டிசம்பர் 23] [திரு. க. அன்பழகன்]

இந்த வலிப்பு நோய் மீண்டும் வருங்காலத்தில் வராமல் தடுப்பதற்காக கீழ்க்காணும் பரிகார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன :—

(1) பழைய கட்டிடங்களை இடிக்கும் பணி தற்போது முடிவுற்றுள்ளது. முன்னதாகவே அறிவிப்புக் கொடுத்த பிறகுதான் அது போன்ற பணியை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பொதுப் பணித் துறை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

(2) நீர் வழங்கலிலுள்ள பற்றாக்குறையை நீக்குவதற்கு மருத்துவமனை வட்டாரத்திற்குள் தற்போதுள்ள கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும், புதிய கிணறு ஒன்றைத் தோண்டுவதற்குமான செயற்குறிப்பு உயர் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

(3) தேவை ஏற்படும்பொழுதெல்லாம் அறுவைச் சிகிச்சைக் கூடங்களுக்குப் பழுது பார்க்கும் பணியை உடனடியாகக் கவனிக்குமாறு பொதுப் பணித் துறைக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அறுவைச் சிகிச்சைக் கூடங்களில் ஏற்படும் பழுது பார்க்கும் பணிகளை அவ்வப்பொழுது கவனிக்க வேண்டுமென்று மின்சாரத் துறைக்கும் கூறப்பட்டுள்ளது.

(4) நோய்க் கிருமிகளை நீக்கித் தூய்மைப்படுத்தும் நடைமுறை செயல்பட்டு வருவதை மேற்பார்வையிடுமாறு மின்சாரத் துறை உதவிப் பொறியாளருக்கும், சென்னை அரசினர் பொது மருத்துவ மனையின் மயக்க மருந்து கொடுக்கும் தலைமையினருக்கும் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இந்த அறுவைச் சிகிச்சைக் கூடங்களுக்கு எடுத்துச்செல்லும் பொருள்களும், கூடங்களிலிருந்து வெளியே எடுத்துவரும் பொருள்களும் நன்றாக மூடப்பட்ட தள்ளு வண்டிகள் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றனவா என்பதை மேற்பார்வையிட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

சலவைச் சாலைகளை மேற்பார்வையிடும் பணியானது செவிலியர் கண்காணிப்பாளர், பதவித் தரம்— , தலைமைச் செவிலியர் ஆகியோரால் கவனிக்கப்பட்டு வருகிறது. அழுக்குத் துணி முதலிய பொருட்கள் எடுத்துச் செல்லும் தொட்டிகள் பழுது பார்க்கப்பட்டு வருவதோடு பயன்படாத தொட்டிகளுக்குப் பதிலாக புதிய தொட்டிகளை வாங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[திரு. க. அன்பழகன்] [1974 டிசம்பர் 23

(5) ஒழுக்கக் கட்டுப்பாடு நெறி மீறப்படும்போதெல்லாம் சம்பந்தப்பட்ட அப்பணியாளர் மீது நடவடிக்கை எடுப்பதன் மூலம் இயன்றவரையில் இந்த அறுவைச் சிகிச்சைக் கூடங்களில் ஒழுங்குக் கட்டுப்பாடு நெறி பேணப்பட்டு வருகிறது. மருத்துவ மனையில் நிலைய மருத்துவ அதிகாரி, சார்ஜெண்ட் ஆகியோர் இந்த அறுவைச் சிகிச்சைக் கூடங்களைப் பரிசோதனை செய்து வருகின்றனர்.

அறுவைச் சிகிச்சைக் கூடத்துக்கான ஸ்டிரெச்சர்கள் அறுவைச் சிகிச்சைக் கூடத்திற்குள் மட்டும்தான் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும், வார்டுகளில் பயன்படுத்தும் ஸ்டிரெச்சர்கள் அறுவைச் சிகிச்சைக் கூடத்திற்குள் அனுமதிக்கப்படக் கூடாது என்றும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. பட்ட மேற்படிப்பு மாணவர்கள், பட்டப் படிப்பு மாணவர்களுக்குத் தேவையானவை உட்பட, அறுவைச் சிகிச்சைக் கூடங்களில் தேவைப்படுகின்ற மேலங்கிகள் (Aprons) குல்லாய்கள், மேலுடைகள் (vials) முதலியவை போதுமான அளவிற்கு வழங்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ரப்பர் ஷூக்கள் வழங்குவதற்கு ஒப்பந்தப் புள்ளிகள் கேட்கப்பட்டுள்ளன.

அறுவைச் சிகிச்சைக் கூடங்களுக்கு வெளியே கூட்டம் கூடுவதைத் தடுக்கவும், வெளியிலிருந்து உள்ளே தொற்று நோய்க் கிருமிகள் பரவுவதைத் தடுக்கவும், பார்வையாளர்களும் நோயாளிகளும் கூட்டமாகக் கூடுவதைத் தவிர்க்க அறுவைச் சிகிச்சைக் கூடங்களுக்கு முன்னால் கூர்க்கா காவலாள் நியமிக்கப்பட ஆணையிடப்பட்டுள்ளது. சிகிச்சை பெறுவோர் குறித்து மதிப்பீடுவதற்கான மயக்க மருந்துப் பிரிவுக்குத் தனி அறை ஏற்பாடு செய்து தரும் கருத்து பரிசீலனையில் உள்ளது.

6. அறுவைச் சிகிச்சைக் கூடங்களைச் சுத்தம் செய்யும் நடைமுறை தரப்படுத்தப்பட்டுள்ளது ; அவை செவிலியர்களாலும் மயக்க மருந்துப் பிரிவுத் தலைவராலும் மிகவும் கவனத்துடன் மேற்பார்வை செய்யப்படுகின்றன.

7. வழக்கமான அறுவைச் சிகிச்சைக் கூடத்தில், போக்குவரத்து விபத்தில் அகப்பட்டவர் குறித்து அறுவைச் சிகிச்சை எதுவும் நடத்தப்பட அனுமதிக்கப்படுவதில்லை. இவைகட்கு 7 ஆம் எண்



1974 டிசம்பர் 23] [திரு. க. அன்பழகன்]

அறுவைச் சிகிச்சைக் கூடத்தையே பயன்படுத்தவேண்டும் அல்லது அவசர நோயாளிகள் பிரிவிலேயே அறுவைச் சிகிச்சை நடத்தப்படுகிறது.

8. தற்போதுள்ள சீர்வளிச் சாதனங்களில் (airconditioners) காற்றை வடி கட்டுவதற்கு ரப்பர் கயிற்றாலான வடிகட்டிகளைப் பயன்படுத்துவதற்கு பதிலாக Micro filters வடிகட்டும் வடிகட்டிகளைப் பயன்படுத்தலாம். இதற்கு அவசியமான செலவு மதிப்பீட்டையளிக்குமாறு அந்த நிறுவனத்துக்கு எழுதிக் கேட்கப்பட்டுள்ளது. காற்றை மின்னணுச் சாதனத் துணை கொண்டு வடிகட்டும் செயற்குறிப்பும் பரிசீலனையில் இருக்கிறது.

தற்காலிக ஏற்படாகா, தரையிலிருந்து 3 அடி உயரத்தில் புற ஊதா ஒளிக்கதிர் (Ultraviolet rays) விளக்கை அமைப்பது பரிசீலனையில் உள்ளது.

தனியாக அறுவைச் சிகிச்சைக் கூடமொன்றைக் கட்டுவதற்கான மதிப்பீடுகள் பொதுப் பணித் துறையிடமிருந்து கேட்கப்பட்டுள்ளன. அவை கிடைத்ததும் அவை அனுமதிக்காக மேலதிகாரிகள் அல்லது அரசுக்கு பணிந்தனுப்பப்படும்.

2. தொற்று நோய்க் கிருமி நீக்க மத்தியப் பொருள் வழங்கு பிரிவுஒன்றை அமைப்பது பரிசீலனையில் உள்ளது.

3. அறுவைச் சிகிச்சைக் கூடங்களுக்கென்றே தனியான நீர் வழங்கு ஏற்பாட்டைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

4. இந்த மருத்துவ மனையின் (பொதுப் பணித் துறை) இளநிலைப் பொறியாளர் அறுவைச் சிகிச்சைக் கூடங்களை அடிக்கடி சென்று பார்வையிட வேண்டுமெனவும் அவசியமான பணியை அங்கேயே அப்போதே கவனிக்கச் செய்ய வேண்டும் எனவும், அவர் தாம் செய்யும் பணிகள் குறித்து மாதமொருமுறை அறிக்கை அனுப்ப வேண்டும் எனவும், அவருக்கு உத்தரவுகள் பிறப்பிக்குமாறு பொதுப் பணித் துறை கேட்டுக் கொள்ளப்பட்டது.

5. அறுவைச் சிகிச்சை வார்டுகள் தொகுதி முழுமைக்கும் ஆயத்தப் பணிகளுக்கான தனி அறை ஒன்றை, செவிலியர் ஒருவரின் நேர் பொறுப்பில் ஏற்படுத்துவது பற்றியும் கருதப்பட்டுள்ளது ; அது பரிசீலனையில் உள்ளது.

6. சீர்வளிச் சாதனத்திற்கு உள் காற்றை உட்புகவிடுவதற்கு மின்னணுவியல் அயான்களாகும் சாதனம் (Electric Ionisation apparatus) ஒன்றுக்கு வகை செய்யும் கருத்தும் கவனத்தில் உள்ளது. ஒப்பந்தப் புள்ளிகள் கேட்கப்பட்ட பின்னர் இத்திட்டம் பரிசீலிக்கப் படும். இவ்வாறு ஏற்பட்ட இந்த விரும்பத் தகாத நிலை பல நேரங் களிலே ஏற்பட்டுவிடுகிறது. இந்த வலிப்பு நோய் எந்தவிதமான நோய்க் கிருமிகளால் ஏற்படும் என்று கண்டுபிடித்து தடைசெய்வதற் காக இவ்வளவு வேலைகள் செய்யவேண்டியிருக்கிறது. இது வராமல் இருப்பதற்கு வேண்டிய முன்னெச்சரிக்கைகள் அனைத்தும் செய்யப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Sir, while it is commendable that a number of steps have been taken by the Government, may I know whether it is not possible to see that all the patients are immunised before the operation takes place. Care should be taken by the doctors concerned to see whether that particular person to be operated has been immunised and whether that particular person will find a place. The person to be operated should be prepared well. Now it has been decided to post a gurka for each operation theatre. Since it is not possible to check all the persons that are coming to the room, it would be better if an ante-room is provided so that the persons can be taken to the operation theatres from that room only. May I know whether the Government would consider the possibility of using 'tetanus tiomide' for this purpose?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இந்த ஆலோசனைகள் எந்த அளவிற்கு இயல்வதாகும் என்று பரிசீலிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படும்.

## (இ) மூவகைத்தடுப்பு ஊசிமருந்து கிடைக்காமையும் அதன் விளைவுகளும்

DR. H. V. HANDE: Sir, I wish to call the attention of the Hon. the Minister for Public Health to a matter of urgent public importance, namely the non-availability of Triple Antigen and the consequent set back in the immunisation programme for children against whooping cough, Diptheria and Tetanus.



மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, தொண்டைப்புண் (Diptheria), கக்குவான் (Whooping Cough) இசிவு நோய் (Tetanus) த் தடுப்புக்காக 1 முதல் 5 வயதுள்ள பள்ளியில் படிக்காத குழந்தைகளுக்கு, எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், நகர்புற நிலையங்களிலும் உள்ள அரசு மருத்துவ நிலையங்களில் மூவகைத் தடுப்பு ஊசி மருந்து (Triple Antigen) குழந்தைக்கு 2 டோஸ் (Dose) வீதம் வழங்கப்படுகிறது.

2. 1973 நவம்பர் வரையில் 22,038 வியல்கள் (vials) விநியோகம் செய்யப்பட்டது. 30—11—1974ல் இருப்பு 17,240 வியல்கள். Vial: சாதாரணமாக மாதாமாதம் 3,000க்குக் குறைவாக மூவகைத் தடுப்பு ஊசி மருந்து விநியோகம் செய்யப்படுகிறது. மாதம் 10 ஆயிரம் 11 ஆயிரம் குழந்தைகள் பிறக்கின்றன. ஆனால் வழங்குவதற்கு கிடைக்கிற வியல்கள் 3,000 தான். இந்த வீதத்தில் தற்போது இருப்பில் உள்ள ஊசி மருந்து மேலும் ஆறு மாத காலத் திற்குப் போதுமானதாக உள்ளது.

3. மத்திய அரசு நிர்ணயித்த இலக்கின்படி, இந்தத் திட்டம் மேலும் அதிகரிக்கப்படுத்த உத்தேசம் இருக்கிறது. இதன்பொருட்டு, கசோலியிலுள்ள மத்திய ஆராய்ச்சி நிலையத்திற்கு—மூவகைத் தடுப்பு ஊசி மருந்து-பைவெலேண்ட் (Bivalent) தேவைப்பட்டியலை (Indent) அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

4. குழந்தைகளுக்கான தொண்டைப்புண், கக்குவான், இசிவு நோய்த் தடுப்பு திட்டத்திற்கான மூவகைத் தடுப்பு ஊசி மருந்து இவ்வமயம் அரசின் மருத்துவ நிலையங்களில் போதுமான அளவு இருப்பு உள்ளது. எனவே அரசு மருத்துவ நிலையங்களில் மூவகைத் தடுப்பு ஊசி மருந்து கிடைக்காமையால் திட்டம் பின்தங்கவில்லை.

DR. H. V. HANDE: The Hon. Minister has explained that the Government is not able to have adequate stock of Triple Antigen for their immunisation programme and that the programme has come to a standstill. The problem was bigger last month. This problem is not for the Government alone but it is for the private doctors also. The position was very bad last month. This month, it has improved. I wish to draw the attention of the Hon. Minister for Public Health in order to enable him to improve the position. I want to know whether it will be better for the Hon. Minister to find out the Governmental source and if it is

short, they can address the Central Government and get more supply probably through Messrs. Glaxo Laboratories or Alembic, which are the main companies manufacturing this. May I know from the Hon. Minister whether it would be possible to increase the quantity from the Centre for the State?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, தனியாராக இருக்கிற மருத்துவர்கள் பயன்படுத்துகிற இந்த மருந்துகளின் தேவையின் அளவு அரசிடத்திலே இல்லை. ப்ரோகிராம் என்று ஹாண்டே அவர்கள் தெரிவித்தார்கள். அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற ப்ரோகிராம்—இந்தத் திட்டத்திற்குத் தேவையான மருந்துகள் இருக்கிறதா இல்லையா என்று கேட்டால் இருக்கிறது. ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற ப்ரோகிராம் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள குழந்தைகளுக்குத்தான், எல்லாக் குழந்தைகளுக்கும் கசோலியிலிருந்து மருந்துகள் அனுப்பப்படவில்லை. ஏறத்தாழ 3 ஆயிரம் குழந்தைகளுக்குத்தான் இந்த மருந்துகள் கிடைக்கின்றது. ஆரம்ப சுகாதார நிலையங்களிலே இந்த மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. ஆகவே கிடைக்கவில்லையென்ற குறையில்லை. தனியார்களுக்குக் கிடைக்கவில்லையென்று சொல்கிற தகவல் எதுவும் அரசாங்கத்திற்கு இல்லை, அப்படிக் கிடைத்தால் கூட அது மத்திய அரசிற்கு அனுப்பப்படவேண்டும்; அவர்கள் முடிவு அதைப்பற்றி என்ன என்று கேட்கலாம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: இந்த ப்ரோகிராம் நாளில் ஒரு பங்குக்குத்தான் பயன்படுகிறது, மூன்று பங்கு பேர்களுக்குக் கிடைக்கவில்லை. நான் இந்தக் குறை இருக்கிறது என்று இந்த மன்றத்திலே சொல்லியதை வைத்துக்கொண்டு மத்திய அரசினிடத்திலே தெரிவித்தால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. தங்கமணி, குமாரசாமி ஆகியோர் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

THIRU K. T. K. THANGAMANI: Identical thing as been given notice of by me and by Thiru Kumaraswamy under Rule 42. The same wording has been used. It is redundant. The same thing has been taken up under Rule 42. I thought that it may not be brought under Call Attention Notice again here.



(ஈ) பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு கடப்பேரி ஏரிப்படுகையில் ஐந்து ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டதும் அதன் விளைவால் ஏரிக்கு ஏற்படும பாதுப்பு குறித்தும்.

THIRUMATHI JOTHI VENCATACHELLUM: Sir, I wish to call the attention of the Hon. Minister for Transport to a matter of urgent public importance, namely, the assignment of five acres of land in Kadaperi lake-bed to Pallavan Transport Corporation for erecting huge shed and consequent damages likely to be caused to the lake due to the pollution of water containing acids and other chemicals and also the fear that the main feeder channel will be blocked thereby flooding some parts of Tambaram.

(நண்பகல் 12-00)

THE HON. THIRU S. RAMACHANDRAN: The Pallavan Transport Corporation has proposed to put up a depot at Tambaram in S. No. 151 of Kadapperi Village by getting assigned a piece of land measuring 3.4 acres in the rear of the site, evicting the encroachment in the front portion of the site.

The Land bearing S. No. 151 which is proposed to be assigned for the location of a depot at Tambaram, is classified as tank-bed poramboke in the Revenue accounts of the Kadapperi village. This land is situated in the South Eastern side of the actual tank, which is in S. No. 154. The water spread area of the tank also confines itself to that of S. No. 154 and never reaches the area in S. No. 151.

Anyhow in S. No. 151, according to the land records there is to be a supply channel leading to the tank. In actual existence, there is no such channel.

The construction of the depot will therefore be neither a hindrance to the tank nor an obstruction to the extinct channel.

The question of pollution of water will also not arise as any waste in the depot is collected and stored in barrels and cleared.

So the assignment of land in S. No. 151 of Kadapperi Village, for the construction of a depot at Tambaram will not affect the tank situated in S. No. 154 and also there will be no fear, that the tank water would be polluted by chemicals and acids from the depot to be constructed.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலிலிருந்து கடப்பேரி ஏரியிலுள்ள தண்ணீர் எந்தவிதமாகவும் அசுத்தப்படுத்தப்படாது என்று கூறினார்கள். இதைப்பற்றி மதிப்பிற்குரிய முதல்மைச்சர் அவர்களுக்கும் அங்குள்ள மக்கள் ரெப்ரசென்டேஷன் கொடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், அவரே ஒப்புக்கொண்டார் இது இந்த ஏரி லேக்-பெட்டிலே வரப் போகிறது என்று. பஸ்களைக் கழுவும்பொழுதும், ரிப்பேர் செய்யும்பொழுதும் எண்ணெய், மற்ற கெமிகல்ஸ் இவைகளெல்லாம் தண்ணீரைக் கண்டிப்பாகப் பாழாக்கிவிடும். எனவே, அவ்வாறு ஏரி அசுத்தப்படுத்தப்பட்டால் விவசாயமும் பாதிக்கிறது. உணவு உற்பத்தியையும் பாதிக்கிறது. ஆகவே, தயவு செய்து இதை மறுபரிசீலனை செய்து, இஞ்சினீயர்கள் கொடுத்த ரிப்போர்ட்டை வைத்திருந்தாலும்கூட, அவர்களே நேரடியாகச் சென்று பார்த்து, இதைப் மறுபரிசீலனை செய்து ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, கழிவுப் பொருட்களைப் பொறுத்தவரையில் பேரல் மூலமாக அவைகள் வெளியேற்றப்படுகின்றன என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இங்கேயுள்ள பிரச்சினை என்ன என்று பார்க்கிறபொழுது, இங்கே நாம் எடுக்கப் போகும் நேரத்தில், ஏற்கெனவே "என்குரோச்சர்ஸ்" இருக்கிறார்கள். ஆகவே, அது ஒரு பிரச்சினையாக இருக்கிறது. ஆனால் ஏரியைப் பொறுத்தவரையில் எந்தவிதமான பாதகமும் ஏற்படாது என்று அதிகாரிகள் நேரிலே சென்று பார்த்து எனக்கு அளித்த தகவலில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் அந்தக் கருத்தை வலியுறுத்துவதால் அதைப்பற்றி மறுபடியும் ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கப்படும்.



## 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (அ) தமிழ் நாடு, 1972-ம் ஆண்டு, சங்கங்கள் பதிவு சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/72) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கை—அளித்தல்

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, தமிழ் நாடு, 72 ஆம் ஆண்டு, சங்கங்கள் பதிவு சட்ட முன்வடிவு (சட்டப் ரவை சட்ட முன்வடிவு எண் 53/72)-ன் மீதான கூட்டாய்வுக் குழு ன் அறிக்கையை அளிக்கிறேன்.

திரு. என். கணபதி: தலைவரவர்களே . . .

DR. H. V. HANDE: Sir, on a point of order.

THIRU N. GANAPATHY: I am only presenting the report. The hon. Member can raise the point of order after I present it.

### (1) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி

### (ஆ) அவையுரிமைக் குழுவின் அறிக்கைகள் மீது விவாதம் நடத்த வாய்ப்பு அளிக்கப்படுமா என்பது குறித்து

DR. H. V. HANDE: Sir, on a point of order. Before the hon. Member presents his report, I would like to know whether this is only presentation of the report or whether the Members would be given an opportunity to discuss it on a motion to be moved under Rule 191. Rule 191 (b) says —

'As soon as may be, after the report has been presented a motion in the name of the Chairman of the Committee or any member of the Committee may be made that the report be taken into consideration.'

Rule 191 (c) says—

'Any member may give notice of amendments to the motion for consideration of the report referred to above in such form as may be considered appropriate by the Speaker ..............'

Because the report is going to be presented, I want to know whether this Rule will be observed because some Hon. Members

have given notice of motions. So, I would like to know whether time will be allowed to us to discuss the report and if that is not possible now, but at least in the next session.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நோட்டீஸ் கொடுத்தால், அனுமதித்தால் டிஸ்கஷன் வரும்.

THIRU K. T. K. TANGAMANI: Sir, after the Chairman of the Committee presents the report, I would like to make a submission.

## 7. உரிமைப் பிரச்சினை

### அறிக்கைகள் அளித்தல்:

(அ) ஆளுநர் அவர்கள் பேருரைக்கு முன் வெளிநடப்பு செய்த எதிர்க் கட்சி உறுப்பினர்கள் மீதான வழக்கு.

(ஆ) டாக்டர் ஹாண்டே, "தென்னகம்" மீதான உரிமை மீறல் வழக்கு.

(இ) 21—11—1973-ல் பேரவையில் டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்களின் நடத்தை குறித்த வழக்கு.

திரு. என். கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவையுரிமை மீறல் பிரச்சினைகள் குறித்த அவையுரிமைக் குழுவின் அறிக்கைகளை அளிக்கிறேன்:—

(1) 2—2—1973 ஆம் நாளன்று, ஆளுநர் அவர்களின் பேருரைக்கு முன் வெளிநடப்பு செய்த எதிர்க் கட்சி உறுப்பினர்கள் மீதான வழக்கு.

(2) டாக்டர் எச். வி. ஹாண்டே, எம்.எல்.ஏ., மற்றும் "தென்னகம்" நாளிதழின் ஆசிரியர், வெளியிடுவோர், மற்றும் அச்சிடுவோர் மீதான உரிமை மீறல் வழக்கு.

(3) 21—11—1973 ஆம் நாளன்று, பேரவையில் டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்களின் நடத்தை குறித்த அவையுரிமை மீறல் வழக்கு.



## 1. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி

### (இ) அவையுரிமைக் குழுவின் அறிக்கைகள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதில் வேறு வேறு முறைகள் பின்பற்றப்படுவது குறித்து

THIRU K. T. K. TANGAMANI: Sir, on a point of order. I am raising it under Rule 191 (*a*) and (*b*) which is not complied with.

THIRU N. GANAPATHY: I am not moving any motion as the Chairman of the Committee.

THIRU K. T. K. TANGAMANI: Sir, in the past, many reports have been presented by the Committee. On a previous occasion this House did refer a particular issue to the Privileges Committee and that Committee had given its verdict, namely, that the Editor of 'Nathigam' should be brought before the bar of the House and reprimanded. Now I want to know whether any action has been taken at all and no action would be taken without a motion before the House. Sir, there may be certain reports where no action would be recommended and in such cases the report as it is would be accepted. If action is recommended, action will have to be taken. In the case of the 'Blitz' also the House referred certain issues to the Privileges Committee which had made certain suggestions. Sometimes, the Committee drops any action and sometimes they do recommend action. But if they recommend certain action the House must consider it through a motion. No such motion had been brought forward on those occasions. Generally what should be done is, as soon as the report is presented, a motion should be brought forward. I want to know whether motions relating to such cases are pending and what action is proposed to be taken in the matter.

THIRU N. GANAPATHY: Sir, may I make the position clear. As the Chairman of the Privileges Committee I have presented the reports of the Committee before the House to-day. Hon. Members would have ample opportunities to go through the reports and bestow their best attention on them and then move amendments whenever a motion is brought before the House. To-day I am not moving any motion and I propose to move it in the next session

DR. H. V. HANDE : My point of order is an important one. I would like to seek a clarification. In addition to what my hon. Friend, Thiru Tangamani has stated, I would like to point out that a similar situation arose when Thiru C. Subramaniam mentioned something and the whole matter was referred to the Privileges Committee. The matter was dropped because the House was prorogued. Now the issue under discussion was raised about two years ago and the House was prorogued several times. In spite of the fact that on several occasions the matter was dropped because the House was prorogued, why in this particular case the matter has been brought to the House. What is the criterion that guides the Chairman of the Committee or the House on this particular matter? Since the report has been presented in this House, the whole public would be knowing it and we would like to tell the public that on several occasions when the House was prorogued the matter was dropped and only now it has been brought before the House. What are the definite norms laid down in regard to privilege matters? What was the norm adopted in the case of Thiru C. Subramaniam? What was the norm adopted in the case of Thiru Nathigam Ramaswamy? What is the norm adopted in our case? What are the norms? What are the guidelines? We would like to have your considered ruling so that we could have a clear-cut idea.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : On a point of Order, Sir. Rule 191 (b) is clear : ' As soon as may be, after the report has been presented a motion in the name of the Chairman of the Committee or any member of the Committee may be made that the report be taken into consideration. Here the Chairman of the Privileges Committee had submitted the report. He has not moved any motion. He said that he had submitted the report and that after giving sufficient time for the hon. Members to go through the report, he would move a motion during the next sitting. But I would like to say that according to Rule 191 (b) any member of the Committee can gave a motion. It is not necessary that only the Chairman of the Privileges Committee should give the motion. But I think a motion has already been given by a member.



<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> யார் கொடுத்திருப்பது?

<u>திருமதி த. ந. அனந்தநாயகி :</u> திரு. சௌந்தரபாண்டியன் கொடுத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆபீஸ் இன்பார் மேஷன் . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மோஷன் அலவ் பண்ணுவதற்கு முன்னால் யாரும் வெளியே சொல்லக்கூடாது.

<u>திருமதி த. ந. அனந்தநாயகி :</u> அந்தமாதிரி விதி எதுவும் கிடையாது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அதுதான் விதி. மெம்பரே சொன்னால் கூட அது ப்ரிவிலேஜ் ஆகும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Suppose I have given a motion I can discuss with my friend saying 'I have given a motion to the Hon. Speaker but I do not know what will be the Speaker's decision and I am waiting for the decision of the Hon. Speaker.' I can talk to my friend like that. I do not think it is wrong.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நீங்கள் எல்லாம் சட்டம் படித்தவர்கள். தீர்மானத்திற்கு நோட்டீஸ் கொடுத்து பேரவைத் தலைவர் அதற்கு அனுமதி கொடுத்து இந்தப் பேரவைக்குக் கொண்டு வரும் வரையில் வெளியே சொல்லக்கூடாது. அந்த உறுப்பினரே கூட சொல்லக்கூடாது.

<u>திருமதி த. ந. அனந்தநாயகி :</u> விதி எங்கே இருக்கிறது?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அதுதான் விதி.

<u>திருமதி த. ந. அனந்தநாயகி :</u> நான் சொல்வது—

I can tell that to any member I meet in the lobby.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> லாபியில் உறுப்பினர்கள் என் வேண்டுமென்றாலும் பேசிக் கொண்டிருக்கலாம். அதையெல்லா இந்த அவையில் கொண்டு வந்து பேசுவது என்பது முறையல்ல.

[பேரவைத் தலைவர்] [1974 டிசம்பர் 23

திருமதி த. ந. அனந்தநாயகி: கேட்கக்கூடாதா? I am given to understand that some member has given a motion.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யாராவது கொடுத்திருக்கிறார்களா என்று கேளுங்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் கொடுத்திருக்கிறார்களா? What I want is information.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது கூடச் சொல்லக்கூடாது. யாராவது கொடுத்திருக்கிறார்களா என்றுதான் கேட்கவேண்டும். கொடுத்திருப்பதாகத் தெரிகிறது என்று கூடச் சொல்லக்கூடாது.

திருமதி த. ந. அனந்தநாயகி: யாராவது கொடுத்திருக்கிறார்களா? இன்பர்மேஷன் வந்தால் போதும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: அவ்வளவு கடுமையாக இருக்க வேண்டுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதிமுறைகளில் கடுமையாக இருந்தால் அவை நன்றாக நடக்கும். விதிமுறைகளில் கடுமையாக இருந்தால் அது பேரவைத் தலைவர், அமைச்சர்கள், உறுப்பினர்கள் அனைவருக்கும் நல்லது. நல்ல முறையில் பேரவை நடக்க உதவியாக இருக்கும்.

நம்முடைய பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் உரிமைக் குழுவின் அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். அறிக்கையின்மீது விவாதம் எழாது. அதன் மீது உரிமைக் குழுத் தலைவரோ அல்லது அதிலே இடம் பெற்றிருந்த உறுப்பினர்களோ மோஷன் கொடுத்தால் தான் விவாதிக்க முடியும். அப்படி ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர குழுவிலே இடம் பெற்றிருந்த மன்றத்திலுள்ள உறுப்பினர்களுக்கும் உரிமை உண்டு. அப்படிக் கொடுக்கப்பட்ட தீர்மானத்தின்மீது மன்ற உறுப்பினர்கள் யாரும் திருத்தம் கொடுக்க உரிமையுண்டு. பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் அறிக்கையை மட்டும் இப்போது அளித் திருக்கிறார்கள். அடுத்த கூட்டத்தில் தீர்மானத்தைக் கொண்டு வருவதாக அவர்களே சொன்னார்கள். அந்தக் குழுவிலே இடம் பெற்றிருந்த திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் கொடுத்த



1974 டிசம்பர் 23]

நோட்டீசைக் கூட அடுத்த கூட்டத் தொடரிலே எடுத்துக் கொள்ளலாம் என்ற முறையிலேதான் கொடுத்திருக்கிறார்கள். இந்தக் கூட்டத் தொடரிலேயே எடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை. அதுதான் நிலைமை.

இரண்டாவது, எந்த ஒரு அறிக்கையின்மீதும் பேரவைத் தலைவர் நடவடிக்கை எடுத்துக் கொள்ள முடியாது. பேரவைத் தலைவர் இப்படித் தீர்மானத்தைக் கொண்டு வந்துதான் தீரவேண்டுமென்று சொல்லக்கூடிய அளவுக்குத் தீர்ப்பளிக்கலாமா என்றால் அதற்கு விதி முறைகளில் இடம் இல்லை. அந்தத் தலைவரோ, அல்லது அந்தக் குழுவில் உள்ள உறுப்பினர்களோ விவாதிக்க வேண்டுமென்பதற்கான தீர்மானத்தைக் கொண்டு வரலாமே தவிர, பேரவைத் தலைவருக்கு அதிகாரம் எதுவும் இதிலே இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. T. K. TANGAMANI: When a report is submitted, our rules are clear. The Chairman necessarily must bring a motion that the action they had recommended should be implemented in a particular way.

அந்த மாதிரிக் கொடுத்ததற்குப் பிறகு எங்களுக்குத் திருத்தம் கொண்டு வருவதற்கு உரிமை இருக்கிறது. இன்றைக்கு வந்திருப்பதற்காகச் சொல்லவில்லை. பொதுவாக, நம்முடைய பிரிவிலேஜ் கமிட்டி ரிப்போர்ட் வந்து அது செயல்படாத நிலைமை இருக்கக்கூடாது. ஆகவேதான் 1971 ஆம் வருஷம் நம்முடைய சட்டமன்றம் ஆரம்பித்த பிறகு பிரிவிலேஜ் கமிட்டியில் ஏதாவது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சிபாரிசு செய்திருந்தால் அறிக்கையைக் கொடுத்த அன்றே தீர்மானத்தைக் கொண்டு வராது போனாலும் பிறகாவது அதன் பேரில் தீர்மானம் கொண்டு வருவதுதான் பிரிவிலேஜ் கமிட்டிக்குக் கொடுக்கக் கூடிய மரியாதையாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுவின் தலைவர்தான் தீர்மானத்தைக் கொண்டு வரவேண்டுமென்ற அவசியம் இல்லை. குழுவிலே இடம் பெற்றிருந்த உறுப்பினர்கள்கூட தீர்மானம் கொண்டு வர உரிமை உண்டு. குழுவிலே ஆளும் கட்சி உறுப்பினர்கள் மட்டும் இடம்பெறவில்லை. எதிர்க்கட்சி உறுப்பினர்களும் இடம் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் தீர்மானம் கொண்டுவருவதை யாரும் தடை செய்யவில்லை. தலைவர் அவர்கள்தான் தீர்மானம் கொண்டு வரவேண்டுமென்ற நிலை இல்லை. குழுவிலே இடம் பெற்றிருந்த எந்த உறுப்பினரும் கொண்டு வரலாம்; கொண்டு வந்து விவாதிக்கலாம்.

(8) அறிக்கைகள் அளித்தல்.

(அ) கால்நடை மருத்துவக் கல்வி, ஆராய்ச்சி மீதான மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைமீது அரசு எடுத்த நடவடிக்கை குறித்து.

THIRU THOPPUR THIRUVENGADAM: Sir, I rise to present the 27th report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report of Veterinary Education and Research.

(ஆ) தமிழ் நாடு காதி, கிராமத் தொழில் வாரிய கணக்குகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின அறிக்கை.

THIRU ALADI ARUNA: Sir, I rise to present the first report of the Committee on the Annual Accounts of the Tamil Nadu Khadi and Village Industries Board for the years 1960–61 to 1965–66.

திரு. கோவை செழியன்: பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன். முக்கியமான விஷயம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கிளாரிபிகேஷனுக்கு இடம் இல்லை.

THIRU KOVAI CHEZHIYAN: On a point of clarification. Sir, yesterday the Hon. C. Subramaniam, the Finance Minister of Government of India had spoken something important. அதைப் பற்றிக் கேட்கக்கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப் பற்றி கிளாரிபிகேஷன் கேட்பதற்கெல்லாம் இடம் இல்லை.

9. தகவல் கோரல்.

தமிழ் நாட்டிலுள்ள பஞ்ச நிலைமை குறித்து மத்திய நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் பத்திரிகையாளருக்கு அளித்த கருத்து.

திரு. கோவை செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான விஷயம். இந்தத் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே இந்தியாவினுடைய நிதியமைச்சரைப் பத்திரிகை நிருபர்கள் சந்தித்து



ஒரு பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறார்கள். அது சம்பந்தமாக ஒரு சந்தேகத்திற்கு முதலமைச்சர் அவர்களிடமிருந்து விளக்கம் கேட்க விரும்புகிறேன்.

பத்திரிகை நிருபர்களுடைய கூட்டத்தில் இந்தியாவினுடைய நிதி யமைச்சர் மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் பேசுகின்ற போது பத்திரிகை நிருபர்கள் "தமிழ் நாட்டில் பஞ்ச நிலை இருக்கிறது. அதற்கு எப்படி உதவி செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டபோது அவர்கள் சொல்லிய பதில் "டில்லியில் இருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள்தான் என்னிடத்தில் இதுபற்றிப் பேசினர். தமிழ்நாடு அரசாங்கத்திலிருந்து இதுபற்றி எந்தவிதமான கோரிக்கையோ, கடிதமோ வரவில்லை" என்று சொல்லியிருக்கிறார்கள்.

தமிழ்நாடு அரசாங்கத்தின் சார்பில் மத்திய அரசாங்கத்தை அணுகினார்களா, நம்முடைய கஷ்டங்களை அவர்களிடத்தில் சொன்னார்களா என்பதைத் தங்கள் மூலமாக முதலமைச்சர் அவர்களிடத்திலிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு நிதியமைச்சர் அவர்கள் சொன்னதாகச் சில கருத்துக்கள் பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. பத்திரிகைகளில் எந்த அளவுக்கு அவருடைய கருத்துக்கள் சரியாக வெளியிடப்பட்டிருக்கின்றன என்பதற்கு நான் உறுதியளிக்க முடியாது. ஏனென்றால், அவர் எவ்வளவு பணம் வேண்டுமென்ற விவரங்கள் இன்னும் வரவில்லை என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் பத்திரிகைகளில் தமிழ் நாடு அரசு கேட்கவே இல்லை என்று திரித்து வெளியிடும் தன்மையில் அந்தச் செய்திகள் சில பத்திரிகைகளில் வெளியிடப்பட்டிருக்கின்றன.

நான் இங்கே கண்டனத் தீர்மானம், நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஆகியவற்றின்மீது நடந்த விவாதத்திற்கு அளித்த பதிலிலே மிக விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். அது மட்டுமல்ல. ஒத்தி வைப்புத் தீர்மானத்திலே கூட விவரங்களைத் தந்திருக்கிறேன்.

பிரதமரை டில்லியில் சந்தித்தபோது கூட "1969-ம் ஆண்டை விட அதிகமான அளவு வறட்சி தமிழகத்தைத் தாக்கக்கூடும்; ஆகவே, அதைவிட அதிகமாக நீங்கள் உதவி புரிய வேண்டும்" என்று

தமிழ் நாட்டிலுள்ள பஞ்ச நிலைமை குறித்து மத்திய
நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள்
பத்திரிகையாளருக்கு அளித்த கருத்து



பிரதமரிடத்தில் நானும் தொழிலமைச்சர் அவர்களும் கூறியிருக் கிறோம். அவர்கள், விவரங்களை அனுப்பிய பிறகு பரிசீலிப்பதாகக் கூறியிருக்கிறார்கள்.

விவரங்களைச் சேகரிக்க வருவாய்த் துறை உறுப்பினர்கள் தமிழகத் தின் பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்று திரும்பியிருக்கிறார்கள். அவர்களுடைய அறிக்கை தயாராகிவருகிறது. இரண்டொரு நாட் களில் அமைச்சரவைக் கூட்டத்தில் அது விவாதிக்கப்பட்டு எந்தெந் தப் பகுதிக்கு எவ்வளவு தேவை, மொத்தமாக எவ்வளவு தேவை என்ற கணக்கை எல்லாம் பார்த்து விவரங்களை எல்லாம் மத்திய அரசுக்கு அனுப்ப இருக்கிறோம்.

இன்னும் அனுப்பவில்லை என்று மிகுந்த அக்கறையோடு கூறி யிருக்கும் மத்திய நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் மத்திய அரசு நம்முடைய கோரிக்கைகளை ஏற்றுக் கொள்வதற்கு பிரதமருக்கு ஆலோசனைகள் கூறுவார்கள் என்று நாங்கள் நம்பு கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(6) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இச்சட்ட முன் வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.



(இ) தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, இனாம் எஸ்டேட்டுகள்—சிறு இனாம்கள். (ஒழித்தல்—ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, இனாம் எஸ்டேட்டுகள்—சிறு இனாம்கள் (ஒழித்தல்—ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இச்சட்ட முன் வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஈ) தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 56/74).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, "தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 56/74) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்" என்று கோருகிறேன்.

1. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(இ) துணை நிதிக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்கு சட்ட முன்வடிவு மீது விவாதம் நடத்த அனுமதிப்பது குறித்து.

DR. H. V. HANDE: Sir, on a point of order. In view of an important statement made by the Hon. Chief Minister just now with regard to allotment of funds for the drought relief, I thought that we can have a discussion on the Appropriation Bill. Since the Appropriation Bill does not contain about certain aspects of the drought relief in the Bill, we thought that we can ask for clarification from the Hon. Chief Minister. There were occasions in which such important things were discussed at the time of passing the

[Dr. H. V. Hande] [1974 டிசம்பர் 23

Appropriation Bill. Whenever such important items came before the House, the discussion on the Appropriation Bill was utilised for that purpose. The Appropriation Bill was utilised to discuss a particular aspect. Now the Hon. Chief Minister has said that he has not yet collected the data required for the drought relief with regard to several districts. I want to know. . . . . .

MR. DEPUTY SPEAKER : Before you conclude, I would like to state that at the Business Advisory Committee it was decided that the passing of the Appropriation Bill was a formal one since the Demands for Grants were already voted by the House. It is a formal thing to pass the Appropriation Bill. Therefore, I do not think there is any point of order.

DR. H. V. HANDE : We want to make some reference in spite of the decision taken by the B.A.C. As far as the B.A.C. is concerned they have correctly advised. Now an important statement has been made by the Hon. Chief Minister. At the time when it was discussed at the B.A.C. it was not there. On a previous occasion when Thiru Govindaswami was Hon. Minister for Agriculture, I have discussed about an important item relating to the Veterinary College and a detailed answer was given. There are many such precedents. What we want to know is whether the Hon. Chief Minister has made a preliminary request to the Central Government. Let him say that he will take 10 or 15 days to make a preliminary report. Of course, it may not be possible for the Hon. Minister to make a statement summarily as to how much we require. Let him say the *ad hoc* amount that he is going to ask the Centre or the Prime Minister or the Finance Minister. Last time they had asked for a sum of Rs. 17 crores. At the first instance, we got 5 crores or something. Later on we got the balance. I want the Hon. Minister to state whether he has made any request to the Central Government.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஏற்கனவே சப்ளிமெண்டரி டிமாண்ட்ஸ் வந்தபோது சான்ஸ் கிடைக்கவில்லை. ஒருவர் ஐந்து நிமிடங்கள்தான் பேசலாம், மணி 1-க்கு கில்லட்டின் போடவேண்டு மென்று சொன்னார்கள். ஒவ்வொரு கட்சியிலும் ஒருவருக்குத்தான் சான்ஸ் தரப்பட்டது. எங்களுக்கு அதில் பேசுவதற்கே சான்ஸ் இல்லாமல் போய்விட்டது.



1974 டிசம்பர் 23]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் என் பொஸிஷனை க்ளியர் செய்து விடுகிறேன். B.A.C. ல் ஒரு மணிக்குள் முடிக்க வேண்டும் என்று தீர்மானம் செய்து முடிவிற்கு வந்த பிறகு நான் பேச இடம் கொடுக்கவில்லை என்று பேரவைத் தலைவர் அவர்களையோ அல்லது துணைத் தலைவரையோ குறை கூறுவதில் பிரயோஜனம் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: அப்ராப்ரியேஷன் பில்லிலாவது பேச டைம் கொடுக்க அரசாங்கம் முன்வரவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டைம் கொடுப்பது அரசாங்கம் அல்ல.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்த நிதி ஒதுக்கீடு மசோதா மீது விவாதம் தேவை இல்லை என்று அலுவல் ஆய்வுக் குழுவில் எல்லாத் தலைவர்களும் ஒத்துக்கொண்ட பிரகாரம்தான் அவை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. ஏதோ வெளியில், விவாதத்திற்கு நேரம் தரப்படாத ஒரு சூழ்நிலையை அரசாங்கம் உருவாக்கியதைப்போல் ஒரு குற்றச்சாட்டை, பழியைச் சுமத்துவது நல்லதல்ல. நேற்று முன் தினம் உறுப்பினர்கள் பேசிய பிறகு கில்லட்டின் என்ற வார்த்தையைப் பயன்படுத்தி ஒரு மணிக்குள்ளாக முடிந்துவிட்டது, பேச ஐந்து நிமிடங்களுக்கு மேல் இல்லை என்று குறிப்பிட்டார்கள். அப்போது அவை முன்னவர் எழுந்து விளக்கம் சொன்னார்கள். முதலிலேயே இரண்டு மூன்று நாட்கள் வைத்துக்கொள்ளலாம். கடைசியில்தான் ஒரு மணிக்கு கில்லட்டின். ஒரு நாள் போதும் என்றுதான் அலுவல் ஆய்வுக்குழுவில் முடிவெடுக்கப்பட்டது. அதனால்தான் கில்லட்டினே தவிர வேறு ஒன்றும் இல்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே : ஏற்கனவே, அப்ராப்ரியேஷன் பில் வரும்போது ஏற்கனவே பிஸினஸ் அட்வைஸரி கமிட்டி முடிவு செய்திருந்தாலும் கூட ஒரு அவசரமான பாயின்ட் வரும்போது அப்ராப்ரியேஷன் பில்லை பயன்படுத்திக் கொண்டு நாம் டிஸ்கஸ் செய்ததுண்டு. என் கேள்வி ஒன்றுதான். ட்ரௌட் ரிலீப் பண்டுக்கு ஏன் முதலிலேயே எமௌண்ட் வாங்கவில்லை. அதற்கு பதில் சொன்னால் முடிந்துவிட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : முதலில் வாங்கினோம். அது 71, இது 74.

## (6) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

### (ஈ) தமிழ்நாடு 1974-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 56/74) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2, 1, அட்டவணை, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்படவேண்டும் என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

## 4. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

### (ஆ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, பிரிவு 21 (3)-ன் கீழ் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"நிகழ்ச்சி நிரலில் உள்ள 3-வது இனத்தின்கீழ் (9), (10)-ஐ (3)க்கு பிறகு எடுத்துக்கொள்ளவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

THIRU K. T. K. TANGAMANI: There are about 9 Bills. Some order is given in the Agenda. I do not know whether the order has been given on the basis of the nature of importance of the Bill. I would like to know how may Bills are going to be disposed of to-day.



[பிற்பகல் 12-30]

## (6) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

### (உ) தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/1974).

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 53/1974) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

மோட்டார் வண்டிகளில் பயன்படுத்தப்படும் "ஸ்பார்க் பிளக்குகளும் (Spark plugs) வேளாண்மை, தொழில் காரியங்களுக்காகப் பயன்படுத்தப்படும் ஏனைய உள்முக எரிநிலைப் பொறிகளும் (Internal Combustion Engines) தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) முதல் விவர அட்டவணையைச் சேர்ந்த 3-வது பதிவின் கீழ் வரவில்லை என்றும், அவை மேற்சொன்ன விவர அட்டவணையின் 41-வது பதிவின் பொருள் வரம்பிற்குள் வருகின்ற மின்சாரப் பொருட்களாகும் என்றும் 18—11—1971 ஆம் நாளிட்ட தமது தீர்ப்பில் சென்னை, விற்பனை வரி மேல் முறையீட்டு நடுவர் மன்ற முதன்மைக் குழு கருத்து தெரிவித்துள்ளது. எனவே, "ஸ்பார்க் பிளக்குகளை" 15 சத விகித வரிக்குட்பட்ட பொருளாக, முதல் விவர அட்டவணையில் 3-9 என்னும் புதிய பதிவாகக் கொண்டுவர அரசு தீர்மானித்தது.

பாலியுரிதேன் நுரை (Polyurthane foam) ரப்பரிலிருந்து வேறுபட்ட பிளாஸ்டிக் வகையினைச் சேர்ந்ததால், மேற்சொன்னச் சட்டத்தின் முதல் விவர அட்டவணையைச் சேர்ந்த 40-வது பதிவின் கீழ் பாலியுரிதேன் நுரைப்பொருட்கள் வரமாட்டா என்று 9-7-1973 ஆம் நாளிட்ட தனது தீர்ப்பில் சென்னை, விற்பனை வரி மேல்முறையீட்டு நடுவர் மன்ற முதன்மைக் குழு கருத்து தெரிவித்துள்ளது. "பிளாஸ்டிக் நுரை, செயற்கை நுரை" ஆகியவற்றை மேற்கொள்ள சட்டத்தின் முதல் விவர அட்டவணையைச் சேர்ந்த

* 19—12—1974-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

40-வது பதிவின் கீழ்க் கொண்டுவர வேண்டும் என்று அரசுக்கு ஆலோசனை நல்கப்பட்டது. எனவே, மேற்சொன்ன சட்டத்தின் முதல் விவர அட்டவணையைச் சேர்ந்த 40-வது பதிவில் வரும் இனங்களை இதன் பொருட்டு விரிவாக்குவதென்று அரசு முடிவு செய்தது.

97 சதவிகிதத்திற்குக் குறையாத தூய அலுமினியம் அடங்கிய அலுமினியக் கலப்பு உலோகம், மேற்சொன்ன சட்டத்தின் முதல் விவர அட்டவணையைச் சேர்ந்த 64-வது பதிவின்கீழ் அதாவது, "அலுமினியப் பாளங்கள் என்பதன் கீழ் வருவதாகக் கருதப்படலாம்" என்றும் இதற்கு, இம்மாநிலத்தில் முதல் விற்பனை முனையில் 5½ சதவிகித (தற்போது 6 சதவிகிதம்) ஒரு முனைவரி விதிக்கத்தக்கதாகும் என்றும், 97 சதவிகிதத்திற்குக் குறைந்த தூய்மையுள்ள அலுமினியம் அடங்கிய அலுமினியக் கலப்பு உலோகம், இச்சட்டத்தின் கீழ் 2½ சதவிகித (தற்போது 4 சதவிகிதம்) பல முனைவரி விதிக்கத்தக்கதாகும் என்றும் கருதப்படலாம் என்ற விளக்கம் ஒன்றை அரசு வெளியிட்டது. மேற்சொன்ன விளக்கம் வெளியிடப்பட்டதற்குப் பிறகு உயர்நீதி மன்றம் வழங்கியுள்ள சில தீர்ப்புகளுக்கு இணங்கவும், நடைமுறையில் காணப்படும் குறிப்பிட்ட சில நிர்வாக இடர்ப்பாடுகள் காரணமாகவும், 65-வது சதவிகித அலுமினியம் இனத்தில் காணப்படும் "அலுமினியப் பாளங்கள்" என்பதில் அலுமினியப் பாளத்தில் எத்தனை அலுமினியப் பாளங்கள் அடங்கும் என்று கருதப்பட வேண்டுமெனக் கருதப்பட்டது. அதற்கிணங்க, முதல் விவர அட்டவணையின் 64-வது பதிவில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்குத் தற்போது அளிக்கப்பட்ட பொருள் விளக்கத்தில் வாசகத்தை மாற்றுவது என்று அரசு முடிவு செய்தது.

மேற்சொன்ன விவர அட்டவணையைச் சேர்ந்த 112-வது பதிவின் கீழ் வரும் "மூக்குக் கண்ணாடிகள், வெயில் காப்புக் கண்ணாடிகள் குளுமைக் கண்ணாடிகள் (goggles) சீர் செய்யப்படாத ஆடிகள், கண்ணாடி வில்லைகள், கண்ணாடிச் சட்டங்கள், இணைப்புகள், பாகங்கள், துணைப் பாகங்கள்" ஆகியவை இம்மாநிலத்தில் முதல் விற்பனை முனையில் 8 சதவிகித வரி விதிப்புக்கு உட்பட்டதாகும். இப்பதிவிற்கு தற்போதுள்ளபடி பொருள் விளக்கம் கூறுவதன் மூலம், பயன் துய்ப்போர் மூன்று அல்லது நான்கு நிலைகளில் வரி விதிக்கப்படுவதற்கு உட்படுவர் என்றும், மூக்குக் கண்ணாடிகளுக்குப் பல முனை வரி



விதிப்பு தொடர்ந்து விதிக்கப்பட்டு வரும் அண்டை மாநிலங்களுக்கு இவ்வர்த்தகத்தை மாற்றிக்கொள்ளக்கூடிய சாத்தியக் கூறு உள்ளது என்றும் முறையீடுகள் வந்தன. இந்த முறையீடுகளில் சிறிது நியாயமுள்ளது என்று அரசு கருதியது. சமூகத்திலுள்ள எல்லா நிலைகளிலும் உள்ள மக்களால் மூக்குக் கண்ணாடிகள் வாங்கப்படுவதால், மூக்குக் கண்ணாடிகளின் விலையில் இயன்ற வரையில் வரி குறைவாக இருக்கும் வண்ணம் "சீர் செய்யப்படாத ஆடிகள், கண்ணாடி வில்லைகள், வெற்றுச் சட்டங்கள்" என்பதை மேற்சொன்ன விவர அட்டவணையைச் சேர்ந்த தற்போதுள்ள 112-வது பதிவிலிருந்து நீக்குவதென்று அரசு முடிவு செய்தது.

பி.வி.சி. காப்புக் குழாய்கள், மேற்சொன்ன சட்டத்தின் முதல் விவர அட்டவணையைச் சேர்ந்த 41-வது பதிவின் கீழ் மின்சாரப் பொருளாகக் கருதப்பட்டு வந்தன. பி.வி.சி. காப்புக் குழாய்கள் பிற காரியங்களுக்கும் பயன்படுத்தப்படலாமாதலால் மேற்சொன்ன சட்டத்தின் முதல் விவர அட்டவணையைச் சேர்ந்த 41-வது இனத்தின் கீழ்வரும் பி.வி.சி. காப்புக் குழாய்களும் இணைப்புக் குழாய்களும் மின்சாரப் பொருட்களல்ல என்று 1388/1968 ஆம் எண்ணுள்ள நடுவர் மன்ற மேல் முறையீட்டில் விற்பனை வரி மேல் முறையீட்டு நடுவர் மன்றம் தீர்ப்புக் கூறியது. நடுவர் மன்றத்தின் கருத்துக்களை நீதி மன்றமும் உறுதிப்படுத்தியது. மாநில அரசு, விரும்பினால் கடந்த தேதியிலிருந்து செயலுக்கு வரும் வண்ணம் தொடர்புடைய சட்ட விதித்துறையைத் திருத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாமெனத் தீர்ப்பளித்து தன் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட தனி அனுமதி மனுவை உச்ச நீதி மன்றம் தள்ளுபடி செய்தது. எனவே, "பி.வி.சி. காப்புக் குழாய்கள், இணைப்புக் குழாய்கள்" மேற்சொன்ன சட்டத்தின் முதல் விவர அட்டவணையில் 136 என்னும் தனி பதிவின் கீழ்க் கொண்டுவரப்படலாம் என்று அரசு முடிவு செய்தது.

மேற்கூறிய தீர்ப்புகளை ஒட்டி, மேற்சொன்ன சட்டத்தின் முதல் விவர அட்டவணையைத் திருத்தி, இதற்காக தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 59-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்கீழ் அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.

மேற்சொன்ன சட்டத்தின் 59-வது பிரிவின் (2) உட்பிரிவின்படி மேற்கூறிய அறிவிப்புகளுக்குப் பதிலாகச் சட்ட வரைவு ஒன்று, அந்த அறிவிப்புகள் வெளியிடப்பட்ட நாளுக்குப் பின் நடைபெறும் சட்டப்

பேரவையின் அடுத்த கூட்டத் தொடரில், முகவுரைக்கப்பட வேண்
யுள்ளது. எனவே, இம்மாமன்றத்தின் முன் இச்சட்ட முன்வடி
கொண்டுவரப்பட்டுள்ளது.

இப்பிரேரணையை இம்மாமன்றம் ஏற்குமாறு கேட்டுக்கொள்
கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் உதவி சபாநாயக
அவர்களே, இந்த பொதுவிற்பனை வரிச் சட்டம் 1959-ம் ஆண்
கொண்டுவரப்பட்ட சட்டம். இந்த பொதுவிற்பனை வரிச் சட்டத்தி
அவ்வப்போது திருத்தங்கள் கொண்டு வந்து கொண்டே இருக்கிறீ
கள். ஆண்டுக்கு இரண்டு முறை திருத்தம் வருகிறது. ஒரு மு
கம்பௌண்டிங் பெசிலிடீஸ்க்காக சட்டம் வருகிறது. அதே போ
பல முனை வரி போடுவதா, ஒரு முனை வரி போடுவதா என்
பிரச்சினை வருகிறபோது, ஒரு முனை வரி சலுகை கொடுத்து, பல மு
வரியைப் பல மடங்கு அதிகரித்து விடுகிறீர்கள். இதிலே சி
பொருள்களுக்கு ஒரு முனை வரி என்றும் சில பொருள்களுக்கு வரி
எக்கச்சக்கமாக ஏற்றி விடுகிறீர்கள்.

நாங்கள் பல முறை இந்தச் சட்டமன்றத்தில் எடுத்துச்சொல்
இருக்கிறோம். உணவுப்பொருள்களுக்கு தயவு செய்து விற்ப
வரியை ரத்து செய்யுங்கள். விற்பனை வரியை ரத்து செய்தா
உணவுப்பொருள் வாங்கும் ஏழைகளுக்கு வசதியாக இருக்கு
இன்று கூட்டுறவுக் கடைகளில் கூட உணவுப் பொருள்களுக்கு விற்ப
வரி வசூலிக்கிறார்கள். அதன் காரணமாக சில பேர் உண
பொருள்களை கூட்டுறவுக் கடைகளில் வாங்காமல் தனியார் கு
களில் சென்று வாங்குகிறார்கள். அங்கே அவர்கள் பில் போடாம
கூட பொருள்களை விற்கிறார்கள். இப்படி உணவுப்பொருள்களுக்
வரி விலக்கு அளிக்காததால் கூட்டுறவுத் துறைக்கு வருகிற வியாபா
மும் போய், உங்களுக்கு வரவேண்டிய வரியும் வராமல் போ
விடுகிறது. ஆகவே, உணவுப் பொருள்களுக்கு வரி விலக்
கொடுத்து கூட்டுறவுத் துறைக்கு வசதி செய்து தாருங்கள் என்
கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே நாங்கள் எத்தனையோ கருத்துக்கள் கூறியிருந்
போதிலும், அரசின் வசதிக்கு ஏற்ப அடிக்கடி சில திருத்தங்களை
கொண்டு வந்து கொண்டிருக்கிறார்கள். நான் என்ன சொல்கிறே



என்றால், இந்த விற்பனை வரி என்பது உங்களுக்கு ஒரு "கற்பக விருட்சம்". உங்களுக்கு வரும் வருமானத்தில் அதிக பங்கு இதிலிருந்துதான் வருகிறது.' இந்த சேல்ஸ்டாக்ஸ் சட்டம் 1959-ம் ஆண்டு வந்தது. அதற்குப் பிறகு எத்தனையோ மாற்றங்கள் இந்தச் சமுதாயத்தில் ஏற்பட்டு இருக்கிறது. அன்று ஒரு ரூபாய் விற்ற பொருள் இன்று நான்கு ரூபாய் விற்கிறது. பொருள்களின் விலை அதிகமான அளவு இருந்தபோதிலும் லாபம் அதிக அளவு இல்லை. வியாபாரிகளின் நிலைமையைப் பார்க்கிறபோது அவர்களுக்கு நிறைய சங்கடங்கள் இருக்கின்றன. அவர்களும் அவ்வப்போது மாநாடுகள் போட்டு, தீர்மானம் போட்டு அனுப்புகிறார்கள். அவற்றை உங்களுக்கு எதுஎது பிடித்தமோ அவற்றை ஏற்று நிறைவேற்றுகிறீர்கள். நான் கூற விரும்புவது என்னவென்றால், இந்த 1959-வது வருஷத்திய சட்டத்தை நல்ல வகையில் ஆராய ஒரு தனி குழு போட்டு, "காம்பிரஹென்சிவ்வாக" ஒரு ஆக்ட் கொண்டு வாருங்கள். (மணியடிக்கப்பட்டது) நான் ஒரு உறுப்பினர் தான் இந்த மசோதாவில் பேசுகிறேன். நேரம் கொஞ்சம் கொடுங்கள்.

ஏன் இதைச்சொல்கிறேன் என்றால், ஒரு காலத்தில் தேங்காய்க்கு வரி போட்டீர்கள், பிறகு எடுத்தீர்கள். எதற்காக வரி போடுகிறீர்கள், எதற்காக எடுக்கிறீர்கள் என்றே தெரியவில்லை. எனக்கு என்ன தோன்றுகிறது என்றால், யார் யாருக்கு எங்கெங்கே வசதிகள் இருக்கிறதோ அங்கங்கே அதைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள்.

இப்படி யார் யாருக்கு என்னென்னப் பிரச்சினையில் தனிப்பட்ட முறையில் கஷ்டம் வருகிறதோ அவற்றைக் கருத்தில் கொண்டு சட்டத்திருத்தம் கொண்டு வராமல், ஆர அமர யோசித்து, இந்த சமுதாயத்திற்கு, வியாபாரிகளுக்கு, பயன்படுத்துவோருக்கு, வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கு வசதியாக இருக்கும் வகையில் இந்தச் சட்டத்தில் ஒட்டுமொத்தமான ஒரு திருத்தத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே அரசு போர்ட் மெம்பர் ஒருவரைப் போட்டு, இது குறித்து ஆராயச் சொல்லி இருக்கிறது. அவருடைய அறிக்கை என்னவாயிற்று என்று தெரியவில்லை. ஆகவே, இப்படிப்பட்ட ஒரு புதிய விற்பனை வரிச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். இப்போது இருக்கும் சட்டத்தில் என்ன கஷ்டம் என்ன சிரமம் இருக்கிறது என்பதை ஆராய்ந்து

பார்த்து, இப்படி துண்டு துண்டாக சட்டம் கொண்டுவராமல் ஒட்டு மொத்தமாக புதியதொரு சட்டம் கொண்டு வர அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இன்று கொண்டு வரப்பட்டிருக்கும் திருத்தத்தின் பேரில் சொல்லக்கூடிய விஷயங்கள் சுருக்கமாக இருந்தாலும்கூட, ஏற்கனவே எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் சொன்னது மாதிரி இந்த சேல்ஸ் டாக்ஸ் சம்பந்தமாக ஒரு தனிக் குழு அமைக்கப்பட்டு அவர்களுடைய சிபார்சுகள் எல்லாம் அரசாங்கத்திற்கு கொடுக்கப்பட்டு இருப்பதாக அறிகிறேன். அந்த சிபார்சுகளின் பேரில் இதுவரையில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியவில்லை.

சேல்ஸ் டாக்ஸ் இம்மாதிரியான சட்டங்களைப் பொறுத்த வரையில் முழுமையான கண்ணேட்டம் அரசுக்கு ஏற்படவேண்டும். அதுவும் விற்பனை வரிமூலமாக இன்றைக்கு 100 கோடி ரூபாய்க்கு அதிகமாக வருமானம் வந்துகொண்டிருக்கிறது. ஏதோ அந்த நேரத்தில் வரக்கூடிய சில விஷயங்களை மட்டும் வைத்துக்கொண்டு, உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு, மற்ற தீர்ப்புகளை வைத்துக்கொண்டு, அந்தத் தீர்ப்புகளில் எழுப்பப்பட்ட விஷயங்களை மட்டும் அரசாங்கம் சமாளிப்பதற்கு ஒரு திருத்த மசோதா கொண்டுவருகிற முறையை கண்டிப்பாக கைவிடவேண்டும். ஆகவே, இன்றைக்கு இந்த மசோதாவின் பேரில் அமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையை நிகழ்த்தக்கூடிய காலத்தில் ஏற்கெனவே ஸேல்ஸ் டாக்ஸ் கமிட்டி போட்டிருக்கிருேம், அந்தக் கமிட்டியின் நிலை என்ன, அவர்களின் சிபார்சுகள் நாம் ஒத்துக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றனவா, மத்திய சர்க்கார் போட்டிருக்கிற சட்டத்திற்கும் இதற்கும் ஏதாவது முரண்பாடு இருக்கிறதா, எந்த முறையில் பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லி, ஸேல்ஸ் டாக்ஸ் சம்பந்தப்பட்டவரையில் எவ்வளவு சீக்கிரம் ஒட்டுமொத்தமான ஒரு மசோதாவைக் கொண்டுவரமுடியும் என்பதையும் சொன்னல் தான் ஸேல்ஸ் டாக்ஸினல் பாதிக்கப்படக்கூடியவர்கள் அல்லது ஸேல்ஸ் டாக்ஸை ஏமாற்றிக்கொண்டிருப்பவர்கள் இவர்களுக்கெல்லாம் கூட ஓரளவுக்கு தெளிவு ஏற்படக்கூடிய நிலை இருக்கும் என்ற காரணத்தினல், ஒரு முழுமையான மசோதாவை இப்பேர்ப்பட்ட தலைப்பின் கீழ் கொண்டு வரவேண்டியது அவசியம் என்பதை நான் வலியுறுத்துகிறேன்.



இந்த மசோதாவில் கொண்டு வந்திருக்கக்கூடிய கருத்துக்களுக்கு எல்லாம் பெரிய அளவுக்கு எதிர்ப்பு தெரிவிக்க முடியாத நிலை இருந்தாலும், கூடிய சீக்கிரம் முழுமையான மசோதா கொண்டுவர வேண்டும் என்று எங்களுடைய கட்சியின் சார்பில் அந்தக் கருத்தை வற்புறுத்தி அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்த அவையின் முன்னல் இருக்கிற இந்த திருத்த மசோதா ஸேல்ஸ் டாக்ஸ் ஆக்டில் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரத்தின் அடிப்படையில் தான் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஜெனரல் ஸேல்ஸ் டாக்ஸ் ஆக்ட் செக்ஷன் 59-ல் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது.

(1) ' The Government may, by notification, alter, add to or cancel any of the Schedules.

(2) Where a notification has been issued under sub-section (1) there shall, unless the notification is in the meantime rescinded, be introduced in the Legislature, as soon as may be, but in any case during the next session of the Legislature following the date of the issue of the notification, a Bill on behalf of the Government, to give effect to the alteration, addition or cancellation, as the case may be, of the Schedules specified in the notification, and the notification shall cease to have effect when such Bill becomes law, whether with or without modifications, but without prejudice to the validity of anything previously done thereunder.

Provided that if the notification under sub-section (1) is issued when the Legislature is in session, such a Bill shall be introduced in the Legislature during that session:

Provided further that where for any reason a Bill as aforesaid does not become law within six months from the date of its introduction in the Legislature, the notification shall cease to have effect on the expiration of the said period of six months.

(3) All references made in this Act to any of the Schedules shall be considered as relating to the Schedules as for the time being amended in exercise of the powers conferred by this section . . . . .'

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1974 டிசம்பர் 23

இந்தத் திருத்தங்கள் ஏன் கொண்டுவரப்படுகின்றன என்பதை ஒரு வாதமாக எழுப்பினார்கள். நாம் சட்டத்தைக் கொண்டுவரும் பொழுது சில பொருள்களின் மீது இவ்வளவு பெர்சண்ட் வரி விதிக்கிறோம் என்று குறிப்பிட்டு சட்டம் கொண்டு வருகிறோம். அந்த சட்டத்தின் விளக்கங்கள் பற்றி நீதிமன்றத்திலும், அப்பெலேட் ட்ரிப்யூனலிலும் எழுப்பப்படும்பொழுது அவைகளுக்கு நீதிமன்றங்கள் சில விளக்கங்களைத் தருகிறார்கள். ஆகவே, நம்முடைய சட்டத்திலுள்ள இன்டென்ஷனை கிளியர் செய்வதற்கு, தெளிவுபடுத்துவதற்குத் தான் இந்தத் திருத்தங்கள் கொண்டுவரப்படுகின்றனவே தவிர வேறு அல்ல. சில பொருள்களுக்கு நாம் ஒரு விளக்கம் தருகிறோம். நீதிமன்றம் ஒரு விளக்கம் தருகிறது. நம்முடைய விளக்கம் தெளிவாக இருக்கவேண்டும் என்பதற்காகத் தான் இது போன்ற திருத்தங்கள் கொண்டுவரப்படுகின்றன. இந்தத் திருத்தங்கள் அவசியமான திருத்தங்கள். நாம் கொண்டுவர இருக்கிற திருத்தங்களை அரசாங்க ஆணையின் மூலமாகக் கொண்டுவரலாம். அப்படி உத்தரவுகள் மூலம் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டால், 6 மாத காலத்திற்குள் அவை சட்டமாக்கப் படவேண்டும் என்ற நிலை இருக்கிற காரணத்தினால் இந்தத் திருத்த மசோதா இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கிறது. அரசுக்கு வருமான இழப்பு ஏற்பட வேண்டும் என்று யாரும் எதிர்பார்க்கமாட்டார்கள். அரசுக்கு வருமான இழப்பு ஏற்படாத நிலைமைக்குத் தான் இந்தத் திருத்தம் கொண்டுவரப்படுகிறது.

இதிலே ஒரு முக்கியமான விவாதத்தைக் கிளப்பினார்கள். ஸேல்ஸ் டாக்ஸ் பற்றி ஒன் மேன் கமிஷன் போடப்பட்டதே, அதனுடைய சிபார்சுகள் என்ன ஆயிற்று என்று கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒன்றை மறந்து விட்டார்கள். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் வரவு-செலவுத் திட்ட அறிக்கையிலேயே சொன்னார்கள். ஒன் மேன் கமிஷன் அறிவித்த 59 பொருள்களுக்கு ஒரு முனை வரி கொண்டுவரப்படும் என்று அறிவித்தார்கள். அது தான் அந்தக் கமிஷன் அறிக்கையின் முக்கியமான பகுதி. ஸிங்கிள் பாயின்ட் டாக்ஸ் பற்றி வியாபாரிகளுக்குத் தெரியும். அதனால் எந்த அளவுக்கு அவர்கள் பயன்பெற்றிருக்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். அது இந்த மன்றத்தில் அறிவிக்கப்பட்ட ஒரு முக்கியமான முடிவு. அந்த கமிஷனுடைய ரிபோர்ட்டின் அடிப்படையில்தான் இது செய்யப்படுகிறது.



1974 டிசம்பர் 23] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

ஒன் மேன் கமிஷன் பல சிபார்சுகளைச் செய்திருக்கிறார்கள். குறிப்பாக மக்கள் தொடர்பு அதிகாரி நியமிக்கப்படவேண்டும் என்று சிபார்சு செய்திருக்கிறார்கள். அம்மாதிரி ஒரு அதிகாரியை நியமித்திருக்கிறோம். இன்னும் இந்த விற்பனை வரி இலாகாவில் என்னென்ன மாற்றங்கள் செய்யப்படவேண்டும் என்று சிபார்சு செய்திருக்கிறார்களோ, அவைகளெல்லாம் அவ்வப்பொழுது பரிசீலனை செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் இன்னொன்று சொன்னார்கள். ஒட்டு மொத்தமாக ஒரு சட்டம் கொண்டுவந்தால் என்ன என்று கேட்டார்கள். நடைமுறையில் சிக்கல்கள் ஏற்படும்பொழுது தான், கஷ்டங்களை உணரும்பொழுது தான், நடைமுறையில் இருக்கக்கூடிய சிக்கல்களை தவிர்ப்பதற்கு திருத்தங்களைக் கொண்டு வரவேண்டும். அரசின் ஆணைகளின் மூலமாகவும் திருத்தங்கள் மூலமாகவும் தேவையான மாற்றங்கள் அவ்வப்பொழுது செய்யப்படுகின்றன. எனவே, சட்டத்தின் அடிப்படையில் தான் காரியங்கள் செய்யப்படுகின்றன. எனவே, இந்தத் திருத்த மசோதாவை இந்த மாமன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 53/74) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இச் சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(ஊ) தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 54/1974).

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே,

" தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 54/1974) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் "
என முன்மொழிகிறேன்.

வரி ஏய்ப்பைத் தடுப்பது, நிருவாகச் சங்கடங்களைக் குறைப்பது என்னும் இரு குறிக்கோள்களையும் எய்தும் வகையில் கேளிக்கை வரி விதிப்புகள் எவ்வாறு இணக்க முறையில் உடன்பட்டுத் தீர்க்க அனுமதிக்கப்படலாம் என்னும் கருத்து அரசின் நாட்டத்தில் இருந்து வந்துள்ளது.

தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு கேளிக்கை வரி உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்தச்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 38/1974) மூலம், கேளிக்கை வரி விதிப்பை இணக்க முறையில் உடன் பட்டுத் தீர்க்கும் திட்டம் ஒன்றை 1974 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14 ஆம் நாளிலிருந்து அரசு செயலுக்குக் கொண்டுவந்தது. அதன்மூலம் பேரூராட்சிகளிலும், ஊராட்சிகளிலும் அமைந்துள்ள டூரிங் திரைப்படக் கொட்டகைகள் தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1939) தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 52/1961) ஆகியவற்றின் விதி முறைகளுக் கிணங்க வரிகளைச் செலுத்துவதற்குப் பதிலாக, இவை இணக்க முறை வரி விதிப்புக்கு இசைய விருப்பம் தெரிவித்தால், பேரூராட்சியில் அமைந்துள்ளவை ரூ. 45 வீதமும், ஊராட்சியில் உள்ளவை ரூ. 30 வீதமும் வரி செலுத்துமாறு அமைந்துள்ளது. தற்போது, ஊராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள டூரிங் திரைப்படக் கொட்டகைகளுக்கும் (ஓரளவு நிலையான திரைப்பட அரங்குகள் உட்பட நிலையான திரைப்பட அரங்குகளுக்கும், இணக்க முறையில் வரி விதிப்பை உடன்பட்டுத் தீர்ப்பதற்கான திருத்தத் திட்டம் ஒன்றைக் கொண்டு வர அரசு முடிவு செய்துள்ளது.

* 19—12—1974-ம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.





இணக்க முறையில் உடன்பட்டுத் தீர்க்கும் வரியானது, திரைப்பட அரங்கின் மொத்த வசூல் திறனில் குறிப்பிட்ட சத வீத அளவை யொட்டி கீழ்க்காணும் வீதங்களில் இருக்க வேண்டுமென முடிவு செய்யப்பட்டுள்ளது :—

| | ஊராட்சிகள் | பேரூராட்சிகள் |
|---|---|---|
| [1] | [2] | [3] |
| தற்காலிகத் (டூரிங்) திரைப்பட அரங்கு. | திரைப்பட அரங்கின் மொத்த வசூல் திறனில் 10 சத வீதம். | திரைப்பட அரங்கின் மொத்த வசூல் திறனில் 15 சத வீதம். |
| நிலையான திரைப்பட அரங்கு (ஓரளவு நிலையான திரைப்பட அரங்கு உட்பட). | திரைப்பட அரங்கின் மொத்த வசூல் திறனில் 15 சத வீதம். | திரைப்பட அரங்கின் மொத்த வசூல் திறனில் 20 சத வீதம். |

இருப்பினும் மேலே வரையறுத்துள்ளவாறு இணக்க முறையில் உடன்பட்டுத் தீர்க்கப்படும் வரியானது, 1973–74 ஆம் ஆண்டில் காட்சியொன்றுக்குச் செலுத்தத்தக்க வரிகளின் சராசரிக்குக் குறையாமல் இருக்க வேண்டுமெனவும் நிபந்தனைக்குட்பட்டே, அவ்வாறு வரி செலுத்துதல் அவ்வத்திரைப்பட அரங்குகளின் விருப் பத்திற்கு விடப்படும்.

1974–75 ஆம் நிதியாண்டின்போது, அமைக்கப்பட்டுச் செயல் படும், அல்லது, அதன் பின்னர் அமைக்கப்பட்டு செயல்படலாம், திரைப்பட அரங்கு ஒன்றின் நேர்வில் அந்தத் திரைப்பட அரங்கு அமைக்கப்பட்டுச் செயல்படும் நிதியாண்டின்போது செயலில் உள்ள பல்வேறு வரி விதிப்புகளுக்கிணங்கவே வரிகள் செலுத்தப்பட வேண்டியிருக்கும். அதற்கு அடுத்துவரும் நிதியாண்டுகளுக்கு மட்டுமே, இணக்க முறையில் உடன்பட்டுத் தீர்க்கும் வரி விதிப்பு அனுமதிக்கப்படும்.

தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு 10-வது சட்டத்தின் 6-வது பிரிவு தற்போதுள்ளபடி, தனது விதிமுறைகள் பொருந்தும் வரம்பெல்லையி லிருந்து 5, 5 A பிரிவுகளின்கீழ் வரிகளை இணக்க முறையில் உடன் பட்டுத் தீர்க்க அனுமதிக்கப்படும் திரைப்பட அரங்குகளை விலக்கு கிறது. இது காட்சி அனுமதிச் சீட்டின் மூலம் அந்தத் திரைப்பட அரங்குகள் மக்களைக் காட்சிக்கு அனுமதிக்க வேண்டும் என்ற விதிப் பதிலிருந்தும், பிணைய வைப்புத்தொகை செலுத்துவதிலிருந்தும்

அவற்றுக்கு விலக்களிப்பதற்கு ஒப்பாகும். சட்டத்தின் 5, 5-ஏ-வது பிரிவுகளில் சொல்லப்பட்டுள்ள திரைப்பட அரங்குகளுக்கும் சட்டத்தின் 6-வது பிரிவைச் சேர்ந்த (1), (1-ஏ) உட்பிரிவுகளின் விதித்துறைகள் பொருந்தச் செய்ய வேண்டுவது அவசியம் எனக் கருதப்படுகிறது. அதற்கிணங்க, இச்செயல் நோக்கத்துக்காக, சட்டத்தின் 6-வது பிரிவைச் சேர்ந்த (1), (1-ஏ) உட்பிரிவுகளைத் திருத்தக் கருதப்பட்டுள்ளது.

சீர்வளி வசதியுடைய திரைப்பட அரங்குகள், சீர்வளி வசதியுடைய சிறிய திரைப்பட அரங்குகள், சீர்வளி வசதி செய்யப்படாத திரைப்பட அரங்குகள் ஆகியவை தொடர்பாக, அவற்றில் திரைப்படம் காட்டுதல் குறித்த வரியின்மீது கூடுதல் மேல்வரி விதித்து வசூலிக்க சட்டத்தின் 4-சி பிரிவு வகை செய்கிறது. ஆனால் ஒரு பகுதி சீர்வளி வசதியுடைய திரைப்பட அரங்குகள், சீர்வளி வசதி செய்யப்படாத திரைப்பட அரங்குகள் ஆகியவைபற்றி அதில் திட்டவட்டமான குறிப்பு எதுவும் இல்லை. அத்தகைய திரைப்பட அரங்குகளின் மீது கூடுதல் மேல்வரி விதித்து வசூலிப்பது குறித்து நிலைமையைத் தெளிவுபடுத்தும் பொருட்டு, சட்டத்தைத் தக்கவாறு திருத்த கருதப் பட்டுள்ளது.

சட்டத்தின் 3-வது பிரிவின் “ உள்ளாட்சி மன்றம் ” என்ற சொற்களின் பொருள் விளக்கத்தில் “ நகரியக் குழுக்கள் ” சேர்க்கப்படவில்லை. அப்பொருள் விளக்கத்தில் நகரியக் குழுக்களும் சேர்க்கப்படும் வகையில் அதனை விரிவுபடுத்தக் கருதப்பட்டுள்ளது.

தலைவர் அவர்களே, பேரவை இதனை ஏற்கவேண்டுமென வேண்டிக்கொள்கிறேன்.

திரு. கோவை செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்திற்கு நான் ஒரு திருத்தம் தந்து இருக்கிறேன். இந்த சட்டம் முழுவதும் நல்ல முறையிலே ஆராய்ந்து ஒரு முடிவு எடுப்பதற்காக ஒரு செலக்ட் கமிட்டி ஒன்று அமைக்க வேண்டுமென்று ஒரு திருத்தம் கொண்டு வந்து இருக்கிறேன். சென்ற முறை இதே சட்ட மன்றத்தில் இது சம்பந்தமான . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருத்தத்தை பிரபோஸ் பண்ணிவிட்டு, செகண்ட் பண்ணிய பிறகு பேசுங்கள்.





THIRU KOVAI CHEZHIAN : Sir, I move the following amendment :—

“ That the Tamil Nadu Entertainments Tax (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 54 of 1974) be referred to a Select Committee consisting of members to be mentioned later ”.

DR. H. V. HANDE : Sir, I second the amendment.

திரு. கோவை செழியன் : என்னுடைய இந்தத் திருத்தத்தின்மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். சென்ற முறை இந்தச் சட்ட மன்றத்திலே இதே பில் வருகின்றபோது இந்தக் கருத்தை மிக விரிவாகப் பேசி இருக்கிறேன். இன்றைக்கு இப்போது நான் பேசுகிறேன் என்று சொன்னால் அண்ணா தி.மு.க. சார்பிலே பேசுகிறேன் என்று தயவு செய்து யாரும் எடுத்துக் கொள்ளக் கூடாது என்று முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன். நான் அண்ணா தி.மு.க. உறுப்பினர்தான் என்றாலும் அனைத்து எதிர்க் கட்சிகளும், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் விரும்புகிற ஒரு கருத்தைத் தான் நான் சொல்கிறேன். இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பம் இந்தச் சட்ட மன்றத்திலே இதற்குமுன் வந்து இருக்காது என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் சொல்லப் போகிற பதில் எதிர் கட்சியினர் அண்ணா தி.மு.க. மற்ற எதிர்கட்சிக்காரர்களுக்கு விரோதமாக இருக்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோவை செழியன் : மாண்புமிகு முதலமைச்சர் எதிர்க் கட்சிக்காரர்களுக்கு மரியாதை தருகிறார்கள் என்று கேட்பதற்கு நல்ல வாய்ப்பு. நான் சொல்கிற கருத்து நியாயமானது, எடுத்துக் கொள்வார்கள் என்ற நம்பிக்கைக்குப் பிறகு ஏற்படுகிற காரணத்தால்தான் இந்தக் கருத்தை நான் சொல்கிறேன். சென்ற முறை இந்த விவாதம் இங்கே வருகின்றபோது நான் சொல்கிற போது சொன்னேன். பொதுவாக இந்த என்டர்டெயின்மெண்ட் டாக்ஸில் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட மாதிரி எவேஷன் நடந்திருந்தால் அதைத் தடுப்பதற்காக ஒரு புதிய சட்டம் கொண்டு வரவேண்டுமென்று சொன்னார்கள். இந்த எவேஷனை தடுப்பதற்கு என்ன ஒரு மாற்று என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த விவாதம்

இங்கே வருகின்ற இந்த நேரத்திலே 1972 என்று நினைக்கிறேன், இந்த அரசாங்கம் இது சம்பந்தமாக ஒரு அறிக்கை வெளியிடுவதற்காக திரு. எஸ். பி. சீனுவாசன் என்பவரை அழைத்தது. இந்த தியேட்டர் வரிகள் எந்த வகையில் அமைய வேண்டும் என்று ஆராய்ந்து ஒரு ரிபோர்ட் தர வேண்டுமென்று அரசாங்கம் அந்தக் குழுவைப் போட்டு இருந்தது. அந்த ரிபோர்ட் இங்கே இருக்குமானால் அங்கத்தினர்களுக்கு மிகவும் உதவிகரமாக இருந்து இருக்கும். நான் சென்ற முறை சொன்னேன். நீங்கள் என்ன வரி வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்களோ அந்த வரி வருவதற்கு வழிகளை எல்லோரும் சேர்ந்து ஆராயவேண்டும் என்று சொன்னபோது முதலமைச்சர் அவர்கள் டூரிங் டாக்கீஸுகளுக்கு ஒரு முறையும், மற்றும் உள்ள தியேட்டர்களுக்கு ஒரு முறையும் கொண்டு வந்தார்கள். இந்த வரி மிக அதிகமானது. அதிகமானது மட்டுமல்ல. இந்த வரி எப்படி எவேஷன் ஆகிறது, எப்படி ஏமாற்றுகிறார்கள், என்று கூறி புதிய சட்டம் கொண்டுவருகிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது நிறைவேறவில்லை. மறுபடியும் வரி ஏமாற்றுவதற்கான வாய்ப்புகள் உண்டாகிற அளவுக்கு பில் அமைந்து விட்டது என்பதைத் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற முறை செலக்ட் கமிட்டி போட வேண்டுமென்று சொன்னேன். அப்படிப் போட்டு இருந்தால் இன்றைக்கு மறுபடியும் இந்த பில் இந்த மன்றத்திற்கு வருகிறது என்று சொல்லிர்களானால் அதனால் இந்தச் சட்டத்தில் குறை ஏற்பட்டுவிட்டது என்பதுதான் பொருளாகும்.

நான் இதை ஒரு சின்ன உதாரணத்துடன் குறிப்பிடுவதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்ற முறை இந்தச் சட்ட மன்றத்திலே கொண்டு வந்தபோது சட்டம் போட்டு டூரிங் டாக்கீஸுக்கு ஒரு முறை, செமி பெர்மணண்ட் டாக்கீஸுக்கு ஒரு முறை என்று கொண்டு வந்தார்கள். அதனால் அரசாங்கத்திற்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டது என்பதை ஒரு சின்ன உதாரணம் மூலமாக விளக்கிச் சொல்ல வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். சமீபத்தில் ஒரு புதிய படம் ஒன்று பொள்ளாச்சியில் திரையிடப்பட்டது. அது நம்முடைய அருமை நண்பர் மாண்புமிகு அரங்கண்ணல் அவர்கள் எடுத்த படம். அது பொள்ளாச்சியிலே வெளியிடப்படுகிறது. அது வெளியிட முயற்சி செய்தபோது பர்மனெண்ட் தியேட்டர் கிடைக்கவில்லை. ஆகவே அந்தப் பகுதியில் உள்ள டூரிங் டாக்கீஸில் போட்டார்கள். தியேட்டரில் போட்டால் எந்த அளவு



பணம் வருமோ அந்த அளவு பணம் வரவில்லை என்பது என்னுடைய கருத்து. இந்த டூரிங் டாக்கீஸில் ஹவுஞ் புல் ஆகி ஆயிரம் ரூபாய் வசூல் ஆகிறது. ஆனால் அரசாங்கத்திற்கு அவர்கள் நிரந்தரமான வரி ரூ. 30 தருகிறார்கள். ஒரு நாளைக்கு இரண்டு ஷோ நடைபெறுவதாக வைத்துக் கொண்டால் கூட ஒரு மாதம் ஹவுஸ் புல் ஆகிற போது ஏறத்தாழ 60 ஆயிரம் ரூபாய் வசூல் ஆகிறது. ஆனால் நம்முடைய அரசாங்கத்துடைய வரி முறைப்படி அரசாங்கத்திற்கு எவ்வளவு பணம் கிடைக்கிறது என்றால் 30 ரூபாய், 2 ஷோவுக்கு ரூ. 60. ஆக மொத்தம் ரூ. 1,800 தான் அரசாங்கத்திற்கு வரியாக வருகிறது. அதே நேரத்தில் இந்தப் படம் பர்மனெண்ட் தியேட்டரில் போட்டு இருப்பார்களானால் அந்த பர்மனெண்ட் தியேட்டருக்குக் கூட ஆயிரம் ரூபாய் ஹவுஸ் புல் என்று வைத்துக் கொண்டாலும் டாக்ஸ் ரூ. 600 என்கிற வகையில் ஒரு மாதத்திற்கு ரூ. 40 ஆயிரம் அரசாங்கத்திற்கு வருமானம் வரும். ஆகவே ரூ. 1,800 எங்கே, ரூபாய் 40 ஆயிரம் எங்கே என்பதைத் தெளிவாகத் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : புதிய படங்கள் எப்போதும் டூரிங் டாக்கீஸில் காட்டப் படுகிறதா? ஏதோ ஒரு படம் பொள்ளாச்சியில் தியேட்டர் கிடைக்காமல் டூரிங் டாக்கீஸில் போடப்பட்டது என்பதை வைத்து அதிக வரி போடலாம் என்பது உங்களுடைய எண்ணமா? டூரிங் டாக்கீஸ்களுக்கு மட்டுமல்ல, அந்த தியேட்டர்களுக்கும் அதிக வரி போட வேண்டுமென்று கருத்து சொல்கிறீர்களா?

<u>திரு. கோவை செழியன்</u> : செலக்ட் கமிட்டி வேண்டுமென்று சொல்வது யாருக்கும் வரியை அதிகப் படுத்துவதற்காக அல்ல என்பதை உறுதியாக சொல்லிக் கொள்வேன். இப்போது நீங்கள் புதிதாகக் கொண்டுவந்திருக்கின்ற இந்த பில்படி ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ ரூ. 14 கோடி 60 ஆயிரம் வருகின்றது. நீங்கள் செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி எங்களுக்கு 10 நாள் அவகாசம் தருவீர்களானால் நீங்கள் கோரக்கூடிய வருமானம் வருகின்ற அளவிலே ஒரு திட்டம் தருகிறோம். அந்தத் திட்டங்கள் உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால், உங்களுக்குத் தேவையில்லை என்றால், மீண்டும் இந்தத் திட்டத்தை நீங்கள் கொண்டுவரலாம்.

[பிற்பகல் 1-00]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போதே ரூ: 15 கோடியை ரூ. 16 கோடியாக ஆக்க யோசனை சொன்னால் அதை இப்போதே ஏற்றுக் கொள்கிறோம்.

திரு. கோவை செழியன்: சௌத் இந்தியன் பிலிம் சேம்பர்ஸ் கொடுத்ததை அப்படியே வைத்திருக்கிறேன். அவர்கள் கொடுத்த அறிக்கை முழுவதையும் படிக்க வேண்டுமானால் ஒரு மணி நேரம் கூட ஆகும். ஆகையால் அதை நான் படிக்கவில்லை; மாண்புமிகு முதலமைச்சரிடம் பின்னால் தந்துவிடுகிறேன். பிலிம் சேம்பர்ஸ் சொல்லியதை ஏற்றுக்கொண்டார்கள் என்பதை விட அசெம்பிளி மெம்பர்ஸ் சொன்னதை ஏற்றுக்கொண்டார்கள் என்பது பொருத்தமாக இருக்கும்.

நாங்கள் ஆலோசனை சொல்வதற்கு அதிக நாள் ஒன்றும் தேவையில்லை; ஒரு வாரம் கொடுத்தால் போதும். இந்த ஒரு வார காலத்திற்குள் இன்னும் அதிகமான வருமானம் வருவதற்கான வழிவகைகளை நாங்கள் தெரிவிக்கிறோம். சௌத் இந்தியன் பிலிம் சேம்பர்ஸ் ஆப் காமர்ஸ்...அவர்களுடைய உறுதியைப்பெற்றுத்தான் நான் சொல்கிறேன். முதலமைச்சரவர்கள் சினிமாத் தொழிலைப்பற்றி நன்றாக அறிந்திருக்கிறார்கள். இந்தத் தொழிலில் அதிக அக்கறை கொண்டவர்கள். ஆகவே, "பொன் முட்டை இடும் வாத்தை அறுப்பது போல செய்துவிட்டால் இந்தத் துறை நசித்துவிடும்.

பெர்மனன்ட் தியேட்டர்கள், செமி பெர்மனன்ட் தியேட்டர்கள், டூரிங் தியேட்டர்கள் எதுவாக இருந்தாலும் இது ஒரு பெரிய இண்டஸ்ட்ரி. இதை நம்பி பல லட்சம் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதிலே நீங்கள் அவசரப்பட்டு ஒரு முடிவை எடுக்காதீர்கள். தீர ஆலோசித்து ஒரு முடிவை எடுப்பதற்காக செலக்ட் கமிட்டிக்கு விடுங்கள். 10 அல்லது 15 நாட்களுக்குள் நாங்கள் முடிவைச் சொல்லிவிடுகிறோம். நாங்கள் சொல்வதை ஏற்றுக்கொண்டால் உங்களுக்குப் பெருமை இருக்கும். இப்போது உங்கள் கணக்குப்படி ரூ. 14 கோடிக்கும் சற்று அதிகமாக வருகிறது. நாங்கள் ரூ. 15 கோடிக்குமேல் வருமானம் வரக்கூடிய வகையில் ஆலோசனை தருகிறோம். நாங்கள் சொன்ன பிறகு அது உங்களுக்கு பிடிக்கவில்லை என்றால் விட்டுவிடுங்கள்; இப்போது நீங்கள் கொண்டு



வந்திருப்பதையே எடுத்துக்கொள்ளுங்கள். ஆகவே, இந்த மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சினிமாவுக்கு வரி போடக்கூடிய ஒரு பிரச்சினை ஒரு சில மாதங்களில் பல உருவெடுத்து வந்திருப்பதைப் பார்க்கிறோம். இதிலிருந்து இந்த அரசுக்கு ஒரு "கன்ஃபியூஷன்" இருக்கிறது என்று தெரிகிறது. இந்த மசோதா இந்தத் துறையிலே மிகக் கவனம் செலுத்தக்கூடிய முக்கியத்துவம் அளிக்கக்கூடியது. ஏனென்றால் இதுவரை இருந்த அமைச்சரவையில், சினிமாட்டோகிராஃப் சட்டம் முதலமைச்சரிடம் இல்லை. இப்போது அந்த அதிகாரம் முதலமைச்சரிடம் வந்திருக்கிறது. அதனால் முக்கியத்துவம் வாய்ந்தது என்று நாங்கள் கருதுகிறோம்.

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: அந்தப் பொறுப்பு என்னிடம்தான் இருக்கிறது; மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: இந்தத் துறை இப்போது முதலமைச்சரிடம் இருக்கிறதா அல்லது வேறு ஒருவரிடம் இருக்கிறதா என்ற ஒரு கன்ஃபியூஷன் எங்களுக்கு இருந்தது. அதை நிவர்த்தி செய்யதற்காகவே இந்தக் கருத்தைச் சொன்னேன். ஏனென்றால் அடிக்கடி இந்தத் துறையின் பொறுப்பு மாறிக்கொண்டிருக்கிறது. அதனால்தான் எங்களுக்கு குழப்பம் ஏற்படுகிறது. இப்போது யாரிடம் இருக்கிறது என்று தெரிந்துகொண்டோம்.

இந்த அதிகாரம் முதலமைச்சரிடம் இருக்கிறது என்றவுடனே மத்தியிலே யாரிடம் இருக்கிறது என்று கேட்பதுபோல் தோன்றுகிறது. அங்கே பிரதமரிடம் இருக்கிறது. அந்த வகையில் இந்தத் துறை முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. இந்தத் துறையிலே வரி விதிப்பு கொள்கைப்பற்றி இந்த மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிறது. முதலில் $12\frac{1}{2}$ ரூபாய் என்று இருந்ததை 150 ரூபாயாக உயர்த்தினீர்கள். $2\frac{1}{2}$ ரூபாயாக இருந்ததை 40 ரூபாய்க்கு உயர்த்தினீர்கள். அப்புறம் தியேட்டர் சொந்தக்காரர்கள் எல்லாம் உங்களை வந்து சந்தித்த பின்னால் 150 ரூபாயை 27 ரூபாயாக குறைத்துவிட்டீர்கள். இப்படி திடீரென்று ஏறுவது, திடீரென்று இறங்குவது என்றால் இதிலே உங்களுக்கு குழப்பம் இருக்கிறது.

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1974 டிசம்பர் 23

அதற்குப் பிறகு டூரிங் சினிமாவுக்கு மொத்தமாக "கம்பவுண்டிங்" முறையில் 30 ரூபாய் கட்டினுல் போதும் என்றீர்கள். இன்றைக்கு 10 சதவிகிதம் க்ராஸ் கலெக்ஷன், 15 சதவிகிதம் க்ராஸ் கலெக்ஷன் என்று கொண்டுவந்திருக்கிறீர்கள்.

நான் சொல்வது என்னவென்றுல், ஆப்ஷனே கூடாது. ஆப்ஷன் கொடுத்தால் எது குறைவாக இருக்கிறதோ அதைத்தான் தருவார்கள். கலெக்ஷன் அதிகமாக இருந்தால் கம்பவுண்டிங் முறையில் தருகிறேன் என்பார்கள். இல்லை என்றுல் வசூலில் பர்சென்டேஜ் தருகிறேன் என்பார்கள். ஆவே, ஆப்ஷன் கூடாது.

இனி, டிக்கட் விற்பனையின்பேரில் வரி வசூல் செய்வது என்றுலும் சரியாக வசூல் பண்ண முடியாது. ஏனென்றுல் முத்திரையிடுவதில் எத்தனை விதம் இருக்கிறது? கத்தரிக்காய் முத்திரை எல்லாம் இருக்கிறது என்பது உங்களுக்கு நன்றுகத் தெரியும். ப்ரொஹிபிஷேனில் எப்படி மாமுல் இருக்கிறதோ அதைப்போல இதிலும் மாமுல் வந்துவிடும்; நிச்சயமாக ஏமாற்றிவிடுவார்கள். 3 ரூபாய் டிக்கட் பிளாக் மார்க்கெட்டில் 8 ரூபாய்க்கு விற்கிறது. அதற்கு எல்லோரும் உடந்தையாக இருக்கிறுர்கள். தியேட்டர் சொந்தக்காரர்கள், பிளாக் மார்க்கெட்டில் விற்பவர்கள், பாதுகாப்புக்கு இருக்கக்கூடிய போலீஸ்காரர்கள் எல்லோரும் அதற்கு உடந்தைதான். 400 டிக்கட் மொத்தம் விற்பனை என்றுல், 200 டிக்கட் ஒழுங்காக விற்றிருப்பார்கள்; 200 டிக்கட் பிளாக் மார்க்கெட்டில் கத்தரிக்காய் முத்திரைபோட்டு விற்பார்கள். ஆகவே, டிக்கட் விற்பனையில் வரி விதிப்பது என்றுல் கண்டிப்பாக ஏமாற்றம்தான்.

இப்போது க்ராஸ் கலெக்ஷனில் 10 சதவிகிதம், 15 சதவிகிதம் என்று போட்டால் ரூ. 15 கோடி வருகிறது என்று சொல்கிறீர்கள். முதலில் டூரிங் சினிமாவுக்கு கம்பவுண்டிங் முறையைக் கொண்டு வந்தீர்கள். அப்போதே சொன்னேன் பெர்மனண்ட் தியேட்டர்களுக்கும் அந்த முறையை வைத்தால் என்ன என்று. இப்போது பெர்மனன்ட் தியேட்டர்களையும் இதில் சேர்த்திருக்கிறீர்கள்.

க்ராஸ் கலெக்ஷனில் 10 சதவிகிதம் என்றுல் மிகவும் குறைவாகத் தான் வரும். சாதாரணமாக மொத்த கபாசிட்டியில் 30 சதவிகிதம் சீட்தான் நிரம்பும். மீதி எல்லாம் காலியாக இருக்கும். "அவள் ஒரு தொடர்கதை"யில் வேண்டுமானுல் சில நாட்களுக்கு முழுதும்



1974 டிசம்பர் 23]

பூர்த்தியாகியிருக்கலாம். பல படங்களுக்கு 30 சதவிகிதம் தான் பூர்த்தியாகும். அதில் 10 சதவிகிதம், 15 சதவிகிதம் வரி போடுகிறீர்கள். அதையும் குறைக்க வேண்டுமென்று டூரிங் தியேட்டர் சொந்தக்காரர்கள் உங்களைச் சந்தித்துக் கேட்டுக்கொண்டிருக்கிறுர்கள்.

இந்த வருமானத்தை 15 கோடிக்குமேல் அதிகரிக்கும் முறையை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பினுல் தெரிவிக்கிறேம் என்று இங்கே சொல்லியிருக்கிறுர்கள். ஆகவே, இந்தச் சட்டத் திருத்தத்தை செலக்ட் கமிட்டிக்கு அனுப்புங்கள். உங்களுக்கு அடிக்கடி குழப்பம் வருகிறது. டூரிங் தியேட்டர்காரர்களும், பெர்மனண்ட் தியேட்டர்காரர்களும் உங்களைக் கேட்டதால் இப்போது பர்சென்டேஜ் வைத்திருக்கிறீர்கள். இந்தக் குழப்பங்களுக்கு இடமில்லாமல், வருமானத்தைப பெருக்க வேண்டுமானுல் அதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்புங்கள். இந்தத் தொழிலில் அரசாங்கத்திற்கு நிரந்தரமான வருமானம் வரவேண்டுமானுல் அதற்கு ஏற்றதொரு பரிகாரம் தேடவேண்டும். அதற்கு ஏதாவது வழி தேட வேண்டுமென்றுல், இந்த கம்பவுண்டிங் வசதி கொடுக்காமல், எல்லோருக்கும் கட்டுப்படியாகக்கூடிய வகையில் கொஞ்சம் குறைத்துக்கொள்ள வேண்டும். மீண்டும் கம்பவுண்டிங் முறை கூடாது. இதையெல்லாம் நல்லமுறையில் பரிசீலனை செய்து, சிறந்த முறையில் செயல்படுத்துவதற்கு செலக்ட் கமிட்டிக்கு இதை அனுப்ப வேண்டுமென்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி: சார், இந்த மசோதாவின் முக்கிய நோக்கம் "டாக்ஸ் எவேஷனை" தடுக்க வேண்டும்; அதன் காரணமாக சர்க்கார் வருமானத்தைப் பெருக்க வேண்டுமென்பது. இன்னென்று அரசாங்கத்திற்கு இந்த வரி வசூலில் இருக்கக்கூடிய பர்டனை குறைக்க வேண்டுமென்பது.

ஏற்கெனவே சினிமா தியேட்டர் சொந்தக்காரர்கள் எவ்வளவு தந்துகொண்டிருந்தார்களோ அதைவிடக் குறையாத அளவுக்கு கம்பவுண்டிங் முறையில் பார்த்துக்கொள்ள வேண்டும். கம்பவுண்டிங் முறை சரியில்லை என்று சொல்லிவிட்டால் நடைமுறையில் வரி எவேஷனை எப்படி தடுக்க முடியும்? கம்பவுண்டிங் சிஸ்டத்தில் வரி ஏமாற்றம் நடக்காதா? என்பதை நாம் யோசிக்க வேண்டும்.

பர்சென்டேஜ் முறையில் வரி ஏய்ப்பு நடைபெற வாய்ப்பு இருக்
கிறது. அதற்குக் காரணம் வரி வசூல் செய்யும் அதிகாரம் கமர்சியல்
டாக்ஸ் ஆபீசர்களுக்குத்தான் இருக்கிறது. 400 விற்பதாக இருந்தால்
200 டிக்கட்டுக்கு முத்திரைபோட்டுவிட்டு, 200 டிக்கட்டுக்கு முத்திரை
போடாமல் கொண்டுவந்து விற்றுவிடுவார்கள். கமர்சியல் டாக்ஸ்
அதிகாரிகள் அதற்கு உடந்தையாக இருப்பார்கள். அநேகமாக
எல்லா தியேட்டர் சொந்தக்காரர்களும் அப்படித்தான் செய்து
கொண்டிருக்கிறார்கள் . . .

<u>மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :</u> கம்பவுண்டிங்
செய்துகொண்டால், மறுபடியும் அதிகாரிகளிடம் சீல் போட
வேண்டிய அவசியமில்லை. அதனால்தான், முக்கியமாக, டூரிங்
டாக்கீஸில் கம்பவுண்டிங் கேட்கிறார்கள். They come forward to
compound.

<u>திரு. என். கே. பழனிசாமி :</u> கனம் அமைச்சரவர்கள் அதனாலே
அவர்களிடம் மாத்திரம் வசூலிக்கவேண்டியதில்லையென்று சொல்
கிறார். என்ன இருந்தாலும் புதுப் படங்கள் வரும்போது அதிகமான
வருமானம் வரும். அப்பொழுது வரியை இழக்கவேண்டியிருக்கும்.
அப்பொழுது கமர்சியல் டாக்ஸ் ஆபீசர்கள் போய், அந்த சினிமா
தியேட்டருக்குப்போய் வரி ஏய்ப்பைப் பார்ப்பதைவிட,
கமிஷனருக்கோ அல்லது டவுன் பஞ்சாயத்து ஆபீசர்களுக்கோ அந்த
அதிகாரத்தைக் கொடுத்தால் . . .

<u>மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :</u> மாண்புமிகு உறுப்
பினர் ஒரு பஞ்சாயத்து யூனியன் சேர்மன். இப்பொழுதிருக்கிற
அதிகாரமே, பஞ்சாயத்து யூனியன் கமிஷனரும் பார்க்கலாம், தாசில்
தாரும் பார்க்கலாம் என்றிருக்கிறது. பணம் பூராவும் சேர்வது
பஞ்சாயத்துக்களுக்குத் தான். மாண்புமிகு உறுப்பினர் போன்ற
சேர்மன்கள் அதிகமான நடவடிக்கை எடுத்தால், அதிகமான பணம்
வரும்.

<u>திரு. என். கே. பழனிசாமி :</u> நடவடிக்கை எடுக்கக்கூடிய அதிகார
மில்லை, பார்க்கலாம் போய், அவ்வளவுதான். நடவடிக்கை எடுக்கக்
கூடிய அதிகாரம் கொடுத்தால்தான் பிரயோஜனமாக இருக்கும்.
ஆகவே, இந்த சிஸ்டம் மட்டும் போதாது, பரவலாக நடவடிக்கை
எடுக்க, டவுன் பஞ்சாயத்து ஆபீசர்களுக்கும், பஞ்சாயத்து யூனியன்



கமிஷனர்களுக்கும் அதிகாரம் கொடுத்தால்தான் வரி ஏய்ப்பில்லாமல்
தடுக்கமுடியும். சர்க்கார் அதை ஏற்றுக்கொண்டு, அந்த முறையிலே
திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. எம். ஏ. லத்தீப் :</u> தலைவரவர்களே, இந்தத் திருத்தம்
கம்பவுண்டிங் முறையைக் கொண்டு வரவேண்டுமென்பதற்காக
இன்றைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இருக்கிற
முறைகளினால், வரி ஏய்ப்பு இருக்கிறது என்பதை அரசு நன்கு உணர்ந்
திருக்கிற காரணத்தினால் அதைப்போக்க இந்தத் திருத்தத்தைக்
கொண்டு வந்திருக்கிறது. மசோதா கொண்டு வந்திருக்கிற நோக்கத்
தினை விளக்கும் முகத்தான் கொடுக்கப்பட்டிருக்கிற இந்த விளக்
கத்தில், வரி ஏய்ப்பைத் தடுக்க இந்த மசோதா கொண்டு வரப்
பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்
கிறேன்.

ஆனால், அதே நேரத்தில், கம்பவுண்டிங் முறையை ஆப்ஷனாக
வைத்திருக்கிறார்கள். இதை ஆப்ஷன் என்று வைக்காமல், கம்பல்சரி
யாக வைப்பது நல்லதாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.
இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கிற இந்த வரையறைகள் 10 சத
விகிதம், 15 சதவிகிதம் என்று கொடுக்கப்பட்டிருப்பது கூடக் குறைவு
என்று நான் சொல்வேன். ஏனென்றால், இந்தத் துறையிலே நீங்கள்
வரிபோட்டால், எவ்வளவு அதிகமாக வரியை வசூலிக்கமுடியுமோ
அவ்வளவு அதிகமாக வரிகளைப் போட்டு வசூலிப்பது முறையாக
இருக்கும். எலாஸ்டிசிட்டி என்று சொல்வார்கள். இந்தத் துறை
யிலே எலாஸ்டிசிடி இருக்கிறது. வேறு துறையிலே அத்தியாவசிய
மான பொருள்களின் மீது—மிகுந்த எலாஸ்டிசிடி இருந்தும்—
போடுவது, சோஷியல் வெல்ஃபேருக்கு உதவக்கூடியதாக இருக்காது
என்ற காரணத்தால் அது தடுக்கப்படுகிறது. ஆனால், இந்தத் துறை
யில் எலாஸ்டிசிட்டியும் இருக்கிறது, அதே நேரத்தில் இன்றைக்கு
அத்தியாவசியம் என்று கருதப்பட்டாலும், நாட்டிலே பல கேடுகளை
அளிக்கிற துறையாக இது இருக்கிறது என்றுதான் நான் சொல்ல
ஆசைப்படுகிறேன்.

இரவிலே சாப்பாடு சாப்பிடாவிட்டாலும், சினிமாவுக்குப் போக
வேண்டுமென்ற நிலைமை உருவாகியிருக்கிறது. கிராமங்களிலே
பார்க்கிறோம், பகல் முழுவதும் உழைக்கிறான், 1 மணிக்கு
சினிமாவுக்குப் போய்விட்டு, 4 மணிக்கு வயலுக்குச் செல்கிற நிலைமை

[திரு. எம். ஏ. லத்தீப்] [1974 டிசம்பர் 23

இருக்கிறது. அந்த அளவுக்கு நிலைமை மாறியிருக்கிறது. சாதாரண ஏழை, எளிய மக்களிடம் இருந்து இந்தத் துறையினர் பணத்தை வசூலிக்கிறார்கள். இதிலுள்ள டாக்ஸ் ஷிஃப்ட்டபிலிட்டி அரசுக்கு இல்லே. நீங்கள் போடுகிற டாக்ஸ் எல்லாம் யார் தலையில் விழுகிறது? சாதாரண மக்கள் தலையில்தான் விழுகிறது. அவர்கள் கலெக்ட் செய்கிற பணம் யாருக்குப் போகிறது? அரசாங்கத்திற்கு வந்து நாட்டினுடைய நன்மைக்குப் பயன்படுவதானால் பரவாயில்லே. ஆனால், அதிலே மிகுந்த வரி ஏய்ப்பு இருக்கிறது. இதற்கு அதிகாரிகள் கூட முனைப்புடன் செயல்படாத காரணத்தினால்தான் வரி ஏய்ப்பு இருக்கிறது என்பதை அரசு உணர்ந்திருக்கிற காரணத்தினால்தான் இத் திருத்தத்தினை கொண்டு வந்திருக்கிறார்கள். மேற்கொண்டு குற்றம் சாட்ட விரும்பவில்லே. ஆகவே, அதிகமான வரியைப் போட வேண்டும். இன்றைக்குக் கொண்டு வந்திருப்பது மிகக் குறைவு என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். அதை அரசு கவனித்து அதிகமாக்க வேண்டும்.

இன்றைக்கு சிவிக் பாடீஸ் என்று சொல்லக்கூடிய பஞ்சாயத்துகளுக்கோ, முனிசிபாலிட்டிகளுக்கோ மேஜர் சோர்ஸ் ஆப் இன்கம் எண்டர்டெய்ன்மெண்ட் டாக்ஸ்தான். அதுதான் அவர்களுக்கு மேஜர் சோர்ஸ் ஆப் இன்கம். அவர்களுக்கு இன்றைக்கு நிதிப் பற்றாக்குறை. அரசினிடத்தில் மானியங்களைக் கோரி வருகிறார்கள். பல பஞ்சாயத்துக்களிலே ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்கக்கூட அவர்களிடம் பணம் இல்லே. ஈவன் எலெக்ட்ரிசிட்டி சார்ஜ்ஸ் கூடக் கட்டமுடியாத அளவிற்கு ரூ. 20,000, ரூ. 30,000 பாக்கி வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கிருக்கிற பற்றாக்குறையை தீர்க்க வேண்டுமென்றால் இந்த வரி விதிப்பை அதிகமாக்க வேண்டும். சினிமாத் துறையில்தான் நீங்கள் கை வைக்கவேண்டும், வேறு தொழிலில் கை வைக்கமுடியாது. இன்றைக்கு பிளாக் மார்க்கெட்டில் ரூ. 2 டிக்கட்டை ரூ. 6-க்கு வாங்குகிறார்கள் என்று சொன்னால், தேவை இருக்கிறது, எலாஸ்டிசிடி இருக்கிறது. ஆகவே, இப்படி தியேட்டருக்குப் போவதை, நீங்கள் வாங்கி, ஏன் ஸ்தல ஸ்தாபனங்களுக்குக் கொடுக்கக் கூடாது. ஆகவே, இது மிகக் குறைவான வரி. இன்றைக்கு அதிகமான வரியை ஒரு அரசு போடமுடியுமானால் அது இந்தத் துறையில்தான். ரூ. 2 டிக்கட்டுக்கு, ரூ. 3 டாக்ஸ் போட்டால்கூடப் பரவாயில்லே. அந்த முறையிலே கம்பவுண்டிங் சிஸ்டம் கொண்டு வந்திருப்பது மிகுந்த வரவேற்கக்கூடியது. அதை கம்பல்சரியாக்க



'74 டிசம்பர் 23] [திரு. எம். ஏ. லத்தீப்]

வண்டும். இப்பொழுது, 10 சதவிகிதம், 15 சதவிகிதம் போட்டிருக்றார்கள். அதை இன்னும் 100 சதவிகிதம் ஆக்கினால் மிகுந்த ருமானத்தைப் பெறமுடியும்.

(பேரவைத் தலைவர் தலைமை)

அதே நேரத்தில் ஆப்ஷன் கேட்கிற நேரத்தில், ஸ்டாம்பை ருவாய்த் துறை மட்டும்தான் கேட்கமுடியுமா? ஸ்தல ஸ்தாபனங் ளுடைய அதிகாரிகள், எக்ஸிக்யூடிவ் ஆபீசர்கள் சேர்ந்து வசூலிக்க ாம் என்றிருக்கிறது. ஸ்தல ஸ்தாபனங்களுடைய எக்ஸிக்யூடிவ் பீசர்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதை இங்கே நான் ிளக்கத் தேவையில்லே. இங்கே இருக்கிற உறுப்பினர்களில் சிலர் ஊராட்சி ஒன்றியத் தலைவராக, ஊராட்சித் தலைவராக இருக்கிறார் ள். ஆகவே, எக்ஸிக்யூடிவ் அதிகாரிகளிடம் விடுவதால் ஊழலுக்கு டம் இருக்கிறது.

ஆப்ஷனை நீக்கிவிட்டு, கம்பல்சரியாக்குவது நன்மை பயக்கும் ன்ற காரணத்தினால் அதனை நான் வற்புறுத்தி சொல்ல ஆசைப்படு றேன். (மணியடிக்கப்பட்டது)

திரு. கோவை செழியன்: மாண்புமிகு அமைச்சர் லத்தீப் . . 5 நிமிஷம் சந்தோஷப்படட்டுமே. சொன்னார்கள் (சிரிப்பு) . . மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் சொன்னார்கள், டிக்கட்டுகளை எல்லாம் பிளாக் மார்க்கெட்டிலே வாங்குவதாக. புதுப் படம் வந்தால், 2 நாளைக்கு, 3 நாளைக்குத்தான் பெரிய நகரங்களிலேதான் அவ்வாறு நடக்கும். அவருக்கு சினிமாவைப்பற்றி ஒன்றுமே தெரியாது. சினிமா என்றால் அவருக்கு வெறுப்பு. ஆகவே, அதனைத் தண்டிக்க வேண்டுமென்ற முறையில் அவர் பேசுகிறார். அவருக்குப் பிடித்த ஒன்றைப்பற்றி நாம் ஏதாவது சொன்னால் அவருக்கு எவ்வளவு கோபம் வரும்? யாருமே கறி சாப்பிடக் கூடாது என்று சொன்னால் அவருக்கு எவ்வளவு கோபம் வரும்? அதைப் புரிந்து கொள்ள வேண்டும். நகரங்களிலே, பெரிய சிட்டிகளிலேதான் இப்படி பிளாக் மார்க்கெட் வருகிறது. சில பஞ்சாயத்துக்களிலே பெரிய தியேட்டர் களைக் கட்டி வைத்துவிட்டார்கள். அங்கு ஹவுஸ் ஃபுல் ஆவதில்லே. இப்பொழுது போட்டிருக்கிற முறையில், கிராஸ் கலெக்ஷனைவிட, வரி அதிகமாகப் போய்விடுகிறது. ஆகவே, சீட்டிங் கப்பாசிட்டியைக் குறைப்பதற்காவது நாம் அனுமதிக்கவேண்டும். ஒன்றைப்பற்றிப்

பேசும்போது, நாட்டை முழுவதும் பார்த்துப் பேசவேண்டும். தன்னை மட்டும் பார்த்து பேசககூடாது. தனக்குப் பிடிக்கவில்லை யென்றால், அது இருக்கக்கூடாது என்று அப்படி அவர் பேசக்கூடாது. இதற்கு முதலமைச்சர் பதில் சொல்லவேண்டும்.

திரு. எம். ஏ. லத்தீப் : சொந்த விருப்பு வெறுப்பின் அடிப்படையிலே பேசுகிறேன் என்று சொன்னார்கள். தனக்கு எது விருப்பம், தனக்கு எது விருப்பமில்லாதது என்பதைத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்களே தவிர, நாட்டுமக்களுக்கு எது நன்மை, எது தீமை; எந்த முறையைக் கையாண்டால் நாட்டு மக்களுடைய நன்மையைப் பெருக்க முடியும் என்பதால்தான் இத்தகைய பேச்சைப் பேசினேன். எங்களைப் பொறுத்தவரையிலே, சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு இடம் கொடுப்பதில்லை அவர்களைப்போல். இப்படி செய்தால்தான் நாட்டு மக்களுக்கு நன்மை ஏற்படும் என்று உறுதியாக, இறுதியாக நாங்கள் சொல்கிறோம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தச் சட்ட முன் வடிவினுடைய அடிப்படையைப் புரிந்துகொண்டால், அதிகமாக விவாதத்திற்கு இடம் இருக்காது என்று நினைக்கிறேன். இப்பொழுது கம்பவுண்டிங் செலுத்தாமல், விற்கின்ற டிக்கட்டுகளின் அடிப்படையில் வரி செலுத்தவேண்டுமென்று இருக்கிறது. அவர்கள் விரும்பினால் கம்பவுண்டிங் செய்து கொள்ள வேண்டுமென்று நாம் ஒரு சட்டத் திருத்தம் கொண்டுவந்தோம். நாம், இந்தச் சட்டத்திலே டூரிங் டாக்கீஸ்கள் மட்டும்தான் என்று திருத்தம் கொண்டு வந்துள்ளோம். அதை ஒரு ப்ளாட் ரேட்டாகப் போட்டுவிட்டோம். மாண்புமிகு உறுப்பினர்கள்கூடச் சொன்னார்கள். ஒன் மேன் கமிஷன்கூட சிபாரிசு செய்திருக்கும் என்று சொன்னார்கள், அவர்கள் பரிசிலனைசெய்து

...... the Officer on Special Duyt recommended that all cinemas should be make to pay taxes at certain percentage of their gorss collection capacvity which is based on their searching capacity. Bnt the recommendation could noot be implemented because of legal objections and the Government therefore examined alternative method by which it can be left to the option of the cinemas to pay taxes either on the basis of returns (accounts showing the collections for each show) or at a fixed rate."





என்று சொல்லியிருக்கிறார்கள். சட்ட சிக்கல் வந்துவிட்டதால் இப்படிச் செய்யப்பட்டு இருக்கிறது. டூரிங் டாக்கீஸ்கள் நகரப் பஞ்சாயத்தாக இருந்தால் 45 ரூபாய் என்றும் கிராமப் பஞ்சாயத்தாக இருந்தால் 30 ரூபாய் என்றும் கம்பவுண்டிங் செய்துகொள்ளலாம் என்று கொடுக்கப்பட்டது. இப்போது இந்தச் சட்டத்தின் மூலமாக க்ராஸ் கலெக்ஷன் கெப்பாசிட்டியில் ஒரு குறிப்பிட்ட ரேஷியோவை பிக்ஸ் செய்து கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. திரு. கோவை செழியன் அவர்கள் 10 நாள் அவகாசம் கொடுங்கள் என்று சொன்னார்கள். சௌத் இண்டியன் பிலிம் சேம்பரோடு பேசி அரசாங்கத்திற்கு அதிகமாகப் பணம் வருவதற்கு ஏற்பாடு செய்வதாகச் சொன்னார்கள், ரொம்ப மகிழ்ச்சி. சவுத் இண்டியன் பிலிம் சேம்பர் அரசாங்கத்திற்கு ஒரு மெமோராண்டம் கொடுத்து இருக்கிறார்கள். அவர்கள் அதிலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால்

In this regard, the Government may fix 12½ per cent of the houseful gross per show as tax per show for permanent cinemas and 10 per cet of the gross as tax per show for touring cinemas என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொல்வது டூரிங் சினிமா 10 சதவீதம், பெர்மனண்ட் தியேட்டர்களுக்கு 12 சதவீதம் என்று சொல்கிறார்கள். இப்போது நாம் போட்டிருப்பது டூரிங் டாக்கீஸ் டவுன் பஞ்சாயத்துக்களிலே 15 சதவீதம், பர்மனண்ட், தியேட்டர்களாக இருந்தால் 20 சதவீதம், வில்லேஜ் பஞ்சாயத்துக்களிலே டூரிங் டாக்கீஸ் ஆக இருந்தால் 10 சதவீதம், பர்மனண்ட் தியேட்டராக இருந்தால் 15 சதவீதம் என்று கொடுத்திருக்கிறோம். அவர்கள் கொடுத்திருக்கிற கணக்குப்படி நாம் கொடுத்தால் வருமானம் குறையுமே தவிர வருமானம் அதிகமாக வராது. வரி கொடுக்கிறவர்கள் எப்போதும் நாங்கள் வரியை அதிகமாகக் கொடுப்போம், அரசாங்கத்திற்கு வருமானம் அதிகமாகக் கொடுப்போம் என்று சொல்லவே மாட்டார்கள். வியாபாரிகளில் எந்த வியாபாரியும் அதிகமாக வரி கொடுப்போம் என்று சொல்லமாட்டார். அவர்கள் சொல்வது திசை திருப்புவதற்கு செய்யப்படுகிற முயற்சியே தவிர வேறு ஒன்றுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோவை செழியன் : தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற முறையில் வில்லேஜ் பஞ்சாயத்துக்களுக்கும் மேஜர் பஞ்சாயத்துக்களுக்கும் மட்டும் நீங்கள் கொண்டுவந்திருக்கிறீர்கள். It should be extended to all the Theatres including A.C. Theatres in big cities.

எல்லாவற்றுக்கும் கொண்டு வாருங்கள். கொண்டுவந்தால் 15 கோடி ரூபாய் வரும். 10 நாட்கள் அவகாசம் கொடுங்கள். அப்படிச் செய்து பாருங்கள். வருகிறதா இல்லையா என்று பாருங்கள், வராவிட்டால் மாற்றிக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பிலிம் சேம்பர்ஸ் எங்களிடத்திலே வந்து பேசிய நேரத்திலே ஓர்க் அவுட் செய்து பார்த்ததில் இன்னும் ஒரு கோடி ரூபாய் குறைந்ததே தவிர அதிகமாக ஆகவில்லை. ஆகவே 15 கோடி அதிலே வரவில்லை.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, முதலில் இந்த மசோதாவை நிறைவேற்றித் தரட்டும், அரசாங்கத்தோடு அவர்கள் பேசினார்கள். நாமும் பேசிப் பேசிப் பார்த்து முடியவில்லை.

